வெளியீடு : 16-4-2024 Issued: 16-4-2024

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு
(பதினாறாவது பேரவை)

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES
OFFICIAL REPORT
(SIXTEENTH ASSEMBLY)

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 11, 2023—தொகுதி 63

Tuesday the 11th April 2023—Volume 63

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Chennai-600 009.

விலை ரூ. 3.00] **[Price Rs. 3.00**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

11–4–2023

உள்ளடக்கம்

	பக்கங்கள்
ஆளுநரும் அமைச்சரவையும்	v-x
Governor and Council of Ministers	xi-xv
பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்	xvii-xx
பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி)	xxi-xxviii
1. வினாக்கள்-விடைகள்—	1-52
உடுக்குறியிட்ட வினாக்கள்	1-52
2. தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துகள்—	
மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு	8
3. 10-4-2023 அன்றைய அறிவிப்பு—வாளுக்கு வேலி அம்பலம்—பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடுதல் மற்றும் அவருக்கு திருவுருவச் சிலை அமைத்தல்—நன்றி தெரிவித்தல்—	
மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்	19-20
4. சிறப்புக் கவன ஈர்ப்பு—	
தமிழகத்தில் கொரோனா நோய்த்தொற்று மீண்டும் பரவுதல் குறித்து	53-71
திரு. எடப்பாடி K. பழனிசாமி	53-54, 57-58
திரு. வி.பி. நாகைமாலி	55
திரு. கு. செல்வபெருந்தகை	55-60
மாண்புமிகு திரு. துரைமுருகன்	59-60
திரு. ஜி.கே. மணி	60-61

பக்கங்கள்

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—தொடர்ச்சி

திரு. தி. வேல்முருகன் 61-62

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் 62-63

திரு. S.S. பாலாஜி 63

திரு. ட்டி. இராமச்சந்திரன் 63

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் 64

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன் 64-71

5. கவன ஈர்ப்பு— 71-78

பவானிசாகர் தொகுதி, அருள்மிகு ஸ்ரீபண்ணாரி அம்மன் திருக்கோயில், வனத் துறைக்குச் சொந்தமான நிலம், கோயில் நிருவாகத்திற்கு அளித்தல்

*திரு. கே.ஏ. செங்கோட்டையன் 72-74, 76

*மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன் 72-77

மாண்புமிகு திரு. துரைமுருகன் 77-78

6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 49—இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

(ஆ) கோரிக்கை எண் 53—சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

(இ) கோரிக்கை எண் 17—கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

} 79-304

பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்*	79,100, 133-134, 261-301
**மாண்புமிகு திரு. ஆர். காந்தி*	114, 134, 140-142, 234-261
திரு. வி.வி. ராஜன் செல்லப்பா	84, 105, 118-119, 135-139, 146-154
மாண்புமிகு திரு. துரைமுருகன்	142, 144, 147
திரு. எடப்பாடி K. பழனிசாமி	143, 145-146
மாண்புமிகு திரு. எ.வ. வேலு	144-145
**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி*	154-155
**திரு. ஐ.பி. செந்தில்குமார்*	155-167
**திரு. ஈ. ராஜா*	167-176
திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்	176-180
திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்	181-191
திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்	83,104, 117-118, 191-200
திரு. மு. பாபு	200-211
**திரு. க.சொ.க. கண்ணன்*	211-221
**திரு. பெரி. செந்தில்நாதன்*	93,111-112, 129, 221-232
திரு. எஸ்.பி. வேலுமணி	233-234

		பக்கங்கள்
7.	**பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**	304-305
8.	**இணைப்புகள்**	307-653

ஆளுநரும் அமைச்சரவையும்

ஆளுநர்—மாண்புமிகு திரு. ஆர்.என். ரவி

அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1.	**முதலமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, இந்திய வனப் பணி, மற்ற அகில இந்திய பணி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், காவல், உள் துறை, சிறப்பு முயற்சிகள், மாற்றுத் திறனாளிகள் நலன்*
2.	**நீர்வளத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள், சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, தேர்தல்கள் மற்றும் கடவுச் சீட்டுகள், கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள்*
3.	**நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** *நகராட்சி நிர்வாகம், நகர்ப்பகுதி மற்றும் குடிநீர் வழங்கல்*
4.	**ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** *ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள்*
5.	**உயர் கல்வித் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** *தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல்*

6.	**பொதுப் பணித் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** *பொதுப் பணிகள் (கட்டடங்கள்), நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்*
7.	**வேளாண்மை — உழவர் நலத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** *வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, சர்க்கரை, கரும்புத் தீர்வை, கரும்புப் பயிர் மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு*
8.	**வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்:** *வருவாய், மாவட்ட வருவாய் பணியமைப்பு, துணை ஆட்சியர்கள், பேரிடர் மேலாண்மை*
9.	**தொழில் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *தொழில்கள், தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு, தொல்லியல்*
10.	**இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்:** *இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்*
11.	**சட்டத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** *சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம்*

12. **வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** *வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகரமைப்புத் திட்டமிடல் மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, இட வசதிக் கட்டுப்பாடு, நகரத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி*
13. **கூட்டுறவுத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்:** *கூட்டுறவுத் துறை*
14. **குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** *குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்*
15. **செய்தித் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** *செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்*
16. **சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர்**	..	**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** *மகளிர் மற்றும் குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், ஆதரவற்றோர் இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள் மற்றும் சமூக சீர்திருத்தம் மற்றும் சத்துணவுத் திட்டம்*

17. **மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** ..	**மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** *மீன்வளம், மீன் வளர்ச்சிக் கழகம் மற்றும் கால்நடை பராமரிப்பு*
18. **பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** ..	**மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்:** *பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர்மரபினர் நலன் மற்றும் கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம்*
19. **சுற்றுலாத் துறை அமைச்சர்** ..	**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** *சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்*
20. **உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர்** ..	**மாண்புமிகு திரு. அர. சக்கரபாணி:** *உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு*
21. **மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்** ..	**மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி:** *மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, மதுவிலக்கு, ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு*
22. **கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்** ..	**மாண்புமிகு திரு. ஆர். காந்தி:** *கைத்தறி மற்றும் துணிநூல் துறை, பூதானம் மற்றும் கிராம தானம்*
23. **மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** ..	**மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்:** *மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் மக்கள் நல்வாழ்வு*

24. வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** *வணிக வரிகள், பதிவு மற்றும் முத்திரைத்தாள் சட்டம், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டுகள் மற்றும் கம்பெனிகள் பதிவு*
25. போக்குவரத்துத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** *போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்தி சட்டம்*
26. இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு:** *இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்*
27. நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** *நிதித் துறை, திட்டம், மனிதவள மேலாண்மை, ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்கால நன்மைகள் மற்றும் புள்ளியியல் துறை*
28. பால்வளத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சா.மு. நாசர்:** *பால்வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி*
29. சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. செஞ்சி K.S. மஸ்தான்:** *சிறுபான்மையினர் நலன், வெளிநாடு வாழ் தமிழர் நலன், அகதிகள், வெளியேற்றப்பட்டவர்கள் மற்றும் வக்ஃப் வாரியம்*

30. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** *பள்ளிக் கல்வி*
31. சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்:** *சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு மற்றும் முன்னாள் படைவீரர்கள்*
32. தொழிலாளர் நலன் — திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்:** *தொழிலாளர்கள் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, மக்கள் தொகை கணக்கெடுப்பு, நகரம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*
33. தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திரு. த. மனோ தங்கராஜ்:** *தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்*
34. வனத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்:** *வனம்*
35. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்	..	**மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ்:** *ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர்கள் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்*

GOVERNOR AND COUNCIL OF MINISTERS

GOVERNOR–HON'BLE THIRU R.N. RAVI

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Thiru M.K. Stalin:**

 Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Indian Forest Service, Other All India Service, District Revenue Officers, Police, Home, Special Initiatives and Welfare of the Differently abled persons

2. **Minister for Water Resources** .. **The Hon. Thiru Duraimurugan:**

 Irrigation Projects including small Irrigation, Legislative Assembly, Governor and Ministry, Elections and Passports, Minerals and Mines

3. **Minister for Municipal Administration** .. **The Hon. Thiru K.N. Nehru:**

 Municipal Administration, Urban and Water Supply

4. **Minister for Rural Development** .. **The Hon. Thiru I. Periyasamy:**

 Rural Development, Panchayats and Panchayat Union

5. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

 Higher Education including Technical Education, Electronics, Science and Technology

6. **Minister for Public Works** .. **The Hon. Thiru E.V. Velu:**

 Public Works (Buildings), Highways and Minor Ports

7.	**Minister for Agriculture and Farmer's Welfare**	..	**The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co–operatives, Horticulture, Sugars, Sugarcane Excise, Sugarcane Development and Waste Land Development
8.	**Minister for Revenue and Disaster Management**	..	**The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Disaster Management
9.	**Minister for Industries**	..	**The Hon. Thiru Thangam Thennarasu:** Industries, Tamil Official Language and Tamil Culture, Archeology
10.	**Minister for Youth Welfare and Sports Development**	..	**The Hon. Thiru Udhayanidhi Stalin:** Youth Welfare and Sports Development, Special Programme Implementation Department & Poverty Alleviation Programme and Rural Indebtedness
11.	**Minister for Law**	..	**The Hon. Thiru S. Regupathy:** Law, Courts, Prisons and Prevention of Corruption
12.	**Minister for Housing and Urban Development**	..	**The Hon. Thiru S. Muthusamy:** Housing, Rural Housing, Town Planning Projects and Housing Development, Accommodation Control, Urban Planning and Urban Development

13.	**Minister for Co–operation**	..	**The Hon. Thiru KR. Periakaruppan:** Co–operation
14.	**Minister for Micro, Small and Medium Enterprises**	..	**The Hon. Thiru T.M. Anbarasan:** Rural Industries including Cottage Industries, Small Industries, Tamil Nadu Urban Habitat Development Board
15.	**Minister for Information & Publicity**	..	**The Hon. Thiru M.P. Saminathan:** Information & Publicity, Film Technology and Cinematograph Act, Newsprint Control, Stationery and Printing, Government Press
16.	**Minister for Social Welfare & Women Empowerment**	..	**The Hon. Tmt. P. Geetha Jeevan:** Social Welfare including Women and Children Welfare, Orphanages and Correctional Administration, Integrated Child Development Scheme and Beggar Homes and Social Reforms & Nutritious Meal Programme
17.	**Minister for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry**	..	**The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Fisheries, Fisheries Development Corporation and Animal Husbandry
18.	**Minister for Backward Classes Welfare**	..	**The Hon. Thiru R.S. Rajakannappan:** Backward Classes Welfare, Most Backward Classes Welfare, Denotified Communities Welfare and Khadi & Village Industries Board

19. Minister for Tourism	..	**The Hon. Thiru K. Ramachandran:** Tourism and Tourism Development Corporation
20. Minister for Food and Civil Supplies	..	**The Hon. Thiru R. Sakkarapani:** Food and Civil Supplies, Consumer Protection and Price Control
21. Minister for Electricity, Prohibition & Excise	..	**The Hon. Thiru V. Senthilbalaji:** Electricity, Non Conventional Energy Development, Prohibition and Excise, Molasses
22. Minister for Handlooms and Textiles	..	**The Hon. Thiru R. Gandhi:** Handlooms and Textiles, Boodhan and Gramadhan
23. Minister for Health and Family Welfare	..	**The Hon. Thiru Ma. Subramanian:** Health, Medical Education and Family Welfare
24. Minister for Commercial Taxes and Registration	..	**The Hon. Thiru P. Moorthy:** Commercial Taxes, Registration and Stamp Act, Weights and Measures, Debt Relief including legislation on Money lending, Chits and Registration of Companies
25. Minister for Transport	..	**The Hon. Thiru S.S. Sivasankar:** Transport, Nationalised Transport and Motor Vehicles Act
26. Minister for Hindu Religious and Charitable Endowments	..	**The Hon. Thiru P.K. Sekarbabu:** Hindu Religious and Charitable Endowments and CMDA

27. Minister for Finance and Human Resources Management .. **The Hon. Dr. Palanivel Thiaga Rajan:**

Finance, Planning, Human Resources Management, Pensions and Pensionary benefits and Statistics

28. Minister for Milk & Dairy Development .. **The Hon. Thiru S.M. Nasar:**

Milk and Dairy Development

29. Minister for Minorities Welfare and Non Resident Tamils Welfare .. **The Hon. Thiru Gingee K.S. Masthan:**

Minorities Welfare, Non Resident Tamils Welfare, Refugees & Evacuees and Wakf Board

30. Minister for School Education .. **The Hon. Thiru Anbil Mahesh Poyyamozhi:**

School Education

31. Minister for Environment and Climate Change .. **The Hon. Thiru Siva.V. Meyyanathan:**

Environment and Pollution Control and Ex–Servicemen

32. Minister for Labour Welfare and Skill Development .. **The Hon. Thiru C.V. Ganesan:**

Labour Welfare, Population, Employment and Training, Census, Urban and Rural Employment

33. Minister for Information Technology and Digital Services .. The Hon. Thiru T. Mano Thangaraj:

Information Technology and Digital Services

34. Minister for Forests .. **The Hon. Dr. M. Mathiventhan:**

Forests

35. Minister for Adi Dravidar Welfare .. **The Hon. Tmt. N. Kayalvizhi Selvaraj:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour Welfare

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள், செயலாளர் மற்றும் முக்கிய அலுவலர்கள்

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. மு. அப்பாவு

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி

மாற்றுத் தலைவர்கள்#

திரு. க. அன்பழகன்

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. S.R. இராஜா

திரு. தா. உதயசூரியன்

திரு. துரை. சந்திரசேகரன்

முனைவர் T.R.B. ராஜா

செயலாளர்

முனைவர் கி. சீனிவாசன்

\# *11–1–2023 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.*

முக்கிய அலுவலர்கள்

திருமதி லி.சு. வசந்திமலர், எம்.ஏ., எம்.ஏ., பி.ஜி.எல்.	.. சிறப்புச் செயலாளர்
திரு. ந. இரவிசந்திரன், பி.எஸ்சி., பி.எல்.	.. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. தே. நாகராஜன், பி.எஸ்சி., பி.எல்.	.. கூடுதல் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. பா. சுப்பிரமணியம், பி.காம்., பி.ஜி.எல்.	.. கூடுதல் செயலாளர்
திருமதி ச. ஆண்டாள், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. ச. ஜெயகணேசன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. வ. பூபாலன், பி.காம்., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி ஸ்ரீ. ஸ்ரீவித்யா, பி.எஸ்சி., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி இரா. சாந்தி, எம்.ஏ., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. அ. அய்யன்பெருமாள், எம்.ஏ., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. செ. பாண்டியன், எம்.ஏ., எம்.ஃபில்., எம்.எல்.	.. இணைச் செயலாளர்
திரு. மு. ஆதிசேசன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	.. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)
திரு. ப. பத்மகுமார், எம்.எஸ்சி., பி.எட்., பி.எல்.	.. மாண்புமிகு பேரவைத் தலைவரின் சிறப்பு தனிச் செயலர் (இணைச் செயலாளர் நிலை)
திரு. மு. கருணாநிதி, பி.ஏ., பி.ஜி.எல்.	.. இணைச் செயலாளர்

திருமதி பி. தேன்மொழி, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்., பி.எல்.	..	இணைச் செயலாளர்
திருமதி சி. சாந்தா, எம்.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திரு. த. ரகுபதி, எம்.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்) மாற்றுப் பணியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் துணைச் செயலாளர்/
திரு. சி. ஸ்ரீதரன், எம்.காம்., பி.எட்., எல்.எல்.பி.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி பு. சங்கீதா, பி.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி சு.சீ. அலமேலு, எம்.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர் (பதிப்பாளர்)
திருமதி டி.வி. ஜெயஸ்ரீ, பி.ஏ., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி பா. ரேவதி, பி.எஸ்சி., பி.எட்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. கே. ரமேஷ், பி.எஸ்சி., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. க.லோ. சிவகுமரன், பி.எஸ்சி., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி பெர்லின் ரூப்குமார், எம்.ஏ., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. கோ. கணேஷ், பி.எஸ்சி., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. சு. பாலகிருஷ்ணன், பி.ஏ., பி.எல்.	..	துணைச் செயலாளர்
திருமதி சீ. உஷா, பி.காம்., பி.ஜி.எல்.	..	துணைச் செயலாளர்
திரு. ஸ்ரீரா. ரவி, எம்.காம்., பி.எல்.	..	துணைச் செயலாளர்

திருமதி த. சுஜாதா தேவி, பி.இ., பி.ஜி.எல்.	.. துணைச் செயலாளர்
திரு. அ.சு. கேளுடை நம்பி, எம்.எஸ்சி., பி.ஜி.எல்.	.. குழு அலுவலர் (பொதுக் கணக்குக் குழு)
திரு. மு. மோகன் ராஜா, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல்.	.. குழு அலுவலர் (துணைச் செயலாளர் நிலை) மாற்றுப் பணியில் மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நிலை நேர்முக உதவியாளர்
திருமதி வி. விமலா தேவி, பி.காம்., பி.ஜி.எல்., எம்.பி.ஏ.	.. தலைமை நிருபர்
திரு. கோ. வரதராஜன், பி.காம்., எம்.பி.ஏ., எல்.எல்.பி.	.. தலைமை நிருபர்
திருமதி ஆர். மலர்விழி, பி.ஏ.	.. தலைமை நிருபர்
திரு. இரா. இராஜேந்திரன், பி.ஏ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. கி. முரளீதரன் நாயர், பி.ஏ.	.. சார்புச் செயலாளர்
திருமதி வி. சுமதி, பி.காம்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. அ. பாஸ்கரன், பி.காம்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. ஜெ. பாலசீனிவாசன், எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திரு. வே. லோகநாதன், பி.எஸ்சி.	.. சார்புச் செயலாளர்
திருமதி த. இந்திராகாந்தி, பி.ஏ.	.. சார்புச் செயலாளர்
திருமதி ஏ. மகாலட்சுமி, பி.ஏ., பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்
திருமதி பாஸ்ஹரிதேசிங், பி.காம், பி.ஜி.எல்.	.. சார்புச் செயலாளர்

பேரவை உறுப்பினர்கள்

(அகர வரிசைப்படி)

பெயர்களும் தொகுதிகளும்

1. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. .. போளூர்
2. அசன் மௌலானா, திரு. JMH. .. வேளச்சேரி
3. அசோகன், திரு. G. .. சிவகாசி
4. அசோக்குமார், திரு. கி. .. கிருஷ்ணகிரி
5. அசோக்குமார், திரு. N. .. பேராவூரணி
6. அண்ணாதுரை, திரு. கா. .. பட்டுக்கோட்டை
7. அப்துல் சமது, திரு. ப. .. மணப்பாறை
8. அப்துல் வஹாப், திரு. மு. .. பாளையங்கோட்டை
9. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
10. அமலு, திருமதி V. .. குடியாத்தம் (தனி)
11. அமுல் கந்தசாமி, திரு. T.K. .. வால்பாறை (தனி)
12. அம்பேத்குமார், திரு. S. .. வந்தவாசி (தனி)
13. அம்மன் K. அர்ச்சுணன், திரு. .. கோயம்புத்தூர் (வடக்கு)
14. அய்யப்பன், திரு. பி. .. உசிலம்பட்டி
15. அரவிந்த் ரமேஷ், திரு. ச. .. சோழிங்கநல்லூர்
16. அருண்குமார், திரு. P.R.G. .. கவுண்டம்பாளையம்
17. அருண்மொழிதேவன், திரு. ஆ. .. புவனகிரி
18. அருள், திரு. இரா. .. சேலம் (மேற்கு)
19. அர்ஜுனன், திரு. பொ. .. திண்டிவனம் (தனி)
20. அனிதா R. ராதாகிருஷ்ணன், திரு. .. திருச்செந்தூர்
21. அன்பரசன், திரு. தா.மோ. .. ஆலந்தூர்
22. அன்பழகன், திரு. க. .. கும்பகோணம்
23. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு
24. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திரு. .. திருவெறும்பூர்
25. ஆனந்தன், திரு. எம்.எஸ்.எம். .. பல்லடம்
26. இசக்கி சுப்பையா, முனைவர் .. அம்பாசமுத்திரம்
27. இராசேந்திரன், திரு. சபா. .. நெய்வேலி

28. இராமகிருஷ்ணன், திரு. நா.	.. கம்பம்
29. இராமச்சந்திரன், திரு. ட்டி.	.. தளி
30. இராமச்சந்திரன், திரு. K.K.S.S.R.	.. அருப்புக்கோட்டை
31. இராஜா, திரு. S.R.	.. தாம்பரம்
32. இராஜேந்திரன், திரு. இரா.	.. சேலம் (வடக்கு)
33. இராஜேந்திரன், திரு. வி.ஜி.	.. திருவள்ளூர்
34. இலட்சுமணன், டாக்டர் இரா.	.. விழுப்புரம்
35. இளங்கோ, திரு. ரா.	.. அரவக்குறிச்சி
36. இளங்கோவன், திரு. ஈ.வெ.கி.ச.	.. ஈரோடு (கிழக்கு)
37. இனிகோ இருதயராஜ், முனைவர் த.	.. திருச்சிராப்பள்ளி (கிழக்கு)
38. ஈஸ்வரப்பன், திரு. J.L.	.. ஆற்காடு
39. ஈஸ்வரன், திரு. ஈ.ஆர்.	.. திருச்செங்கோடு
40. உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு.	.. உடுமலைப்பேட்டை
41. உதயகுமார், திரு. ஆர்.பி.	.. திருமங்கலம்
42. உதயசூரியன், திரு. தா.	.. சங்கராபுரம்
43. உதயநிதி ஸ்டாலின், திரு.	.. சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி
44. ஊர்வசி அமிர்தராஜ், திரு. செ.	.. ஸ்ரீவைகுண்டம்
45. எடப்பாடி K. பழனிசாமி, திரு.	.. எடப்பாடி
46. எபினேசர் என்கிற ஜான் எபினேசர், திரு. ஜே.ஜே.	.. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
47. எழிலரசன், திரு. சி.வி.எம்.பி.	.. காஞ்சிபுரம்
48. எழிலன், டாக்டர் நா.	.. ஆயிரம் விளக்கு
49. ஐட்ரீம் இரா. மூர்த்தி, திரு.	.. இராயபுரம்
50. ஐயப்பன், திரு. கோ.	.. கடலூர்
51. கடம்பூர் ராஜு, திரு.	.. கோவில்பட்டி
52. கணபதி, திரு. க.	.. மதுரவாயல்
53. கணேசன், திரு. சி.வி.	.. திட்டக்குடி (தனி)
54. கணேஷ், திரு. ஆர்.	.. உதகமண்டலம்
55. கண்ணன், திரு. க.சொ.க.	.. ஜெயங்கொண்டம்
56. கதிரவன், திரு. சீ.	.. மண்ணச்சநல்லூர்

57. கந்தசாமி, திரு. V.P. .. சூலூர்
58. கயல்விழி செல்வராஜ், திருமதி என். .. தாராபுரம் (தனி)
59. கருணாநிதி, திரு. இ. .. பல்லாவரம்
60. கருணாநிதி, திரு. ஜெ. .. தியாகராய நகர்
61. கருப்பணன், திரு. K.C. .. பவானி
62. கருமாணிக்கம், திரு. இராம. .. திருவாடனை
63. காதர்பாட்சா முத்துராமலிங்கம், திரு. .. இராமநாதபுரம்
64. காந்தி, திரு. ஆர். .. ராணிப்பேட்டை
65. காந்தி, திரு. எம்.ஆர். .. நாகர்கோவில்
66. காந்திராஜன், திரு. எஸ். .. வேடசந்தூர்
67. காமராஜ், திரு. இரா. .. நன்னிலம்
68. கார்த்திகேயன், திரு. க. .. ரிஷிவந்தியம்
69. கார்த்திகேயன், திரு. ப. .. வேலூர்
70. கிரி, திரு. மு.பெ. .. செங்கம் (தனி)
71. கிருஷ்ணசாமி, திரு. ஆ. .. பூந்தமல்லி (தனி)
72. கிருஷ்ணமுரளி, திரு. செ. .. கடையநல்லூர்
73. கீதா ஜீவன், திருமதி பி. .. தூத்துக்குடி
74. கோவிந்தசாமி, திரு. ஆ. .. பாப்பிரெட்டிப்பட்டி
75. கோவிந்தராஜன், திரு. டி.ஜெ. .. கும்மிடிப்பூண்டி
76. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்
77. சக்ரபாணி, திரு. மு. .. வானூர் (தனி)
78. சங்கர், திரு. கே.பி. .. திருவொற்றியூர்
79. சண்முகையா, திரு. எம்.சி. .. ஒட்டப்பிடாரம் (தனி)
80. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (தனி)
81. சதாசிவம், திரு. S. .. மேட்டூர்
82. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
83. சந்திரசேகர், திரு. துரை. .. பொன்னேரி (தனி)
84. சந்திரன், திரு. S. .. திருத்தணி
85. சம்பத்குமார், திரு. வே. .. அரூர் (தனி)
86. சரவணக்குமார், திரு. கே.எஸ். .. பெரியகுளம் (தனி)

87. சரவணன், திரு. பெ.சு.தி. .. கலசப்பாக்கம்
88. சரஸ்வதி, டாக்டர் சி. .. மொடக்குறிச்சி
89. சாமிநாதன், திரு. மு.பெ. .. காங்கேயம்
90. சித்ரா, திருமதி கு. .. ஏற்காடு (ஆ.வ.)
91. சிந்தனை செல்வன், திரு. ம. .. காட்டுமன்னார் கோவில் (தனி)
92. சிவகாமசுந்தரி, திருமதி க. .. கிருஷ்ணராயபுரம் (தனி)
93. சிவகுமார் என்கிற தாயகம் கவி, திரு. ப. .. திரு.வி.க. நகர் (தனி)
94. சிவகுமார், திரு. ச. .. மயிலம்
95. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. குன்னம்
96. சின்னதுரை, திரு. மா. .. கந்தர்வகோட்டை (தனி)
97. சின்னப்பா, திரு. கு. .. அரியலூர்
98. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
99. சுதர்சனம், திரு. எஸ். .. மாதவரம்
100. சுந்தரராஜன், திரு. செ. .. சங்கரி
101. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்
102. சுப்பிரமணியன், திரு. மா. .. சைதாப்பேட்டை
103. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிபாளையம்
104. செஞ்சி K.S. மஸ்தான், திரு. .. செஞ்சி
105. செந்தில்குமார், திரு. ஐ.பி. .. பழனி
106. செந்தில் குமார், திரு. கோ. .. வாணியம்பாடி
107. செந்தில்குமார், திரு. மா. .. கள்ளக்குறிச்சி (தனி)
108. செந்தில்நாதன், திரு. பெரி. .. சிவகங்கை
109. செந்தில்பாலாஜி, திரு. V. .. கரூர்
110. செல்லூர் கே. ராஜூ திரு. .. மதுரை (மேற்கு)
111. செல்வபெருந்தகை, திரு. கு. .. ஸ்ரீபெரும்புதூர் (தனி)
112. செல்வராஜ், திரு. க. .. திருப்பூர் தெற்கு
113. செல்வராஜ், திரு. A.K. .. மேட்டுப்பாளையம்
114. செழியன், முனைவர் கோவி. .. திருவிடைமருதூர் (தனி)
115. சேகர், திரு. R.D. .. பெரம்பூர்
116. சேகர், திரு. S. .. பரமத்தி-வேலூர்

117. சேகர்பாபு, திரு. பி.கே. .. துறைமுகம்
118. சேவூர் S. இராமச்சந்திரன், திரு. .. ஆரணி
119. சௌந்தரபாண்டியன், திரு. அ. .. லால்குடி
120. தங்கப்பாண்டியன், திரு. எஸ். .. ராஜபாளையம்
121. தங்கமணி, திரு. பி. .. குமாரபாளையம்
122. தங்கம் தென்னரசு, திரு. .. திருச்சுழி
123. தமிழரசி, திருமதி ஆ. .. மானாமதுரை (தனி)
124. தமிழ்செல்வம், திரு. T.M. .. ஊத்தங்கரை (தனி)
125. தளபதி, திரு. கோ. .. மதுரை (வடக்கு)
126. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
127. தனபால், திரு. ப. .. அவினாசி (தனி)
128. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
129. திண்டுக்கல் சி. சீனிவாசன், திரு. .. திண்டுக்கல்
130. தியாகராஜன், திரு. ந. .. முசிறி
131. துரைமுருகன், திரு. .. காட்பாடி
132. தேவராஜி, திரு. க. .. ஜோலார்பேட்டை
133. தேன்மொழி, திருமதி எஸ். .. நிலக்கோட்டை (தனி)
134. நத்தம் ஆர். விசுவநாதன், திரு. .. நத்தம்
135. நந்தகுமார், திரு. A.P. .. அணைக்கட்டு
136. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
137. நல்லதம்பி, திரு. அ. .. கெங்கவல்லி (தனி)
138. நல்லதம்பி, திரு. A. .. திருப்பத்தூர்
139. நாகைமாலி, திரு. வி.பி. .. கீழ்வேளூர் (தனி)
140. நாசர், திரு. சா.மு. .. ஆவடி
141. நிவேதா எம். முருகன், திரு. .. பூம்புகார்
142. நீலமேகம், திரு. டி.கே.ஜி. .. தஞ்சாவூர்
143. நேரு, திரு. கே.என். .. திருச்சிராப்பள்ளி (மேற்கு)
144. பண்ணாரி, திரு. அ. .. பவானிசாகர் (தனி)
145. பரந்தாமன், திரு. இ. .. எழும்பூர் (தனி)
146. பழனி நாடார், திரு. S. .. தென்காசி
147. பழனியாண்டி, திரு. மொ. .. ஸ்ரீரங்கம்

148. பழனிவேல் தியாக ராஜன், முனைவர் .. மதுரை (மத்தி)
149. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
150. பன்னீர்செல்வம், திரு. ஓ. .. போடிநாயக்கனூர்
151. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (தனி)
152. பாண்டியன், திரு. K.A. .. சிதம்பரம்
153. பாபு, திரு. மு. .. செய்யூர் (தனி)
154. பாலசுப்ரமணியன், திரு. ஈ. .. சேலம் (தெற்கு)
155. பாலாஜி, திரு. S.S. .. திருப்போரூர்
156. பால் மனோஜ் பாண்டியன், திரு. .. ஆலங்குளம்
157. பிச்சாண்டி, திரு. கு. .. கீழ்பெண்ணாத்தூர்
158. பிரகாஷ், திரு. ஓய். .. ஓசூர்
159. பிரபாகரராஜா, திரு. எ.எம்.வி. .. விருகம்பாக்கம்
160. பிரபாகரன், திரு. ம. .. பெரம்பலூர் (தனி)
161. பிரின்ஸ், திரு. ஜே.ஜி. .. குளச்சல்
162. புகழேந்தி, திரு. நா. .. விக்கிரவாண்டி
163. பூண்டி கே. கலைவாணன், திரு. .. திருவாரூர்
164. பூமிநாதன், திரு. மு. .. மதுரை (தெற்கு)
165. பெரியகருப்பன், திரு. கேஆர். .. திருப்பத்தூர்
166. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
167. பெரியபுள்ளான் என்கிற செல்வம், திரு. பெ. .. மேலூர்
168. பொள்ளாச்சி V. ஜெயராமன், முனைவர் .. பொள்ளாச்சி
169. பொன்முடி, முனைவர் க. .. திருக்கோவிலூர்
170. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வ.)
171. மகாராஜன், திரு. ஆ. .. ஆண்டிப்பட்டி
172. மகேந்திரன், திரு. சி. .. மடத்துக்குளம்
173. மணி, திரு. ரா. .. ஓமலூர்
174. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
175. மணிக்கண்ணன், திரு. A.J. .. உளுந்தூர்பேட்டை
176. மணியன், திரு. ஓ.எஸ். .. வேதாரண்யம்

177. மதியழகன், திரு. தே. .. பர்கூர்
178. மதிவேந்தன், டாக்டர் மா. .. ராசிபுரம் (தனி)
179. மரகதம் குமரவேல், திருமதி கு. .. மதுராந்தகம் (தனி)
180. மனோ தங்கராஜ், திரு. த. .. பத்மநாபபுரம்
181. மாங்குடி, திரு. சா. .. காரைக்குடி
182. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை
183. மாரிமுத்து, திரு. K. .. திருத்துறைப்பூண்டி (தனி)
184. மார்க்கண்டேயன், திரு. G.V. .. விளாத்திகுளம்
185. மான்ராஜ், திரு. இ.மா. .. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி)
186. முகம்மது ஷாநவாஸ், திரு. ஜெ. .. நாகப்பட்டினம்
187. முத்துசாமி, திரு. சு. .. ஈரோடு (மேற்கு)
188. முத்துராஜா, டாக்டர் வை. .. புதுக்கோட்டை
189. முருகேசன், திரு. செ. .. பரமக்குடி (தனி)
190. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
191. முனுசாமி, திரு. கே.பி. .. வேப்பனஹள்ளி
192. மூர்த்தி, திரு. பி. .. மதுரை (கிழக்கு)
193. மெய்யநாதன், திரு. சிவ.வீ. .. ஆலங்குடி
194. மோகன், திரு. M.K. .. அண்ணா நகர்
195. ரகுபதி, திரு. எஸ். .. திருமயம்
196. ரகுராமன், திரு. A.R.R. .. சாத்தூர்
197. ரவி, திரு. சு. .. அரக்கோணம் (தனி)
198. ராதாகிருஷ்ணன், திரு. R. .. விருத்தாசலம்
199. ராமசந்திரன், திரு. கா. .. குன்னூர்
200. ராமச்சந்திரன், திரு. தி. .. அறந்தாங்கி
201. ராமலிங்கம், திரு. பெ. .. நாமக்கல்
202. ராஜகண்ணப்பன், திரு. R.S. .. முதுகுளத்தூர்
203. ராஜகுமார், திரு. S. .. மயிலாடுதுறை
204. ராஜமுத்து, திரு. M. .. வீரபாண்டி
205. ராஜன் செல்லப்பா, திரு. வி.வி. .. திருப்பரங்குன்றம்
206. ராஜா, திரு. ஈ. .. சங்கரன்கோவில் (தனி)
207. ராஜா, முனைவர் T.R.B. .. மன்னார்குடி
208. ராஜேஷ் குமார், திரு. செ. .. கிள்ளியூர்

209. ரூபி ஆர். மனோகரன், திரு. .. நாங்குநேரி
210. வரலட்சுமி, திருமதி ம. .. செங்கல்பட்டு
211. வானதி சீனிவாசன், திருமதி .. கோயம்புத்தூர் (தெற்கு)
212. வில்வநாதன், திரு. அ.செ. .. ஆம்பூர்
213. விஜயகுமார், திரு. K.N. .. திருப்பூர் (வடக்கு)
214. விஜயதரணி, திருமதி S. .. விளவங்கோடு
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. விராலிமலை
216. வெங்கடாசலம், திரு. A.G. .. அந்தியூர்
217. வெங்கடேசன், திரு. ஆ. .. சோழவந்தான் (தனி)
218. வெங்கடேஷ்வரன், திரு. எஸ்.பி. .. தருமபுரி
219. வெற்றிஅழகன், திரு. அ. .. வில்லிவாக்கம்
220. வேலு, திரு. எ.வ. .. திருவண்ணாமலை
221. வேலு, திரு. த. .. மயிலாப்பூர்
222. வேலுமணி, திரு. எஸ்.பி. .. தொண்டாமுத்தூர்
223. வேல்முருகன், திரு. தி. .. பண்ருட்டி
224. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
225. ஜவாஹிருல்லா, முனைவர் எம்.எச். .. பாபநாசம்
226. ஜெகன் மூர்த்தி, திரு. மு. .. கீழ்வைத்திணான்குப்பம் (தனி)
227. ஜெயக்குமார், திரு. S. .. பெருந்துறை
228. ஜெயசங்கரன், திரு. A.P. .. ஆத்தூர் (தனி)
229. ஜெயசீலன், திரு. பொன். .. கூடலூர் (தனி)
230. ஜெயராம், திரு. கே.ஆர். .. சிங்காநல்லூர்
231. ஜோசப் சாமுவேல், திரு. .. அம்பத்தூர்
232. ஜோதி, திரு. ஒ. .. செய்யாறு
233. ஸ்டாலின், திரு. மு.க. .. கொளத்தூர்
234. ஸ்டாலின் குமார், திரு. செ. .. துறையூர் (தனி)

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்

திரு. ஆர். சண்முகசுந்தரம் .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 28, திருவள்ளுவர் ஆண்டு–2054

2023 ஏப்ரல் 11, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. மு. அப்பாவு** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்."

ஒரு செயலில் ஈடுபடும்போது அச்செயலைப் பற்றிய அனைத்தையும் ஆராய்ந்தறிந்து முயற்சி மேற்கொண்டால் முடியாதது எதுவுமில்லை.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 131, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

131—

பாதாளச் சாக்கடைத் திட்டம்

***125—திரு. S.R. இராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, செம்பாக்கம் நகராட்சிப் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தாம்பரம், பல்லாவரம், பம்மல், அனகாபுத்தூர் மற்றும் செம்பாக்கம் ஆகிய நகராட்சிகளையும், பெருங்களத்தூர், சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், பீர்க்கங்கரணை, திருநீர்மலை ஆகிய பேரூராட்சிகளையும் ஒன்றாகச் சேர்த்து 2021 ஆம் ஆண்டு தாம்பரம் மாநகராட்சியாகத் தரமுயர்த்தப்பட்டது. தாம்பரம் மாநகராட்சிப் பகுதிகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள 15 ஊராட்சி அமைப்புகளையும் இணைத்து முழுமையான பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பணி வரும் 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் முடிவுறும். அதன் பிறகு, நிதியாதாரம் திரட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள்.

திரு. S.R. இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2011 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அப்போது உள்ளாட்சித் துறை அமைச்சராக கழகத்தினுடைய தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இருந்தார்கள். தாம்பரம் தொகுதியில் மட்டும் 12 பேரூராட்சிகளும், 1 நகராட்சியும் இருந்தன. அதிலே, சோழிங்கநல்லூர், பள்ளிக்கரணை, பெருங்குடி, உள்ளகரம் மற்றும் புழுதிவாக்கம் ஆகிய பகுதிகளில் பணிகள் நிறைவடைந்துவிட்டன. குறிப்பாக, தாம்பரம், செம்பாக்கம், சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கங்கரணை ஆகிய தாம்பரம் தொகுதியில் உள்ளடங்கிய பேரூராட்சிகள் தற்போது மாநகராட்சியோடு இணைக்கப்பட்டிருந்தாலும், 2009 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தாம்பரம் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணியே இன்னும் முடிவடையவில்லை. குறிப்பாக தாம்பரம், பல்லாவரம் ஆகிய இரண்டு பகுதிகளிலும் தற்போது பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, தாம்பரம் தொகுதியில் உள்ளடங்கிய மேற்காணும் 5 பேரூராட்சிகளிலும் மற்றும் முடிச்சூர் ஊராட்சி, அகரம்தென் ஊராட்சி, திருவஞ்சேரி ஊராட்சி மற்றும் மதுரப்பாக்கம் ஊராட்சி ஆகிய 4 ஊராட்சிகளிலும் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை வெகு விரைவில் நிறைவேற்றித் தர வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என் நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் நான் முன்பே சொன்னேன்; தாம்பரம் மாநகராட்சிப் பகுதிக்குட்பட்ட பல்லாவரம் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளது. பம்மல், அனகாபுத்தூர் ஆகிய பகுதிகளில் ரூபாய் 211.15 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் பிப்ரவரி மாதம் 2024 ஆம் ஆண்டு நிறைவேற்றப்படும். தாம்பரம் பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூபாய் 160.97 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில், கிழக்குத் தாம்பரம் பகுதியில் மாநகராட்சிமூலம் மேற்கொள்ளப்பட்ட பணி பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரக்கூடிய நிலையில் உள்ளது. மேற்குத் தாம்பரம் பகுதியில் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் 95 சதவிகிதம் முடிவடைந்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. மேலும், இப்போது தாம்பரம் மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகள் மற்றும் செம்பாக்கம், மாடம்பாக்கம், பெருங்களத்தூர், சிட்லப்பாக்கம், பீர்க்கங்கரணை மற்றும் திருநீர்மலை ஆகிய பகுதிகளில் ஆய்வு செய்து தயாரிக்கப்படும் அறிக்கையின் அடிப்படையில் ஒரு புதிய ஒருங்கிணைந்த பாதாளச் சாக்கடைத் திட்டம் வகுக்கப்பட வேண்டியுள்ளதாலும், நகரின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ளூர் சுகாதாரம் பேணுதலின் முக்கியத்துவம் கருதியும், கூடுதல் கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் அமைக்கவும் மற்றும் இதர உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியம் மூலமாக உரிய விரிவான திட்ட அறிக்கை தயார் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி வரும் ஜூலை மாதம் 2023 ஆம் ஆண்டு முடிவடையும். அப்பணி முடிந்த பிறகு, நிதி திரட்டி, அப்பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள்.*

திரு. S.R. இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன விளக்கம் எங்களுக்குத் திருப்திகரமாக இருந்தாலும், தற்போது*

[2023 ஏப்ரல் 11

தாம்பரம் பகுதி வேகமாக வளர்ந்துகொண்டிருக்கின்ற பகுதியாக இருக்கிறது. கொரோனாவிற்குப் பிறகு எப்படி எப்படியெல்லாம் புதுப்புது வியாதிகள் வருகின்றன என்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தாம்பரம் பெரிய ஏரி, கடப்பேரி பெரிய ஏரி, சிட்லப்பாக்கம் பெரிய ஏரி, செம்பாக்கம் பெரிய ஏரி மற்றும் மாடம்பாக்கம் பெரிய ஏரி ஆகிய ஏரிகள் மட்டுமல்லாமல், புதுத்தாங்கல் ஏரி, வண்ணாரந்தாங்கல் ஏரி, எட்டுத்தாங்கல் ஏரி, சீக்கனா ஏரி போன்ற ஏரிகளெல்லாம் மையப் பகுதிகளில் இருக்கின்றன. பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெறாத காரணத்தினால், தற்போது சுற்றுச்சூழல் மிகவும் பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கிறது. அனைத்து கழிவுநீரும் அந்த ஏரிகளில் சென்று கலக்கிறது. ஆகவே, பாதாளச் சாக்கடைப் பணிகளை விரைவாக முடிக்க வேண்டும்.

முற்பகல் 10–05

இன்றைக்குக் குடிதண்ணீருக்காக நாம் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறோம். வெகுவிரைவில் இந்தப் பணி முடிவடைந்தால், இந்த ஏரிகளையெல்லாம் சுத்தப்படுத்தினால், குடிதண்ணீர்ப் பஞ்சம் இல்லாமல் தாம்பரம் மாநகராட்சிப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் பயன்பெறுவார்கள் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தப் பணி எப்படியிருந்தாலும் நகரப் பகுதியில், குறிப்பாக, தாம்பரம் பகுதிக்கு உடனே இதனைச் செய்துதர வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருகிலிருக்கிற மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் அது எங்களுடைய நீர்வளத் துறையினுடைய ஏரிகள்; அதை நாங்கள்தான் பராமரிப்போம் என்று சொல்லியிருக்கிறார். இந்த ஆண்டு, நம்முடைய நகராட்சி நிர்வாகத் துறை மானியக் கோரிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தந்த நகரங்களில் இருக்கிற நீர்நிலைகளை மேம்படுத்தி, அதைக் குடிநீருக்கு உகந்ததாகச் செய்வதற்காகத் தனியாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. S.R. இராஜா அவர்கள் சொன்னதுபோல, புதிய மாநகராட்சிகள் உருவாக்கப்பட்ட*

2023 ஏப்ரல் 11]

பகுதிகளில் அருகிலிருக்கின்ற பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளை ஏற்கெனவே இணைத்துவிட்டோம். சில ஊராட்சிகளையும் விரிவுபடுத்துகின்ற பகுதியிலே இணைத்துள்ளோம். உள்ளாட்சித் தலைவர்களுடைய பதவிக் காலம் முடியும்போது அவையெல்லாம் இணையும். இவற்றையெல்லாம் மனதிலே கொண்டுதான் தாம்பரம் மாநகராட்சியில் அனைத்துப் பகுதிகளுக்கும் முழுமையான பாதாளச் சாக்கடைத் திட்டத்தைக் கொண்டு வருவதற்காகத்தான் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது ஜூலை மாதத்திலே முடியும். அது வந்த பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று நிதியாதாரத்தைத் தொகுத்து, இந்த ஆண்டு அதைத் துவங்குவதற்குரிய அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும்.

அதே நேரத்தில், நம்முடைய மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களின் அனுமதியோடு நான் கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக, அந்த நகரப் பகுதியிலே, பாசனம் இல்லாத ஏரிகள் இருக்குமானால், அதை மேம்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கு நமது நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று அந்தப் பணியையும் செய்யலாம். நீங்கள் ஏற்கெனவே, வண்டலூர் வரை உங்களுடைய மாநகராட்சியை விரிவுபடுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அதையும் மனதிலே வைத்திருக்கிறோம். எனவே, வருகிற டிசம்பர் 24-ல் உள்ளாட்சித் தலைவருடைய பதவிக் காலம் முடிகிற காலத்தில், எந்தெந்த நகரப் பகுதிகளைச் சுற்றியிருக்கிற கிராமப் பகுதிகளைச் சேர்ப்பது என்பதையறிந்து, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஆகியோருடன் கலந்துபேசி, அதையெல்லாம் சேர்த்து, அதற்கும் சேர்த்து குடிதண்ணீரும், பாதாளச் சாக்கடைத் திட்டமும் கொண்டு வருகிற பணிக்காகத்தான் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே, எது எப்படியிருந்தாலும், என் தொகுதியை மட்டும் கவனியுங்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார். தமிழ்நாட்டில் இருக்கிற 21 மாநகராட்சிகளுக்கும், 138 நகராட்சிகளுக்கும், 490 பேரூராட்சிகளுக்கும் சேர்த்துத்தான் இந்தத் திட்டங்களெல்லாம் தீட்டப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார் அவர்கள்.*

திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருப்பூர் (வடக்கு) தொகுதியிலுள்ள மாநகராட்சிப் பகுதிகளிலே பாதாளச் சாக்கடைத் திட்டமும், அதுமட்டுமல்லாமல் நான்காவது குடிநீர்த் திட்டப் பணிகளும் முடிவடைந்த நிலையிலுள்ளன. சில பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நடைபெறாமல் உள்ளது. சில பகுதிகளிலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கு என்ன வேண்டும்? எந்த ஊருக்கு என்ன செய்ய வேண்டும்?

திரு. K.N. விஜயகுமார்: இப்பொழுது சொல்கிறேன். திருப்பூர் மாநகராட்சிப் பகுதி, அந்நியச் செலாவணி கிட்டத்தட்ட ரூ.30,000 கோடியை எட்டிப் பிடிக்கயிருக்கிற பகுதி. அந்தப் பகுதியிலே, தார்ச் சாலைகளும், சாக்கடை வசதிகளும், பாதாளச் சாக்கடைத் திட்டப் பணிகளும் நடைபெறாமல் உள்ளன. அந்தப் பணிகள் எப்போது நடைபெறும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி புரிந்துவிட்டது. மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.

முற்பகல் 10–10

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு உறுப்பினர், திருப்பூர் (வடக்குத்) தொகுதிதானே? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாநகராட்சியிலும், நாள்தோறும் நகரங்கள் வளர்ந்துகொண்டே வருகின்றன. சில இடங்களிலே நகரத்தைத் தாண்டி, ஒரு கிலோ மீட்டர், இரண்டு கிலோ மீட்டர் தள்ளிப் புதிதாக இல்லங்களை அமைத்து, அந்தப் பகுதிக்கு குடிதண்ணீரும் தேவை, பாதாளச் சாக்கடைத் திட்டமும் தேவை என்று பொதுமக்களிடமிருந்து நிறைய கோரிக்கைகளும் வந்துகொண்டிருக்கின்றன. இதை ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறபோது, இதில் மிகப் பெரிய நிதிச் சுமை அரசுக்கு இருக்கிறது. ஒவ்வொன்றாக எடுத்துதான் செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம். எனவே, நாம் சாலைகள் போடுகிற மாதிரி, கட்டடங்கள் கட்டுவது மாதிரி உடனடியாக இதைச் செய்வதற்கில்லை. கொஞ்சம் காலதாமதம் ஆகிறது. திட்ட அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். எதையெடுத்தாலும், ரூ.500 கோடி, ரூ.1,000 கோடி என்று செலவாகிற காரணத்தால், நிதி நிலைமையையும் பார்க்க வேண்டியிருக்கிறது. நமது திருப்பூர்

(வடக்கு) தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இப்போதுகூட திருப்பூர் மாநகராட்சி மிகச் சிறப்பாக இருக்கிறது என்று ஒன்றிய அரசே இரண்டு முறை பரிசுகள் வழங்கியிருக்கின்றது என்று சொல்கிறார்கள். இருந்தாலும், சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் கவனத்தில் கொள்கிறோம். இன்று மாலை துறையின் சார்பில் திருப்பூர் மாநகராட்சியினுடைய ஆணையர் அவர்களுடனான கூட்டம் இருக்கிறது. நீங்கள் சொன்னதைக் கவனத்தில் கொண்டு, அதை எவ்வளவு விரைவாகச் செய்ய முடியும் என்பதை ஆராய்வோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைர் தலைவர்: *வினா வரிசை எண் 132, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

132—

சிப்காட் தொழிற்பேட்டை

***14467—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சீர்காழி தொகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி என்பது டெல்டா மாவட்டத்தினுடைய கடைமடை பகுதியாகும். கடைமடை பகுதி என்று சொன்னால், சில பேருக்குத் தெரியாது. மேட்டூரிலிருந்து பாசனத்திற்காகத் திறக்கப்படுகின்ற தண்ணீர் கடலில் கலக்கின்ற இடத்தில் வருவதால், கடைமடை என்று சொல்லப்படுகிறது.*

[2023 ஏப்ரல் 11

அந்தக் கடைமடையில் அமைந்திருப்பதுதான் என்னுடைய சீர்காழி தொகுதி. நாங்கள் பார்ப்பதெல்லாம் வயல், வரப்பு, ஆறு, குளம். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம், கடைமடைக்கு விளக்கம் கேட்கவில்லை. கேள்வி என்ன என்பதை மாண்புமிகு தொழில் துறை அமைச்சரிடம் கேட்கவும்.

திரு. மு. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லிவிடுகிறேன். இதுபோன்று வெறும் விவசாய நிலங்களை மட்டுமே பெற்றிருக்கின்ற சீர்காழி தொகுதியில் எந்தத் தொழிற்பேட்டையும் கிடையாது. படித்தவர்கள், தொழில்முனைவோர் நிறைய பேர் வருகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு பிறந்த நாள் கொண்டாடுகிறார்கள். இந்த நந்நாளில் என்னுடைய சீர்காழி தொகுதிக்கு ஒரு சிப்காட் தொழிற்பேட்டையை அமைத்துக் கொடுக்க மறுபரிசீலனை செய்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2. தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துகள். எல்லா நலனும் பெற்று, பல்லாண்டு பல்லாண்டு வாழ்க! வாழ்க! என வாழ்த்துகிறது இந்த அவை. (மேசையைத் தட்டும் ஒலி). மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வாழ்த்து தெரிவித்திருக்கக்கூடிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, கடைமடைக்கும் கருணை காட்டுபவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அவருடைய கருணைமிக்க பார்வையில் ஒரு சரியான தொழிற்பேட்டை அமையக்கூடிய, தொழில்மனைகளை உருவாக்கக்கூடிய நிலம்

2023 ஏப்ரல் 11]

அங்கே கிடைத்து, அத்தகைய வாய்ப்பு இருக்கக்கூடிய, ஒரு தொழிற்பேட்டை அமையக்கூடிய சூழ்நிலையை நிச்சயமாக அரசு எதிர்காலத்தில் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. மு. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிப்காட் தொழிற்பேட்டை அமைவதற்கு, சட்டமன்ற உறுப்பினர் என்ற வகையில் நான் என்ன செய்ய வேண்டும், தொகுதி மக்கள் என்ன செய்ய வேண்டும், தொழில்முனைவோர் என்ன செய்ய வேண்டும் என்ற விதிமுறைகளையும், தமிழ்நாட்டில் எத்தனை சிப்காட் தொழிற்பேட்டைகள் இருக்கின்றன என்பதையும் தெரிவித்து எனக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைத் தந்திருக்கிறார்கள். எனவே, அதனை மீண்டும் மறுபரிசீலனை செய்து, விரைவுபடுத்தி செய்து கொடுக்க வேண்டுமாய் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல வேளை நான் என்ன செய்ய வேண்டும் என்று அவர் கேட்காமல் விட்டுவிட்டார். (சிரிப்பு) கேள்வி கேட்டவருக்கு மிக்க நன்றி. அவர் என்ன செய்ய வேண்டுமென்பதை அவரே செய்துவிட்டார். அவர் செய்ய வேண்டியது கேள்வி கேட்பது; அவர் அதைக் கேள்வியாக ஏற்கெனவே கேட்டுவிட்டார். அரசு நிச்சயமாக அவர் குறிப்பிட்ட வகையில் கவனமோடு பரிசீலித்து, எதிர்காலத்தில் அவர் மனம் மகிழத்தக்க அளவிற்கு நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்கு தொழில் துறை முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைர் தலைவர்: *வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 11

133—

குடியிருப்புகள்

***14317—திரு. கே.ஆர். ஜெயராம்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, சிங்காநல்லூர் உழவர் சந்தையின் பின்புறம் பழுதடைந்த நிலையில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், சிங்காநல்லூர் உழவர் சந்தைக்குப் பின்புறமாக அமைந்துள்ள சுயநிதி திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட வீடுகள், நீண்ட நாட்களுக்கு முன்பு கட்டப்பட்ட காரணத்தினால் மிக மோசமான நிலையிலிருக்கின்றன. அவற்றை இடித்து புதிதாகக் கட்டித் தர வேண்டும். அதற்கு அரசும், வாரியமும் உதவியாக இருக்க வேண்டுமென்று வீட்டு வசதி நலச் சங்கங்கள் கேட்டிருக்கின்றன. எனவே, அந்த அடிப்படையில் வாரியம் அதனைச் செய்து கொடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம் அவர்கள்.*

திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் உழவர் சந்தைக்குப் பின்புறம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டிக் கொடுக்கப்பட்ட 960 அடுக்குமாடி குடியிருப்புகளும் கடந்த 38 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டதால், மிகவும் சிதிலமடைந்து, மக்கள்*

2023 ஏப்ரல் 11]

வசிப்பதற்குப் பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றன. உயிருக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய நிலையிலிருக்கக்கூடிய இந்தக் குடியிருப்புகளிலுள்ள 825 குடும்பங்கள் பாதுகாப்பு நலன் கருதி, வீடுகளை காலி செய்துவிட்டன. தற்போது 135 குடும்பங்கள் மட்டுமே அப்பகுதியில் வசித்து வருகின்றன. மொத்தமுள்ள 960 குடியிருப்புகளில், 877 நபர்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு முழுத் தொகையையும் செலுத்திவிட்டார்கள். அதிலே 750 நபர்களுக்கு மட்டுமே வீட்டு வசதி வாரியத்தால் கிரயப் பத்திரம் கொடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 127 நபர்களுக்கு இதுவரையிலும் கிரயப் பத்திரங்கள் கொடுக்கப்படவில்லை. உடனடியாக அந்தக் கிரயப் பத்திரங்களைக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முற்பகல் 10–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது.*

திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களே நேரில் ஆய்வு செய்துள்ளார்கள். ஆய்வுக் கூட்டங்களை நடத்தி உள்ளார்கள். தற்பொழுது தனியார் கட்டுமான நிறுவனத்துடன் இணைந்து கட்டப் போவதாக செய்திகள் வருகின்றன. இந்தப் பணிகள் எப்போது துவக்கப்படும்? இந்தப் பணிகள் எத்தனை ஆண்டுகளில் முடிக்கப்பட்டு பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்படும் என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, அந்தப் பகுதியிலே* LIG, MIG *போன்ற வீடுகளில் குடியிருக்கக்கூடிய மக்கள் அந்த வீடுகளைவிட்டு வெளியேறி வாடகை வீட்டிலே குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு வாடகைப் படி ஏதாவது வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர், உங்களுக்கு இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது.*

திரு. கே.ஆர். ஜெயராம்: *ஐயா, ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். கோவை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரே நேரத்தில் 4 கேள்விகள் கேட்கின்றீர்கள்.*

திரு. கே.ஆர். ஜெயராம்: ஒரே Subject தான், ஐயா.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. உங்களுக்கு இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது. ஏற்கெனவே கேட்ட கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன பதில் சொல்கிறார்கள் என்று கேட்டுக்கொண்டு, உங்கள் கேள்விக்குப் பதில் இல்லை என்று சொன்னால், நீங்கள் மீண்டும் இரண்டு கேள்விகள் கேட்கலாம். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர், பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் அடுக்குமாடி குடியிருப்பிலே 960 வீடுகள் இருக்கின்றன. அதிலே, 147 வீடுகள், ஏற்கெனவே allot ஆனவர்கள் அதற்கு சரியாக பணம் கட்டாமல் விட்டுவிட்டு போய்விட்டார்கள். அரசாங்கம் மீண்டும் ஒரு முறை வாய்ப்பு கொடுத்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதைப் பற்றி ஆய்வு செய்கிறபொழுது, விரைவாக இதைக் கட்டிக்கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். யாரெல்லாம் பணம் கட்ட முடியாமல் போய்விட்டார்களோ, அவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பைக் கொடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வாய்ப்பு கொடுக்கப்பட்டு, ஏறத்தாழ 50 பேருக்கும் மேலே வந்திருக்கிறார்கள். அதற்கடுத்து இது நேரடியாக வீட்டு வசதி வாரியம் செய்கிற அல்லது அரசாங்கம் செய்கிற பணி அல்ல. இதை அங்கே இருக்கிற சங்கங்கள் ஒன்றாக இணைந்து—ஏனென்றால் அங்கு 4 சங்கங்கள் இருக்கின்றன. அந்த 4 சங்கங்களிலே இருக்கிற அத்தனை பேரும் ஒன்றாகச் சேர்ந்து, 960 வீடுகளையும் சேர்ந்த உறுப்பினர்களும் ஒன்றாகச் சேர்ந்து அந்தப் பணியை அவர்கள் ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதிலே, கட்டுமான நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கின்ற பொறுப்பெல்லாம் அவர்களுடையது. அதிலே, அரசாங்கமோ அல்லது வீட்டு வசதி வாரியமோ தலையிடாது. அது அவர்களுடைய விருப்பம். எனவே, அதற்கேற்ப அவர்கள் திட்டம் போட்டிருக்கிறார்கள். அதிலே, நாங்கள் அவர்களுக்குச் சொல்லியிருப்பது, அந்தக் கட்டுமான நிறுவனம் அவர்கள் வெளியிலே இருப்பதற்கு முழுமையாக வாடகை கொடுக்க வேண்டும்.

அதைப்போல, Registration fees-யும் ஏற்றுக்கொள்ள வேண்டும். GST வரியைக் கட்ட வேண்டும். இதிலே premium FSI, ஏதாவது பணம் கட்ட வேண்டியிருந்தால், அதையும் கட்ட

2023 ஏப்ரல் 11]

வேண்டும். இப்படி என்னென்ன வேலைகள் இருக்கின்றனவோ, அத்தனையையும் எந்தச் செலவும் இல்லாமல் அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று நாங்கள் சொல்லி இருக்கிறோம். இப்பொழுது, ஓர் ஒப்பந்தம் அவர்களுக்குள்ளே போட்டிருக்கிறார்கள். இனிமேல்தான் வாரியம் அதைச் சரிபார்த்து அதன்மீது நடவடிக்கை எடுக்கும். இதற்காக தனியாக ஒரு சட்டம் இயற்றி, அது ஒன்றிய அரசு வரை சென்று, President-இடம் கையெழுத்தாகி, இப்பொழுது வந்திருக்கிறது. அதற்காக Rules எல்லாம் frame செய்து நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம் அவர்கள்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான, உள்ளூர் திட்டக் குழுமம் Master Plan 1994-லே வெளியிடப்பட்டது. தற்பொழுது 28 வருடங்களைக் கடந்து—15 இலட்சம் மக்கள் தொகையாக இருந்த கோவை மாவட்டத்தில் இன்றைக்கு 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். அந்த Master Plan எப்போது வெளியிடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல், கோவை மாவட்டத்திலே இருக்கக்கூடிய முக்கியப் பிரச்சினை. 12 வருவாய் கிராமங்களை உள்ளடக்கி தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் 1986 ஆம் ஆண்டு சுமார் 7,000 ஏக்கர் நிலங்களை தமிழ்நாடு அரசு கையகப்படுத்துவதற்காக அரசாணை வெளியிட்டது. ஆனால், தற்போது வரை 500 ஏக்கர் நிலங்கள் மட்டுமே வீட்டு வசதி வாரியத்தால் எடுக்கப்பட்டு, வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள நிலங்களில் தமிழ்நாடு வீட்டு வசதித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நகர் ஊரமைப்புத் துறையில் சில உரிமையாளர்கள் அனுமதியைப் பெற்று வீட்டு மனைகளாகப் பிரித்து விற்பனை செய்துள்ளனர். சில உரிமையாளர்கள் அனுமதியற்ற மனைப் பிரிவுகளாக விற்பனை செய்துள்ளனர். 50,000-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அந்த இடங்களை வாங்கி அங்கே வசித்து வருகிறார்கள். கடந்த சட்டமன்றத் தேர்தலின்போது தற்போதைய முதல்வர் அவர்கள் அந்தப் பகுதிக்கு பரப்புரைக்கு வந்தபொழுது திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினுடைய நடவடிக்கைகள் கைவிடப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் கடந்த 2 ஆண்டு காலமாக 6,500 ஏக்கர்

நிலங்களும், 12 வருவாய் கிராமங்களில் பத்திரப் பதிவு செய்ய முடியாமலும், வருவாய்த் துறையில் பட்டா மாற்ற முடியாமலும், வங்கிகளிலே loan வாங்க முடியாமலும் இருக்கிறது. ஆகவே, அந்தப் பொது மக்களினுடைய நலனைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினுடைய நடவடிக்கைகள் கைவிடப்பட வேண்டும். இந்த innocent purchaser—அப்பாவி மக்களுக்காவது தடையின்மைச் சான்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழகம் முழுவதும் இதுமாதிரியான பிரச்சினைகள் இருக்கின்றன. வீட்டு வசதி வாரியத்தால் நீண்ட நாட்களுக்கு முன்பே 4(1) notice கொடுக்கப்பட்டு அப்படியே விடப்பட்ட இடங்கள் இருக்கின்றன. நீதிமன்றத்திற்குச் சென்று சில உத்தரவுகள் வந்திருக்கின்றன. இது கடந்த 2 ஆண்டு காலமாக இல்லை. மிக நீண்ட நாட்களாக இந்தப் பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதிலே ஓர் ஒழுங்குமுறை இல்லை என்பதை நாங்கள் திட்டவட்டமாக வாரியத்திற்குத் தெரிவித்திருக்கிறோம்.

முற்பகல் 10–20

அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தபோதுகூட இதையெல்லாம் ஒழுங்கு செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்காக இப்போது ஒரு தனி குழுவை அமைத்து, அவர்கள் இதிலே எதை எதை நாம் விடுவிக்கலாம் என்பதைப் பரிந்துரை செய்தால், அதைச் செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஏனென்றால், நாங்களே ஒரு முடிவு எடுத்தோம் என்றால், கண்டிப்பாக எதிர்காலத்தில் அதில் ஒரு allegation வரும். ஏனென்றால், நீங்கள் சொன்ன மாதிரி பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் அதிலே involve ஆகியிருக்கின்றன. எனவே, அந்த மக்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு ஒரு குழுவை அமைத்து,

2023 ஏப்ரல் 11]

அந்தக் குழுவினுடைய பரிந்துரையை ஏற்று, அதைச் செய்யலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதற்கு நிரந்தரமாக ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படும். எதிர்காலத்திலே இப்படிப்பட்ட எந்த சங்கடமும் வரக்கூடாது. நியாயமாகப் பார்த்துச் செய்ய வேண்டும். ஓர் இடத்தை தேவை என்றால்தான் எடுக்க வேண்டும். தேவையில்லாமல் notice *கொடுக்கின்ற வேலையெல்லாம் இருக்கக் கூடாது என்பதைத் திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறோம். இது நீண்ட நாட்களாக தேங்கியிருக்கின்ற பிரச்சினை. அதைக் கண்டிப்பாக தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.*

திரு. தி. வேல்முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பண்ருட்டி தொகுதியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக பல அடுக்குமாடிக் குடியிருப்புகள் கடந்த ஆட்சியில் கட்டப்பட்டிருக்கின்றன. குலுக்கல் முறையில் தேர்வு என்றார்கள்; தொகை நிர்ணயித்ததில் பிரச்சினை என்றார்கள். ஆனால், இதுவரையில் அது மக்களுக்கு பயன்படவில்லை. அதைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர வேண்டும். மேலும், நீர்நிலைகளில் இருந்த 300-க்கும் மேற்பட்ட வீடுகளை இடித்துவிட்டார்கள். அவர்கள் இன்னமும் வீடுகள் இல்லாமல் வனாந்திரக் காடுகளிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நானும், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் சென்று அவர்களைச் சந்தித்து கண்டிப்பாக மாற்று ஏற்பாடு செய்து தருகிறோம் என்று வாக்குறுதி கொடுத்தோம். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. ஆகவே, பண்ருட்டி நகரப் பகுதியில் புதிய வீட்டு வசதி அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி அந்த மக்களுக்கு வீடுகள் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கட்டப்பட்டு* allot *ஆகாமல் இருக்கிற வீடுகளைக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை*

விரைவாக எடுக்கலாம். இப்போதுகூட 13 ஆம் தேதி அதை அறிவிக்க இருக்கிறோம். ஆனால், நீர்நிலைப் புறம்போக்கு என்ற காரணத்தினால் அந்த வீடுகளை இப்போது காலி செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு நேரடியாக வீட்டு வசதி வாரியத்தின் சார்பாக வீடுகளைக் கட்டிக் கொடுப்பது என்பது சிரமம். ஏனென்றால், நாம் கட்டுகின்ற வீடுகளுக்கு யார் யார் மனுக்களைப் போடுகிறார்களோ அவர்களுக்குத்தான் குலுக்கல் முறையிலே கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. இன்னாருக்கு என்று சொல்வதற்கான வாய்ப்பு இல்லை. அதற்கு தனியாக துறை இருக்கிறது. அவர்கள் மூலமாக இதைச் செய்யலாம். நீங்கள் சொல்கின்ற குறைகள் கண்டிப்பாகக் கவனிக்கப்படும்.

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம் அவர்கள் சொன்ன இன்னொரு பிரச்சினை குறித்து 13 ஆம் தேதி மானியக் கோரிக்கையிலே விளக்கங்கள் முழுவதுமாகக் கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம் அவர்கள்.

திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் நகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது. 2019 ஆம் ஆண்டிலே அப்போது ஆட்சியில் இருந்த முன்னாள் முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் Tamil Nadu Combined Development and Building Rules, 2019 என்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். நாகர்கோவிலில் ஒரு சென்டுக்கு குறைவான நிலங்களும், 3 அடிக்குக் குறைவான தெருக்களும் இருக்கின்றன. அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே அவர்கள் plan approval-க்குச் சென்றால் இதுவரையில் plan approval கிடைக்கவில்லை. கிட்டத்தட்ட 3 ஆயிரம் applications நமது அரசிடம் pending இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அங்கேயிருக்கக்கூடிய மக்களுக்கு வரி விதிக்கப்படுகிறது. வீடு கட்ட முடியவில்லை. கிட்டத்தட்ட 4 ஆண்டு காலம் ஆகிவிட்டது. அவர்களால் வீடு கட்டுவதற்கு ஒரு செங்கல்கூட வாங்க முடியவில்லை. Current bill கட்டிக் கொண்டிருக்கிறார்கள், காலி மனை இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) வரி விதிக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம்கூட மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் இதைப் பற்றி சொன்னார்கள். அப்போது, அதுகுறித்து முழுமையாகத் தெரியாமல் இருந்த காரணத்தினால், அதற்குப் பின்னால் இதுகுறித்த விவரங்களை எடுத்துப் பார்த்தோம். அதிலே, தொடர் கட்டடம்*–continuous building *பற்றி ஒரு பிரச்சினை இருக்கிறது. அதற்கு வழிவகை செய்வதற்காக ஏற்கெனவே ஆலோசித்து, துறையின் மூலமாக நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.*

அதேபோல, ஏற்கெனவே கட்டப்பட்டு, அதற்கெல்லாம் planning permission *இல்லாமல் இருக்கிற பிரச்சினையும் இருக்கிறது. அது பெரும்பகுதியான இடங்களிலே இருக்கிறது. சிலவற்றிற்கு நகராட்சியே கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இருந்தாலும் அதையெல்லாம் பார்த்து, ஒருங்கிணைத்து அதற்கு என்ன வழிமுறையைச் செய்ய முடியும் என்பதைப் பற்றி நாங்கள் ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம். இதிலே நீதிமன்றத்தினுடைய உத்தரவுகள் நிறைய இருக்கின்றன. எனவேதான், அவற்றை மீறி நாம் செல்வதற்கான வாய்ப்பு இல்லை. இல்லையென்றால், அதையெல்லாம் செய்வதற்கான நடவடிக்கைககளை எடுத்து செய்திருப்போம். நீதிமன்ற உத்தரவுகள் பல* stages-*ல் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அவற்றையெல்லாம் கவனித்துத்தான் நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. கண்டிப்பாக நீங்கள் சொன்னது கவனிக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் பெரும்பாலான இடங்களில், 40, 45 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட தொகுப்பு வீடுகள் அனைத்தும் இடிந்து கிடக்கின்றன. அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பல ஊர்களுக்குச் செல்கின்றபோது அந்தப் பிரச்சினை இருக்கிறது. நிதி தேவையில்லை; மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனியார்*

பங்களிப்புடன் PPP model*-லிலே அந்த வீடுகளைத் திரும்பக் கட்ட முடியுமா? ஏனென்றால், பல வீடுகள் இடிந்து, மக்கள் குடியிருக்க முடியாமல் அவற்றை திருப்பிக் கட்டுவதற்கு பணம் கிடையாது, இதனால் பூட்டிவிட்டு வாடகைக்கு இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதையெல்லாம்* PPP model*-லே கட்டித்தர முன்வருவாரா என்பதை தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக இனிமேல் கட்டக்கூடியது, பெரும்பகுதி,* Joint Venture *மூலமாகத்தான் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் எல்லா இடங்களிலும்* Joint Venture*-க்கு யாராவது வருவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. சென்னை போன்ற பெரிய பெருநகரங்களிலே வருவார்கள். கிராமப்புறங்களில்* Joint Venture*-க்கு வர மறுப்பார்கள். வர முன்வரமாட்டார்கள். இருந்தாலும் அதையெல்லாம் இங்கே இருக்கிறவற்றோடு இணைத்து செய்யலாமா என்று நாங்கள் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். இன்னொன்று, நீங்கள் சொன்ன அந்தக் கட்டடங்கள் நேரடியாக வீட்டு வசதி வாரியத்திற்கு வரக்கூடியது அல்ல. அதோடு, அந்தக் கட்டடங்களை இடித்து அங்கே* Joint Venture*-க்குப் போவதற்கான வாய்ப்பு இல்லை. அதெல்லாம் சின்ன கிராமங்கள். அவர்களுக்கு தனித்தனியாகத்தான் கட்டிக் கொடுக்க வேண்டியிருக்கும். இது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை ஆகும். அதற்கு துறையிலிருந்து அவர்களுக்கு நாங்கள் ஒரு* circular *அனுப்புவதற்கான நடவடிக்கை எடுக்கலாம். ஆனால்* JV *முறையை அமலாக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய நோக்கமாக இருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

2023 ஏப்ரல் 11]

134—

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம்

***11868—திரு. க. கார்த்திகேயன்:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ரிஷிவந்தியம் ஒன்றியம், முருக்கம்பாடி ஊராட்சியில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

3. 10-4-2023 அன்றைய அறிவிப்பு—வாளுக்கு வேலி அம்பலம்-பிறந்த நாளை அரசு விழாவாகக் கொண்டாடுதல் மற்றும் அவருக்கு திருவுருவச் சிலை அமைத்தல்—நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விக்கான பதிலை அளிப்பதற்கு முன்னால் உங்களுடைய அனுமதியோடு, நேற்றையதினம் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் சார்பில், அதனுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு ஓர் அறிவிப்பைச் செய்திருக்கிறார்கள். குறிப்பாக, சுதந்திரப் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு தங்களுடைய உயிர்களை மாய்த்துக்கொண்ட பலர் இருக்கின்றார்கள். அந்த வகையில், எங்களது சிவகங்கை மாவட்டம் ஏராளமான சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பெற்று, தியாகங்கள் புரிந்த பூமியாகும். அந்தவகையில் மருது சகோதரர்களுக்கு உறுதுணையாக தன்னுடைய போர்ப் படையை நடத்திச் சென்ற பாகனேரி நாட்டு அம்பலக்காரர், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களுக்கு அரசு விழாவும், உருவச் சிலையும் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த நேரத்திலே தொடர்ந்து வலியுறுத்தி வந்தேன். சட்டமன்றத்திலும் உரையாற்றி இருக்கிறேன். அதை இப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பரிந்துரையின்பேரில், வாளுக்கு வேலி அம்பலம் அவர்களுக்கு அரசு விழா நடத்தி, முழு உருவச் சிலை அமைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல, வேலு நாச்சியார் படை நடத்திய அந்தக் காலகட்டத்தில் அவருக்கு உறுதுணையாக இருந்த குயிலி அவர்களுக்கும் முழு உருவச் சிலை அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்திருக்கிறார்கள். இந்த 2 அறிவிப்புகளும் சுதந்திரப் போராட்டத்திற்காக தங்களை ஈடுபடுத்திக்கொண்ட அந்த*

மாவீரர்களுக்கு இந்த அரசு செய்கின்ற, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செய்கின்ற நன்றிக் கடனாக இருக்கிறது என்பதைச் சொல்லி, அத்தகைய அரிய அறிவிப்பைச் செய்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், துறையின் அமைச்சர் மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுக்கும் எங்களது மாவட்ட மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. வினாக்கள்—விடைகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நம்முடைய ரிஷிவந்தியம் சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள், ரிஷிவந்தியம் ஒன்றியம், முருக்கம்பாடி ஊராட்சிக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அமைக்க அரசு முன்வருமா என்ற கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். அதற்கான கருத்துரு இதுவரை துறையின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. க. கார்த்திகேயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ரிஷிவந்தியம் தொகுதிக்குட்பட்ட முருக்கம்பாடி அதன் துணை கிராமமான கொங்கணாமூர் என்பது சற்றேறத்தாழ 5,000 மக்கள்தொகை கொண்ட கிராமம் ஆகும். ஏற்கெனவே மணலூர்பேட்டை கூட்டுறவுச் சங்கத்திலே இந்தக் கிராமம் இருக்கிறது. அதிலே 9.000 ஹெக்டேர் விவசாய நிலப்பரப்பு உள்ளது. அதில் 530 ஹெக்டேர் கொங்கணாமூர் பகுதியும் முருக்கம்பாடி ஊராட்சியைச் சேர்ந்ததாகும். அந்த மணலூர்பேட்டை கூட்டுறவுச் சங்கத்திலே 8 கோடி ரூபாய் விவசாயக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அதிலே ஐந்தரை கோடி ரூபாய் கொங்கணாமூர் மற்றும் முருக்கம்பாடி ஊராட்சி கிராமத்திற்கு மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதி அதிக விவசாயிகள் இருக்கின்ற பகுதி. ஆகவே, அதனை மையமாகக் கொண்டு ஒரு கூட்டுறவு வங்கி அமைத்துக் கொடுத்தால் அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்குப் பயனாக இருக்கும் என்பதால் மாண்புமிகு அமைச்சர் அதற்கு ஆவன செய்வாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியைத் தொடங்க வேண்டுமென்றால், அதற்காக 2,000 ஹெக்டேர் அதாவது 4,950 ஏக்கர் விவசாய நிலங்கள் இருக்க வேண்டும். அதைப்போல, மக்கள்தொகையும் கணக்கிலே எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று விதி இருக்கிறது. அந்தவகையில் கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் சரகம், ரிஷிவந்தியம் ஒன்றியத்தில் செயல்பட்டு வரும் ஐஐ.525 மணலூர்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் முருக்கம்பாடி, கொங்கணாமூர், மணலூர்பேட்டை, பிள்ளையார்பாளையம் மற்றும் சித்தம்பட்டினம் ஆகிய கிராமங்கள் இணைக்கப்பட்டு, அந்த வங்கி இப்பொழுது செயல்பட்டு வருகிறது. ஆகவே, எதிர்காலத்தில் அதிலிருந்து இந்த முருக்கம்பாடி ஊராட்சியைப் பிரித்தால், தாய் சங்கத்திற்கும், இதுபோன்று அமைக்கப்படுகின்ற கிளை சங்கத்திற்கும் அது சாத்தியமாக இருக்குமா என்பதை ஆய்வு செய்து, பின்னர் முடிவுகள் எடுப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. கார்த்திகேயன் அவர்கள்.*

திரு. க. கார்த்திகேயன்: *ஆய்வு செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி மாவட்டம் புதிதாகப் பிரிக்கப்பட்ட மாவட்டம் ஆகும். எங்கள் மாவட்டத்திற்கான மத்திய வங்கி தலைமையிடமான விழுப்புரத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எங்களுடைய மாவட்டத்தில் 86 கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. குறிப்பாக, 2 கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. மொத்த மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் இருக்கின்ற வருமானத்தில் அதிக இலாபம் ஈட்டக்கூடிய கிளைகள் கள்ளக்குறிச்சி மாவட்டத்திலே இருக்கின்றன. இங்குள்ள விவசாயிகள் விழுப்புரம் செல்ல வேண்டுமென்றால், 100 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்ய வேண்டியிருக்கிற காரணத்தினால், மத்திய வங்கியை எங்களுடைய மாவட்டத்திற்குப் பிரித்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2023 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் மாண்புமிகு திரு. க. கார்த்திகேயன் அவர்கள் தன்னுடைய மாவட்டத்தினுடைய வளர்ச்சிக்கும், தன்னுடைய தொகுதியினுடைய வளர்ச்சிக்கும் ஆர்வம் கொண்டு, அந்த ஆர்வத்தைச் செயல்படுத்துகின்ற ஒரு சட்டமன்ற உறுப்பினர் என்பதை நான் நன்கு அறிவேன். அந்த வகையிலேதான் புதிதாக உருவாகியிருக்கின்ற கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி வேண்டுமென்ற கோரிக்கையையும் ஏற்கெனவே இங்கு வைத்திருக்கிறார். இப்போது, முருக்கம்பாடி ஊராட்சிக்கு கூட்டுறவு நாணயச் சங்கம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். வேண்டுமென்றால், ஆய்வின் அடிப்படையில்தான் நாம் அதைச் செய்ய வேண்டும்.*

கடந்த காலத்தில், புதிதாக 9 மாவட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மொத்த மாவட்டங்கள் 38 இருக்கின்றன. ஆனால், மத்தியக் கூட்டுறவு வங்கி என்று பார்த்தீர்களென்றால், 23 வங்கிகள்தான் இருக்கின்றன. இப்போது இருக்கக்கூடிய மத்தியக் கூட்டுறவு வங்கிகளைப் பிரித்து மாவட்டத்திற்கு ஒன்று என்று வழங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். ஏனென்றால், இப்போதுதான் 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் இலாபத்தில் செயல்படத் தொடங்கியிருக்கின்றன. அதைப்போல, 4,453 கூட்டுறவு நாணயச் சங்கங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அந்தச் சங்கங்களில் பார்த்தீர்களென்றால், 3,105 சங்கங்கள்தான் இலாபத்தில் இருக்கின்றன. எஞ்சிய 1,348 சங்கங்கள் இன்னும் நஷ்டத்தில் இருக்கின்றன. கிராமப் பகுதிகளில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவ வேண்டுமென்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், அதே நேரத்தில் வங்கிகளையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு துறைக்கு இருக்கிறது. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற அந்தப் பகுதியில் நிலப்பரப்பும் குறைவாக இருக்கிறது. அதே நேரத்தில், பயிர் செய்யக்கூடிய நிலங்களும் அங்கு குறைவாக இருக்கின்ற காரணத்தினாலேதான், ஒருவேளை எதிர்காலத்தில் இவையனைத்தும் சாத்தியப்படுமா எனப் பார்த்து, அதைச் செய்வதற்கு துறை முன்வரும்.

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 135, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

135—

வாசனை திரவிய தொழிற்சாலை

***15198—திரு. K.A. பாண்டியன்:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம், சி.முட்லூர் பகுதியில் வாசனை திரவிய தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிதம்பரம் தொகுதி, மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம், சி.முட்லூர் பகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் கருத்துரு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன் அவர்கள்.*

திரு. K.A. பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், எனது சிதம்பரம் சட்டமன்றத் தொகுதியில் ஆண்டொன்றுக்கு சுமார் 1,031 மெட்ரிக் டன் மல்லிகைப் பூ விளைவிக்கப்படுகிறது. சிதம்பரம் பகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமையும்பட்சத்தில், அங்கு மல்லிகைப் பூ விளைச்சல் அதிகப்படுத்தப்படும். விவசாயிகள் பயன்பெறுவார்கள். மேலும், இத்தொழிற்சாலை அமையும்பட்சத்தில், நேரடியாகவும், மறைமுகமாகவும் பலரும்*

வேலைவாய்ப்பைப் பெறுவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எனது கோரிக்கையை ஏற்று, மறுபரிசீலனை செய்து, அங்கு வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் மல்லிகைப் பூக்கள் 171.76 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்படுகின்றன. இதிலிருந்து சுமார் 1,031 மெட்ரிக் டன் மல்லிகைப் பூக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. சாகுபடி செய்யப்படும் மல்லிகைப் பூக்கள் முழுவதும் கும்பகோணம், கடலூர் மற்றும் உள்ளூர் சந்தைகளுக்கு அனுப்பப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. மேலும், மலர்களின் விளைச்சல் ஆண்டு முழுவதும் சீராக இருப்பதில்லை என்பதால், சி.முட்லூர் பகுதியில் வாசனை திரவியம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான வாய்ப்பே இல்லையென்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன் அவர்கள்.

முற்பகல் 10–35

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிதம்பரம் சட்டமன்றத் தொகுதி அருகிலிருக்கிற காட்டுமன்னார்கோவில் பகுதியில் சுமார் 2,500 ஏக்கரில் பருத்தி விளைவிக்கப்படுகிறது. இதன்மூலம் ஆண்டொன்றிற்கு இருபதாயிரம் குவிண்டால் அளவில் பருத்தி கிடைக்கிறது. விளைவிக்கப்படும் பருத்தியை வெளி மாவட்டங்களில் வியாபாரிகள்மூலம் விற்று வருகின்றனர். சிதம்பரம் பகுதியில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனத்தின்மூலம் நூற்பாலை ஒன்று அமைத்துத் தந்தால் பருத்தி விளைச்சல் அதிகப்படுத்தப்படும். மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால் நூற்பாலை இங்கு அவசியம். இதனை விவசாயிகளுக்கு அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூற்பாலை என்பது கைத்தறித் துறை தொடர்புடையது. மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாதது. இதுபோல் தொழில் நடத்துவதற்கு தொழில் முனைவோர்கள் முன்வந்தால் நம்முடைய துறையின் சார்பில் மூன்று விதமான கடன் வழங்கும் திட்டங்கள் இருக்கின்றன. தொழில் முனையக்கூடிய அந்தத் தொழில் முனைவோர்களுக்கு துறையின் சார்பில் கடன் வழங்கி, தொழில் துவங்குவதற்கான ஆலோசனைகள் வழங்கி, உற்பத்தி செய்து, விற்பனை செய்யக்கூடிய அளவிற்கு எல்லா பணிகளையும் நம்முடைய அரசு செய்து தரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, நம்முடைய சிதம்பரம் தொகுதியில் மட்டும் இத்துறையின் மூலமாக 3 சுய வேலைவாய்ப்புத் திட்டங்களின்கீழ் கடந்த இரண்டு ஆண்டுகளில் 72 நபர்களுக்கு ரூ.1 கோடியே 27 இலட்சம் மானியத்துடன் ரூ.3 கோடியே 94 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டு பல்வேறு தொழிற்சாலைகள் அந்தப் பகுதியில் தொடங்கப்பட்டிருக்கின்றன. கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 501 நபர்களுக்கு இரண்டு வருடத்தில் ரூ.11 கோடியே 87 இலட்சம் மானியத்துடன் ரூ.37 கோடியே 3 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டு பல்வேறு தொழில்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல், தொழில் துவங்குவதற்கு ஆர்வமுள்ளவர்கள் யார் வந்தாலும் அரசு உதவி செய்து தொழில் துவங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 136, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ், மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.

136—

அங்கன்வாடி மையத்திற்கு கட்டடம்

***51661—திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்:**

மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*2023 ஏப்ரல் 11*

(அ) நாகப்பட்டினம் தொகுதி, திருமருகல் ஊராட்சி ஒன்றியம், போலகம் ஊராட்சி, மேலப்போலகத்தில் உள்ள அங்கன்வாடி மையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், சமூக நலன்—மகளிர் உரிமைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் தொகுதி, திருமருகல் ஊராட்சி ஒன்றியம், போலகம் ஊராட்சி, மேலப்போலகத்தில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் குழந்தைகள் மையத்திற்கு 2021–2022 ஆம் ஆண்டிற்கான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின்கீழ் ரூ.11.62 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்ட நாகப்பட்டினம், மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் தொகுதியில் இதுவரை இரண்டு ஆண்டுகளில் கிட்டத்தட்ட 13 அங்கன்வாடி மையங்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மட்டுமே வழங்கப்பட்டிருக்கின்றன. 6 பள்ளிக்கூடங்களுக்கு 2 வகுப்பறைக் கட்டடங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதுபோல நிறைய திட்டங்கள் செய்திருக்கிறோம். இப்போது நாகப்பட்டினத்தில் பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதி கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு மாவட்ட நிருவாகம் சார்பில் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, பணிபுரியும் மகளிருக்கான தங்கும் விடுதி விரைந்து கட்டித்தரப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்– மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய*

2023 ஏப்ரல் 11]

உத்தரவுப்படி படிப்படியாக எல்லா இடங்களிலும் கட்டப்பட்டு வருகின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கைப்படி, நாகப்பட்டினம் மாவட்டத்திலும் பணிபுரியும் மகளிர் விடுதி கட்டிட இந்த அரசு முயற்சி செய்யும், உறுதியாகக் கட்டித் தரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.*

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் பணியில் மகளிர் இணைந்ததனுடைய பொன் விழாவை முன்னிட்டு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்புத் திட்டங்களை அறிவித்தார்கள். அதில் ஒவ்வொரு காவல் நிலையத்திலும் மகளிர் ஓய்வறை அமைக்கப்படும் என்கிற ஒரு முக்கியமான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். மகளிர் ஓய்வறை என்பது எல்லா இடங்களிலும் தேவைப்படுகிறது. குறிப்பாக, பள்ளிகளில், கல்லூரிகளில் தேவைப்படுகிறது. எனவே, மகளிர் ஓய்வறைத் திட்டத்தை, அனைத்து மட்டங்களுக்கும் விரிவுபடுத்தக்கூடிய எண்ணம் அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாத கேள்வி. இது காவல் துறை சம்பந்தப்பட்டது, அதுமட்டுமில்லாமல், தொடர்ச்சியாக மகளிர் நலனுக்காக, எங்கெங்கு என்னென்ன பிரச்சினைகள் இருக்கின்றன; அதற்குத் தீர்வு காண வேண்டும் என்பதிலே இந்த அரசு முனைப்போடு செயல்பட்டு வருகிறது. அதற்காக அவர்களுடைய பிரச்சினைகளை அறிவதற்காகத்தான், தனியாக மாநில மகளிர் கொள்கையும் வகுத்து அது நடைமுறைப்படுத்தப்பட உள்ளது என்பதை நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. சித்ரா அவர்கள்.*

திருமதி கு. சித்ரா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்கி,*

நிரந்தரப் பொதுச் செயலாளர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏற்காடு தொகுதி, அயோத்திப்பட்டினம் ஒன்றியம், மேட்டுப்பட்டி ஊராட்சி, மேட்டுப்பட்டியில் புதிதாக அங்கன்வாடிக் கட்டடம் அமைக்கப்படுமா என அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேட்டுப்பட்டி ஊராட்சி, மேட்டுப்பட்டி கிராமத்திலுள்ள அங்கன்வாடி கட்டடத்தைப் பற்றி கேட்கிறார்கள். ஊரக வளர்ச்சித் துறையின்மூலம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த மேட்டுப்பட்டி ஊராட்சியில் கட்டடம் கட்ட உறுதியாக இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

137—

புதைமின் வடங்கள்

***51519—திரு. பூண்டி கே. கலைவாணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் நகரத்தில் தேரோடும் வீதிகளின் மேலே செல்லும் மின்கம்பிகளை புதைமின்வடங்களாக மாற்றியமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் தொகுதி, திருவாரூர் நகரத்தில் அருள்மிகு தியாகராஜர் திருக்கோயிலின் தேரோடும் வீதிகளில் செல்லும் மேல்நிலை மின்கம்பிகளை புதைமின்வடங்களாக, ரூ.6.578 கோடி மதிப்பீட்டில் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். விரைவில் இப்பணிகளை முடிப்பதற்கு துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன் அவர்கள்.*

திரு. பூண்டி கே. கலைவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிவிப்பை வழங்கிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு முதலில் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், தேரோடும் நான்கு வீதிகளில் இரண்டு வீதிகளில்மாத்திரம்இப்போது பணிதுவங்கப்படவுள்ளதாக தகவல் வந்துள்ளது. ஒரே நேரத்தில் அந்த வீதிகளையும் சேர்த்து அந்தப் பணிகளைத் துவங்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கின்றேன். அதோடு இணைந்த தொடர் சாலைகளாக உள்ள கமலாலயம் தெப்பக்குளத்தின் மூன்று வீதிகளையும் சேர்த்து, அதாவது, அந்த மூன்று வீதிகளின் மொத்த நீளம்,* HT line *ஒன்றரை கிலோ மீட்டர்,* LT line *2.1 கிலோ மீட்டர்; அந்தப் பகுதிகளையும் சேர்த்து புதைவடக் கம்பிகள் அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்கட்டமாக, தேரோடும் வீதிகளில் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதியை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டிய தெப்பக்குளம் பகுதியில் இந்த ஆண்டு பணிகளை*

எடுத்துக்கொள்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதி பெற்று, துறைக்கு அறிவுறுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பூண்டி கே. கலைவாணன் அவர்கள்.

திரு. பூண்டி கே. கலைவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூத்தாநல்லூர் பகுதியில், இப்தார் நோன்பு காரணமாக மின் தேவை அதிகமாகவுள்ளது. தற்போது மின் ஏற்றத்தாழ்வு தொடர்ந்து உள்ளதாக அந்தப் பகுதியில் உள்ளவர்கள் தெரிவிக்கின்றார்கள். எனவே, வடபாதிமங்கலத்தில் உள்ள 33 கே.வி. துணை மின் நிலையத்தை 110 கே.வி. துணை மின் நிலையமாக அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி, துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்தித் தரும்பட்சத்தில் கூத்தாநல்லூரின் பெரும்பான்மையான பகுதிகளுக்கு வடபாதிமங்கலம் 110 கே.வி. துணை மின் நிலையத்திலிருந்து சப்ளை எடுத்துக்கொள்ளும்போது மின் தேவை பூர்த்தியாகும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் சீரான மின் விநியோகம் செய்வதற்கு இரண்டு ஆண்டுகளில் 40,020 புதிய மின்மாற்றிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதில் திருவாரூர் மாவட்டத்தில் மட்டும் 1,000 மின்மாற்றிகள் அமைக்கப்பட்டதில், திருவாரூர் தொகுதிக்கு மட்டும் 247 மின்மாற்றிகள் நிறுவப்பட்டு, பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. மொத்தம் 316 துணை மின் நிலையங்களில் திருவாரூர் மாவட்டத்தில் 8 துணை மின் நிலையங்களும், அதில் திருவாரூர் சட்டமன்றத் தொகுதியில் 3 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு நிருவாக அனுமதியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதியில் துறையின் அதிகாரிகளை, அலுவலர்களை அனுப்பி ஆய்வு செய்து, தேவை ஏற்படின் அதற்கு துறை தக்க நடவடிக்கை எடுக்கும்

2023 ஏப்ரல் 11]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா அவர்கள்.*

முனைவர் இசக்கி சுப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தொகுதிக்குட்பட்ட விக்கிரமசிங்கபுரம் நகரம் மற்றும் அம்பை நகரங்களில் குடியிருப்பு வீடுகளுக்குமேல் கை எட்டும் உயரத்தில் செல்லும் மின் கம்பங்களை புதைவடங்களாக மாற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடுகளின் மேல் செல்லக்கூடிய மின் கம்பிகள் நிறைய பகுதிகளில் இருக்கின்றன. வரக்கூடிய ஆண்டுகளில், தேவையிருப்பின், அந்த ஊராட்சி அதற்குரிய நிதியைச் செலுத்தினால் துறை நிச்சயம் அதற்கான நடவடிக்கை எடுக்கும். ஊராட்சிகளால் செலுத்த முடியவில்லையென்றால் வரக்கூடிய ஆண்டுகளில் நிதிநிலைமைகளுக்கு ஏற்ப முன்னுரிமை வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 1,276 கிலோ மீட்டர் தூரத்திற்கு புதைவட மின்கம்பிகள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள பகுதிகளான, கொட்டிவாக்கம், பாலவாக்கம், ஈஞ்சம்பாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம், உத்தண்டி, ஜல்லடையன்பேட்டை, பெரும்பாக்கம், நன்மங்கலம், ஒட்டியம்பாக்கம், சித்தாலப்பாக்கம் பகுதிகளில் இன்னும் புதைவட மின்கம்பிகள் அமைக்கும் பணி துவங்கப்படாமல் உள்ளது.*

[*2023 ஏப்ரல் 11*

முற்பகல் 10–45

மேலும், உள்ளகரம், புழுதிவாக்கத்தில் மின்னழுத்தக் குறைபாடு அதிகம் ஏற்படுகின்றது. அங்கு துணை மின் நிலையத்தை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மதுரவாயல் தொகுதியிலும் இதேபோல புதைவடக் கம்பிகள் வேண்டுமென்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் கேட்டிருக்கின்றார். அதேபோல, நம்முடைய பகுதிகளில் மேலே செல்கின்ற கம்பிகளை உடனடியாக புதைவடக் கம்பிகளாக மாற்றியமைக்க மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களோடு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளச் சென்றபோது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அந்த இடத்தில் கோரிக்கை வைத்தார்கள். எனவே, அவருடைய சோழிங்கநல்லூர் தொகுதியில் புதைவடக் கம்பிகள் அமைப்பதற்கான முழு அனுமதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரை, இந்த ஆண்டு முழுவதுமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையில் இருக்கக்கூடிய மேல்நிலைக் கம்பிகளை புதைவடங்களாக மாற்றிட வேண்டும் என்று துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். எனவே, அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதையும் இந்தநேரத்தில் தெரிவித்துக்கொண்டு, சோழிங்கநல்லூர் தொகுதியைப் பொறுத்தவரை, சீரான மின் விநியோகம் வழங்குவதற்கு, சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் 5 புதிய துணை மின் நிலையங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள். வரக்கூடிய இந்த ஆண்டில், அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி அவர்கள்.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எமது மொடக்குறிச்சி தொகுதியானது விவசாயம் மற்றும் விவசாயிகள் அதிகமுள்ள பூமியாகும். எனது தொகுதியில் விவசாய மக்களுக்கு வழங்கிவரும் 12 மணிநேர மின்சாரத்தைக்கொண்டு, விவசாயிகள் சரியான முறையில் விவசாயம் செய்ய முடிவதில்லை. இந்த 12 மணிநேர மின்சாரம் (*rural feeders*) ஆனது, பகலில் 6 மணிநேரமும், இரவில் 6 மணிநேரமும் வழங்கப்படுகிறது. இதுசமயம் விவசாயிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகிறார்கள். விவசாயிகளின் வாழ்வாதாரம் பெரிதும் பாதிக்கப்படுகிறது. சில நேரங்களில் பயிர்கள் விவசாய நிலங்களிலேயே காய்ந்துவிடும் நிலை ஏற்படுகிறது. எனவே, விவசாயிகளின் நலன் கருதி, மும்முனை மின்சாரம் வழங்கிட ஆவன செய்யுமாறு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு ஒரு நாளைக்கு 18 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கின்றார்கள். மொடக்குறிச்சி தொகுதியில் ஏதேனும் குறைபாடுகள் இருந்தால், இன்றே துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி, அதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி.எம்.பி. எழிலரசன் அவர்கள்.*

திரு. சி.வி.எம்.பி. எழிலரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் என்று சொன்னாலே அது, பட்டு நகரமாக, கோயில் நகரமாக விளங்கக்கூடியது. காஞ்சிபுரம் 365 நாட்களும் எல்லா கோயில்களிலும் பல்வேறு திருவிழாக்களும், தேரோடும் வீதிகளாகவும் இருக்கக்கூடியது. ஏகாம்பரநாதர் கோயில், முருகர்*

கோயில், காமாட்சி அம்மன் கோயில், கச்சபேஸ்வரர் கோயில், வரதராஜப் பெருமாள் கோயில், விளக்கொளி பெருமாள் கோயில், வைகுண்ட பெருமாள் கோயில், கைலாசநாதர் கோயில் என்று தொன்மை வாய்ந்த கோயில்களின் தேரோட்டம் உள்ள வீதிகள் உள்ள நகரம் ஆகும். நகரத்தின் முக்கிய வீதிகளில் புதைவடக் கம்பிகள் அமைக்கக்கூடிய திட்டத்தைப் பற்றி, ஏற்கெனவே நான் கேள்வி எழுப்பி இருக்கின்றேன். அதில் முதல் கட்டமாக நான்கு ராஜவீதிகளை இந்த ஆண்டு எடுத்துக்கொள்வாரா என்று கேட்க விரும்புகிறேன். மேலும், பட்டுப் பூங்காவை—பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு கைத்தறிப் பட்டுப் பூங்காவினை இயக்குவதற்காக, நம்முடைய அரசு பொறுப்பேற்ற உடனேயே அதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டு, இப்போது அதற்கான செயல்பாடுகள் தொடங்கிவிட்டன. அதற்கு அங்கே ஒரு துணை மின் நிலையம் அவசியம் அமைக்க வேண்டியிருக்கிறது. அதனை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் சட்டமன்றத் தொகுதி, பட்டுப் பூங்கா அமைந்திருக்கக்கூடிய பகுதியில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு 2 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, துறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டு அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, காஞ்சிபுரத்தில் இருக்கக்கூடிய திருக்கோயில்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் எந்தெந்தக் கோயில் மிக முக்கியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினால் அந்தக் கோயில்களுக்கு இந்த ஆண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, அதை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. R.D. சேகர் அவர்கள்.*

2023 ஏப்ரல் 11]

திரு. R.D. சேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, வார்டு 34, வார்டு 35 ஆகிய இடங்களில் புதைமின்வடக் கம்பிகள் புதைக்கப்படும் பணி நடைபெற்றுள்ளது. விடுபட்டுள்ள கொடுங்கையூர், முத்தமிழ் நகர் பகுதிகளிலும் அந்தப் பணி விரைந்து நிறைவேற்றித் தரப்படுமா என்பதையும், அதேபோல் கவியரசு கண்ணதாசன் நகரில் ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணியும் இந்த நிதியாண்டில் துவக்கப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் புதைவடக் கம்பிகள் அமைக்கக்கூடிய 5 கோட்டங்களில், 3 கோட்டங்களில் பணிகள் நிறைவுபெற்றிருக்கின்றன. 2 கோட்டங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கூடுதலாக 7 கோட்டங்களில் புதைவடக் கம்பிகள் அமைக்கும் பணிகளை விரைந்து முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் மீதமிருக்கக்கூடிய பகுதிகளில் இந்த ஆண்டு பணிகள் நிறைவு செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியில் இரண்டு புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான அனுமதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டு, அந்த இரண்டு துணை மின் நிலையங்களுக்கான பணிகளும் தொடங்கப்படவிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 138, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2023 ஏப்ரல் 11

138—

டயாலிசிஸ் சிகிச்சைப் பிரிவிற்குக் கட்டடம்

***3657—திரு. பொன். ஜெயசீலன்:**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், கூடலூர் மருத்துவமனையின் டயாலிசிஸ் சிகிச்சைப் பிரிவிற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்ட அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில் அது 128 படுக்கை வசதிகளுடன் தினந்தோறும் சுமார் 400 வெளிநோயாளிகள் மற்றும் 50 உள்நோயாளிகள் என்ற வகையில் மிகச் சிறப்பாக மருத்துவச் சேவையாற்றி வருகிறது. அந்த மருத்துவமனைக்கு டயாலிசிஸ் வசதியுடன்கூடிய கட்டடம் வேண்டுமென்று மாமன்ற உறுப்பினர் கோரியிருக்கிறார். வணக்கத்திற்குரிய தமிழகத்தின் முதல்வர் அவர்களுடைய அறிவுறுத்தலைப் பெற்று, வரும் நிதியாண்டில் கூடலூர் அரசு மருத்துவமனையில் புதிய டயாலிசிஸ் பிரிவுக் கட்டடத்தைத் தொடங்கி வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.*

திரு. பொன். ஜெயசீலன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். நீலகிரி மாவட்ட மக்களின் நெடுநாள் கோரிக்கையான, கனவான, மருத்துவக் கல்லூரி, நீலகிரி மாவட்டத்திற்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடந்த ஆட்சியில் வழங்கப்பட்டது. எனவே, மாவட்ட தலைமையிடத்தில் இயங்கி வரக்கூடிய மாவட்ட தலைமை மருத்துவமனையைக் கூடலூருக்கு மாற்றித் தர வேண்டுமென்ற*

2023 ஏப்ரல் 11]

கோரிக்கையினை மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மூலமாகக் கேட்டிருந்தேன். கடந்த நிதியாண்டுக்கான கொள்கை விளக்கக் குறிப்பில், கூடலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அமைத்துத் தரப்படும் என்ற உறுதிமொழியினை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தந்திருந்தார்கள். ஆனால், இதுவரையில் எந்தவிதமான பணிகளும் தொடங்கப்படவில்லை. எனவே, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அமைப்பதற்கான பூர்வாங்கப் பணிகள் ஏதேனும் நடைபெற்றிருக்கின்றனவா என்றும், அதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றதா என்றும், அந்தப் பணிகள் எப்போது தொடங்கப்படும், எப்பொழுது முடிக்கப்படும் என்கிற செய்திகளையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நினைவில் வாழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய கனவு, மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரி அமைப்பதாகும். அந்த வகையில் பிப்ரவரி, 2011–லேயே இந்தச் சட்டமன்றத்தில் தீர்மானமாக வடித்தெடுக்கப்பட்டு, மாவட்டவாரியாக மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில், நீலகிரியில் தொடங்கப்பட்ட அந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அமைக்கும் பணிகள், கடந்த இரண்டு ஆண்டுகளாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதற்கான போதிய நிதியாதாரத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்து, அந்தப் பணிகளைத் தொடர்ந்து வேகப்படுத்தி வருகிறார்கள். 500 படுக்கைகளுடன்கூடிய அந்த மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை விரைவில், ஜூன் மாத இறுதியில் தொடங்கப்படவிருக்கிறது. அந்த மாவட்ட மருத்துவக் கல்லூரி வந்தவுடன், மாவட்ட அரசு மருத்துவமனை கூடலூருக்கு வேண்டுமென்கின்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். இந்தத் தகவலை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தவுடன், 'கூடலூர் பகுதி மக்கள் மருத்துவச் சேவையைப் பெறுவது அவசியமான ஒன்று, எனவே, அதனை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாகத் தரமுயர்த்தலாம்' என்று*

அறிவுறுத்தியிருக்கிறார்கள். அதனடிப்படையில் ரூ.31 கோடி அளவிலான நிதியாதாரம் வழங்கப்பட்டு, கடந்த மாதம், மார்ச் 1 ஆம் தேதி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொளி வாயிலாக அந்தப் பணிகள் தொடங்குவதற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. பொதுப் பணித் துறையின் சார்பில் அந்தப் பணிகளை எடுத்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் விரைவில் பணிகளை மேற்கொள்ளவிருக்கிறார்கள். அந்த மாவட்ட அரசு மருத்துவமனை ரூ.31 கோடி செலவில் கூடலூரில் அமையவிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன் அவர்கள்.

முற்பகல் 10–55

திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சிகிச்சை பெறுவதற்கான அனுமதியைப் பெறுவதற்கு 2, 3 தினங்கள் ஆகின்றன. எனவே, பாதிக்கப்பட்ட நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பிறகும், காப்பீட்டுத் திட்ட அனுமதிக்காக 2, 3 தினங்கள் காத்திருக்க வேண்டிய சூழல் தற்போது நிலவுகிறது. தற்போது, தமிழ்நாடு அரசினுடைய Tamil Nadu e-Governance Agency மூலமாக சில பயனாளிகளுடைய பெயர்கள் நீக்கப்பட்டிருக்கின்றன. காரணம், அவர்களுடைய ஆண்டு வருமானம் 1,20,000 ரூபாய்க்கு மேல் இருக்கின்றது என்று சில தரவுகளின் அடிப்படையில் தானாகவே தன்னிச்சையாக அவர்களுடைய பெயர்களை நீக்கியிருக்கின்றார்கள். எனவே, வருமான வரம்பை 2,00,000 ரூபாயாக உயர்த்தி, நீக்கப்பட்ட அனைத்து பயனாளிகளின் பெயர்களையும் மீண்டும் சேர்த்து முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பயன்பெறக்கூடிய வகையிலே ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டும். மேலும், கூடலூர் அரசு மருத்துவமனையில் தற்பொழுது வாடகை மூலமாக, அதாவது rental basis மூலமாக மகப்பேறு மருத்துவரை நியமித்திருக்கின்றார்கள். அவர் கூடலூரில் இருக்கக்கூடிய ஒரு இடத்தில் பணிபுரிகின்றார். அவர் எப்பொழுது கிடைக்கின்றாரோ அப்பொழுதுதான் மகப்பேறுக்கான மகளிரை அனுமதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே,

2023 ஏப்ரல் 11]
கூடலூர் அரசு மருத்துவமனைக்கு நிரந்தரமாக ஒரு மகப்பேறு மருத்துவரை நியமிப்பதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தைப் பொறுத்தவரை, இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில்தான் மிகச் சிறப்பாக செயலாற்றிக் கொண்டிருக்கிறது என்று ஆண்டுதோறும் முதல் பரிசைப் பெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு முன்னால் ஏறத்தாழ 900 என்ற அளவுக்கு மருத்துவ பரிசோதனைகள் செய்யப்பட்டு வந்தன. இப்போது, 1,513 என்ற எண்ணிக்கையில் நோய்களுக்கான தீர்வு செய்யப்பட்டுக்கொண்டிருக்கிறது.*

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, 1 கோடியே 40 இலட்சம் குடும்பங்கள் அதன்மூலம் பயன் பெற்று வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1,20,000 ரூபாய் என்று பயனாளிகளுடைய வருமான வரம்பைச் சொன்னார். ஏற்கெனவே, கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வருமான வரம்பு 70,000 ரூபாயாக இருந்தது. மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள்தான் ஆட்சிக்கு வந்தவுடன் இதனை 1,20,000 ரூபாயாக உயர்த்தி, பயனாளிகளின் எண்ணிக்கையையும் உயர்த்தி, 1 கோடியே 40 இலட்சம் என்கின்ற அளவில் அவர்கள் பயன்பெற்று வருகிறார்கள். அந்தவகையில் அவர் சொன்னதைப்போல, எங்கேயாவது குறிப்பிட்டு இந்த பாதிப்பு இருக்கும் என்று அவர் கருதுவாரேயானால், அதனைத் தெரிவித்தால் நிச்சயம் அந்த தனியார் மருத்துவமனைமீது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. நா. இராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தாலுகா*

மருத்துவமனை மற்றும் தாலுகா அல்லாத மருத்துவமனையில் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு துணை நோய்களான HIV, Hepatitis B மற்றும் Hepatitis C நோய் பாதிப்பு ஏற்பட்டிருந்தால், அவர்களுக்கு அம்மருத்துவமனையில் தனியாக இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை செய்வதற்குண்டான வசதிகளைச் செய்து தருவார்களா என்பதனை தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள வட்டார மருத்துவமனைகள், வட்டம் சாரா அரசு மருத்துவமனைகள், மாவட்ட அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் இதுபோன்ற வசதி ஏற்கெனவே இருக்கிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் எந்த மருத்துவமனையில் அந்த வசதி வேண்டுமென்று விருப்பப்படுகிறாரோ அதைத் தெரிவித்தால், நிச்சயம் விரைந்து செய்து தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும், பாருங்கள் புரிந்துகொள்ளலாம்' என்ற அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் பெண்ணாகரம் தொகுதியில் நேரில் ஆய்வு செய்தார். ஏரியூர் பகுதியும் மற்ற பகுதிகளும், காடு, மலைகள் நிறைந்த பகுதிகளாக இருக்கின்ற காரணத்தால், மருத்துவ வசதி அதிகம் தேவை என்ற அடிப்படையில், ஏரியூர் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை வட்ட மருத்துவமனையாக உயர்த்துவதற்கும், அதேபோல நாகதாசம்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக உயர்த்துவதற்கும், புலியூர் உள்ளிட்ட மற்ற பகுதிகளையும் மேம்படுத்துவதற்கான திட்டத்தின் தேவை குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரில் அறிந்தார்கள், மாவட்ட நிர்வாகமும்

பரிந்துரைத்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை நிறைவேற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், அவருடைய தொகுதியில், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட பெண்ணாகரம் அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே மிகப் பெரிய அளவில் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதைத் தரமுயர்த்தும் பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஏரியூர் போன்ற பகுதிகளிலெல்லாம் காவிரி ஆற்றங்கரையோரம் உள்ள மலைப் பகுதிகளில் ஏராளமான கிராமங்களில், கிராம மக்கள் வசித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய மருத்துவத் தேவை பெரிய அளவில் வேண்டுமென்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மை. எனவேதான், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று, ஒன்றிய அரசிடம் 50 மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளது. அது இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ வந்தால், முதலில் அதற்கான முன்னுரிமை பெண்ணாகரம் சட்டமன்றத் தொகுதிக்கு வழங்கப்படும். அதற்கு முன்னமேயே, இந்த ஏரியூர் பகுதி மருத்துவமனைக்குத் தேவையான புதிய மருத்துவமனைக் கட்டடங்களைக் கட்டுவதற்கு. . .

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: 15-வது நிதி ஆணையத்தின்மூலம் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

[*2023 ஏப்ரல் 11*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் ரோட்டிலே இருக்கிற திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்* Rotary club*-ன் மூலமாக டயாலிசிஸ் கருவிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு அனுமதி கோரி அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த அனுமதியைப் பெற்றுத்தர அரசு ஆவன செய்யுமா? இப்போது ராஜஸ்தான் மாநிலத்தில் 25 இலட்சம் ரூபாய் வரை காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக சிகிச்சை பெறலாம். காய்ச்சல் என்றால்கூட, அவர்கள் புறநோயாளிகளாக இருந்தாலும்கூட அதையும் அந்தக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வந்து, ஒரு பைசா செலவில்லாமல் சிகிச்சை பெறும் வகையில் அந்தக் காப்பீட்டுத் திட்டத்தை இன்றைக்கு அங்கே அந்த முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட அந்தக் காப்பீட்டுத் திட்டத்தை எந்தக் காப்பீட்டு கம்பெனி வழங்குகிறதோ அந்த கம்பெனியை அணுகி தமிழகத்திலும் அந்த நிலையை உருவாக்கி, ஒவ்வொரு பயனாளிக்கும் ஒரு பைசா கூட செலவில்லாமல் மருத்துவ வசதிகள் கிடைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள மருத்துவமனைகளில் நிறுவப்பட்டுள்ள டயாலிசிஸ் இயந்திரங்களைப் பொறுத்தவரை, இலவசமாகவே முதல்வர் காப்பீட்டுத் திட்டத்தின்மூலம்தான் செயல்படுத்தப்படுகிறது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருப்பதைப்போல, ரோட்டரி சங்கத்தின்மூலம் திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அந்த அமைப்பை அவர்கள் நிறுவுவார்களேயானால், நிச்சயமாக அதற்கான அனுமதி வழங்கப்படும். காரணம், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை மதிக்கிற ஆட்சி இந்த ஆட்சி. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் சேவையைப் பயன்படுத்திக்கொள்ளும் ஆட்சி இந்த ஆட்சி. எனவே, நிச்சயம் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலைப் பெற்று, ரோட்டரி சங்கத்தின் டயாலிசிஸ் அமைப்புக்கு, அதற்கான உரிமத்தை வழங்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

139—

பேருந்து வசதி

***6923—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் நகரில் இருந்து வேலூர்–போளூர் வழியாக திருப்பதிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையான செங்கம் நகரிலிருந்து வேலூர்-போளூர் வழியாக திருப்பதிக்குச் செல்வதற்கு பேருந்து இயக்கும் திட்டம் அரசிடம் இல்லை. காரணம், 2 மாநிலங்களுக்கிடையே பேருந்து இயக்க வேண்டுமென்றால், இரண்டு மாநிலங்களுக்கிடையேயான புதிய வழித்தட ஒப்பந்தங்கள் ஏற்படுகின்றபோது, பேச்சுவார்த்தை நடத்தப்படுகின்றபோதுதான் அந்தப் பேருந்துப் பட்டியலில் இணைக்கப்பட வேண்டும். அப்படி பேச்சுவார்த்தை நடைபெறுகின்றபோது, இணைக்கப்பட்டு, புதிய வழித்தடம் பெறப்படும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதி, நீப்பதுரையில் அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலிலிருந்து செங்கம், கலசப்பாக்கம் வழியாக, போளூர்–வேலூர் வழியாக அந்தப் பேருந்தை இயக்கும்பட்சத்தில் அரூர் தொகுதி, ஊத்தங்கரை தொகுதி, செங்கம் தொகுதி, கலசப்பாக்கம்*

தொகுதி, போளூர் தொகுதி மக்கள் அதன்மூலம் பயன்பெறுகின்ற வாய்ப்பு இருக்கின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேச்சுவார்த்தை நடக்கின்றபோது அல்ல; முன்கூட்டியே இந்த 4 தொகுதி மக்களும், 3 மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில், இங்குள்ள பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோயிலிலிருந்து வெங்கடேச பெருமாளைத் தரிசிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன் தொகுதியில் செங்கத்தில் இருக்கின்ற பெருமாளை விட்டுவிட்டு, திருப்பதியிலே இருக்கின்ற பெருமாளைத் தரிசிக்க அவர் துடிக்கிறார். தெரிகிறது. இருந்தாலும் செங்கத்திலிருந்து திருவண்ணாமலைக்கு 35 கி.மீ. தூரம். ஏற்கெனவே 5 நிமிடத்திலிருந்து 10 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வீதம் செங்கத்திலிருந்து திருவண்ணாமலைக்கு இயக்கப்படுகிறது. திருவண்ணாமலையிலிருந்து திருப்பதிக்கு 30 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. 60 வழிநடைகள் இயக்கப்படுகின்றன. எனவே, அவர் 35 கி.மீ.தூரம் பயணம் செய்தால், திருவண்ணாமலையிலிருந்து செல்லுகின்ற பேருந்துகளில் 1 மணி நேரத்திற்கு 2-லிருந்து 3 பேருந்துகள் வரை செல்லும். அதிலே செல்வதற்கு எளிதாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த வழிமுறையைக் கடைப்பிடிக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீப்பதுரைக்கும் செங்கத்திற்கும் இடையே 70 கி.மீ. தூரம் இருக்கிறது. 5 நிமிடத்திற்கு ஒரு பேருந்து வேலூர் வழியாக திருப்பதிக்குச் செல்கிறது. அதை எங்கள் பகுதிக்கு மாற்றம் செய்து, நீட்டிப்பு செய்து தர வேண்டும். அதற்கு எந்த மாநில ஒப்பந்தமும் தேவைப்படாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 11]

கடந்த 12 ஆண்டுக்காலமாக ஜவ்வாதுமலைப் பகுதிக்கு தலைவர் கலைஞரின் ஆட்சியிலே 30 கோடி ரூபாய் செலவிலே, இன்றைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரும் அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களும் நிதியொதுக்கி, நடைபாதையாக இருந்ததை சாலையாக அமைத்தோம். சாலை அமைத்தும் இந்த 12 ஆண்டுக்காலமாக, எங்கள் தொகுதியிலுள்ள கலசப்பாக்கம் மற்றும் செங்கம் தொகுதிகளுக்குட்பட்டிருக்கின்ற மலைவாழ் மக்கள் இன்றளவும் பேருந்து வசதிக்காக செங்கம் தாலுகா அலுவலகத்திற்கு வருவதற்கும் அல்லது மாவட்டத் தலைநகரமாக இருக்கின்ற திருவண்ணாமலைக்கு வருவதற்கும் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எந்தவித காரணமும் சொல்லாமல், உடனடியாக எங்கள் மலைவாழ் மக்களுக்கு ஒரு பேருந்தை செங்கம்–பரமனந்தல்–மேல்பட்டு வழியாக இயக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கின்றேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வழித்தடம் இல்லாமல் பேருந்து வழித்தடத்தை நீட்டித்து திருப்பதிக்கு பேருந்தைக் கேட்டிருக்கின்றார். அருகாமையில் வருகின்ற பேருந்து, அது எந்தப் பேருந்து, எந்தப் பேருந்தின் வழித்தடத்தை நீட்டிக்க முடியும் என்பதைக் கணக்கில் எடுத்து, பேருந்தின் வழித்தடத்தை நீட்டிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

அதேபோன்று, மலை கிராமத்திற்கு பேருந்தைக் கேட்டிருக்கின்றார். ஏற்கெனவே, தருமபுரி மாவட்டத்தில் பேருந்தே பார்த்திராத வத்தல்மலைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகப் பயணம் செய்தபோது, மக்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, சுதந்திரம் அடைந்த 1947 ஆம் ஆண்டிலிருந்து இப்போது வரை பேருந்தைப் பார்க்காத கிராமத்திற்கு, புதிய பேருந்து வழித்தடத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்தார்கள். அதேபோல் மலை கிராமங்களுக்கு பேருந்து ஏற்பாடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

[*2023 ஏப்ரல் 11*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுடைய சொந்த மாவட்டம் அரியலூர். அதனுடைய தலைநகரம் அரியலூர். மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இல்லத்தரசியினுடைய சொந்த ஊர் பாபநாசம்.*

பாபநாசம் மக்கள் நீண்ட நாட்களாக, பாபநாசத்திற்கும் அரியலூருக்குமிடையே நேரடிப் பேருந்து வசதி வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தற்போது மூன்று பேருந்துகள் மாறிதான் அரியலூருக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அரியலூரில் இருக்கக்கூடிய சிமெண்ட் தொழிற்சாலைக்கு ஏராளமான தொழிலாளர்கள் பாபநாசம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளிலிருந்து செல்கிறார்கள். மாணவர்களும் செல்கிறார்கள். அங்கு இருக்கக்கூடிய புனித காளிகாம்பாள் கோயிலுக்கும் ஏராளமான பக்தர்கள் செல்கிறார்கள். மேலும், அரியலூரில் பல்லவன் விரைவு வண்டி, வைகை தொடர் வண்டி ஆகியவற்றில் பயணிப்பதற்கு ஏதுவாக நேரடியாக பாபநாசத்திலிருந்து அரியலூருக்கு பேருந்து வசதிகளை ஏற்பாடு செய்ய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக வினவ விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேராசிரியர். கேள்வியை எப்படி கேட்டால், பதிலை எப்படி பெறலாம் என்று, எனது இல்லத்தரசியைக் கோர்த்துவிட்டு என்னிடமிருந்து பதிலைப் பெறலாம் என நினைக்கின்றார். பேராசிரியர் அவர்கள் ஏற்கெனவே தொடர்ந்து இந்தக் கோரிக்கையை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.*

இந்த வழித்தடத்தில் அரியலூரிலிருந்து திருவையாறு வழியாக தஞ்சாவூர் சென்றுதான் அவர்கள் பாபநாசம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. நேரடியாக திருவையாறு வழியாக, கபிஸ்தலம் வழியாகச் செல்ல வேண்டுமென்பது பேராசிரியருடைய கோரிக்கை. ஏற்கெனவே நானும், பேராசிரியரும் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கை

2023 ஏப்ரல் 11]

வைத்திருக்கின்றோம். அரியலூர் மாவட்டத்தையும் பாபநாசம் தொகுதியையும் இணைப்பதற்கு ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று, அதை கதவணைத் திட்டமாக, பாலமாகக் கட்ட வேண்டுமென்று; பாலமாக அமைத்துத் தந்தால், அரியலூரிலிருந்து பாபநாசத்திற்குப் பேருந்துகளை நேரடியாக இயக்குவதற்கு இன்னும் வசதியாக இருக்கும் என்பது பேராசிரியருடைய எண்ணம். இருப்பினும் அதையும் கருத்தில்கொண்டு, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் எங்கள் கோரிக்கையை கருணையோடு பரிசீலிக்க வேண்டுமெனக் கேட்டு, இந்தப் பேருந்து வழித்தடத்தை நீட்டிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பொ. அர்ஜுனன் அவர்கள்.*

திரு. பொ. அர்ஜுனன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் தொகுதி, திண்டிவனம் நகரத்திலிருந்து ஓங்கூர், காட்டுபூஞ்சை, ஆவணிப்பூர் வழியாக மரக்காணம் வரை பேருந்து இயக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர்ஜுனன் அவர்கள் அந்தக் கோரிக்கையை எழுத்து வடிவத்தில் தந்தால், அதிகாரிகளோடு தொடர்புகொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

140—

குடமுழுக்கு

***54745—திருமதி எஸ். தேன்மொழி:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டையில் உள்ள அருள்மிகு அகோபில நரசிங்கப் பெருமாள் திருக்கோயிலைப் புனரமைத்து குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) அகோபில நரசிங்கப் பெருமாள் கோயில் என்பது கனகவள்ளி தாயாரோடு வீற்றிருக்கின்ற ஒரு சக்தி வாய்ந்த தலமாகும். அதற்கு ஏற்கெனவே 6–7–2003 அன்று குடமுழுக்கு நடைபெற்றிருக்கின்றது. கடந்த ஆண்டு சட்டமன்ற அறிவிப்பில் இந்த திருக்கோயில் திருப்பணிக்கு எடுத்துக்கொள்ளப்படும் என அறிவித்திருந்தோம். அதற்கேற்ப தற்போது தொல்லியல் வல்லுனர்கள் குழு, மண்டல வல்லுனர்கள் குழு, மாநில வல்லுனர்கள் குழு ஆகியோரிடம் அனுமதி பெறப்பட்டு, மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இன்னும் இரண்டொரு வாரங்களில் அதற்கு ஒப்பந்தம் கோரப்பட்டு, இரண்டு, மூன்று மாதங்களில் அந்தத் திருக்கோயிலின் திருப்பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவையில் இல்லை என்றாலும்,—உடல் நலமில்லை என்று கேள்விப்பட்டேன் அவர் நீண்ட ஆரோக்கியத்தோடு, மீண்டும் இந்த அவைக்கு வந்து, இந்த வினாவினை எழுப்பினால், அவருக்குரிய பதிலை—அவர் உடல் நலம் பெற வேண்டுமென்ற பிரார்த்தனையோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அந்த உறுப்பினருக்கு இந்தப் பதிலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இந்த அவையும் அவர் உடல் நலம் பெற வாழ்த்துகிறது. மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்கள், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள்.*

திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு ஆரம்பக் கட்டப் பணிகளெல்லாம் தொடங்கியிருப்பதாக இங்கே சொல்லியிருந்தார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு உறுப்பினர்*

2023 ஏப்ரல் 11]

திருமதி தேன்மொழி சேகர் அவர்கள் துணைக் கேள்வியில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தார்கள். நிலக்கோட்டையில் உள்ள அருள்மிகு அகோபில நரசிங்கப் பெருமாள் திருக்கோயிலில் குடமுழுக்கு உடனடியாக, விரைவாக நடத்தப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை விரைவாகத் தொடங்க வேண்டும் என்பதுதான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை.

மூலக் கேள்விக்குத் தொடர்பில்லை என்றாலும்கூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புள்ளிவிவரங்களைத் தெளிவாக வைத்திருப்பார்கள் என்பதால் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். ஒவ்வோர் ஆண்டும் மதுரையில் உலகப் பிரசித்தி பெற்ற சித்திரைத் திருவிழா கொண்டாடப்படுவதுபோல், இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெறுவதற்கான அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. தேர்த் திருவிழா, திருக்கல்யாணம், கள்ளழகர் ஆற்றில் இறங்கும் வைபவம்; கடந்த கால ஆட்சியில், அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் கள்ளழகர் ஆற்றில் இறங்கும் வைபவத்தின்போது ஆற்றிலே தண்ணீர் திறந்துவிடப்பட்டது. கடந்த காலங்களைப் போலவே இந்த ஆண்டும் கள்ளழகர் ஆற்றில் இறங்குவதற்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளையும், ஆற்றில் தண்ணீர் திறந்துவிடுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் துணைக் கேள்வி கேட்கப்போகிறார் என்றவுடன் வீரவசந்தராயர் மண்டபத்தைப் பற்றித்தான் கேட்பார் என்று நினைத்திருந்தேன். அந்தப் பணிகள் கடந்த 5 ஆண்டுகளாக நிலுவையில் இருந்தன. எங்களுடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அன்பிற்கினிய தளபதி அவர்கள் கடந்த மாதம் 8 ஆம் தேதியன்று அந்தப் பணிகளைத் தொடங்கிவிட்டதால், உறுப்பினர் அவர்கள் அந்தக் கேள்வியைத் தவிர்த்துவிடலாம் என்று நினைத்திருப்பார்கள். இருந்தாலும், உறுப்பினர் அவர்கள் கேட்டபடி, கள்ளழகர் இந்த முறை மிக்க மகிழ்ச்சியோடு ஆற்றில் இறங்குவார். தேவையான அளவு ஆற்றில்*

தண்ணீரும் நிரப்பப்படும். கடந்த முறை ஏற்பட்ட விபத்து என்பது ஆற்றில் இறங்குகிற வைபவங்களெல்லாம் முடிந்த பிறகு கூட்ட நெருக்கடியால், திரும்பச் செல்கின்றபோது ஏற்பட்ட விபத்து. அந்த மாதிரியான விபத்துகளும் இந்த முறை நடைபெறாமல் இருக்க வேண்டுமென்று முன்கூட்டியே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எச்சரித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த முறை கள்ளழகர் மகிழ்ச்சியோடு ஆற்றில் இறங்குவார்; அந்த வைபவமும் மகிழ்ச்சியோடு நடைபெறும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி அவர்கள்.*

திரு. ப. சிவகுமார் என்கிற தாயகம் கவி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள திருக்கோயில்களில் எத்தனை திருக்கோயில்களில் அன்னதானம் வழங்கப்படுகிறது என்பதையும், நாள்தோறும் எத்தனை நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது என்பதையும், அதைப்போலவே, என்னுடைய திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதி, வார்டு எண் 74-ல் அமைந்துள்ள மிகப் பழமையான திருக்கோயிலான சேமாத்தம்மன் திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய சேமாத்தம்மன் ஆலயம் நான் வசிக்கின்ற பகுதிக்கு அருகாமையில் இருக்கின்ற திருக்கோயிலாகும். அதற்கு ஆண்டுக்கு 30 ஆயிரம் ரூபாய் அளவிற்குத்தான் வருமானம் இருக்கிறது. இருந்தாலும், அந்தத் திருக்கோயில் கங்காதீஸ்வரர் திருக்கோயிலின் உப கோயிலாகும். ஆகவே, கங்காதீஸ்வரர் திருக்கோயிலில் இருக்கின்ற உபரி நிதியைப் பயன்படுத்தி அந்தத் திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இருந்தால், நிச்சயமாக அதுகுறித்துப் பரிசீலிக்கப்படும்.

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அன்னதானத் திட்டம் எத்தனை திருக்கோயில்களில் செயல்படுகிறது என்று கேட்டிருந்தார்கள். இந்த ஆட்சி வருவதற்கு முன்பு 754 திருக்கோயில்களில் செயல்பட்டுக்கொண்டிருந்த அன்னதானத் திட்டத்தை கூடுதலாக 10 திருக்கோயில்களில் செயல்படுத்த உத்தரவிடப்பட்டு, 764 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் தற்போது செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

அடுத்து, நாள்தோறும் அன்னதானத் திட்டம் என்பது கடந்த காலங்களில் பழனி மற்றும் இராமேஸ்வரம் ஆகிய இரண்டு திருக்கோயில்களில் வழங்கப்பட்டு வந்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு கூடுதலாக 6 திருக்கோயில்களுக்கு நாள் முழுவதும் அன்னதானத் திட்டத்தை அறிவித்து, 8 திருக்கோயில்களில் தற்போது முழு நேர அன்னதானத் திட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசுப் பள்ளிகளில் காலை சிற்றுண்டியை அறிவித்ததுபோல், பழனி திருக்கோயில் சார்பில் செயல்படுகின்ற கல்லூரிகளில் 4,000 மாணவர்களுக்கு தினந்தோறும் காலை சிற்றுண்டியை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை வழங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கூடுதல் விவரமாக, நாளொன்றுக்கு சுமார் 82 ஆயிரம் பக்தர்கள் இந்த அன்னதானத் திட்டத்தில் பயனடைகின்றார்கள். வருடத்திற்கு ரூ.105 கோடி செலவில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம், நாளொன்றுக்கு அன்னதானத் திட்டம், பங்குனி, தைப் பூசம் போன்ற நாட்களில் பழனியில் அன்னதானத் திட்டம், நெல்லையப்பர் கோயிலில் விசேஷ காலங்களில் 31 நாட்களில் 31 ஆயிரம் பேருக்கு அன்னதானத் திட்டம் என்று 105 கோடி ரூபாயை அன்னதானத் திட்டத்திற்கு மட்டுமே செலவு செய்கின்ற அரசு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய அரசு என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி அவர்கள்.

திரு. T.K. அமுல் கந்தசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் கொறடா ஆகியோரை வணங்குகிறேன். நேற்றைய தினம் எனது வால்பாறை தொகுதிக்குட்பட்ட மாசாணியம்மன் திருக்கோயிலுக்கு திருப்பணிகள் நடைபெறுவதற்கு 7 கோடி ரூபாய் நிதியொதுக்கி இருப்பதாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். அந்த நிதி உபயதாரர்கள் நிதியா அல்லது அரசு நிதியா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக, எந்த உபயதாரர் நிதியும் அதற்கு வழங்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த 7 கோடி ரூபாய் நிதியும், திருக்கோயில் நிதியிலிருந்து அந்தத் திருக்கோயிலுக்குச் செலவிடப்படுகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தத் தொகுதியின் சட்டப் பேரவை உறுப்பினர் என்று நினைக்கின்றேன். அவர் கூடுதலாக உபயதாரர் நிதியைப் பெற்றுத் தந்தால், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் நிதி மிச்சப்படுத்தப்பட்டு, வேறு வருமானம் இல்லாத திருக்கோயில்களுக்குப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு நல்ல சூழ்நிலையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2023 ஏப்ரல் 11]

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

தமிழகத்தில் கொரோனா நோய்த்தொற்று மீண்டும் பரவுதல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து, அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாறிவரும் வைரஸ் கிருமிகளினால் மீண்டும் கொரோனா நோய்த்தொற்று இந்தியா முழுவதும் அதிகளவில் பரவி வருகிறது. குறிப்பாக, இன்று உருமாறிய* Omicron XBB*1.5 என்ற புதிய வைரஸ் நோய் பரவல் தமிழகத்தில் அதிகரித்து வருகிறது. நேற்று தமிழ்நாட்டில் கொரோனாவினால் பாதிப்படைந்தவர்கள் எண்ணிக்கை 400–ஐ நெருங்கியுள்ளது. அரசு கவனத்தில்கொள்ள வேண்டும். நேற்று கொரோனா வைரஸ் தொற்றுக்கு இருவர் உயிரிழந்துள்ளார்கள் என்ற செய்தி பத்திரிகையில் வந்துள்ளது. இந்திய அளவில் இந்த நோய் 5,000 பேரைத் தாக்கியுள்ளது. 2* dose *மருந்து போட்டவர்களும் மற்றும்* booster *போட்டவர்களும் கொரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்படுகின்றனர் என்ற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த வைரஸ் அருகிலுள்ள கேரள மாநிலத்தில் அதிகளவில் உள்ளதாக செய்திகள் வருகின்றன. எனவே, தமிழகம் முழுவதும் காய்ச்சல் முகாம் நடத்தப்பட வேண்டும். உள்ளாட்சி அமைப்புகள்மூலம் மருத்துவக் குழு அமைத்து, வீடு வீடாகச் சென்று, மக்களைச் சந்தித்து நோய் அறிகுறிகள் தென்பட்டால் அவர்களை உடனடியாகப் பரிசோதனை செய்து, சிகிச்சை அளிக்க வேண்டும். காய்ச்சல், கடுமையான உடல் வலி, தொண்டை வலி மற்றும் உடல் சோர்வு உள்ளவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வீடு வீடாக விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்க வேண்டும்.*

மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் முதலில் மருத்துவமனையில் mask *அணிய வேண்டுமென்று கூறினார். பொது சுகாதாரத் துறையால் அனைத்து இடங்களிலும்* mask *அணிய வேண்டுமென்று செய்தி வெளியிடப்பட்டுள்ளது. மீண்டும் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் இயல்பாகவே அனைவரும்* mask *அணிய வேண்டுமென்று கூறுகிறார். அரசின் நிலைப்பாட்டை இந்த மாமன்றத்தில் அவர் விளக்க வேண்டும்.*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2023 ஏப்ரல் 11

அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் கொரோனா நோயாளிகளுக்கென தனிப் பிரிவை ஆரம்பித்து, மற்ற நோயாளிகளிடமிருந்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டும். தமிழகம் முழுவதும் மீண்டும் கொரோனா நோய் பரிசோதனை தீவிரப்படுத்த வேண்டும். அரசு, கொரோனா நோய்த் தொற்றினைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்தி, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அவையில் எடுத்துரைத்த பொருள் குறித்து, ஏற்கெனவே தமிழகத்தில் கொரோனா பரவுவதாக வந்துள்ள செய்தி குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. வி.பி. நாகைமாலி, திரு. மா. சின்னதுரை, டாக்டர் சி. விஜயபாஸ்கர், திரு. கே.பி. முனுசாமி, திரு. ஆர்.பி. உதயகுமார், திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. எஸ்.பி. வேலுமணி, திரு. நத்தம் ஆர். விசுவநாதன், முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன், திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, திரு. ஓ.எஸ். மணியன், திரு. ந. தளவாய்சுந்தரம், திரு. இ.மா. மான்ராஜ், திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், திரு. M. ராஜமுத்து, திரு. பி. தங்கமணி, திரு. T.K. அமுல் கந்தசாமி, திரு. அம்மன் K. அர்ச்சுணன், திரு. A.K. செல்வராஜ், திரு. கே.ஆர். ஜெயராம், திரு. P.R.G. அருண்குமார், திரு. V.P. கந்தசாமி, திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, திரு. ஜே.ஜி. பிரின்ஸ், திரு. கு. செல்வபெருந்தகை, திரு. R. ராதாகிருஷ்ணன், திரு. S. பழனி நாடார், திரு. இராம. கருமாணிக்கம், திரு. ஆர். கணேஷ், திரு. துரை. சந்திரசேகர், திரு. JMH. அசன் மௌலானா, திரு. தி. ராமச்சந்திரன், திரு. சா. மாங்குடி, திரு. செ. ராஜேஷ் குமார், திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ், திரு. ஜி.கே. மணி, திரு. இரா. அருள், திரு. ச. சிவகுமார், திரு. தி. வேல்முருகன், திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், திரு. S.S. பாலாஜி, திரு. ட்டி. இராமச்சந்திரன், திரு. K. மாரிமுத்து ஆகியோர் முன்னறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். கட்சிக்கு ஒருவர், அரசின் கவனத்தைச் சுருக்கமாக ஈர்க்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

2023 ஏப்ரல் 11]

முற்பகல் 11–20

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலங்களில், தமிழகத்திலே நாளுக்கு நாள் கொரோனா தொற்று பாதிப்பு எண்ணிக்கை உயர்ந்துகொண்டே வருகிறது. அது செய்தித்தாள் மற்றும் ஊடகங்களில் வெளியாகிறது. ஆகவே, உடனடியாக தொற்றினைக் கட்டுக்குள் கொண்டுவருவதற்கு நமது அரசு எடுத்திருக்கிற நிலைப்பாடு குறித்து இந்த அவையின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் அறிவிப்பு கொடுத்திருக்கக்கூடிய* order*-ன்படியே அழைக்கலாம் என்று முடிவு செய்து அழைக்கிறேன்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா பெருந்தொற்று, டெல்டா வைரஸ், ஒமைக்ரான் உள்ளிட்ட பல உருமாறிய வைரஸ்கள் மிகப் பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கின்றன.*

கடந்த 2020 ஆம் ஆண்டு முதல் அலை ஏற்பட்டபோது, அடுத்து இரண்டாம் அலை, மூன்றாம் அலை வருமா என்பதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளாமல், ஒரு மிகப் பெரிய பாதிப்பை தமிழ்நாட்டில் மட்டுமல்ல, அண்டை மாநிலங்களிலும் ஏற்படுத்தியது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்கும்போது, தினசரி பாதிப்பு 36,000-க்கும் அதிகமாக இருந்தது. போர்க்கால அடிப்படையில், தன்னுடைய சுறுசுறுப்பான பணியை மேற்கொண்டு, பதவியேற்ற நாளிலேயே அமைச்சரவைக் கூட்டத்தையும் தள்ளிவைத்துவிட்டு, நந்தம்பாக்கத்தில் இருந்த கொரோனா பெருந்தொற்று நிலையத்தை ஆய்வு செய்து, அவர் எடுத்த முயற்சியால் ஒரு மிகப் பெரிய பாதிப்பு தடுக்கப்பட்டது. ஏற்கெனவே, முதல் அலை வந்தபோது, 320 மெட்ரிக் டன் அளவுதான் ஆக்சிஜன் இருந்தது. ஆனால், 460 மெட்ரிக் டன் அளவு தேவை என்ற நிலை இருந்தது. இருந்தபோதிலும், அந்த 320 மெட்ரிக் டன் ஆக்சிஜன்கூட எப்படி உருவாக்கப்பட்டது? (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்களைப்போல் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *எப்படி வந்தது என்று பார்த்தால்—முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்னுடைய திருப்பெரும்புதூர் தொகுதியில் ஆக்சிஜன் உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்தியது ஒரு மிகப் பெரிய வாய்ப்பாக இருந்தது—மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, நான் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். நீங்கள் அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *எங்களுக்கு நியாயமே கிடையாதா? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். உட்காருங்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *முதலாம் அலையில் நாங்களும் பாதிக்கப்பட்டோம். நான்* personal *ஆக பாதிக்கப்பட்டேன். என் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பாதிக்கப்பட்டார்கள். தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) பாதிக்கப்பட்டதைச் சொல்லக் கூடாதா? என்ன இது? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர். . . (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, நீங்கள் சொன்ன அந்தக் குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடுகள்)*

திரு. கு. செல்வபெருந்தகை: *அது குற்றச்சாட்டேயில்லை. (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், எல்லோரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

2023 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, இன்றைய சிறப்புக் கவன ஈர்ப்பு என்பது, தற்போது கொரோனா நிலவரம் எப்படி இருக்கிறது என்பது குறித்துத்தான், அரசினுடைய கவனத்தை ஈர்க்க வேண்டும். (குறுக்கீடுகள்) பழையகால வரலாற்றை நீங்கள் பேசியது தவறு. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. உட்கார்ந்துகொண்டு, நின்றுகொண்டெல்லாம் பேசாதீர்கள். நீங்கள் அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகப் பதில் சொல்வார்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொரோனா பெருந்தொற்றால் மிகவும் பாதிக்கப்பட்டவன் நான். (குறுக்கீடுகள்) மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லையில்லை. இன்றைக்கு எடுத்திருக்கக்கூடிய பொருள் இப்போது கொரோனா பெருந்தொற்று பரவி வருகிறது. அதுநிமித்தம், அது தொடர்புடையதை மட்டும்தான் பேச வேண்டும். வரலாறையோ, வேறு எதையுமோ பேசத் தேவையில்லை. நடந்த விஷயங்களை இங்கே பேசுவதற்கு தற்போது அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) தயவுசெய்து அரசின் கவனத்தை ஈர்த்து அமருங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. கு. செல்வபெருந்தகை: *அது எப்படி என்று சொல்லுங்கள். கவனத்தை ஈர்ப்பது என்றால், எதையுமே பேசாமல், ஒரே ஒரு வரியில், ஒற்றை வரியில் கவனத்தை ஈர்க்கிறேன் என்று மட்டும் சொல்லிவிடட்டுமா? (குறுக்கீடுகள்) எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறோம். இன்றைக்கு கொரோனா தொற்று குறித்த சிறப்புக் கவன ஈர்ப்பில் நான் எதுவுமே பேச வேண்டாமா? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் பேசுங்கள். மற்றவர்களை உட்காரச் சொல்லிவிட்டு, நீங்கள் ஏதேனும் பேச வேண்டுமென்றால் பேசுங்கள். நான்* mike *தருகிறேன். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றைப் பேசினால் நாங்களும் பேசுவோம்.*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2023 ஏப்ரல் 11

இப்போது கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வருகிறது. அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, கட்டுப்படுத்த வேண்டுமென்பதுதான் எங்களுடைய சிறப்புக் கவன ஈர்ப்பு. அதைப் பற்றி பேசுவதை விட்டுவிட்டு, முன்பு நடந்ததைப் பற்றி பேசினால், நாங்களும் பேச வேண்டிய சூழ்நிலை வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அவர் பேசியதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட்டேன். அதைப் பற்றி பேச வேண்டாம்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: எப்படி கொரோனா வந்தது, அதை நாங்கள் எப்படி தடுத்தோம், மறுபடியும் எப்படி வந்தது என்பதையெல்லாம் நாங்களும் ஆதாரபூர்வமாகப் பேச முடியும். அதைத் தவிர்த்து, வேண்டுமென்றே திட்டமிட்டு, ஒரு குழப்பத்தை ஏற்படுத்த, முந்தைய ஆட்சியின்மீது குற்றம் சுமத்துகின்ற வகையில் அவர் பேசுவது சரியல்ல.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அவர் பேசியதை, நான் நீக்கிவிட்டேன்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: ஒவ்வொரு முறையும் அவர் இப்படித்தான் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, நீங்கள் இதை மட்டும் பேசிவிட்டு உட்காருங்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: இப்போது இரண்டாம் அலையையும் சமாளித்துவிட்டோம். மூன்றாம் அலையையும் சமாளித்துவிட்டோம். நான்காம் அலையையும் மிகச் சாதுர்யமாக சமாளிப்பதற்கு மருத்துவக் கட்டமைப்புகள். . . (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை. . . (குறுக்கீடுகள்) உட்காருங்கள். ஒரு நிமிடம் நான் சொல்கிறேன். நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) அதாவது, நீங்கள் எல்லோரும் அவையில் மூத்த உறுப்பினர்கள். நீங்கள் எல்லோரும் அவையில் பேசுகிறீர்கள். ஒரு

2023 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]
கவன ஈர்ப்புத் தீர்மானம் zero hour*-ல் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு* related *ஆகப் பேசக்கூடிய ஆட்கள் அரசினுடைய கவனத்தை ஈர்த்து, இப்போது எப்படி கொரோனா பரவியிருக்கிறது என்பது பற்றி மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடம் பதில் கேட்க வேண்டும். இதற்கு, நடந்த கதைகள், இதெல்லாம் தேவைதானா என்பது உங்களுக்கே தெரியும். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாகத்தான் எடுத்திருக்கிறேன். ஆகவே, கவனத்தை ஈர்த்து அமரும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் யாரையும் சங்கடப்படுத்துவதுபோன்று பேசவில்லை. (குறுக்கீடுகள்) இருங்கள். இருங்கள். என்ன கையைக் காட்டுவது; இவர்களுக்கு மட்டும்தான் காட்டத் தெரியுமா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது என்ன நியாயம்? (குறுக்கீடுகள்) பேச்சுரிமை. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, நீங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை. இல்லை. பேச்சுரிமை. . . (குறுக்கீடுகள்) அதைப் பற்றி பேச இது நேரமல்ல. (குறுக்கீடுகள்) இல்லை. இந்த ஆதாரத்தை வைத்துப் பேச முடியாது. (குறுக்கீடுகள்) இல்லை. நான் அதை அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வபெருந்தகை, நீங்கள் எந்த ஆதாரத்தை வைத்துப் பேசுவதையும் நான் அனுமதிக்க மாட்டேன். இதில் மட்டும் கவனத்தை ஈர்த்து அமருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நான்காவது அலையைச் சமாளிப்பதற்கு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் எடுக்கின்ற பணிகளையெல்லாம் நாங்கள் அறிவோம். இன்றைக்கு எல்லா மருத்துவமனைகளிலும். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *ஒரு நிமிடம். முதலில் உட்காருங்கள். இது ஓர் அரசாங்கத்தினுடைய கவனத்தை*

ஈர்ப்பது. தாங்கள் அதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அந்தக் கருத்தைச் சொல்லிவிட்டு உட்கார்ந்துவிட்டார். மாண்புமிகு உறுப்பினர் திரு. நாகைமாலி அவர்கள் மிக அழகாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதே அளவுக்குத்தான் நீங்களும் சொல்ல வேண்டும். எனவே, அவர் கவனத்தை ஈர்த்ததாக ஏற்றுக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பதில் சொல்லச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை, நீங்கள் கவனத்தை ஈர்த்து அமருங்கள். வேறு எதுவும் பேசினால் அதை நான் அனுமதிக்க மாட்டேன்.

திரு. கு. செல்வபெருந்தகை: இதுவரை 38,150 தமிழர்களை, உயிர்களை நாம் பலி கொடுத்திருக்கிறோம். இனிமேல் உயிர் பலி இல்லாமல் வருகின்ற அலையில் பாதுகாக்க வேண்டும். வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினார் வள்ளலார் என்ற கூற்றிற்கேற்ப, இன்று யார் வருத்தப்படுகிறார்கள் என்பதை நாடு அறியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியநாடுமுழுவதும்கொரோனா பெருந்தொற்று அதிகளவில்பரவி வருவதாகவும், இந்திய அளவை எடுத்துக் கொண்டால், ஏறக்குறைய 7,000 பேருக்கு அதிகமாக பரவியிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. அண்டை மாநிலமான கேரளத்தில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், 200–லிருந்து 300 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியும் வந்த வண்ணமாக இருக்கிறது. இதைப்பார்த்து, கொரோனா பெருந்தொற்று என்று சொன்னவுடனே மக்கள் மத்தியிலே மிகப் பெரிய பீதியும், அச்சமும் ஏற்படுகிறது. இது ஒரு மாதிரியான வைரஸ், உயிர் பாதிப்பு இருக்காது என்று சொன்னாலுங்கூட, மக்கள் மத்தியிலே அச்சம் ஏற்படுகின்ற காரணத்தால், இதை அரசு எவ்வாறு அணுகப் போகிறது, மக்கள் மத்தியில் அச்சப்பட தேவையில்லையா என்ற விழிப்புணர்வை உண்டாக்குவது அரசின் கடமையாக இருக்க வேண்டுமென்று

2023 ஏப்ரல் 11] [திரு. ஜி.கே. மணி]

கருதுகிறேன். அதைப்போல, நம்முடைய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே மருத்துவமனையில் இருப்பவர்களெல்லாம் முகக்கவசம் அணிய வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். அதை பொதுமக்களும் அணிய வேண்டுமா, இது உயிர்ச் சேதத்தை ஏற்படுத்துமா அல்லது தேவையற்றதா என்பதையெல்லாம் மருத்துவர்களோடு ஆலோசிப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, அந்த அடிப்படையில் கொரோனா பெருந்தொற்று தமிழ்நாடு அளவில் பரவாமல் இருப்பதற்கு தக்க நடவடிக்கை எடுப்பதோடு, அரசின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

முற்பகல் 11–30

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய வகை கொரோனா பரவல் என்பது ஒரு மாதத்திற்குக் குறையாமல் இருமல் மற்றும் சளி இருக்கிறது. காய்ச்சல் இருக்கிறது. உடம்பு வலி இருக்கிறது. படுத்தால் எழுந்திருப்பதற்கே மனம் வர மறுக்கிறது. நானே பாதிக்கப்பட்டவன். ஆதலால்தான் சொல்கிறேன். ஆக, WHO—உலக சுகாதார நிறுவனம், இந்திய மருத்துவத் துறை போன்றவை எந்த மாதிரியான வழிகாட்டுதல்களை, அறிவுரைகளை நமக்கு வழங்கியிருக்கின்றன என்பதையும், ஏற்கெனவே கொரோனா அலை வந்தபோது, நாம் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், கட்சி வேறுபாடு பாராமல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், இங்கே அமர்ந்திருக்கின்ற அனைத்துக் கட்சிகளினுடைய சட்டமன்றத் தலைவர்களையும் அழைத்து, மாதத்திற்கொருமுறை, நம் கோட்டைக் கொத்தளத்தில் தலைமைச் செயலாளர் அவர்களுடன் சேர்ந்து, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர், முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர், கூட்டணிக் கட்சிகளினுடைய தலைவர்கள், முன்வரிசை தலைவர்கள் அனைவரையும் அழைத்து, இந்தக் கொரோனா எப்படிப் பரவுகிறது; இதை எப்படிக் கட்டுப்படுத்த வேண்டும்; மக்கள் பாதிப்பிலிருந்து எப்படிக் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக மிகச் சிறப்பாகக் கையாண்ட அரசு நம்முடைய தளபதி அண்ணன் (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் அவர்களுடைய அரசு. அதேவகையில், (மணியடிக்கப்பெற்றது) மிகச் சிறப்பாக,

தான் ஆய்வுப் பயணம் மேற்கொள்கிற இடங்களிலெல்லாம் 25 கிலோ மீட்டருக்குக் குறையாமல் நடைப்பயணம் சென்று, ஆரம்ப சுகாதார நிலையங்களையும், மருத்துவமனைகளையும், மருத்துவக் கல்லூரிகளையும் ஆய்வு செய்து, பொது மக்களையும் சந்தித்து, தேநீர் கடைகளிலும், பேருந்துகளிலும் உள்ள சக மனிதர்களோடு பழகி, அவர்களுடைய பிரச்சினைகளைக் கேட்டறிந்து தீர்வு காணுகின்ற, மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகின்ற நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இதையும், அதேபோன்று, கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டபோது ஒவ்வொரு நாளும் 30 ஆயிரத்தைத் தாண்டி கொரோனா பாதிப்பு இருந்தது என்பதை நாம் அறிவோம். ஆக்ஸிஜன் தட்டுப்பாடு— இன்று இரவு இந்த ஆஸ்பத்திரிக்கு ஆக்ஸிஜன் வரவில்லை என்று சொன்னால், சுமார் 150 பேர் இறந்துவிடுவார்கள் என்ற பயமெல்லாம் இருந்தது. ஆனால், இன்றைக்கு ஒவ்வொரு மருத்துவமனையிலும் தேவையான ஆக்ஸிஜன் தயாரிக்கப்படுகிறது. ஆக, இன்றைக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களும் எடுக்கின்ற நடவடிக்கைகள், ஆய்வுகள், மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மக்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீதும், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள்மீதும் கொரோனாவைக் கட்டுப்படுத்தி விடுவார்கள் என்ற முழு நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு கொரோனா எண்ணிக்கை வருகிறது என்று சொன்னால்,—ஆரம்ப காலங்களிலே சரியான எண்ணிக்கைகள்கூட உலகம் முழுவதும் பல நாடுகளிலே அறிவிக்கப்படவில்லை. (மணியடிக்கப்பெற்றது) இன்றும் அதே நிலைதான். ஆனால், இன்றைக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உலகமெல்லாம் எதற்கு? நீங்கள் இங்கே வந்துவிடுங்கள்; தமிழ்நாட்டில் என்ன நிலை இருக்கிறது என்று கேட்டு, அமருங்கள். (குறுக்கீடு) இதற்கு மட்டும் தமிழ்நாட்டில் என்னவென்று கேட்டு, அமருங்கள்.

2023 ஏப்ரல் 11]

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துகிற வகையிலே இன்றைக்கு அறிக்கைகளையும், பேட்டிகளையும் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுவே நமக்குத் தொல்லையாகவும் வந்துவிடக் கூடாது. என்ன நடவடிக்கைகளை நாம் மேற்கொள்கிறோம் என்பதை இந்த அவையில் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, அனைத்து மக்களுக்கும் உண்மை நிலை சென்றடையும் என்பதால், இந்த அவையினுடைய கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொரோனா வைரஸ் எத்தனை உருமாறி வந்தாலும், நிலை தடுமாறாமல் அதை எதிர்கொள்ளக்கூடிய அரசு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் தளபதி அவர்களின் தலைமையிலான இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) இருந்தாலுங்கூட, சிலபேர் தேவையற்ற அச்சங்களை மக்கள் மத்தியிலே விதைக்கின்ற சூழலில், இதுகுறித்த விளக்கத்தை நம்முடைய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் வழங்குவார்களென்று சொன்னால், அது, அவர்களுடைய ஐயத்தைப் போக்கும் என்கின்ற வகையில் அரசின் கவனத்தையும், மாண்புமிகு அமைச்சரின் கவனத்தையும் ஈர்த்து, அமர்கிறேன், நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடு முழுவதும் உருமாறிய கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுகிறது. தமிழ்நாட்டில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை இன்றைக்கு 400-ஐத் தொட்டிருக்கிறது; 2 பேர் உயிரிழந்திருக்கிறார்கள். ஆகவே, கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் அரசின் கவனத்தை ஈர்த்து, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உருமாறிய கொரோனா வைரஸால் இப்போது காய்ச்சல் வருகிறது என்று கூறுகிறோம். இதுவொரு influenza type காய்ச்சலாக இருக்கிறது. லேசான காய்ச்சல், கடுமையான உடல் வலி, தொண்டை வலி போன்றவை இருக்கும். இதனால் யாரும் அச்சப்படத் தேவையில்லை. சிறிது உடல் சோர்வு இருக்கும், அச்சப்படத் தேவையில்லை. ஏனென்றால் இந்த உருமாறிய கொரோனா வைரஸ், இன்னும் உருமாறும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் டாக்டராக இருக்கிறீர்கள். இதற்கு மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் பதில் தெரிவிப்பார்கள்.

முற்பகல் 11–35

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும் இதை நல்ல முறையில் கவனிப்பார்கள். நிச்சயமாக அது பரவாது. யாருக்கும் உயிர்ச் சேதமும் ஏற்படாது என்பதைத் தெரிவித்து, எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தமிழ்நாட்டிலும், ஒட்டுமொத்த இந்தியாவிலும் Omicron-னின் உருமாற்றமான XBB 1.16 என்கின்ற ஒரு புதிய வைரஸூம் மற்றும் BA.2 என்கின்ற வைரஸூம் புதிதாக வேகமாகப் பரவத் தொடங்கியிருக்கின்றன. கடந்த 1½ மாதங்களுக்கு முன்பு வரை ஒட்டுமொத்த இந்தியாவிலும் 100–க்கும் கீழே, ஏன், 50–க்கும் கீழே என்ற அளவில்தான் கொரோனாவின் பரவல் இருந்தது. தமிழ்நாட்டில் குறைந்தபட்சப் பரவலாக 2 என்கின்ற எண்ணிக்கையில் கொரோனா பரவல் கடந்த 1½ மாதங்களுக்கு முன்னால் இருந்தது. ஆனால், அது நேற்றைக்கு 386 என்கின்ற அளவில் உயர்ந்திருக்கிறது என்பது உண்மை.

2023 ஏப்ரல் 11] [திரு. மா. சுப்பிரமணியன்]

தமிழ்நாட்டில் மட்டும்தான் இவ்வளவு எண்ணிக்கை என்கின்ற அளவில் இல்லை. கடந்த 24 மணி நேரத்தில் இந்திய அளவில் 5,878 பேருக்கு இந்தப் பாதிப்பு உருவாகியிருக்கிறது. கேரளாவைப் பொறுத்தவரை, 2,273 பேருக்கும், டெல்லியைப் பொறுத்தவரை, 484 பேருக்கும், ஹிமாச்சலபிரதேசத்தைப் பொறுத்தவரை, 422 பேருக்கும், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, 386 பேருக்கும் என்கின்ற வகையிலும் இந்தக் கொரோனா பரவியிருக்கிறது.

மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், இந்தக் கொரோனா பரவல் தொடங்கியவுடனேயே, இந்தத் துறை சம்பந்தப்பட்ட அலுவலர்களையும், எங்களையும் அழைத்து, உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்தினார்கள். கடந்த 2, 3 நாட்களுக்கு முன்பாக, கடந்த 7 ஆம் தேதி, ஒன்றிய அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. மன்சுக் மாண்டவியா அவர்கள் காணொளி வாயிலாக ஒரு கூட்டத்தை நடத்தினார்கள். அந்தக் கூட்டத்தில் நாங்களும் கலந்து கொண்டோம். அக்கூட்டத்தில், இதுசம்பந்தமாக தமிழ்நாடு எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் குறித்து தெளிவுபடுத்தி பேசியவுடன், அவர் வெளிப்படையாக, அனைத்து அமைச்சர்களும் கலந்துகொண்ட அக்கூட்டத்தில், தமிழ்நாட்டின் செயல்பாடுகளை மிக வெகுவாகப் பாராட்டி மகிழ்ந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) காரணம், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், இந்தக் கொரோனா பாதிப்பு வந்தவுடனேயே ஓர் ஆய்வுக் கூட்டத்தை நடத்தச் சொன்னார்கள். அந்த வகையில், மார்ச் திங்கள் 21 ஆம் தேதி ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அந்த ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, ஒரு முடிவு எடுத்ததற்குப் பிறகு, அன்று பத்திரிகையாளர்கள் சந்திப்பில், தமிழ்நாட்டில் இருக்கிற துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டார அரசு மருத்துவமனைகள், வட்டம் சாரா அரசு மருத்துவமனைகள், மாவட்ட அரசு மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் என 11,333 மருத்துவக் கட்டமைப்புகள் எல்லாவற்றிலும் வரும் ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து அனைவரும் முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும் என்று அறிவித்தோம்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மருத்துவமனைகளில் முகக்கவசம் அணிவது கட்டாயம் என்றால், பொதுமக்கள் முகக்கவசம் அணிந்துகொள்வது கட்டாயமா,

[திரு. மா. சுப்பிரமணியன்] [2023 ஏப்ரல் 11

இல்லையா என்கிற வகையில் பேசினார்கள். பொதுமக்களும் எப்பொழுதும் முகக்கவசம் அணிந்துகொள்வது அவசியம் என்று ஒட்டுமொத்த இந்தியாவிலும், என்றைக்கு இந்தக் கொரோனா பரவல் தொடங்கியதோ அன்றிலிருந்தே, அதாவது 2020–லிருந்தே பொது சுகாதாரத் துறை ஒரு விதியை நிர்ணயித்து, அந்த விதி அமல்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனாலும்கூட, இரண்டாவது அலையின் தீவிரம் மூன்றாவது அலையில் இல்லை. மூன்றாவது அலைக்குப் பிறகு பெரும்பாலும் யாரும் முகக்கவசம் அணிந்துகொள்வது இல்லை. ஆனாலும்கூட, முகக்கவசம் அணிந்துகொள்ள வேண்டுமா என்றால், அறிவுறுத்தல் என்றால், நிச்சயமாக முகக்கவசம் அணிந்துகொள்வது என்பது அனைவருக்குமே நல்லது, அவசியம் என்பதேயாகும். ஆனால், முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும் என்று வருகின்றபோது, மருத்துவமனைகளில்தான் இந்தப் பரவல் என்பது கூடுதலாகிக் கொண்டிருக்கிறது. எனவேதான் மருத்துவமனைகளில் முதற்கட்டமாக நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து மருத்துவமனைகளிலும் முகக்கவசம் அணிவதைக் கட்டாயப்படுத்தச் சொன்னார்கள். அந்த வகையில், முகக்கவசம் அணிய வேண்டும் என்று கட்டாயப்படுத்தியிருக்கிறோம். இரண்டாம் தேதி, நான் நேரடியாகவே மேட்டுப்பாளையத்திலுள்ள அரசு மருத்துவமனைக்கு ஒரு surprise visit–க்குச் சென்று, அந்த மருத்துவமனையில் இருக்கிற உள்நோயாளிகள், புறநோயாளிகள், மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த களப் பணியாளர்கள் உள்ளிட்டோர் இந்த முகக்கவசங்களை அணிகிறார்களா என்பதை ஆய்வு செய்தோம். 100 சதவிகிதம் முகக்கவசம் அணிந்திருந்தார்கள். தற்போது தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்து மருத்துவமனைகளிலும் முகக்கவசங்கள் அணிந்து கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–40

கடந்த 7 ஆம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் மாண்புமிகு ஒன்றிய அமைச்சர் அவர்கள், ஏப்ரல் மாதம் 10 மற்றும் 11 ஆம் தேதிகளில் mock drill என்ற ஒரு மாதிரிப் பயிற்சியை இந்தியா முழுவதும் நடத்தலாம் என்று அறிவித்தார்கள். அந்த வகையில், நேற்றைக்கு ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் mock drill என்ற மாதிரிப் பயிற்சியை எடுத்துக் கொண்டோம். அதில், நானும், துறையின் செயலாளர் அவர்களும் கலந்துகொண்டோம்.

2023 ஏப்ரல் 11] [திரு. மா. சுப்பிரமணியன்]

அதேநேரத்தில், தமிழ்நாடு முழுவதிலும் நேற்றைக்கும் இன்றைக்கும் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அந்தந்த மாவட்டங்களில் இருக்கிற மருத்துவமனைகளில் mock drill என்ற மாதிரிப் பயிற்சியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதாவது, அந்தந்த மருத்துவமனைகளில் எத்தனை படுக்கைகள் இருக்கின்றன? எவ்வளவு ஆக்ஸிஜன் வசதிகள் இருக்கின்றன? எந்தளவுக்கான அவசர ஊர்திகள் இருக்கின்றன. மருந்துகளின் கையிருப்பு எவ்வளவு இருக்கிறது போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இன்றைக்கு ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, எனக்கு முன்னால் பேசிய அனைத்துக் கட்சித் தலைவர்களும் எடுத்துச் சொன்னதைப்போல, 2021 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் தேதி மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சராக வணக்கத்திற்குரிய தளபதி அவர்கள் பொறுப்பேற்றபோது, தமிழ்நாட்டில் அன்றைய கொரோனாவின் பாதிப்பு என்பது 26,465 ஆக இருந்தது. 10 நாட்கள் கழித்து, மே திங்கள் 20 ஆம் தேதி 36,184 என்கின்ற அளவில் உயர்ந்தது. அந்த இரண்டாம் அலையில் மட்டும் கொரோனாவினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 17,08,550 பேர். இரண்டாவது அலையில் கொரோனாவினால் பாதிக்கப்பட்டவர்கள் 17,08,550 பேர். அப்போது நமக்கான oxygen கையிருப்பு என்பது, வெறும் 230 மெ.டன் அளவில் இருந்தது. மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், அன்றைய oxygen அவசியத்தை அறிந்து, ஒன்றிய அரசிடம் பேசி, அதோடு மட்டுமல்லாமல் மாநில அரசின் சார்பிலும் எடுத்த அதிரடியான நடவடிக்கைகளின்மூலம் இன்றைக்கு தமிழ்நாட்டிலிருக்கிற oxygen கையிருப்பைப் பொறுத்தவரை 24,061 concentrators, 130 generators, 260 PSA oxygen plants—அனைத்தையும் காட்டிலும் ஒரு மகிழ்ச்சியான விஷயம், 230 மெ.டன் அளவிற்கு மட்டுமே இருந்த oxygen இன்றைக்கு எவ்வளவு கையிருப்பில் வைத்துக்கொள்ளலாம் என்றால், 2,067 மெ.டன் அளவிற்கு கையிருப்பை வைத்துக்கொள்வதற்குரிய வசதியை நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்ல, அன்றைக்கு நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள், படுக்கைகளின் அவசியத்தைக் கருதி, அரசின் சார்பில் 96,119 படுக்கைகளையும், தனியார் மருத்துவமனைகளின் சார்பில் 52,499 படுக்கைகளையும்,

ஒட்டுமொத்தமாக 1,48,618 படுக்கைகளையும் அன்றைக்கு தயார் செய்து, இரண்டாவது அலையின் தாக்கத்தை வெகுவாகக் குறைத்து, அதிலிருந்து நாம் மீண்டு வந்தோம். இன்றைக்கு இப்போது நம்மிடையே இருக்கிற படுக்கைகளின் எண்ணிக்கை-தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் இருக்கிற கொரோனாவிற்கான படுக்கைகளின் எண்ணிக்கை 64,781. சுமார் 1,48,000 படுக்கை வசதிகள் இரண்டாவது அலையின்போது இருந்தன; இப்போது சுமார் 64,000 படுக்கை வசதிகள் மட்டுமே இருக்கின்றனவே, சமாளிக்க முடியுமா என்று நீங்கள் கேட்கலாம். நிச்சயம் சமாளிக்க முடியும்; மீண்டும் நினைத்தால், 24 மணி நேரத்தில் இந்த 1,48,000 படுக்கை வசதிகளை தமிழ்நாட்டில் கொண்டு வர முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான ஏற்பாட்டை நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் செய்திருக்கிறார்கள்.

RT-PCR பரிசோதனைகளைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் இன்றைக்கு 342 அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளின்மூலம் செய்ய இயலும். 3 இலட்சம் பேருக்கு ஒவ்வொரு நாளும் இன்றைக்குப் பரிசோதனை செய்யலாம். இப்போது வந்திருக்கிற மூன்றாவது அலை, Omicron-நான் ஏற்கெனவே சொன்னேன். XBB 1.16 என்கின்ற இந்தப் பாதிப்பு என்பது, எனக்கு முன்னால் பேசியவர்கள் சொன்னதைப்போல, இது உயிர் பறிக்கும் பாதிப்பாக இல்லை; இது மிதமான தொற்று என்கின்ற அளவில், தொண்டை வலி, சளி, இருமல், காய்ச்சல், உடல் வலி என்கின்ற அளவில்தான் இருந்து கொண்டிருக்கிறது. இதனால் மருத்துவமனைகளில் oxygen வசதி வேண்டுமென்கின்ற வகையிலோ அதி தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு வர வேண்டுமென்கின்ற நிலையிலோ யாரும் வரவில்லை என்பதை நாம் அனைவரும் உணர்வோம். இதே மூன்றாவது அலையில் ஒன்றை நாம் சந்தித்தோம். 2021 ஆம் ஆண்டு டிசம்பரில் தொடங்கி, 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி வரை, 3 மாத காலம் ஓர் அலை வந்தது. அது மூன்றாவது அலை. அப்போது வந்த அந்த virus-ன் பெயர் Omicron. அந்த Omicron-ம் இதே அளவுக்கு ஒரு மிதமான தொற்றாக இருந்த காரணத்தினால் உயிர் பாதிப்பு ஏதுமில்லாமல் அந்த மூன்றாவது அலை, நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் எடுத்த அதி தீவிர நடவடிக்கைகளின் காரணமாக பாதிப்புகளே இல்லாமல் சென்றது.

2023 ஏப்ரல் 11] [திரு. மா. சுப்பிரமணியன்]

இன்றைக்கு இது நான்காவது அலையா என்று வைத்துக்கொண்டால், இது இன்னமும் கூடுதலானால் அலை என்று கருதலாம். இப்போது இது gradual ஆகத்தான் கூடிக்கொண்டிருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் உயர்ந்து கொண்டிருக்கிறது. எனவே, இதனை அலை என்றும்கூட எடுத்துக்கொள்ள முடியாது. ஒவ்வொரு நாளும் 5, 10 என்கிற அளவில்தான் கூடிக்கொண்டிருக்கிறது. Cluster என்கின்ற வகையில் பாதிப்பு இருந்தால், அது அலை என்று எடுத்துக்கொள்ளலாம். ஒரு பள்ளியில் ஒருவருக்குப் பாதித்து, ஒரே நேரத்தில் 100 பேர், 200 பேர் பாதிக்கப்பட்டார்கள் என்றால் cluster. ஒரு கிராமத்தில் ஒருவருக்கு பாதிப்பு ஏற்பட்டு, அவரின்மூலம் அந்தக் கிராமத்தில் இருக்கிற மொத்த நபர்களும் பாதிக்கப்பட்டார்கள் என்றால் cluster. ஆனால் தற்போது அவ்வாறு இல்லை. Individual பாதிப்பு என்கின்ற வகையிலேதான் இது இருந்து கொண்டிருக்கிறது. எனவேதான், இன்றைக்கு மருத்துவமனைகளில் முகக்கவசம் கட்டாயம் என்று அறிவித்திருக்கிறோம். என்றாலும், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் நேற்றைக்குக்கூட எங்களிடத்தில் சொன்னது, இந்த எண்ணிக்கை பெருகும்பட்சத்தில் தமிழ்நாடு முழுவதிலும் இந்த முகக்கவசங்கள் அணிவதை, பொதுவாக, பொது இடங்களில், மக்கள் கூடுகின்ற இடங்களில், சமுதாய நிகழ்ச்சிகள், சமூக நிகழ்ச்சிகள், அரசியல் நிகழ்வுகள்—இப்படி பெரியளவில் மக்கள் கூடுகின்ற இடங்களில் முகக்கவசங்கள் அணிவதை—இன்னமும் கொஞ்சம் தொற்று கூடுகின்றபோது, இதே தமிழ்நாட்டில் 500-ஐ தாண்டுகின்றபோது அல்லது 1,000-ஐ தாண்டுகின்றபோது, அந்தமாதிரியான ஒரு கட்டாய நிலையைக் கொண்டுவரலாம் என்று அறிவித்திருக்கிறார்கள். இப்போது அந்த பெரியளவிலான பதற்றம் இல்லை என்பதை நான் இங்கே இருக்கிற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–45

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இறப்பு குறித்து பேசினார்கள். அவர் நேற்றைக்கு இரண்டு இறப்புகள் என்றார். நேற்றைக்கு ஒன்று. செங்கல்பட்டில் 63 வயது பெண்மணி ஒருவர் இறந்திருக்கிறார். இதுவரை கடந்த ஒரு மாத காலத்தில் ஐந்து இறப்புகள் கொரோனா பாதிப்பு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது incidental corona death என்றுதான் இன்றைக்கு

[திரு. மா. சுப்பிரமணியன்] [2023 ஏப்ரல் 11

அறிவிக்கப்பட்டிருக்கிறது. கொரோனா பாதிப்பு என்றால் நேரடியாகவே கொரோனா பாதிப்புக்குள்ளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அதனால் ஏற்பட்ட இறப்புகள் அல்ல.

திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவிலைச் சேர்ந்த 82 வயது முதியவர் மிக நீண்ட நாட்களாக இருந்த சர்க்கரை நோய், வயது முதிர்வு, இதனால் ஏற்பட்ட பாதிப்பு. அவர் இறக்கும் தருவாயில் அவருக்கு swab எடுத்தபோது கொரோனா இருப்பது கண்டறியப்பட்டது. அதேபோல், தூத்துக்குடியைச் சார்ந்த 54 வயது நபர் நுரையீரல் புற்று நோயினால் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, நீண்ட நாட்கள் சிகிச்சைக்குப் பிறகு அவர் இறக்கும் தருவாயில் அவருக்கு எடுக்கப்பட்ட RT-PCR பரிசோதனையில் அவருக்கு கொரோனா இருப்பது கண்டறியப்பட்டது. அதேபோல், கோயம்புத்தூர், பி.என். புதூரைச் சார்ந்த 56 வயது பெண்மணி நீண்ட நாட்கள் சர்க்கரை நோய், இரத்தக் கொதிப்பு போன்ற பல்வேறு நோய்களினால் பாதிக்கப்பட்டு மிக மோசமான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதால் அவருக்கும் இந்தக் கொரோனா பாதிப்பு இருப்பது கண்டறியப்பட்டு, அவரும் இறந்து போனார்.

இதோடுமட்டுமல்ல, திருப்பூர், அனுப்பர்பாளையத்தைச் சேர்ந்த 60 வயது நபர் இரத்தக் கொதிப்பு நோயால் அவதிப்பட்டு வந்தவர், அதுமட்டுமல்லாது மூளையில் இரத்தக் குழாய் அடைப்பு ஏற்பட்ட நிலையில் அவரும் இறந்து போனார். இந்தவகையில் incidental corona death என்கின்ற வகையில்தான் இதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள முடியும். ஆனாலும் இறந்தவர்களின் குடும்பத்தினர் எதிர்காலத்தில், மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கின்ற உதவித்தொகை கோரி வருகின்றபோது பிரச்சினை வந்துவிடக் கூடாது என்பதால் இவையெல்லாமே corona death என்றுதான் இன்றைக்குநாம்வெளிப்படையாகஅறிவித்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் எதையும் மிகவும் transparent ஆக, வெளிப்படையாக அறிவித்து மக்களுக்கு அறிவுறுத்திட வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையில், இந்த incidental corona death-ஐகூட கொரோனா இறப்புகள் என்று அறிவித்திருக்கிறோம். இதுவரை 55 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் தமிழ்நாட்டில் இந்தக் கொரோனா நிதியுதவியைப் பெற்றிருக்கிறார்கள்.

2023 ஏப்ரல் 11] [திரு. மா. சுப்பிரமணியன்]

கொரோனாவைப் பொறுத்தவரை, கொரோனா என்பது 2019 ஆம் ஆண்டு இறுதியில் தொடங்கி Corona, Alpha, Beta, Delta, Delta Plus, Omicron, Gamma, Kappa என்று ஏராளமான பெயர்களில் உருமாறிக் கொண்டிருக்கிறது. அது எப்படி வந்தாலும் தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழர்களைக் காப்பார், தமிழகத்தைக் காப்பார், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குரிய கட்டமைப்புகள் தயாராக இருக்கின்றன என்பதை நான் இங்கே மகிழ்ச்சியுடன் எடுத்துக் கூறுகிறேன். எனவே, பெரிய அளவில் பதட்டப்பட வேண்டியதில்லை. ஆனாலும், நாம் எச்சரிக்கையாக இருப்பது என்பது அவசியம். அதாவது, இணை நோய் உள்ளவர்கள் comorbidities என்று சொல்லக்கூடிய இணை நோய் உள்ளவர்கள் எந்தப் பாதிப்பு வந்தாலும் இறப்பைச் சந்திக்க நேரிடும். எனவே, இணை நோய் உள்ளவர்கள் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருப்பது, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை குறிப்பாக, அரசின் விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது அவசியம் என்பதையும் தெரிவித்து, தங்களின் வாயிலாக இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் கூறி, விடைபெறுகிறேன். (குறுக்கீடு)

5. கவன ஈர்ப்பு

பவானிசாகர் தொகுதி, அருள்மிகு ஸ்ரீபண்ணாரி அம்மன் திருக்கோயில், வனத் துறைக்குச் சொந்தமான நிலம், கோயில் நிருவாகத்திற்கு அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம். . . (குறுக்கீடு) உட்காருங்கள் சொல்கிறேன். (குறுக்கீடு) இப்போது அதைத்தான் சொல்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானம்தான். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே.ஏ. செங்கோட்டையன், திரு. ப. தனபால், திரு. K.C. கருப்பணன் மற்றும் திரு. அ. பண்ணாரி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) நிறைய இருக்கிறது. 132 ஆளுங்கட்சி உறுப்பினர்கள்போக மீதியுள்ள அத்தனை பேரும் ஆளுக்கு 5, 10 கவன ஈர்ப்புத் தீர்மானங்களைத் தந்திருக்கிறீர்கள்.

அவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக எடுக்க முடியாது. அவசரப் பொது முக்கியத்துவம் கருதி, பதில் வந்திருப்பதை வரிசையாக எடுத்துக்கொள்வேன். உங்களுக்கும் அதன்படி எடுக்கப்படும், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள். (குறுக்கீடு) அதேதான் உங்களுக்கும். (குறுக்கீடு) எல்லோருக்கும் சேர்த்துதான் அந்த பதில்.

*__திரு. கே.ஏ. செங்கோட்டையன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட அருள்மிகு ஸ்ரீபண்ணாரி அம்மன் திருக்கோயிலில் உள்ள வனத் துறைக்குச் சொந்தமான இடத்தை கோயில் நிர்வாகத்திற்கு வழங்குவது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

*__மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்:__ *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று மாண்புமிகு உறுப்பினர்களின் மேசையின் மேல் உள்ள சிறு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

*1. அருள்மிகு பண்ணாரி அம்மன் திருக்கோயில், ஈரோடு மாவட்டம், குத்தியாலத்தூர் காப்புக்காட்டில் அமைந்துள்ளது. இப்பகுதி சத்தியமங்கலம் புலிகள் காப்பக வெளி மண்டலத்தில் (*Buffer Zone*) அமைந்துள்ளது.*

2. இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் தமிழ் மாதமான பங்குனி மாதத்தில் குண்டம் திருவிழா நடைபெற்று வருகிறது. இத்திருவிழாவில் தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்து பெருவாரியான பக்தர்கள் வருகை புரிகின்றனர். இத்திருவிழாவிற்கு வரும் பக்தர்களுக்கு அறநிலையத் துறை சார்பாக போதிய வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன.

3. இத்திருக்கோயிலுக்கு ஏற்கெனவே 20 ஏக்கர் (8.093 Ha*) வன நிலம், அரசாணை எண் 12, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 13-1-1992-ன்படி காப்புக்காட்டிலிருந்து நீக்கம் செய்து வழங்கப்பட்டுள்ளது. (*De-reserved from Reserved Forests*)*

2023 ஏப்ரல் 11] [டாக்டர் மா. மதிவேந்தன்]

4. தற்போது, கூடுதலாக 10 ஹெக்டேர் வன நிலம் வழங்க கோரப்பட்டு அதற்கு ஈடு செய்ய இரண்டு மடங்கு மாற்று நிலம் வருவாய்த் துறைக்குச் சொந்தமான குத்தியாலத்தூர் புல எண் 295, புறம்போக்கு நிலம் வருவாய்த் துறையினரால் தேர்வு செய்யப்பட்டது.

5. வருவாய்த் துறையினரால் தேர்வு செய்யப்பட்ட இந்நிலமானது மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சக வழிகாட்டுதல்படி காடு வளர்ப்பிற்கு உகந்ததல்ல. எனவே, தகுந்த மாற்று ஈடு செய்யும் நிலத்தினைக் கண்டறியுமாறு, சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தின் வனப் பாதுகாவலர் மற்றும் கள இயக்குநரால் அவரது கடித எண் 8455/2001/வ, நாள் 13-6-2022-ல் திருக்கோயில் நிருவாகத்தினருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை, இதுதொடர்பாக மாற்று நிலம் தெரிவிக்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

முற்பகல் 11-50

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விவர அறிக்கையை நான் படித்துப் பார்த்தேன். விவர அறிக்கையில் 13-1-1992-ல் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்தபோது அதற்காக 20 ஏக்கர் நிலத்தை வனத் துறையின் சார்பாக வழங்க வருவாய்த் துறை மூலமாக அதற்கு 40 ஏக்கர் நிலங்களை வழங்கி, பெறப்பட்டிருக்கிறது. அதுபோல்தான் மூன்றாண்டு காலத்திற்கு முன்பு மாண்புமிகு எடப்பாடியார் அவர்களுடைய தலைமையில் இருந்த அரசின் சார்பாக அங்கே 50 ஏக்கர் நிலங்களை வழங்கி, 25 ஏக்கர் நிலங்கள் வனத் துறையின் சார்பாக வழங்க வேண்டுமென்று அன்றிலிருந்து இன்றுவரையிலும் அந்தக் கோப்புகள் நகர்ந்துகொண்டே இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, அந்தக் கோயிலுக்கு இலட்சக்கணக்கான பக்தர்கள் வாகனத்தில் வருகின்றபோது, ஏறத்தாழ 5 கிலோ மீட்டர் தூரத்திற்கு முன்பே அவர்களை இறக்கிவிடுகிறார்கள். அவர்கள் அங்கிருந்து நடந்தே அந்த ஆலயத்திற்கு வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இதை மனதிலே கொண்டு, இந்த அரசு, மிக விரைவாக வனத் துறையும்,*

[திரு. கே.ஏ. செங்கோட்டையன்] [2023 ஏப்ரல் 11

வருவாய்த் துறையும் இணைந்து வேறு இடத்தை,—இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் இடம் வனத் துறைக்குச் சரியானது இல்லையென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுகுறித்து நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமும், வனத் துறை அதிகாரியிடமும் பேசியிருக்கிறேன். விரைவில், இருவரும் ஒருங்கிணைந்து 50 ஏக்கர் நிலங்களை வனத் துறைக்கு வருவாய்த் துறையின் மூலமாக வழங்கி, வனத் துறை அதை ஏற்று, மிக விரைவிலேயே அந்த ஆலயத்திற்கு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் முதற்கண் வணங்குகிறேன்.

அருள்மிகு ஸ்ரீபண்ணாரி அம்மன் திருக்கோயில் ஈரோடு மாவட்டம், குத்தியாலத்தூர் காப்புக்காட்டில் அமைந்துள்ளது. இப்பகுதி சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் வெளி மண்டலத்தில், அதாவது, Buffer zone-ல் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் தமிழ் மாதமான பங்குனி மாதத்தில் குண்டம் திருவிழா நடைபெற்று வருகிறது. இத்திருவிழாவில், தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்களிலிருந்து பெருவாரியான பக்தர்கள் வருகைபுரிகின்றார்கள். இத்திருவிழாவிற்கு வருகைதரும் பக்தர்களுக்கு அறநிலையத் துறையின் சார்பாக போதிய வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்திருக்கோயிலுக்கு ஏற்கெனவே 20 ஏக்கர், 8.093 ஹெக்டேர் வன நிலம் அரசாணை எண் 12, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை நாள் 13-1-1992-ன்படி, காப்புக்காட்டிலிருந்து நீக்கம் செய்து வழங்கப்பட்டுள்ளது. அதாவது, Reserve forest-லிருந்து de-reserve செய்யப்பட்டுள்ளது. அருள்மிகு ஸ்ரீபண்ணாரி அம்மன் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு கூடுதல் வசதிகள் செய்து கொடுப்பதற்காக, வனத் துறைக்குச் சொந்தமான நிலத்தினை நிலம் மாற்றம் செய்வது தொடர்பாக, கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலும் கடிதப் பரிமாற்றங்கள் கோயில் நிர்வாகம், வருவாய்த் துறை மற்றும் வனத் துறை ஆகிய துறைகளுக்கிடையே நடைபெற்றுள்ளன. இதன் தொடர்ச்சியாக,

2023 ஏப்ரல் 11] [டாக்டர் மா. மதிவேந்தன்]

கடந்த 2021 ஆம் ஆண்டு வனத் துறையின் 10 ஹெக்டேர் நிலத்திற்கு ஈடாக இரண்டு மடங்கு மாற்று நிலம் குத்தியாலத்தூர் கிராமத்தில் புல எண் 2095-ல் கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி அந்த நிலம் கரடு புறம்போக்கு நிலம். அதுமட்டுமல்லாமல் அந்த நிலம் சரிவான, செங்குத்தான பகுதிகள் உடையது. மேற்படி அந்த நிலத்தை ஆக்கிரமிப்பு செய்த சில மக்கள் அங்கு வந்து போராட்டம் செய்திருக்கிறார்கள். அந்த நிலத்தினை வனத் துறைக்கு மாற்றம் செய்வதற்கு கடும் ஆட்சேபணை செய்து வருகின்றார்கள். முக்கியமாக, மரங்கள் வளர்ப்பதற்கு அந்த நிலம் உகந்ததல்ல. ஏனென்றால், அந்த நிலத்தில் மரம் வளர்க்க முடியாது. ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சக வழிகாட்டுதலின்படி, அந்த நிலம் உகந்ததல்ல என்று சான்றளிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்த நிலத்திற்கு மாற்றாக வேறு நிலம் காட்ட வேண்டுமென்பதற்காக, ஏற்கெனவே ஒரு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. இதுவரை இது தொடர்பாக மாற்று நிலம் தெரிவிக்கப்படவில்லை.

இப்போது, roads*-ஐப் பற்றி வனத் துறையில் சொல்ல வேண்டுமென்றால்—வனச் சாலைகள் அமைப்பது தொடர்பாக,* The Forest Conservation Act, *1980-ன்படி, நிறைய* rules and regulations *மற்றும் நிறைய* guidelines *இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே வனத் துறை அமைச்சராக இருந்தவர். இந்த* Forest Department*-ல் என்னென்ன விதிமுறைகள் இருக்கின்றன, என்னென்ன நெறிமுறைகள் இருக்கின்றன, என்னென்ன சட்டங்கள் இருக்கின்றன என்பது குறித்து அவருக்கு ஏற்கெனவே நன்றாகத் தெரியும். தமிழ்நாடு வனச் சட்டம், 1982-ன்படி, காப்புக்காடுகள் அறிவிக்கை செய்யப்படுகின்றன. இந்தக் காடுகள் அறிவிக்கை செய்யப்படும்போது அப்பகுதியிலுள்ள குடியிருப்புகள், கோயில்கள், வழிப்பாதைகள் போன்றவை பற்றிய குறிப்புகள் இடம்பெறும். மேலும், மேற்கண்ட வழிப்பாதைகளின் நீளம், அகலங்களைக் குறிப்பிட்டு பொதுமக்கள் அந்தக் கோயிலுக்குச் சென்று வருவதற்காக,* right of way *என்ற அனுமதி வழங்கப்படும். இந்த அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வனச் சாலைகள் அதனுடைய தன்மை மாறாமல் அதாவது, மண் சாலையாக இருந்தாலும் சரி, தார்ச் சாலையாக இருந்தாலும் சரி அதைப் பராமரிக்க வனத் துறைக்கு அனுமதியுண்டு. மேலும், அதை விரிவுபடுத்தவோ அல்லது அதனுடைய தன்மையை மாற்றவோ வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி, அதற்கு* rules *இருக்கின்றன.*

அந்த user agency, Village Panchayats ஆக இருக்கலாம், HR&CE Department ஆக இருக்கலாம், BDO ஆக இருக்கலாம். அந்த user agency PARIVESH portal-ல் apply செய்ய வேண்டும். அந்த PARIVESH portal-ல் apply செய்ததற்குப் பின்னர் Stage-1, Stage-2 என்று இருக்கிறது. அந்த stage 1, stage 2 portal-ஐப் பொறுத்துதான் அந்தக் கோப்பு அடுத்தடுத்து நகரும். அதுமட்டுமல்லாமல், அந்த நிலம் 5 எக்டேருக்குள் இருந்தால் அதற்கு ஒரு rule இருக்கிறது. 5 எக்டேருக்கு மேலே இருந்தால் வேறு சில rules இருக்கின்றன. அந்த விதிகளை நாம் பின்பற்றித்தான் சாலை அமைப்பதற்கு வனத் துறையின்மூலம் அனுமதி கொடுக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் கேட்ட சாலையைப் பொறுத்தவரைக்கும், இந்த நிலம் உகந்தது இல்லையென்று அறியப்படுகிறது. வேறு நிலத்தைக் காட்டுவதற்கு அவர்கள் முன்வந்தார்களேயானால், நிச்சயமாக அந்த நிலத்திற்கும், விதிகளைப் பின்பற்றி apply செய்தால், அதற்கு நாம் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்யலாம்.

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள். (குறுக்கீடு)

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: ஒரே ஒரு நிமிடம். கோயில் பற்றிய கேள்வி. அந்தக் கோயிலுக்கு பக்தர்கள் நிறைய பேர் வருகின்றார்கள் தலைவா. நீங்களும்தான் பக்தர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். இதே 13-1-1992-ல்கூட 20 ஏக்கர் நிலத்தை வழங்கினார்கள். அப்படி வழங்குகின்றபோது, 5 ஏக்கர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்கள். இப்போது மாற்று இடம் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். வனத் துறை அதைச் சரிபார்த்து, உடனடியாக அதைப் பெற்று வருவாய்த் துறை மூலமாக ஆலயத்திற்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். அவர்களின் கேள்வியை உள்வாங்கிவிட்டு அதற்கான பதிலை மட்டும் சொல்லுங்கள்.

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்குத் தீர்வு செய்ய, வனத் துறை அதிகாரிகளோடு, அந்த இடத்தை மறுபடியும்* joint inspection *செய்ய வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் கேட்டது அந்தக் கோயிலுக்குள்ள இடத்திற்கு மாற்று இடம் தந்திருக்கிறார்கள். அது சரியில்லை என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *கோயில் நிலமாக இருந்தாலும் சரி, ஆண்டவரே அவதாரம் எடுத்து வந்தாலும் சரி,* forest land*–ஐ அவ்வளவு சுலபமாக வாங்க முடியாது. உங்களுக்கு என்ன சார், பண்ணாரியம்மன் கோயிலுக்கு எதிரில் நிறைய இடம் இருக்கிறது. நீங்கள் பயன்படுத்துங்களேன். யார் கேட்கிறார்கள்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் ஒரு நிமிடம். பண்ணாரியம்மன் கோயிலுக்குப் போய்விட்டு வருவதற்கு எந்தவிதமான தடையும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டீர்கள். இடம் மாறுதலுக்கு இன்னும்* accept *செய்யவில்லை. அது இன்னும் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்கிறீர்கள். அதுதானே?*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *இல்லை. அவர்கள் எந்த இடம் கொடுத்தாலும், அந்த இடம்* eligible *ஆக இருக்க வேண்டும். அந்த இடம்* eligible *ஆக இருக்க வேண்டுமென்றால், அந்த இடம் மரம் நடுவதற்கு உகந்ததாக இருக்க வேண்டும். அந்த இடம் மரம் நடுவதற்கு உகந்ததாக இல்லை. ஒருவேளை* rocky terrain*–ஆக இருக்கிறது. கரடு பகுதிகளாக இருக்கிறது, செங்குத்தான பகுதிகளாக இருக்கிறது என்றால் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீண்டும் அதை பரிசீலனை செய்து, ஆய்வு செய்து பாருங்கள்.*

மாண்புமிகு டாக்டர் மா. மதிவேந்தன்: *வேறு நல்ல இடம் கொடுக்க வேண்டும். அப்படி அவர்கள் கொடுத்தார்களேயானால் ஆய்வு செய்யலாம்.*

[2023 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, ஆய்வு செய்யுங்கள். 2023–2024 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ***

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **

மாண்புமிகு திரு. துரைமுருகன்: **

நண்பகல் 12–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **

மாண்புமிகு திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **

மாண்புமிகு திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **

மாண்புமிகு திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **

மாண்புமிகு திரு. துரைமுருகன்: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், நேற்று நடந்த சம்பவத்தைப் பற்றி, கவர்னர்* related *ஆக, நீங்கள் பேசியவற்றையும், நான் பேசியவற்றையும் அனைத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது*

6. மானியக் கோரிக்கைகள், 2023–2024, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

(அ) கோரிக்கை எண் 49 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

(ஆ) கோரிக்கை எண் 53 – சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

(இ) கோரிக்கை எண் 17 – கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

(அ) கோரிக்கை எண் 49 – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

***மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 177, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன்.*

திரு. தி. ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 271, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.*

திரு. JMH. அசன் மௌலானா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 347, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.*

திரு. R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1751, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 3002, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

2023 ஏப்ரல் 11]

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3410, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3518, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4878, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ்.

திரு. ஆர். கணேஷ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6790, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 392, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2578, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2941, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6442, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7051, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 677, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.*

திரு. அ. பண்ணாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 925, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.*

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 1399, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2399, மாண்புமிகு உறுப்பினர் திரு.* T.K. *அமுல் கந்தசாமி.*

2023 ஏப்ரல் 11]

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2673, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3281, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3328, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3374, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3558, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3676, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4245, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4583, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6009, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ்.

திரு. இ.மா. மான்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7403, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2354, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி.

டாக்டர் சி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3232, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3462, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4529, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 972, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன்.

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, கிள்ளை பேரூராட்சிப் பகுதியில் நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1038, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரி தொகுதியில் அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய உள்விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1289, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதி, பல்லடம் நகராட்சியில் ஓர் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1781, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புறத்திலுள்ள திறமையான விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1861, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் கபடி போட்டியைச் சிறப்பாக நடத்துவதற்கு ஏதுவாக உள் விளையாட்டு அரங்கத்துடன்கூடிய மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1903, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.C. கருப்பணன்.

திரு. K.C. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புற மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விளையாட்டு உபகரணங்களை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2809, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்.

முனைவர் பொள்ளாச்சி V. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம், புளியம்பட்டி ஊராட்சி, ஓம் சக்தி நகரில் புதிய விளையாட்டுத் திடல் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3422, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி.

திரு. எம்.ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகர்கோவிலில் உள்ள விளையாட்டு அரங்கில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3483, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொகுதிக்கு ஒரு விளையாட்டு மைதானம் துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3739, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார்.

திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்கு மாநகராட்சிப் பகுதிகளில் இளைஞர் நலனைப் பேணிப் பாதுகாக்கின்ற வகையில் விளையாட்டுத் திடல் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3803, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொகுதிக்கு ஒரு விளையாட்டு மைதானம் என்ற

அடிப்படையில் கீழ்வேளூர் தொகுதியில் விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3947, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கந்தர்வகோட்டை தொகுதியில் விளையாட்டு மைதானம் (ஸ்டேடியம்) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4012, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.

***திரு. பெரி. செந்தில்நாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை தொகுதி, சிவகங்கை நகரில் மாவட்ட உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4101, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. அசோக்குமார்.

திரு. கி. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்டம்தோறும் விளையாட்டு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கான உணவில், இறைச்சியை அதிகரித்து வழங்க கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4190, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதி, மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம், தேவிகாபுரம் ஊராட்சியில் ஒரு நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4296, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4941, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரூர் மாவட்ட விளையாட்டு அரங்கில் நீச்சல் குளம், உள் விளையாட்டரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4985, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலக்கோடு, காரிமங்கலம் பகுதிகளில் புதியதாக விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5031, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தொகுதிக்குட்பட்ட கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி தேசிய நெடுஞ்சாலையில் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5070, மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி.

திரு. S.S. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிழக்குக் கடற்கரை சாலை–கோவளம் முதல் மாமல்லபுரம் வரையுள்ள கடற்கரைப் பகுதியில் சாகச விளையாட்டுகள் (Adventure Sports) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5490, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டி தொகுதியில் நவீன வசதியுடன் கூடிய புதிய விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5535, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் தங்கும் விடுதியுடன்கூடிய விளையாட்டு அரங்கம் (Stadium) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5833, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இளைஞர்களின் விளையாட்டுத் திறமையை ஊக்குவிக்க நற்பணி மன்றங்கள்மூலம் பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5913, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் தொகுதியில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க்

கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5975, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், மேலூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6022, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ஜெயசீலன்.

திரு. பொன். ஜெயசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூடலூர் தொகுதியில் ஒரு மினி ஸ்டேடியம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6509, மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி.

திரு. சா. மாங்குடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காரைக்குடி தொகுதி, தேவகோட்டையில் ஒருங்கிணைந்த விளையாட்டு மைதானம் மற்றும் அரங்கம் அமைக்க வேண்டியதன்

2023 ஏப்ரல் 11] [*திரு. சா. மாங்குடி*]

அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6860, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம், காரமடை நகராட்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அருகில் உள் விளையாட்டு அரங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7455, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.*

திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதியில் நீச்சல் குளம் அமைத்து பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7485, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி.*

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள நேரு விளையாட்டு அரங்கத்தைப் புனரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7515, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர்.

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விராலிமலை தொகுதி, இலுப்பூரில் புதிய நவீன விளையாட்டு மைதானம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(ஆ) கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 194, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன்.

திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 243, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 298, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 351, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1752, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3413, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3521, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4890, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

2023 ஏப்ரல் 11] [பேரவைத் தலைவர்]

வெட்டுத் தீர்மானம் எண் 393, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2595, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2947, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6466, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7068, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 676, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 924, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1398, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1802, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2402, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2677, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3286, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3332, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3378, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3562, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.*

திரு. செ. கிருஷ்ணமுரளி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3680, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.*

முனைவர் இசக்கி சுப்பையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4248, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.*

திரு. மு. சக்ரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 4588, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.*

திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5980, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6011, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ்.

திரு. இ.மா. மான்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7414, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 2358, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி.*

டாக்டர் சி. சரஸ்வதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 3236, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.*

வெட்டுத் தீர்மானம் எண் 3466, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4534, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 5994, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.*

திரு. K. மாரிமுத்து: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1040, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3807, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, இருக்கையில் இல்லை.

பிற்பகல் 12-05

வெட்டுத் தீர்மானம் எண் 3956, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை.

திரு. மா. சின்னதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உங்கள் தொகுதியில் முதல்வர்" திட்டத்தின்கீழ் பெறப்பட்ட அனைத்து மனுக்களுக்கும் தீர்வுகாண வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4213, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறப்புத் திட்டங்களின்கீழ் மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2023 ஏப்ரல் 11] [திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்]

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4988, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடிக்கணினி (லேப்டாப்) மாணவ/மாணவியர்களுக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5035, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை நகரில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைமூலம் மத்திய ஆராய்ச்சி பல்கலைக்கழகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5117, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நகர்ப்புறம் மற்றும் ஊரகப் பகுதிகளில் சிறப்புத் திட்ட செயலாக்கத் திட்டங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6147, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.*

திரு. துரை. சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பழங்குடி மற்றும் மலைவாழ் மக்களுக்கு அளிக்கப்படுகின்ற இலவச திட்டங்களைக் கண்காணிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6594, மாண்புமிகு உறுப்பினர் திரு.* S. *ராஜகுமார்.*

திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதியில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 6605, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.*

திரு. பி. அய்யப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7155, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் மகளிருக்கு வழங்கப்படும் இலவசப் பேருந்து பயணத்தை ஆண்களுக்கும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7487, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மக்களுக்கு விலையில்லா மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.25,00,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

(இ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை), மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ஆர். காந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.5,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. ராமச்சந்திரன்.

திரு. தி. ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 218, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ.மு. முனிரத்தினம்.

திரு. ஆ.மு. முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 280, மாண்புமிகு உறுப்பினர் திரு. JMH. அசன் மௌலானா.

திரு. JMH. அசன் மௌலானா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 315, மாண்புமிகு உறுப்பினர் திரு. R. ராதாகிருஷ்ணன்.

திரு. R. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1753, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரூபி ஆர். மனோகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3390, மாண்புமிகு உறுப்பினர் திருமதி S. விஜயதரணி.

திருமதி S. விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3498, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. பழனி நாடார்.

திரு. S. பழனி நாடார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4776, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். கணேஷ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 394, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2468, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. சிவகுமார்.

திரு. ச. சிவகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக்

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2891, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சதாசிவம்.

திரு. S. சதாசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6277, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6966, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்.

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 675, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பண்ணாரி.

திரு. அ. பண்ணாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 923, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. பாலசுப்ரமணியன்.

திரு. ஈ. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1397, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1784, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார்.

திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2370, மாண்புமிகு உறுப்பினர் திரு. T.K. அமுல் கந்தசாமி.

திரு. T.K. அமுல் கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2650, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.எஸ். மணியன்.

திரு. ஓ.எஸ். மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3255, மாண்புமிகு உறுப்பினர் திரு. P.R.G. அருண்குமார்.

திரு. P.R.G. அருண்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3304, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம்.

திரு. கே.ஆர். ஜெயராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3350, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் K. அர்ச்சுணன்.

திரு. அம்மன் K. அர்ச்சுணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2023 ஏப்ரல் 11] [திரு. அம்மன் K. அர்ச்சுணன்]

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3538, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. கிருஷ்ணமுரளி.

திரு. செ. கிருஷ்ணமுரளி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3652, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் இசக்கி சுப்பையா.

முனைவர் இசக்கி சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4225, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. சக்ரபாணி.

திரு. மு. சக்ரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4556, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன்.

திரு. செ. சுந்தரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5944, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5992, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.மா. மான்ராஜ்.

2023 ஏப்ரல் 11]

திரு. இ.மா. மான்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 2284, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி.

டாக்டர் சி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3202, மாண்புமிகு உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3416, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். காந்தி.

திரு. எம்.ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3440, மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4479, மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன்.

திரு. ட்டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5461, மாண்புமிகு உறுப்பினர் திரு. K. மாரிமுத்து.

திரு. K. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 973, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.A. பாண்டியன்.

திரு. K.A. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் நகரில் செயல்பட்டு வரும் கோ–ஆப்டெக்ஸ் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1041, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. அருண்மொழிதேவன்.

திரு. ஆ. அருண்மொழிதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சியில் உள்ள பருத்திப்பட்டு கைத்தறி நெசவாளர்கள் சங்கத்தை நவீனமயமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1290, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்.

திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி கூலி நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1602, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.

திரு. செ. தாமோதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசு வழங்கும் இலவச வேட்டி, சேலை திட்டத்திற்கு கைத்தறிமூலம் நெசவு செய்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 1832, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மகேந்திரன்.

திரு. சி. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மடத்துக்குளம் தொகுதிக்குட்பட்ட பாப்பான்குளம், ஜோத்தம்பட்டி, மலையாண்டிபட்டினம், குரல்குட்டை, வாளவாடி ஆகிய பகுதிகளில் நூற்பாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3472, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கோவிந்தசாமி.

திரு. ஆ. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இலவச வேட்டி, சேலைகளை பொங்கல் திருநாளுக்கு முன்கூட்டியே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக்

கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3703, மாண்புமிகு உறுப்பினர் திரு. K.N. விஜயகுமார்.

திரு. K.N. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்பூர் வடக்குப் பகுதி கைத்தறி நெசவாளர்களுக்கு பட்டு நூலை மானிய விலையில் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 3772, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4144, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேவூர் S. இராமச்சந்திரன்.

திரு. சேவூர் S. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதியில் பட்டு கைத்தறி பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4920, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. சம்பத்குமார்.

திரு. வே. சம்பத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விலையில்லா வேட்டி, சேலையைத் தரமுள்ளதாக உற்பத்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 4964, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன்.

திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொங்கல் பண்டிகைக் காலங்களில் வேட்டி, சேலைகள் முறையாக வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5006, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ஜெயக்குமார்.

திரு. S. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறை, சிப்காட் பகுதியில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5090, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன்.

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சிவகங்கை தொகுதிக்குட்பட்ட காளீஸ்வரா மில்லின் (NTC மில்) அனைத்து அலகுகளையும் இயக்க வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5512, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “இலவச வேட்டி, சேலையினை கைத்தறி நெசவாளர்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து” விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5661, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ்.

TRUTH ALONE TRIUMPHS

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், கப்பியறை பேரூராட்சி, கஞ்சிக்குழி நேசமணி கூட்டுறவு கைத்தறி ஆலைக் கூடம் செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 5883, மாண்புமிகு உறுப்பினர் திருமதி கு. மரகதம் குமரவேல்.

திருமதி கு. மரகதம் குமரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகம் நகராட்சியில் கைத்தறி ஆடைகள் விற்பனையகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6110, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகர்.

திரு. துரை. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, ஆரணி பேரூராட்சியில் நெசவாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

2023 ஏப்ரல் 11] [*திரு. துரை. சந்திரசேகர்*]

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6483, மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. மாங்குடி.

திரு. சா. மாங்குடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காரைக்குடி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதி நெசவாளர்களுக்கு கைத்தறி வளாகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6554, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. அய்யப்பன்.

திரு. பி. அய்யப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கூட்டுறவு கைத்தறி நூற்பாலை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 6831, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ்.

திரு. A.K. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, சிறுமுகை பகுதியில் கைத்தறிப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7096, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கைத்தறி நெசவாளர்களுக்கு பசுமை வீடுகள் திட்டம் நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் எண் 7253, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

திரு. அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "போளூர் தொகுதியில் புதிய கைத்தறிப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7434, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார்.*

திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறை தொகுதியில் பஞ்சாலை இயங்கி வந்த அதே இடத்தில் புதிய ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வெட்டுத் தீர்மானம் எண் 7500, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டத்தில் தாலுகா அளவிலான கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை ஆகியன பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் அச்சடிக்கப்பட்டு*

மாமன்ற உறுப்பினர்களுக்கு, படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளன. கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கங்களை அளிக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு,அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளது. மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பப்பட்டுள்ளது. கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேசைகளிலுள்ள சிறு கணினியிலும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பை @@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கங்களை அளிக்கின்றேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். இன்று மூன்று மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு வைக்கப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் மூன்று

@ 307 முதல் 540 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளன.

@@ 541 முதல் 653 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மானியக் கோரிக்கைகள்மீதும் சேர்த்தே பேசலாம். இன்று 9 மாமன்ற உறுப்பினர்கள் பேசவிருக்கின்றீர்கள். தயவுசெய்து எல்லோரும் குறித்த நேரத்தில் பேச வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். முதலில் பேச வருகின்றவர்களுக்கு 15 நிமிடங்களும், அடுத்து பேச வருகின்ற 8 நபர்களுக்கும் தலா 7 நிமிடங்களும் வழங்கப்படுகின்றன. இந்த மூன்று மானியக் கோரிக்கைகள் மீதும் குறித்த நேரத்தில் பேசி நிறைவு செய்து தர வேண்டுமென்று அன்போடு கேட்டு, மாண்புமிகு திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்களை அழைக்கிறேன்.

பிற்பகல் 12–10

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மனிதநேயம், நாட்டுப்பற்று, தமிழர் நலன், உழைப்பில் உயர்வு, தன்னம்பிக்கை, மனிதவளம் போன்ற மந்திரச் சொற்களை மனதில்கொண்டு, திரைப்படத் துறையில் வெற்றி, அரசியலில் வெற்றி, தனிவாழ்வில் வெற்றி, பொதுவாழ்வில் வெற்றி என்று வெற்றிமீது வெற்றி பெற்ற ஒரே தலைவர், ஒப்பற்ற தலைவர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு எனது வணக்கம். இலக்கியத்தில், இதிகாசத்தில், விளையாட்டில், கல்வியில், கலையில், மருத்துவத்தில், ஈகையில், பெண்கள் அவரவர் பங்கிற்கு ஆயிரமாயிரம் சாதனைகள் செய்கிறார்கள். ஆனால், சாதனைகளின் வடிவமாக, சரித்திரத்தின் உருவமாக, ஒருவர் உண்டு என்றால், அவர்தான் அம்மா. இந்தியர்களின் இமயமாக, தமிழர்களின் இமயமாகத் திகழ்ந்த சரித்திரத் தாய். புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது வணக்கம். போற்றுதலுக்குரிய எங்களுடைய தலைவர், கழகத்தின் பொதுச் செயலாளர், கழகத்தைக் கட்டிக் காத்து, ஊணின்றி, உறக்கமின்றி, தேர்தல் களத்தில் பகல், இரவு பாராது பணியாற்றி, மலைபோல் துன்பம் வந்தாலும், பனிபோல் விலக்கி, அன்போடும், பண்போடும், அறத்தோடும், தரத்தோடும், வலிமையோடும், இனிமையோடும், இன்று எங்களை வழிநடத்தும், சட்டப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர், முன்னாள் முதலமைச்சர், அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சிலர் வரலாற்றில் இடம் பிடிப்பதுண்டு. சிலர் வரலாற்றில் முத்திரை பதிப்பதுண்டு. ஒரே ஆண்டில், 11 மருத்துவக் கல்லூரிகளை தமிழகத்திற்குக் கொண்டுவந்ததோடு மட்டுமல்ல, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டை அளித்து, தன்னுடைய சீரிய சிந்தனையில் தோன்றிய

[திரு. வி.வி. ராஜன் செல்லப்பா] [2023 ஏப்ரல் 11

திட்டத்தைச் சட்டமாக்கிக் கொடுத்து, இன்றைக்கு மிகச்சிறப்பான வகையில் வரலாற்றில் முத்திரை பதித்த, வரலாற்று நாயகன், குடிமராமத்து நாயகன், வேளாண்மை பாதுகாப்பு மண்டலத்தைக் கொடுத்த இனிய அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல, அரசுப் பணியில் விளையாட்டு வீரர்களுக்கு 3 விழுக்காட்டை உயர்த்தி ஒதுக்கீடு செய்து, விளையாட்டு வீரர்களுக்கென்று அற்புதமான திட்டத்தை, சட்டமாக்கி நல்வாய்ப்பைக் கொடுத்த அருமை அண்ணன் எடப்பாடியாருக்கு மீண்டும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இன்றைக்கு மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திலே, கலந்துகொள்கிற வாய்ப்பு கிடைத்திருக்கிறது. குறிப்பாக, ஈரோட்டு தந்தை கொடுத்த, நெசவாளர்களுக்கென்று பயனற்ற நிலை மாறி, நெசவாளர்களுடைய துயர் நீக்கிட, அன்றைக்கு ஈரோடு பட்டு தந்த கட்டித் தங்கம் பேரறிஞர் அண்ணா அவர்கள் தன்னுடைய தோளிலே கைத்தறித் துண்டை ஏந்தி, அன்றைக்கு சாலையில் விற்பனை செய்து, நெசவாளர்களுடைய துயரைப் போக்குவதற்குப் பாடுபட்ட, அந்த கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் மீதும், அதோடு மட்டுமல்ல, போற்றுதலுக்குரிய தலைப்பாகை கவிஞர், ‘ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா’ என்று அந்த விளையாட்டுக்குக் கொடுத்த முக்கியத்துவம் வாய்ந்த விளையாட்டுத் துறையின் மீதும், ‘எனக்கொரு 100 இளைஞர்களைக் கொடுங்கள், இந்த நாட்டை, சமுதாயத்தை மாற்றிக் காண்பிக்கிறேன்’ என்று போற்றுதலுக்குரிய விவேகானந்தர் கூறிய கருத்துக்கிணங்க, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை என்கிறபோது எல்லோருக்கும் நினைவுக்கு வருவது விலையில்லா மடிக்கணினி, விலையில்லா மிக்சி, விலையில்லா கிரைண்டர், விலையில்லா மின்விசிறி, மாணவர்களுக்கான 14 வகையான திட்டங்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிய சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையில் தாலிக்குத் தங்கம் திட்டம், உழைக்கும் மகளிருக்கு ஸ்கூட்டர் வழங்கும் திட்டம் என்று பல்வேறு திட்டங்களைத் தந்து சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைக்கு மேலும் சிறப்பு சேர்த்து அந்தத் துறையின் மானியக் கோரிக்கையில், பெருமையளிக்கும் வகையில், பேசுவதற்கான இந்தத் நல்வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. குறிப்பாக, இந்த திட்டங்களையெல்லாம், குறித்து உரையாற்றுவதற்கு முன்னால்

நான் சார்ந்திருக்கிற திருப்பரங்குன்றம் தொகுதிக்கான சில செய்திகளைச் சொல்லியாக வேண்டும். குறிப்பாக, மதுரையிலே, திருப்பரங்குன்றத்தில் உள்ள விமான நிலையப் பகுதி, அங்கிருக்கிற எய்ம்ஸ் மருத்துவமனை அமைந்திருக்கிற பகுதி, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் அமைந்திருக்கிற பகுதி, வடபழஞ்சியில் I.T. Park அமைந்திருக்கிற பகுதி, இந்தப் பகுதிகளையெல்லாம் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, மதுரை மாநகராட்சியோடு இணைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்தது, அம்ரூத் திட்டத்தின்கீழ், பாதாளச் சாக்கடைத் திட்டத்தை விரைவுபடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். Hockey வீரர்கள் அதிகமாக இருக்கக்கூடிய திருநகர் பகுதியிலே ஒரு synthetic Hockey Ground வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வாசனை திரவியத் தொழிற்சாலை ஒன்று அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசு கைத்தறிக்கூடம் அமைத்திட வேண்டுமென்ற மக்களின் வேண்டுகோளை நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் தொகுதி மக்களின் கோரிக்கை என்று சொல்கிறபோது, எனக்கு வாக்களித்து, குறிப்பாக புரட்சித் தலைவி அம்மா அவர்களால், நாடாளுமன்ற மேலவை உறுப்பினராக உருவாக்கப்பட்டு, விரிவாக்கப்பட்ட மதுரை மாநகராட்சியின் மேயராகக்கூடிய நல்ல வாய்ப்பைக் கொடுத்து, தொடர்ந்து மதுரை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததோடுமட்டுமல்லாமல் அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களின் பிரச்சாரத்தின் மூலமும், என்மீது அன்பும், பாசமும் கொண்ட திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதி மக்கள், நான் உறுப்பினராக உருவாவதற்கு காரணமாக இருந்ததினால், அந்தப் பகுதி மக்களுக்கான திட்டங்களை விரைவுபடுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு இவைகளையெல்லாம் சொல்ல இன்று எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

பிற்பகல் 12–15

இன்றைக்கு மதுரையைச் சுற்றி இரண்டு செய்திகள் ஊடகங்களில் வந்து கொண்டிருக்கின்றன. ஊடகச் செய்திகள், ஒன்று metro rail திட்டம், மற்றொன்று TIDEL park பற்றிய செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அந்த metro rail திட்டத்தை அனைவரும் வரவேற்கின்றோம்.

மதுரை மாநகர் ஒரு பண்பட்ட நகர்; கலாச்சார நகர், குறிப்பாக கோயில் நகர். திட்ட அறிக்கைகளைப் பார்க்கிறோம். மதுரையில் இருக்கிற சித்திரை வீதியும், மாசி வீதியும், வெளி வீதியும், மூல வீதியும் ஒரு வடிவமைக்கப்பட்ட, பண்டைய நகரத்திற்கு ஓர் உதாரணமாகத் திகழ்கிறது. அந்தப் பண்பட்ட நகரில் நீங்கள் போடுகின்ற திட்டம், வரைவு அறிக்கைகள், புண்பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான் மாண்புமிகு அமைச்சர்களிடம் வேண்டுகோளை விடுக்கிறேன். அதற்கேற்ற வகையில் திட்ட அறிக்கையைச் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை விடுக்கிறேன். குறிப்பாக, அங்கு metro rail வேண்டுமென்றாலும்கூட பல்வேறு கருத்து மாற்றம் ஏற்பட்டு, அதன்மூலம் தடைப்பட்டு விடக்கூடாது என்கின்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் கூறுகிறேன். அந்தத் திட்ட அறிக்கையைச் செயலாக்க வேண்டும்.

அதேபோன்று TIDEL park-ற்கு ஒதுக்கியிருக்கும் இடம், ஏற்கெனவே நிரந்தர காய்கறி மார்க்கெட் அமைப்பதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட இடம் என்கிற செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அதற்கேற்ற வகையில் அந்த இடத்தை அறுதி செய்து, உறுதி செய்ய வேண்டுமென்ற வேண்டுகோளை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் வைக்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், இந்தத் துறைகளைப் பற்றி பேசுகின்ற வாய்ப்பு கிடைக்கின்றபோது, எல்லாத் துறைகளையும் கலந்து பேசுகிற வாய்ப்பாக இருந்தாலும், நேரம் கருதி ஒரு சிலவற்றை மட்டும் நான் சொல்ல விரும்புகிறேன். முதலில் இரண்டு நட்சத்திர கேள்விகள் என்பார்களே, அதைப்போன்று ஒரு செய்தியை கைத்தறித் துறைக்கும் மற்றும் விளையாட்டுத் துறைக்கும் சொல்லிவிட்டு, தொடர்ந்து கொள்கை விளக்கக் குறிப்பில் பேச எனக்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, 2023 பொங்கல் திருநாளுக்கு பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி-சேலை வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டதற்கான காரணத்தை தயவுசெய்து நான் அறிய விரும்புகிறேன். பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் தை பொங்கலுக்கு விலையில்லா வேட்டி-சேலை வழங்கப்படும் என்ற திட்டத்தை அறிவித்து,

2023 ஏப்ரல் 11] [திரு. வி.வி. ராஜன் செல்லப்பா]

அதன்படி பொங்கலுக்கு பயனாளிகளுக்கு விலையில்லா வேட்டி-சேலை வழங்கப்பட்டு வந்தது. இதற்காக ஒவ்வோர் ஆண்டும் முன்கூட்டியே, அதாவது பொங்கலுக்கு முந்தைய ஆண்டு, ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் தமிழ்நாட்டில் உள்ள நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் தரமான நூல் வழங்கப்பட்டு, தேவைப்படும் வேட்டி-சேலை நெய்வதற்கான order வழங்கப்படும். நெய்த வேட்டி-சேலைகள் தை மாதத்திற்கு முன்பாகவே, பயனாளிகளுக்கு வழங்கப்படும். இந்த ஆண்டு விலையில்லா வேட்டி-சேலைகள் நெய்வதற்குத் தேவையான தரமான நூல் நெசவாளர்களுக்கு வழங்கப்படவில்லையென்றும், இதனால் உற்பத்தி சதவிகிதம் குறைவாக இருந்ததால், குறித்த காலத்தில், அதாவது 2023 ஆம் ஆண்டு தை மாதத்திற்குள் விலையில்லா வேட்டி-சேலைகள் வழங்குவதில் தாமதம் ஏற்படும் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரில் இப்பிரச்சினையை எழுப்பினார். அப்போது அதற்குப் பதிலளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்திற்குள் அனைவருக்கும் விலையில்லா வேட்டி-சேலைகள் வழங்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், இன்று வரை, ஏப்ரல் 2023 வரை பயனாளிகளுக்கு முழுமையாக விலையில்லா வேட்டி-சேலைகள் வழங்கப்படவில்லை என பொது மக்கள் வருத்தத்துடன் தெரிவிக்கிறார்கள். இவ்வளவு விலையில்லா வேட்டி-சேலைகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை. மாண்புமிகு அமைச்சர், ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடு) கேட்காமல் நான் அவருக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை. முதலில் கையைத் தூக்கியபோது உட்காருங்கள் என்று சொன்னேன். பிறகு பேசிக்கொள்ளலாம் என்று சொன்னேன். மக்களுக்குத் தரவில்லை என்ற குற்றச்சாட்டை சொல்லியாகிவிட்டது. அதற்குப் பிறகு, கைதூக்கிய பிறகு பதில் சொல்ல வேண்டும் என்றார். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) அவர் சொல்லட்டும். நானாக அவரைப் பேச அழைப்பதாக நீங்கள் சொல்வது தவறு. LOP பக்கத்தில்தான் இருக்கிறார். நீங்கள் வேண்டுமென்றால் அவரிடம் கேளுங்கள். அவர் correct ஆக கவனித்துக் கொண்டேயிருக்கிறார். மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

[2023 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்த வேட்டி–சேலைத் திட்டத்தைப் பற்றி நிறைய பேட்டி கொடுத்தார். அதற்கு நான் பதிலும் கொடுத்துவிட்டேன்.*

மாண்புமிகு தமிழக முதல்வர், தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இலவச வேட்டி–சேலைத் திட்டத்தை மக்களிடம் சரியாகக் கொண்டு சேர்க்க வேண்டும், நல்ல தரமான வேட்டி–சேலைகளைக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில், இந்த வருடம், காலதாமதமானது. (குறுக்கீடு) நான் சொல்கிறேன். சேலை 15 designs *மாற்றி . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒரு நிமிடம். மாண்புமிகு அமைச்சர் இதை உள்வாங்கிக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது (குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன். பொது மக்கள் வேட்டி–சேலை (குறுக்கீடு) கேட்டுக்கொள்ளுங்கள், இதுவரை கிடைக்கவில்லை என்று சொல்கிறார். கொடுப்பீர்களா என்று கேட்கிறார். (குறுக்கீடு) எப்போது கொடுப்பீர்கள் என்று கேட்கிறார்?*

பிற்பகல் 12–20

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *இல்லை. அதற்குத்தான் நான் சொல்கிறேன். (குறுக்கீடு) போய்ச் சேர்ந்துவிட்டது. (குறுக்கீடு) பொது மக்களுக்கு வேட்டி–சேலை வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது என்றார். (குறுக்கீடு) இதே கேள்வியை அந்தப் பக்கம் இருக்கிற அ.தி.மு.க.–வைத் தவிர வேறு யார் கேட்டிருந்தாலும் நான் ஜவாப் சொல்வதற்கு* ready. *அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்பதற்கு (குறுக்கீடுகள்) சரி, சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இருங்கள். நான் என்ன சொல்கிறேன் என்று கேளுங்கள். (குறுக்கீடுகள்) 2012–ல் யார் (குறுக்கீடுகள்)*

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் திரு. பி. அய்யப்பன் மற்றும் திரு. பால் மனோஜ் பாண்டியன் ஆகியோர் தவிர மற்ற அனைவரும் எழுந்து நின்று கொண்டிருந்தனர்.)

நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதற்குள் நீங்கள் இப்படிச் செய்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்)

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அது என்னவென்று நான் சொல்கிறேன்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *இல்லை, இல்லை. நான் தவறாகச் சொல்லவில்லை. நீங்கள்தான் தவறாகச் சொல்கிறீர்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *நான் தவறாகச் சொல்லவில்லை. அவசரப்படாதீர்கள். (குறுக்கீடுகள்) நான் உங்களைத் தவறாகச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) இருப்பதை நீங்கள்தானே எடுத்துக்காட்டியிருக்கிறீர்கள். இல்லையென்றால் நான் எதற்குப் பேசப் போகிறேன்? நீங்கள் சொல்லவில்லையென்றால் நான் எதற்கு இங்கு வந்து நின்று கொண்டு பேசப் போகிறேன்? நான்* record *வைத்திருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *2012-ல் 10-வது மாதம் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இல்லை, சொல்வதைக் கேளுங்கள். அதே மாதிரி, 25-8-2014-ல். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) அவர்கள் சொல்வதை நீங்கள் கேட்டுக்கொள்ளுங்கள். பிறகு நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்த உடனே உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னவெல்லாம் சொல்ல வேண்டுமோ (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லட்டும். அதைக் கேட்டுக்கொண்டு நீங்கள் என்ன சொல்கிறீர்களோ, அதற்கு நான்* ruling *கொடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, நான் சொல்கிறேன். நான் உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு அமைச்சர் திரு. காந்தி அவர்கள் என்ன சொல்ல வருகிறார் என்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இலவச வேட்டி, சேலை கொடுக்கவில்லை என்று ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள்; (குறுக்கீடு) அதே மாதிரிதான்; எப்படி அ.தி.மு.க. ஆட்சியில் வருத்தப்படுகிற மாதிரி என்னென்ன செய்தீர்கள் என்று date வாரியாகச் சொல்ல வருகிறார்கள். அவர்களைப் பேச விடுங்களேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும். நான் உங்களுக்குப் பேச வாய்ப்புத் தருகிறேன். உங்கள் கருத்துகளை நீங்கள் பதிவு செய்யுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள். உங்களுக்கு நான் வாய்ப்புத் தருகிறேன் என்று சொல்கிறேனல்லவா! மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பேசி முடியுங்கள். (குறுக்கீடு) உட்கார்ந்துகொண்டு யாரும் பேசக் கூடாது.

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: அதை மட்டும் நான் சொல்ல வரவில்லை. காலதாமதத்தைப் பற்றி மட்டும் சொல்லவில்லை; தரத்தைப் பற்றிச் சொல்லுங்கள். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு இந்த 2 வருடங்களில் (மேசையைத் தட்டும் ஒலி) மனசாட்சி இருக்கிற உறுப்பினர்கள் யாராக இருந்தாலும் இன்றைக்கு அந்தச் சேலைகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றிச் சொல்லச் சொல்லுங்கள். அவற்றின் தரத்தைப் பற்றிச் சொல்லச் சொல்லுங்கள். அதுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் தளபதி அவர்கள்; இந்த ஆட்சி அப்படித்தான். தற்போது வேட்டி, சேலை மொத்தமாக எல்லோருக்கும் கொடுத்தாகிவிட்டது. யாராவது கொடுக்கவில்லை என்று சொன்னால், எந்த மாவட்டத்தில் கொடுக்கப்படவில்லை என்று சொல்லுங்கள். நான் அதற்குப் பதில் சொல்கிறேன்.

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள். போதும். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) உறுப்பினர்கள், தயவுசெய்து உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன சொன்னார்களோ அதுகுறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேள்வி கேளுங்கள். அதற்கு நான் பதில் சொல்கிறேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், பேசுங்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விலையில்லா வேட்டி, சேலை தை பொங்கல் அன்று முறையாக வழங்கவில்லை என்று சுட்டிக்காட்டினார்கள். இதனால், தொகுதிகளுக்குச் செல்லும்போது மக்கள் கேட்கிறார்கள். அதைப் பற்றி சட்டமன்றத்தில் பேசுவது உறுப்பினர்களுடைய கடமை. ஏற்கெனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிப்ரவரி மாதத்திற்குள் அனைவருக்கும் இலவச வேட்டி, சேலை வழங்கப்படும் என்று சொல்லியிருந்தார்கள். நான் மேதகு ஆளுநர் உரையின் மீதான விவாதத்தில் பேசுகின்றபோது, அவர்கள் பதிலளித்தார்கள். அப்படி, பதிலளிக்கின்றபோது, காலதாமதம் ஆகிவிட்டது, அது உண்மை. இருந்தாலும், பிப்ரவரி மாதத்திற்குள் அனைத்து பயனாளிகளுக்கும் இலவச வேட்டி, சேலைகள் வழங்கப்படும் என்ற உறுதியைக் கொடுத்தார்கள். அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எத்தனை பேருக்குக் கொடுத்திருக்கிறீர்கள்; மீதி பேருக்கு ஏன் கொடுக்கவில்லை; அதற்கு என்ன காரணம் என்று கேட்கிறார்கள். அதைச் சுட்டிக்காட்ட வேண்டும். அதற்குள், 2012–லிருந்து வரலாற்றை எடுத்தால், பின்னர் நாங்களும் வரலாற்றை எடுக்க வேண்டி வரும். இப்போது இருக்கின்ற நிலைமை என்ன; அதைப் பற்றித்தான் இப்போது இருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க முடியும். அதற்கு, இப்போது இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும். அதை விட்டுவிட்டு, **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடைசியாகப் பேசியது நீக்கப்படுகிறது. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012 ஆம் ஆண்டு வரலாற்றை மாண்புமிகு அமைச்சர் திரு. காந்தி அவர்கள் எடுத்தார்களென்றால் நாங்களும் எடுப்போம் என்று சொன்னீர்களே! எடுங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தயவுசெய்து மாண்புமிகு அவை முன்னவர் அவர்களையும் மற்றும் அவையில் இருக்கின்ற எல்லோரையும் நான் அன்போடு ஒன்றைக் கேட்டுக்கொள்கின்றேன். அவையில் உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். அதற்கு ஒரே வரியில், காலதாமதமாகியிருந்தால், காலதாமதமாகிவிட்டது, இன்னும் ஒரு மாதத்திற்குள் கொடுப்போம் என்பதுதான் அதற்கு பதில். தரத்தைப் பற்றி அவர்கள் குறை சொல்லவில்லை. அவர்கள், இன்னும் பல இடங்களில் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலதாமதமானதற்குப் பதில் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

பிற்பகல் 12–25

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள் இலவச வேட்டி, சேலை இன்னும் வந்து சேரவில்லை என்ற ஒரு நிலைப்பாட்டை இங்கு எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் திரு. காந்தி அவர்கள் என்ன சொன்னாரென்றால், இப்போது மட்டுமல்ல, ஏற்கெனவே உங்கள் ஆட்சியிலும் இவ்வாறு காலதாமதமாகியிருக்கிறது என்று சுட்டிக்காட்டுவதற்காகத்தான் சொன்னாரேதவிர, வேறு எந்தவித உள்நோக்கத்தோடும் சொல்லவில்லை. இன்னும் 2 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனால், அமைதியாக இருந்து இந்தச் சட்டமன்றத்தை நடத்திச் சென்றால்தான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு உதவியாக இருக்கமுடியுமே தவிர, அவர் ஒன்றும் தவறான எண்ணத்தில் சொல்லவில்லை. ஏற்கெனவே உங்களுடைய ஆட்சியிலும் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறதே என்ற பொருள் குறித்துத்தான் சொன்னார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இருங்கள், நான் சொல்லிவிடுகிறேன். உறுப்பினரும் தவறாக எதையும் சொல்லவில்லை. அவர், இதுவரை இன்னும் கிடைக்காமல்*

இருக்கிறதே என்றுதான் சொன்னார். அவ்வளவுதான். அதற்கு 2 மணி நேரமாக எல்லோரும் பதில் சொல்லியாகிவிட்டது, போதும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு அமர்ந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதியிலிருக்கும் பிரச்சினைகளை எடுத்துச் சொல்கிறார்கள். மக்களுடைய பிரச்சினைகளைப் பேசுவதற்குத்தான் இங்கு வந்திருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை நானே பதிவு செய்துவிட்டேன்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: ஒரு நிமிடம் இருங்கள். நான் பேசிவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குத்தான் கொண்டுவர முடியும். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நீங்கள் கேள்வி கேட்கக் கூடாது என்றால், வேறு யார் கேள்வி கேட்பது? அண்ணா தி.மு.க. கேள்வி கேட்கக் கூடாது என்றால், அண்ணா தி.மு.க. உறுப்பினர்கள், நாங்கள் எல்லோரும் வெட்டிவேலைக்கா வந்து உட்கார்ந்து கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள். (குறுக்கீடு) திரு. ராஜன் செல்லப்பா அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால்தான் சொன்னேன், அவருக்கு ஒன்றும் உள்நோக்கம் கிடையாது. அவர் பேசுகின்றபோது யதார்த்தமாக வந்த ஒரு வார்த்தைதானேயொழிய, அவருக்கு உள்நோக்கம் இல்லை என்றுதான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி, நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எது, எது யதார்த்தமான வார்த்தை என்று

எல்லோருக்கும் தெரியும். வேண்டுமென்றே திட்டமிட்டு, அண்ணா தி.மு.க.-காரர்கள் பேசுவது சரியில்லை என்று சொன்னால், வேறு யார் பேசுவது? பிரதான எதிர்க்கட்சி அண்ணா தி.மு.க.-தான். ஆக, அண்ணா தி.மு.க.-தான் மக்களுடைய பிரச்சினைகளை இங்கே சட்டமன்றத்தில் எடுத்துவைக்க முடியும். அதற்குப் பதில் சொல்கின்ற உரிமை அமைச்சருக்கு இருக்கிறது. **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர். திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள், பேசுங்கள். திரு. ராஜன் செல்லப்பா, பேசுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: யார் உட்கார்ந்துகொண்டே. . . திரு. மு.பெ. கிரி உட்காருங்கள். திரு. ராஜன் செல்லப்பா, பேசுங்கள்.

[அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பி. அய்யப்பன் மற்றும் திரு. பால் மனோஜ் பாண்டியன் ஆகியோர் தவிர, மற்ற அனைவரும் எழுந்து நின்று கோஷமிட்டனர்.]

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்காக, இன்றைக்கு கடந்த (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன் செல்லப்பா அவர்கள். இங்கே பாருங்கள். நீங்கள் (குறுக்கீடுகள்) உட்காருங்கள், நீங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கிரி, திரு. கிருஷ்ணசாமி நீங்களெல்லோரும் உட்கார்ந்துகொண்டே பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ராஜன் செல்லப்பா, பேசுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: வணக்கம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *யாராக இருந்தாலும் அவையில் உட்கார்ந்துகொண்டே பேசக் கூடாது. (குறுக்கீடு) நான் முடித்துவிடட்டுமா? மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன் செல்லப்பா அவர்கள் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார். அனுமதி கொடுங்கள். மற்ற யாரும் பேச வேண்டாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன் செல்லப்பா அவர்கள்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *அவர் சொல்லி முடித்துவிட்டார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன் செல்லப்பா, பேசுங்கள்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துறை மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு நல்ல தகவலுக்காக மட்டுமே அவரைக் கேட்டேன். பொதுவாக, சாதாரணமாக ஒரு மானியக் கோரிக்கை நடக்கும்போது, முந்தைய மானியக் கோரிக்கை பற்றிய தகவலை நினைத்துப் பேசுவது என் வாடிக்கை. அந்த அடிப்படையில் பழைய மானியக் கோரிக்கையில் பலமுறை கேள்வி கேட்டதற்கு இணங்க—சட்டமன்ற உறுப்பினர்களுக்கான ஒரு செய்தி—குறிப்பாக, கடந்த மானியக் கோரிக்கையில், மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சர்கள் அன்றைக்கு சொல்லும்போது, 234 தொகுதிகளுக்கும் 3 கோடி ரூபாய் அளவில் ஒரு சிறு விளையாட்டரங்கத்தை அமைத்துக் கொடுக்க முடியும், அமைத்துக் கொடுப்போம் என்று முன்னாள் அமைச்சர், மாண்புமிகு இன்றைய அமைச்சர் எல்லோரும் சொன்னார்கள்.*

எல்லோருடைய தொகுதிகளிலும் சிறு விளையாட்டரங்கம் இந்த ஆண்டு வந்துவிடும் என்று அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் மகிழ்ச்சியோடு இருந்தோம். அதைவிட இதில் பெருமகிழ்ச்சி என்னவென்று கேட்டால், சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, “என் தொகுதியைக் கொஞ்சம் பார்த்துக்கொள்ளுங்கள்” என்று நீங்களே வினவினீர்கள். எனக்கு இன்றும் நினைவிருக்கிறது. அன்றைக்கு அழகாக வினவினீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்பிக்கையோடு இருக்கலாம்.

பிற்பகல் 12–30

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: ஆனால், அன்றைக்கு அறிவிப்பு வந்ததேதவிர,—அதோடு மட்டுமல்ல, 700 கோடி ரூபாய்க்கான Mega Sports City ஆரம்பிக்கப்படும் என்று சென்ற மானியக் கோரிக்கையில், budget-ல் வந்தது. அந்த Mega Sports City-க்கு 700 கோடி ரூபாய்க்கான ஒதுக்கீடு செய்யப்பட்டதா? அதற்கான நிதி செலவிடப்பட்டதா? முதல் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டனவா? ஏனென்றால் மானியக் கோரிக்கை என்பது ஓராண்டிற்கு இருக்கலாம், 5 ஆண்டிற்கு இருக்கலாம், 10 ஆண்டிற்கு இருக்கலாம். இது 100 ஆண்டு திட்டம். ஒரு சட்டமன்ற உறுப்பினரின் தொகுதியில்கூட இதுவரை இன்னும் சிறு விளையாட்டரங்கம் உருவாக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எந்தத் தொகுதியிலும் உருவாக்கப்படவில்லை. 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் உருவாக்கப்பட வேண்டுமென்று சொன்னால், 234 ஆண்டுகள்—தயவுசெய்து, அருள்கூர்ந்து அதை ஒரு மெகா திட்டமாகக் கொண்டுவாருங்கள். இந்த ஆண்டே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்னும் இரண்டாண்டுகளுக்குள் அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் சிறு விளையாட்டரங்கங்களைக் கொண்டு வர வேண்டுமென்ற மெகா திட்டம் கொண்டு வாருங்கள். மொத்தம் 600 கோடி ரூபாய்தான். அதற்கிடையே 50 ஆயிரம் கோடி— உரிமக் கட்டணம் வாங்கினால் 1 இலட்சம் கோடி கிடைப்பதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அந்த 50 ஆயிரம் கோடி ரூபாயில் மகளிர் திட்டத்திற்குப் போக—மகளிருக்கென சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைக்கு ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். நேரம் கருதி அனைத்தையும் சேர்த்தே பேச வேண்டியிருக்கிறது. மகளிர் உரிமைத் தொகை 1,000 ரூபாயை பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் மாதம் 15 ஆம் தேதி முதல் வழங்கப்படவுள்ளதாக நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 59 இலட்சம் மகளிருக்கு என்று அறிவிக்கப்பட்டு, தற்போது ஒரு கோடி மகளிருக்கு என்று சொல்லப்படுகிறது. அவற்றுடன் இன்னும் கொஞ்சம் சேர்த்து, விளையாட்டு வீரர்களுக்கும் வழங்க வேண்டும். மாவட்டந்தோறும் கபடி விளையாட்டு வீரர்கள், சிலம்பாட்ட விளையாட்டு வீரர்கள், amateur விளையாட்டு வீரர்கள், கால்பந்து விளையாட்டு வீரர்கள், கூடைப்பந்து விளையாட்டு வீரர்கள் அனைவருக்கும் வழங்க

வேண்டும். இவ்வாறு அனைவரும் அதிகமாக விரும்பக்கூடிய விளையாட்டுகள், கிராமப்புற விளையாட்டுகள், ஜல்லிக்கட்டு விளையாட்டு போன்ற அந்த விளையாட்டுகளிலிருந்து மாவட்டந்தோறும் குறைந்தபட்சம் பத்தாயிரம் நபர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கும் வழங்கினால் மிகச் சிறப்பாக இருக்கும். முதியோர் உதவித் தொகை, மாற்றுத் திறனாளிகள் உதவித் தொகை எல்லாம் வழங்குகிறோம். அதோடு சேர்த்து, விளையாட்டு வீரர்களுக்கும் உதவித் தொகை வழங்க வேண்டுமென்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோள் வைக்கிறேன். ஏனென்றால், இதுவரை அவர்கள் கணக்கிட்ட வகையில், 1 கோடியா, 59 இலட்சமா என்ற புள்ளிவிவரங்கள் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்குப் பதில் இருக்கிறது.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: நன்றாகச் சொல்லுங்கள். நான் அதை வரவேற்கிறேன். அந்தச் சூழ்நிலையில் அதையும் செய்ய வேண்டும். அதேபோன்று, பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஆனால், ** எல்லா Sports Club–லும், எல்லா விளையாட்டரங்கங்களிலும். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்று நீங்கள் பொத்தாம்பொதுவாகச் சொன்னதை நான் நீக்கிவிடுகிறேன். நீங்கள் குறிப்பிட்டு எதைச் சொன்னாலும் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: 2011–ல் 91 பயிற்சியாளர்களை (Coach) நியமிக்க அன்றைய அ.தி.மு.க. அரசு முயற்சி எடுத்தது. அது தொடர்பான வழக்கு 12 ஆண்டுகளாக நீதிமன்றத்தில் இருந்தது. தற்போதுதான், குறைந்த எண்ணிக்கையில் அதாவது, சுமார் 75 பயிற்சியாளர்களை நியமனம் செய்திருப்பதாக செய்தி கிடைத்திருக்கிறது. ஆனால், ஒரு மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் 5 பயிற்சியாளர்களாவதுஇருந்தால்தான் பயிற்சி கொடுக்க முடியும்.ஒரே பயிற்சியாளர் நீச்சல் பயிற்சியும் கொடுக்கிறார், Football பயிற்சியும் கொடுக்கிறார். ஆகவே, எல்லா பயிற்சிகளும் வழங்குவதற்காக மாநிலம் முழுவதும் குறைந்தபட்சம் 300 பயிற்சியாளர்களையாவது தேர்ந்தெடுத்தால்தான், இந்த விளையாட்டுத் துறை சிறப்படையும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஏனென்றால், தமிழ்நாடு ஒலிம்பிக் தங்கப் பதக்கத் தேடல் திட்டத்திற்கு 25 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். இந்தத் திட்டம் ஒலிம்பிக் பதக்க வெற்றியாளர்களை உருவாக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது. ஆனால், இந்தத் தேடல் திட்டத்தில் இதுவரைக்கும் நல்ல இளைஞர்கள் அடையாளம் காணப்படவில்லை. அவ்வாறு அடையாளம் காணும்வகையில் இந்த அரசு முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதோடு மட்டுமல்ல, ஒவ்வோர் ஊராட்சிக்கும், ஒவ்வொரு பேரூராட்சிக்குமென 71 கோடி ரூபாயில் அம்மா இளைஞர் விளையாட்டுத் திட்டம் என்ற ஒன்றை மாண்புமிகு அருமை அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் ஆரம்பித்தார். அதற்கு 71 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்கினார்கள். அந்தத் திட்டம் தற்போது தொடர்கிறதா, இல்லையா, இரத்து செய்யப்பட்டுவிட்டதா என்று தெரியவில்லை. ஆகவே, விளையாட்டுத் துறையும், இளைஞர் நலத் துறையும் மிகச் சிறப்பாகச் செயல்படுவதற்கு பல்வேறு வகையான திட்டங்களை வழங்க வேண்டுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். உயர்நிலைப் பள்ளி மாணவர்கள், கல்லூரி மாணவர்கள்தான் இந்த விளையாட்டுத் துறையில் மிகச் சிறந்தவர்களாக வருகிறார்கள். அவர்களை உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகளில் அடையாளம் காணும்வகையில், விளையாட்டு மைதானங்களை உருவாக்கி அந்தப் பள்ளி, கல்லூரிகளுக்கு அனுமதி வழங்க வேண்டும். மாணவர்கள்தான் தற்போது சிறந்த வீரர்களாக உருவாகிறார்கள். கிராமப்புற மாணவர்கள்தான் ஒலிம்பிக் வீரர்களாக உருவாகிறார்கள். இந்த அரசு, விளையாட்டுத் துறையிலே அவர்களுக்கான முக்கியத்துவத்தை தொடர்ந்து கொடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளையும் விடுக்கிறேன்.

கொள்கை விளக்கக் குறிப்பினைப் பார்த்தேன். நேரு விளையாட்டரங்கிற்குப் பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். மிகச் சிறந்த விளையாட்டு, பயிற்சி, மேம்பாடு, பரிசு, பாராட்டு, உடல் தகுதி என்று இந்தியாவிற்கே தமிழகத்தின் நேரு விளையாட்டரங்கம் அடையாளமாகத் திகழ்கிறது. நேரு விளையாட்டரங்கம் என்பது புரட்சித் தலைவி அம்மா உருவாக்கிய மிகப் பெரிய விளையாட்டரங்கம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நேரு விளையாட்டரங்கத்திற்காக 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதேபோன்றுதான், மதுரையில், புகழுக்குரிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். பெயரில் MGR Race

Course Stadium என்ற ஒரு திடல் இருக்கிறது. அந்தத் திடலில் நிறைய தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். அந்த வரலாற்றுச் சிறப்புமிக்க எம்.ஜி.ஆர். திடலுக்கு எந்த நிதியும் இதுவரை ஒதுக்கியதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் தண்ணீர் குடிப்பதைப் பார்த்தால் இன்னும் அதிக நேரம் பேசுவீர்கள் போல் தெரிகிறதே! (குறுக்கீடு) 25 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: நான் முதலிலேயே பன்முகத் தன்மை கொண்ட மாண்புமிகு பேரவைத் தலைவர் என்று சொல்லிவிட்டேன். எனக்குப் பேசுகின்ற வாய்ப்பு இன்றைக்குக் கிடைத்திருக்கிறது.

பிற்பகல் 12–35

குறிப்பாக, மதுரை எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்கத்திற்கு இன்றைக்கு ஒரு திட்டம் இருக்கிறதா? ஏதாவது நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிய அவசியம் இந்த தென் மாவட்டங்களிலே இருக்கிறது. அதோடுமட்டுமல்ல; மதுரையிலே தென் பகுதியிலே எந்த விளையாட்டு அரங்கமும் இல்லை. மதுரை தென் பகுதி, வட பகுதி என்றிருக்கிறது. நெல்லையைச் சார்ந்தவருக்கு நன்றாகத் தெரியும். அந்த தென் பகுதி மாணவர்களுக்கு, இளைஞர்களுக்கு எந்த விளையாட்டு அரங்கமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. தென்பகுதியிலே என் தொகுதியிலே சர்வதேசத் தரத்திலே 50 கோடி ரூபாய்க்கு ஒரு விளையாட்டு மைதானம் அறிவித்து, நிலம் கையகப்படுத்தும் பணி நடந்து கொண்டிருக்கிறது.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: நான் மதுரையின் தென்பகுதி என்று சொன்னேன். மதுரை மாவட்டம் தென் பகுதியிலே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு தெற்கில்தானே நாங்கள் இருக்கிறோம்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: ஏனென்றால், இங்கே சென்னையில் மட்டும் நவீன விளையாட்டு அரங்கமென்று சொல்கிறார்கள். வடசென்னை, ஆர்.கே. நகரில் சென்ற ஆண்டு

பட்ஜெட்டில் 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அது தொடர்ந்ததா, நடந்ததா என்ற செய்தி தெரியவில்லை. சென்ற பட்ஜெட்டையும், இதையும் எடுத்துப் பார்க்கிறபொழுது, ஏறக்குறைய ஒரே செய்திகள்தான் இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நிலம் கையகப்படுத்துவதிலே நிறைய processes இருக்கின்றன. நீங்கள் அதைத்தாண்டி வாருங்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: நன்றி. அந்த வகையில் இந்தத் திட்டங்களையெல்லாம் செயல்படுத்துகிற வாய்ப்பாக, இன்றைக்கு பல்வேறு பள்ளிகளினுடைய கோப்புகள், விளையாட்டு மைதானங்கள் குறித்த கோப்புகளெல்லாம்,—உதாரணமாக, உங்கள் பகுதியில், தோவாளையில் இருக்கிற உயர்நிலைப் பள்ளியிலே, 3 கோடி ரூபாய் நிதி கேட்ட கோப்பு தமிழக அரசிடம் இன்னும் நிலுவையில் இருப்பதாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிறார்கள். அதுபோன்று, கைத்தறித் துறையிலும் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. இளைஞர் நலனைப் பொறுத்தவரைக்கும், இளைஞர் நலத் துறையில் பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. நாட்டு நலப் பணித் திட்டங்கள், தேசிய வளர்ச்சித் திட்டங்கள் என்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையில் பல்வேறு மிகச் சிறந்த திட்டங்களெல்லாம் இருக்கின்றன. அந்தத் திட்டங்கள் இளைஞர்களுக்குப் பயன்படுகின்ற அளவுக்கு இருக்க வேண்டும். குறிப்பாக, ஒரு காலகட்டத்தில் வேலையில்லா பட்டதாரிகளுக்கு உதவித் தொகை கொடுத்தோம். இன்றைக்கு வேலையில்லா பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கின்றது. அந்த எண்ணிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்படாவிட்டாலும்கூட, பள்ளி மாணவர்களுக்கு, நான் சொன்னபடி விளையாட்டுத் துறையிலே தேர்ந்தெடுக்கப்படுகிறவர்களுக்கு இன்னும் அதிகமான இளைஞர்களுக்கு, பல்வேறு பயிற்சிகளைக் கொடுத்தால் மிகச் சிறப்பாக இருக்கும் என்பதை இன்றைக்கு நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம். இந்த நல்ல திட்டங்களையெல்லாம் மிகச் சிறப்பாகச் செயல்படுத்துகிற, நல்ல அரசாக வர வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். ஆனால், விடியல் கிடைக்குமா, கிடைக்காதா என்று மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) ஆக, இந்த வகையிலே விளையாட்டுத் துறையில் பல்வேறு திட்டங்களை மிகச் சிறப்பாகச் செயலாற்றியவர்கள் மாண்புமிகு

2023 ஏப்ரல் 11] *[திரு. வி.வி. ராஜன் செல்லப்பா]*
புரட்சித் தலைவி அம்மா அவர்களும், எடப்பாடியார் அவர்களும்; 3 சதவிகிதத்தை உருவாக்கிக் காட்டியவர் மாண்புமிகு அருமை அண்ணன் எடப்பாடியார் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும். நீங்கள் 28 நிமிடங்கள் பேசிவிட்டீர்கள். போதும். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் 28 நிமிடங்களை இதற்காகச் சொல்லவில்லை. எனக்காகச் சொல்லவில்லை. நான் சில கருத்துகளை, நீங்கள், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் நல்ல ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறீர்கள். நான் ஏற்றுக்கொள்கிறேன். நீங்கள் நன்றியையும்—அதேபோன்று என் ஆலோசனையாகக் கேட்டுக்கொள்ளுங்கள்—நன்றி சொல்லி அமருங்கள்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *ஒரே ஒரு நிமிடம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிறைவாகச் சொல்லுங்கள். ஒரு நிமிடம். ஒரு நிமிடம் தருகிறேன்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *ஒரு நிமிடமா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்கள் தொகுதி சார்ந்த கோரிக்கைகளைக் கொடுங்கள். நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்கிறேன்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: *இல்லை. இல்லை. நீங்கள் தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. பொதுவாக, இந்த விளையாட்டு வீரர்களுக்கான பல்வேறு திட்டங்களை, பயிற்சியாளர்களுக்கான திட்டங்களை மிகச் சிறப்பான வகையில் இந்த அரசு செய்ய வேண்டும். பயிற்சியாளர்களுக்கு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் நிறைய ஆலோசனைகளைச் சொல்லியிருக்கிறீர்கள்.*

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: Olympic *தங்கம் தேடல் என்ற திட்டத்திற்கு, மிகச் சிறப்பாக நம்முடைய வீரர்களை எல்லாம் தயார்படுத்துவதிலே குறிப்பாக, கிராமப்புறங்களில் இருக்கிற*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

கபடி வீரர்கள், சிலம்பாட்ட வீரர்கள், ஜல்லிக்கட்டு வீரர்கள் அவர்களுக்குரிய முக்கியத்துவத்தை கைப்பந்து, கூடைப்பந்து மற்றும் ஏனைய விளையாட்டுகளுக்கான. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: இந்த விளையாட்டுகளுக்கான திட்டங்களை மிகச் சிறப்பாக செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனைத்து விளையாட்டுகளும், நன்றி. நன்றி. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ராஜன் செல்லப்பா அவர்கள் பேசும்போது, அந்தத் துறை அமைச்சரைப்பற்றிப் பேசும்போதெல்லாம் என்னைப்பற்றியும் அவ்வப்போது இந்தப் பள்ளி, பள்ளி என்று சொல்லிக்கொண்டே இருந்தார். உள்ளபடியே இப்போது எங்களுடைய அறிவிப்பிலே நீங்கள் பார்த்திருப்பீர்கள். நிறைய sports-க்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்று, infact, department உடன் உட்கார்ந்து discussion செய்து அங்கேயிருந்து வந்ததுதான் இந்த அறிவிப்புகள் எல்லாம். அதிலே, ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு Sports Schools of Excellence என்பதை நாம் கொண்டு வரப் போகிறோம். 9 கோடி ரூபாய் செலவில் நாம் அதைக் கொண்டு வரப்போகிறோம். அதில்லாமல், எந்தெந்தப் பள்ளிகளில் எல்லாம் **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், நான் அதை நீக்கிவிட்டேன்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: நாம் அதைச் சொல்லியிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** என்பதை நான் நீக்கிவிட்டேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: *அதேபோன்று பயிற்சியாளர்களைப்பற்றி சொன்னார். முன்பு பார்த்தீர்களென்றால்,* RIPE *(*Regional Inspector of Physical Education*) என்று இருப்பார்கள்.* Regional level*-லில்தான்* Physical Education inspection*-க்குப் போவார். நீண்ட நாட்களாக இருந்த வழக்கில் இன்றைக்கு நாம் வெற்றிபெற்று, கிட்டத்தட்ட 38 மாவட்டங்களில், 36 மாவட்டங்களில்* DIPE *என்று சொல்லக்கூடிய* district level*-லில் நாம் அதைக் கொண்டு வந்துவிட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்று,* sports *என்று வரும்போது, இப்போது பயிற்சியாளர்* related *ஆக நிறைய விவரங்கள் வந்து கொண்டிருக்கின்றன. கண்டிப்பாக நீங்கள் சொல்வதை, விளையாட்டுத் துறை அமைச்சர் என்ற முறையில் நிறைய குறிப்புகளை எடுத்திருக்கிறார். அவரது பதிலுரையில் கண்டிப்பாக உங்களுடைய பல கேள்விகளுக்கு விளக்கம் அளிப்பார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

***திரு. ஐ.பி. செந்தில்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் பெருந்தகை அண்ணா, இன்றும் நம் வாழ்வின் ஒளியாய் ஒளிர்ந்து நின்று நம்மை வாழ வைக்கும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர், இனமானப் பேராசிரியர் ஆகியோர் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 12–40

2023–2024 ஆம் ஆண்டிற்கான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) ஆகிய துறைகளின் மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தில், இந்த எளியவனுக்குப் பேசுகிற வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிற, தன் செயல்களால் இந்திய ஒன்றியமே திரும்பிப் பார்க்கும் வகையில், அனைவருக்கும் வழிகாட்டுகின்ற, மக்களாட்சித் தத்துவத்தை உலகிற்கு உணர்த்திட, "வைக்கம் நூற்றாண்டு விழா" எடுத்து, தமிழன் தன்மானம், சுய மரியாதை, துணிவு என உலக அரங்கில் அனைத்தும் உயர்ந்தோங்கிட கம்பீரமான ஆட்சியை, "வன்மை இல்லை, ஒரு வறுமை இன்மையால்; திண்மை இல்லை, ஒரு செறுநர்

இன்மையால்; உண்மை இல்லை, பொய் உரை இலாமையால்; ஒண்மை இல்லை, பல் கேள்வி ஓங்கலால்" என்று கம்பன் காட்டிய அரசை, தமிழ்நாட்டு மக்களிடத்தில் கனிவோடு நடத்திடும் மக்கள் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் என் உயிர் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

ஒரு நாட்டின் எதிர்காலம் அந்த நாட்டின் இளைஞர்கள் கையில் என்று சொல்வார்கள். நாளைய தமிழினத்தின் தலைசிறந்த தலைவராக, இன்றைய நல் இளைஞராக, மாண்புமிகு அமைச்சராக, "உருள்கின்ற மணிவட்டை குணில் கொண்டு துரந்தது போல்" என்ற இளங்கோவடிகளின் வரிகளுக்கு ஏற்ப, விமர்சனப் பந்துகளை தன் 'செயல்' என்னும் மட்டை கொண்டு அரங்கத்தை விட்டே பறக்கவிடும், 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று எந்நாளும் உழைக்கும் எங்கள் அண்ணன் (மேசையைத் தட்டும் ஒலி), எங்களை வழிநடத்தும் மன்னன், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையினுடைய அமைச்சர், எங்கள் சின்னவர், மாண்புமிகு அண்ணன் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை இந்த நேரத்திலே நான் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இப்பேரவையின் மாண்புமிகு முன்னவர் பெருந்தகை அவர்களையும், எங்கள் மாவட்டத்தில் எங்களை வழிநடத்தும் தமிழ்நாடு அரசின் மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் உள்ளிட்ட மூத்த அமைச்சர்கள் மற்றும் பிற அமைச்சர் பெருமக்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் தங்களையும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும், அரசு தலைமைக் கொறடா அவர்களையும், இந்த வரலாற்று அவையில் வீற்றிருக்கும் மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களையும், இந்த வாழ்வில், என்னை வளர்த்தெடுத்த என் தாய், தந்தையையும், என்னை இரண்டாவது முறையாக வெற்றிபெற வைத்து, இந்த மாமன்றத்திற்கு அனுப்பி வைத்த பழனி சட்டமன்றத் தொகுதி மக்கள் அனைவரையும் முதற்கண் வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு. மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தபோது, அவன் முன்னால் பல சவால்கள் நிறைந்திருந்தன. தொடக்க காலத்தில் மனிதன் தற்காப்புக்காக ஓடவும், சாடவும், தாண்டவும், நீந்தவும் செய்ததன் விளைவாகத்தான், மெல்ல

மெல்ல விளையாட்டுகள் பிறந்திருக்கின்றன. விளையாட்டுகளால் குழு ஒற்றுமை, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை, வெற்றி தோல்வியை ஏற்றுக்கொள்ளும் சகிப்புத் தன்மை, உற்சாகம், நட்புறவு என வளர்கிறது. விளையாட்டுத் துறையில் எந்த மாணவன் ஈடுபடுகிறானோ அவன் தன்னம்பிக்கை மிகுந்தவனாக சமூகப் பொறுப்புடையவனாக உருவாகிறான் என்பது அர்த்தம்.

சங்க காலந்தொட்டு, தமிழர் வாழ்வில் விளையாட்டுகள் கொடிகட்டிப் பறந்த வரலாறுகள் உண்டு. எடுத்துக்காட்டாக, அலவன் ஆட்டல், உடல் வித்தை, உழலை, ஊசல், ஊன்றி தாண்டல், எண்ணல் விளையாட்டு, ஒளிதல் விளையாட்டு, ஏறுகோள், கையெறி விளையாட்டு, கவண், களரி, கிழங்கு, குத்துச் சண்டை, தட்டை, துணங்கை, நீச்சல், முன்படகு, பின்படகு, வளிபடகு, ஈடுவட்டு, உருட்டு வட்டு, கோட்டுவட்டு, சூதுவட்டு, நீர்வட்டு, நெல்லிவட்டு, வல்வில் வேட்டம் என்று சங்க காலத்தில் நம்முடைய தமிழர் வாழ்வில் 89-க்கும் மேற்பட்ட விளையாட்டுகள் இருந்ததாக நம்முடைய இலக்கியங்கள் பறைசாற்றுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நம்முடைய கழகத்தின் தலைவர், குறிப்பாக மக்கள் தலைவர், தமிழ்நாட்டிலே ஒரு தலைசிறந்த அரசை, இந்திய ஒன்றியத்தில் முன்னோடியாக இருக்கக்கூடிய ஓர் அரசை நடத்துகிற மக்கள் முதல்வரின் அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, சர்வதேச அளவில் நடத்தப்படுகிற போட்டிகளெல்லாம், இங்கே, தமிழ்நாட்டிலே நடத்துகிற சூழலை உருவாக்கியது திராவிட மாடல் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)—ஏனென்றால் எத்தனையோ அரசுகள் இருந்திருக்கலாம்; ஆனால் இந்த அரசு உருவானதற்குப் பிறகு, இன்றைக்கு சர்வதேச, தேசிய ஒலிம்பிக் செஸ் ஒலிம்பியாட் போட்டியை (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய தமிழ்நாட்டிற்குக் கொண்டு வந்து சேர்த்த பெருமை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைச் சாரும். 200 நாடுகள், 1,000-க்கும் மேற்பட்ட வீரர்கள் என மிகப் பிரம்மாண்டமாக இந்தியாவிலேயே, முதல் முறையாக மாமல்லபுரத்தில் செஸ் ஒலிம்பியாட் போட்டி நடைபெற்றது. அந்தப் போட்டி நடைபெற உருவாக்கிய குழுவில் அன்றைக்கு சட்டமன்ற உறுப்பினராக இடம்பெற்றவர்தான், இன்றைக்கு மாண்புமிகு அமைச்சராக (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையில் பதிலுரை வழங்க வந்திருக்கக்கூடிய நம்முடைய சின்னவர் என்பதனை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஐ.பி. செந்தில்குமார்] *[2023 ஏப்ரல் 11*
பிற்பகல் 12–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த செஸ் ஒலிம்பியாட் போட்டியைப் பொறுத்தளவில், நம்முடைய செயல்பாடுகள் குறித்த ஒரு செய்தியை நான் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகின்றேன். 28–3–2023 அன்று டெல்லியிலே நடைபெற்ற "Women's Grand Prix Chess tournament" *தொடர் ஏற்பாடுகளிலிருந்து இரண்டு சர்வதேச வீராங்கனைகள் வெளியே வந்தார்கள். ஒருவர் கஜகஸ்தானைச் சேர்ந்த "ஜன்சயா அப்துல் மாலிக்"; மற்றொருவர் ஜெர்மனியைச் சேர்ந்த "எலிசபெத் பேட்ஸ்" ஆவர். இருவரும் அந்தப் போட்டியிலிருந்து வெளியேறினார்கள். அவ்வாறு போட்டியிலிருந்து வெளியேறியபோது, ஜன்சயா அவர்களை பத்திரிகையாளர்கள் சந்தித்து, கேட்டபோது, அவர், சென்னையில் நடைபெற்ற செஸ் ஒலிம்பியாட் போட்டியின் ஏற்பாடுகள் மிகச் சிறப்பாக இருந்தன. டெல்லி ஏற்பாடுகள் ஏமாற்றம் அளிக்கின்றன என்று கூறினார். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நாட்டின் தலைநகராக இருக்கக்கூடிய டெல்லி, அங்கே டெல்லியிலே ஏமாற்றப்பட்டோம்; (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையிலே நாங்கள் திருப்தியாக இருந்தோம் என்று ஒரு சர்வதேச வீராங்கனை சொல்கிற அளவிற்கு இந்தப் போட்டியை மிகச் சிறப்பாக நடத்தியது திராவிட மாடல் அரசு என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த ஆண்டு டிசம்பர் 14 ஆம் தேதி அந்தப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, 17 ஆம் தேதி சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளையும் அழைத்து, கிட்டத்தட்ட 2¾ மணி நேரம் அவர்களோடு கலந்து பேசி, துறையினுடைய முழு விவரங்களையும் பெற்று, அதற்குப் பிறகு, சர்வதேச, ஒலிம்பிக், ஆசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில், "தமிழ்நாடு உள்ளடங்கிய இந்தியாவில்", "தமிழ்நாடு உள்ளடங்கிய இந்தியாவில்" அதிக அளவில் வெற்றிகளையும், பதக்கங்களையும் நம் மண்ணின் மைந்தர்கள் பெறுவதற்கு மாண்புமிகு சின்னவர் அவர்கள் தன் துறையின் சார்பில் பல்வேறு முயற்சிகளை எடுத்ததன் விளைவாகத்தான் இன்றைக்கு தமிழ்நாட்டில் ஒலிம்பிக் அகாடமிகள் அமைப்பதற்கு முன்மொழிவுகள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ராஜன்

செல்லப்பா அவர்கள் இங்கே பேசியபோது, தென்மாவட்டமான மதுரையில் ஒலிம்பிக் அகாடமி அமைக்க வேண்டும் என்று கேட்டார்கள். சென்னை, திருச்சி, மதுரை மற்றும் நீலகிரி ஆகிய 4 பகுதிகளிலும் ஒலிம்பிக் அகாடமியை அமைப்பதற்குரிய முன்மொழிவுகளைக் கொண்டுவந்த அரசு திராவிட மாடல் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அவர்கள் பேசியபோது, ஒலிம்பிக் தங்கம் தேடுதல் திட்டத்தை 25 கோடி ரூபாயில் நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள் என்று சொல்லிவிட்டு, நாட்டுப்புற, கிராமப்புற விளையாட்டுகளை ஊக்கப்படுத்த வேண்டும் என்றும் சொன்னார்கள். மாண்புமிகு அண்ணன் அவர்களுக்கும் சரி, இந்த அவைக்கும் சரி, நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, திராவிட மாடல் அரசு 2021–ல் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகுதான், Poor Man Games என்று சொல்லப்படுகின்ற (மேசையைத் தட்டும் ஒலி) கபாடி, சிலம்பம் போன்ற விளையாட்டுகளெல்லாம் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் சேர்க்கப்பட்டன. இதற்கு முன்பு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் 10 பிரிவுகளின்கீழ்தான் போட்டிகள் நடத்தப்பட்டன. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, தற்போது 15 பிரிவுகளின்கீழ் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே கபாடி இணைக்கப்பட்டிருக்கிறது, சிலம்பம் இணைக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இந்த ஒலிம்பிக் தங்கம் தேடுதல் என்ற திட்டத்தை இந்த அரசு ஏன் கொண்டு வந்திருக்கிறது என்றால், மார்ச் 27, 2016–ல், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், எதிர்க்கட்சிகள் வரிசையில் இருந்தபோது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கழகத் தலைவராக, சட்டமன்றக் கட்சித் தலைவராக இருந்தபோது, பிரேசிலில் நடைபெற்ற, நன்றாகக் குறித்துக்கொள்ள வேண்டும்; பிரேசிலில் நடைபெற்ற தெருவோரச் சிறார்களுக்கான ஒலிம்பிக் போட்டிகளில், தெருவோரச் சிறார்களுக்கான ஒலிம்பிக் போட்டிகளில் இந்தியாவின் சார்பாக தமிழ்நாட்டிலிருந்து சென்றவர்கள் அதிகமான பதக்கங்களை வென்று வந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை நேரில் சென்று வாழ்த்தக்கூட அன்றைக்கு இங்கே அதற்கான சூழ்நிலை இல்லை. ஆனால், எதிர்க்கட்சியிலே இருந்தாலும், அன்றைக்கு அந்தச் சிறார்களை நேரில் சென்று, வாழ்த்தியவர்தான் இன்றைக்கு

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சராக இருக்கக்கூடிய மக்கள் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். தெருவோர விளையாட்டுகளில் ஒலிம்பிக் இருக்கிறது. அந்த ஒலிம்பிக் போட்டியில், அந்தத் தெருவில் விளையாடுகிற அனைவரையும் ஊக்கப்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான், இந்த ஒலிம்பிக் தங்கம் தேடுதல் திட்டம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுக்கு நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதுமட்டுமல்ல, 1997-ல் தலைவர் கலைஞர் அவர்கள், ஏ.டி.பி. சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியைக் கொண்டு வந்தார்கள். அந்த சென்னை ஓபன் டென்னிஸ் போட்டி 2018 ஆம் ஆண்டு புனே ஓபன் டென்னிஸ் போட்டியாக மாறிப்போனது. அதற்குப் பிறகு, 2021 ஆம் ஆண்டு நம்முடைய அரசு அமைந்ததற்குப் பிறகு, நம்முடைய மாண்புமிகு மக்கள் முதல்வர் அவர்கள் எடுத்த முயற்சிகளின் காரணமாகத்தான், சென்னையில் மகளிருக்கான சென்னை ஓபன் ஏ.டி.பி. மகளிர் டென்னிஸ் போட்டிகள் நடத்தப்பட்டிருக்கின்றன. எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு? 2018 ஆம் ஆண்டில் போன போட்டியை 2021 ஆம் ஆண்டில் கொண்டு வந்து சேர்த்தது திராவிட மாடல் அரசு என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு உறுப்பினர் இங்கே பேசியபோது, வழக்குகள் முடிந்து இப்போது பயிற்சியாளர்களை நியமனம் செய்திருக்கிறீர்கள் என்று சொன்னார்கள். அந்த வழக்குகளை முடிப்பதற்குரிய முயற்சிகளை எடுத்தது திராவிட மாடல் அரசு. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதன் காரணமாகத்தான் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய திருக்கரத்தால் 76 பயிற்சியாளர்களுக்கு பணி ஆணைகளை வழங்கி, சிறப்பு சேர்த்திருக்கிறார்கள். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே கூறிய பதிலிலிருந்து, நான் ஒன்றை மீண்டும் சொல்ல விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் 10 நிமிடங்கள் ஆகிவிட்டன.

2023 ஏப்ரல் 11]

திரு. ஐ.பி. செந்தில்குமார்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியபோது, கிராமப்புறப் பகுதிகளிலெல்லாம் விளையாட்டு அரங்கங்கள் வேண்டும் என்று கேட்டார்கள். எந்தத் தொகுதிக்கு வந்தது என்றும் கேட்டார்கள். நான் இப்பொழுது சொல்கிறேன், 234 தொகுதிகளிலே, என்னுடைய பழனி சட்டமன்றத் தொகுதி, ஆயக்குடி பேரூராட்சிப் பகுதியில் அதற்குரிய நிலம் இந்த ஆண்டு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்காக அரசுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல, எப்படி தலைவர் அவர்கள், அவரே நேரடியாகச் சென்று வாழ்த்தினாரோ, அதேபோல்தான், இன்றைக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும்; கடல் மட்டத்திலிருந்து சுமார் 8,848 மீட்டர், அதாவது சுமார் 29,029 அடி உயரமுள்ள எவரெஸ்ட் சிகர மலையேற்றத்திற்கு ஆயத்தமாகி வரும் சகோதரி முத்தமிழ் செல்வி அவர்களுக்கு அவரது தீரமிகு முயற்சியைப் பாராட்டி, இந்தத் துறையின் சார்பில் 10 இலட்சம் ரூபாயை ஊக்கத் தொகையாக வழங்கியவர்தான் நம்முடைய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12–50

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல, துப்பாக்கி சுடும் வீராங்கனையான நிவேதிதா, பெருவில் நடந்த உலக ஜூனியர் championship போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார். அவரையும் நேரில் சென்று வாழ்த்தி, அவருக்கு அரசின் சார்பில் 4 இலட்சம் ரூபாயை வழங்கியவர் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள். கவுகாத்தியில் அண்மையில் நடைபெற்ற 4th Asian Kho Kho Championship போட்டியில் இந்திய அணி தங்கம் வென்றது. அந்த அணியில் இடம்பெற்ற தென் மாவட்டத்திலுள்ள காளையார்கோவிலைச் சேர்ந்த தம்பி சந்துரு அவர்களையும் நேரில் அழைத்து, ஊக்கம் தந்தவர்தான் நம்முடைய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் என்பதை நான் இந்த நேரத்தில் பணிவோடு எடுத்துச்சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில், எங்கள் மாவட்டத்தில் 13 விளையாட்டுகளின்கீழ் 5 பிரிவுகளில் 6,073 வீரர்களும், 3,479 வீராங்கனைகளுமென மொத்தம் 9,552 நபர்கள் ஒரு மாவட்டத்தில் பங்கெடுத்திருக்கிறார்கள். மாநில அளவில் 3,71,351 வீரர்களுக்கு முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் பெரிய ஊக்கத்தையும் ஆக்கத்தையும் அவர்களுக்கு உருவாக்கியிருக்கின்றன. அதைத்தான் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறை அமைச்சரிடத்திலே பணிவான வேண்டுகோள்–நீங்கள் உருவாக்கவிருக்கிற சர்வதேச விளையாட்டு நகரத்திற்கு தலைவர் கலைஞரின் பெயரைச் சூட்டிட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி நீங்கள் சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் இருக்கக்கூடிய ஒரு gallery–க்கு தலைவர் கலைஞரின் பெயரைப் பெற்றுத் தந்தீர்களோ, அதேபோல் அந்த நகரத்திற்கும் கலைஞரின் பெயரை நீங்கள் கொண்டு வர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணன் அவர்கள் பேசுகிறபோது, சுவாமி விவேகானந்தர் அவர்களைப் பற்றி குறிப்பிட்டு, '100 இளைஞர்களைத் தாருங்கள், இந்த நாட்டை நாங்கள் வளப்படுத்தி காண்பிக்கிறோம்' என்று அவர் சொன்னதாகச் சொன்னார். இன்றைக்கு எங்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், ஒரு இளைஞர்–இன்றைக்கு விவேகானந்தருடைய அந்தக் கருத்துகள் அவருடைய செயலிலும் இருக்கின்றன. "Fill your mind with the high ideals and thoughts. Good deeds will result from that" என்று விவேகானந்தர் சொல்லியிருக்கிறார். உனது மனதை உயர்ந்த இலட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அதிலிருந்து நல்ல செயல்கள் விளையும் என்று சொல்லியிருக்கிறார். அந்த அடிப்படையில்தான் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் நின்று இன்றைக்கு நம்முடைய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களோடு, (மணியடிக்கப்பெற்றது). இரண்டு நிமிடங்கள் தாருங்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்களோடு, விளையாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை ஆகியவற்றை மிகச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்.

2023 ஏப்ரல் 11] [திரு. ஐ.பி. செந்தில்குமார்]

சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை என்பது மிகப் பெரிய துறை, சுமார் ரூ.7,259 கோடி நிதியொதுக்கியிருக்கிறார்கள். அதில் நிறைய விஷயங்கள் இருக்கின்றன. நான் முதல்வன், உங்கள் தொகுதியில் முதலமைச்சர், அதேபோல் மண்டல வாரியாக ஆய்வுகள், களத்தில் முதல்வர் போன்ற திட்டங்கள் இருக்கின்றன. இன்னும் நிறைய திட்டங்கள் இருக்கின்றன. முதலமைச்சரின் புத்தாய்வு திட்டம் என நிறைய திட்டங்கள் குறித்து இங்கே பேசலாம். ஆனால் நீங்கள் நேரம் ஒதுக்க வேண்டும்.

கைத்தறித் துறையைப் பற்றி பேசுகிறபோது, இலவச வேட்டிகள், சேலைகள் குறித்து பேசினார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஒரே ஒரு செய்தியை மட்டும் இங்கே பதிவு செய்ய விரும்புகின்றேன். கைத்தறி நெசவாளர்களுக்கு 2017–லிருந்து வழங்கப்படாமல் இருந்த மானிய நிலுவைத் தொகை ரூபாய் 148.71 கோடியை (மேசையைத் தட்டும் ஒலி) 2021 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு, அந்தத் தொகையை வழங்கியதோடு மட்டுமல்லாமல், 150 கோடி ரூபாயை அதிகமாகக் கொடுத்து 298.71 கோடி ரூபாயை கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கிய ஆட்சி திராவிட மாடல் ஆட்சி. அதேபோல்தான் அடுத்த 2022–2023 ஆம் ஆண்டு 200 கோடி ரூபாய்; ஆக, 498.71 கோடி ரூபாயை கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கிய ஆட்சி இந்த ஆட்சி.

ஜவுளி கொள்கையைக் கொண்டு வந்தது தி.மு.க; துணி நூல் ஆணையரகம் உருவாக்கியது திராவிட மாடல் அரசு; காஞ்சிபுரத்தில் பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப் பூங்கா 10 ஆண்டுகளாகப் பூட்டிக் கிடந்தது; அதனை இன்றைக்கு புதுப்பித்து திறக்கவிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) State Textile Council–ஐ கொண்டு வந்தது; பெரு நெசவு சங்கத்தைக் கொண்டு வந்தது திராவிட முன்னேற்றக் கழகம். (மேசையைத் தட்டும் ஒலி) இலவச மின்சாரத்தை இந்தியாவிலேயே கொண்டு வந்தது திராவிட முன்னேற்றக் கழகம். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரத்தை 300 யூனிட்டாக இன்றைக்கு உயர்த்தித் தந்திருக்கிறார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) விசைத்தறி நெசவாளர்களுக்கு 1,000 யூனிட்டாக உயர்த்தியிருக்கிறார்கள். அதனால்தான் கோயம்புத்தூரில் உள்ள கருமத்தம்பட்டியில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெசவாளர் பெருங்குடி மக்கள் பாராட்டு விழா எடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல,

42 இலட்சத்திற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு சீருடை வழங்குகிற திட்டத்திற்கு ரூ.450 கோடிக்கு மேல் இந்த அரசு ஒதுக்கியிருக்கிறது.

பிற்பகல் 12–55

வேட்டி–சேலைத் திட்டம். அந்தத் திட்டத்தைத் துவங்குவதற்கு முன்பணம் 4 கோடியே 40 இலட்சம் ரூபாயை ஒதுக்கியதும் திராவிட மாடல் அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களே, காலதாமதம் ஒருசில நேரங்களில் ஏற்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அண்ணன் திரு. காந்தி அவர்கள் சொன்னதைப்போல இன்றைக்கு வண்ண வண்ண புடவைகள் வந்திருக்கின்றன. எல்லாப் பகுதிகளுக்கும் அல்ல. ஒருசில பகுதிகளுக்கெல்லாம் வந்திருக்கின்றன. வந்த இடங்களில் இந்த வேட்டியையும் சேலையையும் மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை இந்த நேரத்திலே நான் சொல்ல விரும்புகின்றேன். (மணியடிக்கப்பெற்றது) (மேசையைத் தட்டும் ஒலி)

நிறைவாக, please ஒரே ஒரு நிமிடம். இந்த அவையிலே கடந்த 10 நாட்களாக (குறுக்கீடுகள்) பல்வேறு விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலக்கரி சுரங்கங்கள் தொடர்பான கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பதிலளிக்கின்றபோது, (குறுக்கீடுகள்) நான் முதலமைச்சராக இருக்கின்ற வரை, இந்த அரசு இருக்கின்ற வரை (குறுக்கீடுகள்) தமிழகத்திலே நாங்கள் அதை நுழைய விடமாட்டோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அன்றைக்கு குறிப்பிட்டுப் பேசியது எனக்கு எதை நினைவூட்டுகிறது என்று சொன்னால், ரஷ்யாவிலே Joseph Stalin அவர்கள் 'We don't want a single foot of foreign territory. But we shall not give up a single inch of our own territory either, to anyone' என்று அவர் பேசினார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்கள் கட்சியின் சார்பாக கடைசி உறுப்பினர் பேசும்போது அதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. ஐ.பி. செந்தில்குமார்: எங்களுக்கு வெளிநாட்டு நிலம் ஒரு அடிகூட வேண்டாம். ஆனால், எங்கள் நிலத்தில் ஒரு அங்குலம்கூட நாங்கள் யாருக்கும் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்கிற

உணர்வைத்தான், எங்கள் உரிமைகளை எந்தச் சூழ்நிலையிலும் யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டோம் என்று எங்கள் மக்கள் தலைவர், திராவிட மாடல் அரசினுடைய நாயகர், தலைவர் அண்ணன் தளபதி அவர்கள் இங்கே பதிவிட்டார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி சார்ந்த கோரிக்கைகள் 16 இருக்கின்றன. மூன்றே மூன்று கோரிக்கைகளை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) நீண்ட நாள் கோரிக்கை. எனது தொகுதியிலே பச்சையாறு அணைத் திட்டத்தை எப்படியாவது கொண்டு வர வேண்டும். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடுகள்)*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *இரண்டு, பழனி நகரை சிறப்புநிலை நகராட்சியாகத் தரம் உயர்த்தி, கலிக்கநாயக்கன்பட்டி ஊராட்சி, சிவகிரிப்பட்டி ஊராட்சி, கோதைமங்கலம் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளை இணைத்து, விரிவாக்கம் செய்திட வேண்டும்.*

காலையில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், உள்ளாட்சி நிர்வாகத்தினுடைய பணிக் காலம் முடிந்தவுடன் நாங்கள் இணைக்க இருக்கிறோம் என்று சொன்னார்கள். அப்படி வருகின்றபோது அதையும் இணைத்துத் தர வேண்டும்.

என்னுடைய கொடைக்கானல் நகரத்திலே இருக்கக்கூடிய மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை. அங்கே ஒரு புதிய Master plan, *முழுமைத் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். அதேபோல, ஏற்கெனவே அங்கே விதிகள் மீறப்பட்ட கட்டடங்கள் என்று சொல்லப்பட்டு, வழக்கு முடிந்து, அந்த வழக்கில்—இங்கே துறையினுடைய செயலாளர் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள். அன்றைக்கு அவர்* Secretary, Housing and Urban Development Department *ஆக இருந்தார். நான் அவரை, எதிர்க்கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினராக அன்றைக்குச் சந்தித்திருக்கிறேன். அப்போது* Court *ஓர் உத்தரவு போட்டது. அது என்னவென்றால், தமிழ்நாட்டு அரசின் முதன்மைச் செயலாளர், வீட்டு வசதித்*

துறை அவர்கள் இதில் முடிவெடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, முழுமைத் திட்டத்தையும், ஒரு முறை வரன்முறைபடுத்துதல் திட்டத்தையும் கொடைக்கானல் நகருக்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எனது தொகுதி சார்ந்த கோரிக்கைகளை உங்களிடத்தில் வழங்குகின்றேன். அவற்றை நான் படித்ததாகக் கருதி, அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று கேட்டு, எங்கள் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், இந்த நல்வாய்ப்பை எனக்கு வழங்கிய அண்ணன் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தொகுதிக் கோரிக்கைகள்:

பழனி வட்டம், ஆயக்குடி பேரூராட்சிக்குட்பட்ட வார்டுகளில் உள்ள பொதுமக்கள் பயன்படுத்தும் குடிநீரைச் சுகாதாரமாக வழங்கிட சுத்திகரிப்பு நிலையத்தைப் புதுப்பித்துத் தர வேண்டும்.

பழனி வட்டம், அ.கலையம்புத்தூர் முதல் கொழுமம் வரை உள்ள சாலையை, இருவழிச் சாலையாக மாற்றி, நெய்க்காரப்பட்டியில் புறவழிச் சாலையை அமைத்திட வேண்டும்.

பழனி வட்டம், ஆயக்குடி, பச்சளநாயக்கன்பட்டி, கோம்பைபட்டி ஆகிய பகுதிகளில் விவசாயத்தையும், பொதுமக்களையும் அச்சுறுத்திவரும் காட்டு யானைகள் வராத வண்ணம் அகழிகள் அமைக்க வேண்டும்.

பழனி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புறப் பகுதிகளில் ஒரு சிப்காட் தொழிற்பேட்டை உருவாக்கித் தர வேண்டும்.

கொடைக்கானல் மலைப் பகுதியில் ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

கொடைக்கானல் பெருமாள் மலை முதல் பேத்துப்பாறை, பாரதி அண்ணா நகர், கணேசபுரம், புளியூர், கோவில்பட்டி, வில்பட்டி, ரெட்டியார்புரம் வழியாக கொடைக்கானலுக்கு மாற்று வழித்தடம் அமைத்திட வேண்டும்.

2023 ஏப்ரல் 11] [திரு. ஐ.பி. செந்தில்குமார்]

கொடைக்கானலிலிருந்து பூம்பாறை, மன்னவனூர், கிளாவரை, கேரளா மாநிலம் மூணாறு வரை செல்லும் இணைப்புச் சாலையை வனத் துறையின் அனுமதியோடு அமைத்திட வேண்டும்.

பழனி–கொடைக்கானல் சாலையை தேசிய நெடுஞ்சாலையாகத் தரம் உயர்த்திட வேண்டும்.

தமிழ்நாட்டில் வாழும் குன்னுவ இன மக்கள் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ளனர். குன்னுவ இன மக்களுக்கும் பழங்குடியினத்தவர் இன பட்டியலில் இடம் தந்து கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேற வழிவகை செய்ய வேண்டும்.

விவசாயிகளின் நலன் கருதி, வரதமா நதி அணையின் மேல்பகுதியில் தடுப்பணை கட்டித் தர வேண்டும்.

கொடைக்கானல் மலைப் பகுதி மக்களுக்கு பேருந்து வசதி மற்றும் பழைய பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகள் வழங்க வேண்டும். இங்குள்ள அனைத்து பேருந்துகளிலும் பெண்கள் இலவச பயணம் செய்வதற்கு வழிவகை செய்ய வேண்டும்.

ஒட்டன்சத்திரத்திலிருந்து இரவு 10 மணிக்கு கொடைக்கானல் கீழ்மலை கிராமமான கிழக்குசெட்டிபட்டிக்குச் செல்லும் பேருந்தை நடுப்பட்டி–நல்லூர்க்காடு–குப்பம்மாள்பட்டி வழியாக கிழக்குசெட்டிபட்டிக்குச் செல்ல வழிவகை செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள். (குறுக்கீடுகள்) அடுத்த உறுப்பினர் பேசும்போது அதில் பேசலாம். (குறுக்கீடுகள்) அடுத்து, உங்கள் கட்சியின் உறுப்பினர் திரு. செந்தில்நாதன் பேசும்போது சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள்.

***திரு. ஈ. ராஜா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாழ்வளித்த தாய்–தந்தைக்கும், வாய்ப்பளித்த தலைவருக்கும், வாக்களித்த சங்கரன்கோவில் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது முதற்கண் வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

'மதங்களையும், சாதிகளையும் மறுத்து, மனிதத்தை உன் சிந்தையில் நிறுத்து' என நமக்கெல்லாம் பகுத்தறிவுப் பாடத்தைக்

கற்பித்த திராவிட இனத்தின் கிழக்கு தந்தை பெரியார், 'நெஞ்சிலே வலு இருப்பின் வெற்றி தஞ்சமென்று உரைத்து வந்து நம்மிடம் கெஞ்சுவது உறுதி' என நமக்கெல்லாம் எடுத்துரைத்த திராவிட பெருந்தலைவர் பேரறிஞர் அண்ணா, ஒப்பனை செய்தால் யார் வேண்டுமானாலும் நடிகர் ஆகலாம், கற்பனை செய்தால்கூட இங்கு எவராலும் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் ஆக முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி தன் வாழ்நாள் இறுதிவரை தமிழ்நாட்டிற்கும், தமிழின மக்களின் முன்னேற்றத்திற்கும் முரசொலித்த ஒப்பற்ற தலைவர் கலைஞர் அவர்கள் வகுத்துத் தந்த பாதையில், மகளிர் உயர மாநிலம் உயரும் என மகத்துவமான திட்டங்கள் பல தந்து கொண்டிருக்கும் இந்திய துணைக் கண்டத்தின் நாளைய அரசியலைத் தீர்மானிக்க இருக்கும் ஒப்பாரும், மிக்காரும் இல்லா எங்கள் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன்.

தலைவர் கலைஞரின் சீடனாய், தளபதியாரின் நம்பிக்கையாய், இளம் தலைவர் அவர்களின் அரசியல் ஆலோசகராய், என்னைப் போன்ற இளைஞர்களை கழகத்தில் வழி நடத்தும் பொதுச் செயலாளர் அவை முன்னவர் அவர்களையும் வணங்குகிறேன்.

கிராமப்புற திடல்களில் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்களுக்கும் புது விடியல் வந்ததென நம்பிக்கை வைத்திருக்கும் எங்கள் இளம் தலைவர் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், இலட்சோப இலட்சம் இளைஞர்களின் வழிகாட்டி அண்ணன் திரு. உதயநிதி அவர்களையும் வணங்குகிறேன். நிர்வாக ரீதியாக ஆலோசனைகளை வழங்கிவரும், எங்களுடைய மாவட்ட பொறுப்பு அமைச்சர், மாண்புமிகு திரு. K.K.S.S.R. அவர்களுக்கும் மற்றும் ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவைச் செயலாளர் மற்றும் மாண்புமிகு சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

எனக்கு உறுதுணையாக இருக்கிற கழக நிர்வாகிகளுக்கும், கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுக்கும், என்னோடு பணியாற்றும்

இளைஞர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும், நண்பர்களுக்கும், என் தாய், தந்தை, மனைவி மற்றும் குழந்தைகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல் சுதந்திரப் போராட்ட வீரர், மாவீரன் பூலித்தேவனின் முக்கிய படைத் தளபதியாக இருந்தவரும், சுதந்திரப் போராட்ட வீரருமான மாவீரன் வெண்ணி காலடியார் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், தென்காசி மாவட்டத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் திருவுருவச் சிலை அமைக்கப்படும் என்ற அறிவிப்புக்கு தென்காசி மாவட்ட மக்களின் சார்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமில்லாமல், மனித மூளைக்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மூலமாக மாமல்லபுரத்தில் 182 நாடுகள் பங்குகொண்ட, 2,000-க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்குபெற்ற Chess Olympiad, சதுரங்க விளையாட்டு போட்டியில், வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் பெரிய அளவில் அந்த விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அதன் மூலமாக நம்முடைய கலை மற்றும் கலாச்சாரம், பண்பாடு மற்றும் சுற்றுலாவை உலக நாடுகளுக்குக் கொண்டுசென்ற பெருமை நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு உண்டு.

அதோடுமட்டுமல்ல, அந்த விளையாட்டை சர்வதேச அளவுக்கு, எந்த அளவில் தமிழ்நாட்டில் கொண்டு சென்றோமோ அதே அளவில், திராவிட மாடல் ஆட்சி என்பதை உறுதிப்படுத்தும் அளவிற்கு, மேல்மட்ட மக்கள் மட்டும் விளையாடக்கூடிய விளையாட்டை அடிமட்ட மக்களும் விளையாட வேண்டும்; கிராமப்புறங்களுக்கு அந்த விளையாட்டைக் கொண்டுசெல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடு, அன்று பள்ளிக் கல்வித் துறையின்

மூலமாக பள்ளிகளில் அந்தப் போட்டியை வைத்து, வெற்றி பெற்ற பள்ளிக் குழந்தைகளை விமானத்தின் மூலமாகவும், bus மூலமாகவும், train மூலமாகவும் அழைத்துச் சென்று, இந்த சர்வதேச விளையாட்டில் பங்குபெற வைத்து திராவிட மாடல் ஆட்சியை உறுதி செய்திருக்கக்கூடிய தலைவர்தான் (மேசையைத் தட்டும் ஒலி) நம் திராவிட மாடல் தலைவர், அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்தத் தருணத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, மாவட்டந்தோறும் நடத்தப்படும் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிக்கான பரிசுத் தொகையை அறிவித்து ஊக்கப்படுத்துவதோடு மட்டுமல்லாமல், open game-ல் பள்ளிக்கு ழந்தைகள் பங்குபெற்று, இளமையிலேயே அவர்கள் விளையாட்டில் ஆர்வம் காட்ட வேண்டுமென்ற அடிப்படையிலும்—இன்று எல்லோருக்கும் தெரியும். இன்று, மொபைல் ஃபோனில் மூழ்கியிருக்கக்கூடிய சூழ்நிலையிலிருந்து விடுபட்டுவிட்டோம் என்ற நம்பிக்கையை உருவாக்கியிருக்கின்ற அமைச்சர் அவர்கள்தான் இப்போது பொறுப்பேற்றிருக்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். அந்தளவிற்கு, தான் முதன்முறையாக அமைச்சராகப் பொறுப்பேற்றபோதே இந்தியாவில், தமிழகம் முதலிடத்திற்குக் கொண்டுவரப்படும் என்று சொல்வதோடு விட்டுவிடாமல், அதற்கான முயற்சியும், பயிற்சியும் எடுத்து முழு நேரமும் உழைத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமக்குக் கிடைத்திருப்பது, என்னைப் போன்ற விளையாட்டு வீரர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

விளையாட்டு வீரர்களின் ஓய்வூதியத்தை ரூ.3,000/–லிருந்து ரூ.6,000/– ஆக உயர்த்திட ஆணை பிறப்பித்ததோடு மட்டுமல்லாமல், மாற்றுத் திறனாளிகளுக்கு மற்றும் தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பு ஊக்கத் தொகையும், அவர்கள் பயிற்சி பெறுவதற்கான உபகரணங்கள் வாங்குவதற்காக மானியமும் வழங்கப்படுகிறது என்பதை இந்தத் தருணத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

முத்தமிழும் சங்கமிக்கும் மதுரையில் முற்காலங்களில் நடந்ததைவிட, இப்போது ஜல்லிக்கட்டு போட்டிகள் சிறப்பாக

நடத்துவது, பரிசுத் தொகைகள் வழங்குவது, அதோடு மட்டுமல்லாமல் தமிழுக்கும், வீரர்களுக்கும் பெருமை சேர்க்கின்ற அளவிற்கு இன்று, ஜல்லிக்கட்டுக்கு என்று தனி அரங்கம் அமைக்க நிதி ஒதுக்கப்பட்டிருப்பது நம்முடைய தமிழக ஜல்லிக்கட்டுக்குப் பெருமை சேர்க்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் உள் விளையாட்டரங்கங்கள் அமைத்திட ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதற்கான வேலைகள் மும்முரமாக நடந்து வருகின்றன என்பதையும் இந்தத் தருணத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒருசில கோரிக்கைகளை முன்வைக்கிறேன். நம்முடைய தென் மாவட்டங்களில், தலைவர்கள் பிறந்தநாளாக இருக்கட்டும், பொங்கல் திருவிழாவாக இருக்கட்டும், கோயில் திருவிழா நாட்களில் விளையாட்டுப் போட்டிகள் வைப்பது மற்றும் அதற்காக அனுமதியைப் பெறுவதில் மிகவும் கடினமான சூழ்நிலை இருக்கிறது. ஏனென்றால், அதற்கு நீதிமன்றம் சென்றுதான் அனுமதி பெற வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. நீதிமன்றத்தால் 'consult police station' என்று உத்தரவு பிறப்பிக்கப்படுவதால் முதல் பரிசு ரூ.15,000/– என்று இருந்தாலும், (மணியடிக்கப்பெற்றது) காவல் நிலையத்தில் பாதுகாப்புக்காக கட்டக்கூடிய தொகை ரூபாய் 2 இலட்சமாக உள்ளது. எனவே, அதை ஒருங்கிணைத்து ஒரு குறிப்பிட்ட தொகையை பாதுகாப்புக்காகத் திட்டமிட வேண்டுமென்பதைக் கோரிக்கையாக வைப்பதோடு மட்டுமல்லாமல், முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியில் பளுதூக்கும் விளையாட்டையும், உடற்கட்டு விளையாட்டையும் சேர்க்கும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்ல, கடந்த ஆட்சியில் 3 சதவிகிதம் வேலைவாய்ப்பில் வாய்ப்புக் கொடுத்தோம் என்றார்கள். ஆனால், ஆட்சி முடியும்போது, இறுதியில் 2021 ஆம் ஆண்டு வனத் துறையில் வேலைவாய்ப்பை உறுதி செய்துவிட்டு அதற்குப் பின்பாக எந்தவொரு வேலைவாய்ப்பையும் வழங்கவில்லை. ஆகையினால், அதோடு தொடர்ச்சியாக, வேலைவாய்ப்பில் 3 சதவிகிதமாக இருப்பதை 5 சதவிகிதமாக உயர்த்தித் தர வேண்டுமென்கிற

கோரிக்கையையும், வனத் துறையில் மட்டுமல்லாமல் மற்ற துறைகளிலும் வேலைவாய்ப்பை உறுதி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையையும் வைக்கின்றேன்.

விளையாட்டு வீரர்களை வழிநடத்தும் சங்கங்கள் ஒரு முறையான வட்டத்திற்குள் செயல்படாமல் இருப்பதால் விளையாட்டு வீரர்கள் சரியான வழிகாட்டுதலின்றி, அவர்கள் எவ்வாறு செயல்பட வேண்டும், எப்படி அதற்கான மானியங்களைப் பெற வேண்டுமென்று தெரியாமல் இருக்கிறது. திறமை இருந்தும் சரியான வெற்றிப் பாதைகளைத் தொடரமுடியாமல் திணறுகிறார்கள். எனவே, அரசின் நெறிமுறையோடுகூடிய ஒரு கூட்டமைப்பாக அச்சங்கங்களை உருவாக்கித் தர வேண்டும்.

தமிழக வலுதூக்கும் சங்கம் மற்றும் உடற்கட்டு சங்கத்திற்கான அனுமதியை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமானது மறுபரிசீலனை செய்து உடனடியாக வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதோடு முக்கியமான ஒரு கோரிக்கையாக, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களிடையே விளையாட்டுப் போட்டி நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், உறுப்பினர்கள் எல்லோரும் நல்ல உடல் ஆரோக்கியத்தோடு இருந்தால்தான், வளமோடு தமிழகத்தைக் கொண்டு செல்ல முடியும் என்பதை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் மனஉளைச்சலையும் மாற்றியமைக்கக்கூடிய வகையில் அனைவரிடத்திலும் ஒற்றுமையையும், பாதுகாப்பையும் உறுதிபடுத்தும்வகையில் (மணியடிக்கப்பெற்றது) விளையாட்டுப் போட்டிகளை சட்டமன்ற உறுப்பினர்களிடையே நடத்த வேண்டுமென்பதைக் கோரிக்கையாக வைக்கிறேன்.

அதிக அளவில் கிராமப்புறங்களை உள்ளடக்கிய தொகுதி சங்கரன்கோவில் தொகுதி. அங்குள்ள இளைஞர்கள், பாதுகாப்பு படைக்கும், காவல் துறைக்கும், எல்லைப் பாதுகாப்புப் படைக்கும் செல்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சிக்கு போதுமான ஓடுதளம் இல்லை. 400 மீட்டர் அளவு கொண்ட ஓடுதளமும், நீச்சல் பயிற்சியாளரோடுகூடிய நீச்சல் குளமும் சங்கரன்கோவில் தொகுதியில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்களின் நெஞ்சில் பேரறிஞர் அண்ணா மின்னலாய் இறங்கினார் என்றால், நம் தலைவர் கலைஞர் அவர்கள் மின்சாரமாய் இறங்கினார். தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர்

அவர்களின் ஆட்சியில் விசைத்தறிகளுக்கு 500 யூனிட் இலவச மின்சாரம் அளித்து, அவர்கள் வாழ்வில் விளக்கேற்றினார்கள். தந்தையாய், தலைவராய், அவர் காட்டிய வழியில் வாஞ்சையோடு சிறப்பாக ஆட்சி நடத்தும் தமிழகத்தின் தன்னிகரற்ற முதல்வர் தலைவர் தளபதியார் அவர்கள் 1000 யூனிட் மின்சாரம் என உயர்த்தியும், உயர்த்தப்பட்ட மின்கட்டணத்தில் பாதியைக் குறைத்தும் உத்தரவிட்டு, நெசவாளர்கள் வாழ்வில் விடியலை ஏற்படுத்தியுள்ளார். எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.*

திரு. ஈ. ராஜா: *இன்னும் நிறைய இருக்கிறது. தொகுதிக் கோரிக்கைகளும் இருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *தொகுதிக் கோரிக்கைகளைக் கொடுத்துவிடுங்கள், அவை பதிவு செய்துகொள்ளப்படும். நேரமில்லை. இன்னும் இரண்டு மாண்புமிகு அமைச்சர்களின் பதிலுரை இருக்கிறது. (குறுக்கீடு) சரி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. ஈ. ராஜா: *அதேபோல், விவசாயத்தை முன்னேற்றவும், விவசாயிகளுக்கு உதவிடவும் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் அமைந்ததுபோல், விசைத்தறி நெசவாளர்களுக்கு கூட்டுறவுக் கடன் சங்கம் அமைத்து, நெசவுத் தொழிலை முன்னேற்ற உதவிட வேண்டுகிறோம். நெசவுத் தொழிலுக்கு மிகப்பெரும் அச்சுறுத்தலாக, நாளும் ஏறும் நூல் விலை உள்ளது. தமிழ்நாட்டில்* Cotton Corporation of Tamil Nadu *என்ற அமைப்பை தகுந்த நிதியாதாரத்தோடு ஏற்படுத்தி, பருத்தியை விவசாயிகளிடமும், பஞ்சினை* spinning *ஆலைகளிடமும் கொள்முதல் செய்து, அதனை நூல் உற்பத்தி செய்யும் நூற்பாலைகளிடம் நேரடியாக வழங்க வேண்டும். இதன்மூலம் இடைத்தரகர்கள் செயற்கையாக ஏற்படுத்தும் நூல்விலை ஏற்றம் தடுக்கப்பட்டு, பருத்தி, பஞ்சு, நூல் ஆகியவற்றின் விலை கட்டுக்குள் வந்து, தொழில் செழிக்கும் என நெசவாளர் தரப்பில் தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. (மணியடிக்கப்பெற்றது)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. ஈ. ராஜா: ஒரே நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன். இலவச வேட்டி சேலை உற்பத்தியை முறைப்படுத்தி, மே, ஜூன் மாதத்தில் ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன். தொகுதிக் கோரிக்கைகள்.

பிற்பகல் 1–10

தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சங்கரன்கோவில் ஒன்றியம், குருவிகுளம் ஒன்றியம், மேலநீலிதநல்லூர் ஒன்றியம், மானூர் ஒன்றியத்தில் நிலத்தடி நீர் 100 சதவிகிதம் இல்லையென 28–10–2021–ல் அரசாணை எண் 155–ல் பொதுப் பணித் துறையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்கண்ட 4 ஒன்றியங்களிலும் சுமார் 408 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. கடந்த ஆட்சியில் தலைவர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்த தாமிரபரணி கூட்டுக் கூடிநீர்த் திட்டமும், மானூர் கூட்டுக் குடிநீர் திட்டமும்—26 உடைப்புகள் ஏற்பட்டு, 14 நாட்களுக்கு ஒருமுறை தண்ணீர் கிடைப்பதால்— இந்தத் திட்டம் கொண்டுவந்தால் மட்டும்தான் மக்களின் வாழ்வாதாரம் செழிக்கும் என்பதை தாழ்மையோடு பணிவோடு கேட்டுக்கொண்டு. . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள். (குறுக்கீடு) தொகுதிக் கோரிக்கைகளையெல்லாம் அவையில் படித்ததாகப் பதிவு செய்துகொள்ளப்படும். நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. ஈ. ராஜா: என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளை அவையில் படித்ததாகப் பதிவு செய்துகொள்ளுமாறும், என்னை, தென்காசி வடக்கு மாவட்ட கழகச் செயலாளராக, இன்று சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினராக மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஏனைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

2023 ஏப்ரல் 11] [திரு. ஈ. ராஜா]

தொகுதிக் கோரிக்கைகள்:

திருவள்ளூர்,ராணிப்பேட்டை,சேலம்,ஈரோடு,திருச்செங்கோடு, மதுரை, விருதுநகர், கும்பகோணம், தென்காசி போன்ற தேவை உள்ள மாவட்டங்களில் அரசின் செலவில் சாயமிடுதல், சைசிங், பிரிண்டிங் போன்ற ஆலைகளை முழு வசதியுடன் அமைத்து அதனை விசைத்தறி, கைத்தறி நெசவாளர்களுக்கு வாடகைக்கு வழங்க வேண்டும்.

சங்கரன்கோவில் தொகுதிக்கு, ஓடுதளம் ஒன்று குறைந்தபட்சம் 400 மீட்டர் அளவில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையக் கட்டுப்பாட்டில் சங்கரன்கோவில் கோமதி அம்மாள் அரசு ஆண்கள் மாதிரிப் பள்ளியில் அமையவுள்ள மினி ஸ்டேடியத்தின் அருகிலேயே அமைத்திட வேண்டும்.

வாசுதேவநல்லூர் தொகுதி,செண்பகவல்லி அணைக்கட்டினைச் சீர் செய்ய வேண்டும்.

சங்கரன்கோவில் தொகுதி, மானூர் ஒன்றியம், வன்னிக்கோனேந்தல்–ஊத்துமலை கிராமத்திற்கு நடுவில் உள்ள 930 மீட்டர் தூரத்திற்கு வனத் துறையின் அனுமதி பெற்று தார் சாலை அல்லது பாலம் அமைத்திட வேண்டும்.

இளையரசனேந்தல் பிர்காவினை தூத்துக்குடி மாவட்டத்துடன் இணைக்க வேண்டும்.

கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு விரைவில் அனுமதி வழங்கி ஆணை பிறப்பித்திட வேண்டும்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தில் முக்கிய 10 கோரிக்கைகளில் ஒன்றான சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி, களப்பாகுளம் ஊராட்சியில் என்.ஜி.ஓ. காலனி, கலைஞர் நகர், நேதாஜி நகர், எழில் நகர், நெசவாளர் காலனி, பாரதி நகர், சண்முக நகர் போன்ற பகுதிகளை, ஊராட்சியிலிருந்து பிரித்து—சங்கரன்கோவில் நகராட்சிக்குத் தேவையான அரசு நிலங்கள் கிடைத்திடும் என்ற நோக்கத்தோடு,—மேற்படி ஏழு பகுதிகளையும் சங்கரன்கோவில் நகராட்சியுடன் இணைத்திட வழிவகை செய்திட வேண்டும்.

சங்கரன்கோவில் தொகுதி, நடுவக்குறிச்சி மேஜர் மற்றும் மைனர் கிராமம், பட்டாடைகட்டி, சின்ன கோவிலாங்குளம்

ஆகிய நான்கு கிராமங்களின் நிலங்களை கிராமதான கிராமசபை என்றிருப்பதை முன்பிருந்த நிலங்களின் உரிமைதாரர்கள் பெயருக்கே மாற்றி பட்டா வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ் அவர்கள்.*

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *2023–2024 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்விக் கண் திறந்த கர்ம வீரர் பெருந்தலைவர் காமராஜரால் வழிநடத்தப்பட்ட காங்கிரஸ் பேரியக்கத்தின் தியாகத் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களையும், பாரத் ஜோடோ யாத்திரையை மேற்கொண்டு, வேற்றுமையையும், வெறுப்புணர்வையும் தூண்டும் அரசியல் போக்கிலிருந்து இந்தியாவை ஒற்றுமைப்படுத்திச் செல்லக்கூடிய, ஒரே தலைவர், எங்கள் தலைவர் தகுதி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ராகுல் காந்தி அவர்களையும் வணங்கி, மகளிருக்கு மாதந்தோறும் உரிமைத் தொகை ரூபாய் ஆயிரம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க அரசாணையை வெளியிட்டு, அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி என்ற ஒரு மாபெரும் திட்டத்தை இன்னும் விரிவாக்கம் செய்து, தொழில் துறை மற்றும் அனைத்துத் துறைகளிலும் பல சாதனைகளைச் செய்து, எடுத்துக்காட்டாக செஸ் ஒலிம்பியாட்டை தமிழ்நாட்டில் நடத்தி உலகத்தையே தமிழ்நாடு பக்கம் திரும்பிப் பார்க்கச் செய்த, நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் தொடர்ந்து, இரண்டு வருடங்களாக தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்று, மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தமிழக அரசிற்கும், என்னுடைய வாழ்த்துகளையும் நன்றியையும் கூறிக்கொள்கிறேன். அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே அவர்களுக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஐயா அழகிரி அவர்களுக்கும், எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், எங்களுடைய பாசமிகு மாவட்ட செயலாளர் மாண்புமிகு அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும், எங்களுடைய ஸ்ரீவைகுண்டம் தொகுதி மக்களுக்கும், என் வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்பதற்கு மிகப்பெரும் காரணமாக அமைந்த நம்முடைய மாண்புமிகு அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுடைய பிரச்சாரம்,*

2023 ஏப்ரல் 11] [திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்]

தமிழ்நாட்டின் இளைஞர்களின் மத்தியிலும், தாய்மார்களின் மத்தியிலும் மிகவும் வரவேற்பைப்பெற்றது.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சராக நீங்கள் இருக்கும் காலம் இந்தத் துறைக்கு ஒரு பொற்காலமாக அமைய வேண்டும் என்று வாழ்த்தி, உங்கள் காலத்தில் இளைஞர்களுக்கு பல நன்மைகளும் சென்றடைய வேண்டும். தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் ஒரு காலமாக இது அமையும் என்று நாங்கள் வாழ்த்துகிறோம்.

இன்றைய காலகட்டத்தில் online சூதாட்டம், online rummy மற்றும் பலவகையான போதை வஸ்துக்கள், இதில் சிக்கித் தவிக்கும் இளைஞர்களுக்கு விளையாட்டு என்பது ஒரு நல்ல பொழுதுபோக்காகும். இளைஞர்களின் உடல் வலிமை மற்றும் மன வலிமையைப் பெருக்கி, குடும்பத்தையும், சமுதாயத்தையும் மேம்படுத்தும் தகுதியான குடிமக்களை அது உருவாக்குகிறது.

மாணவப் பருவத்திலேயே விளையாட்டில் ஈடுபடுவதால் அவர்களுடைய கூட்டு முயற்சி மற்றும் மக்கள் தொடர்பு திறன்கள் பெருகுகின்றன. அதனால் மாணவப் பருவத்திலேயே, அவர்கள் எந்தெந்த விளையாட்டில் சிறந்து விளங்குகிறார்கள் என்பதை talent hunt செய்ய வேண்டும். அனைத்துப் பள்ளிகளிலும் விளையாட்டிற்கான முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதா என்பதை நம்முடைய அரசு இன்னும் கண்காணிப்பு செய்ய வேண்டும். இதில் ஓர் ஆலோசனை, ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு physical education என்பதைக் கட்டாயமாக்கி, அதற்கும் mark கொடுத்தார்கள் என்றால், மாணவர்கள் இன்னும் அதில் முக்கியத்துவம் செலுத்துவார்கள் என்று எண்ணுகிறேன்.

மாணவர்களிடையே ஒழுக்கமும், நற்பண்பும், தலைமைப் பண்புகளும் உருவாக்க பேருதவியாக இருப்பது, NCC, NSS போன்ற அமைப்புகள். இதில் கல்லூரியிலோ அல்லது school–லிலோ ஒரு வருடமாவது மாணவர்கள் சேர்ந்து பங்காற்றச் செய்ய அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

பிற்பகல் 1–15

விளையாட்டுத் துறையில் தொடர்ந்து வீரர்களுக்கு ஊக்கத்தையும், அநேக வசதிகளையும் நம்முடைய அரசு வழங்கி

வருகிறது. அதன்மூலம் தமிழகம் மற்றும் தேசிய அளவிலான திறமைமிக்க விளையாட்டு வீரர்கள் உருவாக்கப்பட்டு வருகிறார்கள்.

அதுபோல், தாயுள்ளம்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகிறேன். விளையாட்டில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கு காவல் துறையில் மட்டும்தான் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. அனைத்துத் துறைகளிலும் நம்முடைய மாநில அரசு விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அரசு அங்கீகாரம் பெற்ற விளையாட்டுச் சங்கங்கள் நடத்தும் போட்டிகள் போலவே, அரசு அங்கீகாரம் பெறாத சங்கங்களும் விளையாட்டுப் போட்டிகள் நடத்துகின்றன. அதன் மூலம் வேலைவாய்ப்பு கிடைக்கும் என நம்பி ஏமாறும் இளைஞர்களும் அதிகமாக உள்ளனர். இதை நம்முடைய அரசு கண்டறிந்து, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

என்னுடைய தொகுதியில் விரைந்து முடிக்கப்பட வேண்டிய சில மிக முக்கியமான கோரிக்கைகள் உள்ளன.

ஸ்ரீவைகுண்டம் தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கைக்கேற்ப, ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில் காலியாக உள்ள மருத்துவர்கள், செவிலியர் மற்றும் உதவியாளர் பணியிடங்களை மிகவும் வேகமாக விரைந்து நிரப்பி, மருத்துவமனையை விரிவாக்கம் செய்து, அவசர சிகிச்சைப் பிரிவு, dialysis centre ஆகிய அவசியமாக தேவைப்படும் நவீன வசதிகளை அரசு உடனடியாக ஏற்படுத்த வேண்டும். தற்போது மருத்துவத்திற்காக மக்கள் திருநெல்வேலி வரைக்கும் செல்ல வேண்டிய நிலையிருக்கிறது.

ஸ்ரீவைகுண்டத்தில்தான் நவ திருப்பதி திருத்தலங்கள் இருக்கின்றன. அவற்றை ஒன்றிணைப்பதற்கு அப்பன்கோவில், இரட்டை திருப்பதி ஆகிய இரண்டு இடங்களுக்கும் இடையில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஓர் உயர்மட்டப் பாலம் அமைத்துத்தர வேண்டும்.

மேலும், அங்கே அநேக பக்தர்கள் வருகின்ற காரணத்தினால், குடிதண்ணீர், கழிப்பிடம் போன்ற அடிப்படை வசதிகள் அவசியமாகத் தேவைப்படுகின்றன.

2023 ஏப்ரல் 11] [திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்]

ஸ்ரீவைகுண்டம், ஆழ்வார்திருநகரி, ஏரல் ஆகிய பேரூராட்சிகளுக்கு குடிநீர், தாமிரபரணி ஆற்றிலிருந்து நேரடியாக எடுக்கப்பட்டு வருகிறது. ஆனால், தண்ணீர் கலங்கிய நிலையில், மாசு நிறைந்து வருவதால் மக்களுக்கு தொற்று நோய்கள் ஏற்படுகின்றன. எனவே, இம்மூன்று பேரூராட்சிகளுக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்க வேண்டும், என்பது ஓர் அத்தியாவசியமான தேவையாக இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது)

மணிமுத்தாறு அணையிலிருந்து ஸ்ரீவைகுண்டம் தொகுதிக்குட்பட்ட சாத்தான்குளம் தாலுகாவில் செல்லும் மூன்றாவது மற்றும் நான்காவது reach கால்வாய்கள் தூர் வாரப்பட வேண்டும்.

அதேபோல, சாத்தான்குளத்திலும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் Jal Jeevan திட்டத்தின்கீழ் குடிநீர் இணைப்பு இருந்தாலும், நீராதாரம் இல்லாததால் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படுகிறது. இதைப் போக்கும் விதமாக சாத்தான்குளம்–உடன்குடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக அரசு மேற்கொள்ள வேண்டும். இது ஒரு முக்கியமான கோரிக்கை ஆகும்.

தாமிரபரணி ஆற்றில் இருக்கும் கடைசி அணைக்கட்டுதான் ஸ்ரீவைகுண்டத்தில் இருக்கிறது. இது கடந்த 50 ஆண்டுகளாகத் தூர் வாரப்படவில்லை. 8 அடி ஆழம் இருக்க வேண்டும். ஆனால், தற்போது 3 அடி ஆழம்தான் இருக்கிறது. அதனால், மழைநீர் வரும்போது, கடல் நீரோடு கலந்துவிடுகிறது. எனவே, இந்த அணையை ஆழப்படுத்தினால் அங்குள்ள விவசாயிகளின் பாசனத்திற்கும், குடிநீருக்கும் பேருதவியாக இருக்கும் என்பதால், இந்த அணையை ஆழப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீவைகுண்டம் பகுதியிலுள்ள தாமிரபரணி ஆற்றில் சீமைக் கருவேல மரங்கள் வளர்ந்து நீரின் பாதையைத் தடுக்கும் வகையிலும், நீர் வளத்தைக் குறைக்கும் வகையிலும் இருக்கின்றன. எனவே, அவற்றை அகற்றும் பணிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *மாணவிகள் அதிகமுள்ள ஏரல் அரசு மகளிர் பள்ளிக் கட்டடம் இடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இந்நிலையில் புதிய கட்டடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கி, விரைந்து பணிகளை முடித்துத் தர வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

சாயர்புரம் பேரூராட்சியில் 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட water tank, *மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வேண்டும்.*

பெரியதாழை மீனவக் கிராமத்தில் மணல் அரிப்பு மற்றும் ஆழிப் பேரலையைத் தடுக்க தூண்டில் வளைவு பாலம் அமைத்துத்தர வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மணப்பாடில் எவ்வாறு அமைத்துக் கொடுத்திருக்கிறார்களோ, அதைப்போல இங்கேயும் தேவைப்படுகிறது.

பெரியதாழையை தனி வருவாய்க் கிராமமாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கையும் எழுந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். அவற்றைப் பதிவு செய்துகொள்ளலாம். நேரமாகிவிட்டது. இரண்டு அமைச்சர்கள் பதிலுரையாற்ற வேண்டும்.*

திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ்: *முக்கியமான கோரிக்கை. ஸ்ரீவைகுண்டம் சட்டமன்றத் தொகுதி, அதிகமான கிராமப்புறங்கள் நிறைந்த தொகுதி. இங்கே மாணவ, மாணவிகள் அரசுப் பேருந்துகளில்தான் பள்ளிக்குச் செல்கின்றனர். ஆனால், போதிய ஓட்டுநர்களும், நடத்துநர்களும் இல்லாத காரணத்தினால், பள்ளி மாணவ, மாணவியர் பள்ளிக்குச் செல்ல முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. நம்முடைய மாநில அரசு கல்விக்கென்று எடுக்கும் பல முயற்சிகள் இதனால் வீணாகவும் போகின்றன. தாயுள்ளம்கொண்ட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இக்கோரிக்கையை நான் சமர்ப்பிக்கின்றேன். தயவுகூர்ந்து தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர் அவர்கள்.*

பிற்பகல் 1–20

திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரியான பிடிவாதம், சறுக்கி விடாத தன்மானம், வலுவான வரலாறு, வளமான பகுத்தறிவாய் தந்தை பெரியார்; (மேசையைத் தட்டும் ஒலி) புல்லாங்குழலின் பொத்தல்களிலே புகுந்து வரமுடியாத தமிழ் கடலாய் அறிஞர் அண்ணா; (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளங்கை விட்டு ஓடிவிடா ரேகைபோல் உடன்பிறப்பை விட்டு ஒதுங்கி விடாத தலைவர் கலைஞர்; (மேசையைத் தட்டும் ஒலி) சூரியனைப்போல் தினம், தினம் உதிப்பதால் வெளிச்சங்களுக்கு விலாசமாகும் தலைவர் தளபதி; (மேசையைத் தட்டும் ஒலி) கழக இளைஞர்களுக்கு மலிவுப் பதிப்பாய், விளையாட்டு வீரர்களுக்கு பரிசு பதிப்பாய் துலங்கும் எங்கள் சின்னவர் உள்ளிட்ட (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா மாண்புமிகு அமைச்சர்களையும் வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) சுமார் 42,479 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெற வைத்து, இந்த அவையில் நான் நிற்கக் காரணமான எனது டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதியின் வாக்காளப் பெருமக்களையும் வணங்குகின்றேன்.*

கடந்த 10 ஆண்டுகளில், பாராமுகமாய் இருந்த ஆட்சியாளர்களால் மிகவும் பின்தங்கியிருந்த எனது டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்றத் தொகுதியில் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வு காணும் வண்ணம், தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று, எழில் நகர், நேரு நகர் ஆகிய railway crossings*-ல் மேம்பாலம் அமைக்கும் பொருட்டு, முதல்கட்டமாக எழில் நகர் மேம்பாலத்திற்கு ரூ.96 கோடி ஒதுக்கீடு செய்து பணிகளைத் துவக்கியமைக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) ரூ.10 கோடி மதிப்பீட்டில் கொருக்குப்பேட்டை சுண்ணாம்புக் கால்வாய் பகுதியிலே மாபெரும் விளையாட்டு வளாகம் அமைக்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளமைக்கும் நன்றி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜன் செல்லப்பா அவர்கள் பேசுகின்றபோது, இந்த விளையாட்டு வளாகத்தைப் பற்றி கூறினார்கள். இந்த விளையாட்டு வளாகம் என்பது சென்னை பெருநகர் மாநகராட்சியின் சார்பாக மேற்கொள்ளப்படுகின்ற ஒரு பணி. இதற்கான* tender *விடப்பட்டு வருகின்ற 20 ஆம் தேதி*

[திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்] [2023 ஏப்ரல் 11

அத்தகைய பணிகளுக்கு tender இறுதி செய்யப்படவிருக்கிறது. அதற்கான இடங்கள் கையகப்படுத்தப்பட்டு, இந்த மாத இறுதிக்குள் அந்தப் பணியை துறை சார்ந்த மாண்புமிகு அமைச்சர்களின் அனுமதியைப் பெற்று துவங்கவிருக்கிறோம் என்பதை இந்த அவையிலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அந்தச் சுண்ணாம்புக் கால்வாய் அருகிலே, கடந்த ஆட்சியில் 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 ஏக்கரில் பசுமை பூங்கா அமைக்கும் திட்டத்திற்காக ரூ.8.5 கோடி நிதி ஒதுக்கினார்கள். இன்றையதினம் அந்தப் பூங்கா அங்கே இருக்கிறதா என்று கேட்டால்,—இன்றையதினம் சமூக ஆர்வலர் ஒருவர், வடிவேல் படத்தில் வருகிற மாதிரி அந்தப் பூங்காவை அங்கே காணவில்லையென்று காவல் துறையில் புகார் கொடுக்கின்ற அளவிற்குத்தான் கடந்த கால நிகழ்வுகள் எல்லாம் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) ஆதாரம் இருக்கிறது. நீங்களும் நேரில் வரலாம். ஆதாரம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் subject மாறி பேசுங்கள்.

திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வண்ணம் (குறுக்கீடுகள்) குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வண்ணம் ரூ.18 கோடி மதிப்பீட்டில் நீரூட்டு நிலையம் அமைக்க அறிவிப்பு செய்தமைக்கும், கடந்த 40 ஆண்டுகளில் எந்த வங்கிச் சேவையும் இல்லாத, சுமார் 1½ இலட்சம் மக்கள் வசிக்கின்ற டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் மேற்கு பகுதியில் மத்திய கூட்டுறவு வங்கியைத் தொடங்கிட வேண்டுமென்கின்ற என்னுடைய கோரிக்கையினை ஏற்று, கூட்டுறவு வங்கியினைத் துவங்க அறிவிப்பு செய்தமைக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், உறுதுணையாக இருந்த தொடர்புடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என் நன்றியினை தொகுதி மக்கள் சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2023 ஏப்ரல் 11] [திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களையும் வணங்கி உரையைத் துவங்குகின்றேன். ஜாதி, மதம், இனம், மொழி என்று எந்த ஒரு பேதமுமின்றி, மக்களை ஒன்றிணைக்கும் சக்தியாய் விளையாட்டு திகழ்கிறது. உலகக் கால்பந்து போட்டிகளும், உலகக் கோப்பை Cricket*-போட்டிகளும் இதற்கு நல்ல உதாரணங்கள். தன்னம்பிக்கை, விடாமுயற்சி, ஒழுக்கம் போன்ற பண்புகளுடன், அறிவும் வளர்ச்சியடைய விளையாட்டு முக்கியப் பங்கு வகிக்கிறது. இதன்மூலம் உடல் ஆரோக்கியம் பேணப்படுவதோடு, நாட்டின் பெருமையும் வெளிப்படுத்தப்படுகிறது.*

திராவிட மாடல் ஆட்சி நடத்திவரும் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொற்கால ஆட்சியில், இந்த நிதிநிலை அறிக்கையில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்திற்கு ரூ.1,000 கோடியும், சிங்காரச் சென்னைக்கு ரூ.500 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்து நல் அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை வாசி, குறிப்பாக வடசென்னை வாசி என்கின்ற அடிப்படையில் தங்களை நன்றியோடு வணங்குகிறேன்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சர்வதேச Chess Olympiad *போட்டியை, சென்னையில் வெற்றிகரமாக நடத்தியும், மாநிலமெங்கும் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்தியும், விளையாட்டுத் துறைக்கு புது உத்வேகத்தை அளித்தும் வருகிறார்.*

அடுத்த கட்டமாக, சென்னையில் ஓர் உலகளாவிய அதிநவீன விளையாட்டு நகரத்தை அமைக்கவும், அதன்மூலம் விளையாட்டுகளின் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதுடன், முன்னணி விளையாட்டுப் போட்டிகளின் முனையமாக அதனை அமைக்கவும், இதற்குப் பன்னாட்டு வல்லுநர்களின் துணை கொண்டு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கவும், தொடர் முயற்சிகளை எடுப்பதாக இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ரூபாய் 25 கோடி மதிப்பீட்டில், நவீன விளையாட்டு வசதிகளுடன் சென்னை ஜவஹர்லால் நேரு திறந்தவெளி விளையாட்டு அரங்கத்தை சீரமைக்கும் பணிகள் விரைவாக மேற்கொள்ளப்படும் என்று அறிவிப்பு செய்திருக்கிறார்கள்.

[திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்] [2023 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"உழவனோடு தொழிலாளி
உலகம் போற்றும் அறிவாளி
உடைநெய்யும் நெசவாளி, முதலாளி
கலைமேடை, எழுத்தாளி
கவிஞனோடு பாட்டாளி
கல்உடைக்கும் உழைப்பாளி, கூட்டாளி
எல்லோருமே ஒண்ணாகணும் நாட்டிலே"

என்ற வில்லுப்பாட்டு கவிஞர் சுப்பு ஆறுமுகத்தின் பாடல் வரிகளுக்கிணங்க, நெருப்புக் கோபம் இல்லாத, ஊஞ்சல் நெஞ்சம் இல்லாத, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின், இந்த ஆட்சி, மக்கள் நலனுக்காக நாள்தோறும் உழைத்து வருகின்றது.

பிற்பகல் 1–25

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், 1.5 இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கியது, இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48 இப்படி எண்ணற்ற திட்டங்களால் இன்று தமிழ்நாடு தலைநிமிர்ந்து நிற்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆப்கானிஸ்தானில் இரயில்கள் இல்லை, ஆப்பிரிக்காவில் புலிகள் இல்லை, ஆஸ்திரேலியாவில் கரடிகள் இல்லை, ஈக்களிடம் பற்கள் இல்லை, சந்திரனில் வாயுக்கள் இல்லை, சவுதியிலே நதிகள் இல்லை என்பது போல், நம் திராவிட மாடல் ஆட்சிக்கு மாற்றாக இனி தமிழ்நாட்டில் எந்த ஆட்சியும் அமைய வாய்ப்பே இல்லை என்கின்ற நிலைமையை உருவாக்கிவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களையும், கழகத்தின் இரு கண்களாக எல்லோரையும்போல நானும் பார்க்கிறேன். பார்த்து வியக்கிறேன்.

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் தொகுதி, இடையகோட்டையில் உள்ள,பெருமாள்கோவிலுக்குச்சொந்தமான நிலத்தில், ஒரே நேரத்தில் மா, வேம்பு, நாவல், இலுப்பை, அத்தி, புளி, தேக்கு உள்பட 43 வகையான மரக்கன்றுகளை, 6 இலட்சம் என்ற எண்ணிக்கையில் நட்டு சாதனை படைத்திருக்கிறார்கள்.

2023 ஏப்ரல் 11] [திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்]
உலக கின்னஸ் சாதனையில் இது இடம்பெறப் போகிறது. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், தாம் பொறுப்பேற்றதும் முதல் நிகழ்ச்சியாக, இச்சாதனைக்கு முத்தாய்ப்பாக 6 இலட்சத்து ஒன்றாவது மரக்கன்றை நட்டு, தனது பசுமை எண்ணத்திற்கு அங்கே ஒரு பச்சை வண்ணம் பூசியிருக்கிறார்.

விளையாட்டுத் துறை அமைச்சராக அவர் பொறுப்பேற்றதிலிருந்து, விளையாட்டுப் போட்டிகள் எங்கு நடந்தாலும் அங்கு சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, அங்குள்ள விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தி வருகிறார். 'விளையாட்டு' என்பது பூமித் தாயின்மீது மரகதப் போர்வை போர்த்தி அழகுபார்க்கும் ஓர் அதிசயம்! பச்சைக் கம்பளம் விரித்து கண்களைக் குளிர்விக்கும் ஓர் ஓவியம்! அந்தவகையில், மாற்றுத் திறனாளிகளுக்கான ஒலிம்பிக் போட்டியில் விளையாடி, தங்கம் உள்ளிட்ட 3 பதக்கங்களை வென்ற மதுரை மாணவி ஜெர்லின் அனிகாவை நேரில் சென்று பாராட்டினார்.

அவருக்கு, கடந்த ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சார்பில், ரூ.79.5 இலட்சம் ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது என்பதனை இந்த அவையில் பெருமையோடு, பதிவு செய்ய விரும்புகிறேன். ** (குறுக்கீடுகள்) புறந்தள்ளி, இன்று அகிலம் வியக்கும் திராவிட மாடல் ஆட்சியில்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் அந்த வார்த்தைகள் நீக்கப்படுகின்றன, நீங்கள் பேசுங்கள்.

திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: விளையாட்டுத் துறையின் முனைப்பை எடுத்துக்காட்டும் விதமாய், வரும் ஜூன் மாதம் சென்னையில் உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டி நடக்கவிருப்பதை நாமெல்லாம் அறிவோம்!

எவரெஸ்ட் சிகரம் ஏறவிருக்கும், சென்னையைச் சார்ந்த முத்தமிழ்ச்செல்வி என்பவர், தன்னிடம் விடுத்திருந்த கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்] [2023 ஏப்ரல் 11

விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மூலமாக நிதியுதவியாக ரூ.10 இலட்சத்திற்கான காசோலையை 28–3–2023 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கி, அவரை ஊக்கப்படுத்தினார். மேலும், தன்னார்வலர்கள்மூலம் வரப்பெற்ற ரூ.15 இலட்சம் நிதியையும் அவருக்கு வழங்கியுள்ளார்.

எப்போதும் விளையாட்டைப் பற்றியே இவர் சிந்திப்பதால், எப்போதும் விளையாட்டைப் பற்றியே இவர் சிந்திப்பதால், தோல்விகள் கூட விளையாட்டு வீரர்களைச் சந்திக்க கொஞ்சம் சிந்திக்கின்றன என்கின்ற யதார்த்த உண்மையை நான் இங்கு சொல்லியாக வேண்டும்.

பகத்சிங் போல் துணிவும், பாபர் போல் பலமும், பாரதி போல் வீரமும், வாஞ்சியைப் போல் வைராக்கியமும் கொண்டு இவர் உத்திகள் வகுப்பதால்தான், இவர் துறையிலே இவருக்கு வெற்றிகள் குவிகின்றன.

தான் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, ரூபாய் 10 ஆயிரம் கோடிக்கு மேல், வங்கிக் கடன் இணைப்புகளை, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு இவர் வழங்கியுள்ளார். தன்னைப் பார்க்க வருபவர்கள் தனக்குத் தரும் பரிசுப் பொருட்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள் தரும் பொருட்களாகத்தான் இருக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துள்ளார்.

45 ஆயிரம் கிராமப்புற இளைஞர்களுக்குத் திறன் பயிற்சி வழங்கப்படும். கொத்தடிமைத் தொழிலாளர்கள் மறுவாழ்வுக்காக பொருளாதாரக் கூட்டமைப்புகள் ரூ.7.34 கோடி செலவில் உருவாக்கப்படும் என்று அண்மையிலே இவர் அறிவிப்புகளை வெளியிட்டிருக்கிறார். கால வெள்ளத்தால் கரைந்து போகாத இந்தக் காவியப் புன்னகையை, புழுதி மண்ணுக்கு புனிதத்தை கொடுத்து, புதுயுகம் படைக்கும் புரட்சிக்கான இந்த பூபாளத்தை, இன்று மாதர் குலம் உச்சி முகர்ந்து பாராட்டுகின்றது. மக்கள் பணியைப் போலவே கழகப் பணிகளிலும் தனது முத்திரையை இவர் பதித்து வருகிறார்.

‘ஆட்சிக்கு வந்தால் கட்சியைக் கைவிட்டு விடுவார்கள்’ என்கின்ற வழக்கு மொழிக்கு மாறாகக் கழகத்தின் கொள்கைகளை, அதன் போராட்ட வரலாற்றை, அதன்மூலம் தமிழ்நாடு பெற்ற பலன்களை, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து இளைஞர்களுக்கும்

2023 ஏப்ரல் 11] [திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்]

கொண்டுசேர்க்கும் வண்ணம், 'திராவிட மாடல் பயிற்சிப் பாசறை'யைத் தொகுதிவாரியாக நடத்தி முடித்துள்ளார். அப்படியே, இல்லந்தோறும் இளைஞர் அணி என்ற முன்னெடுப்பின்மூலம் கழகத்தை அடுத்த தலைமுறைக்கும் கொண்டு சேர்த்திருக்கிறார்.

கழக இளைஞர்கள் இவரை நேரில் வணங்கும்போது தங்களையும் அறியாமல் "தலைவா" என்கிறார்கள், கழக இளைஞர்கள் இவரை நேரில் வணங்கும்போது தங்களையும் அறியாமல் "தலைவா" என்கிறார்கள். அப்படி அழைப்பதிலே ஒரு பாசம், ஒரு பிணைப்பு, ஓர் ஆனந்தம் இருப்பதை அவரும் அறிவார், நாமும் அறிவோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓடுதல், தாவுதல், குதித்தல், வளைதல், தாண்டுதல், சுழலுதல் போன்ற செயல்களை உள்ளடக்கிய பச்சைக் குதிரை, பம்பரம், கிட்டிப்புள், பந்து, கோலிக் குண்டு, புளிய முத்து, கபடி, கள்ளன் போலீஸ் போன்ற சிறுவர் விளையாட்டுகளும்; உடல் திறனைவிட, அறிவுத் திறனை வளர்க்கும் வகையிலான கரகர வண்டி, சில்லு விளையாட்டு, பொம்மை விளையாட்டு, பூப்பறிக்க வருகிறோம் போன்ற சிறுமியர் விளையாட்டுகளும்; பத்து வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர் இணைந்து விளையாடும் கண்ணாமூச்சி, பூசணிக்காய், குலைகுலையா முந்திரிக்காய், ஒரு குடம் தண்ணி ஊத்தி, யாரு கொம்பு? கல்லா மண்ணா? எலியும் பூனையும் போன்ற குழு விளையாட்டுகளும் இப்போது எங்கு போச்சுன்னே தெரியலே?

பிற்பகல் 1–30

சிறுதேர் உருட்டி விளையாடுவதும், சங்க கால விளையாட்டுதான். இன்றைக்கு கிராமப்புறங்களில் இது "நொங்கு வண்டி", "டயர் வண்டி" என்கிற பெயர்களில், மறைந்து கொண்டு வருகிறது. ஓட்டத்துக்கும், நுட்ப ஒழுங்குக்கும், கைவினைக்கும் எடுத்துக்காட்டு இந்த விளையாட்டுகள். இதையெல்லாம் நாம் இன்று மறந்துபோனோம். இந்த விளையாட்டுகளையெல்லாம் நினைக்கும்போது எல்லோருக்கும் இளமை ஊஞ்சலாடுகிறது. "கீழடி" ஆராய்ச்சி மாதிரி ஏதோவொண்ணு எல்லோர் மனதிலும் ஊறுது. மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும்தான். "ஓடி விளையாடு பாப்பா" என்று பாரதியார் பாடினாலும், இன்றைக்கு இருக்கும் பிள்ளைகள் அதைக் கண்டுகொள்வதில்லை.

வாழ்வியலின் இயக்கமே ஓட்டம்தான் என்பதனை அவர்கள் மறந்துவிட்டார்கள். பொதுவாக ஓடுதல், குதித்தல், தாண்டுதல், மரம் ஏறுதல், நீந்துதல் போன்ற விளையாட்டுகளெல்லாம் மெல்ல மெல்ல மறக்கப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், இன்னும் நான்கு உறுப்பினர்கள் பேச வேண்டியுள்ளது. நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: இவற்றை எப்படி விளையாடுவது என்று பெரியவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். "இளமையில் விளையாட்டு" என்பது கல்லில் எழுத்து மாதிரி, அவை எப்போதும் நினைவில் நிற்கும். இவற்றையெல்லாம் விளையாடினால், உறுதியான தசைகள், எலும்பு வளர்ச்சி, மூட்டு சேரும் இடங்களில் அதிகமாக உறுதி, அதிக ஆக்ஸிஜன் எடுப்பதால் ஆரோக்கியமான நுரையீரல், வலிமையான இதயம், சீரான இரத்த ஓட்டம், குழுவாகச் சேர்ந்து விளையாடுவதால், மனிதநேய உணர்வு, சாதி, மத பேதமின்மை, நமது சாதனைகள், நமது வாழ்க்கைக்கு அவசியம் என்பதை உணரச் செய்யும் வாய்ப்புகள், கூடவே நமது பாரம்பரியங்களும் காப்பாற்றப்படுகின்றன.

மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள், இம்மாதிரியான மறைந்துபோன விளையாட்டுகளையும், அவற்றின் அவசியத்தையும் இன்றைய தலைமுறைக்கு உணர்த்துகின்ற வகையில், நம்முடைய ஆரம்பக் கல்வி பாடத் திட்டத்தில், வண்ணப் படங்களுடன்கூடிய பாடத் திட்டங்களாக, இவ்விளையாட்டுகள் குறித்த விழிப்புணர்வுகளை, உங்கள் ஆருயிர் நண்பர் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் வாயிலாகக் கொண்டு வர வேண்டுகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்.

திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடற்கரையில் விளையாடும் பீச் வாலிபால், ஃபுட் பால் பற்றி நாம் எல்லோரும் கேள்விப்பட்டிருப்போம். ஆனால், "பீச் கபடி"

2023 ஏப்ரல் 11] [திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்] பற்றிக் கேள்விப்பட்டிருப்போமா என்றால் இல்லை. இதுபற்றி நம் கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் பக்கமுள்ள சோழபாண்டிபுரம் என்ற ஒரு சின்ன கிராமத்தைச் சேர்ந்த அந்தோணியம்மாள் என்பவர் மூலமாக நமக்குத் தெரிய வந்திருக்கிறது.

2016 இல் வியட்நாமில் நடந்த ஆசிய "பீச் கபடி" போட்டியில் விளையாடி இந்திய அணிக்காக இவர் தங்கம் வென்றிருக்கிறார். 2017 இல் மொரிஷியஸ் தீவில் நடந்த சர்வதேச அளவிலான முதல் பீச் கபடி போட்டியிலும் பங்கேற்று, இந்திய அணி சார்பாக இவர் தங்கம் வென்றிருக்கிறார்.

இவ்வாறு அயல்நாடுகளில் விளையாடும் அவர்கள், நாட்டின் பாரம்பரிய விளையாட்டுகளில் பங்குபெறும் திறன் கொண்ட வீரர்களும், வீராங்கனைகளும் நம்மிடம் நிறைய இருக்கிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டும் என்பதற்காகவே நான் இதைச் சொல்கிறேன். அவர்களையும் நாம் ஊக்கப்படுத்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும் விளையாட்டையும், அதன் வீரர்களையும் ஊக்குவிப்பதில் ஒரே புள்ளியில் பயணிக்கிறார்கள். Telepathy என்பார்களே, அதுமாதிரி இந்த இருவரின் எண்ணங்களும் ஒரே புள்ளியிலேயே சிந்திக்கின்றன. அதனால்தான், இன்று விளையாட்டுத் துறை தலை சிறந்து விளங்குகின்றது.

"எனக்குள் ஓர் உள்ளாற்றல் இருக்கவே செய்கிறது. இன்னமும் அதை ஒவ்வொரு நாளும் வரவேற்க நான் போராடிக் கொண்டிருக்கிறேன்" என்றார் லெபனானியக் கவிஞன் கலீல் ஜிப்ரான். அவரால் லெபனான் நாடே பெருமை பெற்றது.

அதுபோல், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களே, தங்கள் உள்ளாற்றல்களால் இந்தத் தமிழ்நாடே பெருமை கொள்கிறது.

சூரியனில் சுருக்கங்கள் இல்லை. விரிந்து கிடக்கும் வானத்தில் முதுமை என்பது இல்லை. உள்ளத்தில் "இளமை" என்பது உள்ளவரை, தங்கள் பொது வாழ்க்கை பயணத்தில் மக்கள் நலன்களுக்கு "தள்ளாமை" இல்லை என்று சொல்லி, வாராது

[திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்] [2023 ஏப்ரல் 11

வந்த மாமணிபோல, பொங்குமாங் கடலாய், புரளும் அலையாய், மழையாய், நதியாய், மனதினுள் புகுந்த எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் எத்தனை சோதனைகள் எதிர்வர நேரினும் புன்னகை பூத்திடும் காவியக் கோமகன் எங்கள் இளைய சூரியன், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களையும் மீண்டும் ஒருமுறை வணங்கி, என்னுடைய ஒரே ஒரு தொகுதிக் கோரிக்கையை மட்டும் சொல்லி, எனது உரையை நிறைவு செய்கிறேன்.

எனது சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 43-வது வார்டில் சிங்காரவேலர் நகர் என்ற ஒரு பகுதியிருக்கிறது. அது கடற்கரையை ஒட்டியுள்ள பகுதியாகும். முற்றிலுமாக மீனவர்கள் வாழ்கின்ற பகுதி. அந்தப் பகுதியில் உள்ள அனைத்து வீடுகளும் குடிசை வீடுகள். சுமார் 1,000-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. அங்கு அடிக்கடி பெரும் விபத்துகள் ஏற்படுகின்ற காரணத்தினால் அங்கு உள்ள வீடுகளை நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பாக தொகுப்பு வீடுகளாகக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகளைத் தந்துவிடுகிறேன், அதனைப் பதிவு செய்துகொண்டு, சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி அவற்றை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொண்டு, இந்த நல்வாய்ப்பிற்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

தொகுதிக் கோரிக்கைகள்:

காசிமேடு N4 காவல் நிலையத்திலிருந்து சுங்கச்சாவடி வரை கடற்பரப்பை ஒட்டிய நிலத்தில் நடைப்பயிற்சி தளமும், பூங்காக்களும், பொழுதுபோக்கு அம்சங்களும் கட்டமைக்க வேண்டும். லட்சுமி அம்மன் கோயில் மெட்ரோ வழித்தடத்தில், போக்குவரத்து வழித்தடத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, காஞ்சிபுரம் கூட்டுறவு நிறுவனத்திற்குச் சொந்தமான 6 ஏக்கர் காலியிடத்தில் காய்கனி அங்காடி மற்றும் வாகன நிறுத்துமிடம் அமைக்க வேண்டும். தண்டையார்பேட்டை பேருந்து பணிமனையை பல்நோக்குப் பேருந்து முனையமாக மாற்ற வேண்டும்.

ஆர்.கே. நகர் தொகுதிக்குட்பட்ட வார்டு எண் 38 எண்ணூர் நெடுஞ்சாலையில் காய்கனி அங்காடி மற்றும் வாகன நிறுத்துமிடம் அமைக்க வேண்டும். ஆர்.கே. நகர் தொகுதிக்குட்பட்ட வார்டு 43-ல் இருக்கும் சாலையோரக் கடைகளை அகற்றி இந்து சமய

2023 ஏப்ரல் 11] [திரு. ஜே.ஜே. எபினேசர் என்கிற ஜான் எபினேசர்]
அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடத்தில் காய்கனி அங்காடி மற்றும் வாகனம் நிறுத்துமிடம் அமைக்க வேண்டும். ஆர்.கே.நகர் தொகுதியில் அமைந்துள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆண், பெண் என இரு பாலரும் பயின்று வரும் கல்லூரியாக இருந்து வருகிறது. இக்கல்லூரியை பெண்கள் மட்டும் பயிலும் கல்லூரியாக மாற்றம் செய்து தர வேண்டும். இக்கல்லூரிக்கு எதிரில் உள்ள இடத்தில் விளையாட்டுத்திடல் அமைத்துத்தர வேண்டும். ஆர்.கே. நகர் தொகுதியில் பெரும்பாலான குடியிருப்பு மனைகள் நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்குச் சொந்தமான நிலங்களாகவும், மாநகராட்சிக்குச் சொந்தமான நிலங்களாகவும் உள்ளன. குடியிருப்புகளில் வசிக்கும் மக்கள் அனைத்து தொகையும் செலுத்திய பிறகும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கிரயப் பத்திரம் வழங்கப்படவில்லை. எனவே அவர்களுக்கு உரிய கிரயப் பத்திரம் வழங்கிட ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன் அவர்கள்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு வருவதற்கு வாய்ப்பினை வழங்கிய தமிழினப் போராளி, மருத்துவர் அய்யா அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முன்னாள் மத்திய சுகாதாரத் துறை அமைச்சர், பா.ம.க.வின் தலைவர், மருத்துவர் திரு. அன்புமணி ராமதாஸ் அய்யா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பா.ம.க.-வின் சட்டமன்றத் தலைவர், எங்களுடைய கௌரவத் தலைவர் மரியாதைக்குரிய அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு முன்னாள் முதல்வரும், எதிர்க்கட்சித் தலைவருமான திரு. எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கும், மாண்புமிகு அனைத்து துறை அமைச்சர்களுக்கும், மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், மாவட்ட பொறுப்பு மாண்புமிகு அமைச்சர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கம். என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய தருமபுரி சட்டமன்றத் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்] [2023 ஏப்ரல் 11 பிற்பகல் 1–35

எந்தக் காலத்திலும் எந்தவொரு நாடு இளைஞர்களின் முன்னேற்றத்திலும், அவர்களது உடல் நலன் மற்றும் மன நலத்தில் கவனம் செலுத்துகிறதோ அந்த நாடே வரலாற்றில் முன்னேறியிருக்கிறது. அந்த வகையில், தமிழகத்திலுள்ள இளைஞர்களின் முன்னேற்றத்தில் முழுக் கவனம் செலுத்திவரும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று மக்கள்தொகையில் 40 சதவிகிதம் இளைஞர்கள் எல்லாத் துறைகளிலும், குறிப்பாக, அறிவு சார்ந்த துறைகளான, கணினி, மருத்துவம், பொறியியல், வலையொளி என பல துறைகளில் முன்னேற்றம் கண்டிருந்தாலும், அவர்கள் அறிந்தோ, அறியாமலோ உடல் நலம் சார்ந்த செயல்பாடுகளில் ஈடுபாடில்லாமல் இருப்பது வருந்தத்தக்கதாக இருக்கிறது. படிக்கும் மாணவனிலிருந்து தவறாமல் விளையாட்டில் ஈடுபாடு காட்டும் வகையில் விளையாட்டிற்கு முன்னுரிமை தர வேண்டும். தொடக்கப் பள்ளி முதல், கல்லூரியில் இளநிலை, முதுநிலை எனத் தொடர்ந்து முனைவர் பட்டம் வரை இது தொடர வேண்டும்; அதையும் தவறாமல் கட்டாய பாடமாக்க வேண்டும். விளையாட்டுக்கு மதிப்பெண் கொடுத்து அதைப் பாடமாக்க வேண்டும். “A sound mind in a sound body” என்பார்கள். அப்படி, ஆரோக்கியமான உடல் நலமே ஆரோக்கியமான சிந்தனையைத் தரும். அந்த அடிப்படையில் விளையாட்டுகளில் அதிக ஈடுபாடு காட்டச் செய்தல் வேண்டும்.

தற்போது, பெரும்பாலான பள்ளிகளில் விளையாட்டு பாட வேளை என்பது வெறும் ஏட்டளவில்தான் உள்ளது. அவர்களுக்கு அந்த நேரத்தில் வேறு படிக்கும் பணிகளோ அல்லது வேறு பாடங்களோ நடத்தப்படுகின்றன என்பது வேதனையான உண்மையாகும் என்பதை உடற்கல்வி ஆசிரியர் பயிற்சி பயின்றவன் என்ற முறையில் அக்கறையோடு பதிவிடுகிறேன். இதைத் தவிர்க்க, ஒவ்வொரு மாணவனும் ஏதேனும் ஒரு விளையாட்டு அல்லது ஏதேனும் ஒரு பாதுகாப்புக் கலையை முழுமையாக அறிந்து, பயிற்சி பெறும் வகையில் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்ற எனது வேண்டுகோளைச் சமர்ப்பிக்கின்றேன்.

இன்றைய சூழலில் இளைஞர்கள் மற்றும் சிறுவர்களுக்கு உடல் பருமன் பிரச்சினை பரவலாக இருக்கிறது. எனவே,

அதைப் பற்றி சிந்திக்க, ஆரோக்கியமான உடல் நலம், ஆரோக்கியமான உணவு வகைகள் பற்றிய விழிப்புணர்வு தரும் எல்லா வகைகளையும் எல்லா வகுப்புகளிலும் பாடங்களாகச் சேர்க்க, நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும். மேலும், ஒவ்வொரு கிராமம், நகரம், மாநகரம் என ஒவ்வொரு குடியிருப்புகளிலும் விளையாட்டுத் திடல், உடற்பயிற்சி மையங்கள் என பெயருக்கென இல்லாமல், உண்மையிலேயே செயல்படும் வகையில் அமைத்திட வேண்டும். இப்படி, எல்லா வகைகளிலும் சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வருங்கால இந்தியாவாம், நமது இளைஞர்களையும், மாணவர்களையும் அலைபேசி, வலைதளம், போதைப் பொருள், துரித உணவு, குப்பை உணவு எனப்படும் junk food ஆகிய ஆபத்து வளையங்களிலிருந்து மீட்டெடுத்து, தமிழக இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, புதிய பார்வையைத் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

இன்றைய இளைஞர்களுக்கு படிக்கின்ற வாய்ப்பினை,— பெற்றோர்கள் கஷ்டப்பட்டு, தங்கள் சொத்துகளை விற்று படிக்க வைக்கிறார்கள். அரசாங்கமும் இளைஞர்களுக்கு பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. ஆனால் இதை இளைஞர்கள் பயன்படுத்திக்கொள்ளாமல், ஊடகம், தொலைக்காட்சி, அலைபேசி, வலைதளம் ஆகியவற்றின்மூலம் தவறான பாதைகளைத் தேர்ந்தெடுத்து வருவது அதிகமாகி வருகிறது. குடி, போதைப் பொருட்களுக்கு அடிமையாகி இளைஞர்கள் அடிப்படை அறிவையே இழந்துவிடும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். மகிழ்ச்சி மற்றும் துக்க வேளைகளில் போதையை நாடுகிறான். போதைப் பழக்கம், கஞ்சா, ஹெராயின், பெத்தடின், மது, சிகரெட், புகையிலை, பான்பராக், குட்கா, Hans, Manikchand போன்ற அனைத்துக்கும் சேர்த்து Morphine and Pethidine போன்ற மருத்துவ ரீதியான வலி நிவாரணம் தரப்பட்டாலும், அவை எளிதாக இளைஞர்களுக்குக் கிடைக்கின்றன. இவையெல்லாம் தடுக்கப்பட வேண்டும். சட்ட ரீதியாக போதைப் பொருள் விற்பனையைத் தடுக்க கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும், தனி மனித ஒழுக்கமும், பொறுப்புணர்வும் இருந்தால் மட்டுமே போதைப் பொருள் பயன்பாட்டைத் தடுக்க முடியும் என்கிறார்கள் வல்லுநர்கள்.

மாணவர்களிடம் இருக்கும் தவறான அடிப்படை குணத்தை மாற்றும் வகையில் திட்டம் வகுத்து, வருங்காலத் தலைமுறையை

[திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்] [2023 ஏப்ரல் 11

முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் வழிமுறைகளைக் காண முயற்சி செய்வது குறித்து இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நமது மாநிலத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மிக அற்புதமாக அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். ஆனால், சுய உதவிக் குழு என்பது கடன் பெறும் இடம் என்ற எண்ணத்தை மறந்து, தொடர்ந்து சம்பாதித்து தொழில் முனைவோராக்கும் அமைப்பு என்பதை மகளிரெல்லாம் உணரும் வகையில் அரசின் நடவடிக்கை அமைந்தால் சிறப்பாக இருக்கும். பெண்களுக்கு விழிப்புணர்வு தருவது ஒரு சமூகத்திற்கே விழிப்புணர்வு தருவது போன்றதாகும் என்பதால், இந்த வகையிலான நடவடிக்கைகளின்மூலம் சமூக முன்னேற்றத்தில் மகளிரின் ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சென்னையில் உள்ள பாரம்பரியம் மிக்க தமிழக அரசுக் கல்லூரியான Presidency கல்லூரி மைதானத்தை தனியார் நிறுவனம் குத்தகைக்கு, lease-க்கு எடுத்து, கல்லூரி மாணவர்களைக்கூட அனுமதிக்காமல் வெளி நபர்களுக்கு social media மூலம் விளம்பரம் செய்து வாடகைக்கு விட்டு வருகின்றனர். மாணவ, மாணவிகள் நலன் கருதி கல்லூரி மைதானத்தை வாடகைக்கு விடுவதைத் தடுப்பது குறித்து அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 1–40

தமிழகத்திலுள்ள இளைஞர்களால் அதிகமாக ஈர்க்கப்படும் போட்டியான IPL கிரிக்கெட் போட்டி இந்தியாவில் நடைபெற்று வருகிறது. இதில் தமிழகத்தைச் சார்ந்த Chennai Super Kings என்ற அணி உள்ளது. தமிழகத்தில் திறமையான வீரர்கள் இருந்தும், ஒருவரைக்கூட Chennai Super Kings அணியில் தேர்வு செய்யவில்லை. ஆனால், தமிழக அணி என்பதுபோல விளம்பரம் செய்து, நம் மக்களிடம் பெரும் வர்த்தக இலாபத்தை அடைகிறது. எனவே, தமிழக வீரர்கள் இல்லாத இந்த அணியை, விளையாட தடை செய்ய வேண்டுமென்பது தமிழக மக்களின் கருத்தாக உள்ளது. தருமபுரி மாவட்டத்தில் அனைத்து வசதிகளுடன்கூடிய ஒரு மாவட்ட விளையாட்டு அரங்கம் உள்ளது. அதன் தரம் மேம்படுத்தப்பட வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

அதேபோல், அரசு மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் உடற்கல்வி ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். 240 மாணவர்களுக்கு 1 உடற்கல்வி ஆசிரியர் வீதம் பணியமர்த்தப்பட வேண்டும். 1 மேல்நிலைப் பள்ளிக்கு 1 உடற்கல்வி இயக்குநர் பதவி ஏற்படுத்தி நியமனம் செய்யப்பட வேண்டும். உடற்கல்வி ஆசிரியர்கள் பணிமூப்பு அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட வேண்டும். அனைத்து பள்ளிகளுக்கும் விளையாட்டு உபகரணங்கள் தரமானதாக வழங்கப்பட வேண்டும். விளையாட்டு மைதானங்கள், ஓடுதளம் இருக்கின்ற அளவிற்கு நிலம் ஒதுக்கித்தர அரசு முன்வர வேண்டும். அரசு பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்து பள்ளிகளிலும் விளையாட்டு மைதானம் இருக்க வேண்டும். விளையாட்டுத் திடல் இல்லாத பள்ளியின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட வேண்டும். அனைத்து மாணவர்களும் விளையாட்டில் பங்கேற்கும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தி போட்டிகளில் பங்கேற்கச் செய்ய வேண்டும். அனைத்து பள்ளிகளும் இரண்டு குழுப் போட்டிகள், 1 விளையாட்டுப் போட்டி மற்றும் பல போட்டிகளில் கண்டிப்பாக பங்கேற்க வழிவகை செய்ய வேண்டும். உரிய நேரத்தில் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்க வேண்டும். கோடைக்கால விடுமுறையில் சிறப்புப் பயிற்சி அளிக்க வேண்டும். அனைத்து கிராமங்களிலும் விளையாட்டுத் திடல் அமைக்க வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேள்வி, பதிலில் பேசியபோது சொன்னார். அதற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் செயல்படுத்த வழிகாட்டு நெறிமுறைகளை மாற்றியமைத்தால் ஒவ்வொரு கிராமத்திலும் விளையாட்டுத் திடல் அமைக்கப்படும்.

அனைத்து அரசு பள்ளிகளின் கழிப்பறைகளைத் தூய்மைப்படுத்தி, பராமரிக்க ஊதிய உயர்வுடன் துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் மாநில அளவிலான குடியரசு தின விழாவன்று, 63-வது விளையாட்டுப் போட்டியை மாண்புமிகு வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்தார். 5 இடங்களில் நடைபெற்றது. இது போன்ற விளையாட்டுப் போட்டிகளை தருமபுரிக்கு அறிவித்ததற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், இந்தப் போட்டிகள் ஐந்து தனியார் பள்ளி, கல்லூரிகளில்தான் நடந்தன.

இதுபோன்ற விளையாட்டுப் போட்டிகள் அரசு பள்ளி, அரசு கல்லூரியில் நடைபெறும் அளவிற்கு விளையாட்டுத் திடல்கள் மேம்படுத்தப்பட வேண்டும். முன்னாள் முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நியமிக்கப்பட்ட அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் யோகா ஆசிரியர்களுக்கு மாத ஊதியம் 2,000 ரூபாய் கொடுக்கிறார்கள். அதனை உயர்த்தி வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற மாதம் தருமபுரியில் சிப்காட் பணி, சாலைப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு, வெளி மாநிலம், மாவட்டங்களுக்கு வேலைதேடி வாழ்வாதாரம் தேடிச் சென்ற இளைஞர்களுக்கு சொந்த மாவட்டத்திலேயே வேலைவாய்ப்பு உருவாக்கும் வகையில், இந்த ஆண்டே மேம்பாட்டுப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து, விரைவாக தொழிற்சாலைகள் துவங்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *நன்றி, ஒரேயொரு நிமிடம். தருமபுரி மாவட்ட விவசாயிகளுக்குப் பலன் அளிக்கும் விதத்தில் மழைக்காலங்களில் கடலில் கலக்கும் உபரி தண்ணீரை நீரேற்றும் பம்பு மூலம் தருமபுரி மாவட்டம் முழுவதும் உள்ள ஏரி, குளங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். தருமபுரி மாவட்டம், பின்தங்கிய மாவட்டம், அங்கே வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஏற்கெனவே உள்ளது. அந்தத் திட்டத்தை மீண்டும் அனைத்து ஒன்றியங்களிலும் செயல்படுத்திட வேண்டுகிறேன். இண்டூரை மையமாகக் கொண்டு புதிய ஊராட்சி ஒன்றியம் அமைக்க வேண்டும். தருமபுரி நகரத்தில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க இராமக்கா ஏரி முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை ஒரு மேம்பாலம் அமைக்க நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மின்சாரத் துறைமூலம் செயல்படும் திட்டங்களை சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தகவல் தெரிவிப்பதற்காக ஒரு WhatsApp *குழு ஆரம்பித்து, ஒரு* Nodal Officer*-ஐ மற்றும் அலுவலர்களை நியமித்திருக்கிறார்கள்.*

2023 ஏப்ரல் 11] [திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்]

அதைப் போலவே, மற்ற துறைகளில் செயல்படும் திட்டங்களையும் அந்த அதிகாரிகள், சட்டமன்ற உறுப்பினர்களை வைத்துத் தொடங்க மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள். (குறுக்கீடு) கோரிக்கைகளெல்லாம் படித்ததாகப் பதிவு செய்துகொள்ளப்படும். நேரமில்லை. இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும், இன்னும் 2 உறுப்பினர்கள் பேச வேண்டும்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *எங்கே தமிழ் என்று தமிழைத் தேடி சென்னை முதல் மதுரை வரை பரப்புரைப் பயணம் செய்த தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்கள் வலியுறுத்தியவாறு தமிழக அரசாணைப்படி தமிழகத்தில் உள்ள அனைத்து வணிக நிறுவனங்களிலும் பெயர் பலகை இருக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கர்நாடக மாநிலத்தில், அனைத்து பெயர் பலகைகளும்,—கன்னட மொழியில் இல்லாமல் பெயர் பலகை இல்லை. 2006 ஆம் ஆண்டு முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்களால் அனைத்து உள்ளாட்சி மன்ற அலுவலகங்களில் 'தமிழ் வாழ்க' என்ற பெரிய பெயர் பலகை வைக்கப்பட்டது. நான் மாவட்ட ஊராட்சித் தலைவராக இருந்தபோது, பெரிய பலகை 'தமிழ் வாழ்க' என்று இருந்தது. ஆனால், இன்றைக்கு அந்த* board *பழுதடைந்து, யாரும் கண்டுகொள்ளாத நிலையில் உள்ளது. எனவே, தமிழகம் முழுவதும் மீண்டும் இரவு நேரங்களில் சாலை வழியே போகும்போது, எல்லா அலுவலகங்களும் கலைஞர் அவர்கள் இட்ட அந்த ஆணையை. . . (மணியடிக்கப்பெற்றது)*

பிற்பகல் 1–45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள். (குறுக்கீடு) இது கோரிக்கையில்லை. நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்: *என்னுடைய தொகுதி சார்ந்த கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் படித்ததாகக் கருதி, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் பதிவு செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அவற்றை*

[திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்] [*2023 ஏப்ரல் 11*

நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அனைத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக ஒரேயொரு கோரிக்கை. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மிக மிகக் குறைவாக உள்ளது. கிராமப்புறங்கள் நிறைந்த பகுதி மக்களின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். எனவே, அந்த நிதியை GST *இல்லாமல் 5 கோடி ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும் என்று தொகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதை நிறைவேற்றித் தர வேண்டும். எனக்கு இந்த வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

தொகுதிக் கோரிக்கைகள்:

தருமபுரி தொகுதி, நாகர்கூடல் ஊராட்சி, கழனிகாட்டூர், ஆத்துக்கொட்டாய், மத்தாளப்பள்ளம் உள்ளிட்ட கிராமங்களில் நாகாவதி அணையின் நீர்வரத்து கால்வாய் சாலையின் குறுக்கே செல்வதால், சாலையைக் கடந்து செல்ல முடியாமல் மக்கள் அவதியுறுகின்றனர். அங்கு ஒரு பாலம் அமைத்து பழுதடைந்த 2 கி.மீ. சாலையை தார்ச்சாலையாக அமைக்க வேண்டும்.

தருமபுரி நகரப் பகுதியில் செல்லும் சனத்குமார் நதியில் கழிவுநீர் கலக்காத வகையில் செய்து, நதியைத் தூர்வாரி கரையின் இரண்டு புறமும் கான்கிரீட் தடுப்புச்சுவர் அமைத்து தடுப்பணை கட்டித் தர வேண்டும். தருமபுரி சிப்காட் தொழிற்பேட்டையை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், இண்டூர் ஊராட்சி, சுண்ணாம்பு பள்ளத்தில் தடுப்பணை கட்டுதல் வேண்டும். தொப்பூர், கம்மம்பட்டி ஊராட்சிகளின் வழியாகச் செல்லும் தொப்பையாற்றின் குறுக்கே இரண்டு தடுப்பணை கட்டித்தர வேண்டும். சாமிசெட்டிப்பட்டி ஊராட்சி, பங்குநத்தம்கொட்டாய், கன்னிமார்மடுவு என்னுமிடத்தில் பெரிய தடுப்பணை கட்டித்தர வேண்டும்.

தருமபுரி தொகுதிக்குட்பட்ட அரசினர் கலைக் கல்லூரி வளாகத்தில் புதியதாக அரசினர் பெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி உருவாக்கித் தர வேண்டும். தருமபுரியில் அரசினர் வேளாண்மைக் கல்லூரி அமைக்க வேண்டும். தருமபுரி

2023 ஏப்ரல் 11] [திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன்]

நகரத்திலுள்ள நகர மற்றும் புறநகர் பேருந்து நிலையங்களை உயர் நவீன பேருந்து நிலையங்களாகவும், ஈரடுக்கு பேருந்து நிலையங்களாகவும் தரமுயர்த்தி அமைத்துத் தர வேண்டும்.

நல்லம்பள்ளி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்த வேண்டும். இண்டூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக விரிவுபடுத்த வேண்டும். ஐருகு கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையமும், சாமிசெட்டிப்பட்டி ஊராட்சியில் துணை சுகாதார நிலையமும் அமைத்துத் தர வேண்டும்.

நிர்வாக நலன் கருதி, நல்லம்பள்ளி ஒன்றியம், மானியதஅள்ளி ஊராட்சியை இரண்டாகவும், இலக்கியம்பட்டி ஊராட்சியை மூன்றாகவும் பிரிக்க வேண்டும். நல்லம்பள்ளி ஒன்றியம், பரிகம் கோணயங்காடு–கம்மம்பட்டி–மலையூர்காடு வனப் பகுதியில் தார்ச்சாலை அமைக்க வேண்டும். மலையூர்காடு–பெரும்பாலை–சானாரப்பட்டி தார்ச்சாலை அமைக்க வேண்டும். கோம்பேரி–காளிகரம்பு வனப் பகுதியில் சாலை அமைக்க வேண்டும்.

கைத்தறித் துறையையும், கதர்த் துறையையும் மேம்படுத்துவதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வரும் கூட்டுறவுச் சங்கங்களை மேம்படுத்தும் வகையில் மானியத்துடன் கடன் வழங்குவது, குறைந்த விலையில் நூல், சரிகை வழங்குவது போன்ற திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். நெசவாளர்களுக்கு வழங்கப்படும் முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தை உயர்த்த வேண்டும். கோ–ஆப்டெக்ஸ் விற்பனையைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தீபாவளிக்கும், பொங்கலுக்கும் வழங்கப்படும் விலையில்லா வேட்டி சேலையைத் தயாரிக்கும் வேலையை நெசவாளர்களை முன்கூட்டியே துவக்கச்செய்து, காலந்தாழ்த்தாமல் பொதுமக்களுக்கு பண்டிகைக்கு முன்பாகவே வழங்க வேண்டும்.

கைத்தறி மற்றும் விசைத்தறிமூலம் நவீன ரக குஷன் கவர்கள், மேட் துணி, நாகரிகப் பைகள், ரன்னர்கள், துப்பட்டாக்கள் போன்றவற்றை உற்பத்தி செய்ய ஊக்கப்படுத்த வேண்டும். காஞ்சிபுரம் சரிகை ஆலையை மேம்படுத்த வேண்டும். தொழில் வளர்வதற்கு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிலைகளில் கவனம் செலுத்த வேண்டும். கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு கூடுதலாக இலவச மின்சாரம் வழங்க வேண்டும்.

சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மேலும் சிறப்புடன் செயல்பட்டு, தமிழ்நாடு அரசுத் துறைகளை ஒருங்கிணைத்து சிறப்பாக திட்டங்களைச் செயல்படுத்தி வளமான மாநிலமாக உயர்த்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.

திரு. மு. பாபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை மற்றும் கைத்தறி, கைத்திறன் மற்றும் துணிநூல் மற்றும் கதர்த் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிட வாய்ப்பு தந்தமைக்காக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.'

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் குறளுக்குப் பொருள்-குடிமக்களை அரவணைத்துக்கொண்டு நேர்மையான ஆட்சியை நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை இந்த நாடே போற்றி நிற்கும் என்ற வள்ளுவன் வாக்கின் அடிப்படையில், கடந்த இரண்டு வருடங்களாக குடிமக்களை அரவணைத்து, இந்த நாடே போற்றும் வகையில் நல்லாட்சி புரிந்துவரும் திராவிடச் சூரியன் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் தளபதியார் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்கெல்லாம் ஒடுக்குமுறைகள் இருந்தனவோ, அங்கெல்லாம் எம்மக்களின் தலைநிமிர்வுக்குக் காரணமாக இருந்த புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் அரசியல் தொடர்ச்சி, எங்களையெல்லாம் நெறிப்படுத்தி வழிநடத்துகின்ற விடுதலை சிறுத்தைகள் கட்சியின் ஒப்பற்ற தலைவர் எழுச்சித் தமிழர் முனைவர் தொல். திருமாவளவன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர், இளைஞர்களின் எழுச்சி நாயகன் மாண்புமிகு அண்ணன் திரு. உதயநிதி அவர்களுக்கும் மற்றும் கைத்தறி, துணிநூல்

துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் திரு. ஆர். காந்தி அவர்களுக்கும் எனது வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அண்ணன் திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் மற்றும் அனைத்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், கழக காஞ்சி தெற்கு மாவட்டச் செயலாளரும், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான அண்ணன் திரு. க. சுந்தர் அவர்களுக்கும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சட்டமன்றக் குழுத் தலைவர் அண்ணன் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்கள் சகோதரர் திரு. பாலாஜி, திரு. ஷாநவாஸ் அவர்களுக்கும் மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 2016 ஆம் ஆண்டு ஏற்பட்ட பாலாறு பெருவெள்ளத்தில் எனது செய்யூர் தொகுதிக்குட்பட்ட இரும்புலிச்சேரி–நெரும்பூர் தரைப் பாலம் சேதமடைந்ததால் மக்கள் பெரிதும் அவதிப்பட்டு வந்த நிலையில், தற்போது நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பில், இரும்புலிச்சேரி–நெரும்பூர் இடையே மேம்பாலம் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ள மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்களுக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், செய்யூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இடைக்கழிநாடு பேரூராட்சியினை சிறப்பு நிலை பேரூராட்சியாகத் தரம் உயர்த்தி அறிவிப்பு செய்த மாண்புமிகு அமைச்சர் அண்ணன் திரு. கே.என். நேரு அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தையும், முற்போக்கு சமத்துவ இந்தியாவின் சிற்பியுமான புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் சிந்தனையைப் பரப்புவதற்காக அவரது படைப்புகள் தமிழில் மொழிபெயர்க்கப்படும் என அறிவிப்பு செய்து, அதற்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியதை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மனதார வரவேற்கிறேன்.

வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் 45,000 கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய திறன் பயிற்சி வழங்க

145 கோடி ரூபாய் ஒதுக்கி அறிவிப்பு வழங்கியதை மனதார வரவேற்கிறேன். மேலும், அனைத்து மாவட்டங்களிலும் 100 இளைஞர் திறன் மற்றும் வேலைவாய்ப்பு திருவிழாக்கள் நடத்தப்படும் என்ற அறிவிப்பினை மனதாரப் பாராட்டி, வரவேற்கின்றேன்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நீண்டநாள் கோரிக்கையான, ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், பள்ளிக் கல்வித் துறையின் மேலாண்மையின்கீழ் கொண்டுவரப்படும் என்ற அறிவிப்பினை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மானியக் கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 126–ல் வளரும் திறனாளர்களுக்கான சிறப்பு உதவித் தொகை நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.500/– வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சொற்பமான தொகையாகும். வளரும் திறனாளர்களுக்கான சிறப்பு உதவித் தொகையை ரூ.2,000/– ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இனி நடைபெறவுள்ள கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகளில், தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் கலந்துகொண்டு பதக்கம் பெறுவதற்கான சிறப்புத் திட்டத்தினை அறிமுகப்படுத்தவுள்ளதாக கொள்கை விளக்கக் குறிப்பு, பக்கம் 55–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒலிம்பிக்கில் தமிழக வீரர்கள் கலந்துகொண்டு, பதக்கம் வெல்ல, அரசு முன்னெடுக்கும், ஒலிம்பிக்கில் சிறந்து விளங்குவதற்கான சிறப்பு நோக்கத் திட்டத்தினை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மனதார வரவேற்கிறோம்.

பிற்பகல் 1–50

மொழிப் போர்த் தியாகி தாளமுத்து, நடராசன் அவர்களுக்கு நினைவரங்கம் அமைக்கும் அறிவிப்பை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மனதார வரவேற்கின்றோம். அதேசமயம், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் நீண்ட நாள் கோரிக்கையான, சாதி எதிர்ப்பு சுயமரியாதை போராளி இமானுவேல் சேகரன் அவர்களுக்கு, அவரது சொந்த ஊரான பரமக்குடியில் நினைவரங்கம் அமைத்து அவரது பிறந்த நாளினை அரசு

விழாவாகக் கொண்டாட வேண்டுமென்று அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, அகில இந்திய அளவில் பட்டியல் மற்றும் பழங்குடியின மக்கள் தேசிய ஆணையத்தின் தலைவராகப் பணியாற்றி இளையபெருமாள் கமிட்டி அறிக்கை என்ற புகழ்பெற்ற சீர்திருத்த அறிக்கையை வழங்கிய பெருந்தலைவர் இளைய பெருமாள் அவர்களுக்கு காட்டுமன்னார்கோவிலில் நினைவரங்கம் அமைத்து அவரது நூற்றாண்டு விழாவினை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டுமென்று தமிழ்நாடு அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நமது இந்திய நாடு உலகிலேயே அதிக வாலிபர்கள் மற்றும் இளைஞர்களை உள்ளடக்கிய நாடாகத் திகழ்கிறது. சுமார் 36 கோடி இளைஞர்கள் நம் நாட்டில் உள்ளனர். குறிப்பாக, நமது தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகையில் 20 சதவிகிதம் வாலிபர்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளனர். இந்த 20 சதவிகித இளைஞர்களில் பாதிக்கு மேலானோர் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் வசித்து வருகின்றனர். எனவே, மாவட்டந்தோறும் கிராமப்புற இளைஞர்களின் திறன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டிற்காக மாவட்ட இளைஞர் மையம், District Youth Centre என்ற புதிய அமைப்பினை உருவாக்கி அதன்மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளிக்கும் electrician, carpenter, plumber, தையல் பயிற்சி, auto mechanic போன்ற தொழில் சார்ந்த பயிற்சிகள் வழங்கிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த மையத்தின்மூலம் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு இல்லாத பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரிகள் கொண்ட சுய வேலைவாய்ப்புக் குழுக்கள் அமைத்து, அவர்களின் எதிர்கால மேம்பாட்டிற்கு உதவிட அரசு முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

2021 ஆம் ஆண்டிற்கான தேசிய குற்ற ஆவணக் காப்பகப் புள்ளிவிவரக் கணக்கின்படி இந்திய நாட்டின் மொத்த தற்கொலைகளில் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது. 18,925 தற்கொலைகள் நடந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், தற்கொலைகளில் 34.5 சதவிகிதம், 18 முதல் 30 வயதுக்குள் உள்ள இளைஞர்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. கொரோனா பெருந்தொற்று காரணமாகவும், இதர காரணங்களாலும், சுமார் 12.1 சதவிகித இளைஞர்கள் வேலைவாய்ப்புகளின்றி தற்கொலைகள் செய்து

கொண்டுள்ளதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. மேலும், 9.5 சதவிகிதம் மாணவர்கள் தற்கொலைகளில் ஈடுபட்டுள்ளதாக உள்ள புள்ளிவிவரங்கள் அதிர்ச்சியையும், வருத்தத்தையும் அளிப்பதாக உள்ளன. எனவே, மாவட்டந்தோறும் இளைஞர் மையம் என்ற அமைப்பை ஏற்படுத்துவதன் மூலமாக வேலைவாய்ப்பின்றி தவிக்கும் இளைஞர்களுக்கும், மன அழுத்தத்தில் உள்ள மாணவர்களுக்கும் மன அழுத்தம் நீங்கும் வகையில் தகுந்த மருத்துவர்களைக் கொண்டு மன வள பயிற்சியும் மருத்துவ ஆலோசனை மற்றும் counselling அளிக்கவும் அரசு முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 2020 ஆம் ஆண்டு புதியதாக உருவாக்கப்பட்டுள்ள 6 மாவட்டங்களில் குறிப்பாக, செங்கல்பட்டு மாவட்டத்தில் கால்பந்து மைதானம், தடகள ஓடுபாதை, கபடி ஆடுகளம், பூப்பந்து ஆடுகளம், நீச்சல் குளம், மாணவர் விடுதி மற்றும் பல்நோக்கு உள் விளையாட்டு அரங்கம் போன்ற விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் எதுவும் அரசின் சார்பாக ஏற்படுத்தித் தரப்படவில்லை. குறிப்பாக, 9.5 ஏக்கர் நிலம் செங்கல்பட்டு மாவட்டம் சார்பில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதில் விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் எதுவும் இன்றுவரை ஏற்படுத்தித் தராமல் உள்ளது. எனவே, புதியதாக உருவாக்கப்பட்டுள்ள செங்கல்பட்டு உள்ளிட்ட 6 மாவட்டங்களில் மேற்கண்ட விளையாட்டு கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நமது தமிழ்நாடு மிக நீண்ட நெடிய கடற்கரையை உடைய மாநிலமாகும். எனவே, கடல் சார்ந்த விளையாட்டுகளான beach volleyball மற்றும் அலை சறுக்கு, surfing மற்றும் ஒலிம்பிக் விளையாட்டான modern pentathlon போன்ற விளையாட்டு வசதிகள் தமிழ்நாடு முழுவதும் உள்ள கடலோர மாவட்டங்களில் அமைத்துத் தர அரசு முன்வர வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். மாவட்டந்தோறும் உள்ள மாவட்ட விளையாட்டு நல அலுவலருக்கு வழங்கப்படும் விளையாட்டு உபகரணங்கள் வாங்கும் தொகை மிக சொற்பமாக உள்ளது. அதாவது ரூ.5 இலட்சம் என்ற அளவில் வழங்கப்பட்டு வருகிறது. அதை சுமார் ரூ.25 இலட்சமாக உயர்த்தி வழங்க வேண்டுமென்று அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஐக்கிய நாடுகள் சர்வதேச குழந்தைகள் நிதியம் UNICEF என்ற அமைப்பினால் உருவாக்கப்பட்டுள்ள YuWaah என்ற திட்டமானது இளைஞர்களின் வாழ்க்கைத்திறனை மேம்படுத்துவதற்கும்

2023 ஏப்ரல் 11] [திரு. மு. பாபு]

இளைஞர்களை ஆர்வமுள்ள பொருளாதார வாய்ப்புகளுடன் இணைக்கவும் நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த YuWaah திட்டம் அண்மையில் பஞ்சாப் மற்றும் டெல்லி மாநில அரசுகளுடன் இணைந்து அந்த மாநிலங்களில் உள்ள சுமார் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களின் தொழில் மற்றும் வேலைவாய்ப்பு போன்ற சவால்களுக்குத் தீர்வு காணும் வகைகளில் செயல்பட்டு வருகிறது.

நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்மையில் அறிவித்து, வெற்றிகரமாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கின்ற கனவுத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டத்தை இந்த YuWaah அமைப்போடு இணைத்து நமது மாநில இளைஞர்களின் கல்வித்திறன், வேலைவாய்ப்பு போன்ற சவால்களுக்குத் தீர்வு காணும் விதமாக உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் தங்களது பள்ளி நேரத்தில் வாரத்திற்கு 2 மணி நேரம் உடற்கல்வி வகுப்பு எனப்படும் PT period மூலம் பயின்று வருகிறார்கள். அந்த 2 மணி நேரத்தில் OVEP எனப்படும் ஒலிம்பிக் மதிப்புகள் கல்வித் திட்டம் என்ற ஒரு புதிய கற்றல் அனுபவத்தைத் தரக்கூடிய பாடத் திட்டத்தை அறிமுகம் செய்து நமது மாணவ, மாணவிகள் மதிப்புகள் அடிப்படையிலான கற்றலை அனுபவிக்கவும், நல்ல பொறுப்பான குடிமகனாக வளர்வதற்கான தனிப்பட்ட ஆரோக்கியம், இன்பம், சமூகத் தொடர்பு ஆகியவற்றினை மேம்படுத்தவும், மேற்கண்ட OVEP என்ற பாடத் திட்டத்தினை மாநிலத்தில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் அறிமுகம் செய்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–55

அண்டை மாநிலமான தெலுங்கானாவில் இளைஞர் நலத் துறையின் சார்பில், "இளைஞர் பரிவர்த்தனை மற்றும் இளைஞர் அதிகாரமளிக்கும் திட்டம்" என்ற பெயரில் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதில் ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மற்ற மாவட்டங்களின் கலாச்சாரம், வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு வசதிகள் போன்றவற்றை அறிந்துகொள்ளும் வகையில் (மணியடிக்கப்பெற்றது) ஒவ்வோர் ஆண்டும் மாவட்டங்களுக்கு இடையேயான இளைஞர் பரிவர்த்தனை

நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து வருகிறது. இதைத்தவிர, அவ்வப்போது, இளைஞர் தலைமைத்துவ பயிற்சித் திட்டங்கள், கருத்தரங்குகள், பயிலரங்குகள், எய்ட்ஸ் விழிப்புணர்வு முகாம்கள், சுகாதார முகாம்கள், இரத்ததான முகாம்கள் போன்றவை ஏற்கெனவே செயல்பாட்டில் உள்ள மற்ற அமைப்புகளுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இதேபோன்ற ஒரு திட்டத்தினை நமது அரசின் சார்பில் ஆண்டுதோறும் நடத்தி இளைஞர் நலன் காத்திட அரசு முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு, உரையாற்றியது போதுமே!

திரு. மு. பாபு: செங்கல்பட்டு மாவட்டத்தில் 36 தேசிய மாணவர் படைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. செங்கல்பட்டு மாவட்டத்தின் NCC அதிகாரியாக காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அலுவலர்தான் தற்போது கூடுதலாகக் கவனித்து வருகிறார். எனவே, செங்கல்பட்டு மாவட்டத்திற்கு புதிய NCC அதிகாரி பணியிடத்தை உருவாக்கிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள மாவட்ட விளையாட்டு அலுவலர்கள் அரசின் சார்பில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் வேலைகளையும் மற்றும் இதர விளையாட்டு சார்பான திட்டங்களை நிறைவேற்றும் பணிகளையும் செய்து வருகின்றனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரையாற்றியது போதும்.

திரு. மு. பாபு: அவர்கள் மாவட்டம் முழுவதும் வேலை நிமித்தமாகப் பயணம் செய்யும்போது, அவர்களுக்கு முறையாக வாகன வசதி இல்லை. அரசுப் பணிகளைச் செய்யும்போது மிகுந்த சிரமத்துடன் மேற்கொண்டு வருகிறார்கள். எனவே, மாவட்ட விளையாட்டு அலுவலர்களுக்கு அவர்கள் பயணம் செய்வதற்காக ஒரு வாகனம், அதாவது jeep அரசின் சார்பில் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், போதும் தம்பி; நானும் உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்; நேரமில்லை. (குறுக்கீடு) நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.*

திரு. மு. பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுநாள் வரை கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த 200 யூனிட் இலவச மின்சாரத்தை 300 யூனிட் ஆக உயர்த்தி வழங்கியதற்கும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் இலவச மின்சாரத்தை 1,000 யூனிட் மின்சாரமாக உயர்த்தி வழங்கி, நெசவுத் தொழிலைப் பாதுகாத்தமைக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மீதி இருக்கின்ற தொகுதிக் கோரிக்கைகளைத் தாருங்கள். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளலாம்.*

திரு. மு. பாபு: *ஒரேயொரு நிமிடம். உங்கள்* matter*-தான். நமது தமிழ்நாட்டின் மாநில மரமான பனைமரம் நிலத்தடி நீரைத் தக்க வைப்பதிலும், பதநீர், பனைவெல்லம், பனங்கற்கண்டு, பனஞ்சர்க்கரை போன்ற பல உணவுப் பொருட்களுக்கு மூலமான மரமாகவும் உள்ளது. மேலும், பனை மரத்திலிருந்து கிடைக்கும் விசிறி, பாய், கூடை, மற்றும் பொம்மைகள் போன்ற பனை ஓலை பொருட்கள் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பனை மரம் என்றால் அது உங்களுக்கு உடையதுதான் என்று சொல்கிறீர்கள்! (சிரிப்பு)*

திரு. மு. பாபு: *ஒரு நிமிடத்தில் பேசிவிடுகிறேன். கடந்த 2021–2022 ஆம் நிதியாண்டில் சுமார் ரூ.20 கோடி அளவிற்கு பனை பொருட்களின் விற்பனை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமாக நடைபெற்றுள்ளது எனத் தெரிய வருகிறது. இவ்வாறு இலாபத்துடன் செயல்படும் பனைத் தொழிலை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் என்ற அமைப்பை உருவாக்கி, பனை விவசாயிகளை ஊக்கப்படுத்தி வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது ஏற்கெனவே இருக்கிறது.*

திரு. மு. பாபு: *தமிழ்நாடு அரசு பனை மரத்திற்கும், பனை பொருட்களுக்கும் முக்கியத்துவம் அளித்து வருவது மகிழ்ச்சியளிக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பாபு, உரையாற்றியது போதும். (குறுக்கீடு)*

திரு. மு. பாபு: *பனை மரத்தைப் பற்றி பேசுகிறேன். மேலும், இந்தப் பனைத் தொழிலை மேம்படுத்த, வரும் நிதியாண்டில் தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்திற்கு என தனி நிருவாக அமைப்பினை உருவாக்கி, அதற்கென வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் செய்து, இந்தத் தொழிலைப் பாதுகாத்திட வேண்டுமாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லி, உட்காருங்கள். (குறுக்கீடு) ஒரே வார்த்தையில், நன்றி சொல்லி, உட்காருங்கள்.*

திரு. மு. பாபு: *உலகப் புகழ்பெற்ற பட்டுப் புடவைக்குப் பெயர் போன காஞ்சிபுரம் பட்டு நெசவுத் தொழிலை நம்பி சுமார் 5,000-க்கும் மேற்பட்ட நெசவாளர் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர். (மணியடிக்கப்பெற்றது) காஞ்சிபுரத்தில் தற்போது இயங்கி வரும் 28 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 20 சங்கங்கள் நலிவுற்று மிகவும் மோசமான நிலையில் இயங்கி வருகின்றன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் வெகுநாட்களாக முறையான அமைப்புத் தேர்தல்கள் நடத்தப்படாமல் நிர்வாகம் நலிவுற்றுள்ளது. இதனால் மூலப் பொருளான பட்டினைக் கொள்முதல் செய்வதில் பெருமளவு. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் பட்டுச் சேலையைப்பற்றி பேசினால் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எல்லா* Member*-க்கும் ஒவ்வொரு பட்டுச் சேலை தந்தால், எங்கள் வீட்டில் கொண்டு கொடுத்தால், சந்தோஷப்படுவார்கள் என்று கேட்க வேண்டும். நன்றி சொல்லி, உரையை முடியுங்கள். (குறுக்கீடு) போதும். மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) நான், நன்றியைப் பதிவு செய்துவிட்டேன். போதும். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள்.*

2023 ஏப்ரல் 11]

திரு. மு. பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஆகியோர் வகுத்துக் கொடுத்த பாதையில் ஆட்சியை வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த வாய்ப்பை வழங்கிய தங்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கைகள்:

செய்யூர் தொகுதி, புதுப்பட்டினம் கிராமத்தில் நீர்வள ஆதாரத் துறைக்குச் சொந்தமான புதுப்பட்டினம் பெரிய ஏரியினைத் தூர் வாரி, ஆழப்படுத்தி அதன் கரைகளில் நடைபாதை வசதியுடன் பூங்கா அமைத்துத் தர வேண்டும்.

செய்யூர் தொகுதி, பரமேஸ்வரிமங்கலம் ஊராட்சியிலுள்ள மதுராந்தகம் ஏரி, பல்லவன்குளம் ஏரி ஆகியவற்றின் உபரிநீர் பாலாற்றில் கலக்கும் இடத்தில் இருக்கும் சேதமடைந்த பொய்கைமடு அணைக்கட்டினை புதிதாகக் கட்ட வேண்டும்.

செய்யூர் தொகுதி, சூணாம்பேடு அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தினைத் தரம் உயர்த்தி மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றித் தர வேண்டும்.

செய்யூர் முதல் வந்தவாசி சாலையில் சோத்துப்பாக்கம் கிராமத்தின் அருகே இரயில்வே கேட் பகுதியில் மேம்பாலம் அமைத்துத் தர வேண்டும்.

செய்யூர் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சிப் பகுதியில் ஒருங்கிணைந்த குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

செய்யூர் தொகுதி, ஓங்கூர் ஆற்றின் வளைவு பகுதியான வெள்ளக்கொண்டகரம் கிராமம் முதல் சூணாம்பேடு வரை ஆற்றின் கரையோரம் 7 கி.மீ தொலைவுக்கு தடுப்புச் சுவர் அமைத்துத் தர வேண்டும்.

செய்யூர் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சி, தழுதாளிகுப்பம் பகுதியில் குளிர்சாதன மீன் பதப்படுத்தும் நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

செய்யூர் தொகுதி, கிழக்குக் கடற்கரைச் சாலை பகுதியில் தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியம் சார்பாக பனை ஓலை பொருட்கள் தயாரிக்கும் தொழிற்கூடம் அமைத்துத் தர வேண்டும்.

செய்யூர் தொகுதி, வெங்கம்பாக்கம் முதல் கொளத்தூர் பகுதி வரை துண்டாக்கப்படும் கிராமங்களை இணைக்கும் வகையில் நடை மேம்பாலங்கள் அமைத்துத் தர வேண்டும்.

செய்யூர் தொகுதி, வெங்கம்பாக்கம், கிழக்குக் கடற்கரைச் சாலையில் விபத்துப் பிரிவு அவசர மருத்துவமனை ஒன்றினை அமைத்துத் தர வேண்டும்.

செய்யூர் தொகுதி, வாயலூர் ஊராட்சியில் ஆயப்பாக்கம் செல்லும் இதர மாவட்ட சாலையில் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ள அரசு மதுபானக் கடையை (கடை எண் 4046) அகற்றிட வேண்டும்.

செய்யூர் தொகுதி, கூவத்தூர் பகுதிக்கு பாலாற்று குடிநீர் விநியோகம் செய்திட வேண்டும்.

செய்யூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், வெங்கம்பாக்கம் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்கு புதிய வகுப்பறைகள் கட்டித் தர வேண்டும்.

செய்யூர் தொகுதி, நீலமங்கலம்-ஈசூர் தரைப் பாலத்தினை உயர்மட்ட மேம்பாலமாக மாற்றித் தர வேண்டும்.

செய்யூர் தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், கிளப்பாக்கம் ஊராட்சி வழியாக திருக்கழுக்குன்றம் முதல் கல்பாக்கம் வரை மினி பேருந்து இயக்க வேண்டும்.

செய்யூர் தொகுதி, போந்தூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

செய்யூர் தொகுதி, இடைக்கழிநாடு பேரூராட்சி, கடப்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள பனைவெல்ல கூட்டுறவுச் சங்கத்திற்கு அமைப்பு தேர்தல் நடத்தி மீண்டும் செயல்பாட்டுக்குக் கொண்டு வர வேண்டும்.

செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஒன்றியம், முகுந்தகிரி ஊராட்சி, மதுரா கரிகந்தாங்கல் ஏரியினைத் தூர்வாரி, கரைகளில் சாலை வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

செய்யூர் தொகுதி, கீழ்மருவத்தூர் ஊராட்சியில் உள்ள ஏரியைத் தூர்வாரி ஆழப்படுத்தி கரை மதகு ரிவிட்மன்ட் அமைத்து, கரைகளில் நடைபாதை வசதி ஏற்படுத்தித் தர வேண்டும்.

செய்யூர் தொகுதி, சித்தாமூர் ஊராட்சி, வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம் அருகே 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

செய்யூர் தொகுதி, சூணாம்பேடு ஊராட்சியில் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத் தர வேண்டும்.

கிழக்குக் கடற்கரைச் சாலையில் ஆம்புலன்ஸ் வாகன ஓட்டுனர்கள் மற்றும் பாராமெடிக் எனப்படும் துணை மருத்துவர்களுக்குத் தங்கும் வசதிகள் ஏற்படுத்தித் தர வேண்டும்.

செய்யூரைத் தலைமையிடமாகக் கொண்டு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம் அமைத்துத் தர வேண்டும்.

கல்பாக்கம் அணுமின் நிலைய வளாகத்தில் நிரந்தர தன்மையுள்ள B மற்றும் C பிரிவு வேலைவாய்ப்புகள் சுற்று வட்டார இளைஞர்களுக்கு வழங்கிட வேண்டும்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. க.சொ.க. கண்ணன் அவர்கள்.

***திரு. க.சொ.க. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், இந்த மாமன்றத்தின் முன்னாள் உறுப்பினர் மறைந்த எனது தந்தையார் திரு. க.சொ. கணேசன், பெரியவர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோரை வணங்கி எனது உரையைத் துவங்குகிறேன்.

வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவிற்கு வெல்கம் என சொல்லி கேரளாவும் அழைத்ததில், மலையாளம் சம்சாரித்து நற்பெயர் பெற்றவர்! (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட மாடல் ஆட்சியினைக் கண்டவர்! (மேசையைத் தட்டும் ஒலி) பிற மாநிலம்

வரையில் நீட்சியினைத் தந்தவர்! சோழர் அருங்காட்சியகத்தை தஞ்சையில் அமைத்திட ஆணையிட்டு, வாழும் ஆரூர் சோழன் என்றே நிரூபித்தவர்! அண்ணாவின், டாக்டர் கலைஞரின் ஆட்சியினை தமிழகத்திற்குத் தந்தவர்!

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிவ் வைந்து"

என்று குறள் சொல்கிறது. நோயற்ற வாழ்வு, விளைச்சல் மிகுதி, பொருளாதார வளம், இன்பநிலை மற்றும் உரிய பாதுகாப்பு ஆகிய ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகு! அந்த அழகிய நாட்டிற்கு ஒரு முதலமைச்சர்! கடந்த 2 ஆண்டுகளாக கண் துஞ்சாமல், எவருக்கும் அஞ்சாமல், எவருக்கும் அடிபணியாமல், எவருக்கும் தலைகுனியாமல் வீர நடைபோடும் எங்கள் திராவிட மாடல் ஆட்சியின் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? ஆம்! புலிக்குப் பிறந்தது புலியே ஆகும். எங்கள் விளையாட்டுத் துறை அமைச்சர், அவர் நாட்டின் நலன் காக்கும் நல்லவர்! ஓட்டளித்த மக்களுக்கு உதவுகின்ற வல்லவர்! சென்னையில் உலகளாவிய விளையாட்டுக் கழகம் சின்னவரின் சீரிய முயற்சியிலே சிறப்பாக உருவாகும்! சுற்றுலாத் தலங்களிலே மதி அங்காடி அமைத்து, மகளிர் வாழ்வில் ஏற்றம் காண திட்டம் தீட்டியவர்! கிராமப்புற இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டம் தந்தவர்! எங்கள் இளைய கலைஞரே! அண்ணன் உதயநிதியே! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்களின் இதயநிதியே! (மேசையைத் தட்டும் ஒலி)

"பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்"

என்ற குறளில் அரிய செயல்களை உரிய வழியில் செய்து முடிக்கும் திறமையுடையவர்கள் பெருமைக்குரியவராவார்கள் என்று திருவள்ளுவர் சொல்கிறார். அண்ணன் உதயநிதி அவர்கள் எங்களின் பெருமை மட்டுமல்ல; அவர் தமிழ்நாட்டின் பெருமை! (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

அவர்களுக்கும், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், எங்களுடைய மாவட்ட செயலாளர் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அண்ணன் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களுக்கும், ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும், அரசுக் கொறடா அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதறிக் கிடக்கின்ற இளைஞர்களின் ஆற்றலை ஒருமுகப்படுத்தி, அவர்களை ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடச் செய்வதை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகின்ற இந்தத் துறை மீதான மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உதயசூரியனின் எழுச்சி திராவிடத்தின் மலர்ச்சி!
உதயநிதியின் எழுச்சி இளையோர்க்கெல்லாம் மகிழ்ச்சி!
ஒற்றை செங்கல்லில் உலகமே கொண்டது மிரட்சி!
(மேசையைத் தட்டும் ஒலி)
அது வரலாற்றில் நீங்கள் செய்த புரட்சி!

ஒற்றை செங்கல் புரட்சியால் வரலாற்றைப் புரட்டிப் போட்டிருக்கும் மாண்புமிகு அண்ணன் உதயநிதி அவர்கள், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையிலும் பல்வேறு புரட்சிகளை தற்போது நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கண்டு உள்ளபடியே நாங்களெல்லாம் மகிழ்ச்சியடைகின்றோம். என்னை இந்த இடத்திற்கு வெற்றி வாகை சூட்டி அனுப்பி வைத்திருக்கின்ற என்னுடைய ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி வாக்காளர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதன்முறையாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவைக்கு வந்த நேரத்தில் ஒருபுறம் கொரோனா பெருந்தொற்றால் lockdown அறிவிக்கப்பட்ட சூழ்நிலை, மறுபுறம், இந்த அவையில் வெள்ளை அறிக்கையும் வெளியிடப்பட்டது. கடந்த காலங்களில் இருந்த ஆட்சியாளர்கள் நிதிநிலைமையை

மோசமாகக் கொண்டு சென்றதை அறிந்தபோது, நான், முதன்முதலாக சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறோமே! தொகுதிக்கு என்ன செய்யப் போகிறோம் என்று ஒருவித பயத்திலே இருந்தேன். ஆனால், என்னுடைய ஜெயங்கொண்டம் தொகுதியில் பல்வேறு சிறப்பான திட்டங்களை இந்த இரண்டு ஆண்டுகளில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் வழங்கியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக, 25 ஆண்டுகளுக்கு மேலாகக் கிடப்பிலே கிடந்த ஜெயங்கொண்டம் நிலக்கரி திட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து, விவசாயிகளிடத்தில் 8,374 ஏக்கர் நிலங்களை மீண்டும் ஒப்படைத்த ஒரே முதலமைச்சர் இந்திய வரலாற்றிலேயே (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்தான் என்பதை நான் இந்த நேரத்தில் நன்றியோடு நினைவுகூர்கிறேன்.

பிற்பகல் 2–05

அதேபோன்று, மாமன்னன் இராஜேந்திர சோழன் பிறந்த நாள் ஆடி திருவாதிரை நாளை அரசு விழாவாக அறிவித்ததற்கும், தொல்லியல் துறையின்கீழ், மாளிகைமேடு அகழ்வாராய்ச்சி அருங்காட்சியகம் ரூ.5 கோடி மதிப்பீட்டில் அமைக்க அறிவித்ததற்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில், ஜெயங்கொண்டம் அரசு பொது மருத்துவமனையை மாவட்ட தலைமை மருத்துவமனையாகத் தரமுயர்த்தி, ரூ.30 கோடி நிதியையும் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். ஆண்டிமடம் ஒன்றியம், பெரியாத்துக்குறிச்சியில் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை வழங்கியிருக்கிறார்கள். பொதுப் பணித் துறை, கட்டடங்கள் மற்றும் கட்டுமான பராமரிப்பில் இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் பல்வேறு கட்டடங்கள் என்று சுமார் 6 கோடி ரூபாய்க்கு பணிகள் நடைபெற்றிருக்கின்றன.

உயர் கல்வித் துறையில், ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு ரூ.12 கோடி நிதி ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நீர்வளத் துறையில் 3 கோடி ரூபாய்க்கு மேல் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. வேளாண்மைத் துறையில் இரண்டு வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்கள் 2.36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டிருக்கின்றன.

2023 ஏப்ரல் 11] [திரு. க.சொ.க. கண்ணன்]

ராஜேந்திரபட்டிணம் தொடங்கி ஜெயங்கொண்டம் வரை நான்கு வழிச்சாலை அமைப்பதற்கு 165 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பணியையும் இன்றைக்குத் துவக்கி வைத்திருக்கிறார்கள். இப்படி பல்வேறு பணிகள், ரூபாய் 245 கோடி மதிப்பீட்டில் நெடுஞ்சாலைத் துறையில் நடைபெற்றிருக்கின்றன. நெடுஞ்சாலைத் துறை, கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் 29 கோடி ரூபாய்க்கு பணிகள் நடைபெற்றிருக்கின்றன. ஊரக வளர்ச்சித் துறையிலும் பல்வேறு பணிகள்—சாலைகள், பாலங்கள் மற்றும் பள்ளிக் கட்டடங்கள் என்று 19.62 கோடி ரூபாய்க்கு பணிகள் நடைபெற்றிருக்கின்றன. கூட்டுறவுத் துறையில் இன்றைக்கு புதிய அங்காடிகள், முழுநேர நியாய விலைக் கடை, பகுதிநேர நியாய விலைக் கடை மற்றும் நகரும் நியாய விலைக் கடை என்று 13 கடைகள் இந்த ஆட்சியில் மட்டும் என்னுடைய தொகுதியில் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மின்சாரத் துறையில் ஜெயங்கொண்டத்திற்கு புதிய மின் செயற்பொறியாளர் அலுவலகத்தை வழங்கியிருக்கிறார்கள். மேலும் 3 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு உத்தரவு வழங்கி, அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அதோடுமட்டுமல்ல, சுதந்திரம் அடைந்த காலத்திற்குப் பிறகு ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வு நடந்திருக்கிறது. அதாவது, 375 மின்மாற்றிகளை என்னுடைய தொகுதியில் மட்டும் வழங்கியிருக்கிறார்கள். அதற்கு நான் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகராட்சி நிர்வாகத் துறையில் 27 கோடி ரூபாய் அளவிற்கு கலைஞர் நகர்ப்புற மேம்பாடு திட்டத்தின்கீழ் ஜெயங்கொண்டம் நகராட்சி, உடையார்பாளையம் பேரூராட்சி, வரதராஜன்பேட்டை பேரூராட்சி என்று பல்வேறு பணிகள் நடைபெற்றிருக்கின்றன. ஆக மொத்தம், கூடுதலாக, 375 கோடி ரூபாய்க்கு மேல், நான் குறிப்பிட்ட இந்தப் பணிகள் மட்டுமல்லாமல், இன்னும் நிறைய பணிகள் என்னுடைய தொகுதியில் நடைபெற்றிருக்கின்றன. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் மானியக் கோரிக்கையில் பேசக்கூடிய வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

அதேபோன்று இன்றைக்கு எல்லா உறுப்பினர்களும் குறிப்பிட்டுச் சொன்னதுபோல, சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டியை உலகமே வியக்கின்ற வகையில் தமிழ்நாட்டில் நடத்தி, தமிழ்நாடு மட்டுமல்ல, மற்ற மாநிலங்களும் பாராட்டக்கூடிய அளவிற்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* ஏன் டெல்லியே அதிர்ந்துபோகிற அளவிற்கு இன்றைக்கு மிகச் சிறப்பாக நடத்தியவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், அண்ணன் உதயநிதி அவர்களும். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதேபோன்று, தமிழ்நாடு முழுவதும் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியை மிகச் சிறப்பாக நடத்தியிருக்கின்றார்கள். சென்னையிலே உலகளாவிய அதி நவீன விளையாட்டு அரங்கத்தை அமைத்து, சர்வதேச விளையாட்டு வீரர்களை தமிழகத்திற்குக் கொண்டு வந்து பெருமை சேர்க்கின்ற ஒரு பணி இன்றைக்கு நம்முடைய துறையில் நடக்கவிருப்பது மகிழ்ச்சியாக இருக்கிறது.

அதேபோன்று, ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தை நவீன வசதி கட்டமைப்போடு செய்வதற்கு 25 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்திருக்கிறார்கள். 45,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய திறன் பயிற்சியை வழங்கி இன்றைக்கு இளைஞர்களுக்கு புத்துணர்ச்சியை இந்த அரசு தந்துகொண்டிருக்கிறது. அனைத்து மாவட்டங்களிலும் உள்ளூர் வல்லுநர்களைக் கொண்டு ஊரக இளைஞர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு 1,000 புதிய திறன் பள்ளிகள் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கியும், அதேபோன்று, அனைத்து மாவட்டங்களிலும் 100 இளைஞர் திறன் வேலைவாய்ப்பு முகாம்கள்/திருவிழாக்களை நடத்தியும் மிகச் சிறப்பாக இன்றைக்கு பல இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாக இந்தத் துறை திகழ்ந்து கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் அரசு பள்ளிகளைத் தவிர, தனியார் பள்ளிகளில் விளையாட்டிற்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. அவர்களெல்லாம் தேர்ச்சி விகிதத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு, பள்ளியை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை மாற்ற வேண்டும். இன்றைக்கு இருக்கக்கூடிய மாணவச் செல்வங்கள் எல்லோரும் கையடக்க செல்போன்களிலேயே தங்கள் வாழ்க்கையை மூழ்கடித்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த நிலையை மாற்றுவதற்கு அனைத்து பள்ளிகளிலும் விளையாட்டு வகுப்பைக்

2023 ஏப்ரல் 11] [திரு. க.சொ.க. கண்ணன்]

கட்டாயமாக்க வேண்டுமென்ற நிலையை நம்முடைய அரசு உருவாக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, கிராமப்புறத்தில் இருக்கக்கூடிய பல இளைஞர்கள் பல்வேறு விளையாட்டுகளில் தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தி இன்றைக்கு பல்வேறு சாதனைகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்து, அவர்களை ஊக்குவித்து, அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கி, நம்முடைய அரசு தமிழ்நாட்டில் பல்வேறு சிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

யோகா போன்ற வகுப்புகளை, துவக்கப் பள்ளி நிலையிலிருந்தே துவங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று, முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் விளையாட்டுத் திடல்கள் கிராமப்புறங்களில் அமைக்கப்பட்டு, உடற்பயிற்சிக் கருவிகளெல்லாம் வழங்கப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டது. அந்தச் சூழ்நிலையால் இன்றைக்கு பல கிராமங்களில் பல இளைஞர்கள் விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 2–10

44th Chess Olympiad போட்டிக்கான இலட்சினையை, Chess தம்பியை உருவாக்கியவர் நம்முடைய மாண்புமிகு அண்ணன் திரு. உதயநிதி அவர்கள் என்பதை இந்த அவையிலே பெருமையோடு நினைவுபடுத்த விரும்புகிறேன். வெற்றியை நோக்கிய பயணத்தில், நேரத்தை நீங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக ஒதுக்கி, திறம்படச் செயல்படுவது எங்களுக்கு மிகுந்த வழிகாட்டியாக உள்ளது. முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களே எங்கள் முன் நின்று எங்களை வழிநடத்துவதுபோல் அண்ணன் திரு. உதயநிதி அவர்கள் இன்றைக்கு வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சவால்களை எதிர்கொள்வதையே வாழ்நாளின் இலட்சியமாக வைத்துள்ள அண்ணன் உதயநிதி அவர்களை இந்த உலகத்திற்குத் தெரியப்படுத்த வேண்டியதில்லை. இந்தியாவே உங்களை யார் என்று இன்றைக்கு உற்றுநோக்கக்கூடிய ஒரு நிலை உருவாகியிருக்கிறது.

சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் பல்வேறு சிறப்பான திட்டங்களை முன்னெடுத்துச்

செயல்படுத்துவதற்கு அறிவித்திருக்கிறார்கள். நீர்வளங்களை மேம்படுத்துவது, வேளாண் உற்பத்தி, விளைச்சல் மற்றும் சந்தைப்படுத்துவதற்குரிய இணைப்புகளை உருவாக்குவது, அனைவருக்கும் வீடு வழங்குகின்ற திட்டம், இந்த நாட்டில் குடிசைகளே இல்லை என்ற நிலையை உருவாக்கி, 10 ஆண்டுகளில் 20 இலட்சம் concrete வீடுகளையும், நகர்ப்புரங்களிலே 9.75 இலட்சம் புதிய concrete வீடுகளையும் உருவாக்குவோம் என்று அறிவித்திருக்கிறார்கள்.

கல்வியின் தரத்தை உயர்த்துவது, சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்துவது, அனைவரும் உள்ளடங்கிய சமூகம், உள்கட்டமைப்பு, தொழில் வளர்ச்சி, திறன் மேம்பாடு என்று எல்லாவற்றிற்கும் முக்கியத்துவம் அளித்து, இன்றைக்கு பல்வேறு சிறப்பான திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன.

தமிழரின் மரபுகளை வெளிக்கொண்டு வருகின்ற விதத்திலே தொல்லியல் அகழ்வாராய்ச்சிமூலம் இன்றைக்கு தமிழரின் பண்டைக்கால வரலாற்றை, பண்பாட்டினைப் பறைசாற்றும் விதமாக நெல்லையிலே பொருநை அருங்காட்சியகத்தைக் காட்சிப்படுத்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. சமீபத்திலே கீழடி அகழாய்வுப் பகுதியில் திறந்தவெளி அருங்காட்சியகத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்திருக்கின்றார்கள். சிவகங்கை மாவட்டம், கீழடி, ஈரோடு மாவட்டம், கொடுமணல், தூத்துக்குடி மாவட்டம், ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை, (மணியடிக்கப்பெற்றது) எங்களுடைய அரியலூர் மாவட்டத்தில் இருக்கின்ற கங்கைகொண்ட சோழபுரம், மாளிகைமேடு இப்படி பல்வேறு இடங்களில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் இன்றைக்கு மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கள ஆய்வில் முதலமைச்சர், உங்கள் தொகுதியில் முதலமைச்சர், தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம், நான் முதல்வன் என்று பல்வேறு மிகச் சிறப்பான திட்டங்களை சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையிலே இன்றைக்குச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுத் துறையிலே எங்களுடைய மாவட்டத்தின் கோரிக்கைகளை இந்த நேரத்திலே நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு

வருகிறேன். அரியலூர் மாவட்டத்திற்கு மிக முக்கியமான செயற்கை இழை Hockey மைதானம் அமைத்துத் தர வேண்டும். மாவட்ட விளையாட்டு அரங்கத்திற்கு கைப்பந்து மைதானம் தேவைப்படுகிறது. இந்த விளையாட்டில் மாணவர்கள் இருப்பதால் அந்த மைதானம் தேவை.

அதேபோன்று, என்னுடைய ஜெயங்கொண்டம் தொகுதியிலே Mini Stadium ஒன்றை புதுப்பித்துத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் தொகுதி சார்ந்த கோரிக்கைகளையெல்லாம் என்னிடம் தாருங்கள். நீங்கள் Assembly-ல் பேசியதாகப் பதிவு செய்து தருகிறேன். போதும்.

திரு. க.சொ.க. கண்ணன்: கைத்தறித் துறையிலே ஒரு சில கருத்துகளை மாத்திரம் தெரிவித்துக்கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்களுக்கு இலவச மின்சாரம் 200 யூனிட்டிலிருந்து 300 யூனிட்டாகவும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட்டிலிருந்து 1,000 யூனிட்டாகவும் உயர்த்தி வழங்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று அரசும், Co-optex நிறுவனமும் இணைந்து வழங்கிய நெசவாளர் ஆயுள் காப்பீட்டுத் திட்டத்தை கடந்த ஆட்சியிலே நிறுத்தியிருக்கிறார்கள். அதை மீண்டும் நெசவாளர்களுக்கு வழங்கிட ஆவன செய்ய வேண்டும். ஓய்வு பெற்ற நெசவாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை ரூ.1,000/-லிருந்து ரூ.1,500/- ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும். அரியலூர் மாவட்டத்தில், குறிப்பாக என்னுடைய தொகுதியில் 26 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, என்னுடைய ஜெயங்கொண்டம் தொகுதிக்கு நெசவாளர் துறையிலே உதவி இயக்குநர் அலுவலகம் ஒன்று வழங்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும்.

திரு. க.சொ.க. கண்ணன்: நெசவாளர்கள் நெய்த புடவையை Co-optex மூலம் கொள்முதல் செய்து ஆந்திர மாநிலம், APCO நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நன்றி சொல்லி, உரையை முடியுங்கள்.

திரு. க.சொ.க. கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக் கோரிக்கைகள் இரண்டே இரண்டை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உடையார்பாளையம் வருவாய் வட்டத்தைப் பிரித்து தா.பழூரை தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா உருவாக்க வேண்டும்.

கொள்ளிடம் ஆற்றில் உள்ள மணல் திட்டுக்களை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். கொள்ளிடத்திலிருந்து மாமன்னன் ராஜேந்திர சோழன் கட்டமைத்த பொன்னேரிக்கு தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆண்டிமடம் மற்றும் தா.பழூரில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், மீதியை என்னிடம் கொடுங்கள். நான் அவைக் குறிப்பில் பதிவு செய்துவிடுகிறேன்.

திரு. க.சொ.க. கண்ணன்: நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடைசிப் பக்கம் எடுங்கள்.

திரு. க.சொ.க. கண்ணன்: கும்பகோணம், ஜெயங்கொண்டம் வழியாக விருத்தாசலம் வரை புதிய அகல இரயில் பாதைத் திட்டம் அமைக்க, ஒன்றிய அரசை வலியுறுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனியவை நாற்பது என்னும் நூலில்,

> 'ஆற்றுந் துணையால் அறஞ்செய்கைமுன் இனிதே
> பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
> வாய்ப்புடைய ராகி வலவைகள் அல்லாரைக்
> காப்படையக் கோடல் இனிது'

என்று கூறப்பட்டுள்ளது. அதனுடைய பொருள் என்னவென்றால், இயன்றவரை அறத்தைப் புரிவது மிக இனிதாகும். நல்ல நெறியில் செல்பவர்கள் பேசும் பயனுடைய பேச்சின் பெருமை இனிதாகும். கல்வி அறிவில் சிறந்தவராய், அச்சமேதும் இல்லாதவரைப் பாதுகாப்பாய் ஏற்றுக்கொள்ளுதல் இனிதாகும்.

இயன்றவரைக்கும் அல்ல, தான் இருக்கும் வரைக்கும் அறம் புரிவதையே வாழ்வாய்க் கொண்டிருப்பவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் அறிவிக்கும் அறிவிப்புகள் ஒவ்வொன்றும் தமிழினத்தின் பெருமையைப் பறைசாற்றுவதாக அமைந்திருக்கின்றன. இத்தகைய அறிவில் சிறந்தவரை, அச்சமேதும் இல்லாதவரை பாதுகாப்பாய் இந்த நாடே ஏற்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் நமக்கெல்லாம் இனிதாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனியவை நாற்பதில் இருக்கும், நாற்பதும் நமக்குத்தான். இந்தியாவே உற்றுநோக்கும் தேர்தலில் நாற்பதும் நமக்குத்தான். இந்தியாவைத் தீர்மானிக்கும் தலைவர் கிடைத்திருப்பதும் நமக்குத்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய நாடு எங்கள் மாண்புமிகு முதல்வருக்கு! (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு என்றும் எங்கள் இளையவருக்கே என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தொகுதிக் கோரிக்கை:

ஆண்டிமடம் புதிய தாலுகாவாக உள்ளதால், அங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாகத் தரமுயர்த்த வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரி. செந்தில்நாதன் அவர்கள்.

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். ஒருவர் ஒரு துறையில் வெற்றி பெறுவதே கடினம். வெற்றி பெற்ற பிறகு முதலிடம் பிடிப்பது அதைக் காட்டிலும் கடினம். தொடர்ந்து அதே முதலிடத்தில் இருப்பது மிக மிகக் கடினம். இன்று திரைத் துறையிலும், அரசியலிலும் வெற்றி பெற்று, முதலிடம் பிடித்து தொடர்ந்து மக்களால் போற்றப்படும் தலைவர்களாக வாழ்ந்த எங்கள் தலைவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்குகிறேன்.

'அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற் கியல்பு'

என்ற குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் எங்கள் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் ஆங்கிலத் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில், எனக்குப் பின்னால் இந்த இயக்கத்தை தொண்டர்களிடமும், மக்களிடமும் செல்வாக்கு பெற்ற ஒருவர் தலைமை ஏற்பார் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கேற்ப 1989 இல், அம்மா அவர்களுடைய அரசியல் வாரிசாக எடப்பாடியார் அவர்கள் எடப்பாடி சட்டமன்றத் தொகுதியில் சேவல் சின்னத்தில் நின்று வெற்றி பெற்றார்கள். அதன்பிறகு, தலைவர்கள் பிறப்பதில்லை, மக்களால் போற்றப்பட்டு தலைவர்களாக உருவாகிறார்கள் என்பதற்கு இலக்கணமாக, தொடர்ந்து ஜனநாயகத்தின் நாயகனாக, (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் காவல் தெய்வமாக, (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றரைக் கோடி அண்ணா தி.மு.க. தொண்டர்களின் பொதுச் செயலாளராக விளங்குகிற (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு தமிழக மக்களின் நம்பிக்கையைப் பெற்ற வருங்கால முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எதிர்க்கட்சிக் கொறடா அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களை வணங்குகிறேன். என்னுடைய பெற்றோர்கள் பெரியய்யா, சிலையம்மை ஆகியோரை வணங்குகிறேன். இந்த மாமன்றத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சான்றோர் பெருமக்களுக்கும் என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த சிவகங்கை சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், அயராது பாடுபட்ட கழக நிர்வாகிகளுக்கும், கூட்டணிக் கட்சி நிர்வாகிகளுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சிவகங்கை மாவட்ட மக்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையினுடைய பிதாமகள் என்றால் அது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், அவர்களுடைய காலத்திலேதான் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உருவாக்கப்பட்டது. புரட்சித் தலைவி

2023 ஏப்ரல் 11] [திரு. பெரி. செந்தில்நாதன்]

அம்மா அவர்களுடைய காலத்திலேதான் தமிழ்நாடு விளையாட்டு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. அவர்களுடைய காலத்திலேதான் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் கோப்பை உருவாக்கப்பட்டது. அவர்களுடைய காலத்திலேதான் முதன்முதலாக சீருடைப் பணியாளர்கள் தேர்வில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு 5 சதவிகித இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய காலத்திலேதான் கல்வி நிலையங்களில் விளையாட்டு வீரர்களுக்கு இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டது. முதன்முதலாக ஆசிய விளையாட்டுப் போட்டியை தமிழ்நாட்டிலே நடத்திக் காட்டிய பெருமைக்குரியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று, சென்னையில் இருக்கக்கூடிய அத்தனை ஸ்டேடியங்களும்—அதாவது, நேரு விளையாட்டு அரங்கம் ரூ.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முதன்முதலாக புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கட்டிக் கொடுக்கப்பட்டது; நேரு உள் விளையாட்டரங்கம் ரூ.20 கோடி மதிப்பீட்டில் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டது; மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியம் ரூ.8 கோடி மதிப்பீட்டில் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கட்டிக் கொடுக்கப்பட்டது; வேளச்சேரி நீச்சல் குளம் ரூ.17 கோடி மதிப்பீட்டில் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கட்டிக்கொடுக்கப்பட்டது;நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டு அரங்கம் ரூ.7½ கோடி மதிப்பீட்டில் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் கட்டிக் கொடுக்கப்பட்டது. அம்மா அவர்களின் அரசியல் வாரிசான அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சிதான் விளையாட்டு வீரர்களுக்கு பொற்காலம் என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய காலத்திலேதான் வெற்றி பெற்ற வீரர்களுக்கு ரூ.1 கோடியாக இருந்த ஊக்கத்தொகை ரூ.2 கோடியாக அறிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) பாரா ஒலிம்பிக் போட்டியில் வெற்றிபெற்ற செல்வன் திரு. மாரியப்பன் அவர்களுக்கு ரூ.2 கோடியை அள்ளிக் கொடுத்த அரசு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னையில் ஒருங்கிணைந்த விளையாட்டு அரங்கத்தை 12.60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டிக் கொடுத்தவர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள். ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் வீரர்கள் வெற்றி பெறுவதற்கு ஏற்ற வகையில், பன்னாட்டு

அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவிக்கும் திட்டம் என்ற திட்டத்தை அறிவித்து, ரூ.5 கோடியை அள்ளிக் கொடுத்த அரசு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தினுடைய தலைமை அலுவலகத்தைக் கட்டிக் கொடுத்தவர் அண்ணன் எடப்பாடியார் என்பதை நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பிற்பகல் 2–20

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் பயிற்சி மையம் அமைக்க 14 கோடி ரூபாயை ஒதுக்கிக் கொடுத்தவர் அண்ணன் எடப்பாடியார் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்திற்கு விளையாட்டு மையம் அமைக்க 13 கோடி ரூபாயும், விடுதிக்கு 4¾ கோடி ரூபாயும் ஒதுக்கிக் கொடுத்தவர் அண்ணன் எடப்பாடியார் என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

பேரறிஞர் அண்ணா அவர்கள் கைத்தறி நெசவாளர்களின் துயரைத் துடைக்க கைத்தறி துணிகளை தன் தலையிலே சுமந்து அவர்களுக்கு நிதி திரட்டிக் கொடுத்தார் என்பதை இந்த மாமன்றத்தில் பேசிய அத்துணை பேரும் சொன்னார்கள். இது அண்ணா அவர்களின் போற்றுதலுக்குரிய செயல், கைத்தறி மற்றும் துணிநூல் மானியத்தில் பேசுகின்றபோது அத்துணை பேரும் நினைத்துப் பார்க்கக்கூடிய அந்தத் தலைவரை, போற்றுகின்ற தலைவர்களாக எங்கள் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால், இங்கே பேசிய ஒருசில சட்டமன்ற உறுப்பினர்கள் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களை மறந்துவிட்டோம் என்றெல்லாம் சொல்லி பேசினார்கள். சென்னையில் அவரின் பெயரைத் தாங்கியிருக்கக்கூடிய அண்ணா சாலையிலே, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களுக்கு கம்பீரமான சிலையை தன் சொந்த செலவிலே நிறுவியவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

2023 ஏப்ரல் 11] [திரு. பெரி. செந்தில்நாதன்]

பேரறிஞர் அண்ணா அவர்களின் புத்தகங்களை அரசுடைமையாக்கி 75 இலட்சம் ரூபாய் நிதியை அந்தக் குடும்பத்திற்கு வழங்கியவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

நெசவாளர்களின் வாழ்வில் ஒளிபெறக்கூடிய திட்டமான தை பொங்கலுக்கு, ஏழை மக்களுக்கு இலவச வேட்டி, சேலை கொடுக்கின்ற திட்டத்தை முதன்முதலில் வழங்கியவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* நெசவாளர்களுக்கு 10 ஆயிரம் பசுமை வீடுகளைக் கட்டிக்கொடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மாமன்றத்திலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கைத்தறி நெசவாளர்களுக்கு 100 யூனிட் ஆக இருந்த இலவச மின்சாரத்தை 200 யூனிட் மின்சாரமாக உயர்த்திக் கொடுத்து, விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட் மின்சாரமாக இருந்ததை 750 யூனிட் மின்சாரமாக உயர்த்திக் கொடுத்த பெருமை அண்ணன் எடப்பாடியார் அவர்களைச் சாரும் என்பதை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கைத்தறித் துணிகளின் விற்பனையை ஊக்குவிக்கும்விதமாக தள்ளுபடி மானியத் திட்டத்திற்கு 150 கோடி ரூபாய் வழங்கிய அரசு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கைத்தறி ஆதரவுத் திட்டம். Handloom Support Programme (HSP) என்ற திட்டத்தைத் தொடங்கி, ஆண்டுக்கு 40 கோடி வீதம் மூன்று ஆண்டுகளுக்கு 120 கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்த அரசு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

தென்மாவட்டங்களில் அமைக்கப்படும் ஜவுளிப் பூங்காக்களுக்கு 100 சதவிகிதம் முத்திரைத்தாள் விலக்குக் கட்டணம் கொடுத்த அரசு அண்ணன் எடப்பாடியார் அரசு என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

கொரோனா காலத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.2,000/- வழங்குவதற்கு 32 கோடி ரூபாயை அள்ளிக் கொடுத்த அரசு அண்ணன் எடப்பாடியார் அரசு என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையில் சில கோரிக்கைகள். லைட்டான இந்தத் துறை இன்றைக்கு வெயிட்டான அமைச்சரிடம் வந்திருக்கிறது. இந்தத் துறைக்கு வேண்டிய அளவிற்கு நிதிகளை ஒதுக்கீடு செய்து மாநிலம் முழுவதும் பல்வேறு திட்டங்களை, புரட்சித் தலைவரைப் போல, அம்மாவைப் போல, அண்ணன் எடப்பாடியாரைப் போல, நீங்களும் செய்து தர வேண்டும்.

அதிலும் குறிப்பாக, சிவகங்கை மாவட்டத்திற்குத் தேவையான, விளையாட்டு சம்பந்தமான சில கோரிக்கைகளை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சிவகங்கை அரசு மன்னர் துரைசிங்கம் கல்லூரியிலே விளையாட்டு உடற்கல்வி இயக்குநரும், பயிற்சியாளரும் இல்லை, அவர்களை நியமித்துத் தர வேண்டும்.

சிவகங்கை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் செயல்படும், மாவட்ட விளையாட்டு திறந்தவெளி அரங்கத்தில் பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் அமைத்துத் தர வேண்டும்.

கால்பந்து விளையாட்டரங்கம், கையுந்து பந்து ஆடுகளம், கபடி ஆடுகளம் ஆகியவற்றிற்கு மின்னொளி (light) அமைத்துக் கொடுக்க வேண்டும். விளையாட்டு அரங்கத்திலுள்ள கேலரிக்கு மேல்கூரை அமைத்துத் தர வேண்டும். மாவட்ட விளையாட்டு விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு தடகளம் மற்றும் கால்பந்து போன்ற இரண்டு பயிற்சிகள்தான் இருக்கின்றன. அவற்றில் கூடைப்பந்து, கபடி விளையாட்டுகளைச் சேர்க்க வேண்டும். அரசு பெண்கள் கல்லூரியில் இருக்கக்கூடிய இறகுப்பந்து உள்ளரங்கத்தைச் சீரமைக்க வேண்டும். ஹாக்கி மற்றும் கால்பந்து பெண் விளையாட்டு வீரர்களுக்கு பெண் பயிற்சியாளர்கள் வேண்டும். மாவட்ட விளையாட்டு அரங்கில் உள்ள மாணவர் விடுதிக்கு குடிநீர் வசதியும், மின்சாதன வசதிகளும் செய்து தரப்பட வேண்டும். அரசுக் கல்லூரியில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் அமைத்துத் தர வேண்டும். செயற்கை இழை ஓடுதளம் அமைத்துத் தர வேண்டும். கிரிக்கெட் பயிற்சி தளம், பூப்பந்து ஆடுதளம்,

டென்னிகாய்ட் ஆடுதளம் போன்றவையும், ஜிம்னாஸ்டிக் கூடமும் அமைத்துத் தர வேண்டுமென்று அன்போடு வேண்டிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எனது சிவகங்கை தொகுதியின் சில கோரிக்கைகளை முன்வைக்க விரும்புகின்றேன். மாண்புமிகு முன்னாள் முதல்வர் அண்ணன் எடப்பாடியார் அவர்களால் துவங்கி வைக்கப்பட்ட காவேரி—வைகை—குண்டாறு திட்டத்திற்கு முழுமையாக நிதியொதுக்கீடு செய்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு வேண்டிக்கொள்கிறேன். காலியாகவுள்ள சுமார் 80 ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள் பணியிடத்தை நிரப்பித் தர வேண்டும். சிவகங்கை நகராட்சியை முதல்நிலையிலிருந்து தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தித் தர வேண்டும். சிவகங்கை நகருக்கு சுற்றுச்சாலையும், சிவகங்கையின் பேருந்து நிலையத்தை விரிவாக்கமும் செய்து தர வேண்டும். காளையார்கோவில் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டும். கல்லல் ஊராட்சியைப் பேரூராட்சியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். சிவகங்கை மாவட்டத்தில் காலியாகவுள்ள கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர் பணியிடங்களை நியமனம் செய்து தர வேண்டும். காளையார்கோவிலில் அரசுக் கல்லூரி அமைத்துத் தர வேண்டும். கல்லல் மற்றும் காளையார்கோவிலில் புதிய பேருந்து நிலையம் அமைத்துத் தர வேண்டும்.

பிற்பகல் 2–25

இடைக்காட்டூரில் சிவன் கோயிலுக்கு இராஜ கோபுரமும், கால்நடை மருத்துவமனையும் கட்டித்தர வேண்டும். சிவகங்கை மருத்துவக் கல்லூரியில், Nursing கல்லூரி மற்றும் மருந்தாளுநர் பட்டயப் படிப்புப் பிரிவு அமைத்துத்தர வேண்டும். (மணியடிக்கபெற்றது) சிவகங்கை மாவட்டம், மதகுபட்டியிலே அரசு உயர்நிலைப் பள்ளி அமைத்துத்தர வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும்.

திரு. பெரி. செந்தில்நாதன்: ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர வேண்டும். மற்ற கோரிக்கைகளை நான் உங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றைப் பதிவு செய்துதர வேண்டுமென்று வேண்டிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இந்த அவையில் பேசியதாகப் பதிவு செய்து தந்துவிடுகிறேன்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *மாண்புமிகு சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையினுடைய அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை என்ற துறை, சிறிய துறைபோல இருந்தாலும், மிகப் பெரிய துறையாக இருக்கிறது. ஒட்டுமொத்த அத்துணைத் துறைகளையும் ஒருங்கிணைக்கக்கூடிய மிகப் பெரிய துறையாக இருக்கிறது. நான் அன்பு கூர்ந்து உங்கள் வாயிலாக வேண்டிக்கொள்வதெல்லாம், ஓர் அரசு நல்ல அரசு, தன்னுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொண்டு, அதன்மூலமாக நல்ல திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். அந்த வருமானத்தைப் பெருக்குகின்ற வகையிலே, இன்று தமிழக அரசினுடைய பெரும்பாலான வருமானமாக இருக்கக்கூடிய, தனி நபருக்குச் சென்று கொண்டிருந்த வருமானத்தை, அந்தத் துறையை, முதன்முதலாக* TASMAC*-ஐ கையிலே எடுத்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கிட்டத்தட்ட 45 ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் கொடுக்கக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் துறை அம்மா அவர்களால் கையகப்படுத்தப்பட்டது. அதுபோன்று* TAMIN *என்று சொல்லக்கூடிய கனிம வளத் துறையும் மாண்புமிகு அம்மா அவர்களால் எடுக்கப்பட்டு, அரசிற்கு வருமானம் சேர்க்கப்பட்டது. அதுபோன்று புதிய வருமானங்களைக் கண்டுபிடிக்கக்கூடிய துறையாக இந்தத் துறையிலே முழு முயற்சி செய்வதாகப் படித்தேன். அதைச் செயல்படுத்த வேண்டுமேயொழிய, ஏற்கெனவே, நடந்துகொண்டிருக்கக்கூடிய திட்டங்களைக் குறைத்து, நிறுத்தி அதன்மூலமாக வருமானத்தைப் பெருக்குகின்ற செயலைத் தவிர்க்க வேண்டுமென்று அன்போடு உங்களிடம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) தாலிக்கு தங்கம் திட்டமாக இருக்கட்டும்,* laptop *திட்டமாக இருக்கட்டும், அந்தத் திட்டங்களை இரத்து செய்து அதன் மூலமாக அந்தப் பணத்தை வருமானமாகக் கணக்கிலே கொள்ளக்கூடாது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, தாலிக்கு தங்கம், இரத்து பண்ணவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல முறை பதிவு செய்துவிட்டார். நீங்கள் நன்றி சொல்லி, முடியுங்கள்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: பத்திரப் பதிவுத் துறையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேற்று பேசுகின்றபோது சொன்னார்கள், 35 ஆயிரம் கோடிக்கு மேற்பட்ட, வருமானம் வரக்கூடிய அந்தத் துறைக்கு, ** நேற்று அறிவிப்புக்கூட கொடுக்கப்படவில்லை. மிகச் சிறப்பாக வருமானம் வரக்கூடிய அந்தத் துறையிலே, அந்தத் துறைக்கு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிவிப்பு தேவையான அளவிற்கு அவர்கள் எல்லாமே கொடுத்துவிட்டார்கள்.

திரு. பெரி. செந்தில்நாதன்: வருமானத்தைக் கூட்டுவதற்கு, நான் இந்த அரசிற்கு ஆலோசனையாகக்கூட சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், (மணியடிக்கப்பெற்றது) சொத்தை வாங்குவதைபோல, தனி நபர் கொடுக்கின்ற பணத்தை, . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள், ** அது தேவையில்லை.

திரு. பெரி. செந்தில்நாதன்: ** என்று சொல்லியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** அதில் யாரும் குறை வைக்கவில்லை. அது தேவையில்லை, அதை நீக்கிவிடுவோம்.

திரு. பெரி. செந்தில்நாதன்: அந்தத் துறையிலே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கூடுதலாகக் கேட்டால் கொடுத்துவிடப் போகிறார்கள்.

திரு. பெரி. செந்தில்நாதன்: சொத்துக்களைப் பதிவு செய்வதுபோல, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேவைக்குத்தான் கொடுக்க முடியும்.

திரு. பெரி. செந்தில்நாதன்: Register செய்து, ஒரு சதவிகிதம் வைத்தால்கூட, ஆண்டிற்கு பல்லாயிரம் கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய நிலையிலே நிச்சயமாக அது உருவாக்கப்படும் என்பதை நான் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதுமே. நன்றி சொல்லுங்கள். உங்கள் கொறடா ஏதோ பேச வேண்டுமென்று சொல்கிறார்.

திரு. பெரி. செந்தில்நாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கருத்து. Finance Companies, பல Companies, இன்று தொலைக்காட்சிகளிலே பார்த்தால், ரூ. 5 ஆயிரம் கோடி, ரூ. 4 ஆயிரம் கோடி, ரூ. 3 ஆயிரம் கோடி என்று ஏமாற்றிவிட்டுச் செல்கிறார்கள். நான் இந்த அரசை அன்போடு வேண்டிக்கொள்வதெல்லாம், இந்த Finance Companies-ஐ எல்லாம், ஆரம்பிக்கின்றபோதே, தவறு செய்யும் நிறுவனங்கள் குறித்து மக்களிடம் புகாரைப் பெற்று அவர்களை நடத்தவிடாமல், ஆரம்பிக்கவிடாமல் தடுக்க வேண்டும். ஆரம்பித்து கொள்ளையடித்த பிறகு தடுக்க முடியாது. அதற்கு வழிவகை செய்ய வேண்டும். இதை, இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதை, இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.

திரு. பெரி. செந்தில்நாதன்: அதேபோன்று கைத்தறித் துறையைப் பொறுத்தவரையில், கைத்தறியிலே, சில கோரிக்கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு நிமிடம் தருகிறேன். உங்களுக்கு ஒரு நிமிடம், கொறடா அவர்களுக்கு ஒரு நிமிடம் தருகிறேன்.

திரு. பெரி. செந்தில்நாதன்: தரமான நூலை அரசே supply செய்ய வேண்டுமென்பது, இன்று கைத்தறி நெசவாளர்களின் வேண்டுகோளாக இருக்கிறது. ** இங்கே விற்பனை செய்வதன்மூலமாக, இங்கு உற்பத்தி செய்கின்ற உற்பத்தியாளர்களுக்கு மிகப்பெரிய பாதிப்பு ஏற்படுகிறது. இதேபோன்று நாடாளுமன்றத்தில் ஒருநேரத்தில், . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் ** என்பதை ஆதாரம் இல்லாமல் சொல்ல வேண்டாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள், அதை நீக்கி விடுவோம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 ஏப்ரல் 11]

திரு. பெரி. செந்தில்நாதன்: *அதனைத் தடை செய்ய வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நன்றி சொல்லுங்கள்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *அம்மா அவர்களுடைய, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் இறக்குமதி செய்ய வேண்டுமென்றால், ஒன்றிய அரசிடம்தான் சொல்ல வேண்டும்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *இல்லை, இல்லை, அதை மத்திய அரசிடம் அணுகி செய்துதர வேண்டும். இதேபோல நாடாளுமன்ற, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இறக்குமதி, ஏற்றுமதி நம்முடைய பொறுப்பு இல்லை.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *இதேபோன்று நாடாளுமன்றத்தில் ஒருமுறை சீனப் பொருட்கள் இறக்குமதியாவதால், இங்கு தொழில் செய்யக்கூடியவர்களுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது என்று ஓர் அமைச்சர் சொல்லியபொழுது, மாண்புமிகு அமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள், 'நல்ல கருத்தை அரசிற்கு முன் வைத்திருக்கிறீர்கள். இதை உடனடியாக கவனத்தில் எடுத்துக்கொண்டு, தடை செய்வோம்' என்று தடை செய்தார்கள். அதுபோல, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, நன்றி, அங்கேயே சொல்லுங்கள். இதையும் அங்கேயே சொல்லுங்கள். மாண்புமிகு கொறடா சொல்லுங்கள். நன்றி.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *விருதுநகரில் அமைக்கப்படுகின்ற ஜவுளிப் பூங்காவில் தென்மாவட்டத்தில் இருக்கக்கூடிய முதலீட்டாளர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்று அன்போடு வேண்டிக்கொள்கிறேன். (மணியடிக்கபெற்றது.) நெசவுத் தொழில் செய்யும் தேவாங்கர் சமுதாயத்தினரை* MBC *பட்டியலில் சேர்க்க வேண்டுமென்பது அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கை. அதனை அவர்களுக்குச் செய்துதர வேண்டும்.*

[திரு. பெரி. செந்தில்நாதன்] [2023 ஏப்ரல் 11
பிற்பகல் 2-30

நெசவாளர்களுக்கு ஈமச் சடங்குத் தொகை ரூ.50,000/- இரண்டு ஆண்டுகளாகக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அதனை வழங்க வேண்டும். கோரா பட்டு வகைகளை விசைத் தறியில் உற்பத்தி செய்ய அனுமதித்தால், கைத்தறி நெசவாளர்கள் பாதிக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். அதையும் அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் தொகுதியில் காளையார்கோவிலில் காளீஸ்வரா Mill *என்கின்ற தேசிய* NTCL Mill *இருக்கிறது. அந்த* Mill *இரண்டு ஆண்டு காலமாக அடைத்து வைக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், இங்கிருக்கக்கூடிய ஆட்சியாளர்களும், பல்லாயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு ஏதுவாக மத்திய அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி மில்லைத் திறக்க வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நன்றி, நன்றி.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *இலவச வேட்டி, சேலைக்கான ஒப்பந்தப்புள்ளி மே மாதமே கொடுக்கப்பட வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உங்களுடைய தொகுதிக் கோரிக்கைகளை எழுதிக் கொடுத்துவிடுங்கள். நான் பதிவு செய்துகொள்கிறேன். (குறுக்கீடுகள்) பதிலுரை. இல்லை, உங்களைப் பேச அனுமதித்தால், இன்னும் ஒரு மணி நேரம் பேசுவீர்கள். இன்றைக்கு நேரமில்லை. நன்றி என்று சொல்லி, ஒரு வார்த்தையோடு உரையை முடியுங்கள்.*

திரு. பெரி. செந்தில்நாதன்: *சிவகங்கை மாவட்டம், அதிக பருத்தி உற்பத்தி செய்யும் மாவட்டம். அதற்கு அரசு சிறப்பு நிதி ஒதுக்கி வழிவகை செய்ய வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். போதும். மாண்புமிகு எதிர்க்கட்சிக் கொறடா, நீங்கள் ஏதோ சொல்ல முற்பட்டீர்கள். என்னவென்று சொல்லுங்கள்.*

2023 ஏப்ரல் 11]

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு விளையாட்டுத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதம் நடைபெறுகிறது. இன்றைக்கு காலையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அறையிலும் இதைப்பற்றி பேசினோம். எங்களுடைய முன்னாள் முதலமைச்சர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, அது I.P.L. போட்டிகளாக இருந்தாலும் சரி, மற்ற விளையாட்டுப் போட்டிகளாக இருந்தாலும் சரி, அந்த நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றவர்கள், யார் கேட்டாலும் உள்ளே அனுமதிக்கப்படும் pass ஏற்பாடு செய்யப்பட்டு கொடுக்கப்பட்டு வந்தன. அப்போது எங்களுடைய அண்ணன் திரு. செங்கோட்டையன் அவர்கள்தான் அந்தத் துறையின் அமைச்சராக இருந்தார். இப்போதும், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் pass கேட்கும்பொழுது, 300, 400 pass கொடுத்ததாகச் சொல்கிறார்கள். ஆனால், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு pass கொடுக்க வாய்ப்புகள் இல்லை. மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், I.P.L. போட்டிகளுக்கு,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எந்த pass? இங்கே Assembly உள்ளே வருவதற்கா? (குறுக்கீடு) I.P.L. Matches-க்கு செல்வதற்கான pass கேட்கிறீர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: இல்லை. I.P.L. cricket matches நடந்துகொண்டிருக்கின்றன. I.P.L. matches பார்ப்பதற்கான pass. அப்பொழுது pass கொடுக்கப்பட்டன. இது விளையாட்டுத் துறை தொடர்பானதுதான். இதனை நாங்கள் கோரிக்கையாகத்தானே வைக்கிறோம்? எங்களுக்கு மட்டுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உங்களுடைய கோரிக்கையைப் பதிவு செய்துவிட்டீர்கள். விளையாட்டுத் துறையாக இருந்தாலும், அந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது யார் என்று உங்களுக்கே தெரியும். உட்காருங்கள். உங்களுடைய கோரிக்கையைப் பதிவு செய்துவிட்டீர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: இதனை மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுபோன்று* pass *கேட்டு, தரவில்லையென்றால், குறிப்பிட்டுச் சொல்லுங்கள். அதனைக் கொடுக்கச் சொல்வோம். உட்காருங்கள். நீங்கள் கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். நன்றி, நன்றி.*

திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் கோரிக்கையாக வைக்கிறோம். ஆகவே,* I.P.L. *போட்டிகளைப் பார்க்கச் செல்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சம்பந்தப்பட்டவர்களுக்கும் அந்த வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். காந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மனிதர்களுக்கு பகுத்தறிவு, சுயமரியாதை, தன்மான உணர்வை ஊட்டிய பகுத்தறிவுப் பகலவன், தந்தை பெரியார் அவர்களை வணங்குகிறேன்.*

தாய்நாட்டிற்கு, தமிழ்நாடு என பெயர் சூட்டியவர்; தம்பி என அழைத்து, நமக்கு எல்லாம் அண்ணன், தம்பி பாசத்தைக் கற்றுத் தந்தவர்; ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணச் சொன்ன, பேரறிஞர் அண்ணா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாழுகின்ற காலத்திலேயே வரலாறாக வாழ்ந்தவர்; தன் வாழ்வையே, தமிழ்! தமிழ் மக்களுக்காக அர்ப்பணித்தவர்; நம்மையெல்லாம் ஆளாக்கியவர்; அன்னைத் தமிழை அழகுபடுத்தியவர்; அன்புத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இனமானத்தைக் கற்றுத் தந்து, நட்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய, இனமான பேராசிரியர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசியல் மாமேதை, தலைவர் கலைஞரின் மனசாட்சி, அண்ணன் மாறன் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டு மக்களுக்கு, புது விடியலைத் தந்து, நீதிக் கட்சி ஆட்சியின் தொடராக சமூக நீதி, இட ஒதுக்கீடு, பாலின சமத்துவம்,

2023 ஏப்ரல் 11] [திரு. ஆர். காந்தி]

அனைவருக்கும் சம வாய்ப்பு, மாநில சுயாட்சி கொள்கை, சமூகப் பாதுகாப்பு, கொள்கை மாறா பயணம் என இலக்கணம் வகுத்து, அதன் அடிப்படையில் சிறப்பான ஆட்சி நடத்துவதால், இன்றைய தினம் அண்டை மாநிலமும், இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் பாராட்டுகின்ற "திராவிட மாடல் ஆட்சியின்" நாயகர், மக்கள் தலைவர், கழகத் தலைவர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–35

மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர், அவை முன்னவர், சட்டமன்றத்திலுள்ள மூத்தவர், அண்ணன் துரைமுருகன் அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

தலைவர் கலைஞர் அவர்களைப்போல், presence of mind *ஆக நறுக்கென்றும், நச்சென்றும், அதே நேரத்தில், ஆணித்தரமாகவும் பேசும், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)*

கழகத்தின் மூத்தவர், முன்னாள் அமைச்சர், எனது அரசியல் ஆசான், அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கு வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) 50 வருடங்களாக எனது குடும்ப நண்பர் திரு. முரசொலி செல்வம் அவர்களுக்கு வணக்கம்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு வணக்கம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு வணக்கம். இம்மாமன்றத்தின், அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வணக்கம்.

இராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் எனக்கு வாக்களித்த வாக்காளர்களுக்கு வணக்கம். எனது வெற்றிக்காகப் பாடுபட்ட கழக நிர்வாகிகள், தொண்டர்கள், கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் ஆகிய அனைவருக்கும் வணக்கம்.

கைத்தறி

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு அடுத்தபடியாக, நெசவுத் தொழில் பெருமளவு மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகிற தொழில். இந்தியாவிலேயே தமிழ்நாடு,

முதன்மை மாநிலமாக விளங்குகிறது. எப்போதெல்லாம் கழக ஆட்சி பொறுப்பில் இருக்கிறதோ, அப்போதெல்லாம் நெசவாளர்களின் தேவை குறித்து, தனிக் கவனம் செலுத்தி, பல நல்ல திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று 2 ஆண்டுகள்தான் ஆகியுள்ளன; இந்த 2 ஆண்டு காலத்திலே, அண்ணா, கலைஞர் ஆகியோரை மிஞ்சுகின்ற அளவிற்கு நெசவாளர்களுக்கு, பல்வேறு மகத்தான திட்டங்களைச் செயல்படுத்தி உள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்போது இந்த மாமன்றத்தில் அறிவித்தவாறு, தள்ளுபடி மானியம் (Rebate Scheme)—கழக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தேர்தல் அறிக்கையில் தெரிவித்தவாறு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையாக இருந்த தள்ளுபடி மானியத் தொகை ரூபாய் 160 கோடியுடன், நடப்பாண்டு தொகை ரூபாய் 150 கோடியும் சேர்த்து மொத்தம் ரூபாய் 310 கோடி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மே 2021 முதல் மார்ச் 2022 வரை வழங்கப்பட்டது. நான் பெயர்கூட சொல்லவில்லை. அந்த ஆட்சி என்று சொன்னால், அவர்கள் எழுந்துகொள்கிறார்கள். நான் 'நிலுவையிலிருந்தது' என்றுதான் சொன்னேனே தவிர, ஆட்சியைப் பற்றி சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பெயர்கூட நான் சொல்வதில்லை. மேலும், 2022–2023 ஆம் ஆண்டில், ரூபாய் 200 கோடி சங்கங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கடந்த 2 ஆண்டுகளில் மட்டும், இத்திட்டத்திற்கு சங்கங்களுக்கு நிலுவை இல்லாமல் மொத்தம் ரூபாய் 510 கோடி வழங்கிய முதலமைச்சர் யார் என்றால், இங்கே அமர்ந்திருக்கின்ற முதலமைச்சர் அவர்கள்தான். திராவிட நாயகர். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுவெல்லாம் தேர்தல் நேரத்தில் சொல்லியதுதான். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் 406 தற்காலிக பணியாளர்கள் 27–6–2022 முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல் 1,033 நிரந்தரப் பணியாளர்களுக்கு 31–5–2022 முதல் 15% ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது.

ஈரோடு, தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் பணிபுரியும் 300 தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 5,000/– ஊதிய உயர்வு வழங்கப்பட்டுள்ளது வேறு எந்த ஆட்சியில் யார் இதுமாதிரியெல்லாம் இதுவரையில் செய்திருக்கிறார்கள் ?

பிற்பகல் 2–40

அதேமாதிரி, நீண்ட நாள் கோரிக்கை. கூட்டுறவுச் சங்கங்களில் ஒரு MD (Managing Director) இருப்பார். அவருக்கு அந்த கூட்டுறவுச் சங்கங்கள் தான் மாதந்தோறும் சம்பளம் வழங்க வேண்டும் என்றிருந்தது. ஆனால், அவர்களால் சம்பளம் அளிக்க முடியவில்லை, அதை அரசே ஏற்று நடத்த வேண்டும் என முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்த உடனேயே, 15–12–2022 அன்று அவருக்கான ஊதியத்தினை அரசே ஏற்குமென அரசாணையை வெளியிட்டுள்ளார். இதையெல்லாம், நாங்கள் சொன்னால் கோபித்துக்கொள்கிறீர்கள். ஆட்சிக்கு வந்து, இந்தச் சூழ்நிலையில், இந்த முதலமைச்சர் செய்த பணிகளை நீங்கள் கொஞ்சம் பாருங்கள். பாராட்ட வேண்டாம். குறை சொல்லவும் வேண்டாம். (சிரிப்பு)

நெசவாளர் முத்ரா திட்டம். இந்தத் திட்டத்திற்கு கடந்த இரண்டு ஆண்டுகளில், வங்கிமூலம் 27,073 கைத்தறி நெசவாளர்களுக்கு ரூபாய் 132.40 இலட்சம் குறைந்த வட்டியில் கடன் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தி, இந்தியாவிலேயே தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது.

வேட்டி சேலை வழங்கும் திட்டம். இதுகுறித்து நீங்கள் நிறைய பேசி விட்டீர்கள். இந்த பொங்கல் 2023 இன்போது எங்கள் முதலமைச்சர் முதன்முதலில் எங்களைக் கூப்பிட்டு, நீங்கள் கொடுக்கின்ற, அரசு செலவு செய்கிற 499 கோடி ரூபாய் மக்களைச் சரியாக சென்றடையவில்லை. இந்த வேட்டி சேலைகளை யாரும் பயன்படுத்துவதில்லை. இந்த வேட்டி–சேலைகளின் தரத்தை உயர்த்தியாக வேண்டுமென்று எங்களுக்கு ஆணையிட்டார். அந்த ஆணையையேற்று, நாங்கள் அதற்காக என்னென்ன செய்ய முடியுமோ, பல விஷயங்களை வெளிப்படையாகப் பேச முடியாது, இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சரின் ஆணைப்படி, 15 புதிய சேலை இரகங்களையும், 5 புதிய வேட்டி இரகங்களையும் இன்று தரமாக மாற்றியமைத்திருக்கிறோம்.

(மேசையைத் தட்டும் ஒலி) இந்த வருடம் கொஞ்சம் தாமதமானது. இல்லையென்று சொல்லவில்லை. நான் எதற்காக எதிர்க்கட்சித் தலைவரிடம் சொன்னேன் என்றால், குறை சொல்ல வேண்டும் என்று சொல்லவே இல்லை. நாமிருக்கும்போது எப்படி இருந்தது என்பதையும் நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். அதற்காகத்தான் சொன்னேனே தவிர, குறை சொல்ல வேண்டும் என்பதற்காக சொல்லவே இல்லை. ஒரு குறை கூட உங்களைப் பற்றி நான் சொல்லவே இல்லை. பொதுமக்களிடமிருந்து ஒரு புகாராவது வந்துள்ளதா என்று சொல்லுங்கள். ஒரே ஒரு புகார் கூட கிடையாது. அந்தளவுக்கு இன்று நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, செயல்பட்டு வருகிறார்.

வேட்டி சேலை நிலுவைத் தொகை. கடந்த ஆட்சிக் காலத்தில், பொங்கல் 2017 முதல் பொங்கல் 2021 வரை 5 ஆண்டுகளாக வேட்டி சேலைகளுக்கு கொள்முதல் விலை நிர்ணயம் செய்யப்படாமல் நிலுவையாக இருந்தது. இதனை மாண்புமிகு முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்றவுடன் அதற்கு உடனடியாக ஒப்புதல் அளித்த ஒரே முதல்வர் நமது முதலமைச்சர் தான். கடந்த 5 ஆண்டுகளுக்கான மொத்த நிலுவைத் தொகை ரூபாய் 49.12 கோடி நடப்பாண்டில் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டில் 1.83 கோடி ரூபாயும், 2018 ஆம் ஆண்டில் 2.76 கோடி ரூபாயும், 2020 ஆம் ஆண்டில் 11.66 கோடி ரூபாயும், 2022 ஆம் ஆண்டில் 32.87 கோடி ரூபாயும், மொத்தம் ரூ.49.12 கோடி ரூபாய் நிலுவைத் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், நாங்கள், இவ்வரசு பொறுப்பேற்றவுடன் பொங்கல் 2022ஆம் ஆண்டுக்கான நிலுவைத் தொகை ரூபாய் 99.59 கோடியும் சேர்த்து மொத்தம் ரூபாய் 148.71 கோடி நடப்பாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

பள்ளி சீருடைத் திட்டம். 2022–23 ஆம் கல்வியாண்டில் 42.24 இலட்சம் மாணாக்கர்களுக்கு ஒரு மாணாக்கருக்கு, 4 sets வீதம் ரூபாய் 432 கோடி மதிப்பீட்டில் பள்ளி சீருடை வழங்கப்பட்டது.

நெசவாளர்களுக்கு வீடு வழங்கும் திட்டம். தற்போது, ஒன்றிய அரசின் PM Awas Yojana திட்டத்தின்கீழ், வீடு கட்டித் தர, ரூபாய் 2.10 இலட்சம் முதல் ரூபாய் 2.50 இலட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது. அந்தத் தொகை நெசவாளர்களுக்குப் போதாது. ஏனென்றால், நெசவாளர்கள் எவ்வாறு வீடு கட்டுகிறார்கள் என்று உங்களுக்குத் தெரியும். இதை நாங்கள் முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச்சென்ற உடனே அவர், நெசவாளர்கள் வீடு

கட்டுவதற்கான மானியத்தை ரூபாய் 4 இலட்சமாக உயர்த்தி வழங்கியுள்ளார். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி, 581 கைத்தறி நெசவாளர்களுக்கு 10 கோடியே 74 இலட்சம் ரூபாய் தற்போது release செய்திருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் ஆட்சிக் காலத்தில் தேர்தல் அறிக்கையில் கைத்தறி நெசவாளர்களுக்கு மின்சாரம் 200 units-லிருந்து 300 units இலவசமாக தருவதாகச் சொன்னார். அதேபோன்று 73,000 கைத்தறி நெசவாளர்களுக்கு தேர்தல் அறிக்கையில் சொன்னதுபோல் கொடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று 1 இலட்சத்து 68 ஆயிரம் விசைத்தறி நெசவாளர்களுக்கு, 750 units-லிருந்து 1000 units இலவசமாகக் கொடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, ஏற்கெனவே 750 units-க்குமேல் போனால், 70 பைசா கூடுதல் மின் கட்டணம் செலுத்த வேண்டும் என்று இருந்தது. தற்போது அது நடைமுறையில் இல்லை. தற்போது 1001 unit-க்கு மேல் போனால்தான் 70 பைசா கூடுதல் மின் கட்டணம் செலுத்த வேண்டும். அதனை நடைமுறைப்படுத்தும் விதமாகவும், 3–3–2023 முதல் வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசாணை வெளியிட்டுள்ளார்கள்.

பிற்பகல் 2–45

கடந்த ஆண்டில், ரூபாய் 20 கோடி மதிப்பில், கைத்தறி ஆதரவு திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு தறி உபகரணங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னைக்கு அருகே மகாபலிபுரத்தில் ரூபாய் 30 கோடி செலவில், Handlooms and Handicrafts Museum அமைக்க பணிகள் நடைபெற்று வருகின்றன. சர்வதேசத் தரத்தில், "Design and Incubation Centre" சென்னையில், Egmore Co-optex கைத்தறி வளாகத்தில், ரூபாய் 30 கோடி செலவில், அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டின், பாரம்பரிய (Traditional) கைத்தறி இரகங்கள் மற்றும் புவிசார் குறியீடு (Geographical Indication) பெற்ற கைத்தறி இரகங்களை, Next Generation தெரிந்துகொள்ளும் வகையில், ரூபாய் 1 கோடி செலவில் மின்னணு பதிவு (Digitization) செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

விசைத்தறிகளுக்கு Electronic Panel Board. தமிழ்நாட்டில் உள்ள 5,000 விசைத்தறிகளுக்கு Electronic Panel Board நிறுவ அரசு மானியமாக ரூபாய் 6 கோடி கொடுத்திருக்கிறோம்.

Geo Tagging. விசைத்தறி கணக்கெடுப்பு, e-Commerce மற்றும் தகவல் பரிமாற்றம் ஆகிய பணிகள் மேற்கொள்ள தற்போது 2 கோடி ரூபாய் விடுவித்து, பணிகள் நடைபெற்று வருகின்றன.

அடுத்து Co-optex. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு வருடங்கள்தான் ஆகின்றன. இந்த இரண்டு வருடங்களில் Co-optex-ல் தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 105 கடைகளும், வெளி மாநிலங்களில் 49 கடைகளும், ஆக மொத்தம் 154 கடைகள் உள்ளன. இந்த இரண்டு ஆண்டுகளில் 45 கடைகளை 10 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் renovation செய்திருக்கிறோம்.

புதிய விற்பனை நிலையங்கள் துவக்கப்பட்டன. கடந்த 2 ஆண்டுகளில், 11 புதிய விற்பனை நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன. சென்னையில்-10, அதில் வேளச்சேரியில்-1, ஆவடியில்-1 தேனாம்பேட்டையில்-1, சென்னை எக்மோர் கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி வளாகத்தில்-7, உத்தரபிரதேசம்-வாரணாசியில்-1.

விற்பனை உயர்வு. நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 2021-2022-ல் Co-optex விற்பனை 171 கோடியே 90 இலட்சம் ரூபாய் ஆகும். நடப்பாண்டில் 200 கோடியே 92 இலட்சம் ரூபாய் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைவிட 29 கோடியே 2 இலட்சம் ரூபாய் அதிகமாகும். நீண்ட நாட்களாக Corporation, Municipality, H.R. & C.E. கட்டடங்களில் செயல்படும் Showrooms-க்கு வாடகை கொடுக்காமல் இருந்திருக்கிறார்கள். அதற்காக 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் வாடகைத் தொகை கொடுத்தோம். Showroom Renovation-க்கு 10 கோடி ரூபாய் கொடுத்தோம். மொத்தத்தில் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபோது, Co-optex 7 கோடியே 61 இலட்சம் ரூபாய் நஷ்டத்தில் இருந்தது. போன வருடம் 7 கோடியே 61 இலட்சம் ரூபாய் நஷ்டம் போக, 9 கோடியே, 49 இலட்சம் ரூபாய் நிகர இலாபம் ஈட்டியுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வருடம் 2022-2023-ல் இலாபம் கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் வந்துள்ளது. அதில், கடைகளில் renovation செய்ய 10 கோடியே 25 இலட்சம் ரூபாய், arrears amount-ஐ municipality-யில் கட்டியது இந்த வருடம் ரூ.2.15 கோடி போக சுமார் 7 கோடி 25 இலட்சம் ரூபாய் நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

2023 ஏப்ரல் 11] [திரு. ஆர். காந்தி]

பிற்பகல் 2–50

National Handloom Expo. நேற்றையதினம் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்கள்கூட சென்னை, எக்மோரில் National Handloom Expo நடைபெறுகிறதா என்று கேட்டார்கள். கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் அது நடைபெற்றது. அதற்குப் பிறகு, 10 ஆண்டு காலம் அது நடைபெறவில்லை. 10 ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த ஆண்டு, 8–4–2022 அந்த exhibition ஆரம்பிக்கப்பட்டது. அன்று நம்முடைய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார்கள். அவர்கள்தான் அன்று அந்த exhibition-ஐத் தொடங்கி வைத்தார்கள். இதில், கடந்த ஆண்டு ரூபாய் 3 கோடியே 52 இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டது. இந்த ஆண்டு அந்த exhibition-ஐ 5–4–2023 அன்று மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்தான் தொடங்கி வைத்திருக்கிறார்கள். இப்போது அந்த exhibition நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட 10 மாநிலங்களிலிருந்து வந்து இந்த exhibition-ல் கடைகளை அமைத்திருக்கிறார்கள். அவரைப் பற்றிச் சொல்லும்போது நான் ஒன்றைச் சொல்லியிருந்தேன். என்ன சொன்னேனென்றால், கலைஞர் அவர்களைப்போல் "immediate action, presence of mind" என்று சொன்னேன். அதற்கு உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், அவர் அங்கு 2, 3 நாட்கள் வந்திருந்தார்கள். ஒவ்வொரு stall ஆகப் பார்த்துக்கொண்டே சென்றோம். அங்கே மகளிர் குழுவிற்கு சம்பந்தப்பட்ட பொருட்களை வைத்திருந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிர் குழுக்கள் எங்கெங்கு, என்னென்ன தயார் செய்கிறார்களோ அவற்றை அந்தந்த co-operative store-ல் விற்க வேண்டுமென்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதை எங்கள் துறைச் செயலாளர் அவர்களிடம் சொன்னவுடனேயே நாங்கள் அவற்றை அங்கு விற்பனை செய்யத் தொடங்கியிருக்கிறோம்.

அதேபோன்று, 4 நாட்களுக்கு முன்னர் நம்முடைய மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்— அவர்களைப் பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். எப்போது பார்த்தாலும் அவர்கள் மாரத்தான் ஓடிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் எப்போதும் ஓடிக்கொண்டேதான் இருப்பார்கள். அவர்கள் உட்காருவதே கிடையாது. அவர்கள் இங்கு வரும்போது

உட்கார்ந்தால்தான் உண்டு. கலைஞர் நூற்றாண்டு விழாவிற்கு மாரத்தான் போட்டி நடத்துவதற்காக Presidency College-ல் வைத்து registration செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தப் போட்டிக்கு Chief Guest யாரென்று கேட்டால் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள்தான். அவர்கள் என்னை அழைத்து, சட்டமன்றத்திற்குச் செல்லும் வழியில் அங்கு வரச்சொல்லி அழைத்தார்கள். அதன்படி, நானும் அங்கு சென்றேன். உங்களுக்கே தெரியும், கடைசியில் பேசுபவர்கள் என்னென்ன பேச வேண்டும் என்று நினைத்திருக்கிறார்களோ அதையெல்லாம் முதலில் பேசுபவர்கள் பேசிவிடுவார்கள். அது சகஜமாக நடப்பதுதான். அங்கு என்னவாயிற்று என்றால்; மாரத்தான் போட்டிக்கு register செய்கிற மாணவர்கள் registration fee ஆக ரூ.500/- கட்ட வேண்டும். மாற்றுத் திறனாளிகளாக இருந்தால் 100 ரூபாய் registration fee கட்ட வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டச் செயலாளராகவும், அந்தப் பகுதியைச் சேர்ந்தவருமாக இருப்பதால், அவர்கள் பேசும்போது திருநங்கைகளுக்கு எவ்வளவு தொகை கட்ட வேண்டுமோ அந்தத் தொகை முழுவதையும் நானே ஏற்றுக்கொள்கிறேன்; எத்தனை பேர் இருந்தாலும் அவர்களுக்கு நானே பணம் செலுத்துகிறேன் என்று கூறினார்கள். நான் அவர்களுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தேன். நான் அவர்களுக்காகப் பணம் கட்ட வேண்டுமென்று நினைத்திருந்தேன்; ஆனால், அவர்கள் அதைக் கட்டுவதாகச் சொல்லிவிட்டார்கள் என்று நான் சொன்னேன். அதோடு சரி என்று நான் அதை விட்டுவிட்டேன். அங்கே சென்றவர் உடனே திருநங்கைகளுக்கு 100 ரூபாய்க்கு பதிலாக யார், யார் பங்கேற்கிறார்களோ அவர்களுக்கு 1,000 ரூபாய் கொடுக்கிறேன் என்று announce செய்துவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், அதுதான் presence of mind.

இந்த ஆண்டு NID மற்றும் NIFT Designers மூலம் 500 New Designs அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதேபோன்று, young generation-ஐக் கவரும் வகையில் புதிய சேலை இரகங்கள் கடந்த 2 ஆண்டுகளில், Yuva Silk Sarees, Hand Printed Sarees, Navagraha Silk Sarees, Linen Sarees மற்றும் Korvai ஜமுக்காளம் ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் புதிது, புதிதாகச் செய்கிறார்கள். அப்போதுதானே நாங்கள் அதிகமாக விற்பனை செய்ய முடியும்.

2023 ஏப்ரல் 11] [திரு. ஆர். காந்தி]

கடந்த ஆண்டு விற்பனையில் எவ்வளவு அதிகரித்தது, இந்த ஆண்டு விற்பனை எவ்வளவு அதிகரித்துள்ளது என்று ஏற்கெனவே சொல்லியிருந்தேன். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் professional training to co-optex showroom employees by Industry Experts என்று தனியாரை வைத்து பயிற்சி வழங்குகிறோம்.

பிற்பகல் 2–55

சென்னை, பெங்களூரு மற்றும் சேலம் மண்டலங்களில் உள்ள 10 showrooms-ல் பணிபுரியும் Sales Persons-க்கு தனியார் நிறுவனம்மூலம் ரூபாய் 19.37 இலட்சம் மதிப்பீட்டில், Selling and Communication Skill, Customer Service, Product Knowledge, Visual Merchandizing ஆகிய விற்பனை தொடர்பான இனங்களில், Professional Training வழங்கப்பட்டுள்ளது. மீண்டும் இந்த ஆண்டு மீதமுள்ள கடைகளுக்கெல்லாம் இதுபோன்ற training கொடுத்து, அதிகமாக விற்பனை செய்வதற்கு நாங்கள் முயற்சி மேற்கொண்டிருக்கிறோம்.

அதேபோன்று, நீலகிரியில் உள்ள தோடர் இன பழங்குடியினர் தயாரிக்கும் Handwork table cloth, mat, napkin, purse, traditional dresses, etc. ஆகிய இரகங்கள் கோ–ஆப்டெக்ஸ்மூலம் கொள்முதல் செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த ஆண்டு 2–10–2022 காந்தி ஜெயந்தியன்று Co-optex, Amet University-யுடன் இணைந்து, Amet university-ன் 4,000 மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் இணைந்து வீடு, வீடாகச் சென்று கைத்தறித் துணிகளை விற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதன்மூலம், ஒரே நாளில் ரூபாய் 83 இலட்சத்து 29 ஆயிரம் மதிப்பிலான கைத்தறித் துணிகளை students விற்பனை செய்தார்கள். அதேபோல, இந்த ஆண்டும் மற்ற Universities உடன் இணைந்து விற்பனை செய்யப்போகிறோம்.

சென்னையில் உள்ள “Satya Jothi Sheltered Workshop for the Blind”-ல் செயல்படாமல் இருந்த தறிகளைப் பற்றி எங்களுக்கும் தெரியாமல் இருந்தது. இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியவந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திலிருந்து மார்ச் 1 ஆம் தேதியன்று எங்களுக்குத் தெரிவித்தார்கள். உடனடியாக நாங்கள் அங்கு சென்று அந்தத் தறியை சரிசெய்து, தேவையான உபகரணங்கள் வழங்கி, Co-optex மூலம் நூல் வழங்கப்பட்டு, பார்வையற்றோர்மூலம்

உற்பத்தி செய்யப்பட்டு, அந்தத் தறிகள் நல்ல முறையில் செயல்படுகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மார்ச் 1 ஆம் தேதியன்று பிறந்த நாள். பிறந்த நாளன்று நாமெல்லாம் எங்கே செல்வோம்; ஒவ்வொருவரும் அவரவர்களுக்கேற்றாற்போல் செல்வோம். ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது பிறந்த நாளன்று அந்த இடத்திற்குச் சென்றிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) இல்லை; நாம் பிறந்த நாளை எப்படிக் கொண்டாடுவோம் என்று நிறைய பேருக்குத் தெரியும். நான் எதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளைப் பற்றி இங்கு சொல்கிறேன்? இது சாதாரண விஷயமல்ல. நாமெல்லாம் சிரிக்கலாமே தவிர, செயல்பாடு, involvement இருக்க வேண்டும். மைக் கிடைத்தால் யார் வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் பேசலாம். இதெல்லாம் ஒன்றும் கிடையாது. நேற்றையதினம் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் பேசிய subject மாதிரி யாராலும் பேச முடியுமா? அதை இங்கே யாராவது ஒத்துக்கொள்கிறீர்களா? (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோன்றுதான்.

துணிநூல். ஐவுளித் துறையில் தனிக் கவனம் செலுத்த ஏதுவாக தனியாக துணிநூல் துறை உருவாக்கப்பட்டது. நம்முடைய ஆட்சி வந்தபோது Handlooms and Textiles Department-கென்று ஒரே Commissioner-தான் இருந்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் Textiles-க்கென்று தனியாக ஒரு Commissioner-ஐ நியமித்தார்கள். நம்மிடமிருந்த 18 நூற்பாலைகளில் 6 நூற்பாலைகள்தான் தற்போது இயக்கத்தில் உள்ளன. 12 நூற்பாலைகள் மூடப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 460 ஏக்கர் நிலம் நம்மிடம் இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பிறகு அந்த 6 நூற்பாலைகளும் நல்ல முறையில் இயங்குவதற்காக நிறைய முயற்சிகள் எடுக்கப்பட்டு—உங்களுக்குத் தெரியாது; இதைக் கேட்டால்தான் தெரியும்—இன்றைக்கு அந்த நூற்பாலைகளுக்கு 10 Auto Coner இயந்திரங்களும், 6 Yarn Conditioning இயந்திரங்களும், Compact Spinning இயந்திரங்களும் கிட்டத்தட்ட 31 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவில் கொள்முதல் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. தற்போது ஓரளவிற்கு நல்ல முறையில் ஓடிக்கொண்டிருக்கின்றன.

2023 ஏப்ரல் 11] [திரு. ஆர். காந்தி]

அதேபோல் Bharathi, Pudukottai & Kanyakumari ஆகிய 3 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் மதிப்பில் 11 KW Dedicated Power Feeder நிறுவப்பட்டு வருகிறது.

பிற்பகல் 3-00

Mini Textile Park, இதைப் பற்றி சொல்லித்தான் ஆக வேண்டும். Mini Textile Park, 2015-ல் அரசாணை வெளியிடப்பட்டு, அ.தி.மு.க. ஆட்சிகாலத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டது—இதை நான் குறையாகச் சொல்லவில்லை. அந்த Mini Textile Park-க்கு 2 ஏக்கர் நிலம் வேண்டும். 3 units-தொழிற்சாலைகள் அதில் இருக்க வேண்டும். திட்டத் தொகையில் 50% அல்லது அதிகபட்சமாக ரூபாய் 2.50 கோடி மானியம் வழங்கப்படும். ஆனால், இதுவரையில் யாரும் தொழில் தொடங்க முன்வரவில்லை. நாங்கள் சென்று, விசாரித்தபோது, அந்தப் பணத்தை மற்ற பணிகளுக்கு பயன்படுத்த முடியவில்லை என்று சொன்னார்கள். நாங்கள் அந்தப் பணத்தை நீங்கள் கட்டடம் கட்டுவதற்கு அல்லது வேறு எதற்கு வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்று தெரிவித்தோம். நாங்கள், இதுகுறித்து நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தவுடன், அதற்கு ஒரு அரசாணை வெளியிட உத்தரவிட்டார்கள். எதற்கு வேண்டுமானாலும் பயன்படுத்தலாம் என்று குறிப்பிட்டு, அரசாணை எண் 97, ஜூன் மாதம் 24 ஆம் தேதி வெளியிடப்பட்டது. அந்த அரசாணை வெளியிடப்பட்டவுடன் இன்றுவரையில் கிட்டத்தட்ட 100 விண்ணப்பங்கள் வரப்பெற்றிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) கரூரில் மட்டும் 38 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. நாங்கள் இது குறித்து ஆய்வு செய்வதற்காக ஒரு குழு அமைத்து, நல்ல முறையில் செயல்படுத்த உள்ளோம்.

Textile City. சென்னைக்கு அருகில், ஜவுளித் தொழிலுக்கென Mega Marketing Hub ஏற்படுத்த, ஒரு மாபெரும் Textile City அமைக்கப்பட உள்ளது. இதற்கு, Feasibility Study and Detailed Project Report தயார் செய்வதற்கு, ரூபாய் 1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஜப்பான் பயணம். எனது தலைமையிலான உயர்மட்டக் குழு 27.10.2022 முதல் 31.10.2022 வரை Japan நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, Japan Tex Exhibition மற்றும் ஜவுளி இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களைப் பார்வையிட்டபோது Japan

தொழில்முனைவோர்களுக்கு தமிழ்நாட்டில் முதலீடு செய்ய அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

Technical Textiles. 25.11.2022 மற்றும் 26.11.2022 ஆகிய நாட்களில், சென்னையில், Feathers Hotel-லில் International Conference on Technical Textiles மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இதில் 6 MoUs போடப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில், Technical Textiles-க்கென International Conference முதன்முறையாக நடைபெற்றுள்ளது. இதுவரையில் இதுபோன்று நடைபெற்றது இல்லை, இது, தமிழ்நாட்டில் Technical Textile தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு மிகவும் பயனுள்ளதாக இருந்தது என அனைவரின் பாராட்டையும் பெற்றுள்ளது.

Tamil Nadu Pavilion. மும்பையில், 22.02.2023 முதல் 24.02.2023 வரை நடைபெற்ற TechnoTex-2023 (Technical Textile Expo) கண்காட்சியில், தமிழ்நாடு ஒரு Partner State ஆகக் கலந்து கொண்டு, “Tamil Nadu Pavilion” அமைக்கப்பட்டது. இதனால் ஏற்றுமதி அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

Disposal of Waste Salt in CETPs. நீண்ட கால பிரச்சினையான, CETP-களில் குவிந்து கிடக்கும் Waste Salt-ஐ New Technology மூலம் சுற்றுச்சூழலுக்கு எந்த ஒரு பாதிப்பும் இல்லாமல் அகற்றுவதற்கும், Residual Mixed Salt பெறப்படாமல், நிறுத்துவதற்கும், Standard Operating Procedure (SOP) பரிந்துரைக்கவும், Scientific Committee அமைக்கப்பட்டுள்ளது. குழுவின் அறிக்கை பெறப்பட்டவுடன், இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்படும்.

ஜவுளித் தொழிலில், தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக வளர்ச்சி அடைவதற்கு, உரிய ஆலோசனை வழங்கும் பொருட்டு, Technical Advisory Committee அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கரூர், திருப்பூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில், 3 Export Hubs அமைக்கப்பட உள்ளன.

New Textile Policy. ஜவுளி மதிப்பு தொடரின் முழுமையான வளர்ச்சி, நவீன வடிவமைப்பு, துணிநூல் தயாரிப்பு, இயந்திர உற்பத்தியை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் புதிய துணிநூல் கொள்கை வெளியிடப்பட உள்ளது.

துணிநூல் துறைக்கு, தனி Website உருவாக்குவதற்கு ரூபாய் 1 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சேலத்தில் ஜவுளிப் பூங்கா. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கடந்த 11.12.2021 அன்று சேலத்தில், ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா (Integrated Textile Park) அமைக்கப்படும் என அறிவித்தார்கள். இதற்காக சேலம் மாவட்டம், சேலம் மேற்கு வட்டம், ஓமலூர் மெயின் ரோடு பகுதியில் உள்ள ஜாகீர் அம்மாபாளையத்தில் 119 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. ரூபாய் 881.15 கோடி திட்ட மதிப்பீட்டில் பூங்கா அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பிற்பகல் 3–05

PM–MITRA–Mega Textile Park. Textile Value Chain–ல் உள்ள அனைத்து விதமான ஜவுளித் தொழிற்சாலைகளையும் ஒரே இடத்தில் அமைக்கும் வகையில், PM MITRA Mega Textile Park, இந்தியாவில், தமிழ்நாடு, தெலுங்கானா, கர்நாடகா, மஹாராஷ்டிரா, குஜராத், மத்தியப் பிரதேசம் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய 7 இடங்களில் அமைக்க ஒன்றிய அரசினால் அனுமதிக்கப்பட்டது. ஒன்றிய அரசுதான் இதற்கு அனுமதி அளித்திருக்கிறது. ஆனாலும், ஒன்றிய அரசு அறிவித்த இந்த 7 மாநிலங்களில் பார்த்தோமென்றால், 5 மாநிலங்களில் பி.ஜே.பி. ஆட்சி நடக்கிறது. தெலுங்கானா மாநிலத்திலும், தமிழ்நாட்டிலும்தான் பி.ஜே.பி. ஆட்சி நடைபெறவில்லை. ஆனால், மாண்புமிகு ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சர் Thiru Piyush Goyal அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்து, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இங்கு அதனைத் தொடங்கி வைக்கிறார்கள் என்றால் நாம் அதைப் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியா டுடே பத்திரிகையில் எழுதப்பட்டிருப்பது உண்மையா, தவறா என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். இது உண்மைதானே! ஒரு நம்பிக்கை. நம்பிக்கை இல்லாமல் அவர்கள் எப்படி இங்கு வந்து ஆரம்பித்திருப்பார்கள்?

விருதுநகர் மாவட்டத்தில்தான் அந்த Mega Textile Park–ஐ அமைக்கவிருக்கிறார்கள். மாண்புமிகு ஒன்றிய ஜவுளித் துறை அமைச்சர் Thiru Piyush Goyal அவர்கள் ஒரு கோரிக்கையையும் வைத்தார்கள். அவர்கள் பேசும்போது, இதற்கு அடிக்கல்

நாட்டும்போது நீங்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை அழைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக அவர்களை அழைப்போம் என்று பதில் சொன்னார்கள். அப்படியானால், அரசியலில் எப்படியிருந்தாலும், தமிழ்நாட்டின்மீது வைத்துள்ள நம்பிக்கை; தமிழ்நாட்டில் இதை நல்ல முறையில் செயல்படுத்துவார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறதா, இல்லையா! (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீது அவ்வளவு நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது. துவக்க விழா அன்று இப்பூங்காவில், ஜவுளி தொழிற்சாலைகள் அமைக்க, ரூபாய் 1,231 கோடி மதிப்பீட்டில் முதலீடு செய்ய 11 Investors-உடன் MoU போடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறைக்கான மானியக் கோரிக்கையில் எனது கருத்துக்கள் உறுப்பினர்களுக்கு மன நிறைவைத் தந்திருக்கும் என்று நம்புகின்றேன். மாண்புமிகு முதல்வர் அவர்களின் மேலான அனுமதியோடு, இந்தத் துறைக்கான புதிய அறிவிப்புகளை இந்த மாமன்றத்தில் பதிவு செய்கிறேன். நேரத்தின் அருமை கருதி, புதிய அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் படிக்கிறேன். மீதமுள்ளவற்றை நான் அவையில் படித்ததாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் துறை

1. டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறி பட்டுப் பூங்கா ஆரணியில் அமைக்கப்படும்

தமிழ்நாட்டின் பட்டு இரகங்களில், ஆரணி பட்டுக்கென பிரத்தியேகச் சிறப்பியல்புகள் உள்ளன. ஆரணி, ஒண்ணுபுரம், அத்திமலைப்பட்டு ஆகிய பகுதிகளில் ஆரணிப்பட்டு நெசவு மேற்கொள்ளும் கைத்தறி நெசவாளர்கள் அதிகம் வாழ்கின்றனர். எனினும், நகரமயமாக்கல் மற்றும் மாசடைவதால் ஏற்படும் பிரச்சினைகள் காரணமாக இப்பகுதியில் நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பணிகளை ஒருங்கிணைந்த முறையில் மேற்கொள்வதில் இடர்பாடுகள் ஏற்படுகின்றன. மேலும், வடிவமைப்புகளுக்கான தேவை பெருமளவில் உள்ள நிலையில், அதற்குரிய மின்னணு ஜக்கார்டு இயந்திரங்களை நெசவாளர்களின் வீடுகளில் பொருத்த இயலாத நிலை உள்ளது. எனவே, நெசவுக்கு முந்தைய மற்றும்

பிந்தைய பணிகள் அனைத்தையும் மேற்கொள்ளவும், கண்கவர் வடிவமைப்புகளில் கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்யவும், ஆரணி நகருக்கு அருகில் உள்ள பெரியண்ண நல்லூரில் "டாக்டர் கலைஞர் கருணாநிதி நூற்றாண்டு நினைவு கைத்தறி பட்டுப் பூங்கா" அமைக்கப்படும்.

இப்பூங்காவில், நெசவுக்கூடம், சாயச் சாலை, பூஜ்ஜிய நிலை கழிவுநீர் வெளியேற்றும் வசதியுடன்கூடிய பொது சாயக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், வடிவமைப்பு மையம், நெசவுப் பயிற்சி, விற்பனையகம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இதன்மூலம் சுமார் 10,000 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் பதனீட்டாளர்கள் பயன்பெறுவர்.

2. இளைஞர்களுக்கான நெசவுப் பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் திட்டம் (Weaver's Induction and Entrepreneurship Programme for Youngsters) ரூபாய் 1.40 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்

இளம் தலைமுறையினரை கைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபடுத்தவும் இத்தொழிலை அதிக வருவாய் ஈட்டும் தொழிலாக மேம்படுத்தவும், அவர்களுக்குத் தேவையான பயிற்சி வழங்கும் வகையில் 'இளைஞர்களுக்கான நெசவுப் பயிற்சி மற்றும் தொழில் முனைவோர் திட்டம்' ரூபாய் 1.40 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக 300 இளைஞர்களுக்கு மதிப்புமிகு இரகங்களில் கைத்தறி நெசவுப் பயிற்சி அளிக்கப்பட்டு பயிற்சியை முழுமையாக நிறைவு செய்பவர்களை அருகிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்த்து நெசவுத் தொழிலில் ஈடுபடுத்தவும், முத்ரா திட்டத்தின்கீழ் கடனுதவி பெற பரிந்துரை செய்து சுயதொழில்மூலம் நெசவுத் தொழில் சார்ந்த தொழில் முனைவோராக (Weaver Entrepreneur) உருவாக்கும் வகையிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

3. கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் அடிப்படைக் கூலியில் 10 விழுக்காடு உயர்த்தி வழங்கப்படும்

தமிழ்நாட்டில் உள்ள 1,112 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 95,000 நெசவாளர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் குறைந்தபட்ச கூலியாக நாள்

ஒன்றுக்கு பருத்தி இரகங்களுக்கு ரூ.150/-ம், பட்டு இரகங்களுக்கு ரூ.250/-ம் பெற்று வருகின்றனர்.

நெசவாளர்களின் உடல் உழைப்புத் திறன் மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஈடான ஊதியம் கிடைக்கவும், உயர்ந்துவரும் குடும்பச் செலவுகளை ஈடுகட்டவும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டுவரும் அடிப்படைக் கூலியில் 10 விழுக்காடு உயர்த்தி வழங்கப்படும்.

இதிலே புரிந்துகொள்ளுங்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் போன வருடம் (குறுக்கீடு) இதே 10 சதவிகிதம், (குறுக்கீடு) இல்லை, இல்லை ஒன்று சொல்கிறேன். போன வருடம் வந்தவுடனே, DA-வை 10% சேர்த்து கொடுத்தோம். திருப்பி இந்த வருடமும் 10% DA—இன்றைக்கு சூழ்நிலை, நிதிநிலை எப்படியிருக்கிறதென்று உங்களுக்குத் தெரியும். இருந்தும் மாண்புமிகு முதலமைச்சர் இப்படி செய்திருக்கிறார்.

4. சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் கைத்தறி நெசவாளர்கள் சந்தா செலுத்தப்பட வேண்டிய கால அளவு 25 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டுகளாகக் குறைக்கப்படும்

சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டமானது 1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 50,590 நெசவாளர்கள் இத்திட்டத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள அனைவருக்கும் இத்திட்டம் பொருந்தும். நெசவாளர்கள் ஈட்டும் கூலியில் ஒரு ரூபாய்க்கு எட்டு பைசா வீதம் பிடித்தம் செய்யப்பட்டும், அதற்கு இணையாக மாநில அரசால் எட்டு பைசா வழங்கப்பட்டு, இத்தொகை அரசுக் கணக்கில் வைப்பீடு செய்யப்படுகிறது மற்றும் இவ்வைப்பீட்டுத் தொகைக்கு மாநில அரசால் 6.5 விழுக்காடு வட்டி வழங்கப்பட்டு வருகிறது.

நெசவாளர்களின் கணக்கில் சேர்ந்துள்ள வட்டியுடன்கூடிய முழுத் தொகையும் 25 ஆண்டு சந்தா காலம் நிறைவடைந்த பின்னர் அவர்களுக்கு வழங்கப்படுகிறது.

தற்போது, தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட விதிகளில் 22(1)(a)-ல் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு, முழுத் தொகையும் பெறுவதற்கான கால

2023 ஏப்ரல் 11] [திரு. ஆர். காந்தி]

அளவு '20 ஆண்டுகள் அல்லது 55 வயது நிறைவடையும் வரையில், இதில் எது முன் நிகழ்கின்றதோ' என குறைக்கப்படும்.

5. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்கள் இயற்கை எய்தும்போது வழங்கப்படும் ஈமச் சடங்கு உதவித் தொகை ரூபாய் 2,000/–லிருந்து ரூபாய் 5,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்கள் இயற்கை எய்தினால், அவர்களின் குடும்பத்திற்கு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பொது நல நிதி அல்லது பொது நிதியிலிருந்து ஈமச் சடங்கு செலவினமாக ரூ.2,000/– வழங்கப்பட்டு வருகிறது.

இனிமேல் நெசவாளர்களின் குடும்பத்திற்கு வழங்கப்படும் ஈமச் சடங்கு உதவித் தொகை ரூபாய் 2,000/–லிருந்து ரூபாய் 5,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும்.

சார் கூட, பேசினார்; ஈமச் சடங்கிற்காக ரூபாய் 2,000/–லிருந்து ரூபாய் 5,000/– ஆக்கியிருக்கிறார். பாருங்கள். ரூபாய் 2,000/–லிருந்து ரூபாய் 5,000/– ஆக உயர்த்தியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

6. கைத்தறி நெசவாளர்கள் மிகுதியாக உள்ள பகுதிகளில் மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையுடன் இணைத்து நெசவாளர்களுக்கென சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்

கைத்தறி நெசவாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நல்வாழ்வினைக் கருத்தில் கொண்டு, கைத்தறி நெசவாளர்களை நோய்களிலிருந்து பாதுகாக்கவும், அவர்களுக்குத் தேவையான நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் வருடாந்திர மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளவும், மருந்துகள் வழங்கிடவும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையுடன் இணைந்து கைத்தறி நெசவாளர்கள் அதிகம் உள்ள பகுதிகளில் "சிறப்பு மருத்துவ முகாம்கள்" நடத்தப்படும்.

7. கைத்தறி நெசவாளர்களுக்கு ரூபாய் 263.90 இலட்சம் மதிப்பில் 3006 தறிகள், உபகரணங்கள் வழங்குதல் மற்றும் 56 நெசவாளர்களுக்கு ரூபாய் 67.20 இலட்சம் மதிப்பில் தறிக்கூடங்கள் அமைத்துத் தரப்படும்

கைத்தறி நெசவாளர்களின் உற்பத்தியை அதிகரிக்கவும், துணிகளின் தரத்தினை மேம்படுத்தவும் மற்றும் வேலைப்பளுவினைக் குறைக்கவும், குழும வளர்ச்சித் திட்டம் மற்றும் கைத்தறி ஆதரவுத் திட்டங்களின்கீழ் தறிகள் மற்றும் உபகரணங்கள் 3006 நெசவாளர்களுக்கு ரூபாய் 263.90 இலட்சம் மதிப்பில் வழங்கப்படும்.

மேலும், கைத்தறி நெசவாளர்கள் நெசவுப் பணிகளை மேற்கொள்ள தறிக்கூடம் ஒன்றிற்கு ரூபாய் 1.20 இலட்சம் வீதம், 56 கைத்தறி நெசவாளர்களுக்கு ரூபாய் 67.20 இலட்சம் மதிப்பில் தறிக்கூடங்கள் அமைத்துத் தரப்படும்.

பிற்பகல் 3–10

8. தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு கதர் மற்றும் கைத்தறி இரகங்களின் பாரம்பரியம் மற்றும் கலைநயம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் 'கைத்தறி இரகங்கள் பிரபலப்படுத்தும் திட்டம் (Handloom Outreach Programme)' செயல்படுத்தப்படும்.

சென்னையில் உள்ள அமிட் (AMET) பல்கலைக்கழக மாணாக்கர்கள் மற்றும் பேராசிரியர்களுடன் இணைந்து அக்டோபர் 2, 2022 அன்று ஒரே நாளில் ரூபாய் 1 கோடி அளவிற்கு கதர் மற்றும் கைத்தறி பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளிடையே தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கதர் மற்றும் கைத்தறி இரகங்களின் தனித்தன்மை, கலை நுணுக்கம், பாரம்பரியம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அவர்கள்மூலம் கதர் மற்றும் கைத்தறி இரகங்களின் விற்பனையினை ஊக்குவிக்கவும், 'கைத்தறி இரகங்கள் பிரபலப்படுத்தும் திட்டம் (Handloom Outreach Programme)' அக்டோபர் 2, 2023 காந்தி ஜெயந்தி அன்று கோ–ஆப்டெக்ஸ்மூலம் செயல்படுத்தப்படும்.

9. மாநிலத்தில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலை மேம்படுத்தும் வகையில் விரிவான சந்தை ஆய்வு (Detailed Diagnostic Study) மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலினை மேம்படுத்தி புத்துயிரூட்ட தேவையான நடவடிக்கைகளை

மேற்கொள்ளும் விதமாக தமிழ்நாட்டின் கைத்தறி மற்றும் விசைத்தறி தொழிலை இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களுடன் ஒப்பிட்டு, தற்போதைய சூழ்நிலை மற்றும் சந்தை நிலவரத்திற்கு ஏற்றவாறு வலுப்படுத்தும் விதமாக திட்டமிடவும், தேவையான கொள்கைகளை வகுக்கவும் பிரத்தியேக நிறுவனம்மூலம் விரிவான சந்தை ஆய்வு (Detailed Diagnostic Study) மேற்கொள்ளப்படும்.

10. கைத்தறி நெசவுக்குப் பயன்படுத்தப்படும் சிட்டா நூல் சாயமிடும் முறைக்கு பதிலாக, நவீன முறையில் சாயமிடும் சாத்தியக்கூறுகள் குறித்து தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சிக் கழகம் (SITRA) மூலம் ஆய்வு மேற்கொள்ளப்படும்.

கைத்தறி நெசவு தொழிலில் பாரம்பரியமான சிட்டா நூல் சாயமிடுதல் மற்றும் பசை தோய்த்தலுக்கு பதிலாக, சீஸ் டையிங் முறையில் (Cheese Dyeing) உயர்தர சாயமிடப்பட்ட மற்றும் பாவுப்பசை (Starched yarn) தோய்க்கப்பட்ட நூலை கைத்தறி தொழிலில் பயன்படுத்தும்போது சாயம் தோய்த்தலில் ஏற்படும் செலவினக்குறைவு, தயாரிப்பு காலம், நூல் மற்றும் துணியின் தரம் மற்றும் இதர பலன்கள் குறித்த சாத்தியக்கூறுகளை ஆராய சேலம் மாவட்டத்தில் உள்ள சின்னப்பம்பட்டி கைத்தறி குழுமத்தில் ரூபாய் 10.00 இலட்சம் செலவில் தென்னிந்திய ஜவுளி ஆராய்ச்சி கழகத்தால் (SITRA) ஆய்வு மேற்கொள்ளப்படும்.

11. தமிழ்நாட்டின் கைத்தறி தயாரிப்புகளுக்கான பொது வணிகச் சின்னம் மற்றும் தொகுப்பாக்கல் (Branding & Packaging) தேசிய வடிவமைப்பு நிறுவனம் (National Institute of Design), அகமதாபாத் மூலம் உருவாக்கப்படும்.

தமிழ்நாட்டின் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நெசவாளர்களால் தயாரிக்கப்படும் கைத்தறி இரகங்களின் மதிப்பினை உயர்த்தவும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் பிரபலப்படுத்தி அதன்மூலம் கைத்தறி இரகங்களின் விற்பனையினை அதிகரிக்கும் வகையிலும், தமிழ்நாட்டின் கைத்தறி இரகங்களுக்கு பொது வணிகச் சின்னம் மற்றும் தொகுப்பாக்கல் (Branding & Packaging) அகமதாபாத்தில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனத்துடன் (National Institute of Design), இணைந்து ரூபாய் 35.40 இலட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

12. தோடர் பழங்குடியின மக்களின் நலனுக்காக முதன்முறையாக நீலகிரி மாவட்டத்தில் தோடா எம்பிராய்டரி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் (Toda Embroidery Weavers Co–operative Production & Sales Society) தொடங்கப்படும்.

நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தோடர் இனப் பழங்குடியினரை மேம்படுத்தவும், தோடர் இனப் பழங்குடியினரால் பிரத்தியேகமாக உற்பத்தி செய்யப்படும் தோடா எம்பிராய்டரி பொருட்களுக்கான (Toda Embroidery Products) சந்தையை விரிவுபடுத்தவும் முதன்முறையாக துறையின் சிறப்பு முயற்சியில் "தோடா எம்பிராய்டரி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம்" தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1983 மற்றும் விதிகள் 1988–ன்கீழ் தொடங்கப்படும்.

தோடர் எம்பிராய்டரி உற்பத்திக்குத் தேவையான துணி வகைகள் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் கரூர் ஆகிய பகுதிகளின் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வழங்க வழிவகை செய்யப்படும்.

தோடர் எம்பிராய்டரி தயாரிப்புகள் கோ–ஆப்டெக்ஸ், லூம்வேர்ல்டு மற்றும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை நிலையங்கள்மூலம் சந்தைப்படுத்தப்படும். இதற்கான ஆரம்பக் கட்ட பணிகளுக்கென ரூபாய் 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

13. கைத்தறி இரகங்களை காட்சிப்படுத்தவும் மற்றும் சந்தைப்படுத்தவும் ஏதுவாக 4 மெட்ரோ நகரங்களில் "வாங்குவோர் விற்போர் சந்திப்பு" (Buyer Seller Meet) நடத்தப்படும்.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் இரகங்களின் விற்பனையினை அதிகரிக்க ஏதுவாக வடிவமைப்பு மேம்பாடு திட்டத்தின்கீழ் சென்னை மற்றும் பெங்களூருவில் அமைந்துள்ள தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம் (NIFT)மூலம் புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன், தேசிய வடிவமைப்பு நிறுவனம், (NID) அகமதாபாத்மூலம் பயிற்சி பெற்ற வடிவமைப்பாளர்களாலும் கைத்தறி இரகங்களில் புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இப்புதிய வடிவமைப்புகளைக் கொண்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்ட கைத்தறி

இரகங்களைக் காட்சிப்படுத்தவும் மற்றும் சந்தைப்படுத்தவும் சென்னை, பெங்களூரு, ஹைதராபாத் மற்றும் டெல்லி ஆகிய 4 மெட்ரோ நகரங்களில் ரூபாய் 50.00 இலட்சம் செலவில் 2023–2024 ஆம் ஆண்டில் "வாங்குவோர் விற்போர் சந்திப்பு" (Buyer Seller Meet) நடத்தப்படும்.

14. திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் ரூபாய் 35 இலட்சம் செலவில் நீராவி கொதிகலன் மற்றும் தொட்டி சாயமிடும் இயந்திரம் (Steam Boiler & Tub Dyeing Machine) நிறுவப்படும்.

கும்பகோணம் திருபுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு, பட்டுத் துணிக்குத் தேவையான வண்ணத்தினை சீரான மற்றும் பரவலான முறையில் வழங்கி, துணிக்குள் நிற மாறுபாட்டை நீக்குவதோடு, பட்டு நூல்களை விரைவாகச் சாயமிட்டு உற்பத்தித் திறனை அதிகரிக்க, புதிய நீராவி கொதிகலன், இரண்டு கை கொண்ட சாயமிடும் இயந்திரம் மற்றும் தொட்டி சாயமிடும் இயந்திரங்கள் ரூபாய் 35.00 இலட்சம் மதிப்பில் நிறுவப்படும்.

இதன்மூலம் பட்டுத் துணிகளின் தரம் உயர்ந்து விற்பனை அதிகரிக்க வழிவகை ஏற்படும்.

15. கரூர் சாயச்சாலையில், ரூபாய் 20.40 இலட்சம் மதிப்பில் சீஸ் வடிவ நூல் (Cheese Yarn Dyeing) சாயமிடும் இயந்திரம் நிறுவப்படும்.

கரூரில் உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான சாயமிடும் நூலின் தரத்தினை மேம்படுத்தவும், சாய உறுதித்தன்மை மற்றும் சீரான வண்ணத் தன்மையினை மேம்படுத்தும் வகையில் மாவட்ட அளவிலான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன்கூடிய சாயச்சாலையில் சீஸ் வடிவ நூல் சாயமிடும் இயந்திரம் ரூபாய் 20.40 இலட்சம் மதிப்பில் நிறுவப்படும். கரூர் பகுதியில் கைத்தறி ஏற்றுமதியினை அதிகரிப்பதற்கு இது உதவும்.

16. வாடிக்கையாளர்களின் கைத்தறி உபபொருட்களின் தேவையினைப் பூர்த்தி செய்வதற்கு உபபொருட்கள் விற்பனையகம் (Accessories Store) கோ–ஆப்டெக்ஸ்மூலம் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் சென்னையில் அமைக்கப்படும்

கைத்தறி நெசவின்மூலம் தயார் செய்யப்படும் துப்பட்டாக்கள், பைகள், வீட்டு உபயோக துணி இரகங்கள் மற்றும் தோடா கைவேலைப்பாடு துணி இரகங்கள் உள்ளிட்ட பிரத்தியேகமான கைத்தறி உபபொருட்களை விற்பனை செய்ய தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்) மூலம் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் "உபபொருட்கள் விற்பனையகம்" (Accessories Store) சென்னையில் அமைக்கப்படும்.

17. கோ–ஆப்டெக்ஸ் மற்றும் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை நிலையங்களில் 50 மேசைத் தறிகள் (Table Top Looms) நிறுவப்படும்.

இளம் தலைமுறையினர், மாணவர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பொதுமக்களிடையே கைத்தறி நெசவு குறித்த கல்வி அனுபவத்தினை ஏற்படுத்தவும், கைத்தறி நெசவு முறைகளை நேரடியாக அறிந்துகொள்ளவும், அவர்கள் விரும்பும் வகையில் கைத்தறி இரக மாதிரிகளை உருவாக்கவும் மேசைத் தறிகள் பயன்படுத்தப்படுகின்றன.

இதன்படி, கைத்தறி நெசவு குறித்து நேரடி செயல்முறை விளக்கம் அளிக்கவும், கைத்தறி இரக மாதிரிகள் உருவாக்கவும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்) மற்றும் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனை நிலையங்களில் ரூபாய் 17.50 இலட்சம் மதிப்பில் 50 மேசைத் தறிகள் (Table Top Looms) நிறுவப்படும்.

துணிநூல் துறை

1. அனைத்து ஜவுளிப் பிரிவுகளையும் ஒருங்கிணைத்த மாபெரும் ஜவுளி நகரம் (Textile City) ஒன்று பொது–தனியார் கூட்டாண்மையின் அடிப்படையில் (PPP Mode) சென்னையில் அமைக்கப்படும்.

தமிழ்நாடு ஜவுளி உற்பத்தியில் வலுவான இடத்தைக் கொண்டிருந்தாலும், ஜவுளித் துறையின் அனைத்து பிரிவுகளையும் ஒருங்கிணைத்த ஒரு பெரிய அளவிலான சந்தை (Market) இல்லாத காரணத்தால், ஜவுளி மதிப்புத் தொடரில் உயர்நிலையினை (Marketing facility to higher value chain) அடைய இயலாமல் உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு, மாநிலத்தில் உள்ள ஜவுளி மதிப்புத் தொடரில் (Textile value chain) உள்ள அனைத்துப் பிரிவுகளையும் ஒருங்கிணைத்து ஜவுளி நகரம் அமைப்பது குறித்து சாத்தியக்கூறு ஆய்வு (feasibility study) மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சாத்தியக்கூறு ஆய்வின் முதற்கட்ட அறிக்கையின்படி, ஜவுளி நகரம் அமைப்பதற்கு ஏற்ற இடமாக, தேசிய நெடுஞ்சாலை 45–க்கு அருகில் உள்ள இடத்தில் (சென்னை முதல் பெங்களூரு செல்லும் N.H.45 சாலை) சாத்தியக்கூறு உள்ளதென தேர்வு செய்யப்பட்டுள்ளது. எனவே, மேற்காண் ஜவுளி நகரமானது (Textile City) பொது–தனியார் கூட்டாண்மையின் அடிப்படையில் (PPP Mode) அமைக்கப்படும்.

இந்த ஜவுளி நகரமானது அனைத்து ஜவுளி பிரிவுகளையும் ஒருங்கிணைக்கும் வண்ணமும். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஜவுளி குழுமங்களை தேசிய மற்றும் சர்வதேச சந்தைகளுடன் இணைக்கும் வண்ணமும் அமையும். மேலும் இது தமிழ்நாட்டின் ஜவுளி மதிப்புத்தொடரின் அனைத்து பிரிவுகளையும் ஒரே இடத்தில் அறிவதற்கான தளமாகவும் (one stop destination) அமையும்.

இந்த ஜவுளி நகரம் சுமார் 20,000 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இது உலகளாவிய நவ நாகரிக மாற்றங்களை (Fashion trends) முன்கூட்டியே கண்டறிந்து தமிழ்நாட்டின் தேசிய மற்றும் சர்வதேச ஜவுளி ஏற்றுமதி வர்த்தகத்தைப் பெருமளவில் விரிவுபடுத்தும்.

2. தமிழ்நாட்டில் செயல்படும் அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி மற்றும் பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டையபுரம் ஆகிய 2 நூற்பாலைகளில் ஒவ்வொன்றும் 0.999 MW திறன் கொண்ட சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் நிறுவப்படும்.

கூட்டுறவு நூற்பாலைகளில் ஏற்படும் மின் செலவைக் குறைத்திடவும், துணிநூல் துறை மூலமாக பசுமை ஆற்றல் சக்தியினை ஊக்குவிக்கவும் தலா 0.999 மெகாவாட் திறன் கொண்ட சோலார் மின் உற்பத்தி நிலையங்கள் அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி மற்றும் பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டையபுரம் ஆகிய நூற்பாலைகளில் ஒரு ஆலைக்கு ரூ.6.00 கோடி வீதம் இரண்டு கூட்டுறவு நூற்பாலைகளுக்கு மொத்தம்

ரூ.12.00 கோடி மதிப்பில் நிறுவப்படும். இதற்கான முதலீடு தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின்மூலம் அரசு உத்தரவாதத்துடன் கடனாகப் பெறப்படும்.

மேற்படி தொகையானது, ஆலையின் மின் செலவினத்தில் ஏற்படும் சேமிப்புத் தொகையிலிருந்து ஆண்டுதோறும் முறையாக திரும்பச் செலுத்துவதற்கென தனியாக ஒரு சிறப்புப் பரிவர்த்தனை கணக்கு வழிமுறை (Escrow Accounting Mechanism) உருவாக்கப்படும்.

இதில் இரண்டு இடங்களுக்கு தலா 1 மெகாவாட் மட்டும்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதில் மாற்றம் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு நாளைக்கு 20,000 யூனிட் தேவைப்படும். அதற்கு 4 மெகாவாட் திறனை நிறுவ வேண்டும். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்தாலோசித்த பின்னர் முடிவெடுக்கப்படும்.

3. தொழில்நுட்ப ஜவுளிகள் தொடர்பான சர்வதேசக் கருத்தரங்கு சென்னையில் நடத்தப்படும்.

கடந்த ஆண்டு நவம்பர் 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில், சென்னையில் தொழில்நுட்ப ஜவுளிகள் தொடர்பான சர்வதேச கருத்தரங்கம் மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில், பல்வேறு நாடுகளிலிருந்து தொழில்நுட்ப ஜவுளித்தொழில் சார்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். மேலும், தொழில் வல்லுநர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பங்கேற்று உரையாற்றினர்.

இதன்மூலம் தொழில்நுட்ப ஜவுளி தொடர்பான விழிப்புணர்வு ஏற்பட்டு, இக்கருத்தரங்கு பெரும் வரவேற்பினைப் பெற்றுள்ளது. இத்தகைய கருத்தரங்கினை ஆண்டுதோறும் நடத்திட வேண்டும் என்று தொழில்முனைவோர்கள் தொடர்ந்து கோரி வருகின்றனர்.

எனவே, இதன் தொடர்ச்சியாக இந்த ஆண்டும் (2023–24) சர்வதேச தொழில்நுட்ப ஜவுளிக் கருத்தரங்கு சுமார் ரூ.60 இலட்சம் செலவில் சென்னையில் நடத்தப்படும்.

2023 ஏப்ரல் 11] [*திரு. ஆர். காந்தி*]

4. இந்தியாவில் உள்ள 12 தொழில்நுட்ப ஜவுளி ஆராய்ச்சி சிறப்பு மையங்களால் (Centres of Excellence) கண்டறியப்பட்டுள்ள தொழில்நுட்பங்களைப் பகிர்வதற்கும், தமிழ்நாட்டில் தொழில்நுட்ப ஜவுளி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொடர்பான கலந்தாய்வு மேற்கொள்ளவும் ஆராய்ச்சி மையங்கள் மற்றும் தொழில்முனைவோருடன் இரண்டு நாள் பயிலரங்கம் (Two days Workshop) நடத்தப்படும்.

ஜவுளித் தொழில் உற்பத்தியில் தமிழ்நாடு நாட்டிலேயே முன்னணியில் உள்ளது. எனினும் இத்தொழிலில் அதிக மதிப்புக் கூட்டல் மற்றும் பல்வகை தயாரிப்புகளுக்கான வாய்ப்புகள் மிக அதிகமாக உள்ளன.

எனவே, ஜவுளித் தொழிலில் உலகளவில் ஏற்பட்டுள்ள நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் கண்டுபிடிப்புகள் பற்றிய விழிப்புணர்வினை ஜவுளித் தொழில் துறையினரிடையே ஏற்படுத்துவது அவசியமாகிறது.

இதற்கென இந்தியாவில் உள்ள 12 தொழில்நுட்ப ஜவுளி ஆராய்ச்சி சிறப்பு மையங்களால் (Centres of Excellence) *கண்டறியப்பட்டுள்ள தொழில்நுட்பங்களைப் பகிர்வதற்கும், தமிழ்நாட்டில் தொழில்நுட்ப ஜவுளி ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தொடர்பான கலந்தாய்வினை மேற்கொள்ளவும் ஆராய்ச்சி மையங்கள் மற்றும் தொழில்முனைவோருடன் இரண்டு நாள் பயிலரங்கம் (*Two days Workshop) *சுமார் ரூ.27.00 இலட்சம் செலவில் ஜவுளித் தொழில்முனைவோர் அமைப்புகளின் ஆதரவுடன் கோயம்புத்தூரில் நடத்தப்படும்.*

5. தமிழ்நாட்டில் ஜவுளித் தொழில் தொடங்க ஆர்வமுள்ள தொழில்முனைவோர்களுக்கு தொழில்நுட்பம் மற்றும் முதலீடு தொடர்பான வழிகாட்டுதல்கள் மற்றும் உதவிகள் வழங்கிட துணிநூல் துறை கட்டுப்பாட்டின்கீழ் பிரத்தியேக "ஜவுளித் தொழில் ஊக்குவிப்பு பிரிவு" (Textile Promotion Cell) அமைக்கப்படும்.

தமிழ்நாட்டில் வணிகத்திற்கு ஏற்ற சூழல் நிலவுவதால் (Business friendly environment) *பல தொழில்முனைவோர்கள் தொழில்நுட்ப ஜவுளித் தொழில் தொடங்க ஆர்வம் காட்டி வருகின்றனர்.*

தமிழ்நாட்டில் தொழில்நுட்ப ஜவுளித் தொழிலில் புதிய முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வமுள்ள தொழில்முனைவோர்களுக்கு தகுந்த வழிகாட்டுதல்களை வழங்க வேண்டியது அவசியமாகிறது.

எனவே அதிக முதலீடுகளை ஈர்க்கக்கூடிய தொழில்நுட்ப ஜவுளிப்பிரிவுகளைக் கண்டறியவும், அவற்றில் முதலீடு செய்ய முன்வரும் தொழில்முனைவோர்களுக்கு உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதல்களை வழங்கவும், இதர ஜவுளிப்பிரிவினருக்குத் தேவையான உதவிகள் செய்யவும், துணிநூல் துறை கட்டுப்பாட்டின்கீழ் பிரத்யேகமான "ஜவுளித் தொழில் ஊக்குவிப்புப் பிரிவு" (Textile Promotion Cell) ஒன்று அமைக்கப்படும்.

இதன்மூலம், தமிழ்நாட்டில் ஜவுளித் துறையின் அனைத்து பிரிவுகளிலும் தொழில்முனைவோர்கள் அதிக அளவில் முதலீடு செய்ய வாய்ப்புகள் ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைக்கு உதவிய, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் V. இறையன்பு, இ.ஆ.ப. அவர்களுக்கும், நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. N. முருகானந்தம், இ.ஆ.ப. அவர்களுக்கும், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு. D.P. யாதவ், இ.ஆ.ப. அவர்களுக்கும், துணிநூல் ஆணையர் முனைவர் M. வள்ளலார், இ.ஆ.ப. அவர்களுக்கும், கைத்தறி ஆணையர் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் மேலாண்மை இயக்குநர் திரு. T.P. ராஜேஷ், இ.ஆ.ப. அவர்களுக்கும் மற்றும் அனைத்து துறை அலுவலர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 3–15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது துறை சார்ந்த கருத்துகளை மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்வோடு ஏற்றுக்கொண்டிருப்பார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த ஆலோசனைகளை, கருத்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு, துறையின் வளர்ச்சிக்கு எடுத்துச் சென்று நடைமுறைப்படுத்துவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

2023 ஏப்ரல் 11] [திரு. ஆர். காந்தி]

மாண்புமிகு உறுப்பினர்கள், 108 வெட்டுத் தீர்மானங்களை இந்த மானியக் கோரிக்கையின்மீது கொடுத்திருக்கிறீர்கள். அவை அனைத்தையும் படித்துப் பார்த்திருக்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய இதர கருத்துக்களையும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த அரசு நிச்சயம் பரிசீலிக்கும் என உறுதியளிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள், தாங்கள் தந்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி! வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலுரை. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைக்கான மானியக் கோரிக்கை மீதான பதிலுரையைத் தொடங்குவதற்கு முன்பாக சமூக நீதியின் தலைநகராக இருக்கின்ற தமிழ்நாட்டை விளையாட்டுப் போட்டிகளின் தலைநகராக மாற்ற எங்களையெல்லாம் ஊக்கப்படுத்தி வழிநடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் நியாயமான* referee*-யாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு அவை முன்னவர் மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அத்தனை பேருக்கும், அரசுத் தலைமைக் கொறடா அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எனது சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதி மக்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

இன்று ஏப்ரல் 11 ஆம் தேதி. இன்று நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அண்ணன் தங்கம் தென்னரசு அவர்களுடைய பிறந்த நாள் ஆகும். அவருக்கு மட்டுமல்ல, என்னுடைய மகள் தன்மயாவுக்கும் இன்றுதான் பிறந்த நாள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவை இரண்டு பேருக்கும் சேர்த்து பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது. எல்லா நலன்களும் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் அரசியல் அரங்கு நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டது. சேர, சோழ பாண்டியர்கள் காலத்திலே இருந்து இங்கே தமிழர்கள்தான் விளையாடி, வென்றிருக்கிறார்களே தவிர, வடக்கேயிருந்து வந்து இங்கு யாரும் வென்ற வரலாறு கிடையாது. *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழ்நாட்டிற்கும், தமிழ்நாட்டு மக்களுக்கும் அப்படியொரு தனிச் சிறப்பு உண்டு. இப்போதுகூட யார், யாரோ தமிழ்நாட்டை வெல்லலாம் என்று நினைக்கிறார்கள், அதற்கான முயற்சியையும் அவர்கள் செய்கிறார்கள். அவர்களின் விளையாட்டு இந்திய ஒன்றியத்தின் எந்த மாநிலத்தில் வேண்டுமானாலும் எடுபடலாம். ஆனால், தமிழ்நாட்டில் என்றுமே எடுபடாது. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதற்கான காரணம், தமிழ்நாட்டிற்குக் கிடைத்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற வலுவான அணியும், அந்த அணியை வழிநடத்திக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் கேப்டனும்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)* அதோடு மட்டுமல்ல; எங்கள் அணிக்குக் கிடைத்த ஒப்பற்ற பயிற்சியாளர்கள் (Coaches) தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, *(மேசையைத் தட்டும் ஒலி)* முத்தமிழறிஞர் கலைஞர், *(மேசையைத் தட்டும் ஒலி)* இனமான பேராசிரியர் தாத்தா; இப்படிப்பட்ட Coaches எந்த அணிக்கும் கிடைத்ததில்லை.

எந்த அணி நமக்கு எதிரான அணி என்றும், யாரோடு நாங்கள் எந்த நேரத்தில் மோத வேண்டும் என்றும் எங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார் தந்தை பெரியார் அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* எப்படி ஒற்றுமையோடும் கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடும் ஓர் அணி விளையாட வேண்டும் என்று

எங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார் பேரறிஞர் அண்ணா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தப் பந்தை அடிக்க வேண்டும், எந்தப் பந்தை அடிக்கக் கூடாது என்று எங்களுக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எப்போது பொறுமையாக defence விளையாட வேண்டும், எப்போது முன்னேறிச் சென்று சிக்ஸர் அடிக்க வேண்டும் என எங்களுக்குச் சொல்லிக் கொடுத்து வருகிறார் எங்களுடைய அணித் தலைவர் எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் சொல்லிக் கொடுப்பதோடு மட்டும் நிற்காமல், அவ்வப்போது சிக்ஸர் அடிக்கிறார்கள். சமீபத்தில் ஆன்லைன் ரம்மிக்கு எதிரான மசோதாவுக்கு ஒப்புதல் வழங்கச் செய்தது என்று நேற்று ஒரு சிக்ஸர் அடித்தார்; டெல்டாவில் வரவிருந்த நிலக்கரி சுரங்கத்தைத் தடுத்து நிறுத்தி இன்னொரு சிக்ஸர் என நம் அணியின் கேப்டன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இரண்டு சிக்ஸர்களை சமீபத்தில் விளாசியுள்ளார்கள்.

பிற்பகல் 3–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்று 4 மாதங்கள்தான் ஆகின்றன. அமைச்சராகப் பொறுப்பேற்றதுமே முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்த ரூபாய் 50 கோடி ஒதுக்கீடு செய்ததுதான் நான் இட்ட முதல் கையெழுத்து. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் போட்டிகள் அனைத்தும் நாடே வியக்கிற அளவுக்கு நம்முடைய துறை சார்பில் மிகப் பெரிய மக்கள் பங்களிப்புடன் நடத்தப்பட்டு வருகின்றன.

தற்போது நமது பாரம்பரிய விளையாட்டுகளான கபாடி, சிலம்பம் உள்ளிட்ட போட்டிகளும்; இவைதவிர கிரிக்கெட், basketball, volleyball உள்ளிட்ட 15 விளையாட்டுகளுக்கான போட்டிகள், பள்ளி, கல்லூரி, பொது மக்கள், அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என 5 பிரிவுகளில் ஆண்களுக்கு, பெண்களுக்கென தனித் தனியாக நடத்தப்படுகின்றன.

38 மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட போட்டிகளில் ஒவ்வொரு மாவட்டத்தின் மூலை முடுக்கிலிருந்தும் 3 இலட்சத்து 71 ஆயிரத்து 355 விளையாட்டு வீரர்கள்– வீராங்கனைகள் ஆர்வத்துடன் பங்கேற்றனர். மாநில அளவிலான போட்டிகள் விரைவில்

சென்னையில் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளில் பல்வேறு மாவட்டங்களிலிருந்து 27 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறந்த விளையாட்டு வீரர்கள் பங்கேற்க உள்ளனர். மாநில அளவிலான போட்டிகளில் அதிக பதக்கங்கள் மற்றும் அதிக புள்ளிகளைப் பெறும் முதல் 3 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு முதலமைச்சர் கோப்பைகள் வழங்கப்படும்.

மாநில அளவிலான இந்தப் போட்டிகளில் தனி நபர்/ இரட்டையர் பிரிவில் அதிகபட்சமாக ரூபாய் 1 இலட்சத்து 50 ஆயிரமும், ஹாக்கி போன்ற குழுப் போட்டிகளுக்கு—team sports-க்கு ரூபாய் 9 இலட்சம் வரையிலும் பரிசுத்தொகைகள் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்காக தேசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்று நலிந்த நிலையில் இருக்கும் விளையாட்டு வீரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, 58 வயது நிரம்பிய நலிவடைந்த விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியத் தொகையை (Pension) ரூபாய் 3 ஆயிரத்திலிருந்து தற்போது நம்முடைய ஆட்சி அமைந்த பிறகு 6 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இதன்மூலம் மாநிலம் முழுவதும் 71 நலிந்த விளையாட்டு வீரர்கள் பயனடைந்து வருகின்றனர்.

நான் இத்துறையின் அமைச்சராகப் பொறுப்பேற்ற இந்த 4 மாதங்களில், High Cash Incentives, சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 161 விளையாட்டு வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு 2 கோடியே 29 இலட்சம் ரூபாய் அளவுக்கு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன.

நம்முடைய கழக அரசு அமைந்த பிறகு, இரண்டு ஆண்டுகளில் மட்டும் 1,594 வீரர்களுக்கு ரூபாய் 40 கோடியே 18 இலட்சம் High Cash Incentive வழங்கப்பட்டுள்ளது.

ELITE Scheme, Mission International Medal Scheme (MIMS), Champions Development Scheme-CDS ஆகிய திட்டங்களின்மூலம் சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளில் சாதித்து வரும் 101 தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு 11 கோடி ரூபாய் அளவுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் உள்ள 81 சதுரங்க Grandmaster-களில் தமிழ்நாட்டிலிருந்து 28 Grandmaster-கள் உள்ளனர். எந்த மாநிலத்துக்கும் இல்லாத இந்தப் பெருமையை தமிழ்நாடு கொண்டிருப்பதால் 44 ஆவது செஸ் ஒலிம்பியாடை தமிழ்நாட்டில் நடத்துவதே பொருத்தமானது என இந்திய வரலாற்றில் முதன்முறையாக 114 கோடி ரூபாய் செலவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போட்டியை மகாபலிபுரத்தில் சென்ற வருடம் வெற்றிகரமாக நடத்திக்காட்டினார்கள்.

மாண்புமிகு அமைச்சர் அண்ணன் எ.வ. வேலு அவர்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் பதில் அளிக்கும்போது, செஸ் ஒலிம்பியாட் போட்டி இவ்வளவு பெரிய வெற்றி பெறுவதற்கு நான் ஒரு காரணம் என்று என்னைப் பாராட்டியிருந்தார். நன்றி. ஆனால், அந்த வெற்றிக்கு முழு காரணம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்; அவர்கள் எங்களையெல்லாம் ஊக்கப்படுத்திய விதம். (மேசையைத் தட்டும் ஒலி)

வழக்கமாக Chess Olympiad போட்டி நடத்துவதற்கு preparation மட்டும் குறைந்தது இரண்டு வருடங்கள் தேவைப்படும். ஆனால், நம்முடைய கழக அரசு, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நான்கே மாதங்களில் இரண்டு வருடங்களில் செய்ய வேண்டிய பணிகளை/ஏற்பாடுகளைச் செய்து மிகப் பெரிய சாதனை படைத்து முடித்துவிட்டோம். இதற்கான பணிகளை ஒருங்கிணைக்கும் பொறுப்பை எனக்கு வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த நேரத்தில் Chess Olympiad போட்டி சிறப்பாக நடைபெற எங்களையெல்லாம் வழிநடத்திய அண்ணன் மாண்புமிகு எ.வ. வேலு அவர்களுக்கும், அப்போதைய மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் அண்ணன் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் சகோதரர் மதிவேந்தன் ஆகியோருக்கும் மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவில் இடம்பெற்ற அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Tamil Nadu Men's Hockey Team கடந்த ஆண்டு நடந்த தேசிய ஹாக்கி போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றது. அணியின் வீரர்களுக்கு தலா ஒன்றரை இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 27 இலட்சம் ரூபாய்

வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கௌரவித்தார்கள். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய விளையாட்டு விடுதியில் (SDAT Hostel) படிக்கும் அரியலூரைச் சேர்ந்த திரு. கார்த்தி மற்றும் முன்னாள் மாணவர் மாரீஸ்வரன் ஆகியோர் ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியில் விளையாடி இந்திய அணி வெண்கலப் பதக்கம் வெல்ல காரணமாக இருந்தனர். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கார்த்தி மற்றும் மாரீஸ்வரனைப் பாராட்டி, இருவருக்கும் தலா பத்து இலட்சம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கினார்கள்.

பிற்பகல் 3–25

அதுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரியலூர் மாவட்டத்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, கார்த்தியின் இல்லத்திற்கே சென்று, அவருக்கு வீடு ஒன்றை ஒதுக்கித் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த இந்த அங்கீகாரத்தால், சகோதரர் கார்த்தி அவர்கள் இன்று சர்வதேசப் போட்டிகளில் விளையாடி சாதனை படைத்துக் கொண்டிருக்கிறார்.

அதேபோல், விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த சகோதரி முத்தமிழ்ச்செல்வி அவர்கள் தற்போது எவரெஸ்ட் சிகரத்தை ஏறும் முயற்சியினை எடுத்துள்ளார்கள். இதற்காக முதன்முறையாக அவருக்கு அரசு சார்பில் 10 இலட்சம் ரூபாயும், நம்முடைய துறையின் முயற்சியின்மூலம் தனியார் பங்களிப்பாக CSR fund 15 இலட்சம் ரூபாயும் நிதியுதவியாக வழங்கியுள்ளோம். (மேசையைத் தட்டும் ஒலி) கிட்டத்தட்ட 8,800 M இருக்கும் எவரெஸ்ட் சிகரத்தின் உயரம். நான் பேசிக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் 5,000 M தாண்டிப் போய்க் கொண்டிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டிலிருந்து முதன்முறையாக இத்தகைய முயற்சியை எடுத்துள்ள சகோதரி முத்தமிழ்ச்செல்வி, வெற்றிகரமாக எவரெஸ்ட் ஏறி, சிகரம் தொட இந்த அவையின் வாயிலாக நாம் அனைவரும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைச் சேர்ந்த சரத் கமல், Table Tennis விளையாட்டில் International அளவில் சாதனைகள் புரிந்ததற்காக இந்தியாவின் மிக உயரிய

விருதான கேல் ரத்னா விருதினையும், Table Tennis விளையாட்டில் சிறந்த முறையில் பயிற்சி அளித்ததற்காக சீனிவாசராவ் அவர்கள் தேசிய அளவில் சிறந்த பயிற்சியாளருக்கான விருதினையும் கடந்தாண்டு பெற்றனர்.

அதேபோல், பிரக்ஞானந்தா, இளவேனில் வாலறிவன் மற்றும் ஜெர்லின் அனிகா ஆகியோர் முறையே சதுரங்கம், துப்பாக்கி சுடுதல் மற்றும் Para Badminton விளையாட்டில் சிறந்து விளங்கியதற்காக அர்ஜுனா விருதினைப் பெற்றுள்ளார்கள்.

2022–2023 ஆம் ஆண்டில் நடைபெற்ற சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வென்றோர்கள் விவரத்தை இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தங்கப் பதக்கம் வென்றவர்கள். 100 மீட்டர் Athletics-ல் தேனி மாவட்டத்தைச் சேர்ந்த மனோஜ்; Chess போட்டியில் சென்னையைச் சேர்ந்த பிரக்ஞானந்தா, நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த பி.வி. நந்திதா; Snooker-ல் சென்னையின் ஸ்ரீகிருஷ்ணா மற்றும் அனுபமா.

வெள்ளிப் பதக்கம் வென்றவர்கள். Under 20 Athletics-ல் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. செல்வ பிரபு, விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த பரத் ஸ்ரீதர். Long Jump-ல் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஜெஸ்வின் ஆல்ட்ரின்; Pole Vault-ல் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த பவித்ரா.

வெண்கலப் பதக்கம் வென்றவர்கள். High Jump-ல் திருவாரூர் மாவட்டத்தைச் சேர்ந்த பிரவீன் குமார்; Long Jump-ல் தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த சோலைராஜ்; Pole Vault-ல் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ரோசி மீனா; Rapid Chess-ல் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த சவிதா ஸ்ரீ பாஸ்கரன். சமீபத்தில் நடைபெற்ற போட்டியில் தேசிய அளவிலான மகளிர் செஸ் போட்டியில் வென்றதன்மூலம், 25-வது Women Grand Master என்ற உயரத்தைத் தொட்டுள்ளார் அருமைச் சகோதரி சவிதா ஸ்ரீ

Khelo India Youth Games 2023-ல், Under 19 category-ல் 12 தங்கம், 19 வெள்ளி, 21 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 52 பதக்கங்களை நம்முடைய மாநில வீரர்-வீராங்கனையர் குவித்துள்ளனர். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்களே, வெற்றி பெற்ற அனைத்து வீரர்-வீராங்கனைகளையும் நான் நேரில் சந்தித்து, அவர்களைப் பாராட்டியும், ஊக்கப்படுத்தியும் வருகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012 ஆம் ஆண்டு முதல் பயிற்சியாளர்கள் நியமனம், நீதிமன்ற வழக்கு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தடைப்பட்டிருந்தது. ஆனால், நம்முடைய கழக அரசு அமைந்ததுமே, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்திற்கு பயிற்சியாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதன்பேரில், மூன்று கட்ட தேர்வுகளின் அடிப்படையில் 76 பயிற்சியாளர்கள் தேர்வு செய்யப்பட்டனர். அவர்களுக்கான பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கரத்தாலே கடந்த மாதம் வழங்கினார்கள். 2 வார காலம் Orientation Program முடித்த அந்த 76 பயிற்சியாளர்களுக்கும் District-wise allotment order-ஐ நான் என்னுடைய கையால் வழங்கினேன்.

எந்த ஒரு குற்றச்சாட்டும் இல்லாமல், எந்தவொரு பரிந்துரையையும் ஏற்காமல், எந்தவொரு வழக்குகளும் தொடரப்படாமல், மூன்று கட்டத் தேர்வுப் பணிகள் முழுவதையும் Videograph செய்து *(மேசையைத் தட்டும் ஒலி)* முழுக்க முழுக்க வெளிப்படைத்தன்மையுடனும், நேர்மையுடனும் இந்தப் பயிற்சியாளர்கள் நியமனத்தை மேற்கொண்ட நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிர்வாகத் திறனை ஏடுகளும், பத்திரிகைகளும் பாராட்டி செய்தி வெளியிட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த முயற்சியை புதிதாக தேர்வான பயிற்சியாளர்கள் அனைவரும் பேரன்போடு வாழ்த்தினர்.

நான் அமைச்சராகப் பொறுப்பேற்றதும் ஒடிசா மாநிலத்துக்குச் சென்றேன். அங்கு, தமிழ்நாடும்-ஒடிசாவும் விளையாட்டுத் துறை சார்பாக பயிற்சி, உட்கட்டமைப்பு போன்றவற்றை பரிமாறிக்கொள்ளும் வகையில் ஒரு புரிந்துணர்வு (MoU) ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டோம். இந்த நடவடிக்கையால், நம் புதிய பயிற்சியாளர்கள் விரைவிலேயே ஒடிசா சென்று அங்கு Induction Courses உள்ளிட்டவற்றைக் கற்கவுள்ளனர். மேலும், ஒடிசாவில் உள்ள வீரர்களும், பயிற்சியாளர்களும் தமிழ்நாட்டில் பயிற்சி பெறவுள்ளனர் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

விளையாட்டுத் துறைக்காக தமிழ்நாடு, இன்னொரு மாநிலத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) கையெழுத்திடுவது வரலாற்றிலேயே இதுவே முதன்முறையாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையைச் சேர்ந்த தீபா எனும் மாற்றுத் திறனாளி பெண், பல்வேறு சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு சாதனை படைத்த பெண். 2007 ஆம் ஆண்டு நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அவரை அழைத்து, வீர, தீர செயல்புரிந்தோருக்கான கல்பனா சாவ்லா விருதை வழங்கினார்கள். நம்முடைய கழக ஆட்சி அமைந்த நேரத்தில், பத்திரிகையிலே வந்த ஒரு செய்தி. தீபாவினுடைய பேட்டி. அதனைப் பார்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்னை அழைத்து, அது என்னவென்று பார், தீபாவுக்கு உடனே உதவி செய் என்று அறிவுறுத்தினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்பேரில், மேற்கொள்ளப்பட்ட முயற்சியால் தீபாவுக்கு நம்முடைய துறையிலேயே தற்போது பணி வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

விளையாட்டிற்கான மாநிலச் சங்கங்கள்/தேசிய கூட்டமைப்பு நடத்தும் பன்னாட்டு அளவிலான போட்டிகளுக்கு தகுதியான நிதியுதவி வழங்குவதில் நமது அரசு முன்னோடியாக இருந்து வருகிறது. 2022–2023 ஆம் ஆண்டில், பின்வரும் முக்கிய சர்வதேசப் போட்டிகள் சென்னையில் நடைபெற்றன:

FIFA. உலகப் புகழ்பெற்ற FIFA ஏற்பாட்டில், இந்தியா மற்றும் நேபாளம் இடையே நட்பு ரீதியான சர்வதேச மகளிர் கால் பந்தாட்டப் போட்டி நேரு விளையாட்டு அரங்கில் 15 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த பிப்ரவரி மாதம் நடத்தப்பட்டது.

Chennai Open 2022-ன் ஒரு பகுதியாக, இதுவரை இல்லாத அளவுக்கு மகளிருக்கான Professional Tennis போட்டியின் முதல் சாம்பியன்ஷிப் போட்டி சென்னை டென்னிஸ் விளையாட்டரங்கில் ரூ.5 கோடி செலவில் செப்டம்பர் மாதம் நடத்தப்பட்டது. இந்தப் போட்டியில் 32 நாடுகளைச் சேர்ந்த 55 வீராங்கனையர் பங்கேற்றனர். இந்தப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த 7 பேர் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.

[திரு. உதயநிதி ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 11

ஆண்களுக்கான Professional Tennis போட்டியான ஏடிபி சேலஞ்சர் 100 சென்னையில் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. இதற்கு தமிழ்நாடு அரசு தரப்பிலிருந்து 1 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, கடந்த பிப்ரவரியில் நடத்தப்பட்டது. இதில், 23 நாடுகளைச் சேர்ந்த 52 வீரர்கள் பங்கேற்றனர். இதில், 9 தமிழ்நாட்டு வீரர்கள் பங்கேற்றது கூடுதல் சிறப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சர் பொறுப்பை ஏற்றதும், நீங்கள் என்னிடம் அளித்த இரண்டு கோரிக்கை மனுக்களில் ஒன்று, உங்களுடைய இராதாபுரம் தொகுதிக்கு மினி ஸ்டேடியம் வேண்டுமென்பது.

நீங்கள் மட்டுமல்ல, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கக்கூடிய அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களும் என்னை எங்கு பார்த்தாலும் கேட்பது, எங்கள் தொகுதிக்கு ஒரு மினி ஸ்டேடியம் வேண்டும், மினி ஸ்டேடியம் வேண்டும் என்பதுதான். மொத்தமுள்ள 234 தொகுதிகளிலும் இதற்கான சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டபோது, மாவட்டத் தலைநகர் உட்பட 61 தொகுதிகளில் ஏற்கெனவே ஸ்டேடியங்கள் இருப்பது கண்டறியப்பட்டன. எனவே, மீதமுள்ள 173 தொகுதிகளில் மினி ஸ்டேடியம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பணிக்காக, இடங்களைத் தேர்வு செய்யும் வேலைகள் தற்போது வேகமாக நடைபெற்று வருகின்றன. இது தொடர்பான விவரங்களை அறிவிப்பில் விரிவாக வெளியிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் கோரிக்கை வைத்தவாறு இராதாபுரம் தொகுதியில் விளையாட்டு காம்ப்ளக்ஸ் அமைப்பதற்காக இடம் தேர்வு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய இராதாபுரம் தொகுதி மக்களின் சார்பாக மிக்க நன்றி. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் நலத் திட்டம் வழங்கும் நிகழ்ச்சிக்கு வரும்போது சர்வதேசத் தரத்தில் ஒரு விளையாட்டு மைதானம் தந்திருக்கிறார்கள். நீங்கள் மினி ஸ்டேடியம் தந்திருக்கிறீர்கள். மிக்க நன்றி.

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் அறிவிப்பு இருக்கிறது. (குறுக்கீடுகள்)

2023 ஏப்ரல் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வரும். ஒவ்வொன்றாக எல்லோருக்கும் வரும்.

மாண்புமிகு திரு. உதயநிதி ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, NCC என்பது இளம் வயதிலேயே மாணவ, மாணவிகளுக்கு தன்னம்பிக்கையையும், ஒழுக்கத்தையும் கற்றுத் தரக்கூடிய முக்கியமான அமைப்பாகும். காவல் துறை, ராணுவம் உள்ளிட்ட பொறுப்புமிக்க பணிகளில் கிட்டத்தட்ட சேருவதற்கான முதல்படிதான் NCC.

கல்லூரி மற்றும் பள்ளிகளில் நடத்தப்படுகின்ற NCC பயிற்சிக்கு (Parade) ஒரு கேடட்டுக்கு ஒரு மணிநேர அணிவகுப்புக்கு உணவிற்காக வழங்கப்படுகிற தொகை (Refreshment Charges) ரூ.10/– ஆக இருந்தது. நம்முடைய ஆட்சி அமைந்த பிறகு ரூ.10/– என்பதை ரூ.25/– ஆக உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக, 8 கோடியே 43 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒதுக்கியுள்ளார்கள். அதேபோல துப்பாக்கி சுடும் பயிற்சிக்காக ரூ.58 இலட்சம் மதிப்பில், Imported Sporting Rifles உள்ளிட்டவற்றை வாங்க நம் அரசுத் தரப்பில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் தேசிய மாணவர் படையை விரிவுபடுத்துவதற்காக 72 இலட்சத்து 98 ஆயிரத்து 805 ரூபாய் வழங்க நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

NCC கேடட்டுகளுக்கான முகாம்கள் மற்றும் பயிற்சி தொடர்பான நடவடிக்கைகளுக்கு கூடுதல் தொகையாக ரூ.1 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

குடியரசு தினமான ஜனவரி 26, 2023 அன்று புது தில்லியில் நடைபெற்ற மாநில மற்றும் தேசிய குடியரசு தின அணிவகுப்பில் தமிழ்நாட்டிலிருந்து 14 NSS தன்னார்வலர்களும், ஒரு திட்ட அதிகாரியும் பங்கேற்றனர். அவர்கள் அந்த நேரத்தில் என்னிடத்திலே ஒரு கோரிக்கையை வைத்தார்கள். மற்ற மாநிலங்களெல்லாம், டெல்லிக்கு அருகில் இருக்கக்கூடிய மாநிலங்களெல்லாம் இந்த NSS Parade–க்குச் செல்லும்போது, விமானத்தில் அழைத்துக்கொண்டு வந்துவிடுகிறார்கள். ஆனால், நாங்கள் இரயிலில் செல்கிறோம், அதுவே இரண்டு நாட்கள்

ஆகின்றன என்று என்னிடம் சொன்னார்கள். நான் அவர்களிடம் உறுதிமொழி கொடுத்திருக்கிறேன். அடுத்த முறை, ஒன்று அரசிடம் பணம் வாங்கியோ அல்லது என்னுடைய சொந்த முயற்சியிலோ நீங்கள் அத்தனைபேரும் விமானத்தில் சென்று வருவதற்கு நான் வழிவகை செய்கிறேன் என்று உறுதியளித்திருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், சென்னை மெரினாவில் நடைபெற்ற மாநில குடியரசு தின அணிவகுப்பில் 120 தன்னார்வலர்கள் மற்றும் 10 திட்ட அலுவலர்களும் பங்கேற்றனர். தமிழ்நாட்டில் விளையாட்டு உட்கட்டமைப்புக்கான வசதிகளை மேம்படுத்த வேலூர், நீலகிரி, சேலம், திருநெல்வேலி, மதுரை உள்ளிட்ட 15 மாவட்டங்களில் தற்போது சுமார் 73 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கைகளும் எடுத்து வருகின்றோம்.

பிற்பகல் 3–35

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞர் நின்று வென்ற தொகுதியான, (மேசையைத் தட்டும் ஒலி) எனது சேப்பாக்கம்–திருவல்லிக்கேணி தொகுதியில் உள்ள சேப்பாக்கம் ஸ்டேடியத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தனக்குப் பிடித்தமான கிரிக்கெட் போட்டியை எந்த இடத்தில் அமர்ந்து ரசித்தாரோ அதே இடத்தில் கலைஞர் அவர்களின் பெயரிலேயே ஒரு கேலரியை அமைத்து (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவராகவே அதைத் திறந்து வைத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு இந்நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இளைஞர்களின் குத்துச்சண்டை ஆர்வத்தினை ஊக்குவிக்கும்பொருட்டு கலைஞர் வாழ்ந்த கோபாலபுரம் பகுதியில், கோபாலபுரம் Boxing Academy–ஐ ரூபாய் 7 கோடியே 78 இலட்சம் மதிப்பில் அமைக்க (மேசையைத் தட்டும் ஒலி) நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு முதற்கட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கமாக விளையாட்டுத் துறை என்பதை விளையாட்டாகப் பார்ப்பது போன்ற நிலை இதற்கு முன்பு இருந்தது. எப்படி பள்ளிகளில்

PT பீரியடை மற்ற ஆசிரியர்கள் அதாவது, Maths, Science Teachers கடன் வாங்கி, அவர்களின் Syllabus-ஐ முடித்துவிடுவார்களோ அந்த மாதிரி விளையாட்டுத் துறைக்கான இடத்தை மற்ற துறைகள் ஆக்கிரமித்து இருந்த ஒரு நிலை முன்பு இருந்தது.

நம்முடைய கழக ஆட்சி அமைந்த பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகளால் விளையாட்டுத் துறைக்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்கூட லைட்டான துறைக்கு வெயிட்டான அமைச்சர் என்று சொல்லியிருக்கிறார். அவருக்கு நன்றி.

அண்மையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக நம்முடைய ஒன்றிய பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களிடம், விளையாட்டு மேம்பாட்டுத் துறையையும் மனதில் வைத்து, Asian Beach Games-ஐ தமிழ்நாட்டில் நடத்த வேண்டும்-Sports Authority of India-வின் மண்டலக் கிளையை சென்னையில் தொடங்க வேண்டும் என நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியிருக்கின்றார்கள்.

விளையாட்டுத் துறைக்கு இந்தளவுக்கு முக்கியத்துவம் அளிக்கக்கூடிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொறுப்பு வகிக்கும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை மானியக் கோரிக்கை மீதான பதிலுரையைத் தொடங்குகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழிநடத்தப்பட்டு வரும் இந்தத் திராவிட மாடல் அரசு பல futuristic திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் பயன்கள் அனைத்தும் சரியான வகையில், சரியான மக்களுக்குச் சென்றடைகிறதா என்பதை உறுதி செய்திட சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை இயங்கி வருகிறது.

ஆளுநர் உரையில் உள்ள அறிவிப்புகள் முதல் மாவட்ட ஆட்சியர்கள் வெளியிடும் அறிவிப்புகள் வரை அனைத்து அறிவிப்புகளையும் செயல்படுத்தும் பணியை இந்தச் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை ஒருங்கிணைத்து வருகிறது.

அதன் செயலாக்கம்–முன்னேற்றம்–நிறைவேற்றம் என மூன்று கட்டங்களில் அந்தத் திட்டங்களைக் கண்காணித்து மக்களிடம் கொண்டு சேர்க்கும் மகத்தான பொறுப்பு சிறப்புத் திட்ட செயலாக்கத் துறைக்கு உள்ளது.

அரசு ஒரு திட்டத்தைச் செயல்படுத்துகிறது என்றால், அதை சம்பந்தப்பட்ட ஒற்றைத் துறையால் மட்டும் செயல்படுத்திவிட முடியாது. அந்தத் திட்டம் தொடர்பான பிற துறைகளின் ஒத்துழைப்பும், ஒருங்கிணைப்பும் அவசியமாகிறது.

திட்டங்களைக் கண்காணிப்பது என்பது இத்துறையின் முக்கியப் பணி என்றாலும், அதோடு நிற்காமல், சில தனித்துவ முயற்சிகளும் இந்தத் துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதற்குச் செயல்வடிவம் கொடுக்கும் வகையில், 'கள ஆய்வில் முதலமைச்சர்' எனும் ஒரு புதிய திட்டமே தொடங்கப்பட்டது. இதன்மூலம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாவட்டங்களுக்கு நேரே சென்று அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் அனைத்து துறை சார்ந்த பணிகள் குறித்து விரிவாக ஆய்வுகளைச் செய்கின்றார்கள்.

கடந்த இரண்டே மாதங்களில், மூன்று மண்டலங்களில், 13 மாவட்டங்களில் இந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பல்வேறு முத்திரைத் திட்டங்களையும் (Iconic Projects) ஒருங்கிணைத்து வருகிறது.

நமது கலைஞர் அரசு சென்னையில் எப்படி அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியதோ, அதேபோல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான கழக அரசு மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நினைவு நூலகத்தை எழுப்பி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ரூபாய் 120 கோடியே 75 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டு வரும் இந்நூலகம், தென்மாவட்டங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர், இளைஞர்கள் பயன்பெறும் வகையில் விரைவில் பயன்பாட்டுக்கு வரவுள்ளது. இதற்கான பணிகளை பள்ளிக் கல்வித் துறை, பொதுப் பணித் துறை ஆகிய துறைகளோடு இணைந்து சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையும் ஒருங்கிணைத்து வருகிறது.

அதேபோல், உலகத் தரத்தில் சென்னை கிண்டியில் ரூபாய் 518 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைக்கான கட்டுமானப் பணிகளை பொதுப் பணித் துறை, சுகாதாரத் துறையுடன் இணைந்து ஒருங்கிணைத்து வருகிறோம். இந்த மருத்துவமனை கலைஞரின் நூறாவது பிறந்த நாளான ஜூன் 3 ஆம் தேதியன்று திறக்கப்படவுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3–40

இதுமட்டுமன்றி ரூபாய் 3 இலட்சத்து 63 ஆயிரத்து 732 கோடி மதிப்பிலான 156 முத்திரைத் திட்டங்கள் எங்கள் துறையால் ஒருங்கிணைக்கப்படுகின்றன. இந்த முத்திரைத் திட்டங்களைச் செயல்படுத்துவது தொடர்பாக கடந்த பிப்ரவரி மாதத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவான ஆய்வுகளை மேற்கொண்டார்கள். அப்போது இந்தத் திட்டங்களை விரைவாக முடிப்பதற்கான காலவரையறை (Deadline) உள்ளிட்டவை குறித்து அறிவுறுத்தப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு தொகுதியையும் தனது சொந்தத் தொகுதியாகக் கருதித்தான் செயலாற்றி வருகின்றார்கள். அதற்கு ஓர் உதாரணம் தான், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற திட்டத்தை அவர்கள் அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னது போலவே கழகத்திற்கு வாக்களித்தவர்கள் மகிழ்ச்சியடையும் விதத்திலும், வாக்களிக்காதவர்கள் வாக்களிக்காமல் விட்டுவிட்டோமே என வருந்தும் அளவுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் 233 சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து 1,789 கோரிக்கைகள் பெறப்பட்டன. இவற்றிற்குத் தீர்வு காண்பதற்காக சம்பந்தப்பட்ட 32 துறைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இத்துறைகளில் ஏற்கெனவே நடைமுறையில் உள்ள திட்டங்களில் ரூபாய் 5 ஆயிரத்து 724 கோடி மதிப்பீட்டில், 160 பணிகள் எடுக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன என்பதை இந்த மாமன்றத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் ரூபாய் 9ஆயிரத்து 727 கோடி மதிப்பீட்டில் 677 பணிகள், 2023–2024 மற்றும் 2024–2025 ஆகிய இரண்டு நிதியாண்டுகளில், சம்பந்தப்பட்ட துறைகளால் எடுத்துக்கொள்வதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மீதமுள்ள பணிகளில் சாத்தியக்கூறுகள் உள்ள பணிகளை, இந்த இரண்டு நிதியாண்டுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான பணி அனுமதி வழங்கும் குழுவின் ஒப்புதல் பெற்று அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் படிப்படியாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு பல மாவட்டங்களுக்குச் சுற்றுப்பயணம் செய்கிறேன். ஆய்வு செய்து வருகின்றேன். கடந்த மார்ச் 14, 15 தேதிகளில் தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்களுக்குச் சென்றிருந்தேன். அந்த மாவட்டங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி மாவட்ட ஆட்சியர்கள்–மாவட்ட பொறுப்பு அமைச்சர்கள்–மக்கள் பிரதிநிதிகள்–அதிகாரிகளுடன் இணைந்து ஆய்வு மேற்கொண்டபோது, பல்வேறு அரசுப் பணிகள் 30 சதவிகிதம் அளவு, 40 சதவிகிதம் அளவுதான் முடிந்துள்ளன என அவர்கள் தெரிவித்தார்கள்.

அப்போது அந்தப் பணிகள் எப்போது முடிக்கப்படும், deadline எப்பொழுது என்று கேட்டிருந்தேன். பல பணிகளை மார்ச் 31–க்குள் முடித்துவிடுவோம் என்று என்னிடத்தில் வாக்குறுதி கொடுத்திருந்தார்கள். எனவே, மீண்டும் சென்ற வாரம் ஏப்ரல் 4–ம் தேதியன்று தஞ்சை, திருவாரூரில் Follow Up ஆய்வுக் கூட்டங்களை நடத்தினோம்.

அப்போது, முன்பு முடிக்கப்படாமல் இருந்த திட்டப் பணிகள் பல தற்போது நிறைவுற்றுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை அவர்கள் கூறினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த Result தான் கள ஆய்வின் பலன் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன்.

இந்த ஆய்வுகளின்மூலம், ஒவ்வொரு மாவட்டத்தின் Performance Report-ஐ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கி வருகிறோம்.

மேலும், அடுத்த 3 மாதங்களில் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று நான் ஆய்வுப் பணிகளை மேற்கொள்ளவுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மக்கள் நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதில், மாவட்டங்களுக்கு இடையே ஓர் ஆரோக்கியமான போட்டியை இந்தக் கள ஆய்வுத் திட்டம் ஏற்படுத்தியுள்ளது என்றால் அது மிகையாகாது. இதனை சாத்தியமாக்கிய அனைத்து அரசு அலுவலர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை படித்து முடித்து, பின் உயர் கல்வி செல்லும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1,000/– உதவித் தொகை வழங்கும் 'புதுமைப் பெண்' திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இதன்மூலம் மாணவிகளின் உயர் கல்விச் சேர்க்கை எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

இத்திட்டத்தால் சுமார் 2 இலட்சம் மாணவிகள் பயனடைந்துள்ளனர். கல்லூரிப் படிப்பை பாதியில் விட்ட 12 ஆயிரம் மாணவிகள் மீண்டும் கல்லூரியில் சேர்ந்து பயின்று வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த மகத்தான மாற்றத்துக்கு சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் பங்களிப்பு இன்றியமையாதது என்பதைப் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

'சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் செய்வோம்' என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்த திட்டங்களில் ஒன்றுதான் 'காலை உணவுத் திட்டம்'. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்ட பிறகு 40 சதவிகிதம் அளவு வரை மாணவர்களின் வருகை எண்ணிக்கை உயர்ந்துள்ளது– இடைநிற்றல் (Dropouts) என்பது பெருமளவில் குறைந்துள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும்

விரிவுபடுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதிலும் இந்தச் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் பங்களிப்பு உள்ளது என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயதில் பெரியவர்கள் மட்டுமல்ல; சிறியவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளுக்கும் செவிசாய்த்து உடனுக்குடன் அதற்குத் தீர்வு காணக்கூடிய வகையில் நம்முடைய துறை செயல்பட்டு வருகிறது. அரசு செயல்பட்டு வருகிறது. சமீபத்தில் டிசம்பர் மாதம் 24 ஆம் தேதி சிவகங்கை மாவட்டத்திற்கு ஆய்விற்காகவும், சிறுகூடல்பட்டி பெரியார் நினைவு சமத்துவபுரம் பகுதியைச் சேர்ந்த பொதுமக்களுக்கு பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காகவும் நானும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அண்ணன் பெரியகருப்பன் அவர்களும் சென்றிருந்தோம். அங்கேயிருந்த 5-6 வயதுள்ள சிறுமியர் ஹாசினி, ஜெசிந்தா, எங்கள் வீட்டிற்கு வாருங்கள் என்று என்னை அவர்களுடைய வீட்டிற்கு அழைத்தார்கள். அவர்கள் வீட்டிற்குச் சென்றேன். Coffee போட்டுக் கொடுத்தார்கள். Coffee-ஐக் குடித்துவிட்டு நான் கேட்டேன் உங்களுக்கு என்ன வேண்டுமென்று, உங்களுக்கு ஏதாவது ஆசையிருந்தால் சொல்லுங்கள், நான் வாங்கித் தருகிறேன் என்று சொன்னேன். அந்த இரண்டு சிறுமியர் கேட்டது ஒன்றே ஒன்றுதான். எங்கள் சமத்துவபுரத்திற்கு நாங்களெல்லாம் விளையாடுகிற மாதிரி விளையாட்டுத்திடல் அமைத்துக் கொடுங்கள் என்று கேட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சிறுமியர் அவர்களுக்குச் சொந்தமாக எதையும் கேட்கவில்லை. அந்த சமத்துவபுரத்திற்கு ஒட்டுமொத்தமாக ஒரு விளையாட்டுத் திடல் வேண்டுமென்று ஆசையாகக் கேட்டார்கள். அவர்கள் கோரிக்கை வைத்த அன்றைய தினமே பூங்கா அமைக்க ரூபாய் 14 இலட்சத்துக்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) சென்ற முறை ஆய்வுக்கு மீண்டும் சென்றிருந்தபோது, பூங்கா ready ஆகிவிட்டதா, என்று கேட்டேன். Collector, பூங்கா ready ஆகிவிட்டது என்று சொன்னார். தற்போது திறப்பு விழா காண தயாராகி வரும் அந்தப் பூங்காவை அந்தச் சிறுமிகளை வைத்தே திறக்க நடவடிக்கை எடுக்குமாறு, மாவட்டத்தின் அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் நான் அறிவுறுத்தியுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 11] [திரு. உதயநிதி ஸ்டாலின்]

பிற்பகல் 3–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் இளைஞர்கள் வேலைவாய்ப்புக்கான திறனை வளர்த்துக்கொள்ள வேண்டுமென தமிழ்நாடு திறன் மேம்பாட்டு இயக்கம் (Tamil Nadu Skill Development Mission)-ஐத் தொடங்க 2009 ஆம் ஆண்டில் ஆணையிட்டார்கள்.

முத்தமிழறிஞரின் இந்தத் தொலைநோக்கு சிந்தனைதான், தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்துக்கே முன்மாதிரியாக இருந்தது என்பது கூடுதல் சிறப்பு. (மேசையைத் தட்டும் ஒலி)

முத்தமிழறிஞர் வழியில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு, நம் மாணவர்-மாணவியரின் வேலைவாய்ப்பை உறுதி செய்ய, Tamil Nadu Skill Development Corporation-க்கு ஆண்டுக்கு 200 கோடி ரூபாயை ஒதுக்கி வருகிறது. இதன்மூலம், பல்வேறு தொழிற்பயிற்சி மற்றும் திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதல்படி அனைத்துத் துறை திறன் பயிற்சிகளையும் ஒருங்கிணைக்கும் முதன்மை அமைப்பாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் அறிவிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டது.

தமிழர் தாய்மடியாம் கீழடியை மீட்ட நம் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தல்படி, அழிந்துவரும் பாரம்பரியத் தமிழரின் கலைகளான சிலை வடித்தல், பனை ஓலை நெய்தல் உள்ளிட்ட தொழில்களைப் பாதுகாக்க, அந்தத் தொழில்களில் ஈடுபடுவோருக்கு அரசு சார்பில் திறன் மதிப்பீடு செய்யப்பட்டு, சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடம் வழங்கப்படும் கோரிக்கை மனுக்களில் பெரும்பாலானவை வேலைவாய்ப்பு வேண்டும் என்பதுதான். வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் வழங்கும் வகையில் முன்னணி தொழில் நிறுவனங்களுடன் இணைந்து அரசு சார்பிலேயே பயிற்சித் திட்டங்களை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதன்படி, HCL, TCS, Gee Dee German மற்றும் GKD Institute for Technological Resources பயிற்சி நிறுவனத்தின்மூலம் தொழில்நுட்பம், உற்பத்தி மற்றும் ஃபவுண்டரி சார்ந்த பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இன்றைய தொழில் துறையின் போக்கிற்கு ஏற்ப இளைஞர்களுக்கு அவர்களது துறைகளில் திறன் பயிற்சிகளை வழங்கி, வேலைவாய்ப்பை உறுதி செய்வதற்காக தொடங்கப்பட்டதுதான் "நான் முதல்வன்" எனும் மகத்தான திட்டம். இது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கனவுத் திட்டம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆண்டுக்கு 10 இலட்சம் இளைஞர்களைச் சென்றடைய வேண்டும் என்ற இலக்கோடு தொடங்கப்பட்ட இத்திட்டம், நிர்ணயிக்கப்பட்ட இலக்கைவிட அதிகமாக, ஒரே ஆண்டில், 13 இலட்சம் மாணவர்களுக்குப் பயனளித்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

இது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆய்வுகளாலும், தொடர் கண்காணிப்பு மூலமுமே சாத்தியமானது. Siemens, Dassault, Autodesk, Cisco (சிஸ்கோ), IBM, Google, Microsoft, Cambridge போன்ற நிறுவனங்களுடன் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு, பல்வேறு பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து நேரடியாகவும், ஆன்லைன் வழியாகவும் தொழில் துறைக்குத் தேவையான Project Based Learning வழங்கப்பட்டு வருகிறது.

சமீபத்தில் சென்னை ஐஐடி-யில் நடைபெற்ற ஜி–20 மாநாட்டின்போது, நான் முதல்வன் திட்டத்தின் சிறப்பைப் பாராட்டி, ஒன்றிய அரசின் அதிகாரிகளும்–கல்விக் குறியீட்டில் உயர்ந்து நிற்கும் ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளும் கருத்து தெரிவித்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தைத் தொடங்கி இந்தியாவுக்கே எப்படி வழிகாட்டினாரோ, அவர் வழியில் வந்த நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து உருவாக்கிய நான் முதல்வன் திட்டம்தான் உலக நாடுகளையே வழிநடத்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

நான் முதல்வன் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் முன்னணி தொழில்நுட்பம் சார்ந்த பயிற்சிகளைப் பெற்ற மாணவர்களின்

திறன்களை எல்லாம் பதிவு செய்து தொகுத்து, ஒரு மாபெரும் Skill Database-ஐ ஏற்படுத்தியுள்ளோம். இதற்கு முன்பு இப்படியான திறன் தொகுப்பு Database வரலாற்றில் இருந்ததேயில்லை.

தமிழ்நாட்டு உயர் கல்வி வரலாற்றில் இது ஒரு மைல்கல். தமிழ்நாட்டை இந்தியாவின் நம்பர் 1 மாநிலமாக உயர்த்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கனவை மெய்ப்பிக்கும் வகையில் இப்படி பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இரண்டு துறைகளின் சார்பாக இங்கு 38 அறிவிப்புகளை வெளியிடவுள்ளேன். அறிவிப்புகளின் தலைப்புகளை மட்டும் இங்கு நான் எடுத்துரைக்கின்றேன். முழு அறிவிப்பையும் நான் வாசித்ததாக அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அறிவிப்புகள்

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

1) புதியதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு, மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி, தென்காசி, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய 6 மாவட்டங்களில் ரூ.9,000.00 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன்கூடிய திறந்தவெளி மற்றும் உள்விளையாட்டரங்கங்களை உள்ளடக்கிய மாவட்ட விளையாட்டு வளாகங்கள் நிறுவப்படும்

பொதுமக்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் ஆரோக்கியமான, சுறுசுறுப்பான வாழ்க்கை முறையை ஏற்படுத்துவதையும், சமூகத்தில் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி கலாச்சாரத்தை வளர்ப்பதையும் அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

தனி நபர், குழு விளையாட்டு, தனிப்பட்ட பயிற்சி மற்றும் போட்டி நிகழ்வுகளில் பங்கேற்க ஏதுவாக புதியதாக உருவாக்கப்பட்ட செங்கல்பட்டு, மயிலாடுதுறை, கள்ளக்குறிச்சி, தென்காசி, இராணிப்பேட்டை மற்றும் திருப்பத்தூர் ஆகிய 6 மாவட்டங்களில் ரூ.9,000.00 இலட்சம் மதிப்பீட்டில் அனைத்து வசதிகளுடன்கூடிய திறந்தவெளி மற்றும் உள்விளையாட்டரங்கங்களை உள்ளடக்கிய மாவட்ட விளையாட்டு வளாகங்கள் படிப்படியாக நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. உதயநிதி ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 11
பிற்பகல் 3–50

2) 2023 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு பொன்விழாவைச் சிறப்பித்திடும் வகையில் அனைத்து ஊராட்சிகளுக்கும் "டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்" கீழ் ரூ.4,200.00 இலட்சம் செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

நமது கிராமப்புற இளைஞர்கள், விளையாட்டின்மீது அதீத ஆர்வம் உடையவர்கள் ஆவர். இவர்கள் தங்களது ஓய்வு நேரத்தில் பல்வேறு விளையாட்டுகளை விளையாடி மகிழ்வர். இது தனிமனித வளர்ச்சிக்கும் சமூக ஒற்றுமைக்கும் வழிவகுக்கும். ஆனால் அவர்களில் பெரும்பாலானவர்களிடம் தேவையான விளையாட்டு உபகரணங்கள் இருப்பதில்லை.

ஊரக இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்திய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு பொன்விழா ஆண்டான 2023–ல் மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் நேரம் மற்றும் சக்தியினை ஒருமுகப்படுத்தி, அவர்களை விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சிகளில் ஈடுபடுத்தும் நோக்கில் கிராமப்புற இளைஞர்கள் அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் "டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்" கீழ் அனைத்து ஊராட்சிகளுக்கும் ரூ.4,200.00 இலட்சம் செலவில் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.

3) சென்னையில் உள்ள ஐந்து முக்கிய விளையாட்டரங்கங்களில் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.2,500.00 இலட்சம் மதிப்பீட்டில் மறுசீரமைத்து, மேம்படுத்தப்படும்

ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கம், மேயர் இராதாகிருஷ்ணன் ஹாக்கி விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம் மற்றும் வேளச்சேரி நீச்சல்குள வளாகம் ஆகிய ஐந்து முக்கியமான விளையாட்டரங்கங்கள் சென்னையில் உள்ளன. இந்த வசதிகள் விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்களால் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. நமது விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிற்காகவும், பன்னாட்டு அளவிலான

விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும் அதிநவீன வசதிகளை உருவாக்குவதற்கு விரிவான மறுசீரமைப்பு தேவைப்படுகிறது.

எனவே, சென்னையிலுள்ள ஐந்து முக்கிய விளையாட்டரங்கங்கள் ரூ.2,500.00 இலட்சம் செலவில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4) தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு எலைட் (ELITE) திட்டம் மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் மிம்ஸ் (MIMS) ஆகிய திட்டங்களின்கீழ் வழங்கப்படும் சிறப்பு உதவித் தொகை மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை உயர்த்தப்படும்

ஒலிம்பிக் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் திறன் கொண்ட தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு, தேவை அடிப்படையிலான நிதியுதவி அளிப்பதற்காக “தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித் தொகை” (ELITE) திட்டத்தினை அரசு ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் நபர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றிற்கு வழங்கும் நிதியுதவி ரூபாய் 25.00 இலட்சத்திலிருந்து ரூபாய் 30.00 இலட்சமாகவும், தற்போதுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 12–லிருந்து 25 ஆகவும் உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்வதை ஊக்குவிக்கும் (MIMS) திட்டத்தின்கீழ் நபர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றிற்கு வழங்கப்படும் நிதியுதவி ரூபாய் 10.00 இலட்சத்திலிருந்து ரூபாய் 12.00 இலட்சமாகவும், தற்போதுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை 50–லிருந்து 75 ஆகவும் உயர்த்தப்படும்.

இத்திட்டங்களைச் செயல்படுத்திட 1,650.00 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு விடுதிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் ரூ.1,000.00 இலட்சம் செலவில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் மாநிலம் முழுவதும் 27 விளையாட்டு விடுதிகள், 4 சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள் மற்றும் 6 முதன்மை நிலை விளையாட்டு மையங்கள் இயங்கி வருகின்றன. மேற்கண்ட விளையாட்டு

விடுதிகள் மற்றும் மையங்களில் வளரும் திறனாளர்களுக்கு தங்கும் வசதிகளுடன்கூடிய விளையாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

எதிர் காலங்களில் பதக்கம் வெல்லக்கூடிய வாய்ப்புள்ளவர்களுக்கு சிறந்த பயிற்சி அனுபவத்தை அளித்திடும் பொருட்டு ரூ.1,000.00 இலட்சம் மதிப்பீட்டில் விளையாட்டு விடுதிகள் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும்.

6) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் நவீன LED மின் விளக்கு வசதிகள் ரூ.990.00 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும்

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் பல திறந்தவெளி விளையாட்டு மற்றும் பயிற்சி வசதிகள் சர்வதேச தரத்தில் அமையப் பெற்ற நவீன விளையாட்டரங்கமாகும்.

இந்த விளையாட்டரங்கத்தில் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான தடகளப் போட்டிகள் மற்றும் ISL கால்பந்துப் போட்டிகள், பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இந்த விளையாட்டரங்கில் தற்போதுள்ள விளையாட்டு மற்றும் பார்வை அனுபவங்களை அதிகரிக்க, DMX கட்டுப்பாட்டு அமைப்புடன்கூடிய நவீன LED விளக்குகள் ரூ.990.00 இலட்சம் செலவில் புனரமைக்கப்படும்.

7) கோவில்பட்டியில் மாணவர்களுக்கான ஹாக்கி முதன்மை நிலை விளையாட்டு மையம் ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டியில் ஹாக்கி விளையாட்டு மிகவும் பிரபலமானதாகும். இங்கு தற்போது இயங்கிவரும் ஹாக்கி சிறப்பு விளையாட்டு விடுதியில் 30 மாணவர்கள் உள்ளனர். இவ்விடுதிக்கு பல சிறந்த தேசிய மற்றும் சர்வதேச வீரர்களை உருவாக்கிய பெருமையும் உண்டு.

கோவில்பட்டி மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் ஹாக்கியின் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கவும், நவீன பயிற்சி வசதிகளை உருவாக்கவும், கோவில்பட்டியில் ரூ.700.00 இலட்சம் மதிப்பீட்டில் ஹாக்கி முதன்மை நிலை விளையாட்டு மையம் அமைக்கப்படும்.

8) மாநிலத்தில் பாரா—விளையாட்டுகளை (Para—Sports) ஊக்குவிக்கும் வகையில் நாட்டிலேயே முதன்முறையாக ரூ.600.00 இலட்சம் செலவில் 6 மாவட்ட விளையாட்டரங்கங்களில் பிரத்தியேக பாரா—விளையாட்டு மைதானங்கள் (Para—Sports Arena) உருவாக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

*சமூக நீதி நமது அரசாங்கத்தின் அடித்தளமாக அமைகிறது. அனைவருக்கும் சம வாய்ப்புகளை உருவாக்குவது மாண்புமிகு முதலமைச்சரின் உன்னதமான தொலைநோக்குப் பார்வையாகும். நமது பாரா-விளையாட்டு (*Para-Sports*) வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் பல பதக்கங்களை வென்று சாதனை படைத்து தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்து வருகின்றனர்.*

*பாரா—விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் நாட்டிலேயே முதன்முறையாக ரூ.600.00 இலட்சம் செலவில் 6 மாவட்ட விளையாட்டரங்கங்களில் பிரத்தியேக பாரா—விளையாட்டு மைதானங்கள் (*Para-Sports Arena*) உருவாக்கப்படும்.*

9) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையம் (Tamil Nadu Centre for Sports Science) ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

விளையாட்டு அறிவியல் என்பது ஒரு வளர்ந்து வரும் துறையாகும். இது விளையாட்டு வீரர்களுக்கு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு செயல்திறன்களை மேம்படுத்தவும், விளையாட்டு தொடர்பான காயங்களிலிருந்து மறுவாழ்வு பெறவும், தொழில்நுட்ப முறையில் உடல் தகுதியை மீட்டெடுக்கவும் உதவுகிறது.

*தொழில்நுட்பத்தின் பலன்களை நமது வளர்ந்து வரும் விளையாட்டு வீரர்களுக்கு விரிவுபடுத்தி, திறமைகளை மேம்படுத்தும் வகையில் ஒரு சிறப்பு முயற்சியாக சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் மையம் (*Tamil Nadu Centre for Sports Science*) ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.*

10) மாநிலத்தில் விளையாட்டு மேம்பாட்டிற்காக பொதுமக்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுடன் இணைந்து 'TN சாம்பியன்ஸ் அறக்கட்டளை' (TN Champions Foundation) அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. உதயநிதி ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 11

மாநிலம் முழுவதும் விளையாட்டுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கு பொதுமக்கள், பெருநிறுவனங்கள் மற்றும் விளையாட்டில் ஆர்வமுள்ள ஆதரவாளர்கள் பங்களிக்க தயாராக உள்ள நிலையில், தமிழ்நாட்டில் விளையாட்டுகளைப் புத்துயிர் பெறச் செய்வதற்கு அவர்களின் பங்களிப்புடன் 'TN சாம்பியன்ஸ் அறக்கட்டளை' அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

'TN சாம்பியன்ஸ் அறக்கட்டளை' அமைப்பதற்கு ரூ.300.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

11) மாமல்லபுரத்தில் உலக சர்ஃபிங் லீக் (World Surfing League) போட்டிகள் நடத்துவதற்கு ரூ.268.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

உலக அரங்கில் அனைவரும் வியந்து பார்க்கும் வண்ணம் தமிழ்நாடு அரசு பல்வேறு சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்தி வருகின்றது.

சர்வதேச அளவிலான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதை ஊக்குவிக்கும் வகையில் உலக சர்ஃபிங் லீக் (World Surfing League) போட்டிகள் மாமல்லபுரத்தில் நடத்திட ரூ.268.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

12) தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழக (TNPESU) மகளிர் விடுதிக்கு ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கப்படும்

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகம் (TNPESU) பல்வேறு விளையாட்டு மற்றும் உடற்கல்வி தொடர்பான பட்டயப் படிப்பு மற்றும் ஆராய்ச்சி படிப்புகளை நடத்தும் முதன்மை நிறுவனமாக உருவெடுத்துள்ளது. இப்பல்கலைக்கழக விடுதியில் தங்கிப் பயிலும் மாணவிகளின் நலனைக் கருத்தில் கொண்டு அங்கு செயல்பட்டு வரும் மகளிர் விடுதிக்கு ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் அமைக்கப்படும்.

13) 2023 சென்னை ஸ்குவாஷ் உலக கோப்பை (2023 Chennai Squash World Cup) நடத்துவதற்கு ரூ.150.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 11] [திரு. உதயநிதி ஸ்டாலின்]

உலக ஸ்குவாஷ் சாம்பியன்களை உருவாக்கியுள்ள சென்னை, ஸ்குவாஷ் விளையாட்டின் தலைநகரமாக விளங்குகிறது.

2023 சென்னை ஸ்குவாஷ் உலகக் கோப்பையை நடத்துவதற்கு ரூ.150.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

14) திருச்சி ஓலையூரில் தேசிய மாணவர் படை (NCC) நிரந்தர பயிற்சி மையம் அமைக்க முதற்கட்டமாக ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்

திருச்சி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதியிலுள்ள தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்குப் பயிற்சி அளிக்க ஏதுவாக, திருச்சி மாவட்டம், ஓலையூரில் தேசிய மாணவர் படைக்கு (NCC) நிரந்தர பயிற்சி மையம் அமைக்க முதற்கட்டமாக ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

15) ஈரோடு மாவட்டம், கரட்டுப்பாளையத்தில் உள்ள ஜிம்னாஸ்டிக் மையத்தில் விளையாட்டு விடுதி மற்றும் புதிய ஜிம்னாஸ்டிக் அரங்கம் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்

ஈரோடு மாவட்டம், கரட்டுப்பாளையத்தில் உள்ள ஜிம்னாஸ்டிக் மையம் பழங்குடியினர் குழந்தைகளின் ஜிம்னாஸ்டிக் திறமையைக் கண்டறியும் பிரத்தியேக மையமாக உள்ளது. பழங்குடியினர் குழந்தைகளின் அபாரத் திறமைகளை ஊக்குவிக்கவும், வருங்கால சாம்பியன்களை உருவாக்கவும் கரட்டுப்பாளையத்தில் உள்ள ஜிம்னாஸ்டிக் மையத்தில் விளையாட்டு விடுதி மற்றும் புதிய ஜிம்னாஸ்டிக் அரங்கம் ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

16) செங்கல்பட்டு மாவட்டம், நீர்பெயரில் அமைந்துள்ள தேசிய மாணவர் படை (NCC) நிரந்தர முகாமில் உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்

செங்கல்பட்டு மாவட்டம், நீர்பெயரில் அமைந்துள்ள தேசிய மாணவர் படையின் (NCC) நிரந்தர முகாமில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு சிறந்த பயிற்சி வசதிகளை அளித்திட ரூ.100.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

17) தேசிய மாணவர் படையினர் (NCC) பங்கேற்கும் குடியரசு தின அணி வகுப்பு மற்றும் இதர முகாம்களுக்கான நிதி உதவி ரூ.100.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்

தமிழ்நாட்டைச் சேர்ந்த தேசிய மாணவர் படையினர் (NCC) குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்று தங்கள் ஒழுக்கம் மற்றும் சிறப்பான செயல்பாடுகளால் நாடு முழுவதும் அறியப்பட்டுள்ளனர்.

தேசிய மாணவர் படையினர் (NCC) பங்கேற்கும் குடியரசு தின அணிவகுப்பு மற்றும் இதர முகாம்களுக்கான நிதி உதவி ரூ.100.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும்.

18) நாட்டு நலப் பணித் திட்ட (NSS) அமைப்பின் பல்வேறு சிறப்புச் செயல்பாடுகளுக்காக ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

நாட்டு நலப் பணித் திட்ட (NSS) தொண்டர்கள் சமூக சேவைக்கும், அர்ப்பணிப்புக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளனர். தேசிய ஒருங்கிணைப்பு முகாம், இளைஞர் விழாக்கள், சாகச முகாம்கள், திறன் பயிற்சி மற்றும் குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்றல் போன்ற பல சிறப்பு நிகழ்ச்சிகளை நாட்டு நலப் பணித் திட்டம் நடத்தி வருகிறது.

இத்தகைய பல்வேறு சிறப்புச் செயல்பாடுகளுக்காக நாட்டு நலப் பணித் திட்ட (NSS) அமைப்பிற்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

19) புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களை நிபுணத்துவ பயிற்றுநர்களாக (Expert Coaches) பயன்படுத்த ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

மாநிலம் முழுவதும் உள்ள வளரும் விளையாட்டு வீரர்களுக்குப் பலன் அளிக்கும் வகையில், தலைசிறந்த விளையாட்டு வீரர்களை நிபுணத்துவ பயிற்றுநர்களாக ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. நமது விளையாட்டு வீரர்கள் மற்றும் பிற பயிற்றுநர்களுக்கு வழிகாட்டவும், அவர்களின் திறமைகளை மேம்படுத்தவும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நிபுணத்துவ பயிற்றுநர்களாக புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களை ஈடுபடுத்தும் செயல்முறையைத் தொடங்குவதற்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

20) மதுரை மாவட்டம், இடையப்பட்டியில் உள்ள தேசிய மாணவர் படை (NCC) பயிற்சி அகாடமி உட்கட்டமைப்பை மேம்படுத்த ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்

மதுரை மாவட்டம், இடையப்பட்டியில் உள்ள தேசிய மாணவர் படை(NCC) பயிற்சி அகாடமியின் உட்கட்டமைப்பை மேம்படுத்தி தேசிய மாணவர் படையினருக்குச் சிறந்த பயிற்சி வசதிகளை உருவாக்கிட ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

21) விளையாட்டு வீரர்கள் மற்றும் இளைஞர்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் விதமாக "தந்தை பெரியார் நினைவேந்தல் சொற்பொழிவு" ஆண்டுதோறும் நடத்துவதற்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

இளைஞர்களின் பகுத்தறிவு சிந்தனையைத் தூண்ட அயராது பாடுபட்ட தந்தை பெரியார் அவர்களைப் போற்றும் வகையில், விளையாட்டு வீரர்கள் மற்றும் இளைஞர்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும் விதமாக "தந்தை பெரியார் நினைவேந்தல் சொற்பொழிவு" ஆண்டுதோறும் நடத்துவதற்கு ரூ.50.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

22) விளையாட்டு அறிவியல் குறித்த பன்னாட்டு அளவிலான கருத்தரங்கம் நடத்துவதற்கு ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்

விளையாட்டு அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை விளையாட்டு ஆராய்ச்சி மற்றும் பயிற்சியின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியுள்ளது. மேலும் விளையாட்டு வீரர்களின் அதிக செயல்திறனுக்கான வாய்ப்புகளை வழங்கும் ஒரு வளர்ந்து வரும் துறையாக இது காணப்படுகிறது. இதன் பலன்கள் விளையாட்டு வீரர்களைச் சென்றடைவதற்கான ஒரு முன்னோடி முயற்சியாக விளையாட்டு அறிவியல் தொடர்பான சர்வதேசக் கருத்தரங்கம் நடத்திட ரூ.25.00 இலட்சம் நிதி ஒதுக்கப்படும்.

23) புதிய விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்குதல் மற்றும் ஏற்கெனவே உள்ள வசதிகளை தரம் உயர்த்துவதன்மூலம் மாநிலத்தில் உள்ள விளையாட்டு உட்கட்டமைப்புகள் மறுசீரமைக்கப்படும்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாநிலம் முழுவதும் விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பல விளையாட்டு அரங்கங்கள் மற்றும் வசதிகளை ஏற்படுத்தி பராமரித்து வருகிறது. இந்த வசதிகளைப் புதுப்பித்து அவற்றை நவீனமயமாக்குவதற்கு தொடர்ந்து மேம்படுத்த வேண்டியுள்ளது.

எனவே, மாநிலம் முழுவதும் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் படிப்படியாகப் புதுப்பிக்கப்பட்டு மேம்படுத்தப்படும்.

24) இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு ஒலிம்பிக் நீர் விளையாட்டுகளுக்கான அகாடமி (Tamil Nadu Olympic Water Sports Academy) அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

தமிழ்நாட்டில் முதல் முறையாக இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒலிம்பிக் நீர் விளையாட்டுகளுக்கான அகாடமி அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ஒலிம்பிக் நீர் விளையாட்டுகளுக்கான வழக்கமான மற்றும் தீவிர பயிற்சியினை ஊக்குவிக்கும் வகையில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

25) ஆசிய ஹாக்கி ஆடவர் சாம்பியன்ஷிப் 2023 (Asian Hockey Men's Championship 2023) சென்னையில் நடத்துவதற்கு நிதியுதவி வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

ஆசிய கோப்பை ஆண்கள் ஹாக்கி போட்டி கடந்த 2007 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்றது.

15 ஆண்டுகளுக்குப் பிறகு சர்வதேச அளவிலான ஆசிய ஆடவர் சாம்பியன்ஷிப் 2023 ஹாக்கி போட்டி சென்னையில் மீண்டும் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. இந்த ஆசிய ஹாக்கி ஆடவர் சாம்பியன்ஷிப் 2023 சென்னையில் நடத்துவதற்கு நிதியுதவி வழங்கப்படும்.

26) ATP சென்னை ஓபன் டூர் 2023 சென்னையில் நடத்துவதற்கு நிதியுதவி வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை நகருக்கும் டென்னிஸ் விளையாட்டிற்கும் வலுவான தொடர்பு உண்டு. சென்னை பல புகழ்பெற்ற சர்வதேச டென்னிஸ் வீரர்களை உருவாக்கியுள்ளது.

டென்னிஸ் விளையாட்டை மேலும் ஊக்குவிக்கவும், நமது இளைஞர்கள் உலகளாவிய டென்னிஸ் போட்டியைக் கண்டுகளிக்கவும் ATP *சென்னை ஓபன் டூர் 2023 சென்னையில் நடத்துவதற்கு நிதியுதவி வழங்கப்படும்.*

27) பொதுமக்களிடையே உடற்தகுதி கலாச்சாரத்தைப் புகுத்தும் வண்ணம் அறிஞர் அண்ணா மாரத்தான் ஓட்டம் (Arignar Anna Marathon Run) ஆண்டுதோறும் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படும்

அன்றாட வாழ்வில் உடற்தகுதியைப் பேணுவது குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துவதற்கும், உடற்தகுதி கலாச்சாரத்தை இளைஞர்களிடையே புகுத்துவதற்கும் அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் அறிஞர் அண்ணா மாரத்தான் ஓட்டம் ஆண்டுதோறும் நடத்தப்படும்.

28) "நம்ம ஊரு விளையாட்டுத் திடல்"—ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து, அனைத்து ஊராட்சிகளிலும் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

தனிநபர் வாழ்க்கையில் விளையாட்டு மற்றும் உடற்தகுதி மிகவும் விலைமதிப்பற்றதாகும். எனவே, கிராமப் பகுதி இளைஞர்களிடையே விளையாட்டு மற்றும் உடற்தகுதி விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் "நம்ம ஊரு விளையாட்டுத் திடல்" திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் பள்ளிக் கல்வித் துறையுடன் ஒருங்கிணைந்து அனைத்து ஊராட்சிகளிலும் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படும்.

29) தமிழ்நாட்டில் முதற்கட்டமாக கொளத்தூர், சேப்பாக்கம், வாணியம்பாடி, காங்கேயம், சோழவந்தான், திருவெறும்பூர், ஸ்ரீவைகுண்டம், பத்மநாபபுரம், ஆலங்குடி மற்றும் காரைக்குடி ஆகிய பத்து சட்டமன்றத் தொகுதிகளில் அமையவிருக்கும் சிறு விளையாட்டரங்கங்களுக்கு 'முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம்' எனப் பெயரிடப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்றத் தொகுதிகளில் விளையாட்டு வீரர்களின் உடற்தகுதி மற்றும் விளையாட்டு வளர்ச்சியினைத் தூண்டும் வகையில் சிறு விளையாட்டரங்கம் அமைக்க நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் முதற்கட்டமாக கொளத்தூர், சேப்பாக்கம், வாணியம்பாடி, காங்கேயம், சோழவந்தான், திருவெறும்பூர், ஸ்ரீவைகுண்டம், பத்மநாபபுரம், ஆலங்குடி மற்றும் காரைக்குடி ஆகிய பத்து சட்டமன்றத் தொகுதிகளில் அமையவிருக்கும் சிறு விளையாட்டரங்கங்களுக்கும் மற்றும் ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள 29 சிறு விளையாட்டரங்கங்களுக்கும் 'முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம்' எனப் பெயரிடப்படும்.

30) மாநிலத்தின் ஒட்டுமொத்த விளையாட்டு மற்றும் விளையாட்டு மேம்பாட்டிற்கான வழிகாட்டியாக "தமிழ்நாடு விளையாட்டுக் கொள்கை" (Sports Policy) கொண்டு வரப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

விளையாட்டு செயல்பாடுகளை ஊக்குவித்து, விளையாட்டு மேம்பாட்டிற்கான திட்டங்களை உருவாக்கி, விளையாட்டுகளின் தரத்தை மேம்படுத்த 2000 ஆம் ஆண்டில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை உருவாக்கப்பட்டது.

மாநிலத்தின் ஒட்டுமொத்த விளையாட்டு மற்றும் விளையாட்டு மேம்பாட்டிற்கான வழிகாட்டியாகச் செயல்பட விரிவான மற்றும் முழுமையான "தமிழ்நாடு விளையாட்டுக் கொள்கை" கொண்டு வரப்படும்.

31) சென்னையில் உலகத் தரத்தில் இந்தியாவின் முதல் 6 ட்ராப் ரேஞ்ச் (6 Trap Range) அடங்கிய ட்ராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கி சுடுதலுக்கான (Trap and Skeet Shooting) சிறப்பு அகாடமி அமைக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னையில் உலகத் தரத்தில் இந்தியாவின் முதல் 6 ட்ராப் ரேஞ்ச் (6 Trap Range*) அடங்கிய ட்ராப் மற்றும் ஸ்கீட் துப்பாக்கி சுடுதலுக்கான (*Trap and Skeet Shooting*) சிறப்பு அகாடமி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

பிற்பகல் 3–55

சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

1) நான் முதல்வன் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் திறன் மேம்பாட்டுப் பயிற்சியை செவ்வனே செயல்படுத்த, அனைத்து அரசு

பொறியியல் கல்லூரிகள் மற்றும் அண்ணா பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் "நான் முதல்வன் திறன் மற்றும் வேலைவாய்ப்பு மையம்" நிறுவப்படும். ஒரு பொறியியல் கல்லூரிக்கு ரூபாய் 70 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.21.70 கோடி இதற்காக ஒதுக்கப்படும்

100 உயர்தர கணினிகள், திறன்மிகு துணைக் கருவிகளுடன் அதிவேக இணைய இணைப்பு ஆகியவை ஒரு பொறியியல் கல்லூரிக்கு ரூ.50.00 இலட்சம் செலவில் மொத்தம் ரூ.15.50 கோடி மதிப்பில் வழங்கப்படும்.

கணினி மேசைகள், கணினி நாற்காலிகள், அலுவலக மேசை நாற்காலிகள், வேலைவாய்ப்பு முகாம்களுக்குத் தேவைப்படும் நேர்காணலுக்கான சிறப்பு ஏற்பாடுகளுக்கென ஒரு கல்லூரிக்கு ரூ.10.00 இலட்சம் செலவில், மொத்தம் ரூ.3.10 கோடி மதிப்பில் வழங்கப்படும்.

இதற்கான செலவினம் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT) *மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் கழகம்* (TANSI) *மூலம் வழங்கப்படும்.*

இதர உட்கட்டமைப்பு வசதிகள், நவீன துணைக்கருவிகள் மற்றும் சாதனங்கள் ஆகியவை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதிமூலம் பொறியியல் கல்லூரிகளில் தேவைக்கு ஏற்ப மொத்தமாக ரூ.3.10 கோடி செலவில் வழங்கப்படும்.

2) நான் முதல்வன் திட்டம் தொழிற்பயிற்சி நிலையங்கள், பாலிடெக்னிக் மற்றும் பிற தொழில்முறை படிப்புகளுக்கும் விரிவுபடுத்தப்படும். இதற்கென்று ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளுக்கு இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டு, ஒவ்வொரு பருவத் தேர்விலும் நான் முதல்வன் படிப்புகள் கட்டாயமாக்கப்படும்.

அனைத்து படிப்புகளும் திறன் அடிப்படையிலானதாகவும், மாணவர்களின் வேலைவாய்ப்பை உறுதி செய்யும் வகையிலும் வளர்ந்து வரும் தொழில்நுட்பப் பிரிவுகளில் (Emerging Technology) *வழங்கப்படும்.*

தகவல் தொடர்பு திறன்கள் மற்றும் டிஜிட்டல் திறன்கள் ஆகியவை நான் முதல்வன் பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக இருக்கும்.

இறுதியாண்டில் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற தேவையான திறன்கள் கற்பிக்கப்படும்.

இதற்கென்று ரூ.15.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

3) தமிழ்நாட்டில் மரபுசார் கலை மற்றும் கைவினைத் திறன்களை மேம்படுத்துவதற்கும், இளைஞர்களின் மரபுசார் கலை மற்றும் கைவினைத் திறன்களை ஊக்குவிப்பதற்காகவும், கைவினைத் திறன் பள்ளிகள் அறிமுகப்படுத்தப்படும். இதற்கென்று ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

அழிவின் விளிம்பில் உள்ள மரபுசார் கைவினை மற்றும் கலைத் திறன்களைக் கொண்ட கலைஞர்கள் கண்டறியப்பட்டு, கைவினைஞர்களாக அங்கீகரிக்கப்படுவர்.

இளைஞர்கள் அதிக அளவில் இத்தகைய கலைகளைக் கற்றுக்கொள்ள ஊக்குவிக்கப்படுவர். கைவினைக் கலைஞர்களுக்கென தனியே கைவினைத் திறன் பள்ளிகள் அறிமுகப்படுத்தப்படும்.

கைவினைஞர்களுக்கான திறன் பள்ளிகளைச் செயல்படுத்துவதற்காக ரூ.1.00 இலட்சம் நிதியும், பொருட்கள் வாங்குவதற்காக கூடுதலாக ரூ.1.00 இலட்சமும் வழங்கப்படும். தேவைக்கேற்ப இத்தொகை உயர்த்தித் தரப்படும்.

இதற்கென்று ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

4) விளையாட்டு அடிப்படையிலான கற்றல் தளம் (Gamified Platform) வழியாக அறிவாற்றல் திறன்களைக் கண்டறிந்து தனித்திறன் பெற்ற மாணவர்களை உருவாக்க பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் "நான் முதல்வன் ஒலிம்பியாட்" நடத்தப்படும். இதற்கென்று முதற்கட்டமாக ரூ.1.00 கோடி ஒதுக்கப்படும்

நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக, விளையாட்டு அடிப்படையிலான கற்றல் தளத்தில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவர்கள் மற்றும் கல்லூரி மாணவர்கள்

ஒலிம்பியாட் போட்டிகளில் பங்குபெற ஊக்குவிக்கப்படுவார்கள். நான் முதல்வன் தளத்தின்மூலம் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் வழங்கி, அவர்களின் தனித்திறன் மற்றும் விருப்பங்களுக்கு ஏற்ப திறன் அடிப்படையிலான பயிற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கு மாநிலம் முழுவதும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் 1000 மாணவர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

முதல் 50 மாணவர்களுக்கு தலா ரூ.2.00 இலட்சம் ரொக்கப் பரிசுடன் "தனித்திறன் சாதனையாளர்களாக" பாராட்டப்படுவார்கள். இதற்கென்று முதற்கட்டமாக ரூ.1.00 கோடி ஒதுக்கப்படும்.

5) மேம்படுத்தப்பட்ட அனைத்து அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் திறன் பயிற்சி மையங்களாக அங்கீகரிக்கப்படும்

மேம்படுத்தப்பட்ட 71 அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் திறன் பயிற்சி மையங்களாக அங்கீகரிக்கப்படும்.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு உரிய ஊதியம் அளித்து இடைநின்ற மாணவர்கள் மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கு திறன் பயிற்சி வழங்கப்படும்.

திறன்பெற்ற மனிதவளத்தைத் தொடர்ந்து வழங்குவதை உறுதி செய்வதற்காக, தொழில் துறையுடன் தேவையான ஒப்பந்தங்கள் செய்யப்படும்.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அருகாமையில் உள்ள கல்வி நிறுவனங்களின் உள்கட்டமைப்பைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு திறன் பயிற்சி அளிக்கப்படும்.

திறன் படிப்புகள் குறுகிய காலத்திறன் பயிற்சியின்கீழ் கட்டமைக்கப்படும். மத்திய அரசு நிர்ணயித்துள்ள பயிற்சிக் கட்டணத்தின் அடிப்படையில், அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தரம் உயர்த்துவதற்கான ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட்டு இடைநின்ற மாணவர்கள் மற்றும் வேலையில்லா இளைஞர்களுக்கு திறன் பயிற்சி வழங்கப்படும்.

6) மாநிலத்தில் உள்ள அனைத்து திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கும் சான்றளிக்கும் அமைப்பாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) செயல்படும்

தேசிய தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக் குழுமத்தால் (NCVET) சான்றிதழ் வழங்கும் அமைப்பாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் அங்கீகரிக்கப்பட்டவுடன், அனைத்து திறன் திட்டங்களின் மதிப்பீடு மற்றும் திறன் பயிற்சி மதிப்பீட்டின் தலைமை அமைப்பாகச் செயல்படும்.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மாநிலத்தில் உள்ள அரசு தொழில் பயிற்சி நிலையம், பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை அங்கீகாரம் செய்து, சான்றிதழ் வழங்கும் அமைப்பாகச் செயல்படும்.

முதன்மை பயிற்சியாளர்கள் மற்றும் மதிப்பீட்டாளர்களை அங்கீகரிக்க ஒரு பொதுவான தளம் வடிவமைக்கப்படும்.

தற்போது செலவழிக்கப்படும் மதிப்பீட்டுக் கட்டணத்திலிருந்து திறன் மதிப்பீட்டாளர்களுக்கு கௌரவ ஊதியம் வழங்கப்படும்.

முடிவுகள் நிகழ்நிலையில் பதிவேற்றம் செய்யப்பட்டு வெளியிடப்படும். நிகழ்நிலையில் சான்றிதழ்கள் உருவாக்கப்படும்.

7) அடுத்த கல்வியாண்டில் கல்லூரிகளில் நான் முதல்வன் படிப்புகளை நடத்த முதன்மை பயிற்சியாளர்களின் தொகுப்பு உருவாக்கப்படும்

கடந்த ஆண்டு பல்வேறு திறன் படிப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்ட ஆசிரியர்களின் திறன், மதிப்பீடு செய்யப்படும்.

இம்மதிப்பீட்டின் அடிப்படையில் முதன்மை பயிற்சியாளர்கள் அடையாளம் காணப்படுவர்.

இத்திட்டத்தின்கீழ் பயன்பெறும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கான திறன் படிப்புகளைக் கையாளும் முதன்மை பயிற்சியாளர்களை ஊக்குவிக்க கௌரவ ஊதியம் வழங்கப்படும்.

மாணவர்கள் சமர்ப்பிக்கும் திட்டங்களை (Projects) மதிப்பிடுவதற்கு முதன்மை மதிப்பீட்டாளர்கள் அடையாளம் காணப்படுவர்.

திறன் பயிற்சியின் தரத்தை தொடர்ச்சியாக மேம்படுத்த, விருப்பமுள்ள முதன்மை பயிற்சியாளர்களுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் அவர்கள் குடியரசு பத்திரிகை தொடங்கியபோது சொன்னார். "நான் ஒருவனே எழுதி, நான் ஒருவனே பிழை திருத்தி, நான் ஒருவனே அச்சடித்து, நான் ஒருவனே படிக்கக்கூடிய நிலைமை வந்தாலும், குடியரசு பத்திரிகை வெளிவந்தே தீரும்" என்று சொன்னார். அவரிடமிருந்து நாங்கள் விடாமுயற்சியைக் கற்றுக்கொள்கிறோம். பெரியாரும் அண்ணாவும் பிரிந்து விட்டார்கள். இனி திராவிடத்தை எளிதாக வீழ்த்தி விடலாம் என்று எதிரிகள் மகிழ்ச்சியில் திளைத்திருந்தபோது, பேரறிஞர் அண்ணா, தேர்தலில் வென்று முதலமைச்சர் ஆனதும், "வண்டியை திருச்சிக்கு விடு, தந்தை பெரியாரைச் சந்திக்க வேண்டும்" என்று, எதிரிகளையே அலற விட்டவர். (மேசையைத் தட்டும் ஒலி) அவரிடமிருந்து நாங்கள் வியூகத்தைக் கற்றுக்கொள்கிறோம். திருவாரூர் கமலாலயம் குளத்தில் பாதி தூரம் நீச்சலடித்துச் சென்றதும், திரும்பி விடலாம் வா என்று தமது நண்பர் தென்னன் சொன்னதும், "திரும்ப வேண்டாம் தென்னா, குளத்தின் மீதி தூரத்தைக் கடக்கவும் இதேயளவு முயற்சிதான் தேவை" என்று கூறி முன்னேறிச் சென்ற முத்தமிழறிஞர் கலைஞரிடம் இருந்து நாங்கள் மன உறுதியைக் கற்றுக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இவரால் முதலமைச்சராக முடியவே முடியாது என்றார்கள், கட்டம் சரியில்லை என்றார்கள். ஜாதகத்தில் அமைப்பில்லை என்றார்கள். கேலி கிண்டல் செய்து நகைத்தார்கள். ஆனால், தமது கடின உழைப்பால் மட்டுமே (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) தமது கடின உழைப்பால் மட்டுமே எல்லா ஆரூடங்களையும் தவிடு பொடியாக்கி இன்று திராவிட மாடல் அரசின் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ஒப்பற்ற பேரரசனாக, முதலமைச்சராக, வீற்றிருக்கும் நம்முடைய கழகத் தலைவர் அவர்களிடமிருந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடமிருந்து நாங்கள் உழைப்பைக் கற்றுக்கொள்ள முயற்சிக்கிறோம். அந்த உழைப்பும், ஒருங்கிணைப்பும், அரவணைப்பும் மட்டும்தான் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் எங்கள் அணி வெற்றிகரமான அணியாகத் திகழக் காரணம் என்பதை மீண்டும் ஒருமுறை அழுத்தந்திருத்தமாகக் கூறிக்கொள்கிறேன். கலைஞர் வழியில், இலக்கை நோக்கி ஓயாது உழைக்கும் சூரியனாய்த் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழியில், நாங்கள் அனைவரும் அயராது உழைப்போம்.

[திரு. உதயநிதி ஸ்டாலின்] [2023 ஏப்ரல் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த நான்கு மாதங்களில் பல்வேறு மாவட்டங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது, 1,317.46 கோடி ரூபாய் மதிப்பிலான 6 ஆயிரத்து 376 திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன். 410.52 கோடி ரூபாய் அளவில் நிறைவேற்றப்பட்டுள்ள 1,489 திட்டங்களைத் தொடங்கி வைத்துள்ளேன். ரூ.1,197.71 கோடி மதிப்பில் 2 இலட்சத்து 82 ஆயிரத்து 331 பயனாளிகளுக்கு என்னுடைய கைகளால் நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளேன்.

திராவிட மாடல் அரசின் திட்டங்களை தமிழ்நாட்டின் ஒவ்வொரு வீட்டிற்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்ற மாண்புமிகு முதலமைச்சருடைய எண்ணத்திற்கேற்ப இன்னும் நிறைய தூரம் பயணிக்க, மக்கள் நலப் பணிகளை அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து மேற்கொள்ளத் தயாராகவே இருக்கிறேன் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை நிறைவு செய்கிறேன்.

பிற்பகல் 4–00

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களைப் பொறுத்தவரை, பெரும்பாலானவை mini stadium, பஞ்சாயத்து விளையாட்டுத் திடல், gym, swimming pool, ஊக்கத் தொகையை உயர்த்தித் தர வேண்டும் என்பவையே ஆகும்.

மதுரை மற்றும் தென் மாவட்டங்களில் விளையாட்டு வசதிகளைப் பற்றி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. ராஜன் செல்லப்பா அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். இதுகுறித்து சில தகவல்களை இந்த அவையில் தெரிவிக்க விரும்புகின்றேன். மதுரையில் எம்.ஜி.ஆர். விளையாட்டு அரங்கில் 8 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சர்வதேசத் தரத்தில் synthetic athletic track அமைக்க கடந்த மாதம் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) பணிகள் தொடங்கும் தருவாயில் உள்ளன. மேலும், Olympic Academy மற்றும் Sports Science Centre மதுரையில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நான் சென்ற முறை மதுரை வந்தபோது நேரில் சென்று ஆய்வு செய்து வந்திருக்கிறேன். உங்களுக்கு அழைப்பு விடுத்திருந்தேன். ஆனால், நீங்கள் வரவில்லை. Olympic Academy மற்றும் Sports Science Centre அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 11] [திரு. உதயநிதி ஸ்டாலின்]

கடந்த ஆண்டு மட்டும் பராமரிப்புச் செலவிற்காக 1 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதுரைக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், தென் மாவட்டங்களில் விளையாட்டை ஊக்குவிக்க அனைத்து தென் மாவட்டங்களையும் உள்ளடக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுள்ளேன்.

2022–2023 ஆண்டிற்கான அறிவிப்புகளில் வட சென்னை பகுதியில், நவீன குத்துச்சண்டை விளையாட்டு வளாகம் அமைக்கப்படும் என சென்ற முறை அறிவித்திருந்தோம் என்று சொல்லியிருந்தீர்கள். வட சென்னை பகுதியில் Multi–disciplinary sports complex–விளையாட்டு வளாகம் அமைக்க 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. விரைவில் பணிகள் துவங்க உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் இங்கு பேசிய மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஐ.பி. செந்தில்குமார், திரு. ஈ. ராஜா, திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ், திரு. ஜெ.ஜெ. எபினேசர், திரு. எஸ்.பி. வெங்கடேஷ்வரன், திரு. பாபு, திரு. கா.சொ.க. கண்ணன், திரு. பெரி. செந்தில்நாதன் உள்ளிட்டோர் சில கோரிக்கைகளை வைத்திருந்தார்கள். திரு. செந்தில்நாதன் அவர்கள் சிவகங்கை மாவட்டத்திற்கு பல்வேறு விளையாட்டு வசதிகள் செய்து தர கோரிக்கை வைத்திருந்தார். ஏற்கெனவே சிவகங்கை மாவட்ட விளையாட்டு வளாகத்தில் கீழ்க்கண்ட விளையாட்டு வசதிகள் பயன்பாட்டில் உள்ளன:

400 metre athletic track;

கால்பந்து ஆடுகளம்–1;

கையுந்துபந்து volleyball ஆடுகளம்–2;

வளைகோல்பந்து ஆடுகளம்–1;

கூடைப்பந்து ஆடுகளம்–1;

கோ கோ ஆடுகளம்–1;

கபாடி ஆடுகளம்–2;

நீச்சல் குளம்;

சிறுவர்களுக்கென்று தனியாக நீச்சல்குளம்–1;

இறகுப்பந்து உள்ளரங்கம் (shuttlecock indoor court);

காஞ்சிரங்கால் இறகுப்பந்து உள்ளரங்கம்; கைப்பந்து; உடற்பயிற்சிக் கூடம் எல்லாவற்றிற்கும் மேலாக அங்கு ஒரு SDAT hostel-லே இருக்கிறது.

நம்முடைய எதிர்க்கட்சிக் கொறடா, அண்ணன் திரு. வேலுமணி அவர்கள் சென்னை சேப்பாக்கம் ஸ்டேடியத்தில் நடக்கின்ற IPL match-க்கு ticket வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டிருந்தார். நான்கு வருட காலமாக இங்கு match நடக்கவில்லை. யாருக்கு ticket வாங்கிக் கொடுத்தீர்கள், எப்போது வாங்கிக் கொடுத்தீர்கள் என்று தெரியவில்லை. (சிரிப்பு) நான்கு வருட காலமாக சென்னையில் match நடக்காமல், நான்கு வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் match நடக்கிறது. நான் என்னுடைய சொந்த செலவில், ஒவ்வொரு match-க்கும் என்னுடைய தொகுதியிலிருந்து 150 cricket விளையாட்டு வீரர்களுக்கு ticket வாங்கி, cricket match பார்க்க அழைத்து செல்கிறேன். இந்த IPL-ஐ யார் நடத்துகிறார்கள் என்றால், BCCI, அது யார் என்றால், உங்களுடைய நெருங்கிய நண்பர் திரு. அமித் ஷா அவர்களுடைய மகன் திரு. ஜெய் ஷா தான் அதற்கு head. (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் சொன்னால் அவர் கேட்க மாட்டார். நீங்கள் சொன்னால் கேட்பார். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அவரிடம் சொல்லி, அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், ஒரு ஐந்து ticket கொடுத்தால்கூட போதும். நாங்கள் பணம் கொடுத்துக்கூட வாங்கிக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இல்லையென்றால், வேறு ஏதாவது கணக்கில் சேர்த்துவிடுவீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

வெட்டுத் தீர்மானங்கள் பெரும்பாலானவற்றிற்கு பதில்கள் நான் வெளியிட்டுள்ள அறிவிப்புகளில் இடம்பெற்றுள்ளன என நம்புகிறேன். அவற்றில் இல்லாத சில வெட்டுத் தீர்மானங்களை குறித்து வைத்துள்ளேன், அவை அனைத்தும் படிப்படியாக நிறைவேற்றித் தரப்படும். எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகக் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். நான் பிறந்தது, வளர்ந்தது எல்லாம் கோபாலபுரம். கலைஞருடைய இல்லம். அதன் பிறகு எனது

தந்தையார் மேயரான பிறகு, வேளச்சேரிக்குச் சென்று விட்டோம். கோபாலபுரத்தில் இருக்கும்போது, சின்ன வயதிலிருந்து, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடன் சேர்ந்து சாலையில், கலைஞர் வீட்டு முன்பு கிரிக்கெட் விளையாடுவோம். கலைஞருடன் நான் cricket விளையாடி இருக்கிறேன். வருவார், ball போட்டு, போய்விடுவார், batting ஆடிவிட்டுப் போய்விடுவார். கலைஞருடன் மட்டுமல்ல, இப்போது நம்முடைய முதலமைச்சர் அவர்களுடனும் நான் cricket விளையாடி இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப் போனால், அவர் மிகப் பெரிய leg spin bowler. அவர் bowling செய்தால் ஆடவே முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு எப்படி sixer அடிக்கிறாரோ bowling-லும் அவர் அப்படியேதான். அவரோடும் விளையாடியிருக்கிறேன்.

எனக்கு இந்த விளையாட்டுத் துறை, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை, மகளிர் சுய உதவிக் குழு இவற்றையெல்லாம் கொடுத்து, விளையாட்டுத் துறை அமைச்சராக இந்த நேரத்தில் எனக்கு பதிலளிக்க வாய்ப்பு அளித்த உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4–05

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அதுல்யா மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்களுக்கும், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் திரு. த. உதயசந்திரன், இ.ஆ.ப., அவர்களுக்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தினுடைய மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்களுக்கும், விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர்-செயலர் திரு. மேகநாத ரெட்டி, இ.ஆ.ப., அவர்களுக்கும், துறை சார்ந்த அனைத்து அலுவலர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உதவியாளர் திரு. தினேஷ் அவர்களுக்கும், என்னுடைய உதவியாளர்கள் திரு. செந்தில், திரு. மணிராஜ், திரு. மணிகண்டன் உள்ளிட்ட அத்தனை பேருக்கும் மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து உழைப்பு, ஒருங்கிணைப்பு, அரவணைப்பு ஆகியவற்றைப் பெற்ற நம்முடைய மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மாற்றானையும் மனம் கோணாமல் கண்ணியத்தோடு நடத்துகின்ற பண்பை இந்த அவை தெரிந்துகொண்டுவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு பண்போடு நடந்தாலும், கேட்ட கேள்விக்கு சரியான பதிலை கலைஞர் அவர்களைப்போல் அண்ணன் எதிர்க்கட்சிக் கொறடா அவர்களுக்குச் சொன்னதையும் இந்த அவை மறவாது. (சிரிப்பு) விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.*

(அ) கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய 49 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.403,11,09,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

2023 ஏப்ரல் 11]

(ஆ) கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய 53 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.7,259,16,21,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.25,00,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை). வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.*

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

[பேரவைத் தலைவர்] [2023 ஏப்ரல் 11

"கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,151,44,05,000/–, மூலதனக் கணக்கில் ரூ.1,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.5,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12–4–2023), புதன்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4–08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

172. மானியக் கோரிக்கை எண் 49–இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

173. மானியக் கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

2023 ஏப்ரல் 11]

174. மானியக் கோரிக்கை எண் 17–கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2023–2024. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

175. கைத்தறி பற்றிய செயல்முறைத் திட்டம், 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

176. துணிநூல் பற்றிய செயல்முறைத் திட்டம், 2022–2023. (தமிழ் மற்றும் ஆங்கிலம்)

177. தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் 'காலப்பேழை' என்கிற சிறுநூல். (தமிழ்)

178. நீதி நிருவாகம், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) மற்றும் சட்டத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

179. செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) மற்றும் எழுதுபொருள் மற்றும் அச்சு (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்கான பதிலுரையின்போது மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2023–2024. (தமிழ்)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு I

(*134 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.*)

மானியக் கோரிக்கை எண் 49-இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

"ஊழ் என்பது வெல்ல முடியாத ஒன்று என்பார்கள்
சோர்வில்லாமல் முயற்சி மேற்கொள்பவர்கள் அந்த
ஊழையும் தோல்வி அடையச் செய்வார்கள்"

நமது இளைஞர்களும், விளையாட்டு வீரர்களும் அச்சமின்றி, ஊழ் வினையைக் கூட வெல்லும் வகையில் வியக்க வைக்கும் முயற்சிகளுடன் கடுமையாக உழைப்பவர்கள்.

மக்கள் தொகையில் கணிசமான விகிதத்தை உள்ளடக்கிய இளைஞர்களைக் கொண்ட வளரும் நாடாக இந்தியா கருதப்படுகிறது. அவர்களின் அபரிமிதமான ஆற்றலை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் சிறந்த பாதைக்கு வழி நடத்துவது அவசியம். தமிழ்நாடு அரசு இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, படித்த மற்றும் திறமையான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் சமுதாயத்தில் ஆரோக்கியமான குடிமக்களாக மாறுவதற்கு ஏராளமான வாய்ப்புகளை உருவாக்கிட உறுதி பூண்டுள்ளது.

விளையாட்டு ஒருவரின் தனிப்பட்ட திறமையையும் சமூக நலனையும் அடைவதற்கான ஒரு சாத்தியக்கூறாக நிரூபிக்கப்பட்டுள்ளது. விளையாட்டுத்திறன் அனைத்து வயதினரையும் கடந்து, இளைஞர்களுக்கும் விளையாட்டுக்கும் இடையிலான பிரிக்க முடியாத இணைப்பாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இளைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு உரிய காலத்தே வழிகாட்டுதல் அவர்களின் ஆற்றலை நல்வழிப்படுத்தி ஆரோக்கியமான மற்றும் ஆக்கபூர்வமான சமுதாயத்தை உருவாக்குவதற்கு வழிகாட்டுதலாக அமையும்.

[2023 ஏப்ரல் 11

தமிழ்நாடு அரசு நமது இளைஞர்களின் முழுமையான நலனுக்காகவும், விளையாட்டுகளின் விரிவான வளர்ச்சிக்காகவும், தனிநபர் அளவிலும், சமூக அளவிலும் எண்ணிலடங்கா பலன்களுக்கு முன்னுரிமை அளித்து வருகிறது. இந்தத் தொலைநோக்கு சிந்தனையுடன்தான் 2000-2001 நிதிநிலை அறிக்கை கூட்டத்தொடரின்போது, நமது இளைஞர்கள் மற்றும் விளையாட்டு வீரர்களின் துடிப்பான ஆற்றல்களை அவர்களின் வாழ்க்கையின் அந்தந்தத் துறைகளில் சிறந்து விளங்கச் செய்வதற்காக அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், இளைஞர்கள் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையை உருவாக்கினார்.

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையானது கீழ்க்காணும் அமைப்புகள்மூலம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:

- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்
- இளைஞர் நல இயக்குநரகம்
- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்
- தேசிய மாணவர் படை
- நாட்டு நலப் பணித் திட்டம்
- நேரு யுவ கேந்திர சங்கதன்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், விளையாட்டு மேம்பாடு, விளையாட்டு வீரர்களின் நலன் மற்றும் விளையாட்டு தொடர்பான அரசின் பல்வேறு கொள்கைகள் மற்றும் திட்டங்களைச் செயல்படுத்தும் மாநிலத்தின் முதன்மையான அமைப்பாகும்.

இளைஞர் நல இயக்குநரகம்

இளைஞர்களின் திறமையினை அடையாளம் கண்டு அவர்களின் எல்லையில்லா ஆற்றலை ஒருமுகப்படுத்தி ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுத்திட இளைஞர் நல இயக்குநரகம் 2013 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது

2023 ஏப்ரல் 11]

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், இளைஞர் நல இயக்குநரகமாகச் செயல்படுவதோடு அதன் உறுப்பினர் செயலர், இத்துறையின் இயக்குநராகச் செயல்படுகிறார்.

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகமானது 2004 ஆம் ஆண்டு செங்கல்பட்டு மாவட்டம் மேலக்கோட்டையூர் கிராமத்தில் 125 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டுள்ளது. இந்தியாவில் உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுக்கென தனித்துவமாகத் துவங்கப்பட்ட இப்பல்கலைக்கழகம் உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டினை முன்னேற்றும் வகையில் செயல்படும் முதன்மையான பல்கலைக்கழகமாகும்.

தேசிய மாணவர் படை

இந்தியாவில் தேசிய மாணவர் படையானது 1948 ஆம் ஆண்டின் தேசிய மாணவர் படை சட்டத்தின்கீழ் ஜூலை 15, 1948 இல் தொடங்கப்பட்டது. நாட்டின் இளைஞர்களிடையே பண்பு, தேசபக்தி, ஒற்றுமை மற்றும் தன்னலமற்ற சேவைகளின் மதிப்புகளை வளர்ப்பதில் தேசிய மாணவர் படை முக்கிய பங்கு வகிக்கிறது. பாதுகாப்புப் பயிற்சி அளிப்பதன்மூலம் இளைஞர்களை இந்தியாவின் ஒழுக்கமான மற்றும் பொறுப்புள்ள குடிமக்களாக வடிவமைக்க தேசிய மாணவர் படை உதவுகிறது. தமிழகத்தில் தற்போது 1,05,930 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் உள்ளனர்.

நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டு நலப்பணித் திட்டம் என்பது கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் எல்லையற்ற ஆற்றலை ஆக்கபூர்வமான மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கான முக்கிய தளங்களில் ஒன்றாகும். சமூகத்தினை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் மாணவர்களின் தீவிர ஈடுபாடு, பொறுப்புணர்ச்சி, சகோதரத்துவம், ஒழுக்கம், தன்னம்பிக்கை மற்றும் ஒற்றுமை ஆகியவற்றை வளர்க்க உதவுகிறது, அதே நேரத்தில் தீங்கு விளைவிக்கும் அல்லது எதிர்மறையான செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்கிறது. தற்போது, தமிழ்நாட்டில் 4,06,700 நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள் உள்ளனர்.

TRUTH ALONE TRIUMPHS

[*2023 ஏப்ரல் 11*

நேரு யுவ கேந்திர சங்கதன்

1972 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட நேரு யுவ கேந்திர சங்கதன் என்ற அமைப்பு இளைஞர்களுக்கு தேசத்தைக் கட்டமைக்கும் செயல்பாட்டில் பங்கேற்பதற்கான வழிகளை வழங்குவதுடன் அவர்களின் ஆளுமை மற்றும் திறன்களை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது. தமிழ்நாட்டில் 30 மாவட்டங்களில் நேரு யுவ கேந்திர சங்கதன் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. மாநிலம் முழுவதும் 15-29 வயதுக்குட்பட்ட கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களைச் சேர்ந்த 2.90 இலட்சம் இளைஞர்கள் 14,664 இளைஞர் குழுக்களில் இணைந்துள்ளனர்.

நிதி ஆதாரம்

தமிழ்நாடு அரசு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் ஆகிய இரண்டிற்கும் முன்னுரிமை அளித்து வருகிறது. தமிழக இளைஞர்களின் நலன் மற்றும் விளையாட்டு வளர்ச்சிக்காகவும், அவர்களின் நலனுக்காகவும் தமிழ்நாடு அரசு பல முன்னோடி திட்டங்களைத் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்துறையின் நிதி ஒதுக்கீடு படிப்படியாக அதிகரித்து 2022-2023 ஆம் நிதியாண்டில், ரூ.392.51 கோடியை எட்டியுள்ளது.

இளைஞர்களின் திறனைப் பயன்படுத்தி, சமூகத்தின் மக்கள்தொகை சார்ந்த பகிர்ந்தளிப்புடன்கூடிய வளமான திறமைகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு அரசாங்கத்தின் முக்கிய துறையாக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை உருவெடுத்துள்ளது.

படலம் — 1

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்

விளையாட்டானது தமிழ் சமூகத்தின் பரிணாமம் மற்றும் வளர்ச்சியின் ஒரு பகுதியாக உள்ளது. விளையாட்டுத் திறமையை வளர்த்திடும் நோக்கத்தை பல நூற்றாண்டுகளாகத் தொடருகின்ற வரலாறு நம்முடையதாகும். அரசு சமூகத்தின் கூட்டுப் பலத்தைப் பயன்படுத்துவதற்கும், தனிமனித சிறப்பை அடைவதற்கும் விளையாட்டு ஒரு தளமாக நன்கு அரசால் அங்கீகரிக்கப்பட்டு பாராட்டப்படுகிறது.

2023 ஏப்ரல் 11]

தமிழகத்தில் இளைஞர்களை மேம்படுத்துவதில் விளையாட்டு என்பது திறன் மேம்பாடு, கல்வி, சுகாதாரம் மற்றும் உடற்தகுதி, தலைமைத்துவம் மற்றும் பொருளாதார மேம்பாடு ஆகியவற்றுக்கான வாய்ப்புகளை வழங்குவதில் முக்கிய பங்காற்றுகிறது. மாநில அரசு பல ஆண்டுகளாக விளையாட்டை ஊக்குவிக்கவும், இளைஞர்கள் விளையாட்டில் பங்கேற்க ஏற்ற சூழலை ஏற்படுத்தவும் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. இளைஞர்களின் வளர்ச்சிக்கு விளையாட்டு முக்கிய காரணியாகவும் உடல், சமூக, உணர்வு, அறிவாற்றல் மற்றும் கலாச்சார வளர்ச்சிக்கும் உதவுகிறது. இளைஞர்களின் முழுமையான வளர்ச்சியை மேம்படுத்திட, பள்ளிகள் மற்றும் சமூகங்கள்மூலம் பல்வேறு திட்டங்களில் முதலீடு செய்து அரசு அவர்களுக்கு உதவுகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் பின்வரும் ஒலிம்பிக் மற்றும் ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுகளை ஊக்குவித்து, அவற்றை மேம்படுத்திட முதன்மையாகச் செயல்பட்டு வருகிறது.

ஒலிம்பிக் மற்றும் இதர விளையாட்டுகள்

ஒலிம்பிக் விளையாட்டுகள்

- வில்வித்தை
- தடகளம்
- பூப்பந்து
- கூடைப்பந்து
- கடற்கரை கையுந்துபந்து
- குத்துச்சண்டை
- வாள்சண்டை
- கால்பந்து
- ஜிம்னாஸ்டிக்ஸ்
- கைப்பந்து
- வளைகோல்பந்து
- ஜூடோ
- கராத்தே
- மிதிவண்டி ஓட்டுதல்
- படகோட்டுதல்
- துப்பாக்கிச் சுடுதல்
- அலைச் சறுக்குதல்
- நீச்சல்
- டேபிள் டென்னிஸ்
- டேக்வாண்டோ
- டென்னிஸ்
- ட்ரையத்லான்
- கையுந்துபந்து
- பளுதூக்குதல்
- மல்யுத்தம்

இதர விளையாட்டுகள்

- பிரிட்ஜ்
- சதுரங்கம்
- மட்டைபந்து
- கபாடி
- கோ - கோ
- மல்லர்கம்பம்
- சிலம்பம்
- சாஃப்ட் டென்னிஸ்
- ஸ்குவாஷ்
- சறுக்கு விளையாட்டு
- எறிபந்து
- ஊசு
- களரியபயட்டு

[2023 ஏப்ரல் 11

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் நமது இளைஞர்களின் ஆர்வத்தையும் ஆற்றலையும் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் நோக்குடன் நிறுவப்பட்டது. விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் சார்ந்த செயல்பாடுகள் தொடர்பான கொள்கை முடிவுகளைச் செயல்படுத்தும் இந்த உயர்மட்ட அமைப்பு, முன்னர் இயங்கி வந்த விளையாட்டு மற்றும் இளைஞர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு மாநில விளையாட்டு வளர்ச்சி கழகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஆணையத்தாலும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்ட செயலாண்மை குழுவினாலும் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

1.1 விளையாட்டில் உன்னத நிலையை அடைவதற்கான வழிமுறைகள்

விளையாட்டு நடவடிக்கைகளின் வரம்பை விரிவுபடுத்துவதற்கான ஒரு பயனுள்ள அணுகுமுறையானது. பரந்த சமூகத்திற்கு விளையாட்டுகளைக் கொண்டுவருவதை உள்ளடக்கிய ஒரு நீண்ட கால செயல்பாட்டினை பின்பற்றுவதாகும். இந்த அணுகுமுறையின் அடிப்படையில் அரசின் வளங்களைப் பயன்படுத்தி விளையாட்டின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளித்து புதுமையான வழிமுறைகளை மேற்கொள்ள உதவுகிறது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மாவட்ட மற்றும் மாநில அளவிலான போட்டிகளையும் மேலும் ஒலிம்பிக் மற்றும் ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுகளில் தேசிய மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளையும் நடத்தி வருகிறது.

நிலை — 1 — பெருந்திரள் மற்றும் சமூக பங்கேற்பு

சமூக பங்கேற்பு மற்றும் பரந்த அடிப்படையிலான அணுகுமுறை, விளையாட்டு வளர்ச்சியின் தொடர்ச்சியான அடித்தளமாக நிலை-1 உள்ளது. இந்த நிலை திறமையானவர்களை அடையாளம் கண்டு, அடிப்படை திறன் மேம்பாட்டை எளிதாக்குவதற்குத் தேவையான விளையாட்டு உட்கட்டமைப்பை

2023 ஏப்ரல் 11]

உருவாக்குவதற்கும், பரவலான பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில் போட்டிகளை நடத்துவதற்கும் முன்னுரிமை அளிக்கிறது. இந்த நிலையில் பயிற்சிக்கு நிபுணர்கள் தேவையில்லை, ஏனெனில், இது சமூக ஈடுபாடு, விளையாட்டு நடவடிக்கைகளில் ஆர்வத்தை உருவாக்குதல் மற்றும் திறமையை அடையாளம் காண்பதில் ஒரு உடற்கல்வி ஆசிரியருக்கு பயிற்சி அளிப்பதை சாத்தியமாக்குகிறது. உள்ளூர் பகுதியில் திறமையானவர்களை அடையாளம் காண்பதை ஊக்குவிப்பதற்கு விளையாட்டில் ஆர்வமும் சமூகப் பங்கேற்பும் மிக்க நன்கொடையாளர்கள் நிலை-1-ஐ ஆதரிப்பார்கள்.

நிலை — 2 — மாவட்ட அளவில்

நிலை-1 இல் பெருந்திரள் மற்றும் சமூகப் பங்கேற்பில் ஆரம்பக்கட்ட கவனம் செலுத்திய பிறகு இரண்டாம் நிலை மாவட்ட அளவில் விளையாட்டில் திறனாளர்களைக் கண்டறிந்து மேம்படுத்துகிறது. இந்த நிலையில் மாவட்ட விளையாட்டு வளாகங்களில் உள்ள விளையாட்டு அரங்கங்களின் வசதிகளும், தகுதி வாய்ந்த பயிற்சியாளர்களின் பயிற்சியும் முக்கியப் பங்கு வகிக்கிறது. விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளவும், முழு திறனை அடையவும் நல்ல விளையாட்டு உள்கட்டமைப்பு மற்றும் பயிற்சி கிடைப்பது அவசியம்.

முதலமைச்சர் கோப்பை போட்டிகள் மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளில் பங்கேற்பு மற்றும் திறமைகளை அடையாளம் காண ஒரு முக்கிய தளமாக செயல்படுகின்றன. முதலமைச்சர் கோப்பை என்பது ஒவ்வொரு மாவட்டத்திலும் நடத்தப்படும் வருடாந்திர நிகழ்வு மற்றும் உள்ளூர் விளையாட்டு வீரர்களால் மிகவும் எதிர்பார்க்கப்படும் போட்டியாகும். விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், தங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மற்ற திறமையான நபர்களுடன் போட்டியிடவும் இந்தப் போட்டிகள் வாய்ப்பளிக்கிறது. வெற்றிபெறும் விளையாட்டு வீரர்/வீராங்கனைகள் கண்டறியப்பட்டு, மாநில மற்றும் தேசிய அளவிலான உயர் மட்ட போட்டிகளுக்கு பங்கேற்க தயார்படுத்தப்படுகிறார்கள்.

மாவட்ட அளவில் விளையாட்டுத் திறமையை மேம்படுத்துவதன்மூலம், தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் தங்கள் மாநிலத்தையும் நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய திறமையான விளையாட்டு

[2023 ஏப்ரல் 11

வீரர்களின் வலுவான அணியினை உருவாக்குவதற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஒரு துவக்கத்தினை எடுத்து வருகிறது.

நிலை 3 – மாநில அளவில்

மாநில அளவில் திறமையான விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து அவர்களை மேம்படுத்துவது நிலை-3 ஆகும். தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளுக்கான விளையாட்டு வீரர்களைச் சீர்படுத்துவதில் இந்த நிலை முக்கியமானது. திறன் மிக்கவர்களாக கண்டறியப்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு விடுதிகள் மற்றும் சிறப்புப் பயிற்சி மையங்கள் போன்ற திறன் மேம்பாட்டுத் திட்டங்கள்மூலம் அவர்களின் செயல்திறனை மேம்படுத்தவும் வாய்ப்பு வழங்கிவருவதோடு, அவர்களுக்கு குறிப்பிட்ட விளையாட்டுக்களில் பயிற்சி வழங்கிட தனித்துவமான வல்லுநர் கொண்டு சிறந்த பயிற்சி சார்ந்த நுணுக்கங்களை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாநில அளவில், விளையாட்டுப் பங்கேற்பிலும், திறமைகளை அடையாளம் காண்பதிலும் முதலமைச்சர் கோப்பை தொடர்ந்து முக்கியப் பங்காற்றி வருகிறது. விளையாட்டு வீரர்கள் தங்கள் திறன்களை வெளிப்படுத்தவும், மாநிலத்தைச் சேர்ந்த மற்ற திறமையான நபர்களுடன் போட்டியிடவும் இந்த நிலை ஒரு தளத்தை வழங்குகிறது. இந்தப் போட்டியில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச நிகழ்வுகள் போன்ற உயர்மட்ட அளவில் போட்டியிடும் திறன் கொண்டவர்களாக அடையாளம் காணப்படுகிறார்கள்.

ஒட்டுமொத்தமாக, நிலை-3 என்பது விளையாட்டு வளர்ச்சியின் தொடர்ச்சியில் ஒரு முக்கியமான கட்டமாகும், ஏனெனில் இது விளையாட்டில் மிக உயர்ந்த நிலைகளில் போட்டியிடும் திறன் கொண்ட திறமையான விளையாட்டு வீரர்களை அடையாளம் காணவும், சீர்படுத்தவும் உதவுகிறது. சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் மற்றும் அந்தந்த விளையாட்டுகளில் உள்ள வல்லுநர்கள்மூலம் பயிற்சி வழங்கப்படுவதன்மூலம் திறமையான விளையாட்டு வீரர்கள் தங்கள் முழு திறனை வெளிப்படுத்தவும், தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டு போட்டிகளில் மாநிலம் மற்றும் நாட்டினை பிரதிநிதித்துவப்படுத்தவும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஒரு பாதையை உருவாக்குகிறது.

2023 ஏப்ரல் 11]

நிலை 4 — தேசிய அளவில்

விளையாட்டு வளர்ச்சியின் தொடர்ச்சி நிலை-4 இல், தேசிய அளவில் வெற்றி பெறுவதில் முதன்மை கவனம் செலுத்தப்படுகிறது. சர்வதேச அளவில் அவர்களை முன்னேற்றுவதற்கு வசதியாக வடிவமைக்கப்பட்ட உயர் மற்றும் அதி தீவிர பயிற்சித் திட்டங்கள்மூலம் தேசிய அளவிலான சாதனையாளர்களின் திறன்களை வலுப்படுத்துவதே இதன் நோக்கமாகும். எனவே, உயர்தர விளையாட்டு உட்கட்டமைப்புமூலம் திறமையான வீரர்கள் உருவாக்கப்படுகிறார்கள்.

இளம் திறமையாளர்களை ஊக்குவிக்க, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தேசிய அளவிலான போட்டிகளை மாநிலத்திற்குள் நடத்திவருகிறது. இது விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், நாட்டின் சிறந்த வீரர்களுக்கு எதிராக போட்டியிடவும் ஒரு வழியினை உருவாக்குகிறது. பயிற்சி மற்றும் விளையாட்டு அறிவியலில் நிபுணத்துவம் கண்டறியப்பட்டு விளையாட்டு வீரர்களுக்கு சிறந்த பயிற்சியை வழங்க பயன்படுத்தப்படுகிறது.

தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்பதன்மூலம் உள்ளூர் விளையாட்டு வீரர்களுக்கு சர்வதேச அளவிலான போட்டியில் பங்கேற்க வாய்ப்பு கிடைக்கும். கேலோ இந்தியா குழுப் போட்டிகள், பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான மாநில அளவிலான போட்டிகள், தேசிய வாகையர் போட்டிகள் மற்றும் தேசிய அளவின குழுப்போட்டிகள் போன்றவை சில முக்கிய போட்டிகளாகும்.

விளையாட்டு வளர்ச்சியின் நிலை-4-ன் முக்கியமான கட்டமானது விளையாட்டு வீரர்களுக்கு தேசிய அளவிலான போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பை வழங்கி, சர்வதேசப் போட்டிகளில் திறமையினை வெளிப்படுத்துதல் ஆகும். விளையாட்டு உட்கட்டமைப்பை மேம்படுத்துவதன்மூலம் பயிற்சி மற்றும் விளையாட்டு அறிவியல் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி திறமையான விளையாட்டு வீரர்கள் தங்கள் கனவுகளை அடைய ஒரு பாதையை உருவாக்குவதில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் முக்கிய பங்கு வகிக்கிறது.

[2023 ஏப்ரல் 11

நிலை – 5 – பன்னாட்டு அளவில்

இந்நிலை விளையாட்டு வளர்ச்சி தொடர்ச்சியின் மிக உயர் நிலையை குறிக்கும். மேலும் சர்வதேச அளவில் வெற்றியை அடைவதைநோக்கமாகக்கொண்டுள்ளது.இந்நிலையில்பன்னாட்டு தரத்திலான விளையாட்டு கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், பயிற்சி மற்றும் விளையாட்டு போட்டிகளில் கலந்துகொள்வதற்கு நிதியுதவி அளித்தல் மற்றும் மாநிலத்தில் பன்னாட்டு அளவிலான போட்டிகளை நடத்துதல் ஆகியன ஊக்குவிக்கப்பட வேண்டிய முக்கிய பகுதிகளாகும். உயர்மட்ட அளவிலான செயல்பாட்டினை பெறுவதற்கு முன்னணி விளையாட்டு நிறுவனங்கள் மற்றும் பயிற்சியாளர்களின் சேவைகள் பயன்படுத்தப்படும். மாநில, மாவட்ட மற்றும் சமூக அளவிலான கீழ்நிலை விளையாட்டு நடவடிக்கைகள் முற்போக்கான பாதையில் இருப்பதை திறமையான அமைப்பு, பயிற்சி திட்டங்கள் மற்றும் போட்டிகளை மேற்பார்வை செய்வதன் மூலம் உறுதி செய்யப்படுகிறது. இந்த அடித்தளம் தான் உயர்தரப்பட்ட கட்டுமான வசதிகளின் நிலையினை முடிவு செய்கிறது.

1.2 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நிர்வாக அமைப்பு

அரசாணை (நிலை) எண் 641, பள்ளி கல்வி(ஒய்)த் துறை, நாள். 18-7-1992-ன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உருவாக்கப்பட்டது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் செயலாண்மை குழு, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் செயல்படுகிறது. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின்கீழ் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் தற்போது இயங்கி வருகிறது.


தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் இளைஞர் நல இயக்குநராகவும் செயல்பட்டு வருகிறார். இவ்வாணையத்தில் விளையாட்டு பிரிவு, விளையாட்டு உட்கட்டமைப்பு பிரிவு, மனித வள மேலாண்மை பிரிவு, சட்டம், வணிகம் மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு, மக்கள் தொடர்பு பிரிவு, நிதி மற்றும் கணக்கு பிரிவு மற்றும் இளைஞர் நல இயக்குநரகம் ஆகியவை முக்கிய பிரிவுகளாகச் செயல்பட்டு

2023 ஏப்ரல் 11]

வருகின்றன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 615 ஆகும். 38 மாவட்ட விளையாட்டுப் பிரிவுகள், 27 விளையாட்டு விடுதிகள், 4 சிறப்பு விளையாட்டு விடுதிகள் மற்றும் 6 முதன்மை விளையட்டு மையங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் இயங்குகின்றன.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் நிர்வாக அமைப்பு

1.3 பயிற்றுநர்கள் பணியமர்த்துதல்



[2023 ஏப்ரல் 11

2023 மார்ச் மாதம் எழுத்துத் தேர்வு மற்றும் தொடர்புடைய விளையாட்டு செயல்திறன் மதிப்பீடு செய்யப்பட்டு 76 பயிற்றுநர் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. இதனால், விளையாட்டுத் துறையினரின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியுள்ளது. விளையாட்டு வீரர்களுக்கு அறிவியல்பூர்வமாக பயிற்சி அளிப்பதாலும் ஊக்குவிப்பதாலும் நமது விளையாட்டு வீரர்கள் மாநிலம் மற்றும் நாட்டிற்குப் பெருமையைப் பெற்று தருவார்கள்.

1.4 ஆடுகளம் தகவல் மையம் (அழைப்பு மையம்)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 12-9-2022 அன்று, ஆடுகளம் தகவல் மையம் (அழைப்பு மைய தொடர்பு எண் +919514000777) தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய தலைமை அலுவலகத்தில் திறந்து வைக்கப்பட்டது மற்றும் பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக திறம்பட செயல்பட்டு வருகிறது.

1.5 மின் ஆளுமை முயற்சிகள்

விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் பல்வேறு மின் ஆளுமை முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

1. தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பைக்கான இணையவழி விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான முகப்பு உருவாக்கப்பட்டு துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் நேரடியாகச் செல்வதைத் தவிர்த்து இணையதளம்மூலம் விண்ணப்பித்திடும் வசதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. போட்டி நடைபெறும் இடம் மற்றும் தேதியை விளையாட்டு வீரர்கள் குறுஞ்செய்தி வாயிலாக அறிந்துகொள்ளும் வசதிகளும் நீட்டிக்கப்பட்டுள்ளன.

2. விளையாட்டு வீரர்களின் பயன்பாட்டிற்கான பின்வரும் இணையவழி விண்ணப்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன:-

அ. தமிழ்நாடு முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது

ஆ. விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியத் திட்டங்கள்

2023 ஏப்ரல் 11]

இ. விளையாட்டு விடுதி சேர்க்கை

ஈ. ELITE / MIMS / CDS திட்டங்கள்

3. விரைவில் துவங்கவுள்ள இணையவழி விண்ணப்பங்களின் விவரங்கள் பின்வருமாறு:-

அ. இணையவழி விளையாட்டரங்க முன்பதிவு

ஆ. இணையவழி உறுப்பினர் முன்பதிவு

இ. இணையவழி வணிக வளாக மேலாண்மை அமைப்பு

ஈ. இணையவழி பயிற்றுநர்களின் தரவுகள் மேலாண்மை அமைப்பு

உ. இணையவழி விளையாட்டு விடுதி மேலாண்மை அமைப்பு

ஊ. உயரிய ஊக்கத்தொகை பெறுவதற்கான இணையவழி விண்ணப்பம்

பல்வேறு முன்முயற்சிகள் மற்றும் பல திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதன்மூலம் விளையாட்டு நிர்வாகத்தின் முதன்மையான அமைப்பாக தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் உருவெடுத்துள்ளது.

படலம் — 2

விளையாட்டு உட்கட்டமைப்பு

விளையாட்டில் சிறந்து விளங்குவதற்கு விளையாட்டு உட்கட்டமைப்பு அடித்தளமாக அமைகிறது. நவீன விளையாட்டு உட்கட்டமைப்பு மற்றும் அதிநவீன விளையாட்டு வசதிகள் விளையாட்டு வீரர்களின் முழு திறனை வெளிக்கொணர உதவுகிறது. இவ்வசதிகள் பல்வேறு நிலைகளில் போட்டிகளை நடத்துவதற்கான வாய்ப்புகளை வழங்குகின்றன.

விளையாட்டு உட்கட்டமைப்பை உருவாக்குதல் மற்றும் பராமரித்தலில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது. சென்னை மற்றும் மாநிலம் முழுவதும் நிறுவப்பட்டுள்ள உட்கட்டமைப்பு வசதிகள் இதற்குச் சான்றாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ள பல்வேறு விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் விவரம் பின்வருமாறு:

[2023 ஏப்ரல் 11

2.1 சர்வதேச தரத்திலான வசதிகள்

2.1.1 ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை

40,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய வசதி கொண்ட இவ்விளையாட்டரங்கம் 400 மீ 8-வரிசை செயற்கை இழை தடகள ஓடுபாதை, இயற்கை புல்வெளி கால்பந்து மைதானம், 60 மீ. குளிரூட்டப்பட்ட உள்ளரங்க தடகள பயிற்சி ஓடுதளம், ஜூடோ கூடம், பளு தூக்குதல் கூடம், மேசைப்பந்து, குத்துச்சண்டை, சதுரங்கம், கேரம் மற்றும் கடற்கரை கையுந்துப்பந்து, கையுந்துப்பந்து, எறிபந்து மற்றும் கபாடி ஆகிய ஆடுகளங்கள் உள்ளன. அனைத்து ஆடுகளங்களிலும் மின்னொளி விளக்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்விளையாட்டரங்கத்தில் குளிர்சாதன வசதி கொண்ட உடற்பயிற்சி மையம், மாநில விளையாட்டு ஊக்குவிப்பு மையம், 10 மீ. துப்பாக்கி சுடும் பயிற்சி மையம், ஊடக அரங்கம் மற்றும் கலந்தாய்வு கூடம் ஆகிய வசதிகளும் உள்ளன.

மேற்கண்ட விளையாட்டு வசதிகள் தவிர, விளையாட்டு விடுதி மற்றும் பள்ளி மாணவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம், கல்லூரி மாணவர்களுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி ஆகியவை இவ்விளையாட்டரங்கில் உள்ளன. மேலும் இந்திய விளையாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி இவ்விளையாட்டரங்கில் செயல்பட்டு வருகின்றது.

2.1.2. ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கம், சென்னை

8,000 பார்வையாளர்கள் அமரும் திறன் கொண்ட இவ்விளையாட்டரங்கில் மையப்படுத்தப்பட்ட குளிர் சாதன மற்றும் மின்னொளி வசதியுடன்கூடிய மரத்தளத்திலான ஆடுகளம் உள்ளது. இந்த ஆடுகளத்தில் இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, கேரம், சதுரங்கம், வாள்சண்டை, கைப்பந்து, ஜூடோ, கபாடி, மேசைப்பந்து, டேக்வாண்டோ, பளு தூக்குதல், மல்யுத்தம், கையுந்துப்பந்து போன்றவற்றை விளையாடலாம். மேலும் விளையாட்டு அல்லாத பிற நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

மேலும் மின்னொளி வசதியுடன் கூடிய சிமெண்ட் தரை கூடைப்பந்து ஆடுகளம், கைப்பந்து ஆடுகளம், மின்னொளி வசதியுடன் கூடிய வாள்சண்டை கூடம், திறந்தவெளி

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

குத்துச்சண்டை வளையம் மற்றும் மின்னொளி வசதியுடன் கூடிய சர்வதேச அளவிலான திறந்தவெளி செயற்கை இழை சறுக்கு வளையம் (ஸ்கேட்டிங் ரிங்க்) மற்றும் நவீன கூட்ட அரங்கம் ஆகிய வசதிகள் உள்ளன.

2.1.3 சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் உள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம்

ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் செயற்கை இழை தடகள ஓடுகளப்பாதை, இயற்கை கால்பந்து புல்வெளி மைதானம், உட்புற நீர் சிகிச்சை நீச்சல் குளம், குளிரூட்டப்பட்ட உட்புற ஸ்குவாஷ் மைதானம், குளிரூட்டப்பட்ட உட்புற இறகுப்பந்து அரங்கம், கையுந்துபந்து ஆடுகளம் மற்றும் கூடைப்பந்து ஆடுகளம், மின்னொளி வசதியுடன் செயல்பட்டு வருகிறது. மேலும், விளையாட்டு விடுதி, மாணவியர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம் மற்றும் கல்லூரி மாணவியர்களுக்கான சிறப்பு நிலை விளையாட்டு விடுதி ஆகியவை இவ்விளையாட்டரங்கில் செயல்பட்டு வருகின்றன.

2.1.4 மேயர் ராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கம், சென்னை

8,670 பார்வையாளர்கள் அமரும் திறன் கொண்ட இவ்விளையாட்டரங்கில் மின்னொளி வசதியுடன் கூடிய சர்வதேசத் தரத்திலான செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம் உள்ளது.

மேலும், நான்கு களிமண் டென்னிஸ் ஆடுகளங்கள், உள்ளரங்க கையுந்துப்பந்து ஆடுகளம் மற்றும் மின்னொளி வசதியுடன் கூடிய இரண்டு திறந்தவெளி கையுந்துப்பந்து ஆடுகளங்கள், தங்குமிட மையம் மற்றும் உடற்பயிற்சிக் கூடம் ஆகிய பிற வசதிகளும் உள்ளன.

2.1.5 நீச்சல்குள வளாகம், வேளச்சேரி, சென்னை

4,000 பார்வையாளர்கள் இருக்கை கொள்திறன் கொண்ட இந்த நீச்சல்குள வளாகத்தில் 50மீX25மீ அளவு கொண்ட 8 வரிசைகள் உள்ள ஒரு சர்வதேச தரத்திலான பந்தய நீச்சல் குளம், 18மீX25மீX5மீ அளவிலான ஒரு குதித்தல் குளம் மற்றும் 25மீX25மீ அளவிலான ஒரு பயிற்சி நீச்சல் குளம் ஆகியன உள்ளன.

[*2023 ஏப்ரல் 11*

மேலும் குளிரூட்டப்பட்ட வசதியுடன் கூடிய உடற்பயிற்சி மையம், இறகுப்பந்து உள்ளரங்கம் மற்றும் ஜிம்னாஸ்டிக்ஸ் உள்ளரங்கம் ஆகிய பிற வசதிகளும் உள்ளன.

2.1.6 டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், சென்னை

7,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய இருக்கை கொள்திறன் கொண்ட இவ்வளாகம் பிரதான விளையாட்டரங்கத்தில் ஒரு மைய ஆடுகளம் மற்றும் பயிற்சி பகுதியில் மின்னொளி வசதியுடன் கூடிய ஆறு பயிற்சி ஆடுகளங்களைக் கொண்டது. அனைத்து ஆடுகளங்களும் சர்வதேசத் தரத்திலான செயற்கை இழை ஆடுகளங்களாகும். கூடுதலாக குளிர்சாதன வசதியுடன் கூடிய உடற்பயிற்சி மையம் ஒன்றும் உள்ளது.

2.2 மாவட்ட விளையாட்டு வளாகங்கள்

மாவட்டங்களில் உள்ள விளையாட்டு வீரர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 32 மாவட்டத் தலைநகரங்களில் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த அனைத்து விளையாட்டு வளாகங்களிலும், தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, கபாடி, கைப்பந்து மற்றும் கையுந்துப்பந்து போன்ற விளையாட்டு ஆடுகள வசதிகள் உள்ளன. இதர விளையாட்டுகளுக்கான ஆடுகள வசதிகளும் படிப்படியாக ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

2.3 பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கங்கள்

26 பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கங்கள் 22 மாவட்டங்களில் செயல்படுகின்றன. நேரு பூங்கா விளையாட்டு வளாகம், செனாய் நகர், வேளச்சேரி நீச்சல் குள விளையாட்டு வளாகம், முகப்பேர் விளையாட்டு வளாகம் மற்றும் ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கத்திற்கு அருகில் உள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் ஆகியவை சென்னையில் பயன்பாட்டில் உள்ளன. அரியலூர், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், சேலம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி (ஒன்று மாவட்ட விளையாட்டு வளாகத்திலும், மற்றொன்று ஸ்ரீரங்கத்திலும்) திருநெல்வேலி, திருப்பூர், திருவண்ணாமலை, திருவாரூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில்

2023 ஏப்ரல் 11]

பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இறகுப்பந்து, கூடைப்பந்து, வாள்வீச்சு, கைப்பந்து, ஜூடோ, கபாடி, மேசைப்பந்து மற்றும் கையுந்துப்பந்து போன்ற விளையாட்டுகளில் பயிற்சி மேற்கொள்ளலாம்.

2.4 செயற்கை இழை தடகள ஓடுபாதை, வளைகோல்பந்து செயற்கை இழை ஆடுகளம் மற்றும் டென்னிஸ் ஆடுகளங்கள்

2.4.1 செயற்கை இழை தடகள ஓடுபாதைகள்

தமிழ்நாட்டில் ஏழு மாவட்டங்களில் எட்டு செயற்கை இழை தடகள ஓடுபாதைகள் உள்ளன. சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் மற்றும் ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் உள்ள பயிற்சி ஓடுதள பாதை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருவண்ணாமலை மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் உள்ளன.

2.4.2 செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளங்கள்

தமிழ்நாட்டில் ஆறு மாவட்டங்களில், சென்னையில் மேயர் ராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து மைதானம், ஒய்எம்சிஏ உடற்கல்வி கல்லூரி வளாகம், மதுரை, கோவில்பட்டி (தூத்துக்குடி), ராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய ஏழு செயற்கை வளைகோல்பந்து மைதானங்கள் உள்ளன.

2.4.3 செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்கள்

தமிழ்நாட்டில் 14 மாவட்டங்களில், சென்னை (டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம், நேரு பூங்கா விளையாட்டு வளாகம் மற்றும் முகப்பேர்), அரியலூர், கடலூர், காஞ்சிபுரம், கிருஷ்ணகிரி, மதுரை, பெரம்பலூர், இராமநாதபுரம், சேலம், நீலகிரி, தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் 16 செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்கள் உள்ளன.

2.5 நீச்சல் குளங்கள்

தமிழ்நாட்டில் 28 மாவட்டங்களில், அரியலூர், கடலூர், சென்னை (வேளச்சேரி நீச்சல் குள வளாகம், அண்ணா நீச்சல் குளம், முகப்பேர் மற்றும் செனாய் நகர்), தருமபுரி, திண்டுக்கல், ஈரோடு,

காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி (ஒன்று மாவட்ட விளையாட்டு வளாகத்திலும் மற்றொன்று மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வளாகத்திலும்), திருவள்ளூர், தூத்துக்குடி, திருவாரூர், திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் மற்றும் விருதுநகர் ஆகிய 31 நீச்சல் குளங்கள் உள்ளன.

2.6 உட்கட்டமைப்புகளை பராமரித்தல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளைப் பராமரிப்பதற்காக 2022-2023 ஆம் ஆண்டு ரூ.30.00 கோடி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2.7 உடல் தகுதி மற்றும் விளையாட்டு மருத்துவத்திற்கான திட்டங்கள்

ஒரு விளையாட்டு வீரரின் விளையாட்டு வாழ்க்கையில் உடற்தகுதி மற்றும் மறுவாழ்வு முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு விளையாட்டு வீரரின் சாதனைகள் இந்த இரண்டு காரணிகளையும் சார்ந்துள்ளது. மாநிலத்தில் உள்ள விளையாட்டு வீரர்களின் நலனுக்காக, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விளையாட்டு அறிவியல் மையங்கள் மற்றும் உடற்பயிற்சி மையங்களை நிறுவியுள்ளது.

2.7.1 மாநில விளையாட்டு ஊக்குவிப்பு மையம், சென்னை

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் விளையாட்டு மருத்துவம், பிசியோதெரபி போன்ற வசதிகளுடன் கூடிய மாநில விளையாட்டு ஊக்குவிப்பு மையம் (SSFC) செயல்பட்டு வருகிறது. திறமையான வீரர்களுக்கு அவர்களின் திறன்களை மேம்படுத்தவும் காயத்திலிருந்து மறுவாழ்வு பெறவும் சிறப்பு தொழில்முறை உதவியை வழங்குகிறது.

2.7.2 ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம், மதுரை

தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தின்கீழ் மதுரையில் ஒரு ஒருங்கிணைந்த விளையாட்டு அறிவியல் மையம் (ISSC) நிறுவப்பட்டு வருகிறது, இம்மையம் விளையாட்டு வீரர்கள்

2023 ஏப்ரல் 11]

விளையாட்டு தொடர்பான காயங்களிலிருந்து மறுவாழ்வு பெறவும், தொழில்முறை முறையில் தங்கள் உடல் தகுதியை மீட்டெடுக்கவும் உதவுகிறது. இந்த மையத்தின்மூலம் விளையாட்டு வீரர்களுக்கு நிலையான மற்றும் தீவிர அறிவியல் பூர்வமான பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

2.8 தலைமைச் செயலக அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு உடற்பயிற்சி கூட வசதிகள்

அறிவுசார் திறன், தன்னம்பிக்கை, ஆரோக்கியம், மன அழுத்தம், மனச்சோர்வு மற்றும் பதற்றம் ஆகியவற்றை சமநிலைப்படுத்த உடற்தகுதி உதவுகிறது. இதைக் கருத்தில் கொண்டு, தலைமைச் செயலகத்தில் ஆண் மற்றும் பெண் அலுவலர்கள்/ பணியாளர்களுக்கு தனித்தனி உடற்பயிற்சிக் கூடங்களை அரசு ஏற்படுத்தி உள்ளது. இந்த வசதியைப் பயன்படுத்தி சுமார் 5,000 அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயனடைகின்றனர்.

2.9 17 மாவட்டங்களில் நவீன உடற்பயிற்சி மையங்கள்

அன்றாட வாழ்வில் உடல் தகுதியைப் பேணுவது குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்துவதற்காக, 17 மாவட்டங்களில் நவீன உடற்பயிற்சிக் கருவிகளுடன் கூடிய உடற்பயிற்சி மையங்களை அரசு நிறுவியுள்ளது. சென்னை, கடலூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, மதுரை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், தேனி, நீலகிரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, திருவண்ணாமலை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இந்த மையங்கள் செயல்படுகின்றன. இந்த உடற்பயிற்சி மையத்தின்மூலம் ஏராளமான பொதுமக்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் பயனடைந்து வருகின்றனர்.

2.10 மாநிலத்தில் உள்ள விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகள்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ள விவரம் இணைப்பில் வழங்கப்பட்டுள்ளது. பரந்த அளவிலான விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன்மூலம் பல்வேறு தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளை நடத்தும் மையமாக தமிழ்நாடு மாறியுள்ளது.

[2023 ஏப்ரல் 11

படலம் – 3

விளையாட்டு வளர்ச்சிக்கான முக்கிய முயற்சிகள்

தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையினை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்கள் மற்றும் திறனை மேம்படுத்துவதற்கு அரசு பல புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. புதிய முயற்சிகளின் விவரங்கள் பின்வருமாறு

3.1 முதலமைச்சர் கோப்பை போட்டி

44-வது செஸ் ஒலிம்பியாட் போட்டியின் நிறைவு விழாவின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சர் கோப்பை தொடர்பான அறிவிப்பினை வெளியிட்டார்கள் அதன் விவரம் பின்வருமாறு :

“நமது பாரம்பரிய விளையாட்டுகளான கபாடி மற்றும் சிலம்பம் விளையாட்டுகளுடன் 12 விளையாட்டுகளை உள்ளடக்கிய முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள் நடைபெறும்”.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகளில் பங்கேற்பதற்கான இணைய முகப்பில் பதிவு செய்யும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

இதற்குமுன், முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள் ஒரே பிரிவில் 10 விளையாட்டுகளில் நடத்தப்பட்டன. தற்போது நமது பாரம்பரிய விளையாட்டுகளான கபாடி மற்றும் சிலம்பம் விளையாட்டுகள் உட்பட 15 விளையாட்டுப் போட்டிகள் அனைத்து வகையான விளையாட்டு வீரர்களையும் இணைத்து முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகள் பள்ளி, கல்லூரி, பொதுப் பிரிவு, அரசு ஊழியர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உட்பட இருபாலருக்கும் நடத்தப்படுகின்றன.

2022-2023 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகளின் விவரம் பின் வருமாறு:

2023 ஏப்ரல் 11]

வரிசை எண்.	விளையாட்டுகள்	போட்டிகள்	வகைகள்
1	தடகளம்	தனிநபர் போட்டிகள்	பள்ளி, கல்லூரி, அரசுப் பணியாளர்கள் மற்றும் பொது மக்கள்
2	கூடைப்பந்து	குழு விளையாட்டு	பள்ளி மற்றும் கல்லூரி
3	இறகுப்பந்து	ஒற்றையர் மற்றும் இரட்டையர்	பள்ளி மற்றும் கல்லூரி
4	கால்பந்து	குழு விளையாட்டு	பள்ளி மற்றும் கல்லூரி
5	வளைகோல்பந்து	குழு விளையாட்டு	பள்ளி மற்றும் கல்லூரி
6	நீச்சல்	5 போட்டிகள்	பள்ளி மற்றும் கல்லூரி
7	மேசைப் பந்து	ஒற்றையர் மற்றும் இரட்டையர்	பள்ளி மற்றும் கல்லூரி
8	டென்னிஸ்	ஒற்றையர் மற்றும் இரட்டையர்	பள்ளி மற்றும் கல்லூரி
9	கையுந்துப்பந்து	குழு விளையாட்டு	பள்ளி, கல்லூரி மற்றும் பொது மக்கள்
10	பளு தூக்குதல்	5 போட்டிகள்	பள்ளி மற்றும் கல்லூரி
11	சதுரங்கம்	ஒற்றையர்	அரசு ஊழியர்கள்
12	மட்டைப்பந்து	குழு விளையாட்டு	பள்ளி, கல்லூரி மற்றும் பொது மக்கள்
13	கபாடி	குழு விளையாட்டு	பள்ளி, கல்லூரி, அரசு ஊழியர்கள் மற்றும் பொது மக்கள்.

வரிசை எண்.	விளையாட்டுகள்	போட்டிகள்	வகைகள்
14	சிலம்பம்	கம்புவீச்சு, மான் கொம்பு வீச்சு, ஒற்றை வாள் வீச்சு, ஒற்றைசுருள் வாள் வீச்சு மற்றும் குத்துவரிசை.	பள்ளி, கல்லூரி மற்றும் பொது மக்கள்
15	கடற்கரை கையுந்துப்பந்து	குழு விளையாட்டு	பள்ளி மற்றும் கல்லூரி

மாற்றுத் திறனாளிகளுக்கான போட்டிகள்

வரிசை எண்.	பங்கேற்போர்	போட்டிகள்
1	உடல் திறன் குன்றியோர்	50 மீ ஓட்டப்பந்தயம், இறகுப்பந்து மற்றும் மேசைப்பந்து
2	பார்வைத் திறன் குன்றியோர்	100 மீ ஓட்டப்பந்தயம் மற்றும் தழுவல் கையுந்துப்பந்து
3	மன வளர்ச்சி குன்றியோர்	100 மீட்டர் ஓட்டப் பந்தயம் மற்றும் எறிபந்து
4	செவித்திறன் குன்றியோர்	100 மீ ஓட்டப்பந்தயம் மற்றும் கபாடி

முதலமைச்சர் கோப்பையின் சிறப்பைக் கருத்தில் கொண்டு, மாவட்ட அளவிலும், மாநில அளவிலும் சிறந்த முறையில் போட்டிகளை நடத்துவதை உறுதிசெய்திட கீழ்க்கண்டவாறு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன:-

I. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அவர்களின் தலைமையில் முதலமைச்சர் கோப்பைப் போட்டிகள் நடத்துவதற்கு அமைக்கப்பட்ட மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு

2023 ஏப்ரல் 11]

II. *மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நல ஒருங்கிணைப்புக் குழு*

III. *முதலமைச்சர் கோப்பைப் போட்டியின் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழு-ஒருங்கிணைப்பாளர் மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நல அலுவலர்.*

முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவது தொடர்பான அனைத்து பணிகளையும் பார்வையிட்டு ஒருங்கிணைத்து செயல்படுத்த மேற்காணும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முதலமைச்சர் கோப்பைக்கான போட்டிகள் மாவட்ட அளவில், மண்டல அளவில் மற்றும் மாநில அளவில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளப் பதிவின்படி 4,57,403 பங்கேற்பாளர்கள் பங்கேற்பதற்காக பதிவு செய்துள்ளனர். 38 மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட மாவட்ட அளவிலான போட்டிகளில் ஒவ்வொரு மாவட்டத்தின் மூலை முடுக்கிலிருந்தும் 3,71,351 பங்கேற்பாளர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். பிரிவு வாரியான பங்கேற்பு விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:



[*2023 ஏப்ரல் 11*

மண்டல அளவிலான பளுதூக்குதல், டென்னிஸ் மற்றும் கடற்கரை கையுந்துப்பந்து ஆகிய விளையாட்டுகளில் பங்கேற்றவர்களின் விவரம் பின்வருமாறு:



வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

அனைத்து விளையாட்டுப் பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெறுபவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். அனைத்து மாவட்டங்களிலும் வெற்றி பெறும்/தேர்வு செய்யப்படும் சிறந்த அணிகள்/வீரர்கள் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பார்கள். மாநில அளவிலான போட்டியில் பங்கேற்றிடும் போட்டியாளர்களுக்கு போட்டி நாட்களுக்கான பயணக் கட்டணம், தங்கும் வசதி மற்றும் உணவு வழங்கப்படும்.

2023 ஏப்ரல் 11]

மாவட்ட அளவிலான போட்டிகளுக்கான பரிசுத் தொகை

தரவரிசை	தனிநபர் போட்டிகள் ரூ.	இரட்டையர் போட்டிகள் ரூ.
I	*3000*	*6000*
II	*2000*	*4000*
III	*1000*	*2000*

குழு விளையாட்டுகள்	முதல் பரிசு ரூ.	இரண்டாம் பரிசு ரூ.	மூன்றாம் பரிசு ரூ.
கால்பந்து	*54,000*	*36,000*	*18,000*
வளைகோல்பந்து			
கூடைப்பந்து	*36,000*	*24,000*	*12,000*
கபாடி			
கையுந்துப்பந்து			

மாநில அளவிலான போட்டிகளுக்கான பரிசுத் தொகை



தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை 2022-23

மாநில அளவிலான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகை

	முதல் பரிசு	இரண்டாவது பரிசு	மூன்றாவது பரிசு
தனிநபர் போட்டிகள்	1,00,000	75,000	50,000
இரட்டையர் போட்டிகள்	1,50,000	1,12,500	75,000

தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை 2022-23

மாநில அளவிலான வெற்றியாளர்களுக்கான பரிசுத் தொகை - குழு விளையாட்டுகள்

குழு விளையாட்டுகள்	(1) முதல் பரிசு	(2) இரண்டாவது பரிசு	(3) மூன்றாவது பரிசு
கபாடி	6,00,000	4,50,000	3,00,000
கால்பந்து	9,00,000	6,75,000	4,50,000
கையுந்து பந்து	6,00,000	4,50,000	3,00,000
கூடைப்பந்து	6,00,000	4,50,000	3,00,000
வளைகோல் பந்து	9,00,000	6,75,000	4,50,000
கபாடி (செவித்திறன் குன்றியோர்)	3,00,000	2,25,000	1,50,000
இறகுபந்து (உடற்திறன் குன்றியோர்)	3,00,000	2,25,000	1,50,000
கையுந்துபந்து (பார்வைத்திறன் குன்றியோர்)	3,00,000	2,25,000	1,50,000
எறிபந்து (மனவளர்ச்சி குன்றியோர்)	3,00,000	2,25,000	1,50,000

மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைப் போட்டிகளை நடத்துவதற்காக முதல் முறையாக நிகழ்ச்சி மேலாண்மை நிறுவனத்தின்மூலம் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு புதுப்பொலிவுடன் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. நிகழ்ச்சி மேலாண்மை நிறுவனம் இலச்சினை, சின்னம், பதக்கங்கள், கோப்பை மற்றும் சான்றிதழ்களை வடிவமைத்துள்ளது. முதலமைச்சர் கோப்பைக்கான பிரத்யேகமான கருப்பொருள் பாடல் ஒன்று தயாராகி வருகிறது.

வெற்றி பெறும் அனைத்து அணிகள் மற்றும் தனிநபர்களுக்கு பதக்கங்கள், சான்றிதழ்கள் மற்றும் பரிசுத் தொகை வழங்கப்படுவதோடு பங்கேற்பமைக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும். மாநில அளவிலான போட்டிகள் சென்னையில் உள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சர்வதேச தரத்திலான விளையாட்டு வசதிகளைப் பயன்படுத்தி நடத்தப்பட உள்ளன. இம்மாபெரும் போட்டியில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து 27,000-க்கும் மேற்பட்ட உயர்மட்ட விளையாட்டு வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

2023 ஏப்ரல் 11]

மாநில அளவிலான போட்டியில், பதக்க நிலைக்கு ஏற்ப அதிக புள்ளிகள் பெறும் முதல் 3 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு முதல்வர் கோப்பை வழங்கப்படும். இத்திட்டத்தினைச் செயல்படுத்திட அரசு ரூ.50.86 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

3.2 சென்னையில் அமையவுள்ள உலகத் தரத்திலான விளையாட்டு நகரம்

உலகத் தரம் வாய்ந்த மைதானங்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன்மூலம் சென்னையை உலக அளவிலான விளையாட்டு நகரமாக நிறுவி சென்னை நகரத்தை உலகளாவிய போட்டிகளுக்கு சிறந்த இடமாகவும் விளையாட்டு வீரர்களுக்கு உயர் செயல்திறன் மையமாகவும் நிலை நிறுத்துகிறது. பல்வேறு நவீன வசதிகளை உள்ளடக்கிய விளையாட்டு வளர்ச்சிக்கான விரிவான சுற்றுச்சூழல் அமைப்பை படிப்படியாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது இந்த இலட்சியத் திட்டம். இத்திட்டத்தில் சர்வதேசத் தரத்திலான பல்நோக்கு திறந்தவெளி மற்றும் உள்விளையாட்டு அரங்கங்கள், நீச்சல் குளம், விளையாட்டுப் பயிற்சிப் பள்ளிகள், அறிவியல் பூர்வமான விளையாட்டு வசதிகள், விளையாட்டு வீரர்களுக்கான விடுதிகள், விளையாட்டு மருத்துவ மையம் போன்ற வசதிகளைப் படிப்படியாக உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சர்வதேசத் தரத்திலான பல்நோக்கு விளையாட்டு நகரத் திட்டம், விளையாட்டு வீரர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் விளையாட்டு ஆர்வலர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும். இந்த முயற்சி பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகளை ஈர்ப்பது மட்டுமல்லாமல் புதிய தலைமுறை விளையாட்டு வீரர்களையும் ஈர்த்து சென்னை மற்றும் இந்தியாவை விளையாட்டுலகில் அதிக உயரத்திற்குக் கொண்டு செல்கிறது. இந்தத் திட்டத்திற்கு ஏற்ற நிலம் இறுதி செய்யப்பட்டு, விரைவில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்.

3.3 ஒலிம்பிக் அகாடமிகள்

ஒலிம்பிக் அகாடமி உயர் செயல்திறன் கொண்ட விளையாட்டு வீரர்கள் வெற்றியை அடைவதற்கும் மற்றும் ஒலிம்பிக்கில் பதக்க மேடையை அடையத் தேவையான அனைத்து வசதிகளையும் ஒரே உட்கட்டமைப்பின்கீழ் வழங்கிட வடிவமைக்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 11

இது ஒலிம்பிக்கில் நமது மாநிலம் மற்றும் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்த விரும்பும் சிறந்த விளையாட்டு வீரர்களின் திறமைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த அகாடமி பல்வேறு ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கான உலகத் தரம் வாய்ந்த பயிற்சி, அதிநவீன உட்கட்டமைப்பு, விளையாட்டு அறிவியல் மையம், உபகரணங்கள் மற்றும் பிற அத்தியாவசிய வசதிகளை வழங்குகிறது. ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வெல்பவர்களை உருவாக்கும் குறிக்கோளுடன் மற்றும் சர்வதேச அரங்கை அலங்கரிக்க விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு பயிற்சி அளிப்பதே அகாடமியின் நோக்கமாகும். விரிவான பயிற்சித் திட்டங்கள் மற்றும் அர்ப்பணிப்பு அணுகுமுறைமூலம் இந்திய விளையாட்டுகளின் எதிர்காலத்தை வடிவமைப்பதிலும் உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குவதிலும் தமிழ்நாட்டில் உள்ள ஒலிம்பிக் அகாடமிகள் முக்கிய பங்காற்றும். இந்த ஒலிம்பிக் அகாடமி சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் நீலகிரி ஆகிய இடங்களில் அமைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

3.3.1 ஒலிம்பிக்கில் சிறந்து விளங்குவதற்கான சிறப்பு நோக்கம் (SPV)

ஒலிம்பிக் விளையாட்டுக்கள் என்பது ஒரு உலகளாவிய விளையாட்டுத் திட்டமாகும். இது உலகம் முழுவதும் உள்ள விளையாட்டு வீரர்களை பல்வேறு விளையாட்டுகளில் போட்டியிடுவதற்காக ஒன்றிணைக்கின்றது. ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வெல்வது என்பது விளையாட்டில் உச்சபட்ச சாதனையாகக் கருதப்படுகிறது. மேலும், பல ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்களின் கனவாக உள்ளது. பாரிஸ் 2024, லாஸ் ஏஞ்சல்ஸ் 2028 மற்றும் பிரிஸ்பேன் 2032-ல் நடைபெறவிருக்கும் கோடைகால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் அடைவதற்கான சிறப்புத் திட்டத்தை தமிழ்நாடு இப்போது தொடங்கியுள்ளது.

இத்திட்டம் ஒரு பிரத்யேக சிறப்பு நோக்கத்தை முன்மொழிகிறது. இது சிறப்புக் கவனம், இலக்கு அடிப்படையிலான அணுகுமுறை கொண்ட சிறப்பு நோக்கமாகும். இச்சிறப்பு நோக்கத்திற்கு தலைமை நிர்வாக அலுவலர் மற்றும் உலகளவில் கண்டறியப்பட்ட சிறப்பு பயிற்சியாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

2023 ஏப்ரல் 11]

3.3.2 வெளிநாட்டு பயிற்சியாளர்கள் நியமனம்

தமிழ்நாட்டில் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளின் பயிற்சியின் தரத்தை உயர்த்திடும் நோக்கில் வெளிநாட்டு பயிற்சியாளர்கள் பணியமர்த்தப்படுகின்றனர். தடகளம் (தாண்டுதல்), தடகளம் (குறுந்தூர ஓட்டம்), நீச்சல், வளைகோல் பந்து மற்றும் டென்னிஸ் போன்ற பல்வேறு விளையாட்டுகளில் வெளிநாட்டுப் பயிற்சியாளர்களை நியமிப்பதை மாநில அரசு கொள்கையாகக் கொண்டுள்ளது. இந்த முன்முயற்சியானது விளையாட்டை ஊக்குவிப்பதையும், விளையாட்டு வீரர்கள் தங்கள் சிறந்த திறனை அடைய உதவுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. வெளிநாட்டுப் பயிற்சியாளர்களின் நியமனம் வெளிப்படை தன்மையுடன் செய்யப்படுகிறது. இதில் பயிற்சியாளர்களின் அனுபவம், தகுதிகள் மற்றும் நிபுணத்துவம் ஆகியவை நியமனம் செய்யப்படுவதற்கு முன்பு மதிப்பீடு செய்யப்படும்.

சர்வதேச பயிற்சியாளர்களை நியமிப்பதன்மூலம் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்வதை இறுதி இலக்காகக் கொண்டுள்ள தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் இப்பகுதியில் விளையாட்டு கலாசாரத்தை உயர்த்துவதற்கும் வாய்ப்புள்ளது.

3.4 சிறு விளையாட்டரங்கம்

தமிழ்நாட்டில் 234 சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன. 234 சட்டமன்ற தொகுதிகளில், தமிழ்நாடு அரசு ஏற்கெனவே 29 தொகுதிகளில் தடகளம், கால்பந்து, கூடைப்பந்து, கைப்பந்து, கபாடி மற்றும் அப்பகுதியில் பிரபலமான ஐந்து முக்கிய விளையாட்டுக்களுக்கான மைதான வசதிகளுடன் சிறு விளையாட்டரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை நோக்கமாகக் கொண்டு சட்டமன்ற தொகுதியளவில் விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மீதமுள்ள தொகுதிகளில் தலா ரூ.3.00 கோடி செலவில் சிறு விளையாட்டரங்கம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

3.5 ஒடிசா விளையாட்டுத் துறையின் உடனான புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் 20.01.2023 அன்று

ஒடிசாவுக்குப் பயணம் செய்தபோது அவர்கள் முன்னிலையில் ஒடிசாவின் விளையாட்டுத் துறை மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஒன்று கையெழுத்தானது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் இளம் திறனாளர்கள், பயிற்சியாளர்கள், விளையாட்டு வீரர்கள், விளையாட்டு நிர்வாகிகள் மற்றும் விளையாட்டு விஞ்ஞானிகள் ஆகியோரின் பரிமாற்றத்தை எளிதாக்குகிறது. இது இரு மாநிலங்களுக்கு இடையே விளையாட்டு உட்கட்டமைப்பைப் பகிர்ந்துகொள்வதற்கு வழி வகுக்கும்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முதன்மை நோக்கம் விளையாட்டுத் துறையில் அறிவு மற்றும் நிபுணத்துவத்தைப் பகிர்ந்துகொள்வது மற்றும் விளையாட்டு வீரர்கள் அந்தந்தத் துறைகளில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவது ஆகும். இரு மாநிலங்களும் விளையாட்டுகளில் ஒரு செழுமையான பாரம்பரியம் மற்றும் பல்வேறு சர்வதேச நிகழ்வுகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்திய பல குறிப்பிடத்தக்க விளையாட்டு வீரர்களை உருவாக்கியுள்ளன.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்கீழ், திறமைகளை அடையாளம் காணுதல், பயிற்சி அளித்தல், உட்கட்டமைப்பு மேம்பாடு, விளையாட்டுக் கலாச்சாரத்தை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு துறைகளில் இரு மாநிலங்களும் இணைந்து செயல்படும். மாநில மற்றும் தேசிய அளவில் விளையாட்டு நிகழ்வுகள் மற்றும் போட்டிகளை ஏற்பாடு செய்வதிலும் ஒத்துழைப்பு வழங்குவார்கள்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம், கருத்துப் பரிமாற்றம் மற்றும் விளையாட்டில் சிறந்த நடைமுறைகளுக்கு ஒரு அடித்தளத்தை வழங்குவதன்மூலம் இரு மாநிலங்களுக்கும் பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சர்வதேச அளவில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய விளையாட்டு வீரர்களின் திறமையை உருவாக்கவும் இது உதவும். ஒடிசா மற்றும் தமிழ்நாடு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் நாட்டின் விளையாட்டு வளர்ச்சிக்கு ஒரு முன்மாதிரியான முயற்சியாகும்.

2023 ஏப்ரல் 11]

படலம் – 4

பன்னாட்டு அளவில் நடத்தப்பட்ட போட்டிகள்

சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்திடுவதன் மூலம் உலகின் சிறந்த திறமையாளர்களுடன் போட்டியிடவும், நாடுகளுக்கு இடையே உலகளாவிய நட்புறவை வலுப்படுத்த உதவுகிறது. மாநில சங்கங்கள் / தேசிய கூட்டமைப்பு நடத்தும் பன்னாட்டு அளவிலான போட்டிகளுக்கு தகுதியான நிதியுதவி வழங்குவதில் தமிழ்நாடு அரசு முன்னோடியாக இருந்து வருகிறது. 2022-23 ஆம் ஆண்டில், பின்வரும் முக்கிய சர்வதேசப் போட்டிகள் சென்னையில் நடைபெற்றன.

4.1 44-வது சர்வதேச சதுரங்க கூட்டமைப்பு நடத்திய சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகள்: தமிழ்நாட்டின் சதுரங்க மரபுக்கு ஒரு மைல்கல்

தமிழ்நாடு திறமையான சதுரங்க வீரர்களை உருவாக்குவதிலும், மதிப்புமிக்க சதுரங்கப் போட்டிகளை நடத்துவதிலும் வளமான பாரம்பரிய வரலாற்றைக் கொண்டது. தமிழ் நாட்டின் பிரபலமான இவ்விளையாட்டில், ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிக்க பல்வேறு சதுரங்க அமைப்புகள் மற்றும் அகாடமிகள் உள்ளன.

தமிழ்நாட்டில் சதுரங்கப் போட்டிகள் 1950 முதல் பிரபலமாக உள்ளது. மேலும் பல திறமையான வீரர்களை இம்மாநிலம் உருவாக்கியுள்ளது. தமிழ்நாட்டின் ஆரம்பக்கட்ட சதுரங்க விளையாட்டு வீரர்களுள் திரு. மனுவேல் ஆரோன் 1961-ல் சர்வதேச மாஸ்டர் பட்டம் பெற்ற முதல் சதுரங்க வீரர் ஆவார். தமிழ்நாட்டைச் சேர்ந்த மற்றொரு குறிப்பிடத்தக்க வீரரான திரு. M.R. *வெங்கடேஷ், 2012 இல் சர்வதேச கிராண்ட் மாஸ்டர் பட்டம் பெற்றார். தமிழ்நாடு அளவிலும் இந்தியா அளவிலும் முதல் சதுரங்க கிராண்ட்மாஸ்டர் பட்டத்தை திரு. விஸ்வநாதன் ஆனந்த் 1988 ஆம் ஆண்டு தனது 18 ஆம் வயதில் பெற்றார். பல்வேறு முக்கிய சதுரங்க போட்டிகள் நடத்திய பெருமை கொண்டது தமிழ்நாடு. குறிப்பாக, தேசிய அளவிலான* A *நிலை சதுரங்க வாகையர் போட்டிகள், இந்திய தேசிய வாகையர் போட்டிகள் மற்றும் சென்னை ஓபன் சர்வதேச கிராண்ட் மாஸ்டர் சதுரங்க போட்டிகள் ஆகியவை அடங்கும். இப்போட்டிகள் சர்வதேச*

அளவிலான வீரர்களை ஈர்த்து சதுரங்க போட்டிகளின் முக்கிய முனையமாக தமிழ்நாட்டின் பெருமையை நிலைநாட்டுகிறது.

தமிழ்நாடு இன்றளவும் திறமையான சதுரங்க வீரர்களை உருவாக்கி அவர்களில் பலர் தேசிய மற்றும் சர்வதேச அளவில் வெற்றிகளைப் குவிக்க உதவுகிறது. இந்தியாவில் 78 கிராண்ட் மாஸ்டர்களுள் 27 பேர் தமிழ்நாட்டை சார்ந்தவர்கள். சதுரங்கத்தில் மாநிலத்தின் வளமான பாரம்பரியம், கிளப்கள் மற்றும் அகாடமிகளின் வலுவான உட்கட்டமைப்பு ஆகியவை ஆர்வமுள்ள புதிய தலைமுறை வீரர்களை ஊக்குவிக்கவும் வளர்க்கவும் உதவியது.

இந்திய வரலாற்றில் முதன்முறையாக, இந்திய சதுரங்க கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு அரசு இணைந்து சென்னையில் பிரம்மாண்டமாகவும் மற்றும் வெற்றிகரமாகவும் 44 ஆவது சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகள் நடத்தப்பட்டன. இந்தப் போட்டிகளில் 186 நாடுகளைச் சேர்ந்த 1800-க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இப்போட்டிகளின் முன்னோட்டமாக தொடர் ஒலிம்பிக் ஜோதி இந்தியாவின் அனைத்து பகுதிகளையும் சுற்றி வந்தது. இந்நிகழ்ச்சியானது பண்டைய தமிழ் கலாச்சாரத்தை உலகிற்கு எடுத்துரைக்கவும், மாநிலத்தில் சர்வதேச சுற்றுலாவை மேம்படுத்தவும் ஒரு வாய்ப்பாக அமைந்தது.

இப்போட்டிகள் அரசு தலைமைச் செயலாளர் அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட Committee for Organizing Chess Olympiad (COCO) பங்களிப்போடு ரூ.114.00 கோடி நிதி ஒதுக்கீட்டுடன் நடத்தப்பட்டது. விளையாட்டு வரலாற்றில் இந்த குறைந்த ஐந்து மாத கால இடைவெளியில் செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் மிக சிறப்பான முறையில் நடத்தப்பட்டன. 188 நாடுகளைச் சேர்ந்த 1654 வீரர்கள், 452 அதிகாரிகள் மற்றும் பயிற்சியாளர்கள் பங்கேற்றனர். பெண்கள் பிரிவில் உகாண்டா, ஜார்ஜியா மற்றும் இந்தியாவும், ஓபன் பிரிவில் உஸ்பெகிஸ்தான், ஆர்மேனியா மற்றும் இந்தியாவும் பதக்கங்களை வென்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்திய ஓபன் அணி மற்றும் இந்திய மகளிர் அணிக்கு ரொக்கப் பரிசுகளை வழங்கினார் மற்றும் நிகழ்வில் சிறப்பாகச் செயல்பட்ட அலுவலர்கள்/ பணியாளர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

2023 ஏப்ரல் 11]

வெற்றிகரமாக சென்னையில் நடைபெற்ற 44-வது FIDE *செஸ் ஒலிம்பியாட் போட்டிகள் சந்தேகத்திற்கு இடமின்றி இந்நகரத்தை உலகின் முன்னணி விளையாட்டு நகரமாக நிரூபித்துள்ளது.*

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் உள்ள அல் ஐன்-யில் அமைந்துள்ள ஆசிய செஸ் கூட்டமைப்பு சென்னையில் 44-வது FIDE *செஸ் ஒலிம்பியாட் போட்டிகளை வெற்றிகரமாக ஏற்பாடு செய்து, செஸ் விளையாட்டிற்கு அளித்த விலைமதிப்பற்ற ஆதரவிற்காக 5 ஆம் ஆண்டு ஆசிய செஸ் சிறந்த விருதுகளை(*5th Annual Asian Chess Excellence Awards*) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு* "MAN OF THE YEAR" *விருதை வழங்கியுள்ளது.*

4.2 WTA சென்னை ஓபன் 2022: சர்வதேச டென்னிஸின் மறுமலர்ச்சி

1997-ல் நடைபெற்ற முதல் சென்னை ஓபன் போட்டியுடன், சர்வதேச டென்னிஸ் போட்டிகளை நடத்துவதில் சென்னை ஒரு வளமான வரலாற்றைக் கொண்டுள்ளது. மரின் சிலிக், ஸ்டான் வாவ்ரிங்கா மற்றும் 2008 இல் போட்டியை வென்ற ரஃபேல் நடால் போன்ற பல திறமையான டென்னிஸ் வீரர்கள் இங்கு பங்கேற்றது இதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றது.

*சென்னையில் டென்னிஸ் விளையாட்டு அரங்கில் 2022-ம் ஆண்டு ஜனவரி 3 முதல் 9 வரை (*WTA *250* Chennai Open *2022) மகளிருக்கான தொழில்முறை டென்னிஸ் போட்டிகள் முதல் முறையாக நடைபெற்றது.*

இப்போட்டியில் 32 வீரர்கள் அடங்கிய ஒற்றையர் சமநிலை போட்டிகளிலும், 16 ஜோடிகள் இரட்டையர் சமநிலை போட்டிகளிலும் இடம்பெற்றனர். ஒற்றையர் பிரிவு இறுதி போட்டியில் ரஷ்ய வீராங்கனை அனஸ்டாசியா பொடாபோவா, ஸ்லோவேனியாவின் காஜா ஜுவானை நேர் செட்களில் வீழ்த்தி பட்டத்தை வென்றார். இரட்டையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் இந்திய ஜோடியான அங்கிதா ரெய்னா – சானியா மிர்சா ஜோடி, நவோமி பிராடி – ஆசியா முஹம்மது ஜோடியை வீழ்த்தி பட்டத்தை வென்றது.

சென்னை ஓபன் 2022 போட்டிகள், மகளிர் டென்னிஸ் கூட்டமைப்பின் ஆண்டு திட்டமிடல் பட்டியலில் இடம்

பெற்றதோடு உலகெங்கிலும் உள்ள திறமையான வீரர்களை நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஒருங்கிணைத்ததில் குறிப்பிடத்தக்கதாகும். இப்போட்டிகள் விளையாட்டு வீரர்களின் திறமைக்கேற்ப தரவரிசைப் புள்ளிகள் மற்றும் பரிசுத் தொகையைப் பெற முக்கிய களமாகும்.

ஒட்டுமொத்தமாக, 2022 ஆம் ஆண்டு வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்ட இப்போட்டியில் பல விளையாட்டு வீரர்கள் தங்களின் பரபரப்பான ஆட்டத்தையும் அவர்களின் திறமையினையும் ஆடுகளத்தில் வெளிப்படுத்தினர். இப்போட்டிகள் வளர்ந்து வரும் இளம் விளையாட்டு வீரர்களுக்கு திறமையினை மென்மேலும் வளர்த்திடவும், சிறந்த அனுபவமாகவும் இப்போட்டியில் பெறும் தரவரிசைப் பட்டியலின் முக்கியத்துவத்தை அறிந்திடவும் வழிகாட்டியாக உள்ளது. WTA 250 போட்டிகளை வெற்றிகரமாக நடத்திட தமிழ்நாடு அரசு ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்தது இப்போட்டிகள் இந்தியாவில் டென்னிஸ் விளையாட்டின் மீதான கவனத்தை ஈர்த்ததோடு மட்டுமல்லாமல் நாட்டில் இவ்விளையாட்டிற்கென அடையாளத்தை உருவாக்கியுள்ளது.

4.3 ATP Challenger Tour – 2023 Chennai Open Challenger 100 :

ஏடிபி சேலஞ்சர் டூர் சர்வதேச ஆண்கள் தொழில்முறை டென்னிஸ் போட்டிகளின் தொடர்களை உள்ளடக்கியது. சென்னையில் 2023 பிப்ரவரி 13 முதல் 19 வரை நடைபெற்ற சென்னை சேலஞ்சர் 100 டென்னிஸ் போட்டிகள், 2023 ஆம் ஆண்டின் ஏடிபி சேலஞ்சர் சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாக அமைந்தது. சேலஞ்சர் டூர் நிகழ்வுகள் ஏடிபி சுற்றுப்பயணத்தின் இரண்டாவது பெரிய டென்னிஸ் போட்டியைக் குறிப்பதோடு, சர்வதேச தொழில்முறை டென்னிஸின் நுழைவு போட்டிகளாக ITF உலக டென்னிஸ் டூர் போட்டிகள் அமைகின்றன.

வெளிப்புற விளையாட்டு மைதானங்களில் விளையாடிய சென்னை ஓபன் சேலஞ்சர் 100 ஒற்றையர் போட்டியில் 32 வீரர்களும், இரட்டையர் போட்டியில் 16 அணிகளும் பங்கேற்றன. இந்தப் போட்டிகள் இந்திய டென்னிஸ் வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்துள்ளதுடன் உள்ளூர் வீரர்களுக்கு சர்வதேச

2023 ஏப்ரல் 11]

அரங்கில் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பை வழங்குகிறது. கூடுதலாக சர்வதேச டென்னிஸ் அட்டவணையில் இடம்பெற்று இப்பிராந்தியத்தில் உள்ள ரசிகர்களுக்கு இந்திய மற்றும் சர்வதேச வீரர்கள் இடம்பெறும் உயர்தர டென்னிஸ் போட்டியினைக் காணும் வாய்ப்பை வழங்குகிறது.

முன்னாள் டென்னிஸ் உலக சாம்பியனான ஜோர்ன் போர்க் மற்றும் புகழ்பெற்ற டென்னிஸ் வீரர் திரு. விஜய் அமிர்தராஜ் ஆகியோர் தமிழ்நாடு அரசின் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சரைச் சந்தித்து தமிழ்நாட்டில் எதிர்கால டென்னிஸ் போட்டிகளின் சாத்தியக்கூறுகள் குறித்து விவாதித்தார்கள்.

4.4 9th Covelong Classic and Mahabs Surfing Competition 2022: சுற்றுலா மற்றும் நீர் விளையாட்டுகளை மேம்படுத்துதல்

நீர் விளையாட்டு ஆர்வலர்களை ஊக்குவிக்க 2022 ஆகஸ்ட் 1 முதல் 7 வரை மகாபலிபுரம் மற்றும் கோவளத்தில் இந்திய சர்ஃபிங் கூட்டமைப்பு, 9th Covelong Classic and Mahabs Surfing Competition 2022 (தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகள்) ஏற்பாடு செய்தது. இப்போட்டிகளில் ஆண்கள் மற்றும் பெண்கள் ஓபன், ஜூனியர்ஸ், மாஸ்டர்ஸ் மற்றும் லாங்போர்டு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகள் இடம்பெற்றன. இப்போட்டிகள் அனைத்து திறன் நிலைகளிலும் உள்ள அலை சறுக்கு வீரர்களின் திறன்களை வெளிப்படுத்தவும், நாட்டின் மிகச் சிறந்த அலை சறுக்கு வீரர்களுடன் போட்டிகளில் கலந்து கொண்டு தங்கள் திறமைகளை வெளிப்படுத்தும் தளமாக அமைந்தது.

கோவ்லாங் கிளாசிக் மற்றும் மஹாப்ஸ் பாயிண்ட் பிரேக் சேலஞ்ச் தமிழ்நாட்டிலுள்ள அலை சறுக்கு வீரர்கள் மற்றும் நீர் விளையாட்டுப் பிரியர்களுக்காக ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் அதி உன்னத வருடாந்திர நிகழ்வாக உருவெடுத்துள்ளது. திறமைகளை வெளிப்படுத்தவும், நிலையான சுற்றுலாவை மேம்படுத்தவும், கடலின் அழகைக் கொண்டாடவும் இது ஒரு தனித்துவமான தளத்தை வழங்குகிறது. இப்போட்டிகளை வெற்றிகரமாக நடத்திட வன்பொன்(Platinum) நன்கொடையாளராக தமிழ்நாடு அரசு ரூ.30.00 இலட்சத்தை வழங்கி மதிப்புமிக்க இப்போட்டிகளை வெற்றிகரமாக நடத்த உதவியது.

[2023 ஏப்ரல் 11

படலம் – 5

பிற விளையாட்டு போட்டிகள்

விளையாட்டு வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தவும், சிறந்து விளங்கவும் வாய்ப்புகளை வழங்குவதன்மூலம் விளையாட்டு உலகில் போட்டிகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அவை குழு உணர்வையும், தன்னம்பிக்கையையும், போட்டித் திறனையும் வளர்க்கின்றன. மேலும், பெருந்திரள் மற்றும் சமூகப் பங்கேற்பையும் இளம் திறமையாளர்கள் விளையாட்டைத் தொடரவும் ஊக்குவிக்கின்றன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமானது பல்வேறு போட்டி சூழல்களுக்கு ஏற்றவாறு விளையாட்டு வீரர்களை உருவாக்க பல்வேறு போட்டிகளை தொடர்ந்து நடத்தி வருகிறது.

5.1 தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய வளைகோல்பந்து சுற்று போட்டி

தற்போதைய காலகட்டத்தில் வளைகோல்பந்து போட்டிகள் அனைத்தும் செயற்கை இழை ஆடுகளத்திலேயே நடத்தப்படுகின்றன. தமிழ்நாட்டில், சென்னை (2), கோவில்பட்டி (தூத்துக்குடி மாவட்டம்), மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 7 இடங்களில் செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளங்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. வளைகோல்பந்து விளையாட்டை ஊக்குவிப்பதற்காகவும், வீரர்களுக்கு செயற்கை இழை ஆடுகளத்தில் வளைகோல்பந்து விளையாடும் வாய்ப்பினை ஏற்படுத்தி தருவதற்காகவும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சாம்பியன்ஸ் கோப்பை வளைகோல்பந்து சுற்று போட்டிகளை(League) மாவட்ட, மண்டல மற்றும் மாநில அளவில் மூன்று நிலைகளில் நடத்துகிறது.

5.2 அண்ணா மிதிவண்டி போட்டி

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு, செப்டம்பர் மாதம் அனைத்து மாவட்ட தலைநகரங்களில் அண்ணா மிதிவண்டி போட்டி நடத்தப்படுகிறது. இப்போட்டிகள் 13 வயதுக்குட்பட்டோர், 15 வயதுக்குட்பட்டோர் மற்றும் 17 வயதுக்குட்பட்டோர் ஆகிய மூன்று பிரிவுகளாக நடத்தப்படுகின்றன.

2023 ஏப்ரல் 11]

முதல் பத்து இடங்களில் வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுத்தொகை, தகுதி மற்றும் பங்கேற்பு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. அரசு ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டச் செயல்பாட்டிற்கு ரூ.38.00 இலட்சம் ஒதுக்கீடு செய்கிறது.

5.3 தமிழ்நாடு அகில இந்திய குடிமைப்பணிகள் மற்றும் மத்திய அரசு அலுவலர்களுக்கான போட்டிகள்

அரசுப் பணியாளர்கள் விளையாட்டில் ஈடுபடுவதை ஊக்குவிக்கவும், அவர்களின் திறமைகளை மேம்படுத்தவும் 2019–2020 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் பணியாற்றும் இந்திய ஆட்சிப் பணி மற்றும் மத்திய அரசு அலுவலர்களுக்கு இறகுப்பந்து (ஆண்கள் மற்றும் பெண்கள்), மட்டைப்பந்து (ஆண்கள்) மற்றும் கால்பந்து (ஆண்கள்) ஆகிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. அரசு ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டச் செயல்பாட்டிற்கு ரூ.26.43 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

5.4 அகில இந்திய குடிமைப் பணியாளர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் (AICS)

புதுடில்லியில் உள்ள மத்திய குடிமைப்பணிகள், கலை மற்றும் விளையாட்டு கட்டுப்பாட்டு வாரியம் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு விளையாட்டுகளுக்கு அகில இந்திய குடிமைப் பணியாளர்கள் விளையாட்டுப் போட்டிகளை சுழற்சி முறையில் நடத்துகிறது. இந்தப் போட்டிகள் அரசு ஊழியர்களிடையே உடல் தகுதி பேணுதல், அவர்தம் திறமையை வளர்த்துக்கொள்ளுதல் மற்றும் தங்களுக்குள் குழு உணர்வைக் கட்டமைத்துக் கொள்ளல் ஆகியவற்றை ஊக்குவிக்கிறது. இந்தப் போட்டியில் தமிழ்நாடு அணிகள் தொடர்ச்சியாக பங்கேற்று வருகின்றன.

5.5 மாவட்ட மற்றும் மாநில அளவிலான கேரம் விளையாட்டுப் போட்டிகள்

அரசு பள்ளிகள்/அரசு உதவி பெறும் பள்ளிகள்/ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு வருடாந்திர கேரம் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகள் மிக-இளையோர் (5 வகுப்பு வரை) மற்றும் இளையோர் (6 முதல் 12ஆம் வகுப்பு வரை)

என இரு பிரிவுகளில் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகளில் மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

5.6 மாநில விளையாட்டு சங்கங்கள் நடத்தும் மாநில மற்றும் தேசிய அளவிலான வாகையர் போட்டிகள்

தமிழ்நாட்டில் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு போட்டி சூழலின் அனுபவத்தினை வழங்கிட தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டு சங்கங்கள் நடத்திடும் ஒலிம்பிக் மற்றும் ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுப் போட்டிகளுக்கு ரூ.1,00,000/ – முதல் ரூ.12,00,000/ – வரை நிதியுதவி வழங்கப்படுகிறது. மேலும், தேசிய அளவிலான வாகையர் போட்டிகளில் தமிழகத்தின் சார்பாக பங்கேற்றிடும் அணிகளுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது.

5.7 வெளிநாட்டில் மேம்பட்ட பயிற்சி மற்றும் போட்டிகளில் கலந்துகொள்ளுதல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விளையாட்டு வீரர்களுக்கு வெளிநாடுகளில் நடைபெறும் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்காகவும் பயிற்சி மேற்கொள்வதற்காகவும் விமானக் கட்டணமாக வீரர்களுக்கு ரூ.30,000/ – நிதி உதவியை வழங்குகிறது.

5.8 ஊக்கமருந்து எதிர்ப்பு

விளையாட்டுகளில் நேர்மையான சூழலை உறுதி செய்வதற்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் செயல்திறன் மேம்படுத்தும் ஊக்க மருந்துகள் மற்றும் பிற தடை செய்யப்பட்ட மருந்துகளை விளையாட்டில் பயன்படுத்துவதைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஊக்கமருந்து எதிர்ப்பு நடவடிக்கைகள் விளையாட்டுகளின் ஒருமைப்பாட்டைப் பேணுவதற்கும் அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் சமமான விளையாட்டு தளத்தை வழங்குவதற்கும் இன்றியமையாதது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையமானது உலக ஊக்கமருந்து தடுப்பு நிறுவனத்தின் (WADA) விதிகளின் அடிப்படையில், தேசிய ஊக்கமருந்து தடுப்பு முகமையின் (NADA) உதவியுடன், கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வழங்குதல், ஊக்கமருந்து சோதனைகள், விதிமீறலுக்கு தடைகள்

2023 ஏப்ரல் 11]

விதித்தல், தொழில்நுட்ப ஆதரவை வழங்குதல் ஆகியவற்றின்மூலம் போதைப்பொருள் இல்லாத விளையாட்டு கலாச்சாரத்தை உருவாக்குவதைக் கொள்கையாகக் கொண்டுள்ளது.

5.9 மாநில விளையாட்டு சங்கங்கள் – பிரீமியர் போட்டிகளை நடத்துதல்

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் முழுமையாக நிர்ணயம் செய்துள்ள பின்வரும் விதிமுறைகளைப் பூர்த்தி செய்திடும் மாநில விளையாட்டுச் சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்குகிறது. தொடர்புடைய மாநில சங்கங்களது விதிகள் மற்றும் துணை விதிகள், குறிப்பாணை, சரத்துக்கள், சங்கங்களது மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட கூட்ட முடிவுகள், மூன்று ஆண்டுகள் வரவு செலவு கணக்கு தணிக்கை அறிக்கை, தேசிய கூட்டமைப்பின் அங்கீகாரம், இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் அங்கீகாரம், ஒலிம்பிக் மற்றும் ஒலிம்பிக் அல்லாத விளையாட்டு சங்கங்கள் குறித்த மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் அங்கீகாரம் ஆகியவை அடங்கும்.

ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கான தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் அங்கீகாரம், சங்கம் நடத்தும் மாநில மற்றும் தேசிய அளவிலான போட்டிகளின் விவரங்கள், சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்தல், அங்கீகரிக்கப்பட்ட மாவட்ட சங்கங்களின் விவரம் மற்றும் விளையாட்டு ஆடுகள வசதிகள் குறித்த விவரங்கள், விதிகள் மற்றும் நெறிமுறைகள் போன்றவை அங்கீகாரம் வழங்குவதற்கான பிற அளவுகோல்களாகும். மாநிலத்தில் ஒரு விளையாட்டுக்கு ஒரு விளையாட்டு சங்கத்திற்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கப்படும். தற்போது, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் 31 மாநில விளையாட்டு சங்கங்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் மாநில விளையாட்டு சங்கங்கள் நடத்தும் போட்டிகளுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் நிதியுதவி வழங்கி வருகிறது. தேசிய அளவிலான ஒலிம்பிக் மற்றும் ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு ரூ.12.00 இலட்சமும் மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு ரூ.1.00 இலட்சமும் அங்கீகாரம் வழங்கப்பட்ட மாநில விளையாட்டு சங்கங்களுக்கு நிதியுதவியாக வழங்கப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 11

5.10 சென்னையின் நவீன விளையாட்டரங்கங்களில் நடத்தப்படும் பிரீமியர் போட்டிகள்

சர்வதேச மற்றும் தேசிய போட்டிகளை நடத்துவதற்காக கட்டப்பட்ட ஐந்து நவீன அரங்கங்களை கொண்ட பெருமையை சென்னை பெற்றுள்ளது. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துடன் இணைந்து பல்வேறு விளையாட்டு சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகள் பல பெருமைமிகு விளையாட்டு போட்டிகள் இந்த அதி நவீன விளையாட்டரங்கங்களில் நடத்தப்படுகின்றன.

5.10.1. ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டிகளின் விவரம்

சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் 15 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா மற்றும் நேபாளத்திற்கிடையேயான சர்வதேச பெண்கள் கால்பந்து விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. பிப்ரவரி 2023 இல் ஒலிம்பிக் தகுதிச் சுற்றுக்கு முன்னதாக ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் இரண்டு நட்புப் போட்டிகள் நடத்தப்பட்டன. இந்தியன் சூப்பர் லீக் அணியான சென்னையின் எஃப்சியின் சொந்த மண்ணாக ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் உள்ளது. 2022-2023 சீசனில் 12 போட்டிகள் சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடத்தப்பட்டன.

5.10.2. ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க போட்டிகள்

ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கினை மையமாகக் கொண்டு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதில் தேசிய அளவிலான சீனியர் கூடைப்பந்து போட்டி, வாகோ (WAKO) இந்திய அளவிலான தேசிய சீனியர் மற்றும் மாஸ்டர் கிக் பாக்சிங் வாகையர் போட்டி 2022, 84-வது இளையோர் மற்றும் இளைஞர் மேசைப்பந்து தேசிய வாகையர் போட்டி போன்றவை குறிப்பிடத்தக்க போட்டிகளாகும். மிக இளையோர் ஜூடோ தேசிய வாகையர் போட்டி, கேலோ இந்தியா 3 ஆம் கட்ட மகளிர் வாள்சண்டை லீக் மற்றும் தரவரிசைப்போட்டி மற்றும் தொழில்முறை போட்டிகளான வீக்ஸ்போஇந்தியா பிக்பாஷ் (WeexpoIndia Big Bash)-முதலாவது இளையோர் இறகுப்பந்து லீக்

2023 ஏப்ரல் 11]

மற்றும் ரெட் புல் இறகுப்பந்து மகளிர் இரட்டையர் போட்டிகள் போன்ற பிற போட்டிகளும் நடத்தப்பட்டுள்ளன.

5.10.3. மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டிகள்

எழும்பூர், மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கில் 19 வயதிற்குட்ட மாணவ / மாணவியர்களுக்கான தென்மண்டல அளவிலான வளைகோல்பந்து போட்டிகள், தென்மண்டல அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான மகளிர் வளைகோல்பந்து போட்டிகள், உலகக் கோப்பை வளைகோல்பந்து சுற்றுப்பயணத்திட்ட (FIH) காட்சி போட்டி என பல்வேறு நிலைகளில் வளைகோல்பந்து விளையாட்டினை பிரபலப்படுத்தும் சென்னையின் அர்ப்பணிப்பினை வெளிப்படுத்துகிறது.

5.10.4. சென்னை டென்னிஸ் விளையாட்டரங்கில் நடைபெறும் போட்டிகள்

சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டி (WTA), சர்வதேச ஆடவர் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டி(ATP), அகில இந்திய டென்னிஸ் கூட்டமைப்பு தேசிய அளவில் நடத்தும் சக்கர நாற்காலி டென்னிஸ் போட்டி (AITA), 2022 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பை மண்டல அளவிலான டென்னிஸ் போட்டி உட்பட பல உயர்மட்ட விளையாட்டு போட்டிகளுக்கு சென்னை களமாக இருந்து வருகிறது.

5.10.5. வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் நடைபெற்ற நீச்சல் போட்டிகள்

சென்னை வேளச்சேரி நீச்சல் குள வளாகத்தில் பல்வேறு நீச்சல் வாகையர் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. தேசிய அளவிலான தரவரிசை வாகையர் போட்டி, தேசிய அளவிலான தென் மண்டல நீச்சல் வாகையர் போட்டி, மாநில அளவிலான இளையோர், மிக-இளையோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மூத்தோர் நீச்சல் போட்டிகள் 2022-2023 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன.

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான போட்டிகளை நடத்துவதன்மூலம் தமிழகத்தில் விளையாட்டு வளர்ச்சியை மேம்படுத்துவதில் சென்னையின் நவீன விளையாட்டரங்கங்கள்

முக்கிய பங்காற்றியுள்ளன. இந்த மைதானங்கள் விளையாட்டு பங்கேற்பின் சிறப்பை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் சென்னையை முதன்மையான விளையாட்டு இடமாக அங்கீகரிக்கப்படுவதற்கும் பங்களிப்பினை வழங்குகிறது.

படலம் – 6

திறன் கண்டறிதல்

"இளம் வயதில் திறனை கண்டறிதல்" என்பது திறமைகளை வளர்த்தல் மற்றும் விளையாட்டுத் திறனை மேம்படுத்துதல் என்னும் கோட்பாட்டில் அடங்கும். இதனைக் கருத்தில் கொண்டு கீழ்க்காணும் திட்டங்கள் மாநிலத்தில் செயல்படுத்தப்படுகின்றன.

6.1. உலக திறனாளர்கள் கண்டறியும் திட்டம் (WBTSS):

உலக திறனாளர்கள் கண்டறியும் திட்டம் என்பது விளையாட்டுத் துறையின் இளம், திறமையான விளையாட்டு வீரர்களைக் கண்டறிந்து சிறு வயதிலேயே அவர்களின் திறனை வளர்ப்பதற்கான ஒரு முறையான மற்றும் கட்டமைக்கப்பட்ட அணுகுமுறையாகும். இத்திட்டத்தில் பள்ளிகளில் முதல் கட்டமாக நடத்தப்படும் உடற்தகுதி தேர்வின் அடிப்படையில் பிற தேர்வு முறைகளும், சிறப்பு பயிற்சி முறைகளும் பின்பற்றப்படுகின்றன.

இத்திட்டத்தின் முதற்படியாக பள்ளிக் கல்வித் துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்துடன் இணைந்து பள்ளி மாணவர்களின் விளையாட்டு திறனைக் கண்டறிய உடற்திறன் தேர்வு நடத்தப்படுகிறது. இத்தேர்வுகள் வேகம், தாங்கும் ஆற்றல், சுறுசுறுப்பு, ஒருங்கிணைப்பு, வலிமை மற்றும் நெகிழ்வுத்தன்மை போன்ற அத்தியாவசிய உடற் பண்புகளை மதிப்பிடுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. உள்ளார்ந்த உடல் திறன்களைக் கொண்ட விளையாட்டு வீரர்களை அடையாளம் காண்பதன் மூலம், விளையாட்டு மற்றும் பிற உடல் செயல்பாடுகளில் அவர்களின் திறன்களை வளர்ப்பதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்குவதை உலக திறனாளர்கள் கண்டறியும் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த உடற்திறன் தேர்வு பின்வரும் குணாதிசயங்களை மதிப்பிடுவதற்காக நடத்தப்படுகிறது

2023 ஏப்ரல் 11]

1.	*50 மீ ஓட்டம்*	வேகம்
2.	பெண்களுக்கான *600* மீ ஓட்டம் / ஆண்களுக்கான *800* மீ ஓட்டம்	தாங்கும் ஆற்றல்
3.	*4* கிலோ குண்டு எறிதல்	வலிமை
4.	நின்ற நிலையில் நீளம் தாண்டுதல்	வெளிப்படுத்தும் திறன்
5.	*6 X 10* மீ குறுதூர ஓட்டம்	சுறுசுறுப்பு

இரண்டாம் கட்டமாக நடத்தப்படும் தேர்வுகளில் 10 மதிப்பெண்களுக்கு 10, 9 மற்றும் 8 மதிப்பெண்கள் பெற்ற சிறுவர், சிறுமிகள் கல்வி மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்கின்றனர். மண்டல அளவிலான போட்டிகள் ஒன்பது வெவ்வேறு இடங்களில் நடைபெறுகின்றன.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சிறப்பு அகாடமிகளில் தேர்வு செய்யப்பட ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஒவ்வொரு மண்டலத்திலும் முதல் 10 இடங்கள் பெற்றவர்களுக்கு தேர்வு போட்டிகள் நடத்தப்படுகின்றன. தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படும் சிறப்பு வல்லுனர்கள் அளிக்கும் பயிற்சிகளின்மூலம் அவர்களின் முழு திறமையுடன் கூடிய விளையாட்டு சாதனைகளை வெளிப்படுத்த இத்திட்டம் உதவுகிறது.

உலக திறனாளர்கள் கண்டறியும் திட்டம் இளம் திறனாளர்களின் விளையாட்டு மற்றும் உடற்கல்வி திறனை மேம்படுத்த வலிமையான அடித்தளமாக அமைவதோடு அவர்களது எதிர்கால திட்டத்திற்கான விரிவான அணுகுமுறையாக உள்ளது. இது உலக அரங்கில் போட்டியிட திறன் கொண்ட இளம் விளையாட்டு வீரர்களின் வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.

6.1.1 விளையாட்டு விடுதி சேர்க்கைக்கான தேர்வு

விளையாட்டு விடுதிகள் இளம் வீரர்களுக்கு ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக வடிவமைக்கப்பட்ட விரிவான பயிற்சித் திட்டங்கள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. VII, VIII, IX மற்றும் XI வகுப்பு மாணவர்களை விளையாட்டு விடுதிகளில் சேர்க்க மாவட்டம் மற்றும் மாநில அளவிலான தேர்வு என இரண்டு கட்டங்களாக தேர்வுகள் நடத்தப்படுகின்றன.

தங்குமிட வசதியுடன் கூடிய பயிற்சி விளையாட்டு வீரர்களின் செயல்திறனை மேம்படுத்தியுள்ளது என நிரூபணமாகியுள்ளது. தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம், மாநிலம் முழுவதும் விளையாட்டு விடுதிகளை நிறுவி, மாணவர்களுக்கு குறிப்பாக, கிராமப்புற மற்றும் வளர்ந்து வரும் நகர்ப்புற மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கிறது. இந்த விடுதிகள் அறிவியல் பூர்வமான விளையாட்டுப் பயிற்சி, உறைவிடம் மற்றும் பிற தேவையான வசதிகளை வழங்குகின்றன. இதனால் மாணவர்கள் அருகிலுள்ள பள்ளிகளில் தங்கள் கல்வியைத் தொடர அனுமதிக்கிறது. தமிழகத்தின் 23 மாவட்டங்களில் தற்போது 27 விளையாட்டு விடுதிகள் இயங்கி வருகின்றன, இதில் 1925 மாணவர்கள் தங்கி படிக்கின்றனர்.

6.1.2 சிறப்பு நிலை விளையாட்டு விடுதி சேர்க்கைக்கான தேர்வு

சிறப்பு நிலை விளையாட்டு விடுதியின் முக்கிய நோக்கம், திறமையானவர்களை அடையாளம் கண்டு தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் சாதித்திடும் வகையில் பன்னாட்டு அளவிலான அங்கீகாரத்தை உருவாக்கித் தருகிறது. ஆண்டுதோறும் இவ்விடுதிகளில் மாநில அளவிலான தேர்வுகள்மூலம் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் பயிற்சி பெற அனுமதிக்கப்படுகிறார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு மற்றும் போட்டிகளில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப ரீதியிலான பயிற்சிகளைப் பெறும் வாய்ப்பை கல்லூரி மாணவர்களுக்கு வழங்கும் வகையில் நான்கு சிறப்பு விளையாட்டு விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆண்களுக்கான விளையாட்டு விடுதி சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம் மற்றும் கோவில்பட்டியிலும், பெண்களுக்கான விளையாட்டு விடுதி சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்திலும் மாவட்ட விளையாட்டு வளாகம், வேலூரிலும் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் தங்கி பயிற்சி பெற 230 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

6.1.3 முதன்மை நிலை விளையாட்டு மையங்களில் சேர்க்கைக்கான தேர்வு (CoE)

10 முதல் 14 வயதுக்குட்பட்ட திறமையான இளம் மாணவர்களைக் கண்டறிவதே முதன்மை நிலை விளையாட்டு மையங்களின் நோக்கமாகும். சென்னை, திருச்சிராப்பள்ளி,

2023 ஏப்ரல் 11]

திருநெல்வேலி, ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் செயல்படும், இம்மையங்களில் 100 சிறுவர்கள் மற்றும் 75 சிறுமியர்கள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய நிபுணர் குழுவால் தேர்வு செய்யப்படுகிறார்கள்.

6.2 பயிற்சித் திட்டங்கள்

6.2.1 கோடைகால பயிற்சி முகாம்கள்

தமிழ்நாட்டில் இருக்கும் அனைத்து மாவட்ட தலைநகரங்கள் மற்றும் 25 சிறிய விளையாட்டரங்கங்களிலும் 16 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியர்களுக்கு கோடைகால பயிற்சி நடத்தப்படுகிறது. இப்பயிற்சி முகாமில் தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, கையுந்துபந்து ஆகிய விளையாட்டுகளில் தொழில்நுட்ப தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள் / விளையாட்டு நிபுணர்கள்மூலம் 21 நாட்கள் கோடை விடுமுறை நாட்களில் அறிவியல் பூர்வமான பயிற்சி அளிக்கப்படுகிறது.

6.2.2 கல்வி மாவட்ட அளவிலான பயிற்சி முகாம்

உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின்கீழ் நடத்தப்படும் கல்வி மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களைப் பெறும் 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு ஐந்து நாள் உறைவிடம் இல்லாத பயிற்சி வழங்கப்படுகிறது. இந்த முகாமில் அவர்களுக்கு அடிப்படை விளையாட்டு நுணுக்க பயிற்சி, உணவுப்படி மற்றும் விளையாட்டு சீருடைகள் வழங்கப்படுகின்றன.

6.2.3 மாவட்ட அளவிலான உறைவிட பயிற்சி முகாம்

இந்தப் பயிற்சி முகாம் கோடை விடுமுறையில் 15 நாட்கள் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலிருந்து கண்டறியப்படும் 60 திறமைசாலிகள் (ஆண்கள் மற்றும் பெண்கள்) இம்முகாமில் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். அவர்களுக்கு விளையாட்டு நிபுணர்கள் மற்றும் தகுதி வாய்ந்த பயிற்சியாளர்கள்மூலம் அடிப்படை விளையாட்டு நுணுக்கங்கள் கற்றுத் தரப்படுகின்றன. மேலும் அவர்களுக்கு உணவுப்படி, தங்குமிடம் மற்றும் விளையாட்டுச் சீருடைகள் வழங்கப்படுகின்றன.

6.2.4 திறனாளர்களைக் கண்டறியும் முகாம்

திறனாளர்களைக் கண்டறியும் திட்டத்தின்மூலம் 14 வயதுக்குட்பட்ட 10 சிறுவர்கள் மற்றும் 10 சிறுமியர்கள் தேர்வு செய்யப்பட்டு இம்முகாமில் குறிப்பிட்ட விளையாட்டில் 6 மாத காலத்திற்கு அடிப்படை பயிற்சி வழங்கப்படுகிறது. இப்பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கு பயணப்படி, உணவுப்படி, விளையாட்டுச் சீருடை மற்றும் பயிற்சி உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

6.3 உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் உடற்கல்வி இயக்குநர்களுக்கான புத்தாக்க பயிற்சி

பள்ளி அளவில் உடற்கல்வி ஆசிரியர்கள் / உடற்கல்வி இயக்குநர்கள் அடிப்படை விளையாட்டுப் பயிற்சியாளர்களாகச் செயல்படுகின்றனர். அவர்களுக்கு விளையாட்டு சம்பந்தமான புதிய விதிகள் மற்றும் வழிமுறைகள் பற்றி அறிந்திருத்தல் அவசியமாகும். இந்த நடைமுறையினைக் கருத்தில் கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு விளையாட்டுக்களில் புத்தாக்கப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

படலம் – 7

திறன் மேம்பாடு

திறமையின் வளர்ச்சிக்கு திறன் மதிப்பீடு மற்றும் தேவையான மேம்பாட்டு திட்டங்கள் பல்வேறு பிரிவுகளின்கீழ் பின்வருமாறு செயல்படுத்தப்படுகின்றன:

7.1 விளையாட்டு விடுதிகள்

பள்ளி அளவில் விளையாட்டுத் திறனாளர்களை கண்டறிந்து அவர்களை ஊக்குவிப்பதற்காக விளையாட்டு விடுதிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த விளையாட்டு விடுதிகளில் VII, VIII, IX மற்றும் XI வகுப்புகளில் படிக்கும் மாணவ மாணவியர்கள், இரண்டு அடுக்கு தேர்வுப் போட்டிகள் அதாவது, மாவட்ட அளவிலான தேர்வுப் போட்டிகள் மற்றும் மாநில அளவிலான தேர்வுப் போட்டிகள்மூலம் விளையாட்டு விடுதிகளில் சேர்க்கப்படுகின்றனர். அறிவியல் பயிற்சி மட்டுமின்றி, விளையாட்டு விடுதிகளில் உள்ள மாணவ மாணவியர்களுக்கு உணவுக் கட்டணமாக 320

2023 ஏப்ரல் 11]

நாட்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.250/-ம், விளையாட்டு சீருடைக்கு ஆண்டுக்கு ரூ.4,000/-ம் மற்றும் விளையாட்டு உபகரணங்களுக்கு ரூ.1,000/-ம் வழங்கப்படுகிறது. மாநிலத்தில் 27 விளையாட்டு விடுதிகளில் மொத்தம் 1925 மாணவர்களுடன் செயல்பட்டு வருகின்றன. விளையாட்டு விடுதிகளில் பயிற்சி வழங்கப்படும் விளையாட்டுகளின் விவரம் பின்வருமாறு:

ஆண்களுக்கான விளையாட்டு விடுதி

வரிசை எண்	**மாவட்டம்**	**விளையாட்டு**
1	*அரியலூர்*	*வளைகோல்பந்து மற்றும் கைப்பந்து*
2	*சென்னை (அரசு மேல்நிலைப் பள்ளி, புதூர்)*	*மட்டைப்பந்து*
3	*சென்னை (ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம்)*	*குத்துச்சண்டை, வாள்சண்டை மற்றும் ஜூடோ*
4	*கோயம்புத்தூர்*	*தடகளம், கூடைப்பந்து, ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் கையுந்துப்பந்து*
5	*கடலூர்*	*தடகளம், இறகுப்பந்து மற்றும் டேக்வோண்டோ*
6	*கிருஷ்ணகிரி*	*தடகளம், கால்பந்து, கைப்பந்து மற்றும் டேக்வோண்டோ*
7	*மதுரை*	*தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, மேசைப்பந்து மற்றும் கையுந்துப்பந்து*
8	*என்எல்சி, நெய்வேலி*	*தடகளம், கூடைப்பந்து, கால்பந்து*
9	*இராமநாதபுரம்*	*தடகளம், வளைகோல்பந்து*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 11

வரிசை எண்	மாவட்டம்	விளையாட்டு
10	சிவகங்கை	தடகளம், கால்பந்து
11	தஞ்சாவூர்	கூடைப்பந்து, கையுந்துபந்து
12	நீலகிரி	தடகளம், கால்பந்து
13	தூத்துக்குடி	தடகளம், கூடைப்பந்து, கால்பந்து மற்றும் ஸ்குவாஷ்
14	திருச்சிராப்பள்ளி	தடகளம், குத்துச்சண்டை, கால்பந்து, வளைகோல்பந்து, நீச்சல் மற்றும் கையுந்துப்பந்து
15	திருநெல்வேலி	தடகளம், கூடைப்பந்து, கால்பந்து, வளைகோல்பந்து, நீச்சல், டென்னிஸ் மற்றும் கையுந்துப்பந்து.
16	விழுப்புரம்	கைப்பந்து, கபாடி மற்றும் நீச்சல்

மகளிர் விளையாட்டு விடுதி

வரிசை எண்	மாவட்டம்	விளையாட்டு
1	ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டரங்கம், சென்னை	குத்துச்சண்டை, வாள்சண்டை ஜுடோ மற்றும் கையுந்துப்பந்து
2	தருமபுரி	இறகுப்பந்து, கபாடி, கையுந்துப்பந்து
3	திண்டுக்கல்	தடகளம், கூடைப்பந்து மற்றும் கால்பந்து
4	ஈரோடு	தடகளம், கால்பந்து, நீச்சல் மற்றும் கையுந்துப்பந்து
5	நாகர்கோவில்	தடகளம், கையுந்துப்பந்து

2023 ஏப்ரல் 11]

வரிசை எண்	மாவட்டம்	விளையாட்டு
6	*நாமக்கல்*	*கால்பந்து, கபாடி*
7	*பெரம்பலூர்*	*தடகளம், கைப்பந்து மற்றும் டேக்வோண்டோ*
8	*புதுக்கோட்டை*	*தடகளம் மற்றும் வளைகோல்பந்து*
9	*திருவண்ணாமலை*	*தடகளம், கூடைப்பந்து, கைப்பந்து, மற்றும் வளைகோல்பந்து*

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான விளையாட்டு விடுதி

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு
1	*செல்வம் மேல்நிலைப் பள்ளி, நாமக்கல்*	*வில்வித்தை (மாணவர்கள்), தடகளம் (மாணவியர்கள்), வாள்சண்டை (மாணவர்கள் மற்றும் மாணவியர்கள்)*
2	*தேனி*	*கூடைப்பந்து மற்றும் கபாடி (மாணவர்கள்), கையுந்துப்பந்து (மாணவியர்கள்)*

7.2 சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள்

சிறப்பு நிலை விளையாட்டு விடுதியானது கல்லூரி பயிலும் மாணவர்களுக்கு மேம்பட்ட விளையாட்டுப் பயிற்சி அளிப்பதற்காகவே உருவாக்கப்பட்டதாகும். இவ்விளையாட்டு விடுதியில் மேம்பட்ட விளையாட்டு பயிற்சியுடன் ஊட்டச் சத்து நிறைந்த உணவு மற்றும் பல்வேறு அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கான நிதி உதவி ஆகியவை மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. மொத்தம் 230 ஆண்கள் மற்றும் பெண்கள் சேர்க்கப்பட்டு சிறப்பு நிலை விளையாட்டு விடுதிகள் பின்வரும் நான்கு இடங்களில் செயல்பட்டு வருகின்றன:

[2023 ஏப்ரல் 11

வ. எண்	விளையாட்டு விடுதி/இடம்	விளையாட்டுக்கள்	மாணவ / மாணவியர்களது மொத்த எண்ணிக்கை
1	சிறப்பு நிலை விளையாட்டு விடுதி (ஆண்கள்) ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை	தடகளம், இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, வாள்சண்டை, ஜுடோ, துப்பாக்கி சுடுதல், கையுந்துப்பந்து மற்றும் பளுதூக்குதல்	80
2	சிறப்பு நிலை விளையாட்டு விடுதி (ஆண்கள்) கோவில்பட்டி, தூத்துக்குடி மாவட்டம்	வளைகோல்பந்து	30
3	சிறப்பு நிலை விளையாட்டு விடுதி (பெண்கள்) ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கம், சென்னை	தடகளம், குத்துச்சண்டை, கால்பந்து, ஜுடோ, கையுந்துப்பந்து மற்றும் பளுதூக்குதல்	60
4	சிறப்பு நிலை விளையாட்டு விடுதி (பெண்கள்) காட்பாடி, வேலூர்	கூடைப்பந்து, கைப்பந்து, கபாடி மற்றும் வளைகோல்பந்து	60
மொத்தம்			**230**

7.3 முதன்மை நிலை விளையாட்டு மையம்

10 முதல் 14 வயதுக்குட்பட்ட சிறுவர் மற்றும் சிறுமியர் பல்வேறு விளையாட்டுப் பிரிவுகளில் தேர்வு செய்யப்பட்டு இந்த மையத்தில்

2023 ஏப்ரல் 11]

அறிவியல் பூர்வமான முறையான பயிற்சி, சத்தான உணவு மற்றும் விளையாட்டு வீரர்களின் செயல்திறன் மேம்பாட்டிற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் இந்த முதன்மை நிலை விளையாட்டு மையம் வழங்குகிறது. தமிழ்நாட்டில் 6 முதன்மை நிலை விளையாட்டு மையங்கள் செயல்பட்டு வருகின்றன:

வ. எண்.	முதன்மை நிலை விளையாட்டு மையம் அமையப்பெற்றுள்ள இடம்	விளையாட்டு	மாணவ / மாணவியர்களது மொத்த எண்ணிக்கை
1	ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், சென்னை (மாணவர்கள்)	தடகளம், இறகுபந்து	25
2	ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டரங்கம், சென்னை (மாணவியர்கள்)	தடகளம், இறகுபந்து	25
3	திருச்சிராப்பள்ளி (மாணவர்கள்)	இறகுபந்து, டேக்வோண்டோ	25
4	திருநெல்வேலி (மாணவர்கள்)	குத்துச்சண்டை, நீச்சல்,, டென்னிஸ், ஜிம்னாஸ்டிக்	25
5	ஈரோடு (மாணவியர்கள்)	நீச்சல், ஜிம்னாஸ்டிக், மேசைப்பந்து	25
6	சத்துவாச்சாரி, வேலூர் (மாணவர்கள் (ம) மாணவியர்கள்)	பளுதூக்குதல்	50
மொத்தம்			**175**

[2023 ஏப்ரல் 11

7.4 சிறப்பு விளையாட்டு அகாடமிகள்

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் சிறப்பு விளையாட்டு அகாடமிகள் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ளன. உலகத் திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின்கீழ் பள்ளிகளில் நடத்தப்படும் உடற்தகுதி, திறன் தகுதித் தேர்வுகளில் 10 மதிப்பெண்களுக்கு 10, 9 மற்றும் 8 மதிப்பெண்கள் பெறும் மாணவர்கள் / மாணவியர்களது திறமையினை வல்லுநர்கள்மூலம் கண்டறிந்து, அவர்களது தனித் திறனின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டில் அனுபவம் வாய்ந்த துறை சார்ந்த பயிற்றுநர்கள் மற்றும் சர்வதேச வீரர்கள்மூலம் அறிவியல் பூர்வமான பயிற்சி அளிக்கப்படுகிறது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்படும் அகாடமிகள்

வ. எண்.	அகாடமிகளின் பெயர்	இடம்
1	*குறுந்தூர ஓட்டம் மற்றும் தாண்டுதல் அகாடமி*	*மதுரை*
2	*நீச்சல் அகாடமி (டைவிங்)*	*நீச்சல் குள வளாகம், வேளச்சேரி, சென்னை*
3	*வளைகோல்பந்து அகாடமி*	*மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல்பந்து விளையாட்டரங்கம், சென்னை*
4	*சிறுவர்களுக்கான கால்பந்து அகாடமி*	*நாகப்பட்டினம்*
5	*எறிதல் அகாடமி*	*திருச்சி*
6	*மிததூர அகாடமி*	*திருவண்ணாமலை*
7	*நெடுந்தூரஅகாடமி*	
8	*சிறுமியர்களுக்கான கால்பந்து அகாடமி*	*திண்டுக்கல்*
9	*மேசைப்பந்து அகாடமி*	*சென்னை*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

2023 ஏப்ரல் 11]

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்மூலம் உதவி பெறும் அகாடமிகள்

வ. எண்.	அகாடமிகளின் பெயர்	இடம்
1	ஏகேஜி மேசைப்பந்து அகாடமி	சென்னை
2	டால்பின் நீச்சல் அகாடமி	சென்னை
3	தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் அகாடமி,	சென்னை

7.4.1 இறகுபந்து அகாடமிகள்

தமிழ்நாட்டில் இறகுபந்து பிரபலமடைந்து வருவதோடு, இளம் திறனாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களது திறனை மேம்படுத்திடும் நோக்கில் தமிழ்நாடு அரசு, சென்னை, மதுரை, கடலூர், திருச்சி மற்றும் தருமபுரி ஆகிய ஐந்து முக்கிய மாவட்டங்களில் இறகுபந்து அகாடமிகளை அமைத்துள்ளது. இந்த அகாடமிகள் சிறுவர்கள் மற்றும் சிறுமிகளிடையே இறகுபந்து திறன்களை வளர்ப்பதையும், விளையாட்டின் மீதான ஆர்வத்தை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

அனைத்து அகாடமிகளிலும் 16 வயதுக்குட்பட்ட 15 திறன்வாய்ந்த இறகுபந்து வீரர்களுக்கு சிறந்த பயிற்றுநர்கள் மூலம் மாதம் ஒன்றிற்கு 25 நாட்கள் வீதம் 12 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. அவர்களை முழுமையாக ஊக்கப்படுத்திடும் வகையில் கூடுதலாக அறிவியல் பூர்வமான பயிற்சி, சிற்றுண்டி, போக்குவரத்து படிகளும் வழங்கப்படுகின்றன.

7.4.2 ஜிம்னாஸ்டிக் மையம் — ஈரோடு மாவட்டம்

தமிழ்நாடு அரசு கழைகூத்தாடிகள் சமூகத்தினரிடையே பாரம்பரிய விளையாட்டை ஊக்குவிப்பதில் அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருகிறது. இதன் விளைவாக ஈரோடு மாவட்டம் கரட்டுப்பாளையத்தில் ஜிம்னாஸ்டிக் மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மையம் விளையாட்டு வீரர்களுக்கு அறிவியல் சார்ந்த பயிற்சி, சத்தான உணவு மற்றும் போட்டி நிகழ்வுகளுக்கு தயார்ப்படுத்துதல் ஆகியவற்றுடன், அவர்கள் விளையாட்டில் சிறந்து விளங்க உதவுகிறது.

[2023 ஏப்ரல் 11

7.5 தமிழ்நாட்டில் உள்ள உயர் செயல்திறன் விளையாட்டு மையங்கள்

7.5.1 மலை மேலிடை பயிற்சி மையம், நீலகிரி

மலை மேலிடத்தில் பயிற்சி மேற்கொள்ளும்போது இதய செயல்பாடு, தசை செயல்திறன் மற்றும் ஒட்டுமொத்த ஆரோக்கிய மேம்பாடு கிடைக்கின்றன. நமது உடலில் குறைந்த ஆக்ஸிஜன் இருக்கும் சூழலில் பயிற்சியளிப்பதன்மூலம் விளையாட்டு வீரர்களின் வலிமை மற்றும் தாங்கும் ஆற்றல் அதிகரிக்க இது உதவுகிறது. இப்பயிற்சியின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, தமிழக அரசு ரூ.500.00 இலட்சம் செலவினத்தில் மலை மேலிட பயிற்சி மையம் ஒன்றினை நீலகிரியில் அமைத்துள்ளது. இந்த தனித்துவமான திட்டம் நாடு முழுவதும் உள்ள உயரிய விளையாட்டு வீரர்களுக்கான பயிற்சி மையமாகச் செயல்படும்.

7.5.2 பாய்மரப் படகோட்டுதல் அகாடமி, பாய்மரப் படகோட்டுதல் மற்றும் துடுப்புப் படகோட்டுதலுக்கான முதன்மை நிலை மையம்

தமிழ்நாட்டில் உள்ள 1087 கி.மீ. நீளமுள்ள கடற்கரையானது நீர் விளையாட்டுகளை மேம்படுத்துவதற்கு மிகச் சிறந்த நிலையில் உள்ளது. படகோட்டுதல் மற்றும் பாய்மரப் படகோட்டுதல் ஆகியவை ஒலிம்பிக் பதக்க வாய்ப்புகள் அதிகம் உள்ள இரண்டு நீர் விளையாட்டுகளாகும். தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று படகோட்டும் வீரர்கள் 2020 ஆம் வருடம் டோக்கியோவில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் சார்பில் பங்கேற்றுள்ளனர். இந்த விளையாட்டுகளை ஆதரிக்க, சென்னையில் பாய்மரப் படகு அகாடமி மற்றும் பாய்மரப் படகு மற்றும் துடுப்பு படகோட்டுதலுக்கான சிறந்த மையம் அமைத்திட அரசு ரூ.700.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

7.5.3 கெனோயிங் மற்றும் கயாக்கிங்கிற்கான முதன்மை நிலை மையம்

ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் பெற பெருமளவு வாய்ப்புகள் கொண்டது இந்த நீர் விளையாட்டுகளாகும். இந்த விளையாட்டுகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், மேலக்கோட்டையூரில் உள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல்

2023 ஏப்ரல் 11]

மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்திற்கு அருகில், கெனோயிங் மற்றும் கயாக்கிங்கிற்கான சிறந்த மையத்தை தமிழக அரசு நிறுவியுள்ளது. விளையாட்டு வீரர்கள் இந்தத் துறைகளில் சிறந்து விளங்குவதற்கு உதவும் வகையில், அதிநவீன வசதிகள் மற்றும் பயிற்சிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட முதன்மை நிலை மையமாக இது திகழ்கிறது.

7.5.4 இந்திய விளையாட்டு ஆணையம் (SAI) – தமிழ்நாடு

இந்திய விளையாட்டு ஆணையம் (SAI) ஒரு தலைசிறந்த விளையாட்டு அமைப்பாக இருப்பதால், நாட்டின் விளையாட்டு வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளது. ஒரு மாநிலத்தில் இந்திய விளையாட்டு ஆணையத்தின் பிராந்திய மையத்தைத் திறப்பது, அந்த மாநிலத்தில் மத்திய அரசின் விளையாட்டு நிர்வாகத்தை நிறுவுவது மட்டுமல்லாமல், மாநிலத்தின் முழு விளையாட்டு சூழலையும் அம்மாநில இளைஞர்கள் பெற்றிட எண்ணற்ற வாய்ப்புகளைத் தருகிறது. தற்போது தமிழ்நாட்டில் மயிலாடுதுறை, சேலம் மற்றும் சென்னையில் இந்திய விளையாட்டு ஆணையத்தின் பயிற்சி மையம் உள்ளது.

படலம் – 8

விளையாட்டு சாதனைகள்

தமிழ்நாடு ஒரு வளமான விளையாட்டு வரலாற்று பெருமையை கொண்டுள்ளதோடு இந்திய விளையாட்டுகளில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்த ஏராளமான நம்பிக்கைக்குரிய விளையாட்டு வீரர்களை உருவாக்கியுள்ளது. தடகளம், இறகுபந்து, கூடைப்பந்து, சதுரங்கம், மட்டைப்பந்து, வாள்வீச்சு, கால்பந்து, வளைகோல்பந்து, கபாடி, கையுந்துப்பந்து, பளுதூக்குதல் போன்ற பல விளையாட்டுகளை உள்ளடக்கிய வலுவான விளையாட்டு கலாச்சாரத்திற்குரிய மாநிலமாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த பல தனித்துவமான விளையாட்டு வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் வெற்றிகளைப் பெற்றுள்ளனர், அவர்களின் விவரம் வருமாறு:-

- *திரு. அச்சந்தா சரத் கமல், மேசைப்பந்து விளையாட்டில் அவரது சிறந்த சாதனைகளுக்காக 2022 இல் மதிப்புமிக்க மேஜர் தயான் சந்த் கேல் ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.*

[2023 ஏப்ரல் 11

- திருமதி அனிதா பால்துரை, கூடைப்பந்து விளையாட்டில் அவர் செய்த சிறப்பான பங்களிப்புகளுக்காக 2021 இல் பத்மஸ்ரீ விருது பெற்றார்.

- திரு. ஏ. சீனிவாச ராவ், மேசைப்பந்து விளையாட்டில் சிறந்த பயிற்சியாளருக்காக 2022 இல் துரோணாச்சார்யா விருதைப் பெற்றார்.

- திரு. ஆர். பிரக்ஞானந்தா, திருமதி இளவேனில்வாளறிவன் மற்றும் ஜெர்லின் அனிகா ஜே ஆகியோருக்கு முறையே செஸ், துப்பாக்கி சுடுதல் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான இறகுப்பந்து விளையாட்டுகளில் அவர்களின் குறிப்பிடத்தக்க சாதனைகளுக்காக 2022 இல் அர்ஜுனா விருதுகள் வழங்கப்பட்டன.

- திருமதி நிவேதிதா வி நாயர் 2021 ஆம் வருடம் செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 10 வரை, பெருவில் உள்ள லிமாவில் நடைபெற்ற ISSF இளையோர்க்கான உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் இளையோர்க்கான மகளிர் தனிநபர் 25 மீ. ஸ்டாண்டர்ட் பிஸ்டல் போட்டிகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி வெள்ளிப் பதக்கம் பெற்றார்.

- திரு. டி. செல்வபிரபு மற்றும் திரு. பரத்ஸ்ரீதர் ஆகியோர் 2022 ஆம் வருடம் கொலம்பியாவில் ஆகஸ்ட் மாதம் 1 ஆம் தேதி முதல் 6 ஆம் தேதி வரை நடைபெற்ற 20 வயதிற்குட்பட்டோருக்கான உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெள்ளிப் பதக்கங்களை வென்றனர்.

- திரு. எஸ். ஸ்ரீகிருஷ்ணா உலக ஆடவர் 6 ரெட்ஸ் ஸ்னூக்கர் போட்டிகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி தங்கப் பதக்கத்தையும், அக்டோபர் 2022 இல் நடந்த உலக பில்லியர்ட்ஸ் சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றார்.

- செல்வி ஆர். அனுபமா, பிப்ரவரி 28 முதல் மார்ச் 4, 2023 வரை தாய்லாந்தின் பாங்காக்கில் உலக மகளிர் ஸ்னூக்கர் கூட்டமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்னூக்கர் மகளிர் உலகக் கோப்பைப் போட்டியில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி தனிநபர் மற்றும் குழுப் போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்றார்.

2023 ஏப்ரல் 11]

- தமிழ்நாடு விளையாட்டு வீரர்கள் தொடர்ந்து பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தி, மாநிலத்திற்கும் தேசத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10 முதல் 12 வரை கஜகஸ்தானில் உள்ள அஸ்தானாவில் நடைபெற்ற ஆசிய உள்ளரங்க தடகள சாம்பியன்ஷிப் போட்டியில், தமிழ்நாட்டைச் சேர்ந்த 4 தடகள வீரர்கள் முறையே திரு. பிரவீன் சித்திரவேல் மும்முறை தாண்டுதலில் வெள்ளிப் பதக்கமும், திரு. ஜெஸ்வின் ஆல்ட்ரின் நீளம் தாண்டுதலில் வெள்ளிப் பதக்கமும், செல்வி வி. பவித்ரா கோல் ஊன்றி தாண்டுதல் போட்டியில் வெள்ளிப் பதக்கமும், செல்வி பி. ரோசி மீனா கோல் ஊன்றி தாண்டுதல் போட்டியில் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.
- 2022 ஜூன் 4 முதல் 13 வரை ஹரியானாவில் இந்திய விளையாட்டு ஆணையம் (SAI) மூலம் நடத்தப்பட்ட கேலோ இந்தியா இளையோருக்கான விளையாட்டுப் போட்டிகள் 2021-ல், 18 வயதுக்குட்பட்டோர் பிரிவில் தமிழகத்தைச் சேர்ந்த 288 விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர். அப்போட்டிகளில் 14 தங்கம், 14 வெள்ளி, 24 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 52 பதக்கங்களை வென்றனர்.
- கேலோ இந்தியா இளையோருக்கான விளையாட்டுப் போட்டிகள் 2022, இந்திய விளையாட்டு ஆணையத்தால் மத்தியப் பிரதேசத்தில் 2023 – ஜனவரி 30 முதல் பிப்ரவரி 11 வரை நடைபெற்றது. இதில் 21 விளையாட்டுப் பிரிவுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 255 விளையாட்டு வீரர்கள் பங்கேற்றனர். இப்போட்டிகளில் 19 வயதுக்குட்பட்டோர் பிரிவில் 12 தங்கம், 19 வெள்ளி, 21 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 52 பதக்கங்களை வென்றனர்.
- செல்வி சவிதா ஸ்ரீ பாஸ்கர் 2022 டிசம்பரில் கஜகஸ்தானில் நடைபெற்ற மகளிர் உலக ராபிட் சதுரங்க சாம்பியன்ஷிப் போட்டிகளில் வெண்கலப் பதக்கத்தை வென்றார். ஆசிய கான்டினென்டல் 2022 ஓபன் சாம்பியன்ஷிப் போட்டிகளில்

[2023 ஏப்ரல் 11

செல்வன் ஆர். பிரக்ஞானந்தா, செல்வி பி.வி. நந்திதா ஆகியோர் தங்கப் பதக்கமும், செல்வன் பாஸ்கரன் அதிபன் வெண்கல பதக்கமும் வென்றனர்.

- ஜனவரி 2023-ல் ஸ்வீடன் நாட்டின் ஸ்டாக்ஹோம் நகரில் நடைபெற்ற ரில்டன் கோப்பைக்கான சதுரங்க போட்டிகளில் தனது 16-வது வயதில் வென்று இந்தியாவின் 79-வது கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை செல்வன் எம். பிரனேஷ் பெற்றார்.

- பிப்ரவரி 2023 இல் ஷார்ஜாவில் நடைபெற்ற உலக மாற்றுத்திறனாளிகளுக்கான தடகள கிராண்ட் பிரிக்ஸ் போட்டியில் செல்வன் பி. மனோஜ் 100 மீட்டர் ஓட்டத்தில் தங்கப் பதக்கமும், ஆர். பிரவீன் குமார் உயரம் தாண்டுதல் போட்டியில் வெண்கலப் பதக்கமும் மற்றும் டி. சோலைராஜ் நீளம் தாண்டுதல் போட்டியில் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

- தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய கால்பந்து வீராங்கனைகள் கே. இந்துமதி, ஆர். சந்தியா, ஏ. கார்த்திகா மற்றும் எஸ். சௌமியா ஆகியோர் மூத்த இந்திய தேசிய கால்பந்து அணியில் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றனர்.

- கோவில்பட்டி முதன்மை நிலை விளையாட்டு விடுதியைச் சேர்ந்த கார்த்திக் செல்வம் மற்றும் மாரீஸ்வரன் சக்திவேல் ஆகியோர் ஆசியக் கோப்பை 2022 இல் சீனியர் இந்திய ஹாக்கி அணியில் இடம் பிடித்தனர். மேலும் கார்த்திக் செல்வம் 2023 மார்ச் மாதத்தில் நடைபெற்ற எஃப்ஐஎச்(FIH) புரோ லீக் போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டதற்காக MileStone விருதை வென்றார்.

- சவுரவ் கோசல், ஜோஷ்னா சின்னப்பா மற்றும் தீபிகா பல்லிகல் கார்த்திக் ஆகியோர் தமிழ்நாட்டின் குறிப்பிடத்தக்க சர்வதேச ஸ்குவாஷ் வீரர்கள் ஆவார்கள்.

- தமிழ்நாட்டை சேர்ந்த தினேஷ் கார்த்திக் மற்றும் ரவிச்சந்திரன் அஸ்வின் ஆகியோர் இந்திய கிரிக்கெட் அணிக்காக பல ஆண்டுகளாகத் தொடர்ந்து விளையாடி வருகின்றனர்.

2023 ஏப்ரல் 11]

தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் இந்த விளையாட்டு வீரர்களின் சாதனைகளை அங்கீகரித்து, தமிழ்நாடு அரசு 1,594 விளையாட்டு வீரர்களுக்கு பல்வேறு பிரிவுகளில் உயரிய ஊக்கத் தொகையாக மொத்தம் ரூ.43,18,75,000/ – ஒப்பளித்துள்ளது. இந்த ரொக்கப் பரிசு விளையாட்டு வீரர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றை அங்கீகரிப்பது மட்டுமல்லாமல், எதிர்கால சந்ததியினர் விளையாட்டைத் தொடரவும், மாநிலத்திற்கும் நாட்டிற்கும் மேலும் பெருமை சேர்க்க ஊக்குவிப்பதாகவும் உள்ளது.

படலம்—9

உதவித்தொகைகள், விருதுகள், ஊக்கத்தொகை மற்றும் ஓய்வூதியம்

தேசிய மற்றும் சர்வதேச அளவில் சிறந்து விளங்கும் விளையாட்டு சாதனையாளர்களை ஆதரிப்பதற்கும் ஊக்கப்படுத்துவதற்கும் உதவித்தொகை, நிதி உதவி மற்றும் ஊக்கத்தொகைகள் தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகின்றன.

9.1 சிறப்பு உதவித்தொகை திட்டங்கள்

தேசிய மற்றும் சர்வதேச அளவில் பதக்கம் வெல்லும் திறன் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு பின்வரும் மூன்று திட்டங்களின்கீழ் நிதி உதவி அரசு வழங்குகிறது:

1. *தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை (*Elite*)*
2. *பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவித்திடும் திட்டம் (*MIMS*)*
3. *வெற்றியாளர்கள் மேம்பாட்டுத் திட்டம் (*CDS*)*

9.1.1 தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு உதவித்தொகை (ELITE)

ஒலிம்பிக் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் திறன் கொண்ட தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கு தேவை அடிப்படையிலான உதவிகளை வழங்குவதற்காக "தலைசிறந்த விளையாட்டு வீரர்களுக்கான சிறப்பு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

உதவித்தொகை" திட்டத்தினை தமிழ்நாடு அரசு துவங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி, ஒரு நபருக்கு ஆண்டுக்கு ரூ.25.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது. தற்போது, இத்திட்டத்தின்கீழ் 12 தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் உதவி பெற்று வருகிறார்கள். இத்திட்டத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் அரசு ரூ.1.25 கோடியை மானியமாக வழங்குகிறது.

இத்திட்டத்தில் தற்போது இருக்கும் தலைசிறந்த விளையாட்டு வீரர்களின் பட்டியல் பின்வருமாறு:

வரிசை எண்	பெயர்	ஒழுக்கம்
1.	ஜி. சத்தியன்	மேசைப் பந்து
2.	ஏ. ஷரத் கமல்	
3.	சி.ஏ. பவானி தேவி	வாள்சண்டை
4.	எஸ். சதீஷ் குமார்	பளு தூக்குதல்
5.	கே.சி. கணபதி	படகோட்டுதல்
6.	வர்ஷா கௌதம்	
7.	ஏ. தருண்	தடகளம்
8.	எஸ். ஆரோக்கிய ராஜீவ்	
9.	ஆர். மோகன் குமார்	
10.	டி. சந்தோஷ் குமார்	
11.	ஜி. லட்சுமணன்	
12.	பிரஜ்னேஷ் குணேஸ்வரன்	டென்னிஸ்

9.1.2 பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்கள் வெல்வதற்கு ஊக்குவித்திடும் திட்டம் (MIMS)

இத்திட்டத்தின்கீழ், சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் வெல்லும் திறன் கொண்ட விளையாட்டு வீரர்களுக்கு ஓர் ஆண்டிற்கு ரூ.10.00 இலட்சம் நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்த நிதியுதவி விளையாட்டு உபகரணங்கள் மற்றும் கருவிகள் வாங்குதல் மற்றும் வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்கும், சர்வதேச போட்டிகளில் பங்கேற்பதற்கும் வழங்கப்படுகிறது. தற்போது

2023 ஏப்ரல் 11]

இத்திட்டத்தின்கீழ் 5 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் உட்பட 49 விளையாட்டு வீரர்கள் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்தின் செயல்பாட்டிற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.5.00 கோடியை அரசு மானியமாக வழங்குகிறது.

9.1.3 வெற்றியாளர்கள் மேம்பாட்டு திட்டம் (CDS)

தேசிய அளவிலான போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற 20 வயதுக்குட்பட்ட விளையாட்டு வீரர்/வீராங்கனைகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டு, நபர் ஒருவருக்கு ஒரு ஆண்டுக்கு ரூ.2.00 இலட்சம் வரை தேவையின் அடிப்படையிலான நிதி உதவி வழங்கப்படுவதுடன் அவர்கள் பெறும் வெற்றிகளின் அடிப்படையில் இத்திட்டத்தில் பயன்பெற அனுமதிக்கப்படுகிறார்கள். இத்திட்டத்தின்கீழ், விளையாட்டு சீருடை மற்றும் விளையாட்டு உபகரணங்கள், பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பங்கேற்பதற்காக வெளிநாடுகளில் பயிற்சி மேற்கொள்ளுதல் ஆகியவற்றிற்கான நிதியுதவி வழங்கப்படுகிறது. தற்போது இத்திட்டத்தின்கீழ் 40 விளையாட்டு வீரர்கள் பயனடைந்து வருகின்றனர்.

9.2 உயரிய ஊக்கத் தொகை

சர்வதேச மற்றும் தேசிய அளவிலான விளையாட்டு போட்டிகளில் பதக்கம் வெல்லும் தமிழகத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு பின்வரும் விதிமுறைகளின்படி உயரிய ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது:

பகுதி—1 ஒலிம்பிக், ஆசிய விளையாட்டு அல்லது காமன்வெல்த் விளையாட்டுகளில் உள்ளடக்கிய விளையாட்டுப் பிரிவுகள்

வ. எண்.	போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1.	*ஒலிம்பிக் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை) (கோடைகாலம்/குளிர்காலம்)*	*300.00*	*200.00*	*100.00*
2.	*ஆசிய விளையாட்டுப் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)*	*50.00*	*30.00*	*20.00*

வ. எண்.	போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
3.	காமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)	50.00	30.00	20.00
4.	இளைஞர் ஒலிம்பிக் போட்டிகள் (கோடை/ குளிர்காலம்) (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)	25.00	15.00	10.00
5.	ஆசிய இளைஞர் விளையாட்டு போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)	15.00	10.00	5.00
6.	உலக வாகையர் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)	100.00	60.00	40.00
7.	உலக வாகையர் போட்டிகள் (2 ஆண்டுகளுக்கு ஒருமுறை)	75.00	50.00	30.00
8.	உலக வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்)	50.00	30.00	20.00
		ஆண்டு முழுவதற்கும் இவ்வகை போட்டிகளில் இந்த ஒரு போட்டி என்ற நிபந்தனைக்கு உட்பட்டு		
9.	வேறு ஏதாவது பெயரில் சர்வதேச கூட்டமைப்பு பெயரில் நடத்தப்படும் அங்கீகரிக்கப்பட்ட விளையாட்டுப் போட்டிகள்	ஒவ்வொரு நிலையிலான போட்டியும் தனியே அறிவிக்கப்பட வேண்டும்		
	உலக வாகையர் போட்டிகள் ஒரு நிலை கீழ்	30.00	20.00	10.00

2023 ஏப்ரல் 11]

வ. எண்.	போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
	உலக வாகையர் போட்டிகள் இரண்டு நிலை கீழ்	20.00	15.00	7.50
	உலக வாகையர் போட்டிகள் மூன்று நிலை கீழ்	15.00	10.00	5.00
10	ஆசிய வாகையர் போட்டிகள் / காமன்வெல்த் வாகையர் போட்டிகள் (4 வருடங்களுக்கு ஒருமுறை)	25.00	15.00	10.00
11	ஆசிய வாகையர் போட்டிகள் / காமன்வெல்த் வாகையர் போட்டிகள் (2 வருடங்களுக்கு ஒருமுறை)	15.00	10.00	5.00
12	ஆசிய வாகையர் போட்டிகள் / காமன்வெல்த் வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும்) 10 நாடுகளுக்கு குறையாமல் பங்களிப்பு	10.00	6.00	4.00
13.	ஆசிய கடற்கரை விளையாட்டுகள் போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)	5.00	3.00	2.00
14.	தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)	5.00	3.00	2.00
15.	தேசிய விளையாட்டு போட்டிகள் (2 வருடங்களுக்கு ஒருமுறை)	5.00	3.00	2.00

[2023 ஏப்ரல் 11

வ. எண்.	போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
16.	தெற்காசிய வாகையர் போட்டிகள் / மூத்த தேசிய வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்	5.00	3.00	2.00
17	வயது பிரிவினருக்கான உலக வாகையர் போட்டிகள்/ உலகக் கோப்பை போட்டிகள்(போட்டிகளைப் பொறுத்து கால அளவு மாறுபடும்)	6.00	4.00	3.00
		இளையோர், மிக இளையோர் மற்றும் வயது பிரிவினருக்கான உலக அளவிலான போட்டிகளில் இது மிக உயர்ந்த போட்டியாக இருத்தல் வேண்டும்.		
18	ஆசிய வயது பிரிவினருக்கான வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும்)	5.00	3.00	2.00
		இளையோர், மிக இளையோர் மற்றும் வயது பிரிவினருக்கான ஆசிய அளவிலான போட்டிகளில் இது மிக உயர்ந்த போட்டியாக இருத்தல் வேண்டும்.		
19	தேசிய வயது பிரிவினருக்கான வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும்)	3.00	2.00	1.50
		இளையோர், மிக இளையோர் மற்றும் வயது பிரிவினருக்கான தேசிய அளவிலான போட்டிகளில் இது மிக உயர்ந்த போட்டியாக இருத்தல் வேண்டும்.		

2023 ஏப்ரல் 11]

பகுதி-2 பள்ளி விளையாட்டுகள் மற்றும் பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள்

வ. எண்.	விளையாட்டுப் போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1.	*சர்வதேச பல்கலைக்கழக இணையத்தால் நடத்தப்படும் பல்கலைக்கழக / உலக பல்கலைக்கழக வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும்)*	*6.00*	*4.00*	*3.00*
2.	*அகில இந்திய அளவிலான பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்)*	*3.00*	*2.00*	*1.50*
3.	*உலகப் பள்ளிகள் வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்)*	*5.00*	*3.00*	*2.00*
4.	*ஆசிய பள்ளிகள் விளையாட்டு போட்டிகள்/ வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்)*	*4.00*	*2.50*	*1.50*
5.	*இந்திய விளையாட்டு பள்ளி கூட்டமைப்புமூலம் நடத்தப்படும் தேசிய பள்ளிகள் விளையாட்டு வாகையர் போட்டிகள் / கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்)*	*2.00*	*1.50*	*1.00*

TRUTH ALONE TRIUMPHS

பகுதி-3A ஒலிம்பிக், ஆசிய விளையாட்டுகள் மற்றும் காமன்வெல்த் விளையாட்டுகள் அல்லாத விளையாட்டு பிரிவுகள் – சதுரங்கம் மற்றும் வலுத்தூக்குதல்

வ. எண்.	விளையாட்டுப் போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1.	உலகக் கோப்பை / உலக வாகையர் போட்டிகள் ஒருமுறை 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தில்)	50.00	30.00	20.00
2.	உலகக் கோப்பை / உலக வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்)	20.00	15.00	10.00
3.	ஆசிய கோப்பை / ஆசிய வாகையர் போட்டிகள் / காமன்வெல்த் கோப்பை / காமன்வெல்த் வாகையர் போட்டிகள் (விளையாட்டு பிரிவுகளை பொறுத்து, கால அளவு மாறுபடும்)	6.00	4.00	3.00
4.	மூத்தோர் தேசிய வாகையர் போட்டிகள்	5.00	3.00	2.00

பகுதி-3B ஒலிம்பிக், ஆசிய விளையாட்டு மற்றும் காமன்வெல்த் விளையாட்டுகள் அல்லாத மற்ற விளையாட்டு பிரிவுகள் — கேரம், வளைபந்து மற்றும் உடற்கட்டு (மூத்தவர்களுக்கு மட்டும்)

வ. எண்.	போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1.	உலகக் கோப்பை / உலக வாகையர் போட்டிகள் (ஆண்டு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்தில்)	20.00	15.00	10.00

2023 ஏப்ரல் 11]

வ. எண்.	போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1அ.	*ஆசிய வாகையர் போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்)*	*4.00*	*2.50*	*1.50*
2.	*மூத்த தேசிய தெற்காசிய வாகையர் போட்டிகள (ஆண்டுதோறும் நடைபெறும்)*	*2.00*	*1.50*	*1.00*

பகுதி-4 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள்

வ. எண்.	விளையாட்டுப் போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
1.	*பாராலிம்பிக்ஸ் (கோடைகாலம்) (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)*	*300.00*	*200.00*	*100.00*
2.	*பாரா ஆசிய விளையாட்டு போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)*	*50.00*	*30.00*	*20.00*
3.	*காமன்வெல்த் விளையாட்டு போட்டிகள் (பாரா தடகள வீரர்கள்) (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)*	*50.00*	*30.00*	*20.00*
4.	*ஆசிய பாரா இளைஞர்களுக்கான விளையாட்டு போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)*	*15.00*	*10.00*	*5.00*
5.	*ஐபிசி உலகக் கோப்பை / உலக வாகையர் விளையாட்டு போட்டிகள் (2 ஆண்டுகளுக்கு ஒருமுறை)*	*75.00*	*50.00*	*30.00*

[2023 ஏப்ரல் 11

வ. எண்.	விளையாட்டுப் போட்டிகள்	உயரிய ஊக்கத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)		
		தங்கம்	வெள்ளி	வெண்கலம்
6.	*ஐபிசி உலகக் கோப்பை / உலக வாகையர் விளையாட்டு போட்டிகள் (ஆண்டுதோறும் நடைபெறும்)*	*50.00*	*30.00*	*20.00*
7.	*ஐபிஎஸ்ஏ உலக விளையாட்டு போட்டிகள் (பார்வையற்ற விளையாட்டு வீரர்கள்) (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)*	*25.00*	*15.00*	*10.00*
8.	*செவித்திறன் குன்றியோர்களுக்கான விளையாட்டு போட்டிகள் (டெஃப்லிம்க்ஸ்) (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)*	*25.00*	*15.00*	*10.00*
9.	*சிறப்பு ஒலிம்பிக் (கோடைகாலம் / குளிர்காலம்) (மன வளர்ச்சி குன்றியோர்) (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)*	*15.00*	*10.00*	*5.00*
10.	*ஐடிஏஎப் உயரம் குன்றியோர்களுக்கான உலக விளையாட்டு போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)*	*5.00*	*3.00*	*2.00*
11.	*பார்வையற்றோருக்கான உலகக் கோப்பை மட்டைப்பந்து விளையாட்டு போட்டிகள் (4 ஆண்டுகளுக்கு ஒருமுறை)*	*முதலிடம் 5.00 இலட்சம்* *இரண்டாமிடம் 3.00 இலட்சம்*		

9.3 வளரும் திறனாளர்களுக்கான சிறப்பு உதவித்தொகை

பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் உலக திறனாளர்கள் கண்டறியும் திட்டத்தின்கீழ் நடத்தப்படும் மண்டல

2023 ஏப்ரல் 11]

அளவிலான போட்டியில் கண்டறியப்படும் திறனாளர்களுக்கு சிறப்பு உதவித்தொகையாக நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.500/ – வழங்கப்படுகிறது.

9.4 நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியத் திட்டம்

கடந்த காலங்களில் தேசிய அளவில் பதக்கம் பெற்றவர்கள்/ பங்கேற்றவர்கள் 58 வயதைக் கடந்த நலிந்த நிலையிலுள்ள விளையாட்டு வீரர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு நபர் ஒருவருக்கு, மாதம் ஒன்றிற்கு ரூ.6,000/ – ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. தற்போது இத்திட்டத்தில் 78 நபர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

9.5 முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது

1996 ஆம் ஆண்டு துவங்கப்பட்ட முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது, இரண்டு சிறந்த விளையாட்டு வீரர்கள், இரண்டு சிறந்த விளையாட்டு வீராங்கனைகள், இரண்டு பயிற்சியாளர்கள் மற்றும் இரண்டு உடற்கல்வி இயக்குநர்கள் / உடற்கல்வி ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகிறது. இந்த விருது ஒரு பாராட்டு பத்திரம், நினைவு பரிசு மற்றும் 1.00 இலட்சம் ரொக்கப்பரிசை உள்ளடக்கியது. மேலும் ஒரு நன்கொடையாளர் / விளையாட்டு புரவலர், ஒரு விளையாட்டு அமைப்பாளர்/ நிர்வாகி மற்றும் ஒரு விளையாட்டு நடுவர் ஆகியோருக்கு ரூ.10,000/ – மதிப்புள்ள தங்கப் பதக்கம், நினைவு பரிசு மற்றும் பாராட்டுப் பத்திரம் ஆகியவையும் வழங்கப்படுகின்றன.

9.6 பயிற்றுநர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு நிர்வாகிகளின் அறிவாற்றல் மற்றும் திறன்களை மேம்படுத்துதல்

பயிற்றுநர்கள், உடற்கல்வி ஆசிரியர்கள் மற்றும் விளையாட்டு நிர்வாகிகள் ஆகியோருக்கு புதுப்பிக்கப்பட்ட விளையாட்டு விதிகள் மற்றும் கோட்பாடுகள், விளையாட்டு நுட்பங்கள் மற்றும் திறன்கள் ஆகியன குறித்து அறிந்திருத்தல் அவசியமாகும் இதனடிப்படையில் குறுகிய காலப் படிப்புகள் / பயிற்சிப் பட்டறைகளில் பங்கேற்பதற்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது,

[2023 ஏப்ரல் 11

9.7 மாநில அளவிலான குடியரசு தினம் மற்றும் பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்றவர்களுக்கு ரொக்கப் பரிசு

பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்படும் மாநில அளவிலான குடியரசு தின விளையாட்டு போட்டிகள் மற்றும் பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெறும் மாணவ / மாணவியர்களுக்கு முறையே ரூ.1,200/-, ரூ.800/ – மற்றும் ரூ.400/ – பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

படலம் – 10

வேலைவாய்ப்பு மற்றும் உயர் கல்வியில் விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீடு

10.1 அரசு துறைகள் / பொதுத் துறை நிறுவனங்களில் திறமையான விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்புகள்

விளையாட்டு வீரர்களின் சாதனைகள் பாராட்டப்பட வேண்டும், மேலும் இளம் திறமையாளர்கள் விளையாட்டில் ஈர்க்கப்படுவதற்கு போதுமான அளவு ஊக்கமளித்திடவும் வேண்டும். தமிழ்நாடு அரசு அரசுத் துறைகளில் தேர்தெடுக்கப்பட்ட பணியிடங்களில் விளையாட்டு வீரர்களுக்காக 3% விளையாட்டு இட ஒதுக்கீடு மற்றும் பொதுத் துறை நிறுவனங்களில் பணி அமர்த்திடுவதற்கு வழிவகை செய்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டின்கீழ், கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகளில் உள்ள 46 விளையாட்டுகள் மற்றும் 5 ஒலிம்பிக் அல்லாத விளையாட்டுக்களான ரோலர் ஸ்கேட்டிங், ஸ்குவாஷ், கபாடி, வுஷூ மற்றும் சிலம்பம் ஆகியவை பரிசீலிக்கப்படுகிறது.

10.2 குறிப்பிட்ட அரசு துறைகளில் 10% இட ஒதுக்கீடு

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம்மூலம் மேற்கொள்ளப்படும் நியமனங்களிலும் தமிழ்நாடு வன சார்நிலைப் பணிகளிலும் நேரடி நியமனம்மூலம் நிரப்பப்படும் வனவர், வனக் காப்பாளர், வனக் காவலர்கள் மற்றும் ஓட்டுநர் நியமனங்களிலும் 10% இட ஒதுக்கீடு விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 11]

10.3 தொழில்முறை கல்லூரிகளில் சேர்க்கை

இளம் விளையாட்டு வீரர்களின் சாதனைகளை அங்கீகரித்திடும் வகையில் தொழில்முறை கல்லூரிகளில் விளையாட்டுப் பிரிவின்கீழ், கீழ்க்காணும் தொழில்முறை கல்லூரிகளில் சேர்க்கைக்கான இடங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

வரிசை எண்	கல்வி நிறுவனங்களின் விவரம்	இருக்கைகளின் எண்ணிக்கை
1.	*அண்ணா பல்கலைக்கழகத்தின் துறைகள், சென்னை-25*	*12*
2.	*அரசு / அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள்*	*13*
3.	*அண்ணா பல்கலைக்கழகத்தின் தொகுதிக் கல்லூரிகள்*	*14*
4.	*சுயநிதி பொறியியல் கல்லூரிகள் (ஒரு கல்லூரிக்கு 1 இடம்)*	*461*
	மொத்த இருக்கைகள்	*500*

வரிசை எண்	தொழில்முறை படிப்பு விவரங்கள்	இருக்கைகளின் எண்ணிக்கை
1.	*மருத்துவக் கல்லூரிகள்*	
	இளங்கலை மருத்துவம், இளங்கலை அறுவையியல் சிகிச்சை (M.B.B.S)	*7*
	இளங்கலை பல் மருத்துவம் (B.D.S)	*1*
2.	*தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் மீன்வளப் பல்கலைக்கழகம்*	
	இளங்கலை கால்நடை மருத்துவம் (பி.வி.எஸ்.சி.,) (3 மாணவர்கள் & 2 மாணவியர்கள்)	*5*
	இளங்கலை மீன்வளம் (பி.எப்.எஸ்.சி.,)	*2*

வரிசை எண்	தொழில்முறை படிப்பு விவரங்கள்	இருக்கைகளின் எண்ணிக்கை
	சட்டக் கல்லூரி	
3.	இளங்கலை சட்டம் (3 ஆண்டுகள்)	11
	இளங்கலை சட்டம் (5 ஆண்டுகள்)	10
	தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்	
	இளங்கலை அறிவியல் வேளாண்மை (பி.எஸ்சி.,)	1
4.	இளங்கலை அறிவியல் தோட்டக்கலை (பி.எஸ்சி.,)	1
	இளங்கலை அறிவியல் வனவியல் (பி.எஸ்சி.,)	1
	இளங்கலை பொறியியல் வேளாண்மை (பி.இ.,)	1
	மொத்த இருக்கைகள்	40

தமிழ்நாடு அரசு விளையாட்டு வீரர்களுக்கு நவீன உட்கட்டமைப்பு வசதிகள், பயிற்சி வசதிகள், நிதியுதவி, உதவித்தொகை, விளையாட்டு திறன் வெளிப்பாடு, அங்கீகாரம், உயரிய ஊக்கத்தொகை, உயர் கல்வியில் இடஒதுக்கீடு, அரசு வேலைகளில் 3 சதவிகித இடஒதுக்கீடு மற்றும் ஓய்வூதியம் உள்ளிட்ட உதவிகளை வழங்குகிறது.

படலம் — 11

இளைஞர் நல இயக்குநரகம்

பாலினம், நம்பிக்கை, சமூகப் பின்னணி, சமூகம் மற்றும் குடும்பம் ஆகியவற்றின் வேறுபாடுகள் மறந்து, ஏராளமான ஆற்றல், வளரூக்கி தூண்டல், அறிவார்ந்த ஆர்வம், சாகச ஆர்வம் மற்றும் தேடலுக்கான உந்துதல் போன்ற தனித்துவமான வழிகாட்டுதல்களின்போது இளைஞர்கள் வாழ்க்கையில் ஒரு தனித்துவமான திறமைதனை பிரதிபலிக்கிறார்கள். இந்த நிலை

2023 ஏப்ரல் 11]

தனிநபர்களுக்கு விளையாட்டு, கல்வி, கலை மற்றும் கலாச்சாரம் ஆகியவற்றில் சிறந்து விளங்குவதற்கான இணையற்ற வாய்ப்பை வழங்குகிறது, அத்துடன் அவர்களின் வாழ்க்கையை வடிவமைத்து, அர்த்தமுள்ள மற்றும் மேம்படுத்திடும் எதிர்காலத்தை நோக்கி செல்வதற்கான வழியினை ஏற்படுத்துகிறது. அதே நேரத்தில் இளைஞர்கள் தங்களுக்கும், சமூகத்திற்கும், தேசத்திற்கும் சாதகமான பங்களிப்பை அளிக்கும் அறிவார்ந்த முடிவுகளை எடுப்பது அவசியம்.

இருப்பினும், சரியான வழிமுறைகள் மற்றும் நடைமுறை இல்லாத நிலையில், இந்த இளமை ஆற்றல் தவறாக வழி நடத்தப்பட்டு, தீங்கு விளைவிக்கும் செயல்பாடுகளும், சுய அழிவுக்கும் கூட வழிவகுக்கும். இளைஞர்கள் சிறந்த வாழ்க்கை அனுபவங்களைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகளைப் பெற்றிருக்கும் அதே வேளையில், இலக்கற்றவர்களாகவும் சமூக முரண்பாடுகளின் மூலமாகவும் மாறும் அபாயமும் உள்ளது.

வாழ்வின் பல்வேறு அம்சங்களில் சிறந்து விளங்க இளைஞர்களின் எல்லையில்லா ஆற்றல் உற்பத்தித் திறனுடன் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதே அரசின் முதன்மைப் பொறுப்பாகும். தீங்கிழைக்கும் செயல்களை நோக்கி இளைஞர்களின் எந்தவொரு செயல்பாடும் அவர்களுக்கு வழங்கப்படும் விரிவான கல்வி, விழிப்புணர்வு மற்றும் தகவல் ஆகியவற்றின்மூலம் குறைக்கப்படும் என்று அரசு தீர்மானிக்கிறது, அதே நேரத்தில் அத்தகைய நடத்தையை ஊக்கப்படுத்துவதைத் தடுப்பதற்கான வழிமுறைகளையும் நிறுவுகிறது.

மாநிலத்தின் மக்கள்தொகையில் 15-35 வயதிற்குட்பட்ட இளைஞர்கள், மிகவும் துடிப்பான மற்றும் ஆற்றல்மிக்க பிரிவாகவும், மாநிலத்தின் மிகவும் மதிப்புமிக்க மற்றும் உற்பத்தித் திறன் கொண்ட மனித வளமாகவும் உள்ளனர். இளைஞர்களின் திறனை அங்கீகரித்து அவர்களின் ஆற்றலை ஆக்கப்பூர்வ நடவடிக்கைகளில் ஈடுபட செய்வதற்காக 2013 ஆம் ஆண்டு இளைஞர் நல இயக்குநரகத்தை அரசு தோற்றுவித்தது.

இளைஞர் நல இயக்குநரகம்மூலம் கீழ்க்காணும் இளைஞர் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. இளைஞர்கள், அவர்களின் நலன்கள், பயிற்சி மற்றும் வழிநடத்துதல் தொடர்பான பணிகள்

2. மாநில மற்றும் தேசிய கட்டமைப்பிற்கான மேம்பாட்டு செயல்பாடுகளில் இளைஞர்களை தன்னார்வத்துடன் பங்கேற்க ஒருங்கிணைத்தல்

3. இளைஞர்களிடையே ஆளுமைத்திறன் மற்றும் தலைமைப் பண்பை ஊக்குவித்திடும் வண்ணம், வீரதீரச் செயல்கள், பொறுப்புணர்வு, நம்பிக்கை மற்றும் சாதித்தல் ஆகியவற்றினை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகளை நடத்துதல்.

4. பல்கலைக்கழகங்களுடன் இணைந்து இளைஞர்களின் குணநலன்கள் மற்றும் இளைஞர் மேம்பாட்டு திட்டங்கள் பற்றிய ஆராய்ச்சி செய்தல்

5. வேலைவாய்ப்பற்ற மற்றும் தகுதிக்குக் குறைவான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளை ஊக்குவித்தல்

6. இளைஞர்களிடையே விளையாட்டுப்போட்டிகளை நடத்தி ஊக்குவித்தல்

7. பல்வேறு பிரிவுகளில் மாநில இளைஞர் விருதுகள் வழங்குவதன்மூலம் திறமையான இளைஞர்களை அங்கீகரித்தல்

8. விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் தொடர்பான பிரிவுகளில் விழிப்புணர்வு கையேடுகள் வெளியிடுதல்.

9. இளைஞர் நலன் தொடர்பாக இந்திய அரசின் அமைப்புகளான நேரு இளையோர் மையம் மற்றும் நாட்டு நலப்பணித்திட்டம் போன்ற அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.

10. மாநில இளைஞர் விழாக்களை நடத்துதல், திறமையான இளைஞர்களைத் தேர்வு செய்து அவர்களை தேசிய இளைஞர் விழாவில் பங்கேற்கச் செய்தல்

11. இளைஞர் வருகையினை அதிகரித்திடும் வண்ணம் மாநிலம் முழுவதும் உள்ள புதிய மற்றும் ஏற்கெனவே உள்ள இளைஞர் விடுதிகளை ஊக்குவித்தல் மற்றும் வசதிகளை மேம்படுத்துதல்

2023 ஏப்ரல் 11]

11.1 முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது

முதலமைச்சரின் மாநில இளைஞர் விருது என்பது சமூகத்தின் முன்னேற்றத்திற்காக இளைஞர்கள் ஆற்றிய சிறப்பான பங்களிப்பை அங்கீகரித்திடும் வகையில் உருவாக்கப்பட்ட திட்டமாகும். 15 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட மூன்று ஆண்கள் மற்றும் மூன்று பெண்களுக்கு அவர்களது சிறப்பான சேவையினை அங்கீகரித்திடும் வகையில் ஆண்டுதோறும் நடைபெறும் சுதந்திர தின விழாவின்போது இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த மதிப்பிற்குரிய விருதைப் பெறுபவர்களுக்கு ரூ.1,00,000/ – ரொக்கப் பரிசு, சாதனைகளை அங்கீகரிக்கும் சான்றிதழ் மற்றும் அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பின் சின்னமாக ஒரு பதக்கம் வழங்கப்படுகிறது.

11.2 நேரு யுவ கேந்திர சங்கதன்

கிராமப்புற இளைஞர்களுக்கு நம் தேசத்தை நிர்மாணிக்கும் (கட்டியெழுப்பும்) நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் தனிப்பட்ட மற்றும் திறன் மேம்பாட்டிற்கான வாய்ப்புகள் வழங்குவதை நோக்கமாகக் கொண்டு 1972-ல் நிறுவப்பட்ட ஒரு அமைப்பே நேரு யுவ கேந்திர சங்கதன் ஆகும். உலகின் மிகப் பெரிய அடிமட்ட இளைஞர் அமைப்புகளில் ஒன்றாக விளங்கும் நேரு யுவ கேந்திர சங்கதன் தன்னார்வத் தொண்டு, சுயஉதவி மற்றும் சமூகப் பங்கேற்பு ஆகியவற்றின்மூலம் இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. தமிழ்நாட்டில் 30 மாவட்டங்களில் 14,664 இணைப்பு இளைஞர் மன்றங்களையும் 15 வயது முதல் 29 வயது வரையிலான சுமார் 2,90,000 தன்னார்வ இளைஞர்களையும் ஒருங்கிணைக்கும் ஒரு வலுவான வலையமைப்புடன் இயங்குகிறது.

குறிக்கோள்கள்:

- *அனைத்து கிராமங்களிலும் இளைஞர் மன்றங்களை உருவாக்கி தேசத்தை நிர்மாணிக்கும் (கட்டியெழுப்பும்) நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல்,*
- *அவர்களின் மதிப்புகள் மற்றும் திறன்களை மேம்படுத்திக்கொள்வதன்மூலம், அவர்களை இந்தியாவில் பொறுப்புள்ள மற்றும் ஆக்கத்திறன் கொண்ட குடிமக்களாக மாற்றுதல்,*

- ❖ *மத்திய மற்றும் மாநில அரசின் திட்டங்களின் பயன்களை கிராமப்புற சமூகத்திற்கும் அதிலும் குறிப்பாக கிராமப்புற இளைஞர்களுக்குச் சென்றடைவதில் ஒரு ஊக்கியாகச் செயல்படுதல்,*
- ❖ *கிராமப்புற இளைஞர்களிடம் தன்னார்வம் மற்றும் ஒத்துழைப்பு உணர்வை ஏற்படுத்துதல்,*
- ❖ *வேலைவாய்ப்பு உருவாக்கம், எழுத்தறிவு, குடும்ப நலன், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தேசிய ஒருமைப்பாடு, பாலின சமத்துவம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் போன்ற முன்னுரிமை துறைகளில் திட்டங்களை மேம்படுத்துவதற்கு, மேம்பாட்டு வலையமைப்பை பயன்படுத்துதல்,*

தொலைநோக்கு:

நீண்ட கால வளர்ச்சியில் கவனம் செலுத்துவது, நல் குடிமகனாகத் திகழ்வது மற்றும் அடிமட்ட நிலையில் இளைஞர் தலைமைத்துவம் இவற்றை தொலைநோக்கமாக இவ்வமைப்பு கொண்டுள்ளது. இளைஞர் மன்றங்கள் உருவாக்கப்பட்டு விளையாட்டு, கலாச்சாரம் மற்றும் உள்ளூர் மேம்பாட்டு நடவடிக்கைகளில் பங்கேற்க ஊக்குவிக்கப்படுகின்றன.

11.2.1. 2022-2023 ஆம் ஆண்டிற்கான தொடர்பணி மற்றும் சிறப்பு திட்டங்கள்

2022-2023 ஆம் ஆண்டில் மாவட்ட அளவிலான நேரு யுவ கேந்திர சங்கதன் இளைஞர் மன்ற மேம்பாட்டு முகாம், தேசிய மற்றும் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த நாட்களைக் கடைபிடித்தல், தேசிய இளைஞர் தினம் மற்றும் தேசிய இளைஞர் வாரம், தூய்மைப் பிரச்சாரம், தீவிர தன்னார்வ சேர்க்கைத் திட்டம், தன்னார்வச் செயல்பாட்டின்மூலம் சேவை மற்றும் அதிகாரமளித்தல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளுக்காக திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டது. மேலும் மாவட்ட அளவிலான இளைஞர் திருவிழா, தொழிலாளர் முகாம், நம் அரசியலமைப்பை அறிந்துகொள்வோம் என்கிற குடிமை விழிப்புணர்வு நிகழ்ச்சி, உள்ளூர் தேவைகளின் அடிப்படையிலான பயிற்சிப் பட்டறை,

2023 ஏப்ரல் 11]

இளைஞர் தலைமைத்துவம் மற்றும் சமூக வளர்ச்சிக்கான பயிற்சி முகாம், தொழில் வழிகாட்டுதல் குறித்த பயிற்சிப் பட்டறை, திறன் சார்ந்த தொழில் முனைவோர் திட்டம், இளைஞர் மன்றங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்குதல், கிராம, குறுவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள், மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் மற்றும் மாவட்ட, மாநில அளவில் சிறந்த இளைஞர் மன்றங்களுக்கான விருதுகள் வழங்குதல் ஆகிய நிகழ்ச்சிகளை இவ்வாண்டில் நிறைவேற்றியுள்ளது.

மேற்கண்ட தொடர்ப்பணி திட்டங்களுடன் கூடுதலாக, நேரு யுவ கேந்திர சங்கதன் 2022-2023 ஆம் ஆண்டில் மேலும் சில சிறப்புத் திட்டங்களையும் நடத்தியுள்ளது. வட்டார அளவிலான இளைஞர் பாராளுமன்றம், பழங்குடி இளைஞர் பரிமாற்றத் திட்டம், ஜல் சக்தி அபியான், ஒரே பாரதம் உன்னத பாரதம் திட்டம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு முகாம் ஆகியவை இதில் அடங்கும். இந்த முயற்சிகள் இளைஞரை மேலும் வலுப்படுத்தவும், சமூக மேம்பாடு மற்றும் தேசத்தை நிர்மாணிக்கும் (கட்டியெழுப்பும்) நடவடிக்கைகளில் அவர்களின் ஈடுபாட்டை மேம்படுத்தவும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

11.2.2. பழங்குடி இளைஞர் பரிமாற்றத் திட்டம்:

பழங்குடி இளைஞர் பரிமாற்றத் திட்டம் பல பழங்குடியின இளைஞர்களுக்கு நாடு முழுவதும் உள்ள பல்வேறு இடங்களுக்குச் செல்லும் வாய்ப்பை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது. மேலும் அவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் நிலவும் கலாச்சார விழுமியங்கள், மொழிகள் மற்றும் வாழ்க்கை நடைமுறைகளைப் புரிந்துகொள்ள உதவுகிறது. 14-வது பழங்குடி இளைஞர் பரிமாற்ற நிகழ்ச்சி கடந்த 14.03.2023 முதல் 20.03.2023 வரை கோயம்புத்தூரில் உள்ள பாரதியார் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. இதில் ஜார்கண்ட், பீகார், ஒடிசா, மற்றும் சத்தீஸ்கர் ஆகிய மாநிலங்களில் உள்ள ஒன்பது மாவட்டங்களில் இருந்து 200 பழங்குடி இளைஞர்கள் கலந்து கொண்டனர். இந்தத் திட்டம் பயிற்சி அமர்வுகள், பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மற்றும் தொழிற்சாலைகளைப் பார்வையிடுதல் ஆகிய நிகழ்வுகளை உள்ளடக்கியது ஆகும்.

11.2.3 விருதுகள்:

தேசத்தை நிர்மாணித்தல் (கட்டியெழுப்புதல்) சமூக நலன் மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகளில் இளைஞர் மன்றங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. சிறந்த இளைஞர் மன்ற அமைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு மாநில அளவிலான தேர்வுக் குழு, 2022-23 ஆம் ஆண்டிற்கான சிறந்த இளைஞர் மன்றங்களாக கீழ்க்கண்ட மன்றங்களைத் தேர்ந்தெடுத்து விருதுகள் வழங்கியது.

முதல் பரிசு: ஜலகண்டாபுரம் சிலம்பாட்டம் நற்பணி சங்கம், தாரமங்கலம் கிராமம், ஜலகண்டாபுரம், சேலம் மாவட்டம்,

இரண்டாம் பரிசு: ஸ்ரீராகவேந்திரா நற்பணி இயக்கம், சங்கரன் காவு, கேரளாபுரம், கன்னியாகுமரி மாவட்டம்,

மூன்றாம் பரிசு: டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் இளைஞர் நற்பணி சங்கம், தேவராயனேரி, திருச்ச,ராப்பள்ளி மாவட்டம்.

கடந்த ஐந்தாண்டுகளில் சிறப்பான சமூக மேம்பாட்டு தன்னார்வ சேவைக்காக பத்து தேசிய இளைஞர் விருதுகளை தமிழ்நாடு பெற்றுள்ளது.

நேரு யுவ கேந்திர சங்கதன் ஒரு வலிமையான சமுதாயத்தின் அடிமட்ட நிலையிலுள்ள அமைப்பாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. நகர்ப்புற மற்றும் கிராமப்புற சமூகங்களுக்குச் சேவை செய்ய இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. தலைமைத்துவ மேம்பாடு மற்றும் தேசத்தை நிர்மாணிக்கும் (கட்டியெழுப்பும்) செயலில் பங்கேற்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதன்மூலம், நேரு யுவ கேந்திர சங்கதன் இளைஞர்களின் திறனை வளர்க்கிறது. மேலும், இது விளையாட்டு, கலாச்சார நடவடிக்கைகள் மற்றும் அர்த்தமுள்ள தொடர்புகளை ஊக்குவிப்பதற்கான ஒரு தளமாகச் செயல்படுகிறது. கலாச்சாரப் பாரம்பரியம், சமூகப் பிரச்சினைகள் மற்றும் சமூகம் மற்றும் இளைய தலைமுறை எதிர்கொள்ளும் சவால்கள் பற்றிய விழிப்புணர்வையும் இளைஞர்களிடையே ஏற்படுத்துகிறது.

11.3 தேசிய இளைஞர் திருவிழா:

26-வது தேசிய இளைஞர் திருவிழா, கர்நாடக மாநிலத்தின் தார்வாட் – ஹுப்ளியில் 2023 ஜனவரி 12 முதல் 16 வரை நடைபெற்றது. இவ்விழா இளைஞர் தங்களது கலாச்சாரத்

2023 ஏப்ரல் 11]

திறமைகள் மற்றும் பேரார்வத்தை வெளிப்படுத்தவும், நிறைவேற்றவும் ஒரு சிறந்த தளமாகப் பயன்பட்டது. இவ்விழாவில் சாகச நிகழ்ச்சிகள், சிற்பம், இளைஞர் உச்சி மாநாடு, நாட்டுப்புற பாடல்கள், யோகத்தான், பாரம்பரிய விளையாட்டுகள், இளம் கலைஞர்களுக்கான முகாம்கள், உணவுத் திருவிழா மற்றும் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த நாட்டுப்புற நடன நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இவ்விழாவில் தமிழகத்திலிருந்து 230 பேர் உட்பட இந்தியா முழுவதிலும் இருந்து 8000 இளைஞர்கள் பங்கேற்றனர்.

11.4 இளைஞர் விடுதிகள்

இளைஞர் விடுதிகள் கல்வி மற்றும் சாகச சுற்றுலா, வரலாற்று தளங்கள் மற்றும் கலாச்சார ஆய்வுகளை மேற்கொள்ளும் இளைஞர்களுக்கு குறைந்த கட்டணத்தில் தங்குமிட வசதிகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்ட இந்திய அரசு மற்றும் தமிழ்நாடு அரசின் கூட்டு முயற்சியாகும். இந்தத் தங்கும் விடுதிகள் கட்டுவதற்கான நிலத்தை மாநில அரசு வழங்குகிறது, அதே நேரத்தில் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு செலவுகளை மத்திய அரசு ஏற்கிறது. தற்போது, சென்னை, மதுரை, தஞ்சாவூர், ஊட்டி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் ஐந்து இளைஞர் விடுதிகள் இயங்கி வருகின்றன, இது இளம் பயணிகளுக்கு அவர்களின் பயண அனுபவத்தை மேம்படுத்தும் அதே வேளையில் செலவு குறைந்த வசதிகளை வழங்குகிறது.

11.5 போதை பொருட்களுக்கு எதிரான இயக்கம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போதைப்பொருள் பயன்பாட்டால் ஏற்படும் தீமைகள் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், "போதைக்கு எதிரான இயக்கம்" என்ற மாநில அளவிலான முயற்சியை 2022 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 11 ம் தேதி துவக்கி வைத்தார். இந்தத் திட்டத்துடன், நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் தேசிய மாணவர் படை தன்னார்வலர்கள் இணைந்து தொண்டாற்ற வாய்ப்பும் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வை நிலைநிறுத்தவும் ஊக்குவிக்கவும் ஒரு தன்னார்வத் திட்டம் துவங்கப்பட்டது.

போதைப் பொருட்களுக்கு எதிரான இயக்கத்தின் நோக்கங்கள்:

- *போதைப் பொருள் பயன்பாட்டால் ஏற்படும் ஆபத்துகள் பற்றிய பரவலான விழிப்புணர்வை உருவாக்குதல்.*

- *தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப்பணித் திட்டம் தன்னார்வலர்களை போதைப்பொருள் பாவனையை எதிர்த்துப் போராடும் முயற்சிகளில் ஈடுபடுத்துதல்,*

- *போதைப் பழக்கத்திற்கு எதிராக ஒரு நிலையான மற்றும் தொடர்ச்சியான பிரச்சாரத்தை ஏற்படுத்துதல்*

- *மாணவர்களை பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபடுத்தி, அதன்மூலம் சமூகத்தில் மறைமுகமாக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.*

- *போதைப்பொருள் பயன்பாட்டை எதிர்த்துப் போராடுவதற்கு அர்ப்பணிப்புள்ள தன்னார்வப் படையை உருவாக்குதல்.*

- *பிரச்சாரத்தை வருடாந்திர மற்றும் வழக்கமான நிகழ்வாக மாறுவதை உறுதி செய்தல்.*

- *ஊடகங்களின் கவனத்தை ஈர்ப்பது மற்றும் பிரச்சாரத்தின் தாக்கம் மற்றும் சென்றடைவதை மேம்படுத்துதல்.*

போதைப்பொருள் பயன்பாட்டுக்கு எதிரான வழக்கமான விழிப்புணர்வு நடவடிக்கைகளில் நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள், தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் மற்றும் பிற தன்னார்வல இளைஞர் அமைப்புகளை ஈடுபடுத்தும் வகையில் "போதைக்கு எதிரான பிரச்சாரம்" திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

11.6 தமிழ்நாட்டில் சாகச விளையாட்டு

சாகச விளையாட்டுகள் இளைஞர்களிடையே சவாலான சூழ்நிலைகளை மனமுவந்து எதிர்கொள்ளும் மனப்பான்மை, ஒத்துழைப்புடன் கூடிய குழுப் பணி, சவாலான சூழ்நிலைகளில் விரைந்து செயலாற்றுதல் மற்றும் தாங்கும்திறன் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தச் செயல்பாடுகள் இளைஞர்கள் தங்கள் அபரிமிதமான ஆற்றல், உற்சாகம் மற்றும் கற்பனைத்திறனைச் செலுத்துவதற்கான ஆக்கப்பூர்வமான மற்றும் மகிழ்ச்சிகரமான வழியை வழங்குகின்றன.

2023 ஏப்ரல் 11]

தமிழ்நாடு, அதன் மாறுபட்ட மற்றும் அழகிய நிலப்பரப்புகளுடன், பரந்த அளவிலான சாகச விளையாட்டுகளுக்கு சிறந்த அமைப்பை வழங்குகிறது. அதன் நீண்ட கடற்கரை, ஏராளமான மலைவாசஸ்தலங்கள் மற்றும் அடர்ந்த காடுகள் சாகச நடவடிக்கைகளுக்கு சரியான பின்னணியை வழங்குகிறது.

11.6.1 நீர் விளையாட்டு

மாநிலத்தின் பரந்த கடற்கரை நீர் விளையாட்டு ஆர்வலர்களுக்கு ஏராளமான வாய்ப்புகளை வழங்குகிறது. கோவளம், மகாபலிபுரம் மற்றும் ராமேஸ்வரம் உள்ளிட்ட பல கடற்கரைகளில், அலைச்சறுக்கு, கயாக்கிங் மற்றும் பாய்மர அலைச்சறுக்கு போன்ற பிரபலமான செயல்பாடுகளை அனுபவிக்க முடியும். இந்த இடங்கள் அவற்றின் அழகியலுக்காகவும் நீர் விளையாட்டுகளுக்கான சாதகமான சூழ்நிலைகளுக்காகவும் அறியப்படுகின்றன. இதன்மூலம் உலகம் முழுவதிலுமிருந்து ஆர்வலர்களையும் ஈர்க்கின்றன.

11.6.2 மலையேற்றம்

நீலகிரி, கொடைக்கானல், கொல்லிமலை மற்றும் ஏற்காடு போன்ற தமிழ்நாட்டின் ஏராளமான மலைவாசஸ்தலங்கள் மலையேற்ற சாகசங்களுக்கு ஏற்றவை. இந்த இடங்களில் உள்ள பலவிதமான அழகிய பாதைகள், கண்கவர் காட்சிகள் மற்றும் புத்துணர்ச்சியூட்டும் காற்று ஆகியவை புதிய மற்றும் அனுபவம் வாய்ந்த மலையேறுபவர்களுக்கு ஏற்றதாக அமைகிறது. மலைவாசஸ்தலங்களின் தனித்துவமான தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் மனம் மயக்கும் அனுபவத்தைத் தருகின்றன. இது ஒரு மறக்க முடியாத மலையேற்றப் பயணத்தை உறுதி செய்கிறது.

11.6.3 பாறை ஏறுதல் மற்றும் மலையேற்றம்

ஏலகிரி மற்றும் ஒகேனக்கல் மலைகள் தமிழ்நாட்டில் பாறை ஏறுதல் மற்றும் மலையேற்ற ஆர்வலர்களுக்கான பிரபலமான இடமாகும். இந்தக் கரடுமுரடான நிலப்பரப்புகள் உயரங்களை வெல்வதற்கும் தங்கள் உடல் வரம்புகளைத் தாண்டுவதை விரும்புவோருக்கும் சவாலான ஆனால் மகிழ்ச்சியான வாய்ப்புகளை வழங்குகின்றன. இந்த இடங்களின் இயற்கை அழகும் அமைதியும் ஒட்டுமொத்த அனுபவத்தை மேலும் மேம்படுத்துகிறது.

11.6.4 வனப் பயணம் மற்றும் பறவைகளைக் காணுதல்

இயற்கை மற்றும் வனவிலங்கு ஆர்வலர்கள் முதுமலை, ஆனைமலை மற்றும் பெரியார் காடுகளில் வழிகாட்டிகளுடன் கூடிய வன உலா மற்றும் பறவைகளைக் கண்டுகளிக்கும் சுற்றுப்பயணங்கள்மூலம் உலாவலாம். இந்தக் காடுகள் பல்வேறு வகையான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு இருப்பிடமாக உள்ளன. இவை இயற்கையின் அதிசயங்களில் மூழ்க விரும்புவோருக்கு சொர்க்கமாக விளங்குகின்றன.

11.6.5 தமிழ்நாட்டில் சாகச விளையாட்டுகளின் கட்டுப்பாடு மற்றும் பாதுகாப்பு

தமிழ்நாடு அரசு சாகச விளையாட்டு வீரர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து ஒழுங்குபடுத்துகிறது. அமைப்பாளர்கள் கடுமையான பாதுகாப்பு வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்க வேண்டும், பொருத்தமான உபகரணங்களை வழங்க வேண்டும் மற்றும் பங்கேற்பாளர்களுக்கு முறையான பயிற்சி அளிக்க வேண்டும். இந்த நடவடிக்கைகள் குடிமக்கள் தங்கள் சாகசங்களை நம்பிக்கையுடனும் பாதுகாப்புடனும் அனுபவிக்க முடியும் என்பதை உறுதி செய்கிறது.

தமிழ்நாட்டின் மாறுபட்ட நிலப்பரப்புகள் மற்றும் ஏராளமான இயற்கை அழகு சாகச விளையாட்டு ஆர்வலர்களுக்கு சிறந்த இடமாக அமைகிறது. பலதரப்பட்ட மக்களின் விருப்பத்திற்கேற்ப அழகிய சூழலுக்கிடையில் சாகசத்தை விரும்புவோருக்கு பல வகையான நடவடிக்கைகளின்மூலம் மறக்க முடியாத அனுபவத்தை உறுதி செய்யும் வகையில் இம்மாநில அரசு செயல்படுகிறது.

ஏப்ரல் 2023 இல் எவரெஸ்ட் சிகரத்தை ஏறி சாதனை புரியவிருக்கும் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி முத்தமிழ்செல்வி அவர்களின் முயற்சிக்கு முதல்முறையாக அரசு இந்த ஆண்டு 10.00 இலட்சம் ரூபாய் நிதியுதவி அளித்து ஆதரவளித்துள்ளது.

2023 ஏப்ரல் 11]

படலம் – 12

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு அரசால் இயற்றப்பட்ட சட்டத்தால் நிறுவப்பட்ட தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் தனித்துவமானதுமான முன்னோடியுமான இந்தியாவிலேயே விளையாட்டு மற்றும் உடற்கல்வியியலுக்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாகும். 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் இந்தப் பல்கலைக்கழகம் துவங்கப்பட்டது. அதே ஆண்டு ஐக்கிய நாடு சபை சர்வதேச விளையாட்டு மற்றும் உடற்கல்வியியல் ஆண்டாக அறிவித்தது மிகவும் பொருத்தமாக அமைந்தது.

தற்போது மூன்று புலங்கள், ஐந்து துறைகள் மற்றும் 24 உறுப்பு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. கூடுதலாக, உடற்கல்வியியல், யோகா மற்றும் அதனைச் சார்ந்த பாடங்கள் புதுதில்லி, பல்கலைக்கழக மானியக் குழு (UGC) *மற்றும் / தொலைதூரக்கல்வி அமைப்பால்* (DEB), *அனுமதிக்கப்பட்ட பாடதிட்டங்கள் இப்பல்கலைக்கழகத்தின் தொலைதூரக்கல்வி பள்ளியில் நடத்தப்பட்டு வருகின்றன.*

நோக்கம்

இப்பல்கலைக்கழகத்தின் நோக்கம் "உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டில் செம்மை".

தொலைநோக்கு

இப்பல்கலைக்கழகத்தின் தொலைநோக்கு "ஒன்று சேர்ந்த உடல், மனம் மற்றும் ஆன்மாவின் மூலம் மனித வளத்தை முழுமையாக ஒருங்கிணைத்து கற்பித்தல், பயிற்சி, ஆராய்ச்சி, அளப்பரிய செயல்முறை மற்றும் புதிய திட்டங்கள்மூலம் உடற்கல்வி மற்றும் விளையாட்டில் செம்மை நிலையினை அடைவதற்கான செயல்களில் ஈடுபடுவதாகும்".

TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 11

குறிக்கோள்

இப்பல்கலைக்கழகத்தின் குறிக்கோள்

- *மாணவர்களது கற்றல் மற்றும் தொழில்முறை வளர்ச்சியில் முதன்மை நிலையை வளர்ப்பதற்கான கற்றல், பாண்டித்தியம், தொழில்முறை மனப்பான்மை மற்றும் கூட்டு முயற்சி போன்றவற்றிற்கான சிறந்த கல்விச் சூழலை உருவாக்குதல்.*

- *உடற்கல்வியியல், பல்வேறு விளையாட்டுகள் மற்றும் தொடர்புடைய பிரிவுகளில் புதுமையான ஒருங்கிணைந்த மற்றும் ஒன்றொன்றுக்கு தொடர்புடைய பாடத்திட்டத்தை வடிவமைத்து அறிமுகப்படுத்துதல் மற்றும் தொழில்முறையில் தலைமைத்துவத்தை அளித்தல்.*

- *உடற்கல்வி, விளையாட்டுகள் மற்றும் தொடர்புடைய துறைகளில் இளநிலை, முதுநிலை மற்றும் ஆராய்ச்சிப் படிப்புகளை வழங்குதல்.*

- *குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்காக உடற்செயல்பாட்டு திட்டங்களை மேற்கொள்ளவும், உடற்கல்வியியலைக் கற்பிக்கக் கூடிய தகுதிவாய்ந்த, ஆரோக்கிய உணர்வுள்ள உடற்கல்வி ஆசிரியர்களை அனைத்து நிலைகளிலும் முழுத் தகுதியுடன் உருவாக்குதல்.*

- *நவீன ஆராய்ச்சி வசதிகளை மேம்படுத்தி, ஆராய்ச்சிப் பணிகள் மற்றும் வெளியீடுகள் மூலமாக அறிவுசார் செயல்களுக்குப் பங்களித்து, கண்டுபிடிப்புகளை ஆசிரியர்கள், வல்லுநர்கள் மற்றும் மாணவர்களுக்குக் கொண்டு செல்லுதல்.*

- *உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டில் உள்ள பயிற்சி உத்திகளை மறுசீரமைத்து, கூர்மைப்படுத்தி ஆராய்ச்சி முடிவுகளைச் செயல்படுத்த உதவுதல்.*


- *பொதுவான நோக்கம் மற்றும் விருப்பமுடைய செயல்களில் உடற்கல்வி மற்றும் விளையாட்டுகளில் மாநில மற்றும் தேசிய அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து ஒத்துழைத்தல்.*

2023 ஏப்ரல் 11]

- மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சுற்றி உள்ள குடிமக்களை உடற்தகுதியுடனும் முதிர்ச்சி அடைந்த மனநிலையுடையவர்களாக உருவாக்குவதற்கு உடற்தகுதி மற்றும் மனதிடத்தினை மேம்படுத்தி வளர்க்க திட்டங்களை வடிவமைத்தல் ஆகியவை ஆகும்.

12.1 பல்கலைக்கழகத்தின் நிருவாக அமைப்பு

இப்பல்கலைக்கழகத்தின் நிருவாக அமைப்பு பின்வருமாறு:



[2023 ஏப்ரல் 11

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம், உடற்கல்வியியல் புலம், யோகா மற்றும் சுகாதார அறிவியல் புலம், தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை புலம் ஆகிய மூன்று புலங்களைக் கொண்டது. இவற்றில் உடற்கல்வியியல் துறை, யோகா துறை, உடற்பயிற்சி உடலியல் மற்றும் உயிரியக்கவியல் துறை, விளையாட்டு மேலாண்மை விளையாட்டு உளவியல் மற்றும் சமூகவியல் துறை, நுட்பமான விளையாட்டுப் பயிற்சி மற்றும் தொழில்நுட்பத் துறை ஆகிய ஐந்து துறைகளும் அடங்கும். கூடுதலாக, புள்ளியியல் மற்றும் கணினி பயன்பாடுகள், சுகாதார மையம், நூலகம் மற்றும் தகவல் அறிவியல் ஆகிய ஆதரவுத் துறைகளும் இயங்கி வருகின்றன.

12.2 உறுப்புக் கல்லூரிகள்

தற்போது இப்பல்கலைக்கழகத்தின்கீழ் 24 உறுப்புக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இவற்றுள் ஐந்து கல்லூரிகள் யோகா கல்வியையும் இதர கல்லூரிகளில் உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு சார்ந்த கல்வியும் நடத்தப்பட்டு வருகின்றன. மேற்காணும் கல்லூரிகளில் இரண்டு தன்னாட்சி பெற்ற கல்லூரிகளாகவும் ஒன்று அரசு உதவிபெறும் கல்லூரியாகவும் இதர கல்லூரிகள் சுயநிதி கல்லூரிகளாகவும் இயங்கி வருகின்றன.

இப்பல்கலைக்கழகத்திலும் இதன் உறுப்புக் கல்லூரிகளிலும் P.G. Diploma., B.P.E.S., B.P.Ed., M.P.Ed., B.Sc., M.Sc., B.B.A., M.B.A., M.Tech., M.Phil., and Ph.D போன்ற இளங்கலை, முதுகலை, ஆராய்ச்சிப் படிப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக மாணவர்கள் CBCS அடிப்படையில் துறை சார்ந்த சிறப்புப் பாடம் / பொதுவான தேர்வு ஆகியவற்றை தேர்ந்தெடுக்க வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

12.3 மாணவர்களின் சேர்க்கை

இப்பல்கலைக்கழகத்தில் இளங்கலை, முதுகலை, முனைவர் ஆகிய பாடங்களைப் படிக்கும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

இனம்	இளங்கலைப் பட்டம்	முதுகலைப் பட்டம்	முனைவர் பட்டம்
ஆண்கள்	406	222	43
பெண்கள்	211	69	22
மொத்தம்	617	291	65

2023 ஏப்ரல் 11]

12.4 கிராமப்புறப் பயிற்சித் திட்டம்

கிராமப்புறப் பயிற்சித் திட்டம் (VPP) என்பது மாணவர்களின் கல்வி அனுபவத்தை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட அனைத்து படிப்புகளின் ஒருங்கிணைந்த மற்றும் கட்டாய அங்கமாகும். இந்தத் திட்டத்தில் மாணவர்கள் ஒரு கிராமத்தில் ஐந்து நாட்கள் வசிக்க வேண்டும், அப்போது அவர்கள் சுகாதார விழிப்புணர்வை ஊக்குவித்தல் மற்றும் தூய்மையான மற்றும் ஒழுங்கான சுற்றுச் சூழலைப் பராமரிப்பதன் முக்கியத்துவம் குறித்து குடியிருப்பாளர்களுக்கு கல்வி கற்பித்தல் போன்ற சமூக சேவை முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். கிராமப்புறப் பயிற்சித் திட்டத்தை வெற்றிகரமாக முடித்தவுடன், மாணவர்களின் பங்கேற்பு மற்றும் முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில் அவர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படுகின்றன.

12.5 நாட்டு நலப்பணி திட்டம்

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் நாட்டு நலப்பணி திட்டம் 2008 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகின்றது. 100 தன்னார்வலர்கள் கொண்ட 7 அலகுகளின்மூலம் இப்பல்கலைக்கழகத்தின் அருகிலுள்ள ஒரு கிராமத்தைத் தத்தெடுத்து, தூய்மைப்படுத்துதல், மரம் நடுதல் குறித்த விழிப்புணர்வு புகையிலை பயன்பாட்டினால் ஏற்படும் சீர்கேடுகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் இரத்ததான முகாம்கள் என பல்வேறு தன்னார்வ திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

12.6 தேசிய மாணவர் படை

2020-2021 ஆம் கல்வியாண்டில் இப்பல்கலைக்கழகத்தில் தேசிய மாணவர் படை 17 மாணவர்களுடன் துவங்கப்பட்டு, தற்போது 52 மாணவ மாணவிகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

12.7 வேலைவாய்ப்பு சேவைகள்

கல்லூரிகள், அரசு மற்றும் தனியார் கல்வி நிறுவனங்கள், உடற்பயிற்சி மையங்கள் மற்றும் இந்த நிறுவனத்திலிருந்து பட்டதாரிகளின் நிபுணத்துவம் பெற விரும்பும் பெரு நிறுவனங்கள் போன்ற பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கு மாணவர்களுக்கு உதவும் பொருட்டு இப்பல்கலைக்கழத்தின்

[2023 ஏப்ரல் 11

வேலைவாய்ப்புப் பிரிவு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இதை அடைய, வேலைவாய்ப்புக் குழு வளாக நேர்காணல்களை ஏற்பாடு செய்து, மாணவர்களை சாத்தியக்கூறு உள்ள நிறுவனங்களுடன் இணைத்து, வெற்றிகரமான தொழில் துவங்க அவர்களுக்கு உதவுகிறது.

12.8 பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள்

இப்பல்கலைக்கழகத்தில், நிர்வாகக் கட்டடம், கல்வி வளாகம், கணினி மையம், மாணவ மாணவியருக்கான தங்கும் விடுதிகள், பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், மின்நூலகம் உள்ளடக்கிய நூலகம், ஆய்வகங்கள் மற்றும் பணியாளர் குடியிருப்புகள் உள்ளன. இப்பல்கலைக்கழகத்தில் கால்பந்து, வளைகோல் பந்து, மட்டைப்பந்து, கைப்பந்து, கையுந்துப்பந்து, கபடி, கோ-கோ, கூடைப்பந்து, கார்ஃப் பந்து ஆகியவற்றை விளையாடுவதற்கான ஆடுகள வசதிகள் மற்றும் களவிளையாட்டுகளுக்கான வசதிகளுடன் கூடிய 400 மீட்டர் செயற்கையிழை தடகள ஓடுதள பாதையும் உள்ளன.

12.9 நிருவாக உட்கட்டமைப்புகள்

தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தில் கல்விக்காகவும், விளையாட்டுகளுக்காகவும் ஏற்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் பின்வருமாறு:

- பல்வேறு துறைகளில் படிக்கும் இப்பல்கலைக்கழக மாணவர்கள் தங்குவதற்கு, 400 மாணவர்கள் தங்கக் கூடிய ஒரு தங்கும் விடுதி ரூ.14.59 கோடி செலவில் கட்டப்பட்டது. இந்த விடுதியை இவ்வளாகத்தில் நடைபெறும் போட்டிகளின்போது, தங்குமிட வசதிக்காகப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

- மாணவர்களிடையே தலைமைப் பண்புகள் குறித்த முகாம்கள் மற்றும் இதர நிகழ்ச்சிகள் இவ்வளாகத்தின் முகாம் மையத்தில் நடைபெறும் போது பயன்படுத்தப்படுவதற்காக சமையலறையுடன் கூடிய ஒரு உணவுக் கூடம் ரூ.51.72 இலட்சம் செலவினத்தில் கட்டப்பட்டுள்ளது.

- பல்கலைக்கழக பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் பார்வையாளர்களின் வாகனங்கள் நிறுத்துவதற்குரிய

வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் பொருட்டு 210 இருசக்கர வாகனங்கள் மற்றும் 25 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கும் ரூ.73 இலட்சம் செலவினத்தில் ஒரு வாகன நிறுத்துமிடம் அமைக்கப்பட்டுள்ளது.

- இப்பல்கலைகழகத் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு குடியிருப்பு வசதியை ஏற்படுத்தும் வகையில் ரூ.3.50 கோடி செலவினத்தில் ஆசிரியர்களுக்கான 12 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

- பல்வேறு துறைகளில் படிக்கும் மாணவர்கள் தங்களுடைய தொடர்புத் திறனை மேம்படுத்தி கொள்ளவும் பயன் அடையவும், ரூ.14.52 இலட்சம் செலவில் ஒரு மொழி ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டது.

- உடற்கல்வியியல் துறை மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ.22.05 இலட்சம் செலவில் கற்பித்தல், சோதித்தல் மற்றும் உடற்கல்வி பயிற்றுவித்தலுக்கான பிரத்யேகமான ஒரு கற்பித்தல் ஆய்வுக்கூடம் கட்டப்பட்டது.

- மூன்று தளங்கள் கொண்ட இப்பல்கலைக்கழகத்தின் நூலகக் கட்டடத்தில் ரூ.24.40 இலட்சம் செலவில் மின்தூக்கி வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

- இப்பல்கலைக்கழகத்தின் நிருவாகக் கட்டடத்தின் முதல் தளத்தில் பிரத்யேகமாக ஒரு உணவுக் கூடம் ரூ.49.28 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

- இப்பல்கலைக்கழகத்தின் தேவைக்காக ரூ.48.88 இலட்சம் செலவில் ஒரு விளையாட்டு உபகரணங்கள் பாதுகாப்பு அறை கட்டப்பட்டது.

- இப்பல்கலைக்கழகத்தின் வளாகத்தைச் சுற்றி பாதுகாப்பிற்காக ரூ.32.56 இலட்சம் செலவில் கம்பி வேலி அமைக்கப்பட்டது.

- இரகசிய ஆவணங்களையும் இதர ஆவணங்களையும் பாதுகாத்து கையாள ரூ.37.00 இலட்சம் செலவில் ஒரு மேலாண்மை தகவல் மையம் ஏற்படுத்தப்பட்டது.

- இப்பல்கலைக்கழக வளாகத்தில் மழைநீர் சேகரிப்பு திட்டத்தை நடைமுறைபடுத்தும் விதமாகவும், தண்ணீர் பற்றாக்குறையைப் போக்கும் விதமாகவும் ரூ.10.00 இலட்சம் செலவில் மழைநீர் சேகரிப்பு திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

- உடல் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வை யோகா மூலமாக ஏற்படுத்த "முழுமையான ஆரோக்கியத்திற்கு யோகா" எனும் செயலி உருவாக்கப்பட்டு வருகின்றது.

- இப்பல்கலைக்கழகத்திலுள்ள கல்விக்கூடத்தில் வகுப்பறைகள் பற்றாக்குறையை போக்குவதற்கு, ரூ.5.83 கோடி செலவில் கல்விசார் கட்டடத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்பட்டு வருகின்றன.

12.10 விளையாட்டு உட்கட்டமைப்புகள்

மாணவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும், பல்வேறு துறைகளுக்கான சிறந்த மையமாகச் செயல்படுவதற்கும் அதிநவீன உட்கட்டமைப்பை இப்பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.

12.10.1 பாரம்பரிய களரிப்பயட்டு மற்றும் சிலம்பம் பயிற்சி மையம்

நமது மாநிலத்தில் பாரம்பரியமான விளையாட்டுகளை ஊக்குவிக்க, பாரம்பரிய களரிப்பயட்டு மற்றும் சிலம்பம் பயிற்சி மையம் ரூ.1.60 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

12.10.2 உயர் செயல்திறன் இறகுபந்து பயிற்சி மையம்

இறகுபந்து உலக கூட்டமைப்பால் அனுமதிக்கப்பட்ட 5 மி.மீ. தடிமத்துடன் கூடிய 12 pvc செயற்கையிழை தளத்துடன் கூடிய ஒரு உயர் செயல்திறன் இறகுபந்து பயிற்சி கூடம் ரூ.13.33 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. விளையாட்டு வீரர்கள் தங்கும் வசதி, பாதுகாப்பு வசதி, பிரமுகர்கள் ஓய்வறை, கூட்டரங்கு, மின்அறை மற்றும் சேமிப்புக் கிடங்கு ஆகியவை இக்கூடத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

12.10.3 மேசைப்பந்து பயிற்சி மையம்

15 சர்வதேசத் தரத்திலான மேசைகளும் விளையாட்டு வீரர்கள் தங்கும் வசதி, பாதுகாப்பு வசதி, பிரமுகர்கள் ஓய்வறை,

2023 ஏப்ரல் 11]

கூட்டரங்கு, மின்அறை மற்றும் சேமிப்புக் கிடங்கு ஆகிய பல்வேறு வசதிகளுடன் கூடிய மேசைப்பந்து பயிற்சி மையம் ஒன்று ரூ.12.60 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது .

12.10.4 உயிர் இயக்கவியல் ஆய்வகம்

3-டி மோஷன் கேப்சர் முறை, ஃபோர்ஸ்-பிளேட், ஈ எம் ஜி (எலக்ட்ரோமையோகிராபி), ஆந்த்ரோபோமீட்டர் மற்றும் ஐசோகைனெடிக் டைனமோமீட்டர் போன்ற உபகரணங்களைக் கொண்ட முதன்மை உயிர் இயக்கவியல் ஆய்வக மையம் ரூ. 13.12 கோடி செலவில் நிறுவப்பட்டுள்ளது.

12.10.5 கழைக்கூத்து உள்ளரங்கம்

கழைக்கூத்துடன் குத்துச் சண்டை மற்றும் வாலிபால் உள்விளையாட்டுகளையும் மேம்படுத்தும் நோக்கத்தோடு, ரூ.5.10 கோடி செலவில் ஒரு கழைக்கூத்து உள்ளரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

12.10.6 மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு மையம்

மாற்றுத்திறனாளி ஒட்டப்பந்தய வீரர்களுக்கு பயிற்சி கொடுத்து புனரமைப்பு செய்யும் பொருட்டு, ரூ.4.70 கோடி செலவில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஒரு விளையாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

12.10.7 செயற்கையிழை ஓடுதளப் பாதை

ஒட்டப்பந்தய வீரர்களுக்கு செயற்கையிழை ஓடு தளத்தில் பயிற்சி வழங்கவும், அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கிடையே தேசிய போட்டிகளை நடத்தவும், அவசியமான 8 வரிசைகள் கொண்ட செயற்கையிழை ஓடுதளம் ஒன்று ரூ.7.00 கோடி செலவில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

12.10.8 நீச்சல் குளம்

இப்பல்கலைக்கழகத்தில், ஒலிம்பிக் போட்டிக்கான அளவு கொண்ட ஒரு நீச்சல் குளம் ரூ.5.00 கோடி செலவில் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

[2023 ஏப்ரல் 11

12.11 பல்கலைக்கழகத்தின் சுகாதார மையம்

பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் உடல்நல மையத்தில் ஒரு முழு நேர மருத்துவர், முடநீக்கியல் வல்லுநர்கள் மற்றும் செவிலியரும் பணி புரிந்து வருகின்றனர். இக்குழு முதலுதவி மற்றும் அவசரகால சிகிச்சைப் பணிகளை முழுநேரமும் கவனித்து வருகிறது. தானியங்கி இரத்தப் பகுப்பாய்வுக் கருவி, சிறுநீரக தொகுப்பாய்வுக் கருவி, முடநீக்கியல் கருவி போன்ற வசதிகளும் உள்ளன. அடிப்படையான தேவைக்கென இம்மையத்திற்கு தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம் மருந்து மற்றும் மாத்திரைகளை இலவசமாக வழங்கி வருகின்றது.

12.12 பல்கலைக்கழக மத்திய நூலகம்

பல்கலைக்கழக மைய நூலகமானது, இவ்வளாகத்தில் மேற்குப்புறத்திலுள்ள இரண்டடுக்கு மாடி கட்டடத்தில் 6,772 சதுர அடி பரப்பளவு கொண்ட போதுமான இட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலகக் கட்டடம், சுற்றறிக்கைகள், தொழில்நுட்ப முறை, படிக்கும் அறை, பருவ இதழ்கள் மற்றும் அடுக்ககங்கள் மற்றும் ஆய்வுக்குறிப்புகள் என பல்வேறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றது.

இந்நூலகத்திலுள்ள குறிப்புப் பிரிவில், கலைக்களஞ்சியங்கள், கையேடு, அகராதிகள், கூட்ட அறிக்கைகள், ஆய்வுச் சுருக்கங்கள், விளையாட்டு சங்கங்களால் வெளியிடப்பட்ட விதிகள் குறித்த இதழ்கள் ஆகியவை அடங்கும்.

வ. எண்	வளங்கள்	மொத்தம்
1	புத்தங்கள்	
	மொத்த தலைப்புகள்	5266
	மொத்த புத்தங்கள்	7665
	பாட நூல்	6818
	குறிப்பு புத்தகம்	827
2	பருவ இதழ்கள்	59
3	ஆய்வு நூல்கள்	3615

2023 ஏப்ரல் 11]

வ. எண்	வளங்கள்	மொத்தம்
4	புத்தக பொருள்கள் அல்லாதவை குறுந்தட்டு ஒளி நாடா	 *133* *1*
5	கலைக்களஞ்சியம்	*24* (தொகுப்பு)
6	இருக்கைகளின் அளவு	*234*

12.12.1 மின் நூலகம்

இப்பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.2.51 கோடி செலவில் மின் நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் வசதிக்காக விரைவான அணுகுதலுக்கு இணையதளப் பக்கத்தில் மின் வள ஆதாரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மின் நூலகம் அனைத்து பயனாளர்களுக்கும் தரமான மின்னணு வளங்களை வழங்கி வருகின்றது.

கல்வி, சந்தை குறித்த ஆராய்ச்சி, சுகாதார பாதுகாப்பு மற்றும் புள்ளியியல் ஆய்வு போன்றவற்றிற்காக பயன்படுத்த, இம்மின் நூலகத்தில் 570 மின் புத்தகங்கள், 26 மின் இதழ்கள், 3 தரவுத் தளங்கள் மற்றும் ஒரு சமூக அறிவியலுக்கான புள்ளி விவரத் தொகுப்பு (SPSS) *குறித்த மென்பொருள்கள் உள்ளன.*

12.13 பல்கலைக்கழக நடவடிக்கைகள்

19.03.2023 அன்று தமிழ்நாடு திறந்த வெளிப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டு பல்கலைக்கழகத்தின் 13-வது பட்டமளிப்பு விழாவில் இணைவேந்தரான இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் இந்திய அரசின் தகவல் மற்றும் தொலைத்தொடர்புத் துறை மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத் துறை அமைச்சர், முன்னிலையில் பல்கலைக்கழக வேந்தரான மாண்புமிகு ஆளுநர் 7,754 மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினார்.

12.14 போட்டிகளை ஏற்பாடு செய்தல்

இப்பல்கலைக்கழகம் இந்தியாவில் விளையாட்டு செயல் திறனை மேம்படுத்துவதில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளதால்,

[2023 ஏப்ரல் 11

வளரும் இந்திய விளையாட்டு ஆர்வலர்களின் திறமைகளை வெளிக்கொணர பல தேசிய போட்டிகளை ஏற்பாடு செய்வதில் முன்வந்து செயல்படுகிறது. இப்பல்கலைக்கழகத்தின் முயற்சியால், இவ்வளாகத்தில் பின்வரும் போட்டிகள் வெற்றிகரமாக நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

I. தமிழ்நாடு பாரா ஒலிம்பிக் மாநில அளவிலான சீனியர் பாரா தடகள சாம்பியன்ஷிப் 2022 மார்ச் 4 முதல் 6 வரை நடத்தப்பட்டது.

II. தமிழ்நாடு பாரா ஒலிம்பிக் மிக இளையோர் மற்றும் இளையோர் தடகள சாம்பியன்ஷிப் 2022 மார்ச் 2 மற்றும் 3 ஆகிய நாட்களில் நடத்தப்பட்டது.

III. தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி மாநிலங்களுக்கு இடையேயான உடற்கல்வி போட்டிகள் ஏப்ரல் 2022 இல் நடத்தப்பட்டன.

IV. தென்மேற்கு பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான ஓட்டப்பந்தயப் போட்டி இருபாலர்களுக்கும் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் 2023 ஆம் ஆண்டு ஜனவரி 9 முதல் 12 வரை நடைபெற்றது. இப்போட்டியில் 178 பல்கலைக்கழகங்களும் 3850 விளையாட்டு வீரர்களும் கலந்து கொண்டனர். மங்களூர் பல்கலைக்கழகம் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.

V. அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கிடையிலான இருபாலர்களுக்கான ஓட்டப்பந்தயப் போட்டி தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் 2023 ஆம் ஆண்டு மார்ச் 13 முதல் 16 வரை நடைபெற்றது. இப்போட்டியில் 176 பல்கலைக்கழகங்களும் 2000 விளையாட்டு வீரர்களும் கலந்து கொண்டனர். சென்னை பல்கலைக்கழகம் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.

12.15 மாணவ, மாணவிகளின் சாதனைகள்

- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் 2022-2023 ஜனவரி 9 முதல் 12 வரை நடைபெற்ற தென்மேற்கு பல்கலைக்கழகங்களுக்கு

2023 ஏப்ரல் 11]

இடையேயான தடகள சாம்பியன்ஷிப் (ஆண்கள் மற்றும் பெண்கள்) போல்வால்ட் போட்டியில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்தில் B.Sc., (யோகா) மாணவி செல்வி. ரோஸி மீனா தங்கப் பதக்கம் வென்றார்.

- செல்வி. ரோஸி மீனா போல்வால்ட் போட்டியில் 4.10 மீட்டர் தாண்டி தேசிய சாதனை படைத்தார்.
- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக M.Sc., விளையாட்டு உயிரியக்கவியல் மாணவர் திரு. கோகுலேஷ் அனைத்து பல்கலைக்கழகங்களுக்கு இடையிலான போட்டியில் வூஷு போட்டியில் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றார்.
- நேபாளத்தின் பொக்காரா என்னுமிடத்தில் ரங்கஸாலா அரங்கத்தில் 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 7 முதல் 11 ஆம் தேதி வரை நேபாள இளையோர் மேம்பாட்டுத் துறையினரால் அந்நாட்டில் நடத்தப்பட்ட சிலம்பப் போட்டியில் இப்பல்கலைக்கழகத்தின் (M.Sc) முதுகலை விளையாட்டு உளவியல் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவி செல்வி G. பிரியங்கா சிறப்பு முதுநிலைப் பிரிவில் இந்தியா சார்பில் சர்வதேச இளையோர்க்கான – 2022 போட்டியில் பங்கெடுத்து தங்கப் பதக்கத்தை வென்றார்.
- நேபாளத்தின் பொக்காரா என்னுமிடத்தில் ரங்கஸாலா அரங்கத்தில் 2022 ஆம் ஆண்டு பிப்ரவரி 7 முதல் 11 ஆம் தேதி வரை நேபாள இளையோர் மேம்பாட்டுத் துறையினரால் அந்நாட்டில் நடத்தப்பட்ட டேக்வாண்டோ போட்டியில் இப்பல்கலைக்கழகத்தின் உடற்கல்வி இளங்கலையில் (B.P.Ed) முதலாம் ஆண்டு பயிலும் மாணவி செல்வி R. கீர்த்தனா சிறப்பு முதுநிலைப் பிரிவில் இந்தியா சார்பில் சர்வதேச இளையோர்க்கான–2022 போட்டியில் பங்கெடுத்து தங்கப் பதக்கத்தை வென்றார்.
- தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வலைப் பந்து ஆடவர் அணியானது திருச்சிராபள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால்

[2023 ஏப்ரல் 11

மார்ச் 20 முதல் 23 வரை நடத்தப்பட்ட 2021-22 ஆம் ஆண்டிற்கான அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான வலைப்பந்து போட்டியில் நான்காவது இடத்தை வென்றது.

- *மங்களூரு பல்கலைக்கழகத்தால் 2022 ஜனவரி 4 முதல் 7 வரை நடத்தப்பட்ட அகில இந்திய அளவிலான பல்கலைக்கழகங்களுக்கிடையேயான தடகளப் போட்டிகளில் இப்பல்கலைக்கழகத்தின் இளங்கலை உடற்கல்வி (B.P.Ed) பயிலும் மாணவர் திரு. S. ஸ்டாலின் ஜோஸ் டெக்காத்லான் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார்.*

12.16 இதர நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்:

வேல்டெக் பல்கலைக்கழகத்துடன் விளையாட்டு காற்றியக்கம் சார்ந்த ஆய்வு குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. மேலும் அமீட் பல்கலைக்கழகத்துடன் உள்கட்டமைப்பு வசதிகளை உடற்கல்வியியல் மாணவர்கள் பயன்பெறும் வகையில் பகிர்ந்துகொள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

முடிவுரை:

"உடற்கல்வியியலில் செம்மை" என்ற நிலையை எட்ட தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகம் பாடுபடுகிறது. இதற்காக, கற்பித்தல், பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் விளையாட்டுகளை ஊக்குவிப்புக்கான அதிநவீன உள்கட்டமைப்பு போன்றவற்றில் புதுமையான திட்டங்களை வழங்கி வருகிறது. மாநில அரசின் இந்த முன்முயற்சி, மற்றவர்கள் பின்பற்றுவதற்கு ஒரு சிறந்த முன்மாதிரியாகத் திகழ்கிறது.

படலம் — 13

நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) என்பது ஒன்றிய அரசின் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின்கீழ் செயல்படும் ஒரு நிரந்தர இளைஞர் திட்டமாகும். சமூக சேவை மற்றும் தன்னார்வத் தொண்டுமூலம் ஆளுமை மற்றும் தலைமைப் பண்புகளை வளர்ப்பதே இதன் முதன்மை நோக்கமாகும்.

2023 ஏப்ரல் 11]

நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) உண்மையில் கல்வி நிறுவனங்களில் உள்ள மாணவ இளைஞர்களின் எல்லையற்ற ஆற்றலை ஆக்கபூர்வமான மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதற்கான சக்திவாய்ந்த கருவிகளில் ஒன்றாகும். சமூக மேம்பாட்டு நடவடிக்கைகளில் மாணவர்களின் தீவிர ஈடுபாடு, ஒரு வலுவான பொறுப்புணர்வு, ஒழுக்கம், தன்னம்பிக்கை மற்றும் ஒற்றுமை ஆகியவற்றை வளர்க்க உதவுகிறது, அதே நேரத்தில் தீங்கு விளைவிக்கும் அல்லது எதிர்மறையான செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்கிறது. தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் சமூக விழிப்புணர்வை வளர்த்து, சரியான திசையில் அர்த்தமுள்ள வாழ்க்கையை நடத்துவதற்கு இளம் மாணவர்களுக்கு வழிகாட்டுகிறது.

தமிழ்நாடு அரசு மாணவ இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பதன் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, மாணவர்கள் படித்த, திறமையான, வேலை வாய்ப்பு மற்றும் ஆரோக்கியமான குடிமக்களாக மாறுவதற்கு ஏராளமான வாய்ப்புகளை உருவாக்க உறுதி பூண்டுள்ளது.

நமது நாட்டில், நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) 37 பல்கலைக்கழகங்களில் 40,000 மாணவர்களுடன் 1969 செப்டம்பர் 24 அன்று தொடங்கப்பட்டது. 3,000 மாணவ தன்னார்வலர்களுடன் 1969-ல் இத்திட்டத்தைச் செயல்படுத்திய முன்னோடி மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். தற்போது, மாநிலத்தில் உள்ள 45 பல்கலைக்கழகங்கள் மற்றும் இயக்குநரகங்கள்மூலம் 4,06,700 தன்னார்வலர்கள் இத்திட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டுள்ளனர்.

13.1 நிருவாகம்

கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தில் மாநில நாட்டு நலப்பணித் திட்ட குழுமம் செயல்படுகிறது, இது கல்லூரிக் கல்வி இயக்குநரின் தலைமையில் உள்ளது. அவர் மாநில நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளராகவும், மாநில நாட்டு நலப்பணித் திட்ட அலுவலருடன் இணைந்து பணியாற்றுகிறார். இந்த அமைப்பு மாநிலம் முழுவதும் நாட்டு நலப்பணித் திட்டத்தை திறம்பட ஒருங்கிணைத்து செயல்படுத்துவதை உறுதி செய்கிறது. மேலும், பல்கலைக்கழக அளவில் நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர்களும், கல்லூரி மற்றும் இயக்ககங்கள்

[2023 ஏப்ரல் 11

அளவில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்களும் தொடர்பு அலுவலர்களாக இத்திட்டத்தைச் செயல்படுத்துகின்றனர்.

குறிக்கோள்:

சமூக சேவையின்மூலம் மாணவர்களின் ஆளுமை தன்மையை மேம்படுத்துவதே நாட்டு நலப்பணித் திட்டத்தின் நோக்கமாகும். மேலும் நாட்டு நலப்பணித் திட்டத்தின் குறிக்கோள் 'Not me but you' ஆகும். நாட்டு நலப்பணித் திட்ட நடவடிக்கைகளில் பங்கேற்பதன்மூலம், மாணவர்கள் மதிப்புமிக்க வாழ்க்கைத் திறன்களையும் அனுபவங்களையும் பெறுவது மட்டுமல்லாமல், தங்களைச் சுற்றியுள்ள சமூகங்களைப் பாதிக்கும் சிக்கல்களைப் பற்றிய ஆழமான புரிதலையும் வளர்த்துக்கொள்கிறார்கள். இந்த வெளிப்பாடு, தேசம் எதிர்கொள்ளும் சவால்களை எதிர்கொள்ளவும், அதன் முன்னேற்றத்திற்கு பங்களிக்கவும் தயாராக உள்ள, மனிதநேயமிக்க மற்றும் பொறுப்புள்ள குடிமக்களின் தலைமுறையை உருவாக்க உதவுகிறது. மாணவத் தன்னார்வலர்கள் பல்வேறு சமூக நல முயற்சிகள் மற்றும் தன்னார்வ நடவடிக்கைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் மனிதநேயம், குழுப்பணி, தலைமைப் பண்புகள் மற்றும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது போன்ற அத்தியாவசிய வாழ்க்கைத் திறன்கள் மற்றும் மதிப்புகளை வளர்த்துக்கொள்ள உதவுகிறது.

13.2 தொடர் பணிகள்:

நாட்டு நலப்பணித் திட்டத்தில் சேர்ந்த மாணவர்கள் வார இறுதி நாட்களில் அல்லது பள்ளி/கல்லூரி நேரத்திற்குப் பிறகு தத்தெடுக்கப்பட்ட கிராமங்கள் அல்லது கல்லூரி / பள்ளி வளாகங்களில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளில் 240 மணிநேர சேவையை முடிக்க வேண்டும். தலைமைத்துவம் மற்றும் ஆளுமை மேம்பாடு, யோகா மற்றும் தியானம், தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை, மென் திறன் மேம்பாடு, வாழ்வியல் திறன், பேரிடர் மேலாண்மை மற்றும் முதலுதவி பயிற்சி, சுற்றுச்சூழல் மேம்பாடு மற்றும் மரம் வளர்ப்பு, சாலைப் பாதுகாப்பு, வாக்காளர் விழிப்புணர்வு முகாம்கள், சுகாதார முகாம்கள் மற்றும் சுகாதாரக் கல்வி, டெங்கு மற்றும் கொரோனா தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் போன்ற செயல்பாடுகளை மாணவர்கள் மேற்கொள்கின்றனர்.

2023 ஏப்ரல் 11]

13.3 சிறப்பு முகாம்:

சிறப்பு முகாம் என்பது தத்தெடுக்கப்பட்ட கிராமங்களில் அல்லது குடிசைப் பகுதிகளில் விடுமுறைக் காலங்கள் மற்றும் சிறப்பு விடுமுறை நாட்களில் கட்டாயமாக நடத்தப்படும். நாட்டு நலப்பணித் திட்டத்தின் முக்கியமான நிகழ்வாகும். ஏழு நாள் முகாம் நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள் மற்றும் உள்ளூர் தன்னார்வலர்களையும் உள்ளடக்கி குறிப்பிட்ட கருப்பொருளின்மீது கவனம் செலுத்தும் விதமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வழிகாட்டு நெறிமுறைகளின்படி, இந்த முகாமில் 50% நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள் பங்கேற்பர்.

சிறப்பு முகாம்கள் நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்களுக்கு விலைமதிப்பற்ற கற்றல் அனுபவங்களை வழங்குகிறது. அதே நேரத்தில் அவர்கள் சேவை சமூகத்திற்குப் பயனளிக்கின்றன.

13.4 நிதி உதவி:

நாட்டு நலப்பணித் திட்டம் ஒன்றிய அரசின் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது. தொடர்பணி மற்றும் சிறப்பு முகாம் நிகழ்ச்சிகளுக்கு நாட்டு நலப்பணித் திட்டத்திற்கு (NSS) நிதியுதவி வழங்குகிறது. தற்போது மானிய தொகை தொடர் பணிகளுக்கு ஆண்டுக்கு ஒரு மாணவருக்கு தலா ரூ.400/-ம், ஏழு நாட்கள் நடைபெறும் சிறப்பு முகாம்களுக்கு ஒரு மாணவருக்கு தலா ரூ.700/-ம் வழங்கப்படுகிறது.

13.5 சிறப்பு நிதி:

சிறப்பு நிதி என்பது பல்வேறு நிலைகளில் நாட்டு நலப்பணித் திட்டத்தைச் (NSS) செயல்படுத்த நிதி ஆதாரமாக உள்ளது. ஒரு கல்வி நிறுவனத்தில் முதலாம் ஆண்டில் சேர்க்கப்படும் ஒவ்வொரு மாணவரும் இந்தத் திட்டத்திற்கு ரூ.10/– நிதி வழங்குகிறார்கள். இந்நிதியிலிருந்து ரூ.5/– மட்டும் நாட்டு நலப்பணித் திட்ட செயல்பாடுகளுக்காக நிறுவனத்தால் தக்க வைக்கப்படுகிறது. அந்தந்த பல்கலைக்கழகங்கள் அல்லது இயக்குநரகங்கள் அவர்களின் எல்லைக்கு உட்பட்ட நாட்டு நலப்பணித் திட்ட செயல்பாடுகளை நிர்வகிக்கவும், ஒருங்கிணைக்கவும் கல்வி நிறுவனத்தால் ரூ.3/– அனுப்பி வைக்கப்படுகிறது. மாநில அளவில் நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு மாநில நாட்டு நலப்பணித் திட்ட அலுவலகத்திற்கு ரூ.2/– அனுப்பப்படுகிறது.

13.6 முக்கிய செயல்பாடுகள்:

தமிழ்நாட்டில் நாட்டு நலப்பணித் திட்டம் (NSS) பல்வேறு பெருமைக்குரிய செயல்பாடுகளில் மாணவத் தன்னார்வலர்கள் மற்றும் திட்ட அலுவலர்களின் அர்ப்பணிப்பு மற்றும் உற்சாகத்தை வெளிப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது.

13.6.1 குடியரசு தின அணிவகுப்பு:

26 ஜனவரி 2023 அன்று புது தில்லியில் நடைபெற்ற தேசிய குடியரசு தின அணிவகுப்பில், தமிழ்நாட்டில் இருந்து 14 நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள் மற்றும் ஒரு நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் மாநிலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்தப் பங்கேற்பு, சமூகத்தில் அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பை எடுத்துக்காட்டுகிறது.

மேலும், அதே நாளில் சென்னை மெரினாவில் நடைபெற்ற மாநில குடியரசு தின அணிவகுப்பில் 120 தன்னார்வலர்கள் மற்றும் 10 திட்ட அலுவலர்கள் அடங்கிய நாட்டு நலப்பணித் திட்ட குழு ஒன்று பங்கேற்றது. இந்நிகழ்வின்போது மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் அவர்கள் நாட்டு நலப்பணித் திட்டக் குழுவுடன் கலந்துரையாடினார்கள். சென்னை மெரினாவில் நடைபெற்ற மாநில குடியரசு தின அணிவகுப்பில் 7-வது முறையாக நாட்டு நலப்பணித் திட்ட குழு பங்கேற்றது.

13.6.2 மாநில சாகச முகாம்:

2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஏற்காட்டில் மாநில சாகச முகாம் நடைபெற்றது, இம்முகாமில் பேரிடர்களின்போது சவாலான சூழ்நிலைகளை திறம்பட சமாளிக்கவும், தைரியத்தையும் உறுதியையும் வெளிப்படுத்தும் நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள் மற்றும் ஒருங்கிணைப்பாளர்களின் திறன்களை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டது. இம்முகாமில் 120 நாட்டு நலப்பணித் திட்ட தன்னார்வலர்கள், 10 நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், 10 நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள், 10 பயிற்சியாளர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர்.

2023 ஏப்ரல் 11]

13.6.3 போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு:

போதைப்பொருள் பயன்படுத்துவதால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன், தமிழ்நாடு அரசால் ஆகஸ்ட், 2022 இல் "போதைக்கு எதிரான இயக்கம்"தொடங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் "போதையில்லா தமிழ்நாடு" மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களிலும் போதைப்பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வை நிலை நிறுத்த NSS/NCC *தன்னார்வலர்களுக்கான தன்னார்வத் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்கள். அதன்படி, போதைப்பொருள் பயன்பாட்டுக்கு எதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகளை கல்வி நிறுவனங்களில் தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

நாட்டு நலப்பணித் திட்ட பிற முக்கிய செயல்பாடுகள்:

வ. எண்	செயல்பாடுகளின் விவரம்	பங்கேற்ற நாட்டு நலப்பணித் திட்ட தொண்டர்களின் எண்ணிக்கை
1	மரம் நடுதல்	60,783
2	இரத்த தானம் முகாம்கள்	70,584
3	சுகாதாரம்/கண்/நோய்த்தடுப்பு/ கால்நடை மருத்துவ முகாம்கள்	10,150
4	ஃபிட் இந்தியா ஃப்ரீடம் ரன் 2.0 (Fit India Freedom Run 2.0)	66,160
5	தூய்மை இந்தியா @ 75-ன்கீழ் கிராமங்கள்/ நகரங்கள்/ நீர்நிலைகள்/ பொது இடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் நெகிழி ஒழிப்பு	3,42,308
6	சர்வதேச யோகா தினம்	2,78,080
7	ஸ்வச்தாபக்வாடா/போஷன் அபியன்(SwachhtaPakkhwada/ Poshan Abiyan)	61,280
8	சர்வதேச போதைப் பொருள் எதிர்ப்பு தினம்	3,80,588

[2023 ஏப்ரல் 11

13.7 நாட்டு நலப்பணித் திட்ட விருதுகள்:

நாட்டு நலப்பணித் திட்ட விருதுகள் இந்திய அரசின் இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. 2020-21 ஆம் ஆண்டிற்கான விருதை சென்னை அண்ணா பல்கலைக்கழகம் சிறந்த பல்கலைக்கழகத்திற்கான விருதையும், சிறந்த திட்ட ஒருங்கிணைப்பாளருக்கான விருதையும் பெற்றுள்ளது. மேலும், சிறந்த தன்னார்வலர் விருதை நாமக்கல் பாவை பொறியியல் கல்லூரியின் தன்னார்வலர் பெற்றுள்ளார்.

நாட்டு நலப்பணித் திட்டத்தில் பங்கேற்பதன்மூலம் மாணவர்களின் ஆளுமையின் முழுமையான வளர்ச்சிக்கும், அவர்களை பொறுப்புள்ள மற்றும் சமூக ஈடுபாடுள்ள குடிமக்களாக உருவாக்குவதிலும் அவர்கள் சமூகத்திலும், தேசத்திலும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

படலம் – 14

தேசிய மாணவர் படை

தேசிய மாணவர் படை (NCC) என்பது ராணுவம், கடற்படை மற்றும் விமானப் படையை உள்ளடக்கிய இந்தியாவின் மதிப்புமிக்க முப்படை சேவை அமைப்பாகும். நாடு முழுவதும் உள்ள உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிப்பதற்காக இது அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. 1948 ஆம் ஆண்டின் தேசிய மாணவர் படை சட்டத்தின்கீழ் ஜூலை 15, 1948 இல் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்ட தேசிய மாணவர் படை ஆரம்பத்தில் மூன்று கல்லூரி அளவிலான அலகுகளுடன் முன்னாள் சென்னை மாநிலத்தில் தொடங்கியது. 1949 வாக்கில், தேசிய மாணவர் படை பயிற்சியானது, பள்ளி அளவில் சிறுவர்களை உள்ளடக்கியதாக 10 கல்வி நிறுவனங்கள் 1,550 மாணாக்கர்களுடன் விரிவடைந்தது. 1954 ஆம் ஆண்டில், பெண்களுக்கான தேசிய மாணவர் படை பயிற்சி, கல்லூரி மற்றும் பள்ளி அளவில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்திய இளைஞர்களிடையே பண்பு, தேசபக்தி, ஒற்றுமை மற்றும் தன்னலமற்ற சேவை போன்ற பண்புகளை வளர்ப்பதில் தேசிய மாணவர் படை முக்கிய பங்கு வகிக்கிறது. ஒழுக்கம்

2023 ஏப்ரல் 11]

மற்றும் பொறுப்பை வளர்ப்பதன்மூலம், இளம் மாணவர்களை மனச்சான்றுள்ள குடிமக்களாக வடிவமைக்க தேசிய மாணவர் படை உதவுகிறது. கூடுதலாக, தேசிய மாணவர் படை தனிப்பட்ட வளர்ச்சிக்கான ஒரு தளமாக செயல்பட்டு இளைஞர்களின் ஆற்றலையும் திறனையும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான பெரிய இலக்கை நோக்கி வழிநடத்துகிறது.

தேசிய மாணவர் படை முழக்கம்:

தேசிய மாணவர் படையின் முழக்கம் 'ஒற்றுமை மற்றும் ஒழுக்கம்' ஆகும். பலதரப்பட்ட பின்னணியில் இருந்து வரும் தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் ஒற்றுமையாக இணைந்து பணியாற்ற பயிற்சியளிக்கப்படுகின்றனர். ஒழுக்கமானது, மாணாக்கர்களுக்கு 'விதி அடிப்படையிலான வாழ்க்கையை' பின்பற்ற கற்றுக்கொடுக்கிறது.

தேசிய மாணவர் படையின் குறிக்கோள்கள்:

தேசிய மாணவர் படையின் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேசிய மாணவர் படையின் மூன்று குறிக்கோள்கள்:-

(அ) நற்பண்பு, நட்புடைமை, ஒழுங்குமுறை, தலைமை பண்பு, சமயசார்பற்ற நோக்கம், துணிவு செயலார்வம் மற்றும் உன்னதமான சுயநலமில்லாத தொண்டு ஆகியவற்றினை இளைஞர்களிடையே வளர்த்தல்.

(ஆ) மனித வள மேம்பாட்டை முறையாக இளைஞர்களுக்குப் பயிற்றுவித்து, ஊக்குவித்து தலைமை பண்பை அன்றாட வாழ்வில் பெற்று, அவர்களை நாட்டுப் பணிக்காக எப்போதும் கிடைக்கச் செய்தல்.

(இ) இளைஞர்கள், இராணுவத்தில் ஒரு நல்ல நிலையை அடைவதற்கு பொருத்தமான சுற்றுச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

14.1 நிருவாகம்

தேசிய மாணவர் படையின் தலைவராக தலைமை இயக்குநர் தில்லியிலிருந்து இயங்குகிறார். நாட்டில் உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் புவியியல் எல்லைகளின் அடிப்படையில் 17 இயக்குநரகங்களாக தேசிய மாணவர் படை பிரிக்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 11

தமிழ்நாட்டில் உள்ள தேசிய மாணவர் படை, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபார் தீவுகள் இயக்குநரகத்தின் ஒரு பகுதியான, இது கமாடோர் (Rank) பதவியில் உள்ள துணை தலைமை இயக்குநர் தலைமையில் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் ஐந்து தேசிய மாணவர் படை குழும தலைமையகங்கள் உள்ளன. மெட்ராஸ் 'A' மற்றும் 'B' ஆகிய இரண்டு குழு தலைமையகங்கள் சென்னையில் அமைந்துள்ளன. கோவை, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளியில் தலா ஒன்று அமைந்துள்ளது. அனைத்து தேசிய மாணவர் படை குழுமத் தலைமையகங்களும் கர்னல் (Rank) பதவியில் உள்ள அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகின்றன. தமிழகத்தில் தற்போது 52 தேசிய மாணவர் படை அலகுகள் உள்ளன.

14.2 தேசிய மாணவர் படையின் பரவல்:

பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் அனைத்து மாணவர்களும் தன்னார்வ அடிப்படையில் தேசிய மாணவர் படையில் பதிவு செய்யலாம். இன்றைய நிலவரப்படி, தமிழ்நாடு இயக்குநரகம் 593 கல்லூரிகளிலும், 1049 பள்ளிகளிலும், 36,054 முதுநிலை மாணவர் பிரிவு / மாணவியர் பிரிவு (SD/SW), 69,876 இளநிலை மாணவர் பிரிவு / மாணவியர் பிரிவு (JD/JW) ஆக மொத்தம் 1,05,930 தேசிய மாணவர் படை மாணவ மாணவியர்களை உள்ளடக்கியுள்ளது. சில ஆண்டுகளுக்கு முன்பு வரை, அரசு, அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி / கல்வி நிறுவனங்களிடமிருந்து மட்டுமே தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் பதிவு செய்யப்பட்டனர். கடந்த சில ஆண்டுகளில், முழு சுயநிதித் திட்டம் மற்றும் எல்லைக் கடற்கரைப் பகுதி விரிவாக்கத் திட்டத்தின்கீழ் கூடுதல் தேசிய மாணவர் படை மாணாக்கர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

14.3 மனிதவளம்

14.3.1 தேசிய மாணவர் படை அலுவலர்

தேசிய மாணவர் படை அலுவலர் என்பவர் தேசிய மாணவர் படை மாணாக்கர்களை நேரடியாகக் கையாள்பவர் ஆவார். உடல் தகுதி மற்றும் ஒரு கல்வி நிறுவனத்தில் சுய விருப்பமுள்ள நிரந்தர ஆசிரியரின் உரிய தேர்வு செயல்முறை மற்றும் பயிற்சிக்குப் பிறகு தேசிய மாணவர் படை அலுவலராக நியமிக்கப்படுகிறார். கல்வி நிறுவனத்திற்கும் அலகு அலுவலகத்திற்கும் தேசிய மாணவர் படை

2023 ஏப்ரல் 11]

அலுவலராக நியமிக்கப்படும் தேசிய மாணவர் படை அலுவலர், இராணுவப் பயிற்சிக்கு இணையான மூன்று மாத அடிப்படை பயிற்சியைப் பெற வேண்டும். நாளது தேதியில், 380 முதுநிலை பயிற்சி அலுவலர்களும் 697 இளநிலை பயிற்சி அலுவலர்களும் தேசிய மாணவர் படை நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து கட்டளை அதிகாரியின் நேரடி உத்தரவின்படி வழி நடத்தி வருகின்றனர். கல்வி நிறுவனங்கள் தேசிய மாணவர் படை அலுவலர்களைத் தேர்வு செய்யும் வரை தேசிய மாணவர் படை பராமரிப்பாளர்கள் மேற்பார்வையில் நியமிக்கப்படுவார்கள்.

14.3.2 மாநில அரசு ஊழியர்கள் – தற்போதைய நிலை

தேசிய மாணவர் படை, மத்திய மற்றும் மாநில அரசு அலுவலர்கள் / ஊழியர்களால் நிர்வகிக்கப்படுகிறது. தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள தேசிய மாணவர் படை பிரிவுகளுக்கு தமிழ்நாடு அரசு மனிதவளத்தை வழங்குகிறது. அதன் விவரங்கள் பின்வருமாறு: –

வ. எண்	பணியிடங்கள்	ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்	தற்போது நிரப்பப்பட்டுள்ள இடங்கள்
1	துணை இயக்குநர்	1	1
2	உதவி இயக்குநர்	7	6
3	மேற்பார்வையாளர்	63	63
4	உதவியாளர்	225	159
5	இளநிலை உதவியாளர்	113	74
6	சுருக்கெழுத்து தட்டச்சர்	6	2
7	விமான மாதிரி பயிற்றுநர் மற்றும் பண்டகக் காப்பாளர்	4	4
8	கப்பல் மாதிரி பயிற்றுநர் மற்றும் பண்டகக் காப்பாளர்	5	5

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	பணியிடங்கள்	ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள்	தற்போது நிரப்பப்பட்டுள்ள இடங்கள்
9	பதிவுறு எழுத்தர்	4	4
10	ஓட்டுநர்	133	94
11	பண்டக உதவியாளர்	393	109
12	படகு ஏவலர்	1	0
13	அலுவலக உதவியாளர்	67	36
14	காவலாள்	41	27
15	படகு பராமரிப்பாளர்	10	7
16	துப்புரவு பணியாளர்	58	58
	மொத்தம்	**1131**	**649**

14.4 உட்கட்டமைப்பு:

தரமான பயிற்சி அளிப்பதற்காகவும், முகாம்களை நடத்துவதற்கும், தரமான பயிற்சி உபகரணங்களை வழங்குவதற்கும் பிரத்யேகப் பயிற்சி உட்கட்டமைப்பு மற்றும் தரமான உபகரணங்கள் தேவை. வரும் காலங்களில் சென்னை, மதுரை, திருச்சி மற்றும் கோவையில் தலா ஒரு தேசிய மாணவர் படை பயிற்சி மையங்களை உருவாக்கிட திட்டமிடப்பட்டுள்ளது. தற்போதைய உள்கட்டமைப்பின் நிலை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது:-

14.4.1 தேசிய மாணவர் படை பயிற்சி மையம், இடையப்பட்டி

மதுரையில் உள்ள தேசிய மாணவர் படை குழும தலைமையகத்தின்கீழ் மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள இடையப்பட்டி தேசிய மாணவர் படை பயிற்சி மையம், 2017 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. தேசிய மாணவர் படை முகாமின்போது, 600 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் மற்றும் 50 பணியாளர்கள் 10 நாட்களுக்கு தங்குவதற்குப் போதுமான அறைகள் / வசதிகள் உள்ளன. நிர்வாகத் கட்டடம், தங்கும் அறைகள், கலையரங்கம், பயிற்சிப் பகுதி, ரைபிள் பாவிப்பு,

2023 ஏப்ரல் 11]

வாகன ஓட்டுதல் பாவிப்பு, ஆங்கில மொழி ஆய்வகம் மற்றும் பாறை ஏறும் பயிற்சிக்கான சுவர் ஆகியவை இந்த மையத்தில் உள்ள வசதிகளாகும்.

14.4.2 நீர்பெயர் நிரந்தர முகாம்:

நீர்பெயர் நிரந்தர முகாமில் கட்டுமானப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. இதன் ஆரம்பகட்டப் பணிகளின் முதற்கட்டம் நிறைவடைந்துள்ளது. ஒரு நிர்வாகத் தொகுதி, ஆயுதக் கிடங்கு, 500 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் மற்றும் 40 அதிகாரிகள்/ஊழியர்கள் 10 நாட்கள் தங்குவதற்கு தங்குமிட வசதிகள், துப்பாக்கிச் சுடுதளம், டிரில் ஸ்கொயர், தடை ஓட்டம், திறந்த நிலை மேடை மற்றும் 200 பேர் அமரும் திறன் கொண்ட கொட்டகையால் மூடப்பட்ட திறந்த வெளி அரங்கம் ஆகியவற்றை இம்மையம் கொண்டுள்ளது.

14.4.3 ஒலையூர் நிரந்தர பயிற்சி முகாம், திருச்சிராப்பள்ளி

திருச்சிராப்பள்ளி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கான பயிற்சி தளம் கட்டுவதற்காக திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கம் தாலுகா ஒலையூர் கிராமத்தில் 1.97.0 ஹெக்டேர் நிலத்தை தேசிய மாணவர் படைக்கு நில மாற்றம் செய்து திருச்சி மாவட்ட ஆட்சியர் ஆணையிட்டுள்ளார்.

14.4.4 மேலக்கோட்டையூர், தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் 50மீ. துப்பாக்கிச்சுடு பயிற்சி தளம்

மேலக்கோட்டையூரில் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் 50 மீட்டர் துப்பாக்கி சுடு பயிற்சி தளம் கட்டுவதற்கு ரூ.1,10,00,000/ – (ஒரு கோடியே பத்து இலட்சம் ரூபாய் மட்டுமே) தமிழ்நாடு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

14.4.5 படகோட்டுதல் பாவிப்பு

மாநிலத்தின் அனைத்து 5 கடற்படைப் பிரிவுகளிலும் தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக படகோட்டுதல் பாவிப்புகள் (Rowing Simulators) நிறுவப்பட்டுள்ளன.

14.4.6 விமானமோட்டுதல் பாவிப்பு

சென்னை தாம்பரத்தில் உள்ள 1 TN Air Sqn NCC *அலகிலும் திருச்சியிலுள்ள 3* Tamil Nadu Air Sqn NCC *அலகுகளிலும் விமானமோட்டுதல் பாவிப்பு நிறுவப்பட்டுள்ளன.*

14.5 தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் மானியங்கள்

மாநிலத்தின் தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு பின்வரும் ஊக்கத் தொகைகளை வழங்குவதன்மூலம் தமிழ்நாடு அரசு தேசிய மாணவர் படை மாணாக்கர்களைத் தீவிரமாக ஆதரித்து, ஊக்குவித்து வருகிறது:-

(அ) தேசிய அளவிலான முகாம்களில் மாணாக்கர்கள் தங்கள் செயல் திறனில் மேலும் சாதிக்க ஊக்குவிக்கும் வகையில், 2018-19 ஆம் ஆண்டில் ஊக்கத் தொகையை ரூ.5,80,400/-லிருந்து ரூ.13,47,250/– என உயர்த்தி தமிழ்நாடு அரசு வழங்கியுள்ளது.

(ஆ) தமிழ்நாடு அரசு தேசிய மாணவர் படையின் தகுதியுள்ள 200 முதுநிலை மாணவர்களுக்கு மாதம் ரூ.500/ – வீதம் பத்து மாதங்களுக்கும், 400 இளநிலை மாணவர்களுக்கு மாதம் ரூ.200 வீதம் 10 மாதங்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் ரூ.18,00,000/– (ரூபாய் பதினெட்டு இலட்சம் மட்டும்) ஊக்கத் தொகையாக வழங்குகிறது.

(இ) தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வுகளில் தேசிய மாணவர் படை மாணவர்களில் 'A', 'B' மற்றும் 'C' சான்றிதழ் வைத்திருப்பவர்களுக்கு 1/2, 1 மற்றும் 2 மதிப்பெண்கள் கூடுதலாக வழங்கப்பட்டு வருகின்றது.

(ஈ) இளநிலை மற்றும் முதுநிலை ஆசிரியர்களுக்கு வாய்மொழித் தேர்வில் வழங்கப்படும் 12 மதிப்பெண்களில் தேசிய மாணவர் படையில் செய்த செயல்பாடுகளுக்காக மாணவர்களுக்கு 1/2 மதிப்பெண் வழங்கப்படுகிறது.

*(உ) கல்லூரி மற்றும் பள்ளிகளில் நடத்தப்படுகின்ற தேசிய மாணவர் படை பயிற்சிக்கு (*Parade*) ஒரு மாணாக்கருக்கு ஒரு மணி நேர அணிவகுப்புக்கு வழங்கப்படும் உணவு தொகை ரூ.10/-லிருந்து ரூ.25/– ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.*

2023 ஏப்ரல் 11]

இதற்காக 2022-23 ஆம் நிதியாண்டிலிருந்து ரூ.8,43,60,000/– (ரூபாய் எட்டு கோடியே நாற்பத்து மூன்று இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) தொடர்ச்சியான செலவினமாக தமிழ்நாடு அரசு கூடுதல் நிதி வழங்கியுள்ளது.

(ஊ) இறக்குமதி செய்யப்பட்ட 13 விளையாட்டு துப்பாக்கிகள் (.22 ரைபிள்கள்) வாங்குவதற்கும் இதர கூடுதல் உபகரணங்கள் வாங்குவதற்கும் ரூ.58,23,300/– (ரூபாய் ஐம்பத்து எட்டு இலட்சத்து இருபத்து மூவாயிரத்து முந்நூறு மட்டும்) ஒப்பளிக்கப்பட்டுள்ளது.


(எ) மாநிலத்தின் கடலோரப் பகுதிகளில் தேசிய மாணவர் படையை விரிவுபடுத்துவதற்காக ரூ.72,98,805/– (ரூபாய் எழுபத்தி இரண்டு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரத்து எண்ணூற்று ஐந்து மட்டும்) தொகைக்கான நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ஏ) தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கான முகாம்கள் மற்றும் பயிற்சி தொடர்பான நடவடிக்கைகளுக்கு கூடுதல் தொகை ரூ.1,00,00,000/– (ஒரு கோடி ரூபாய் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஐ) இயக்குநரகங்களுக்கிடையேயான மற்றும் ஜி.வி. மாவலங்கர் துப்பாக்கி சுடுதல் போட்டிகளில் அதிக செயல்திறனை வெளிப்படுத்த தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு பயிற்சி அளிக்க ஏதுவாக ரூ.7,00,000 (ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) செலவில் .22mm இறக்குமதி செய்யப்பட்ட விளையாட்டு துப்பாக்கி தோட்டாக்கள் (Eley Club) 12000 சுற்றுகள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட துப்பாக்கி தோட்டாக்கள் 8400 (Eley Tenex) வாங்குவதற்கு தமிழ்நாடு அரசு ஒப்பளித்துள்ளது.

14.6 நிதி ஒதுக்கீடு

2023-2024 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.66,33,23,000/ – ஆக உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் தேசிய மாணவர் படைக்கான வருடாந்திர நிதி ஒதுக்கீடு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:-



14.7 ஆயுதங்கள்

தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு ஆயுதம் கையாளும் பயிற்சி மற்றும் துப்பாக்கிச் சூடு பயிற்சிக்காக ஆயுதங்களை வழங்குவது இந்திய அரசின் பொறுப்பு ஆகும். இந்திய அரசு .22 வகை ரைபிள்களில் 1158 மற்றும் 7.62 வகை ரைபிள்களில் 1589 வழங்கியுள்ளது. இதுதவிர தமிழக அரசு இறக்குமதி செய்யப்பட்ட 21 விளையாட்டு துப்பாக்கிகளை (0.22 மிமீ) வழங்கியுள்ளது.

14.8 தேசிய மாணவர் படை மாணாக்கர்களின் சமூக சேவை நடவடிக்கைகள்

சமூக சேவை என்பது தேசிய மாணவர் படை பாடத்திட்டத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும். தேசிய மாணவர் படை மாணாக்கர்கள், ஆண்டு முழுவதும் அதிக எண்ணிக்கையிலான சமூக சேவை நடவடிக்கைகளில் பங்கேற்று சமூகத்திற்கு பங்களிக்கின்றனர். சில குறிப்பிட்ட செயல்பாடுகளின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

2023 ஏப்ரல் 11]

- **யோகா**

சமநிலை வாழ்வின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி ஜூன் 21 ஆம் தேதி தமிழகம் முழுவதும் 773 இடங்களில் நடைபெற்ற சர்வதேச யோகா தினத்தில் 54,548 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் மற்றும் 1,364 முன்னாள் தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் பங்கேற்றனர்.

- **கடற்கரையோர துப்புரவு பிரச்சாரம்**

17,632 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் ஆண்டு முழுவதும் கடற்கரைகள் மற்றும் ஆற்றங்கரைகளை சுத்தமாகவும் நெகிழி மற்றும் பிற கழிவுகளிலிருந்தும் பாதுகாக்க பங்களித்தனர்.

- **புகையிலை எதிர்ப்பு நாள் பேரணி (மே 31)**

புகையிலை இல்லாத தலைமுறையை ஊக்குவிக்கும் வகையில், தமிழ்நாடு முழுவதும் தேசிய மாணவர் படை துறை நடத்திய புகையிலை எதிர்ப்பு தினப் பேரணியில் 1,400 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் பங்கேற்றனர்.

- **கால்நடையாக (Foot Policing) தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் ஒற்றைப் பயன்பாட்டு நெகிழிக்கு எதிரான விழிப்புணர்வு**

2137 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் கால்நடையாக (Foot Policing) *மக்களுடன் தனிப்பட்ட அளவில் தொடர்பு கொண்டு, நெகிழி மாசுபாட்டால் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை அவர்களுக்கு உணர்த்தி ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் நெகிழிகளுக்கு எதிரான விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.*

- **இரத்த தானம்**

2130 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் அரசு நடத்தும் இரத்ததான வங்கிகள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் இரத்த தானம் செய்தனர்.

- **உலக மிதிவண்டி தினம் (ஜூன் 3)**

3,130 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் மிதிவண்டி ஓட்டுதல் எளிமையான, சுத்தமான, மலிவான, மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்ற போக்குவரத்து முறை என எடுத்துரைத்தனர்.

[*2023 ஏப்ரல் 11*

- **ஃபிட் (Fit) இந்தியா இயக்கம் (29 ஆகஸ்ட்)**

ஆரோக்கியமான வாழ்க்கை முறைக்கு உடல் செயல்பாடுகளை ஊக்குவிக்கும் வகையில், தமிழகத்தைச் சேர்ந்த 3,437 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் நாடு தழுவிய இந்த இயக்கத்தில் பங்கேற்றனர்.

- **தேசிய ஒற்றுமை தினம் (அக்டோபர் 31)**

ஒற்றுமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, 5,039 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் தேசிய ஒற்றுமை தினத்தைக் கொண்டாடி அதன் செய்தியைப் பரப்பினர்.

- **ஒவ்வொரு வீட்டிலும் மூவர்ணக்கொடி**

ஆகஸ்ட் 15 அன்று நடைபெற்ற இந்த நிகழ்வானது தேசியக் கொடி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், ஒற்றுமையை மேம்படுத்தவும் நோக்கமாகக் கொண்டிருந்தது. 12,989 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் இந்த முயற்சியில் பங்கேற்றனர்.

14.9 பாதுகாப்புப் படைகளில் தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் தேர்வு

*கடந்த ஐந்து ஆண்டுகளில், 45 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் நியமன அலுவலர்களாகவும், 212 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் பாதுகாப்புப் படைகளில் மற்ற பணியிடங்களிலும் (*other ranks*) சேர்ந்துள்ளனர்.*

14.10 சாதனைகள்

குடியரசு தின முகாம் (RDC) – 2023:

ஆண்டுதோறும் குடியரசு தின முகாம் (RDC) *தில்லி இராணுவ முகாம்* (Delhi Contt) *பாதுகாப்பு அரண்* (Garrison Parade) *மைதானத்தில் ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 01 முதல் 29 ஜனவரி வரை நடைபெறுகிறது. 17 இயக்குநரகங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 2070 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் மதிப்புமிக்க பிரதமரின் பதாகைக்காக (*PM's Banner*) போட்டியிடுகின்றனர். ஜனவரி 2023 இல் நடைபெற்ற குடியரசு தின முகாம் மற்றும் பிரதமரின் பேரணியில், தமிழ்நாடு இயக்குநரகம் ஒட்டுமொத்தமாக*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

இரண்டாவது இடத்தைப் பிடித்தது. ஜனவரி 2023 இல் புது தில்லியில் நடைபெற்ற பல்வேறு போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:-

வ. எண்	**நிகழ்ச்சியின் பெயர்**	**மாணாக்கர்களின் பெயர் / எண்ணிக்கை**	**வென்ற பதக்கம்**
(i)	*முதுநிலை மாணவர் பிரிவு – சிறந்த கடற்படை மாணாக்கர்*	*மாணவர் ஸ்ரேயான்ஷ் சிங்*	*தங்கம்*
(ii)	*இளநிலை மாணவர் பிரிவு – சிறந்த விமானப்படை மாணாக்கர்*	*மாணவர் கவின் K ரத்தோட்*	*வெள்ளி*
(iii)	*குதிரையேற்ற உடையலங்காரம்*	*மாணவி ஸ்வேதா*	*வெள்ளி*
(iv)	*குதிரையேற்ற உடையலங்காரம்*	*மாணவி காமேஷ்வரி*	*வெண்கலம்*
(v)	*குதிரையேற்ற உத்திகள்*	*மாணவி ஸ்வேதா*	*வெண்கலம்*
(vi)	*குதிரையேற்ற உத்திகள்*	*மாணவர் லோகநாதன்*	*வெண்கலம்*
(vii)	*பாலே நடனம்*	*36 மாணாக்கர்கள்*	*தங்கம்*
(viii)	*குழு நடனம்*	*20 மாணாக்கர்கள்*	*தங்கம்*
(ix)	*வானூர்தி வடிவமைப்பு*	*03 மாணாக்கர்கள்*	*தங்கம்*
(x)	*குழுப் பாடல்*	*20 மாணாக்கர்கள்*	*வெள்ளி*
(xi)	*தேசிய ஒருமைப்பாட்டு விழிப்புணர்வு முகாம் (NIAP)*	*20 மாணாக்கர்கள்*	*வெண்கலம்*

2023 குடியரசு தின முகாமில் பின்வரும் நிகழ்வுகளில் தமிழ்நாடு தேசிய மாணவர் படை இயக்குநரகம் 'சிறந்த தேசிய மாணவர் படை இயக்குநரகம்' எனத் தேர்ந்தெடுக்கப்பட்டது:-

[*2023 ஏப்ரல் 11*

(i) பொது நிபுணத்துவம் மற்றும் கட்டாய நிபந்தனைகள்

(ii) பாலே நடனம்

(iii) குழு நடனம்

(iv) கடற்படைப் பிரிவு போட்டி

(v) வானூர்தி வடிவமைப்பு

(vi) கலாச்சாரப் போட்டிகள்

அகில இந்திய இயக்குநரகங்களுக்கு இடையேயான விளையாட்டு துப்பாக்கி சுடுதல் போட்டி (IDSSC) மற்றும் G.V. மவ்லாங்கர் துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டிகள்

2022 ஆம் ஆண்டு ஜூலை 4 முதல் 15 வரை சண்டிகரில் நடைபெற்ற அகில இந்திய இயக்குநரகங்களுக்கு இடையேயான விளையாட்டு துப்பாக்கி சுடுதல் போட்டியில் 17 தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் கலந்து கொண்டனர். தமிழ்நாடு இயக்குநரகம் 4 தங்கம், 2 வெள்ளி மற்றும் 1 வெண்கலப் பதக்கங்களுடன் ஒட்டுமொத்த இரண்டாவது இடத்தைப் பிடித்தது. இப்போட்டியில் பங்கேற்ற அனைத்து தேசிய மாணவர் படை மாணாக்கர்களும் அகில இந்திய ஜி.வி. மவ்லங்கர் துப்பாக்கி சுடுதல் போட்டிகள் – 2022-ல் பங்கேற்க தகுதிப்பெற்று 2 தங்கப் பதக்கங்களையும் வென்றனர்.

தமிழ்நாடு மாநில துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் போட்டிகள்

47-வது தமிழ்நாடு மாநில துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்பை 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு துப்பாக்கி சுடுதல் சங்கம் திருச்சி ரைபிள் கிளப்பில் ஜூலை 27 முதல் 31 வரை நடத்தியது. தமிழ்நாடு தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் தனிநபர் மற்றும் குழு போட்டிகளில் 16 தங்கம், 2 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களை வென்று புதிய சாதனை படைத்தனர்.

அகில இந்திய தரைப்படை முகாம் (AITSC), புது தில்லி – 2022

இந்த 12 நாள் முகாம் ஆண்டுதோறும் அனைத்து ராணுவப் பிரிவு தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு டெல்லியில் நடத்தப்படுகிறது. தமிழ்நாடு இயக்குநரகம் தரைப்படை முகாம் (ஆண்கள்) பிரிவில் ஏழாவது இடத்தையும், தரைப்படை முகாம் (பெண்கள்) பிரிவில் பத்தாவது இடத்தையும் பெற்று 1 தங்கம் மற்றும் 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

2023 ஏப்ரல் 11]

அகில இந்திய விமானப் படை முகாம் (AIVSC), ஜோத்பூர் – 2022

ஆண்டுதோறும், ஜோத்பூரில் அனைத்து விமானப் படை தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு நடத்தப்படும் முகாமில் தமிழ்நாடு இயக்குநரகம் விமான வடிவமைப்பில் தனித்துவத்துடன் 3 தங்கம் மற்றும் 2 வெள்ளிப் பதக்கங்களைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

அகில இந்திய கடற்படை முகாம் (AINSC), விசாகப்பட்டினம் – 2022

அனைத்து கடற்படைப் பிரிவு தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு இந்த வருடாந்திர முகாமில் தமிழ்நாடு இயக்குநரகம் 1 தங்கம், 1 வெள்ளி மற்றும் 1 வெண்கலப் பதக்கங்களை வென்று இரண்டாவது இடத்தைப் பிடித்தது.

பாய்மர படகோட்டுதல் போட்டிகள் – 2022 (Yatching Regetta)

இந்த சவாலான படகோட்டும் போட்டியில் தமிழ்நாடு இயக்குநரகம் 1 தங்கம் மற்றும் 1 வெண்கலப் பதக்கத்தை வென்று முதலிடம் பிடித்தது.

பெருங்கடல் சாகசப் பயணம் (Ocean Sailing Expedition)

35 முதுநிலை மாணவர்கள் பிரிவு மற்றும் 25 முதுநிலை மாணவிகள் பிரிவு மாணாக்கர்கள் 2022 ஆம் ஆண்டு ஜூன் 6 முதல் 16 வரை 11 நாள் கடற்பயணத்தில், மூன்று திமிங்கல வேட்டையாடும் படகுகளில் பங்கேற்று 302 கி.மீ. தூரம் கடந்து அகில இந்திய அளவில் இரண்டாமிடத்தைப் பெற்றனர்.

மெரினா குடியரசு தின முகாம்

2023 ஆம் ஆண்டு ஜனவரி 26 அன்று மெரினாவில் அணிவகுத்துச் செல்ல தேசிய மாணவர் படை மாணவர் மற்றும் மாணவியர் குழுவிற்கு தலா ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் அணி சிறந்த அணிவகுப்புக் குழுவாகத் தேர்வு செய்யப்பட்டு மாண்புமிகு முதலமைச்சரால் பாராட்டப்பட்டது.

[2023 ஏப்ரல் 11

முதலமைச்சரின் பேரணி மற்றும் குடியரசு தின விழாவில் பங்கேற்ற தேசிய மாணவர் படை மாணாக்கர்களின் குழுவின் பாராட்டு விழா-2023

2023 ஆம் ஆண்டு பிப்ரவரி-4 அன்று பாரம்பரிய முதலமைச்சரின் பேரணி மற்றும் பாராட்டு விழா சென்னையில் நடைபெற்றது. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், குடியரசு தின விழா அணியினரைப் பாராட்டி, இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் ஊக்கமளிக்கும் உரையை வழங்கினார். நமது மாநிலத்தின் சார்பில் சிறப்பாக செயல்பட்ட மற்றும் விருது பெற்ற தேசிய மாணவர் படை மாணாக்கர்களுக்கு ரொக்க விருதுகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு, கோயம்புத்தூர் குழுமம் முதலமைச்சரின் பதாகையும், மெட்ராஸ் 'A' குழுமம் இரண்டாம் இடத்தையும் வென்றது.

முடிவுரை:

தமிழ்நாட்டில் உள்ள தேசிய மாணவர் படை, இளம் மாணவ மாணவியர்களுக்கு இராணுவப் பயிற்சி அளித்து, ஒழுக்கத்தை ஊக்குவித்தல் மற்றும் சமூக ஈடுபாட்டை ஊக்குவிப்பதன்மூலம் அவர்களின் வாழ்க்கையை வடிவமைப்பதில் முக்கிய பங்காற்றுகிறது. பல ஆண்டுகளாக, தேசிய மாணவர் படை, இளைஞர்களுக்கு தலைமைத்துவம் மற்றும் தைரியம் உள்ளிட்ட அத்தியாவசிய வாழ்க்கைத் திறன்களை வளர்த்துக்கொள்ள, ஒரு தளமாகச் செயல்பட்டு, இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு பகுதிகள் மற்றும் கலாச்சாரங்களை அவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது. தேசத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதன்மூலம், இந்த தேசிய மாணவர் படை மாணாக்கர்கள் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகித்துள்ளனர்.

2023 ஏப்ரல் 11]

பின்னிணைப்பு

தமிழ்நாட்டில் தற்போதுள்ள விளையாட்டு கட்டமைப்பு வசதிகள்

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
1	**அரியலூர்**	➢ *400 மீ தடகள ஓடுபாதை (மண்)* ➢ *கால்பந்து மைதானம் – 1 (மண்)* ➢ *வளைகோல்பந்து மைதானம் – 1 (மண்)* ➢ *கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்)* ➢ *கையுந்துபந்து ஆடுகளம் – 1 (மண்)* ➢ *கபாடி ஆடுகளம் – 1* ➢ *பூப்பந்து ஆடுகளம் – 1* ➢ *டென்னிஸ் ஆடுகளம் – 1 (செயற்கை இழை)* ➢ *உடற்பயிற்சி கூடம் – 1* ➢ *நீச்சல்குளம் 25மீ X 13மீ* ➢ *ஸ்கேட்டிங் வளையம்* ➢ *தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி* ➢ *பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் சிறு விளையாட்டரங்கம், ஜெயங்கொண்டம் தாலுகா* ➢ *400 மீ தடகள ஓடுபாதை (மண்)* ➢ *கால்பந்து மைதானம் – 1 (மண்)* ➢ *கையுந்துபந்து ஆடுகளம் – 1 (மண்)* ➢ *கூடைப்பந்து ஆடுகளம் – 1*

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
2.	சென்னை	**ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு** ➢ 40,000 இருக்கை வசதி ➢ கால்பந்து மைதானம்–1 (புல்தரை) ➢ 400 மீ 8-வரிசை செயற்கை இழை தடகள ஓடுபாதை (மின்னொளி வசதியுடன்) ➢ 60 மீ உள்ளரங்க பயிற்சி ஓடுதளம் (குளிர்சாதன வசதியுடன்) ➢ ஜுடோ கூடம் ➢ செஸ் கூடம் ➢ கேரம் கூடம் ➢ பளுதூக்கும் கூடம் ➢ மேசைப்பந்து கூடம் ➢ குத்துச்சண்டை கூடம் ➢ கடற்கரை கையுந்துபந்து ஆடுகளம் – 2 ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 3 (மண்) (1 மின்னொளி வசதியுடன்) ➢ எறிபந்து ஆடுகளம் – 1 ➢ கபாடி ஆடுகளம் – 1 ➢ புதிய ஊடக கூடம் ➢ கலந்தாய்வு கூடம் ➢ குளிர்சாதன உடற்பயிற்சி மையம் ➢ இந்திய விளையாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான சிறப்புநிலை விளையாட்டு மையம்

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சிறுவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம் ➢ ஊடகக் கூடம் ➢ மாநில விளையாட்டு வசதி மையம் ➢ துப்பாக்கி சுடும் பயிற்சி மையம் **ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகத்தில் உள்ள பயிற்சி ஓடுதள மைதானம்** ➢ கால்பந்து மைதானம்–1 (புல்தரை) ➢ 400 மீ 8-வரிசை செயற்கை இழை தடகள ஓடுதளம் (மின்னொளி வசதியுடன்) ➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம்–1 (குளிர்சாதன வசதியுடன்) ➢ இறகுப்பந்து உள்ளரங்கம்–1 (குளிர்சாதன வசதியுடன்) ➢ கையுந்துபந்து ஆடுகளம்–2 (மின்னொளி வசதியுடன்) ➢ கூடைப்பந்து ஆடுகளம்–2 (மின்னொளி வசதியுடன்) ➢ மாற்றுத்திறனாளிகளுக்கான பிரத்யேக நீர் சிகிச்சை நீச்சல் குளம் மற்றும் மறுவாழ்வு ➢ கைப்பந்து ஆடுகளம் ➢ ஸ்கேட்டிங் வளையம் ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்க்கான விளையாட்டு விடுதி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		நேரு உள்விளையாட்டரங்கம் பெரியமேடு ➢ மரத்தளத்துடன் குளிர்சாதன வசதி கொண்ட 8,000 இருக்கை வசதி கொண்ட உள்ளரங்கம் (மையப்படுத்தப்பட்ட குளிரூட்டு வசதி மற்றும் மரத்தளத்துடன் கூடிய விளையாட்டு பகுதி மற்றும் மின்னொளி வசதி கொண்டது. இறகுப்பந்து, கூடைப்பந்து, குத்துச்சண்டை, கேரம், செஸ், வாள்சண்டை, கைப்பந்து, ஜூடோ, கபாடி, மேசைப்பந்து, டேக்வோண்டா, மல்யுத்தம், கையுந்துப்பந்து மற்றும் இதர விளையாட்டுகள் மற்றும் விளையாட்டு அல்லாத நிகழ்வுகள்) ➢ ஸ்கேட்டிங் (செயற்கை இழை) வளையம் (மின்னொளி வசதியுடன்) ➢ சிமெண்ட் தரை கூடைப்பந்து ஆடுகளம் – 2 (மின்னொளி வசதியுடன்) ➢ கைப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ மேற்கூரையுடன் வாள்சண்டை கூடம் (மின்னொளி வசதியுடன்) (சிமெண்ட்) ➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்) ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்க்கான விளையாட்டு விடுதி

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ *தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்க்கான சிறப்புநிலை விளையாட்டு மையம்* ➢ *தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய மாணவியர்க்கான முதன்மை நிலை விளையாட்டு மையம்* **மேயர் இராதாகிருஷ்ணன் வளைகோல் பந்து விளையாட்டரங்கம், எழும்பூர்** ➢ *8,670 இருக்கை வசதி (கேலரி)* ➢ *செயற்கை இழை வளைகோல்பந்து ஆடுகளம்* ➢ *உடற்பயிற்சிக் கூடம்* ➢ *டென்னிஸ் ஆடுகளம் – 4 (மண்)* ➢ *கையுந்துப்பந்து ஆடுகளம் – 2 (மின்னொளி வசதியுடன்)* ➢ *அரைவட்ட உள்ளரங்க கையுந்துப்பந்து ஆடுகளம் (மின்னொளி வசதியுடன்)* ➢ *கலந்தாய்வுக் கூடம்* ➢ *நடைப்பயிற்சி பாதை* ➢ *தங்குமிட மையம்* **நீச்சல்குள வளாகம், வேளச்சேரி சாலை, கிண்டி** ➢ *4,000 இருக்கை வசதி (கேலரி)* ➢ *8-வரிசை சர்வதேச பந்தய நீச்சல்குளம் (50மீ X 25மீ)* ➢ *குதித்தல் நீச்சல் குளம் (18மீ X 25மீ X 5.5மீ ஆழம்)*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 11

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ பயிற்சி நீச்சல் குளம் (25மீ X 25மீ) ➢ உடற்பயிற்சிக் கூடம் (குளிர்சாதன வசதியுடன்) ➢ கலந்தாய்வுக் கூடம் ➢ ஜிம்னாஸ்டிக் உள்ளரங்கம் ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் (4 ஆடுகளங்கள்) **டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம்** ➢ 7,000 இருக்கை வசதி ➢ விளையாட்டு அரங்க மைய பகுதியில் செயற்கை இழை 4,800 இருக்கை வசதி ➢ 2,800 இருக்கை வசதியுடன் கூடிய 6 பயிற்சி ஆடுகளங்கள் ➢ உடற்பயிற்சி கூடம் (குளிர்சாதன வசதி கொண்டது) ➢ தங்குமிட வசதிகள் ➢ கலந்தாய்வுக் கூடம் **நேரு பூங்கா விளையாட்டு வளாகம்** ➢ சர்வதேச தர ஸ்குவாஷ் ஆடுகளம் – 8 (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு ஸ்குவாஷ் ராக்கெட் கழகம் புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில்) ➢ 400மீ தடகள ஓடுபாதை (மண்)

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ *கால்பந்து ஆடுகளம் – 1 (புல்தரை)* ➢ *சிமெண்ட் கூடைப்பந்து ஆடுகளம் – 1* ➢ *செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 2* ➢ *உள்ளரங்க இறகுப்பந்து ஆடுகளம் – 3* ➢ *கபாடி ஆடுகளம் – 1* ➢ *கையுந்துப்பந்து ஆடுகளம் – 1* ➢ *தங்குமிட வசதிகள்* **சென்னை மாவட்டப் பிரிவு, செனாய் நகர், சென்னை** ➢ *நீச்சல் குளம் (36மீ X 18மீ)* ➢ *குறுந்தூர நீச்சல் குளம் (25 மீ X 16 மீ)* ➢ *சிறுவர் நீச்சல் குளம் (6மீ X 3 மீ)* ➢ *இறகுப்பந்து உள்ளரங்கம் – 2 (மரத்தளம் (ம) மின்னொளி வசதியுடன்)* ➢ *கையுந்துப்பந்து (மண்) ஆடுகளம் – 1 (மின்னொளி வசதியுடன்)* ➢ *குளிரூட்டு உடற்பயிற்சிக் கூடம்–1* **அண்ணா நீச்சல்குளம், மெரினா** ➢ *நீச்சல்குளம் (50 மீ X 25 மீ)* ➢ *நீச்சல்குளம் (25 மீ X 15 மீ)* **முகப்பேர் விளையாட்டு வளாகம்** ➢ *டென்னிஸ் ஆடுகளம் – 4 (2 செயற்கை இழை, 2 மண்)*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ கூடைப்பந்து ஆடுகளம் – 2 (சிமெண்ட்) ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் டால்பின் அகாடமிக்கிடையே புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில்) ➢ சிறுவர் நீச்சல் குளம் ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் **ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சி கல்லூரி மைதானம்** ➢ செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் (தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் ஒய்.எம்.சி.ஏ. புரிந்துணர்வு ஒப்பந்த அடிப்படையில்) ➢ விளையாட்டு வீரர்கள் உடை மாற்றும் அறை **புதூர்** ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, புதூர் (கிரிக்கெட்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
3.	கோயம்புத்தூர்	➢ 30,000 பேர் அமரக் கூடிய வசதி கொண்ட திறந்தவெளி விளையாட்டரங்கம் ➢ 400 மீ தடகள ஓடுபாதை (செயற்கை இழை) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (இயற்கை புல்வெளி) (உயர் கோபுர மின்னொளி வசதியுடன்) ➢ உடற்பயிற்சிக் கூடம் ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
4.	கடலூர்	➢ 400 மீ தடகள ஓடுபாதை (கரித்தூள்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ வளைகோல்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கூடைப்பந்து (சிமெண்ட்) ஆடுகளம் – 1 ➢ கையுந்துபந்து ஆடுகளம் – 2 (மண்) ➢ கபாடி ஆடுகளம் – 2 (மண்) ➢ பூப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் – 1 ➢ நடைப்பயிற்சி (சிமெண்ட்) பாதை 1,200 மீ. ➢ திறந்த வெளி குத்துச்சண்டை வளையம் – 1 ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 2

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 11

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ டென்னிஸ் ஆடுகளம் (மண்) – 1 ➢ கிரிக்கெட் ஆடுகளம் (மண்) – 1 ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் ஆடுகளம் – 3 ➢ ஸ்குவாஷ் ஆடுகளம் – 1 ➢ கைப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ நிர்வாக அலுவலகம் ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி, நெய்வேலி **சிறு விளையாட்டரங்கம், விருத்தாச்சலம் தாலுகா** ➢ 400 மீ 6 வரிசை தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கபாடி ஆடுகளம் – 1 ➢ கோ கோ ஆடுகளம் – 1 ➢ கைப்பந்து ஆடுகளம் – 1 ➢ எறிபந்து ஆடுகளம் – 1
5.	தருமபுரி	➢ 500 பேர் அமரக்கூடிய இருக்கை வசதி கொண்டது ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 2 (மண்) ➢ கடற்கரை கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 ➢ பூப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ குத்துச்சண்டை வளையம் – 1 (சிமெண்ட்) ➢ உடற்பயிற்சி கூடம் – 1 ➢ நீச்சல்குளம் 25 மீ X 16 மீ ➢ கபாடி ஆடுகளம் – 1 (மரத்தளம்) ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் ஆடுகளம் – 4 (மின்னொளியுடன்) (மரத்தளம்) ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி **சிறு விளையாட்டரங்கம், அரூர்** ➢ 250 பேர் அமரக்கூடிய இருக்கை வசதி கொண்டது ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் ➢ கூடைப்பந்து ஆடுகளம் (சிமெண்ட்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் (மண்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
6.	திண்டுக்கல்	➢ 500 பேர் அமரக்கூடிய இருக்கை வசதி கொண்டது ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து மைதானம்–1 (இயற்கை) ➢ கால்பந்து (பயிற்சி) மைதானம் – 1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம்–1 (சிமெண்ட் – மின்னொளி வசதியுடன்) ➢ பூப்பந்து ஆடுகளம்–2 ➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் – 5 (மண்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம்–1 (மண்) ➢ கோ கோ ஆடுகளம் – 1 (மண்) ➢ கபாடி ஆடுகளம் – 1 (மண்) ➢ உடற்பயிற்சிக் கூடம் – 1 ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ ➢ கைப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி **பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்** ➢ இருக்கை வசதி 500 பேர் ➢ டேக்வோண் டோ கூடம் – 1 ➢ ஜிம்னாஸ்டிக் கூடம் – 1 ➢ அனைத்து உள்ளரங்க விளையாட்டுகள் மின்னொளியுடன் ➢ தங்குமிட வசதி – 200 பேர்

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ அலுவலகம், கூட்ட அரங்கம், உடைமாற்றும் அறை மற்றும் பல. **தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மலைக்கோட்டை மாரியம்மன்கோவில் மைதானம் வளாகம், திண்டுக்கல்** ➢ 200 மீ தடகள ஒடுபாதை – 1 (மின்னொளி வசதியுடன்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (மின்னொளி வசதியுடன்) ➢ வளைகோல்பந்து ஆடுகளம் – 1 ➢ கையுந்துபந்து ஆடுகளம் – 2 (மண்) (1 – மின்னொளி வசதியுடன்) ➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் – 3 ➢ டென்னிகாய்ட் ஆடுகளம் – 1 **தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் என்.ஜி.ஓ. காலனி மைதானம், பாலகிருஷ்ணாபுரம், திண்டுக்கல்** ➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் – 2 ➢ கையுந்துபந்து ஆடுகளம் – 1 ➢ டென்னிகாய்ட் ஆடுகளம் – 1 ➢ கபாடி ஆடுகளம் – 1 ➢ யோகா கூடம் – 1 **சிறு விளையாட்டரங்கம், நிலக்கோட்டை தாலுகா** ➢ கால்பந்து ஆடுகளம் – 1 ➢ கையுந்துபந்து ஆடுகளம் – 1 ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1

[2023 ஏப்ரல் 11

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ கபாடி ஆடுகளம் – 1 **சிறு விளையாட்டரங்கம், நத்தம்** ➢ 200 மீ தடகள ஓடுபாதை ➢ கால்பந்து ஆடுகளம் – 1 ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1
7.	ஈரோடு	➢ பார்வையாளர் மாடம் சிமெண்ட் இருக்கை வசதி 1,000 ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து மைதானம் – 1 (இயற்கை) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 2 (சிமெண்ட்) (1 மின்னொளி வசதியுடன்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 2 (மண்) ➢ கபாடி ஆடுகளம் – 1 (மண்) ➢ கோ கோ ஆடுகளம் – 1 ➢ பூப்பந்து ஆடுகளம் – 1 ➢ இறகுப்பந்து உள்ளரங்கக் கூடம் – 1 (மரத்தரைத் தளம்) ➢ உடற்பயிற்சிக் கூடம் ➢ நீச்சல் குளம் 25 மீ X 13 மீ ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்க்கான விளையாட்டு விடுதி ➢ மாணவியர்க்கான சிறப்புநிலை விளையாட்டு மையம் ➢ சிறப்பு ஜிம்னாஸ்டிக் மேம்பாட்டு மையம், கரட்டுப்பாளையம் **சிறு விளையாட்டரங்கம், கிருஷ்ணா நகர், கோபிசெட்டிபாளையம்** ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் (மின்னொளி வசதியுடன்)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ கபாடி ஆடுகளம் (மின்னொளி வசதியுடன்) ➢ உள்ளரங்க மேசைப்பந்து ஆடுகளம் ➢ உள்ளரங்க யோகா கூடம் ➢ உள்ளரங்க செஸ் கூடம் ➢ உள்ளரங்க கேரம் கூடம்
8.	காஞ்சிபுரம்	➢ 1,000 பார்வையாளர் அமரக் கூடிய திறன் கொண்டது ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ வளைகோல் பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம்–1 (சிமெண்ட் மின்னொளி வசதியுடன்) ➢ கையுந்துப்பந்து மண் ஆடுகளம் – 1 (1 மின்னொளி வசதியுடன்) ➢ குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்) ➢ பூப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் – 1 ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 2 (மின்னொளி வசதியுடன்) ➢ நீச்சல் குளம் 25 மீ X 16 மீ ➢ சிறுவர் நீச்சல் குளம் 5 மீ X 3 மீ ➢ கைப்பந்து ஆடுகளம் – 1 ➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் – 3 (மண்) ➢ மேசைப்பந்து கூடம் ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் ➢ பல்நோக்கு உள் விளையாட்டரங்கம்

[2023 ஏப்ரல் 11

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
9.	கன்னியாகுமரி	➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (இயற்கை புல்தரை) ➢ கூடைப்பந்து ஆடுகளம்– 1 (சிமெண்ட் மின்னொளி வசதியுடன்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 (மின்னொளி வசதியுடன்) ➢ கபாடி ஆடுகளம் – 1 ➢ உடற்பயிற்சி கூடம் – 1 ➢ குத்துச்சண்டை வளையம் – 1 ➢ ஸ்குவாஷ் உள்ளரங்கக் கூடம்–1 ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ ➢ சிறுவர் நீச்சல்குளம் ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்க்கான விளையாட்டு விடுதி ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் – (கோணம், நாகர்கோவில்)
10.	கரூர்	➢ 500 பார்வையாளர் அமரக் கூடிய திறன் கொண்டது ➢ 400 மீ தடகள ஓடுபாதை – 1 (மண்) ➢ கால்பந்து மைதானம் – 1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கபாடி ஆடுகளம் – 1 (மண்) ➢ கோ கோ ஆடுகளம் – 1 (மண்) ➢ வளைகோல்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம்

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
11.	கிருஷ்ணகிரி	➢ 250 பார்வையாளர் அமரக் கூடிய திறன் கொண்ட இரு மாடங்கள் ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (இயற்கை புல்தரை) ➢ வளைகோல்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 2 (சிமெண்ட்) ➢ கைப்பந்து ஆடுகளம் – 2 (மண்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 2 (மண்) ➢ குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்) ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 2 ➢ கபாடி ஆடுகளம் – 1 (மண்) ➢ கோ கோ ஆடுகளம் – 1 (மண்) ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் ஆடுகளம் – 1 ➢ டேக்வாண்டோ பயிற்சிக் கூடம் – 1 ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் – 1 ➢ சிமெண்ட் நடைப்பயிற்சி பாதை – 1,300 மீ ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ – 1 ➢ சிறுவர் நீச்சல்குளம் – 1 ➢ ஜூடோ பயிற்சிக் கூடம் – 1 ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் ➢ ஆபீஸர்ஸ் கிளப் கட்டிடம் ➢ சிறுவர் பூங்கா ➢ மேசைப்பந்து கூடம் **சிறு விளையாட்டரங்கம், ஓசூர்** ➢ 500 பார்வையாளர் அமரக் கூடிய திறன் கொண்டது ➢ 400 மீ தடகள ஓடுபாதை ➢ கால்பந்து (மண்) மைதானம் – 1 ➢ கையுந்துப்பந்து (மண்) ஆடுகளம் – 2 ➢ கபாடி (மண்) ஆடுகளம் – 1 ➢ கிரிக்கெட் மைதானம் ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மரத்தரைத் தளம்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்) ➢ பூப்பந்து உள்ளரங்கம் – 1 ➢ உடற்பயிற்சிக் கூடம்-1 ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் – 1 ➢ நடைப்பயிற்சி பாதை (சிமெண்ட்) – 1,300 மீ **சிறு விளையாட்டரங்கம், ஊத்தங்கரை தாலுகா** ➢ 300 பார்வையாளர் அமரக் கூடிய திறன் கொண்டது ➢ 400 மீ தடகள ஓடுபாதை ➢ கால்பந்து (மண்) மைதானம் – 1 ➢ கையுந்துப்பந்து (மண்) ஆடுகளம் – 2

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 ➢ கபாடி (மண்) ஆடுகளம் – 1 ➢ நடைப்பயிற்சி பாதை (சிமெண்ட்) – 1,300 மீ ➢ ஜுடோ பயிற்சி கூடம் – 1
12.	**மதுரை**	➢ 400 மீ செயற்கை இழை தடகள ஓடுதளம் (மின்னொளி வசதியுடன்) ➢ 2,250 இருக்கை வசதிகள் கொண்ட 3 மாடம் ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (இயற்கை புல்தரை) ➢ பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் (மரத்தரைத் தளம்) ➢ பயிற்சி கால்பந்து மைதானம் – 1 (மண்) ➢ செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் (மின்னொளி) ➢ பயிற்சி செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் – 1 ➢ செயற்கை இழை பயிற்சி ஓடுபாதை 100 மீ – 1 ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 3 (மண்) (1 மின்னொளி வசதியுடன்) ➢ கடற்கரை கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கபாடி ஆடுகளம் – 2 (மின்னொளி வசதியுடன்) (1 ஆடுகளம் Mat வசதியுடன்) (மண்) ➢ கோ கோ ஆடுகளம் – 1 (மண்) ➢ செயற்கை இழை கூடைப்பந்து ஆடுகளம் – 2 (1 மின்னொளி வசதியுடன்)

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 2 ➢ டென்னிஸ் ஆடுகளம் – 1 (மண்) ➢ கிரிக்கெட் பயிற்சி பாதை – 3 (மண்) ➢ குத்துச்சண்டை வளையம் – 1 (மண்) ➢ கைப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ டென்னிகாய்ட் ஆடுகளம் – 4 (சிமெண்ட்) ➢ டென்னிகாய்ட் ஆடுகளம் – 3 (மண்) ➢ ஜிம்னாசியம் கூடம் – 1 (வாள்சண்டை, யோகா, ஜிம்னாஸ்டிக்ஸ் மற்றும் டேக்வோண்டா) ➢ உடற்பயிற்சி மையம் – 1 ➢ இறகுப்பந்து உள்ளரங்க ஆடுகளம் – 4 ஆடுகளம் (மின்னொளியுடன்) (மரத்தரைத் தளம்) ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் – 2 ஆடுகளம் (மின்னொளி வசதியுடன்) ➢ நீச்சல் குளம் 25 மீ X 13 மீ ➢ மேசைப்பந்து கூடம் – 1 (மரத்தரை) ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர் விளையாட்டு விடுதி **எல்லீஸ் நகர், மதுரை** ➢ வளைகோல்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்)

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
13.	மயிலாடுதுறை	**சிறு விளையாட்டரங்கம், தரங்கம்பாடி தாலுகா** ➢ *400 மீ தடகள ஓடுபாதை (மண்)* ➢ *கால்பந்து ஆடுகளம் – 1 (மண்)* ➢ *கையுந்துப்பந்து ஆடுகளம் – 1* ➢ *கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்)* ➢ *கபாடி ஆடுகளம் – 1* ➢ *ஜிம்னாஸ்டிக் உள்ளரங்கக் கூடம் – 1* ➢ *கோ கோ ஆடுகளம் – 1*
14.	நாகப்பட்டினம்	➢ *400 மீ தடகள ஓடுபாதை (மண்)* ➢ *கால்பந்து ஆடுகளம் – 1 (மண்)* ➢ *கையுந்துப்பந்து ஆடுகளம் – 2 (1 மின்னொளி வசதியுடன்)* ➢ *கூடைப்பந்து ஆடுகளம் – 2 (1 சிமெண்ட்) (1 மின்னொளி வசதியுடன்)* ➢ *கடற்கரை கையுந்துப்பந்து ஆடுகளம் – 1* ➢ *டென்னிஸ் ஆடுகளம் – 2 (மண்)* ➢ *கைப்பந்து ஆடுகளம் – 1* ➢ *கோ கோ ஆடுகளம் – 1* ➢ *கபாடி ஆடுகளம் – 1* ➢ *பூப்பந்து ஆடுகளம் – 1* ➢ *திறந்தவெளி குத்துச்சண்டை வளையம்* ➢ *ஐவர் கால்பந்து மைதானம் – 1* ➢ *கிரிக்கெட் பயிற்சி பாதை – 1* ➢ *ஸ்குவாஷ் உள்ளரங்க ஆடுகளம்–1* ➢ *இறகுப்பந்து உள்ளரங்கம் – 2 ஆடுகளம் (மின்னொளி வசதியுடன்)* ➢ *மேசைப்பந்து – 1*

[2023 ஏப்ரல் 11

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ பல்நோக்கு உள்ளரங்க உடற்பயிற்சி மையம் – 1 ➢ உடற்பயிற்சிக் கூடம் – 1 ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மரத்தரைத் தளம்) **சிறு விளையாட்டரங்கம், திட்டச்சேரி** ➢ 200 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 2 ➢ கடற்கரை கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 ➢ கபாடி ஆடுகளம் – 1 **சிறு விளையாட்டரங்கம், ஆயக்காரன்புலம்** ➢ 200 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கையுந்துபந்து ஆடுகளம் – 1 (மின்னொளி வசதியுடன்) ➢ பூப்பந்து ஆடுகளம் – 1 ➢ கபாடி ஆடுகளம் – 1 ➢ கோ-கோ ஆடுகளம் – 1
15.	நாமக்கல்	➢ 500 இருக்கை வசதிகள் கொண்ட பார்வையாளர் மாடம் ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (இயற்கை புல்தரை) ➢ வளைகோல்பந்து ஆடுகளம் – 1

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ கையுந்துப்பந்து ஆடுகளம் (மண்) – 2 ➢ கைப்பந்து ஆடுகளம் – 1 ➢ கபாடி ஆடுகளம் – 1 ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ ➢ பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ நாமக்கல் செல்வம் மேல்நிலைப் பள்ளியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இருபாலருக்கான விளையாட்டு விடுதி **சிறு விளையாட்டரங்கம், திருச்செங்கோடு** ➢ 400 மீ. தடகள ஓடுபாதை ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 ➢ கபாடி ஆடுகளம் – 1 ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 ➢ இறகுப்பந்து ஆடுகளம் – 1 (திறந்த வெளி) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்)
16.	பெரம்பலூர்	➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 2 (மண்) ➢ கைப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கபாடி ஆடுகளம் ➢ கோ கோ ஆடுகளம்

[2023 ஏப்ரல் 11

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் (மின்னொளி வசதியுடன்) ➢ நவீன உடற்பயிற்சிக் கூடம் (குளிர்சாதன வசதியுடன்) ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ ➢ இறகுப்பந்து உள்ளரங்கக் கூடம் – 2 ஆடுகளங்கள் ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மரத்தரைத் தளம்) ➢ கடற்கரை கையுந்துப்பந்து ஆடுகளம் ➢ நடைப்பயிற்சி பாதை ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்க்கான விளையாட்டு விடுதி **சிறு விளையாட்டரங்கம், வேப்பந்தட்டை** ➢ 200 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து சிறு மைதானம் – 1 (மண்) ➢ கையுந்துப்பந்து மண் தரை ஆடுகளம் – 2 ➢ கபாடி ஆடுகளம் – 1
17.	**புதுக்கோட்டை**	➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ வளைகோல்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 2 (1 சிமெண்ட், 1 – மின்னொளி வசதியுடன்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 2

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ கபாடி ஆடுகளம் – 1 ➢ கோ கோ ஆடுகளம் – 1 ➢ குத்துச்சண்டை வளையம் – 1 (மரத்தரைத் தளம்) ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் – 1 ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 2 (மின்னொளி வசதியுடன்) ➢ நடைப்பயிற்சி பாதை ➢ இறகுப்பந்து உள்ளரங்கக் கூடம் – 2 (மின்னொளி வசதியுடன்) ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ ➢ சிறுவர்கள் நீச்சல்குளம் 10 மீ X 5 மீ ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியர்க்கான விளையாட்டு விடுதி
18.	**இராமநாதபுரம்**	➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 (மின்னொளி வசதியுடன்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 ➢ கால்பந்து மைதானம் – 1 (மண்) ➢ செயற்கை இழை வளை கோல்பந்து மைதானம் – 1 ➢ கைப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கபாடி ஆடுகளம் – 1 (மண்) ➢ கோ கோ ஆடுகளம் – 1 (மண்) ➢ உடற்பயிற்சிக் கூடம் – 1 ➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் (சிமெண்ட்) ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 2 (மின்னொளி வசதியுடன்)

[2023 ஏப்ரல் 11

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ கிரிக்கெட் பயிற்சி பாதை – 2 (வலை) ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் – 3 ஆடுகளங்கள் (மின்னொளி வசதியுடன்) (2 – மரத்தரை) ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ ➢ சிறுவர் நீச்சல்குளம் – 1 ➢ கேரம் கூடம் – 1 ➢ சதுரங்கம் கூடம் – 1 ➢ மேசைப்பந்து கூடம் – 1 ➢ வளைகோல் பந்து பயிற்சி ஆடுகளம் 5'S (செயற்கை இழை) ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி **சிறு விளையாட்டரங்கம், பரமக்குடி** ➢ 400 மீ தடகள ஓடுபாதை ➢ கால்பந்து ஆடுகளம் – 1 ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 ➢ கபாடி ஆடுகளம் – 1 ➢ கோ கோ ஆடுகளம் – 1 ➢ இறகுப்பந்து – 1 (சிமெண்ட்)
19.	**சேலம்**	➢ 500 பேர் இருக்கை வசதியுடன் கூடிய திறந்தவெளி விளையாட்டரங்கம் ➢ 400 மீ தடகளம் ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 3 (மண்) (1 மின்னொளியுடன்)

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ கபாடி ஆடுகளம் – 1 (மண்) ➢ கைப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ குத்துச்சண்டை வளையம் – 1 (சிமெண்ட்) ➢ ஜிம்னாஸ்டிக் பயிற்சி கூடம் – 1 ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் – 1 ➢ கிரிக்கெட் பயிற்சி பாதை – 1 (மண்) ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 1 ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ (6-வரிசை) ➢ பல்நோக்கு உள்விளையாட்டு அரங்கம் (சிமெண்ட்) – (800 பேர் அமரக்கூடிய இருக்கை வசதியுடன்) ➢ இறகுப்பந்து ஆடுகளம் – 4 ➢ டேக்வோண்டோ கூடம் – 1 ➢ இந்திய விளையாட்டு ஆணையத்தின் மாணவர் பயிற்சி மையம்
20.	சிவகங்கை	➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (இயற்கை புல்தரை) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 2 (மண்) ➢ வளைகோல்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்) ➢ கோ கோ ஆடுகளம் – 1 (மண்) ➢ கபாடி ஆடுகளம் – 2 (மண்) ➢ நீச்சல் குளம் 25 மீ X 13 மீ

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ சிறுவர்கள் நீச்சல் குளம் – 1 ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் (2 இரப்பர் ஆடுகளம்) ➢ காஞ்சிரங்கால் இறகுப்பந்து உள்ளரங்கம் – (1 மரத்தரைத் தளம்) ➢ கைப்பந்து – 1 (மண்) ➢ உடற்பயிற்சிக் கூடம் – 1 ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி
21	**தென்காசி**	**சிறு விளையாட்டரங்கம், ஆலங்குளம் தாலுகா** ➢ 400 மீ தடகள ஓடுபாதை ➢ கால்பந்து ஆடுகளம் ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 ➢ கபாடி ஆடுகளம் ➢ கோகோ ஆடுகளம் சிறு விளையாட்டரங்கம், சங்கரன்கோவில் ➢ 200 மீ தடகள ஓடுபாதை ➢ கால்பந்து ஆடுகளம் ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் ➢ கூடைப்பந்து ஆடுகளம் ➢ கபாடி ஆடுகளம் ➢ கோ கோ ஆடுகளம்
22.	**தஞ்சாவூர்**	➢ 500 பேர் அமரக்கூடிய இருக்கை வசதி ➢ 400 மீ 6-வரிசை தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்)

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ கைப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ வளைகோல் பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 2 (சிமெண்ட்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 4 (மண்) ➢ வளைகோல்பந்து செயற்கை இழை பயிற்சி ஆடுகளம் – 1 ➢ குத்துச்சண்டை வளையம் – 1 (சிமெண்ட்) ➢ கபாடி ஆடுகளம் – 1 (மண்) ➢ கோ கோ ஆடுகளம் – 1 (மண்) ➢ நவீன உடற்பயிற்சிக் கூடம் – 1 (ரப்பர் கார்க் விரிப்பு) ➢ ஸ்குவாஷ் உள்ளரங்கம் – 1 (சிமெண்ட்) ➢ கடற்கரை கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ இறகுப்பந்து உள்ளரங்கம் – 1 ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 1 ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ ➢ நடைப்பயிற்சி பாதை – 1 ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மரதரைத்தளம்) ➢ கால்பந்து ஆடுகளம் (கிராம விளையாட்டு மையம், அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பட்டுக்கோட்டை)

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		சிறு விளையாட்டரங்கம், பட்டுக்கோட்டை ➢ 400 மீ. தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 ➢ பூப்பந்து ஆடுகளம் – 1
23.	தேனி	➢ இறகுப்பந்து உள்ளரங்கம் ஆடுகளம் – 2 (மரத்தளம்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்) ➢ மேசைப்பந்து உள்ளரங்கக் கூடம் – 1 ➢ டென்னிஸ் ஆடுகளம் – 1 (மண்) ➢ ஸ்குவாஷ் உள்ளரங்க ஆடுகளம்–1 ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம்–1 ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ ➢ குத்துச்சண்டை வளையம் – 1 (சிமெண்ட்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 (மண்) (மின்னொளி வசதியுடன்) ➢தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவ மாணவியர்களுக்கான விளையாட்டு விடுதி ➢ சில்வாபட்டி உள்ளரங்கம் (ராஜீவ் காந்தி கேல் அபியான் (மைய அரசு)

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
24.	**நீலகிரி**	**எச்.ஏ.டி.பி. திறந்தவெளி விளையாட்டரங்கம், ஊட்டி** ➢ *கால்பந்து மைதானம் – 1 (இயற்கை புல்தரை)* ➢ *கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 (மண்)* ➢ *கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட் தளம் கூரையுடன்)* ➢ *செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 1* ➢ *கிரிக்கெட் பயிற்சி பாதை – 2* ➢ *தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி* **அண்ணா உள்விளையாட்டரங்கம், ஸ்டோன் ஹவுஸ் ஹில் போஸ்ட், ஊட்டி** ➢ *இறகுப்பந்து உள்ளரங்கக் கூடம் – 3 (மரத்தளம்) (மின்னொளி வசதியுடன்)* ➢ *பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் – 1* **சிறு விளையாட்டரங்கம், காந்தி மைதானம், கோத்தகிரி** ➢ *கால்பந்து ஆடுகளம் (மண்)* ➢ *200 மீ தடகள ஓடுபாதை (மண்)* ➢ *கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்)* ➢ *கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 (மண்)* **பல்நோக்கு உள் விளையாட்டரங்கம், குன்னூர்** ➢ *இறகுப்பந்து ஆடுகளம் – 2 (மரத்தளம்)*

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் – 1 **பல்நோக்கு உள்விளையாட்டரங்கம், கூடலூர்** ➢ இறகுப்பந்து ஆடுகளம் – 2 (மரத்தளம்) ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் – 1
25.	**திருவள்ளூர்**	➢ 800 பேர் இருக்கை வசதியுடன் கூடிய திறந்தவெளி விளையாட்டரங்கம் ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து மைதானம் – 1 ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 2 (சிமெண்ட்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 2 ➢ உடற்பயிற்சிக் கூடம் – 1 ➢ இறகுப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ இறகுப்பந்து உள்ளரங்கக் கூடம் ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ ➢ கபாடி ஆடுகளம் – 2 ➢ கடற்கரை கையுந்துப்பந்து ஆடுகளம் – 1
26.	**தூத்துக்குடி**	➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (இயற்கை புல்தரை) ➢ வளைகோல் பந்து ஆடுகளம் – 1 ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (மின்னொளி வசதியுடன்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 3 (மண்) (1 மின்னொளி வசதியுடன்) ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் ➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம்

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
26.	**தூத்துக்குடி**	➢ *ஸ்குவாஷ் ஆடுகளம் – 1* ➢ *கபாடி ஆடுகளம் – 1 (மின்னொளி வசதியுடன்)* ➢ *இறகுப்பந்து ஆடுகளம் – 2* ➢ *சிறு உள்விளையாட்டரங்கம்* ➢ *கைப்பந்து ஆடுகளம் – 1* ➢ *செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 2* ➢ *நீச்சல்குளம் 25 மீ X 13 மீ* ➢ *சிறுவர் நீச்சல்குளம்* ➢ *பல்நோக்கு உள்விளையாட்டரங்கம்* ➢ *தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்க்கான விளையாட்டு விடுதி* **கோவில்பட்டி** ➢ *செயற்கை இழை வளைகோல் பந்து ஆடுகளம் – 1* ➢ *மாணவர்க்கான சிறப்பு நிலை விளையாட்டு மையம் (வளைகோல் பந்து)* **சிறு விளையாட்டரங்கம், திருச்செந்தூர்** ➢ *200 மீ தடகள ஓடுபாதை (மண்)* ➢ *கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 (மண்)* ➢ *கபாடி ஆடுகளம் – 2 (மண்)*

[2023 ஏப்ரல் 11

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
27.	திருச்சிராப்பள்ளி	➤ *1000 பேர் இருக்கை வசதியுடன் கூடிய திறந்தவெளி விளையாட்டரங்கம்* ➤ *400 மீ 8-வரிசை செயற்கை இழை தடகள ஓடுதளம் (மின்னொளி வசதியுடன்)* ➤ *கால்பந்து ஆடுகளம் – 1 (இயற்கை புல்தரை)* ➤ *வளைகோல்பந்து ஆடுகளம் – 2 (1 செயற்கை இழை)* ➤ *வலைப்பந்து ஆடுகளம் – 1 (மண்)* ➤ *கையுந்துப்பந்து ஆடுகளம் – 5 (1-மின்னொளி வசதியுடன், 1-மின்னொளி வசதியில்லாமல், 1-கல்வால்யும் கூரை (ம) மின்னொளி வசதியுடன், 1-கடற்கரை கையுந்துப்பந்து மற்றும் 1-மண் ஆடுகளம்)* ➤ *கூடைப்பந்து ஆடுகளம் – 2 (சிமெண்ட்) (1 மின்னொளி வசதியுடன்)* ➤ *கபாடி ஆடுகளம் – 2 (மண்)* ➤ *கபாடி ஆடுகளம் – 2 (மின்னொளி வசதியுடன் மற்றும் கேலரி)* ➤ *கோ கோ ஆடுகளம் – 1 (மண்)* ➤ *கைப்பந்து ஆடுகளம் – 1 (மண்)* ➤ *ஸ்குவாஷ் உள்ளரங்கம் ஆடுகளம் – 1 (குளிர்சாதன வசதி)*

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ *டென்னிஸ் ஆடுகளம் – 2 (மண்)* ➢ *செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 3 (கேலரி மற்றும் அறைகள்)* ➢ *நவீன பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் – 1* ➢ *இறகுப்பந்து உள்ளரங்கக் கூடம் – 1 (மின்னொளி வசதியுடன்)* ➢ *பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மாவட்ட விளையாட்டு வளாகத்தில்)* ➢ *குத்துச்சண்டை வளையம் மேற்கூரையுடன் மற்றும் பயிற்சிக் கூடம்* ➢ *திறந்தவெளி குத்துச்சண்டைப் பயிற்சி* ➢ *நீச்சல்குளம் 25 மீ X 22 மீ* ➢ *தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி* ➢ *தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம்* ➢ *தங்குமிட மையம்* ➢ *பெற்றோருக்கான வரவேற்புக் கூடம்* ➢ **பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (ஸ்ரீரங்கம்)**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
28.	திருநெல்வேலி	**அண்ணா விளையாட்டரங்கம், பாளையங்கோட்டை** ➢ 400 மீ செயற்கை ஓடுதளபாதை ➢ 200 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ வளைகோல் பந்து ஆடுகளம் – 2 (1–செயற்கை இழை) (1 – மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம்–1 (சிமெண்ட் மின்னொளி வசதியுடன்) ➢ கபாடி ஆடுகளம் – 1 ➢ கோ கோ ஆடுகளம் – 1 ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம் – 1 ➢ ஜிம்னாசியம் கூடம் – 1 ➢ திறந்தவெளி குத்துச்சண்டை வளையம் ➢ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 1 (மின்னொளி வசதியுடன்) ➢ சறுக்கு வளையம் – 1 (சிமெண்ட்) ➢ இறகுப்பந்து உள்ளரங்கக் கூடம் ➢ கல்வால்யும் கூரையுடன் கூடிய கையுந்துப்பந்து ஆடுகளம் (மின்னொளி வசதியுடன்) ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ ➢ சிறுவர்கள் நீச்சல்குளம் 7½ மீ X 5 மீ ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்களுக்கான முதன்மை நிலை விளையாட்டு மையம் ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம், வ.உ.சி. மைதானம் – 1 ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம், ஜின்னா திடல் – 1 **சிறு விளையாட்டரங்கம், கல்லிடைக்குறிச்சி** ➢ 400 மீ தடகள ஓடுபாதை ➢ கால்பந்து மைதானம் ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 2 ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்) ➢ பூப்பந்து ஆடுகளம் – 1 ➢ கோ கோ ஆடுகளம் – 1 **சிறு விளையாட்டரங்கம், மேலப்பாளையம்** ➢ 400 மீ தடகள ஓடுபாதை ➢ கூடைப்பந்து ஆடுகளம் ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் ➢ கபாடி ஆடுகளம் ➢ கோ கோ ஆடுகளம் ➢ தங்குமிட வசதி மையம்
29.	**திருப்பூர்**	➢ சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி வளாகத்தில் பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் ➢ இறகுப்பந்து ஆடுகளம் – 9 (மரத்தளம்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 ➢ பூப்பந்து ஆடுகளம் – 2 ➢ கோ கோ ஆடுகளம் – 1

[2023 ஏப்ரல் 11

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
30.	திருப்பத்தூர்	**சிறு விளையாட்டரங்கம், ஜோலார்பேட்டை** ➢ *400 மீ தடகள ஓடுபாதை (6-வரிசை) (மண்)* ➢ *கால்பந்து ஆடுகளம் – 1 (மண்)* ➢ *வளைகோல்பந்து ஆடுகளம் – 1 (மண்)* ➢ *கையுந்துப்பந்து ஆடுகளம் – 2 (மண்)* ➢ *கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்)* ➢ *கபாடி ஆடுகளம் – 1 (மண்)* ➢ *கோ கோ ஆடுகளம் – 1* ➢ *உடற்பயிற்சி மையம் ஆண் மற்றும் பெண் – 1*
31.	திருவண்ணா மலை	➢ *400 மீ செயற்கை இழை தடகள ஓடுபாதை* ➢ *திறந்தவெளி கேலரி 1,500 பேர் அமரக்கூடிய இருக்கை வசதியுடன்* ➢ *கலந்தாய்வுக் கூடம்* ➢ *கால்பந்து மைதானம் – 1 (இயற்கை புல்தரை)* ➢ *வளைகோல் பந்து ஆடுகளம் (மண்) (கம்பி வேலியுடன் கூடிய)* ➢ *கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்) (கூரை (ம) மின்னொளி வசதியுடன்)* ➢ *கூடைப்பந்து ஆடுகளம் – 1 (திறந்தவெளி)* ➢ *கையுந்துப்பந்து ஆடுகளம் – 2 (மண் மின்னொளி வசதியுடன்)* ➢ *குத்துச்சண்டை வளையம் – 1 (சிமெண்ட்)* ➢ *கபாடி ஆடுகளம் – 1*

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➤ பூப்பந்து ஆடுகளம் – 1 ➤ கோ கோ ஆடுகளம் – 1 ➤ கைப்பந்து ஆடுகளம் – 1 (மண்) (கம்பி வேலியுடன் கூடிய) ➤ செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளம் – 2 (மின்னொளி வசதியுடன்) ➤ உடற்பயிற்சி உள்ளரங்கம் (குளிர்சாதன வசதியுடன்) ➤ மேசைப்பந்து கூடம் – 1 ➤ நீச்சல்குளம் 25 மீ X 16 மீ ➤ சிறுவர் நீச்சல்குளம் ➤ 80 மீ கல்வால்யும் கூரையுடன் கூடிய பகுதி (மணலில் ஓடும் பயிற்சிக்காக) ➤ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் ➤ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவியருக்கான விளையாட்டு விடுதி **சிறு விளையாட்டரங்கம், ஆரணி** ➤ 400 மீ தடகள ஓடுபாதை ➤ கால்பந்து ஆடுகளம் – 1 ➤ பூப்பந்து ஆடுகளம் – 1 ➤ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்) ➤ திறந்தவெளி விளையாட்டரங்கம் – 1 (500 பேர் அமரும் இருக்கை வசதி கொண்டது) ➤ நடைப்பயிற்சி பாதை **சிறு விளையாட்டரங்கம், தண்டராம்பட்டு தாலுகா**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[2023 ஏப்ரல் 11

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ 400 மீ தடகள ஓடுபாதை ➢ கால்பந்து ஆடுகளம் – 1 ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 ➢ திறந்தவெளி விளையாட்டரங்கம்–1 (500 பேர் அமரும் இருக்கை வசதி கொண்டது) ➢ கோ கோ ஆடுகளம் – 1 ➢ கபாடி ஆடுகளம் – 1 **சிறு விளையாட்டரங்கம், செய்யாறு தாலுகா** ➢ 400 மீ தடகள ஓடுபாதை ➢ கால்பந்து மைதானம் – 1 ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 2 ➢ உடற்பயிற்சி மையக் கட்டடம் (ஆண் மற்றும் பெண்) ➢ திறந்தவெளி விளையாட்டரங்கம் – 1 (500 பேர் இருக்கை வசதியுடன்)
32.	திருவாரூர்	➢ 500 பார்வையாளர் அமரக் கூடிய திறந்தவெளி விளையாட்டரங்கம் ➢ 400 மீ 8-வரிசை தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ வளைகோல் பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ ➢ கபாடி ஆடுகளம் – 1 (விரிப்பு வசதியுடன்)

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ கோ கோ ஆடுகளம் – 1 (மண்) ➢ பல்நோக்கு உள்விளையாட்டரங்கம் (மரத்தரைத் தளம்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்) (திருநெய்பேர்)
33.	வேலூர்	**வேலூர் மாவட்டம் காட்பாடி தாலுகாவில் உள்ள காட்பாடி கிராமத்தில் திறந்தவெளி மாவட்ட விளையாட்டு வளாகம்** ➢ 1500 பேர் அமரக்கூடிய பார்வையாளர் மாடம் (கேலரி) ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் (சிமெண்ட்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் ➢ டென்னிஸ் ஆடுகளம் (செயற்கை இழை) ➢ கபாடி ஆடுகளம் ➢ நீச்சல்குளம் 25 மீ X 17 மீ **நேதாஜி விளையாட்டரங்கம், வேலூர்** ➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ வளைகோல்பந்து ஆடுகளம் – 1 (மண்) ➢ கபாடி ஆடுகளம் – 1 (மண்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 (மண்) **சத்துவாச்சாரி** ➢ பளுதூக்கும் பயிற்சிக் கூடம் ➢ உடற்பயிற்சிக் கூடம் ➢ சிறுவர் மற்றும் சிறுமியர்களுக்கான சிறப்பு நிலை பளுதூக்கும் பயிற்சி மையம்

[2023 ஏப்ரல் 11

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
34.	விழுப்புரம்	➢ 400 மீ தடகள ஓடுபாதை – 1 (மண்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 1 ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்) ➢ கபாடி ஆடுகளம் – 2 ➢ கைப்பந்து ஆடுகளம் – 1 ➢ கால்பந்து ஆடுகளம் – 1 ➢ சிறுவர்கள் நீச்சல்குளம் – 1 ➢ பல்நோக்கு உள் விளையாட்டரங்கம் (மரத்தரைத் தளம்) ➢ தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மாணவர்க்கான விளையாட்டு விடுதி ➢ நீச்சல்குளம் 25 மீ X 13 மீ (மாவட்ட ஆட்சியர் வளாகம்)
35.	விருதுநகர்	➢ 400 மீ தடகள ஓடுபாதை (மண்) ➢ கால்பந்து மைதானம் – 1 (மண்) ➢ வளைகோல் பந்து மைதானம்–1 (மண்) ➢ கையுந்துப்பந்து ஆடுகளம் – 2 (மின்னொளி வசதியுடன்) ➢ கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்) (மின்னொளி வசதியுடன்) ➢ பல்நோக்கு உடற்பயிற்சிக் கூடம்–1 ➢ குத்துச்சண்டை வளையம் – 1 ➢ ஸ்குவாஷ் ஆடுகளம் – 1 ➢ கபாடி ஆடுகளம் – 1 ➢ கோ கோ ஆடுகளம் – 1 ➢ பூப்பந்து ஆடுகளம் – 1 ➢ கைப்பந்து ஆடுகளம் – 1

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மாவட்டம்	விளையாட்டு வசதிகள்
		➢ *டென்னிகாய்ட் ஆடுகளம் – 3 (மண்)* ➢ *டென்னிஸ் ஆடுகளம் – 1 (மண்)* ➢ *திறந்தவெளி இறகுப்பந்து ஆடுகளம் – 1* ➢ *நீச்சல்குளம் 25 மீ X 17 மீ* ➢ *பல்நோக்கு உள் விளையாட்டரங்கம்* **சிறு விளையாட்டரங்கம், சிவகாசி தாலுகா** ➢ *400 மீ தடகள ஓடுபாதை* ➢ *கால்பந்து மைதானம் – 1* ➢ *கையுந்துப்பந்து ஆடுகளம் – 2* ➢ *கூடைப்பந்து ஆடுகளம் – 1 (சிமெண்ட்)* **சிறு விளையாட்டரங்கம், நென்மேனிப்பட்டி** ➢ *400 மீ தடகள ஓடுபாதை* ➢ *கால்பந்து மைதானம் – 1* ➢ *கையுந்துப்பந்து ஆடுகளம் – 1*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11] [*2023 ஏப்ரல் 11*

இணைப்பு II

(*134 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.*)

மானியக் கோரிக்கை எண் 53-சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை

தொலைநோக்குப் பார்வை கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில், சமுதாயத்தின் அடித்தட்டு மற்றும் விளிம்பு நிலை மக்களின் முன்னேற்றத்திற்கான எண்ணற்ற புதுமையானத் திட்டங்களை தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்கள் அரசின் தொலைநோக்குத் திட்டங்களுடனும் ஒன்றிணைந்துள்ளன. இத்திட்டங்கள் மாநிலத்தின் நலன் மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை உறுதி செய்யும் அரசின் நடவடிக்கைகளுக்குச் சான்றாக உள்ளன. இந்த அரசு, மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியினைத் தனது நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், அனைத்து முக்கிய துறைகளையும் ஒரே சமயத்தில் ஊக்குவிப்பதன் மூலமாகவே இதை அடைய முடியும் என உறுதியாக நம்புகிறது. பல்வேறு துறைகளில் ஏற்படும் முன்னேற்றங்கள், மாநிலம் தொழில் வளர்ச்சி காணவும், சமுதாய மாற்றம் அடையவும், கல்வித் திறனில் மேம்படவும் மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சி அடையவும் உதவுவதுடன் மாநிலத்தையும் ஒட்டுமொத்த வளர்ச்சிப் பாதைக்கு அழைத்துச் செல்லும்.

இத்தகைய தொலைநோக்குத் திட்டத்துடன் இந்த அரசு, மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, எண்ணும் எழுத்தும், கலைஞரின் ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன், முதலமைச்சரின் பள்ளிக் குழந்தைகளுக்கான காலை உணவுத் திட்டம் போன்ற முன்னோடித் திட்டங்களைத் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இவை மட்டும் அல்லாமல் இந்த அரசு தொழில் வளர்ச்சிக்கு சாதகமானச் சூழ்நிலையை உருவாக்குவதுடன், அந்நிய முதலீடுகளை ஈர்ப்பது, முக்கிய தொழிற்சாலைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செயல்படுத்துவது, சிறிய,

நடுத்தர மற்றும் பெரிய தொழிற்சாலைகளுக்கானப் புதிய தொழிற்பேட்டைகளை அமைப்பதுடன் தொழில் வளர்ச்சிக்கான தொழில் தடங்கள் மற்றும் தொழிற்சாலைத் தொகுப்புகளையும் உருவாக்கி வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையான "அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை" அடையும் நோக்கத்தின் அடிப்படையிலேயே இத்திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களின் பலன்கள் உரிய பிரிவுகளைச் சென்றடைவதை உறுதி செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட துறைகளுடன் மாநில அளவிலும் மாவட்ட அலுவலர்களுடன் "கள ஆய்வில் முதலமைச்சர்" என்ற மண்டல அளவில் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களின்போதும் ஆய்வுகளை நடத்தி வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்தகைய ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் கள ஆய்வுகளின் முக்கியத்துவத்தை "அளவிடப்பட்டு கண்காணிக்கப்படும் செயலே வெற்றி பெறும்" என்ற புகழ்பெற்ற கூற்றின் அடிப்படையில் வலியுறுத்தி வருகிறார்கள்.

அரசின் இத்தகைய முயற்சிகளுக்கு உறுதுணையாக இருக்கும் பொருட்டு அரசின் அனைத்துத் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதுடன் உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களை நடத்துவதன்மூலம் இத்திட்டங்களின் முன்னேற்றங்களை உறுதி செய்வதுடன் அவை உருவாக்கப்பட்ட உன்னதமான இலக்குகளை அடைய உதவும் வகையில் செயல்படுவதே இத்துறையின் முக்கிய பணியாகும்.

2. துறையின் முக்கியச் செயல்பாடுகள்

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையால் பின்வரும் முக்கியப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அரசின் கண்காணிப்பு அமைப்பாக செயல்படுவதற்குரிய கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுதல்.
- சட்டமன்றப் பேரவை மற்றும் பல்வேறு அரசு விழாக்களில் வெளியிடப்படும் அனைத்துக் கொள்கை அறிவிப்புகளுக்குத் தேவையான ஆணைகள் வெளியிடப்படுவதைக் கண்காணிப்பதற்கும் அதன் செயலாக்கத்தினைக் கண்காணிக்கவும் சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.

[2023 ஏப்ரல் 11

- மக்கள் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் அரசின் பல்வேறு "முன்னுரிமைத் திட்டங்களின்" பயன் உரிய நேரத்தில் தகுதியுள்ள பயனாளிகள் அனைவரையும் சென்றடைவதை உறுதி செய்ய தொடர்புடைய துறைகளுடன் ஒருங்கிணைந்து கண்காணித்தல்.

- பல்வேறு அரசுத் துறைகளால் மிக அதிக அளவிலான நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் முத்திரைத் திட்டங்கள் ஒவ்வொன்றும் நிர்ணயிக்கப்பட்ட கால அட்டவணையின்படி அவை அடைய வேண்டிய முன்னேற்ற இலக்குகளை அடைவதை உறுதி செய்யும் வகையிலும், அத்திட்டங்கள் உரிய காலத்தில் முடிக்கப்பட்டு அவை பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படும் வகையிலும் அவற்றைத் தொடர்ந்து கண்காணித்தல்.

- அரசின் நிர்வாகத்திலும் பொதுமக்களுக்கு அரசால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காகவும், பல்வேறு அரசுத் துறைகளில் எடுக்கப்படும் மின் ஆளுமை முயற்சிகளை ஒருங்கிணைத்தல்.

- அரசுத் துறைகளின் மூலமாகக் குறிப்பிட்ட காலங்களில் மக்களுக்குச் சென்றடைய வேண்டிய பலன்கள் தாமதமின்றி சென்றடைவதை உறுதி செய்யும் நோக்கத்தில் தொடர்புடைய துறைகளுடன் உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களை நடத்துதல்.

- சம்பந்தப்பட்ட துறைகளுடன் இணைந்து செயல்படுவதன் மூலமாகத் திட்டங்களுக்குத் தேவையான ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துதல்.

- அரசுத் தலைமைச் செயலாளர் தலைமையில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களுடன் நடத்தப்படும் மாதாந்திர கூட்டங்கள்மூலம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் கள ஆய்வின்போது கிடைக்கப்பெற்ற விவரங்கள் / பரிந்துரைகளின் அடிப்படையில், அரசின் பல்வேறு துறைகள் தங்கள் திட்டங்களில் தேவைப்படும் திருத்தங்களை மேற்கொள்ள உதவுதல்.

2023 ஏப்ரல் 11]

- *அவ்வப்போது அரசால் இத்துறைக்கு வழங்கப்படும் சிறப்புப் பணிகளை மேற்கொள்ளுதல்.*

மேற்குறிப்பிட்ட பணிகளைத் திறம்பட நிறைவேற்றும் பொருட்டு, கள அனுபவம் மற்றும் கள நிபுணத்துவம் கொண்ட அலுவலர்கள், தொடர்புடைய பல்வேறு துறைகளிலிருந்து சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையில் பணியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

3. கண்காணிப்பு

கண்காணிப்பு என்பது தகவல்களை முறையாகச் சேகரித்து, பகுப்பாய்வு செய்து அதன்மூலம் ஒரு திட்டத்தின் முன்னேற்றம் அதன் இலக்கை நோக்கி பயணிப்பதை உறுதி செய்வதோடு, திட்டத்தை செம்மைப்படுத்துவதற்குத் தேவையான இடைநிலைத் திருத்தங்களை மேற்கொள்வது உள்ளிட்ட முக்கிய முடிவுகளை வழி நடத்துதல் ஆகும். ஆகவே, கண்காணித்தலின்மூலம் திட்டங்களின் முன்னேற்றத்தைக் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் அறிந்துகொள்வது மட்டுமல்லாமல், களத்தில் ஏற்படும் சிக்கல்களுக்கு உரிய தீர்வுகளைத் தொடர் மதிப்பீடுகளின் மூலமாகவும் வழங்க இயலும்.

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து அரசு அறிவிக்கும் பல்வேறு திட்டங்களின் செயல் நிலையைச் சேகரித்துப் பதிவு செய்கிறது. முக்கிய ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கான முன்னேற்ற அறிக்கைகளையும், உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களுக்கானப் பகுப்பாய்வு அறிக்கைகளையும் அவ்வப்போது தயார் செய்கிறது. அவ்வகையில், கண்காணிப்புத் தொடர்பான பின்வரும் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

3.1. கொள்கை அறிவிப்புகளின் கண்காணிப்பு

சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு ஆளுநர் உரையில் வெளியிடப்பட்ட அறிவிப்புகள், நிதிநிலை அறிக்கை, வேளாண் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மாவட்ட பயணங்களின்போது அறிவிக்கப்படும் மற்றும் இதர அரசு

விழாக்களில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் செயலாக்கம் மற்றும் நிறைவேற்றத்தினைக் கண்காணிப்பதே சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முக்கியப் பணியாகும்.

3.2 தலைமைச் செயலக உள்வலைய வழி நிகழ்நிலைக் கண்காணிப்பு

தலைமைச் செயலகத்தில் உள்ள பல்வேறு அரசுத் துறை சார்ந்த கொள்கை அறிவிப்புகளின் நிலையைப் பதிவு செய்வதற்காக ஊடாடும் வலைப்பக்கத்தை (Interactive Webpage) இத்துறை வடிவமைத்து தலைமைச் செயலக உள்வலைய (Intranet) இணையத்தில் நிர்வகித்து வருகிறது. பல்வேறு வகையான பகுப்பாய்வு அறிக்கைகளைத் தயாரிக்கத் தேவையானக் கண்காணிப்பு மென்பொருளும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த மென்பொருளில் தேவைக்கேற்ப மாறுதல்கள் அவ்வப்போது இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொடர்புடைய துறைத் தலைவர்களுடன் ஒருங்கிணைந்து அறிவிப்புகளின் நிலையினை உள்வலைய இணையப் பக்கத்தில் தொடர்ந்து பதிவு செய்திட ஏதுவாக அரசின் அனைத்து நிர்வாகத் துறைகளும், தங்கள் துறை சார்ந்த "தொடர்பு அலுவலர்களை" (Nodal Officers) நியமித்துள்ளன.

நிகழ்நிலை கண்காணிப்பில் பல்வேறு துறைகள் தெரிவிக்கும் முன்னேற்ற விவரங்களின் அடிப்படையில் அறிவிப்புகளின் செயல்பாட்டு நிலை வகைப்படுத்தப்பட்டு, அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் நடத்தப்படும் அனைத்துச் செயலாளர்கள் கூட்டங்கள் மற்றும் உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களுக்காகப் பயன்படுத்தப்படுகிறது.

3.3 உயர்நிலை ஆய்வுக் கூட்டங்கள்

அரசால் வெளியிடப்படும் பல்வேறு திட்டங்கள் வெற்றி அடைவதை உறுதி செய்வதற்குக் குறிப்பிட்ட கால இடைவெளியில் பல்வேறு நிலைகளில் அதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டதா மற்றும் அது செயலாக்கத்தில் உள்ளதா என்பதை ஆய்வு செய்வது மிகவும் அவசியமானதாகும்.

குறிப்பாக, அரசின் பல்வேறு நலத் திட்டங்கள், உட்கட்டமைப்பு திட்டங்கள், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், வேலைவாய்ப்பு உருவாக்கம் மற்றும் வாழ்வாதார மேம்பாடு போன்ற

2023 ஏப்ரல் 11]

திட்டங்களின் பலன் உரிய பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்வதன் மூலமாக மாநிலம் ஒருங்கிணைந்த வளர்ச்சியினை அடையும்.

எனவே, இத்துறை அறிவிப்புகளுக்கான உரிய ஆணைகள் வெளியிடப்படுவதையும் அவை செயல்படுத்தப்படுவதையும் உறுதி செய்ய உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களை நடத்துகிறது. இதன் மூலமாக அறிவிப்புகள் கள அளவில் செயல்படுத்தப்படுவதையும் அவற்றின் நோக்கங்கள் நிறைவேறுவதையும் உறுதி செய்ய முடிகிறது.

கீழ்க்கண்ட உயர்நிலை ஆய்வுக் கூட்டங்கள் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அரசுத் துறைச் செயலாளர்களுடன் கொள்கை அறிவிப்புகள், முன்னுரிமைத் திட்டங்கள் (ம) முத்திரைப் பதிக்கும் திட்டங்கள் குறித்தும், துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு குறித்தும் குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.
- மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாவட்டங்களில் “கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற திட்டத்தின்மூலம் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.
- அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் அனைத்து செயலாளர்களுடன் மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது.
- அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது.
- அரசுத் தலைமைச் செயலாளர் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்தாலும் துறை சார்ந்த ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.
- தேவைப்படும் நிகழ்வுகளில் மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்தால் துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

- கருப்பொருள் அடிப்படையிலான கண்காணிப்புக் கூட்டங்கள் கருப்பொருளுடன் தொடர்புடைய துறைகளின் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்களுடன் தேவையின் அடிப்படையில் நடத்தப்படுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் உயர்நிலை ஆய்வுக்கூட்டங்களுக்குத் தேவையான ஆய்வுக்குறிப்புகள், கையேடுகள், முக்கிய செயல்திறன் குறியீடுகள் (Key Performance Indicators) இத்துறையால் தயார் செய்யப்படுகின்றன. மேலும், முந்தைய ஆய்வுக் கூட்ட குறிப்புகளின்மீது மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர் நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட அளவிலும் கள அளவிலும் ஆய்வுப்பணிகள் குறித்த ஆய்வுக் கூட்ட அறிக்கைகளைத் தயாரிக்கும் பணியினையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

3.4 கருப்பொருள் அடிப்படையிலான (Theme based) கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

திட்டச்செயலாக்கத்தின்பலன்களைமுழுமையாகஅடைவதற்கு முக்கியக் காரணியான தொடர்புடைய துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டு முயற்சி இத்துறையின்மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொலைநோக்குத் திட்டத்தின்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள இலக்குகள் பல்வேறு நிர்வாகத் துறைகளின் செயலாக்கத்தின்கீழ் வருகின்றன. மக்களின் நலன் மற்றும் வளர்ச்சி சார்ந்த அரசின் இலக்குகளைத் தொடர்புடைய துறைகள் ஒன்றிணைந்து செயல்படுவதன்மூலம் சிறப்பாக நிறைவேற்றிட முடியும். இலக்குகளை அடைவதற்காகக் கருப்பொருள் அடிப்படையிலான (Theme based) கண்காணிப்பு அணுகுமுறை இத்துறையால் பின்பற்றப்பட்டு வருகிறது. இதில், பொதுவான நோக்கத்தைக் கொண்டுள்ள பல்வேறு துறைகளைச் சார்ந்த திட்டங்கள், கருப்பொருள் வாரியாக தொகுக்கப்பட்டு, அதன் செயலாக்கம் ஒருங்கிணைந்த முறையில் கண்காணிக்கப்படுகிறது.

திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள நடைமுறை சிக்கல்களைக் களைவதற்குரிய நுண்ணிய வழிமுறைகளை இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறை அளிக்கின்றது.

இக்கருப்பொருள் அடிப்படையில், செயல்படுத்தப்படும் திட்டங்களில் உள்ள சிக்கல்களைக் களைவதற்குத் தேவைகள் அடிப்படையில் தொடர்புடைய துறைகளுடன் அவ்வப்போது

2023 ஏப்ரல் 11]

ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. திறம்பட்ட முழுமையானக் கண்காணிப்பிற்குப் பின்வரும் பன்னிரெண்டு கருப்பொருள் பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

3.4.1. நீர்வளங்களை மேம்படுத்துதல்

தங்கு தடையின்றி குடிநீர் மற்றும் பாசனத்திற்குத் தேவையான நீரினை நிலையாக வழங்குவதை உறுதி செய்திட நிலத்தடி நீர் மட்டம், மேற்பரப்பு நீர் சேமிப்புத் திறன், மண்ணின் ஈரப்பதம், பசுமைப்பரப்பு ஆகியவற்றை அதிகரிப்பது என்பன மிகவும் அவசியமாகிறது. நீர்வளத்தை மேம்படுத்த மேற்கொள்ளப்படும் நீர்நிலைகள் பாதுகாப்பு, ஆறுகள் பாதுகாப்பு, நீர் சேகரிப்பு கட்டமைப்புகளைப் புனரமைத்தல், தடுப்பணைகள் கட்டுதல், மண் வளம் பாதுகாப்பு, மழை நீர் சேகரிப்பு, கழிவு நீர் மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு, கழிவு நீர் மேலாண்மை, காடு வளர்ப்பு போன்ற திட்டங்கள், நீர்வளம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, வேளாண்மை மற்றும் உழவர் நலம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம் ஆகிய பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நீர்நிலைகளின் அளவீடுகள் அடங்கிய பதிவுகள், ஆக்கிரமிப்புகளை அடையாளம் காண்பது மற்றும் ஆக்கிரமிப்பிலிருந்து நீர்நிலைகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் பங்கு இன்றியமையாததாகிறது. நீர்வளங்களை மேம்படுத்துதல், நீர் வீணாவதைத் தடுத்தல், மறுசுழற்சி செய்யப்பட்ட நீரினைப் பயன்படுத்துவதை அதிகரித்தல் போன்ற நிலையான நீர் இருப்புக்கான அரசின் தொலைநோக்குத் திட்டங்களை விரைவாக அடைய சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையானது, இக்கருப்பொருள் தொடர்புடைய அனைத்து துறைகளின் பணிகளையும் ஒருங்கிணைக்கும்.

3.4.2. வேளாண் உற்பத்தி, விளைச்சல் மற்றும் சந்தைப்படுத்துவதற்குரிய இணைப்புகளை உருவாக்குதல்

விதைகள் மற்றும் நாற்றுகள், போதுமான பாசன நீர், உரங்கள், வேளாண் இயந்திரமயமாக்கல், சூரிய ஒளி சக்தியைப் பயன்படுத்துதல், அங்கக வேளாண்மைக்கான இடுபொருள்கள், பயிர்க் கடன் மற்றும் விரிவாக்க நடவடிக்கைகள் போன்றவை

வேளாண் உற்பத்தி மற்றும் விளைச்சலைப் பெருக்குவதற்குத் தேவைப்படும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த செயல்பாடுகள் ஆகும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்மூலம் செயல்படுத்தப்படும் நேரடிக் கொள்முதல் நிலையங்கள், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆகியவை வேளாண் பொருட்களின் பின்செய் நேர்த்தி நிலையில் விளைபொருட்களைக் கொள்முதல் செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் முக்கிய பங்களிக்கின்றன.

வேளாண்மை மற்றும் உழவர் நலம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை போன்றவை உழவர்களுக்குத் தேவையான மேற்கண்ட உதவிகளை நேரடியாக செய்து வருகின்றன. தகவல் தொழில்நுட்பத்துடன் கூடிய கைபேசி செயலி, இணையவழி சாதனங்கள், தொலையுணர்வு தொழில்நுட்பம் போன்றவற்றின் மூலமாகவும் இத்துறை தனது பணியினைச் சிறந்த முறையில் செயல்படுத்த உதவுகிறது. மாநிலத்தின் முதன்மைத் திட்டங்களான கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், முதலமைச்சரின் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் மூலமாக செயல்படுத்தப்படும் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மற்றும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான ஒருங்கிணைந்த முயற்சியினை தொடர்புடைய துறைகள் மேற்கொள்வதுடன், நீர்வளத் துறை செயல்படுத்தும் தடுப்பு அணைகள் திட்டத்தில் கட்டப்படும் தடுப்பு அணைகளைத் தேவைப்படும் இடத்தில் முறையாகத் தேர்வு செய்து கட்டப்படும் பட்சத்தில், நீண்டகால தரிசு நிலங்களையும், மானாவாரி நிலங்களையும் விவசாய பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்புகள் ஏற்படும். தமிழ்நாடு அரசின் தொலைநோக்குத் திட்டங்களான 11.75 இலட்சம் எக்டர் கூடுதலாகப் பயிரிடுதல், 10 இலட்சம் எக்டர் அளவுள்ள இருபோக சாகுபடி நிலங்களை இரு மடங்காக, அதாவது, 20 இலட்சம் எக்டராக உயர்த்துதல், உணவு தானியங்கள் மற்றும் தேங்காய், பருத்தி, சூரியகாந்தி, கரும்பு ஆகிய பணப்பயிர்களுக்கான வேளாண் ஆக்கத்திறனில் முதல் மூன்று இடங்களுக்குள் தமிழ்நாட்டை இடம் பெறச் செய்தல் போன்ற நோக்கங்களை பத்தாண்டுகளுக்குள் நிறைவேற்றுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுவதை இத்துறை கண்காணிக்கும்.

2023 ஏப்ரல் 11]

3.4.3. அனைவருக்கும் வீடு

வீட்டு வசதித் திட்டங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை – தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை – தமிழ்நாடு ஆதி திராவிடர் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகிய துறைகளின்மூலம் தகுதிவாய்ந்த நகர்ப்புர மற்றும் ஊரக ஏழை மக்களுக்காகச் செயல்படுத்தப்படுகின்றன. நிலம் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் வருவாய்த் துறை முக்கியப் பங்கு வகிக்கிறது. புதுமையான, விரைவான கட்டுமானத் தொழில்நுட்பத்தைச் செயல்படுத்திட பொதுப் பணித் துறையின் ஆலோசனையும் பெறப்பட வேண்டிய அவசியம் உள்ளது. “10 ஆண்டுகளில் ஊரகப் பகுதிகளில் 20 இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் மற்றும் நகர்ப்புரங்களில் 9.75 இலட்சம் புதிய கான்கிரீட் வீடுகள் கட்டப்படும்” என்ற இந்த அரசின் தொலைநோக்கு இலக்கை விரைவாக அடைய தொடர்புடைய துறைகளுக்கு இடையே தேவையானத் தகவல் பரிமாற்றம் மற்றும் ஒருங்கிணைப்பை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை முனைப்புடன் ஏற்படுத்தும்.

3.4.4. கல்வித் தரத்தை உயர்த்துதல்

அனைத்துக் குழந்தைகளுக்கும் பள்ளிகளில் பயில்வதற்குரிய வாய்ப்பும், அதன்மூலம் அவர்கள் ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைவதற்குத் தேவையான அனைத்தும் உள்ளடக்கிய, தரமான கல்வியை அனைத்து பள்ளிகளிலும் வழங்குவதே பள்ளி கல்வித் துறையின் முக்கிய நோக்கமாகும். கோவிட் பெருந்தொற்று காலத்தில் ஏற்பட்ட கற்றல் இழப்புகளை ஈடுசெய்யும் நோக்கத்தில், ‘இல்லம் தேடி கல்வி’ என்ற முதன்மைத் திட்டத்தை அரசு தொடங்கியுள்ளது. ‘எண்ணும் எழுத்தும் இயக்கம்’ ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளிடையே, எழுத்தாற்றல் மற்றும் அடிப்படை எண்ணறிவுத் திறன் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தொடங்கப்பட்டுள்ளது. அனைத்து அரசுப் பள்ளிகளிலும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதுடன், கற்றல் அடைவுகளை சிறந்த வகையில் பெறுவதற்குரிய நடவடிக்கைகளான திறன் வகுப்பறை, உயர்தொழில்நுட்ப ஆய்வகங்கள், நூலகங்கள் ஆகியவையும் மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

வேகமாக வளர்ந்து வரும் நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்களின் காரணமாகப் பாடத்திட்டங்களைத் தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு புதுப்பித்து, புதிய மற்றும் கூடுதல் பாடப்பிரிவுகளை அறிமுகப்படுத்துதல் நவீன தொழில்நுட்பங்களைக் கற்பிக்கும் வகையில் அவற்றைப் பள்ளி மற்றும் கல்லூரிகளின் பாடத்திட்டங்களில் சேர்த்தல் என்பது அவசியமாகியுள்ளது. தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தற்போது தொழிற்துறை 4.0 தரநிலைக்குத் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. தொழிற்பயிற்சி நிறுவனப் பயிற்றுநர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அவர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையிலானத் தொடர் பயிற்சி அளிப்பதும் அவசியமாகிறது. இவையனைத்தும், எப்போதும் வளர்ந்து கொண்டேயிருக்கும் தொழில்நுட்பத்தின்படி தொழில் நிறுவனங்களின் மாறிவரும் திறன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும், இளம் தலைமுறையினரை எதிர்கால தேவைக்கேற்ப தயார்படுத்துவதற்கும் அவசியமானதாகும். வழிகாட்டுதல் (Mentorship) மற்றும் வேலைவாய்ப்பு குறித்த வழிகாட்டுதல் (Career Guidance) ஆகியவை பள்ளிக் கல்வி மற்றும் உயர்கல்வி பாடத்திட்டத்தில் ஒரு அங்கமாக உருவாகியுள்ளன. மேற்குறிப்பிட்ட தேவைகளில் காணப்படும் இடைவெளியைக் களைவதே அரசின் முதன்மைத் திட்டமான "நான் முதல்வன்" திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தரமானக் கல்வி வழங்கப்படுவதைக் குறிக்கும் செயல்திறன் குறியீடுகளை அடைவதற்கு, பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி துறைகள் முக்கிய பங்காற்றினாலும், அவற்றுக்கு இணையாகப் பொதுப் பணித் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலம், சமூக நலம் மற்றும் மகளிர் உரிமை ஆகிய துறைகளின்மூலம் தரமானக் கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், சுகாதாரம் பேணுதல் மற்றும் ஊட்டச்சத்து அளித்தல் ஆகிய பங்களிப்புகள், தரப்படுத்தல் குறியீட்டெண் (Performance Grading Index) / தேசிய நிறுவன தரவரிசை கட்டமைப்பு (NIRF) ஆகியவற்றின் தரவரிசையில் உயர்நிலையை அடைவதற்கும், தேசிய மதிப்பீடு மற்றும் அங்கீகாரப் பேரவை (NAAC) போன்ற அமைப்புகளின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் உதவும். பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம், பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் போன்ற பள்ளி உட்கட்டமைப்புத் திட்டங்கள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், தேசிய இளம்

2023 ஏப்ரல் 11]

சிறார் நலத் திட்டம், கண்ணொளித் திட்டம் போன்ற பள்ளிக் குழந்தைகளுக்கான நலத்திட்டங்கள், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டம், தேசிய ஊட்டச்சத்து குழுமத் திட்டங்கள் போன்ற ஊட்டச்சத்துக்கானத் திட்டங்கள் ஆகிய முக்கியத் திட்டங்கள் தொடர்புடைய துறைகளின் ஒருங்கிணைப்புடன் செயல்படுத்த வேண்டியுள்ளது. எனவே, கற்றல் விளைவுகளை மேம்படுத்த இத்துறைகள் ஒருங்கிணைந்து செயல்படுவது என்பது முக்கியத்துவம் பெறுகிறது.

3.4.5. சுகாதாரக் குறியீடுகளை மேம்படுத்துதல்

நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு 3-ன் குறிக்கோளான, அனைவருக்கும் "ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு" என்கிற நிலையை அடைவதற்கு, பொது சுகாதாரத்தை பராமரித்தலும், தரமான மருத்துவக் கல்வியும், வலுவான மருத்துவக் கட்டமைப்பும் அவசியமானதாகும். தற்போதைய சூழ்நிலையில், கோவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள இடைவெளியை சமன் செய்வது என்பதும் முக்கியமானதாக உள்ளது. கடந்த 2021 ஆம் ஆண்டு அரசால் தொடங்கப்பட்ட முதன்மைத் திட்டமான "மக்களைத் தேடி மருத்துவம்" தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களைச் சென்றடைவதில் இருந்த சவால்களைக் களைந்து, மருத்துவச் சேவையை இல்லங்களுக்கே சென்று வழங்கிடுவதற்கான வழிவகையை உருவாக்கியுள்ளது. சிசு இறப்பு விகிதம், மகப்பேறு இறப்பு விகிதம், ஊட்டச்சத்துக் குறைபாடு போன்ற முக்கிய சுகாதாரக் குறியீடுகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டும். மேலும், இக்குறியீடுகளை மேம்படுத்துவற்கு, தாய்-சேய் நலத் திட்டங்கள் மற்றும் அங்கன்வாடிகளில் குழந்தைகளின் வளர்ச்சிக் கண்காணிப்பு (Growth Monitoring) *ஆகியவற்றை வலுப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. இவற்றைத் தவிர, தூய்மையான சூழலை பேணும் கட்டமைப்பு, அனைத்து வயதினரிடையேயும் தனிநபர் சுகாதாரப் பழக்கத்தை ஊக்குவித்தல், அங்கன்வாடிகள் மற்றும் பள்ளிகளில் ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதி செய்தல் ஆகியவை, ஊட்டச்சத்து குறைபாடுகளைத் தடுப்பதற்கும், தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கும் வழிவகுக்கும். இவை அனைத்தும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை, பள்ளிக் கல்வி, பொதுப்பணி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி போன்ற துறைகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டின்மூலம் அடைந்திட இயலும்.*

[*2023 ஏப்ரல் 11*

3.4.6. அனைவரும் உள்ளடங்கிய சமூகம் (Social Inclusion)

'எவரும் விடுபடாமல், அரசால் செயல்படுத்தப்படும் பல்வேறு நலத் திட்டங்களின் பயன்கள் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சென்றடைவதை உறுதி செய்வதே சமூக உள்ளடக்கத்தின் நோக்கமாகும். இருப்பினும், விளிம்புநிலையில் உள்ளவர்கள், மாற்றுத் திறனாளிகள், திருநங்கைகள், மகளிர் மற்றும் முதியோர்கள் ஆகியோரின் வாழ்வினை மலரச் செய்யக்கூடிய, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வளர்ச்சி மற்றும் நலத் திட்டங்கள், பாலின சமத்துவம், வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள், புதுமைப் பெண் திட்டம். உரிமைகள் திட்டம் (RIGHTS Project), *மாற்றுத் திறனாளிகள் உரிமைகள் சட்டம், 2016, வன உரிமைகள் சட்டம் 2006, போன்ற திட்டங்கள் மற்றும் சட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் தொடர்புடைய துறைகளிடையேயான ஒருங்கிணைந்த நடவடிக்கை அவசியமாகிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், (தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டுக் கழகம்)* (TAHDCO) *பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலம், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, மாற்றுத் திறனாளிகள் நலன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், பொது மற்றும் உள் துறை ஆகிய துறைகள், இந்த அரசின் உன்னதமான தொலைநோக்குத் திட்ட இலக்குகளை அடைய ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியமாகிறது.*

3.4.7. உட்கட்டமைப்பு மற்றும் தொழில் வளர்ச்சி

பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தற்போது தமிழ்நாடு ஒரு மாபெரும் சக்தியாக விளங்கி வருவதுடன், இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாகவும் திகழ்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாட்டின் பொருளாதாரம் 2030-2031 ஆம் நிதியாண்டிற்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக வளர்ச்சியடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதைச் சாத்தியப்படுத்துவதற்குத் தொழில் துறையின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். தொழில் உற்பத்தித் துறையில் முதலீட்டை ஈர்த்திடத் தேவையான பல நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. வழிகாட்டி நிறுவனம் (GUIDANCE)

2023 ஏப்ரல் 11]

மூலம் தமிழ்நாட்டில் முதலீடுகள் ஈர்த்தல் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றிற்கான சூழல் அமைப்பினை (Eco-system) மாற்றி அமைத்திடுவதன்மூலம் மாநிலத்தில் தொழில் துறை வளர்ச்சியை வேகப்படுத்திட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மின்னணு, ஆட்டோ உதிரி பாகங்கள், தொழிற்பூங்காக்கள், தடையில்லா வர்த்தகக் கிடங்கு மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், பொது உற்பத்தி, உணவு பதப்படுத்துதல், காலணி, மருந்து மற்றும் ஜவுளி, அத்துடன் மரச்சாமான்கள் உற்பத்தி, மின்சார வாகனங்களுக்கான மின்னேற்று உட்கட்டமைப்பு ஆகிய குறிப்பிட்ட துறைகளில் மிகப் பெரிய அளவில் முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

எனவே, இந்த அரசு, மிகப் பெரிய தொழிற்பூங்காக்கள், பெரிய தொழில் துறை கூடங்கள், மிகப் பெரிய அளவிலானத் தொழிற்பேட்டைகள், தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கம் (TANSIM) மூலமாக தொழில் துவங்குவதற்கும், தொழில் துறை மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைமூலம் மாநிலத்தின் தொழில் துறையின் மேம்பாட்டிற்காக ஒற்றைச் சாளர இணையதளம் வாயிலாக முதலீட்டு வசதி மற்றும் பின்பராமரிப்பு வசதிகள் செய்யப்படுகின்றன. இத்துறையானது மேற்கண்ட திட்டங்களை, உயர்நிலையில் நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களில் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுப்பதன்மூலம் மொத்த மாநில உற்பத்தியில் அதிகபட்ச பங்கை தொழில் துறை பதிவு செய்வதற்குரிய சூழலை ஏற்படுத்திட உதவிடும்.

மேலும், முதலீடுகளை ஈர்ப்பதற்கு சாலை, இரயில் மற்றும் விமான இணைப்பு, நீர், மின்சாரம் மற்றும் சந்தை உள்கட்டமைப்பு போன்ற வலுவான உள்கட்டமைப்பு வசதிகள் தேவைப்படுகின்றன. போக்குவரத்து, எரிசக்தி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள், பொதுப் பணி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை போன்ற துறைகள் தொழில் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதன்மூலம் வலுவான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட முடியும். தேவைகளுக்கு ஏற்ப, தொடர்புடைய துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்புக் கூட்டங்களை நடத்துவதற்கான முன்னெடுப்பினை இத்துறை மேற்கொள்ளும்.

[2023 ஏப்ரல் 11

3.4.8. திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாடு

தமிழ்நாட்டின் திறன்மிக்க மனிதவளம், மாநிலத்தில் முதலீட்டை ஈர்ப்பதற்கு முக்கிய காரணியாக விளங்குகிறது. மாநிலத்தில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்குத் தேவையான மிக முக்கிய காரணிகளில் ஒன்றாக 'திறன் மேம்பாடு' விளங்குகிறது. எனவே, இளைஞர்களிடையே உள்ள திறன் இடைவெளிகளைப் பகுப்பாய்வு செய்து, அவர்களுக்கு உரிய திறன் பயிற்சிகளை அளித்து, அதன்மூலம் அவர்கள் தரமான வேலைவாய்ப்பினைப் பெறுவதற்குரிய தகுதியை ஏற்படுத்துவது அல்லது அவர்களை வெற்றிகரமான தொழில் முனைவோராக மாற்றுவது போன்ற நடவடிக்கைகளில் அரசு தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு, பள்ளிக் கல்வி, உயர் கல்வி, தொழில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன் வளம் மற்றும் மீனவர் நலன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் ஆகிய துறைகளின் பல்வேறு திட்டங்களின் மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்தகைய பயிற்சிகள் அனைத்தும், தேவைப்படும் நபர்களை அடையாளம் கண்டு பயிற்சி அளிப்பதும், பயிற்சி முடித்த நபர்கள், வேலைவாய்ப்பைப் பெறுவது என்கிற வரையில் அல்லது அவர்கள் விரும்பும் சொந்த வணிக அமைப்புகளைத் தொடங்குவது வரையிலும் அவர்களைப் பின்தொடர்ந்து உதவுதல் என்பது முக்கியமானதாகும்.

அரசின் முதன்மைத் திட்டமான 'நான் முதல்வன்' திட்டம், 01.03.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் திறனை மேம்படுத்துவதும், அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்குவதும், தொடர்புடைய துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து சிறப்பானச் செயல்பாட்டிற்குரிய சூழல் அமைப்பை ஏற்படுத்தித் தருவது என்பதும் இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஒவ்வொரு ஆண்டும் 10 இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் என்ற இந்த அரசின் தொலைநோக்குத் திட்டத்தின் இலக்கினை அடைந்திடவும் மேற்குறிப்பிட்ட துறைகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் அவசியமாகிறது.

2023 ஏப்ரல் 11]

3.4.9 முறையான கடன் (Institutional Credit)

கோவிட்-19 பெருந்தொற்று ஏற்படுத்தியுள்ள தாக்கத்திலிருந்து பொருளாதாரம் மீண்டு வரும் சூழ்நிலையில், வங்கி அமைப்புகள்மூலம் வழங்கப்படும் கடன் முறையாகக் கிடைக்கப் பெறுவது என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஊரக மற்றும் நகர்ப்புர ஏழை மக்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் ஆகியோருக்குச் சீராகவும், குறைந்த வட்டி விகிதத்திலும், நியாயமான நிபந்தனைகளுடன் கூடிய முறையான கடன் வசதி கிடைக்கும் பட்சத்தில், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களை அதிலிருந்து உயர்த்துவதற்கும், அதிக வறுமைக்கோட்டிற்குக் கீழே அவர்கள் செல்லாதவாறு தடுப்பதற்கு மேலும், தொழில் வளர்ச்சிக்கும் முக்கியமானதாகும். முறைசாரா அமைப்புகள் நெறிமுறையற்ற நடைமுறைகளைப் பின்பற்றி கடன் வழங்குவதைத் தடுப்பதற்கும் இந்த முன்னெடுப்பு மிகவும் அவசியமாகிறது. இந்நேர்வில், ஆண்டு கடன் திட்டத்தின்படி (Annual Credit Plan) *சம்பந்தப்பட்ட வங்கிகள் முன்னுரிமை அடிப்படையில் கடன் வழங்குவதை மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் நடத்தப்படும் வங்கியாளர்கள் கூட்டங்களில் அவ்வப்போது ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் உள்ளது. அடுத்த பத்தாண்டுகளில் வறுமைக்கோட்டுக்குக் கீழே எந்தக் குடும்பமும் இல்லை என்ற தொலைநோக்கினை தமிழ்நாடு அடைய வேளாண்மை மற்றும் உழவர் நலன், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்கீழ் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் நிதி ஆகிய துறைகள் ஒருங்கிணைந்து செயல்பட்டு தேவையான கடன் இணைப்புகளைக் கொண்டுவர வேண்டியது இன்றியமையாததாகிறது.*

3.4.10 மரபு மற்றும் பண்பாடு

தொல்லியல் அகழாய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகள், நாட்டிலுள்ள பிற மாநிலங்களை விட அதிக நிதி ஒதுக்கீட்டுடன் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பண்டைய மதிப்புயர் பண்பாட்டினை மீண்டும் உருவகப்படுத்திப்

புரிந்துகொள்வதற்கு இந்த நடவடிக்கைகள் உதவுகின்றன. சிவகளையில் சேகரிக்கப்பட்ட மாதிரிகளை Accelerator Mass Spectrometry முறையில் காலக்கணிப்பு ஆய்வு செய்து பகுப்பாய்வு ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட அறிக்கை, பொருநை ஆற்றங்கரை நாகரீகம் ஏறத்தாழ 3,200 ஆண்டுகள் பழமையானது என்பதை நிரூபித்துள்ளது. ஆதிச்சநல்லூர், சிவகளை மற்றும் கொற்கை ஆகிய பகுதிகளில் அகழாய்வில் கிடைக்கப்பெற்ற பண்டைய பொருள்களை, நமது பண்பாட்டினைப் பறைசாற்றும் விதமாக நெல்லையில் அமையப்போகும் பொருநை அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில், கீழடி அகழாய்வுப் பகுதி திறந்தவெளி அருங்காட்சியகமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. 'தமிழ்நாட்டுக் கல்வெட்டுகள்' எனும் தலைப்பில் ஆறு கல்வெட்டுத் தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. திருமலை நாயக்கர் அரண்மனை – மதுரை, சார்ஜா மாடி – தஞ்சாவூர், டேனிஷ் கோட்டை – தரங்கம்பாடி ஆகிய பழங்காலக் கோட்டைகள் மற்றும் அரண்மனைகளில் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சிறப்பு வாய்ந்த மரபுகளை வெளிக்கொணர்வதற்கான முயற்சிகளை அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. கீழ்க்கண்ட இடங்களில் முக்கியத்துவம் வாய்ந்த அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

- கீழடி மற்றும் அதன் தொகுப்பு (மணலூர், அகரம், கொந்தகை) – சிவகங்கை மாவட்டம்
- ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை – தூத்துக்குடி மாவட்டம் மற்றும் கொடுமணல் – ஈரோடு மாவட்டம்.
- கங்கைகொண்டசோழபுரம், அரியலூர் மாவட்டம்.
- மயிலாடும்பாறை, கிருஷ்ணகிரி மாவட்டம்.

இத்துறை, மரபு மற்றும் பண்பாட்டின் சிறப்புகளை வெளிப்படுத்தும் பணிகளான அகழாய்வு, அருங்காட்சியகங்கள், பாதுகாப்பு (Conservation) மதுரை கீழக்கரையில் ஜல்லிக்கட்டு அரங்கம் போன்ற பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதுடன், தொடர்புடைய மற்ற துறைகளான, சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை, பொதுப் பணி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, வருவாய் மற்றும் பேரிடர்

2023 ஏப்ரல் 11]

மேலாண்மை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ஆகியவை ஒருங்கிணைந்து செயல்படுவதை உறுதி செய்யும்.

3.4.11. சுற்றுச்சூழல் சமநிலை

இந்தியாவின் தேசிய வனக் கொள்கை 1988–ன்படி மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பில், வனப்பரப்பு மற்றும் மரப்பரப்பை 33 விழுக்காடாக அதிகரிப்பது என்பது இந்த அரசின் முக்கிய தொலைநோக்குத் திட்டங்களில் ஒன்றாகும். நீடித்த நிலையான வளர்ச்சி இலக்கு – 15–ன் படியும் (SDG – 15) 2030 வருடத்திற்குள் இந்த இலக்கு அடையப்பட வேண்டும். 2021 ஆம் ஆண்டின் மதிப்பீட்டின்படி தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பில், வனப்பரப்பானது 20.31 சதவீதமாக உள்ளது. உலகளாவிய மற்றும் தேசிய அளவில் நிர்ணயம் செய்யப்பட்ட 33 சதவீதம் பசுமைப் பரப்பு இலக்கினை அடைய மாநில அரசு தீவிரமாக முயற்சி மேற்கொண்டு வருகிறது.

2030 ஆம் ஆண்டுக்குள் இந்த இலக்கை அடைய பல துறைகளின் கூட்டு முயற்சி மட்டுமின்றி மக்களின் பங்களிப்பும் அவசியமாகிறது. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம், தமிழ்நாடு ஈர நிலங்கள் இயக்கம், தமிழ்நாடு நதிப் பாதுகாப்பு திட்டங்கள், பசுமைத் தமிழ்நாடு இயக்கம், போன்ற அரசின் முக்கிய சுற்றுச்சூழல் பாதுகாப்பு முயற்சிகள், வேளாண்மை மற்றும் உழவர் நலன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல், கால்நடை பராமரிப்பு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆகிய பல்வேறு துறைகளின் திறன்மிக்க பங்களிப்பு நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய அவசியமாகிறது. எனவே, அரசின் இந்த சீரிய நோக்கத்தினை விரைந்து அடையும் வகையில் பசுமைப் போர்வையின் பரப்பை அதிகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தொடர்புடைய துறைகளின் ஒருங்கிணைப்பு கூட்டங்களை நடத்திடவும், உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களில் இப்பொருளை விவாதித்திடவும் இத்துறை தொடர்ந்து முயற்சிகளை மேற்கொள்ளும்.

3.4.12 தரவு நிர்வாகம் (Data Governance)

தரவு சார்ந்த நிர்வாகத்தில் நம்பகத்தன்மையைக் கையாளுதலும், பயனுள்ள தரவுகளைச் சேகரித்தலும் அத்தரவுகளின் பாதுகாப்பினை உறுதி செய்தலும் முக்கிய செயல்பாடுகள் ஆகும். மேலும், சிறந்த தரவு சார்ந்த நிர்வாகம் என்பது தரவுகள்

நிலைத்தன்மை கொண்டதாகவும் (Consistency) நம்பகத்தன்மை கொண்டதாகவும் மற்றும் அவை தவறாகப் பயன்படுத்தப்படாததை உறுதி செய்வதாகவும் இருத்தல் வேண்டும். தரவு சார்ந்த நிர்வாகம் கீழ்க்கண்ட கூறுகளை உள்ளடக்கியது.

- இது அரசின் நிர்வாக முடிவுகள் தரவுகளின் அடிப்படையில் (Data driven decision making) எடுப்பதற்கு உதவியாக இருத்தல்.
- தரவுகளைத் தூய்மைப்படுத்துதல் (Data Purity) மூலம் அரசு செயல்படுத்தும் திட்டங்கள் தகுதியானப் பயனாளிகளுக்குச் சென்றடைவதை உறுதி செய்தல்.

தரவு சார்ந்த முடிவெடுத்தல் (Data driven decision making): தரவுகள் அளிக்கும் தகவல்களின் அடிப்படையிலான நிர்வாகத்தில், அனைத்துத் துறைகளிலும் அரசு சரியான முடிவுகள் மேற்கொள்வதற்கு மட்டுமின்றி, அன்றாட நிர்வாகத்தில் தேவைப்படும் மாறுதல்களையும் மேற்கொள்ள இயலும்.

தரவுகளைத் தூய்மைப்படுத்துதல் (Data Purity): பல்வேறு துறைகளின்மூலம் திரட்டப்படும் தரவுகளின் நிலைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை உறுதி செய்வதன் மூலம் அரசுத் திட்டங்களின் பயன்கள் தகுதியுள்ள பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்ய இயலும். மேலும், தகுதியற்ற பயனாளிகளை நீக்குவதன்மூலம் அரசிற்குத் தேவையற்ற நிதி இழப்புகளைத் தடுக்க இயலும்.

இந்தத் துறையானது தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் (TNeGA) ஒருங்கிணைந்து பல்வேறு துறைகளின் தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, பொதுமக்களுக்கு அனைத்துத் துறையினரும் பாரபட்சமற்ற மற்றும் விரைவான சேவை வழங்குவதை உறுதிசெய்கிறது. அனைத்து துறைகளின் தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகளை கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்தல் மாநிலத்தின் மின் ஆளுமை (e-Governance) முயற்சிகளை வலுப்படுத்தும்.

கருப்பொருள் கண்காணிப்புப் பகுதிகளின் அடிப்படையில் எடுக்கப்படும் முன்னெடுப்புகள் துறைகளின் திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்களைத் தீர்ப்பது மட்டுமல்லாமல், இந்தத் திட்டங்களின் விரைவான முன்னேற்றத்திற்கும் உதவுகிறது.

2023 ஏப்ரல் 11]

மேலும், அரசின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில், இளம் வல்லுநர்களின் திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், இத்துறையால் 30 இளம் வல்லுநர்கள் தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வு திட்டத்தின்கீழ் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதில் 24 இளம் வல்லுநர்கள், கருப்பொருள் அடிப்படையிலான துறைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, கருப்பொருள் கண்காணிப்பு மற்றும் துறைசார் மதிப்பீட்டுத் திட்டங்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கருப்பொருள் அடிப்படையிலானத் திட்டச்செயலாக்கத்தில் இலக்குகள் மற்றும் முழுமையானப் பலன்களை அடைவதற்குத் துறைகளுக்கு இடையேயான ஒருங்கிணைப்புத் தேவைகளை கண்டறியும் பொறுப்பும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. கருப்பொருள் பகுதிகள் தொடர்பான ஒன்றிய அரசு, தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களால் வெளியிடப்பட்ட துறை சார்ந்த அறிக்கைகளை ஆய்வு செய்து, தங்களுக்கு ஒதுக்கப்பட்ட துறைகளுக்கு பகுப்பாய்வு அறிக்கைகளை அளித்திடவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

3.5. மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள்

கூடுதல் தலைமைச் செயலாளர்கள்/முதன்மைச் செயலாளர்கள்/அரசுச் செயலாளர்களை, மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களாக அரசு அவ்வப்போது நியமிக்கிறது. கண்காணிப்பு அலுவலர்கள், மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மீது கள ஆய்வு மேற்கொண்டும், ஆய்வுக் கூட்டங்கள் நடத்தியும், திட்டங்களை விரைவாகச் செயல்படுத்திட தக்க ஆலோசனைகளையும், செயல்படுத்துவதில் ஏற்படும் இடையூறுகளுக்கானத் தீர்வுகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட நிலையிலான அலுவலர்களுக்கு வழங்குகின்றனர். அது மட்டுமல்லாமல், ஒவ்வொரு மாதமும் மாவட்டங்களில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டிய திட்டங்களின் பட்டியல் மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டு, அவர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்டங்களில் அத்திட்டங்களின் முன்னேற்றங்கள் மற்றும் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்கின்றனர்.

மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்கள் மாவட்டங்களில் அவசியமான இனங்களில் துறைகளுக்கிடையே தேவைப்படும் ஒருங்கிணைத்தல் மற்றும் கூட்டு முயற்சிகளை உறுதி

செய்கின்றனர். மேலும் நிலம் கையகப்படுத்துதல் குறித்த சிக்கல்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்தும் ஆய்வு செய்கின்றனர். இவற்றோடு மட்டுமல்லாது அந்த மாவட்டத்திற்கே உரிய சிறப்புத் திட்டங்கள் குறித்தும் ஆய்வு செய்கின்றனர். உயர் அளவில் அறிவுரைகள் வழங்கப்பட வேண்டிய இதர திட்டங்கள் குறித்தும் ஆய்வுகளை மேற்கொள்கின்றனர். மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்கள் மாவட்டத்தில் கள ஆய்வு மேற்கொண்டு திட்டங்கள் வாரியாக தங்களின் கருத்துக்கள் / குறிப்புகள் / பரிந்துரைகள் ஆகியவற்றை உரிய தொடர் நடவடிக்கைக்காக இத்துறைக்கு அனுப்புகின்றனர்.

மாவட்டங்களில் திட்டங்களின் செயல்பாடுகள் தொடர்பான கருத்துக்கள் / குறிப்புகள் / பரிந்துரைகள் கண்காணிப்பு அலுவலர்களிடமிருந்து பெறப்பட்டு இத்துறையில் ஒருங்கிணைக்கப்பட்டு, அதன் மீது அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நடத்தப்படுகிறது. அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களால் நடத்தப்படும் இவ்வாய்வுக் கூட்டத்தில் மாவட்டக் கண்காணிப்பு அலுவலர்களால் மாவட்டங்களில் ஆய்விடப்பட்ட திட்டங்களின் தொடர்புடைய துறைகளின் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் கலந்துகொள்கின்றனர். இக்கூட்டத்தில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் கருத்துகள் மற்றும் பரிந்துரைகள், தொடர்புடைய துறைகளின் செயலாளர்களிடம் அளிக்கப்பட்டு உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இத்தகைய ஆய்வுக் கூட்டங்கள், கண்காணிப்பு அலுவலர்களால் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாவட்ட அளவில் அடையாளம் காணப்பட்ட இடர்பாடுகளுக்கு உரிய திருத்தங்கள் மேற்கொள்வதற்கும் தகுந்த முடிவுகள் எடுப்பதற்கும் வாய்ப்பாக அமைகிறது.

4. சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் முன்னெடுப்புகள்

பல்வேறு திட்டங்களின் செயல்பாடுகளைக் கண்காணிப்பது மட்டுமல்லாது அரசின் சில தனித்துவ முன்னெடுப்புகளையும் இத்துறை செயல்படுத்தி வருகிறது. இந்த முன்னெடுப்புகள், பொதுமக்களுக்கு அரசின் பல்வேறு துறைகள் மூலமாக வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்கும், அதன் மூலம் அரசின் உயரிய நோக்கமான “எல்லோருக்கும் எல்லாம்” என்ற கோட்பாட்டினை நிறைவேற்றவும் உதவுகிறது.

2023 ஏப்ரல் 11]

4.1 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பாய்வுக் கூட்டங்கள்

(அ) முத்திரைத் திட்டங்கள்

மாநிலத்தின் சமூகப் பொருளாதார கட்டமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்குச் செயல்படுத்தப்படும் பெரிய அளவிலானப் பயன்தரக்கூடிய உள்கட்டமைப்பு திட்டங்களை, குறித்த காலத்திற்குள் திட்டமிட்டபடி நிறைவேற்றுவதற்கும் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கும் அத்திட்டங்களின் முன்னேற்றத்தினைத் தொடர்ந்து கவனத்துடன் கண்காணிக்க வேண்டியது அவசியமாகிறது. அதன் மூலம் இத்திட்டங்களில் எதிர்பார்க்கப்படும் பயன்கள் மற்றும் குறிக்கோள்களை உரிய காலத்தில் அடைய இயலும். பல்வேறு முக்கியத் துறைகளின் திட்டங்களான எரிசக்தி, குடிநீர் மற்றும் சுகாதாரம், தொழில் தடங்கள், டைடல் பூங்காக்கள், மேம்பாலம் அமைக்கும் திட்டங்கள், வெளிவட்டச் சாலைகள், பாலங்கள், பாரம்பரியங்களைப் பாதுகாக்கும் திட்டங்கள், போக்குவரத்து, தகைசால் பள்ளிகள், சுற்றுச்சூழல் திட்டங்கள், பல்நோக்கு மருத்துமனைகள், மீன்பிடி துறைமுகங்கள், நவீன அரிசி ஆலைகள், சேமிப்புக் கிடங்குகள், தகவல் தொழில்நுட்பத் திட்டங்கள், பாசனத் திட்டங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்றவை கூர்ந்தாய்வுக்காக உயர்நிலை கூட்டங்களில் முத்திரை திட்டங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முத்திரை திட்டங்களின் முன்னேற்றங்களை குறிப்பிட்ட கால இடைவெளியில் ஆய்வு செய்திட முடிவு செய்யப்பட்டு, முதல் ஆய்வுக் கூட்டமானது 09.02.2023 மற்றும் 13.02.2023 ஆகிய நாட்களில் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டங்களுக்கு உரிய ஏற்பாடுகளைச் செய்வது மட்டுமல்லாது கூட்டத்திற்குத் தேவையானக் குறிப்புகளையும், முன்னேற்ற அறிக்கைகளையும் இத்துறை தயாரிக்கிறது. இதுவரை 25 அரசுத் துறைகளில் 155 முத்திரைத் திட்டங்கள் கண்டறியப்பட்டு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) முன்னுரிமைத் திட்டங்கள்

அரசு ஏராளமானத் திட்டங்களைப் பல்வேறு இனங்களின்கீழ் தொடர்புடைய துறைகளின்மூலம் செயல்படுத்தி வருகிறது. இதில் சுகாதார மேம்பாடு, கல்வி, வேலைவாய்ப்பு உருவாக்கம், வாழ்வாதார உயர்வு, அடிப்படை வசதிகள் அளித்தல், வீட்டுவசதி உருவாக்குதல் ஆகிய துறைகளில் நிதி ஒதுக்கீட்டின்படியும்,

பயனடைவோர் அடிப்படையிலும் சில முக்கியத் திட்டங்கள் "முன்னுரிமைத் திட்டங்கள்" என வகைப்படுத்தப்பட்டு உயர்மட்ட ஆய்வுக் கூட்டத்தில் ஆய்வு செய்யப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதல் ஆய்வுக்கூட்டம் 13.03.2023 மற்றும் 15.03.2023 ஆகிய நாட்களில் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது. இக்கூட்டத்தில் 24 துறைகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில் 130 திட்டங்கள் முன்னுரிமைத் திட்டங்களாகத் தேர்வு செய்யப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன.

(இ) மின்னாளுமைத் திட்டங்கள்

தொழில்நுட்ப வளர்ச்சியின் சாதகங்கள் கொண்டு அரசு நிர்வாகத்தினை மேம்படுத்துவது இன்றியமையாததாகிறது. தகவல் தொழில்நுட்பக் கட்டமைப்பின் முன்னேற்றங்கள், தரவுகள் அடிப்படையிலான நிர்வாகத்திற்கு வாய்ப்பளிக்கிறது. இதன் காரணமாக, அரசுத் துறைகள் தகவல் தொழில்நுட்ப முன்னெடுப்புகளின்மூலம் தங்கள் துறைகளின் பல்வேறு நலத்திட்டங்களைத் தகுதியுள்ள அனைத்துப் பயனாளிகளுக்கும் தரமாகவும் விரைவாகவும் கொண்டு செல்ல இயலுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் பல்வேறு துறைகளின் மின்னாளுமைத் திட்டங்களை ஆய்வு செய்ய முடிவு செய்துள்ளார்கள். இதன் மூலமாக, இத்தகைய மின்னாளுமைத் திட்டங்களின் பலன்களை அத்துறைகளின் செயல்பாட்டுடன் விரைந்து ஒருங்கிணைக்க இயலும்.

4.2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மண்டல அளவிலானக் கள ஆய்வுகள் "கள ஆய்வில் முதலமைச்சர்"

கொள்கை அறிவிப்புகள் அனைத்தும் விரைவாக அரசாணைகளாக மாற்றப்பட்டு, அவைகளைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வந்து, செயல்பாடுகளைக் கள ஆய்வுகள் மூலம் தொடர்ந்து கண்காணித்து, திட்டங்களின் பயன்கள் அனைத்தும் தாமதமின்றி உரிய மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்வது முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல ஆய்வுக்கூட்டங்களில் வலியுறுத்தி வருகிறார்கள். அரசின் பல திட்டங்களின் முன்னேற்றத்தினை முறையாக ஆய்விடுதல் மட்டுமின்றி, அத்திட்டங்களின் செயலாக்கம் குறித்தும், பல நிலைகளில் நடத்தப்படும் கள ஆய்வுகள் மூலமாக

2023 ஏப்ரல் 11]

மட்டுமே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பெரிதும் வலியுறுத்தப்படும், “மக்களை மையப்படுத்திய அரசு” என்ற நிலையை அடைய இயலும்.

அரசின் உயர்நிலை ஆய்வினை கள அளவிலும் கொண்டு செல்லும் வகையிலான முன்னோடி திட்டமாக “கள ஆய்வில் முதலமைச்சர்” என்கிற புதிய முன்னெடுப்பை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டத்தின்கீழ் மண்டல அளவில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு மண்டலமும் 4 முதல் 5 மாவட்டங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

ஆய்வுக் கூட்டங்கள்: இத்திட்டத்தின்கீழ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்விடும் மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களில் நலத்திட்ட மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் பல்வேறு துறைகள் சார்ந்த இதர மாவட்ட அளவிலான அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டங்களை மேற்கொள்கிறார். சட்டம் ஒழுங்கு குறித்த ஆய்வுக் கூட்டமும் தொடர்புடைய மாவட்டங்களின் காவல் துறைக் கண்காணிப்பு அலுவலர்கள், அந்தந்தச் சரகங்களின் காவல்துறைத் துணைத் தலைவர், அம்மண்டலத்தின் காவல் துறைத் தலைவர் ஆகியோருடன் தனியே நடைபெறும்.

கள ஆய்வுகள்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாகக் கள ஆய்வுகளை மேற்கொள்கிறார்கள். ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நலத்திட்ட மற்றும் உள்கட்டமைப்புத் திட்டங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் அரசுச் செயலாளர்கள் மற்றும் துறைத் தலைவர்கள் அம்மண்டலத்தின் தொடர்புடைய மாவட்டங்களில் ஆய்வுக் கூட்டத்திற்கு முந்தைய நாளில் விரிவானக் கள ஆய்வினை மேற்கொள்வதுடன் அக்கள ஆய்வின்போது கண்டறியப்பட்ட குறைகளும், ஆய்வுக் கூட்டத்தில் விவாதிக்கப்படுகின்றன. மேலும், தேவைப்படும் இடங்களில், கண்டறியப்பட்ட இடையூறுகளைக் களைவதற்குப் பொருத்தமானத் தீர்வுகளும் வழங்கப்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட கூட்டங்களுக்குத் தேவையான விவரங்கள் மற்றும் தரவுகளைத் தொடர்புடைய

[2023 ஏப்ரல் 11

துறைகளிடமிருந்து சேகரித்து அதன் அடிப்படையில் ஆய்வுக் குறிப்புகளைத் தயார் செய்யும் பொறுப்பு இந்தத் துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. பொதுவாக, கீழ்க்குறிப்பிட்டுள்ள நலத்திட்ட மற்றும் உள்கட்டமைப்பு தொடர்பான இனங்கள் “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின்கீழ் ஆய்விடப்படுகின்றன.

- குடிமக்களுக்கு அரசு வழங்கும் அடிப்படை சேவைகள்
- வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி
- சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து
- சமூக நலத் திட்டங்கள்
- வாழ்வாதாரத் திட்டங்கள்
- நகர்ப்புர மேம்பாடு
- பொது உள்கட்டமைப்பு
- மாணவர்கள் மற்றும் இளைஞர்கள்
- திறன் மேம்பாடு
- நில எடுப்பு தேவைப்படும் மாவட்டம் சார்ந்த திட்டங்கள் மற்றும் முத்திரைத் திட்டங்கள்
- மாவட்டத்திற்குரிய கொள்கை அறிவிப்புகளின் செயலாக்க நிலை

மேற்குறிப்பிட்ட இனங்களில் மாவட்ட அளவிலான செயலாக்க முன்னேற்றங்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்ஆய்வு செய்ய உகந்த வகையில் விரிவான அறிக்கைகளை இத்துறை தயார் செய்யும். இந்த ஆய்வறிக்கைகள் மாவட்டங்களில் நன்கு செயல்படும் பகுதிகளைக் குறிப்பிடுவதுடன் மட்டுமல்லாமல் சிறப்பு கவனம் தேவைப்படும் பகுதிகளையும் சுட்டிக்காட்டுகின்றன. இதன்மூலம், தொடர்புடைய மாவட்ட அலுவலர்களால் அப்பகுதிகளில் சிறப்பு கவனம் செலுத்தி, தேவைப்படும் திருத்தங்களை மேற்கொண்டு அப்பகுதிகளில் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கவும் உதவுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுவரை மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டங்களை 2023 ஆம் ஆண்டின் பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில், வேலூர், சேலம் மற்றும் மதுரை ஆகிய மூன்று மண்டலங்களில் நடத்தியுள்ளார்கள். இதன்மூலம் 13 மாவட்டங்களுக்கான ஆய்வுகள் இதுவரை முடிவடைந்துள்ளன.

2023 ஏப்ரல் 11]

4.3 உங்கள் தொகுதியில் முதலமைச்சர்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 07.05.2022 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் விதி எண் 110—ன்கீழ் "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற திட்டத்தினை அறிவித்தார்கள். சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் மக்களின் நீண்ட காலத் தேவைகளை முன்னுரிமைப்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது 22.08.2022 ஆம் நாளிட்ட கடிதத்தில் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் மக்களின் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாத பத்து முக்கியமானக் கோரிக்கைகளை முன்னுரிமைப்படுத்தி, தொடர்புடைய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

இத்திட்டத்தில் நெடுங்காலமாக நிறைவேற்றப்படாமல் உள்ள உடனடித் தேவைகளான குடிநீர் மற்றும் நீர் ஆதாரத்தை மேம்படுத்தக்கூடிய கட்டமைப்பு வசதிகள், வேளாண் உற்பத்தியைச் சந்தைப்படுத்துவதற்குரிய பணிகள், இணைப்புப் பாலங்கள் மற்றும் சாலைகள், மருத்துவ வசதிகள், பள்ளிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்ற புதிய கல்வி நிறுவனங்கள் அல்லது தற்போதுள்ள கல்வி நிறுவனங்களில் தேவைப்படும் கட்டமைப்பு வசதிகள், தொழில் வளர்ச்சியை மேம்படுத்தக் கூடிய கட்டமைப்பு வசதிகள், மின் மயானங்கள், நவீன நூலகங்கள், நகர்ப்புரங்களில் ஒருங்கிணைந்த நவீன வசதிகளுடன் கூடிய பேருந்து நிலையங்கள் மற்றும் புதிய சுற்றுலாத் தலங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தும் பணிகளைப் பரிந்துரை செய்திட கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

இத்திட்டச் செயலாக்கத்திற்கான விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் அரசால் 28.09.2022 அன்று வெளியிடப்பட்டன. அவ்வழிகாட்டு நெறிமுறைகளின்படி, சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரைப் பட்டியல்களை ஆய்வு செய்திட ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் தொடர்புடைய சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளைச் சார்ந்த மாவட்ட அளவிலான அலுவலர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற உறுப்பினர்களால் பரிந்துரைக்கப்பட்ட பணிகள்/திட்டங்களைக் கூர்ந்தாய்வு செய்து, அப்பணிகள் எடுத்துக்கொள்வதற்குரிய விரிவான சாத்தியக் கூறுகளை ஆராய்வார்கள். மேற்குறிப்பிட்ட சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் மாவட்ட அளவிலான குழுவில் பணிகள் / திட்டங்கள் ஒவ்வொன்றும் பரிசீலிக்கப்பட்டு தோராய மதிப்பீட்டுத் தொகையுடன் கூடிய பரிந்துரை அரசுக்கு அனுப்பி வைக்கப்படும்.

மேற்கண்டவாறு துறைவாரியாகத் தொகுக்கப்பட்ட பணிகள்/திட்டங்களைச் சம்பந்தப்பட்ட துறைகளின், நடைமுறையில் உள்ள திட்டங்களின்கீழ் செயல்படுத்திடுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆய்வு செய்திட ஏதுவாக அரசுத் தலைமைச் செயலாளர் தலைமையில் “கூர்ந்தாய்வு குழு” கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

1.	அரசுத் தலைமைச் செயலாளர்	தலைவர்
2.	அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை	உறுப்பினர்
3.	அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை	உறுப்பினர்
4.	அரசு முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை	உறுப்பினர் செயலர்

தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு அனுமதி வழங்கும் பொருட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்டு மாநில அளவிலான “அனுமதி வழங்கும் உயர்நிலைக் குழு” அமைக்கப்பட்டுள்ளது.

1	மாண்புமிகு முதலமைச்சர்	தலைவர்
2	மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்	உறுப்பினர்
3	மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்	உறுப்பினர்
4	அரசு தலைமைச் செயலாளர்	உறுப்பினர்

2023 ஏப்ரல் 11]

5	அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை	உறுப்பினர்
6	அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை.	உறுப்பினர்
7	அரசு முதன்மைச் செயலாளர், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை	உறுப்பினர் செயலர்
8	பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் பணிகளுக்குத் தொடர்புடைய துறை சார்ந்த அரசுச் செயலாளர்கள்.	உறுப்பினர்

மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட பிரேரணைகள் துறை வாரியாகத் தொகுக்கப்பட்டு, அப்பிரேரணைகளைத் தொடர்புடைய துறைகளுடன் இணைந்து பரிசீலித்து, அவற்றை மாநில அளவிலானக் குழுவின் பரிசீலனைக்கு வைத்திடுதல் மற்றும் அனுமதி வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளும் ஒருங்கிணைப்புத் துறையாக இத்துறை செயல்படும். தற்பொழுது, "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" திட்டத்தின் கீழ் மாவட்டத்திலிருந்து பெறப்பட்ட பிரேரணைகளை உரிய துறைகளுக்கு அனுப்பி, முடிவு செய்து, செயல்படுத்திட ஏதுவாக ஒருங்கிணைக்கும் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

4.4. தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம்

மாநில அரசின் பல முக்கிய மற்றும் முன்னுரிமைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் பல்வேறு தொழில் மற்றும் கல்விப் பின்புலத்தைச் சார்ந்த இளம் வல்லுநர்களின் திறமைகளைப் பயன்படுத்திக் கொள்ளும் நோக்கில், தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக, அரசாணை (பல்வகை) எண். 3, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை, தேதி: 4-3-2022-ன்கீழ் தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம் (2022-2024) என்கிற திட்டத்தைச் செயல்படுத்துவதற்குரிய ஆணையினை அரசு பிறப்பித்தது. இதன்படி, சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையானது இத்திட்டத்திற்கானத் தொடர்புத் துறையாகவும், திருச்சிராப்பள்ளியிலுள்ள பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனமானது கல்விப் பங்காளராகவும் அறிவிக்கப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தைச் (2022-2024) செயல்படுத்த அந்நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனமானது இளம் வல்லுநர்களைத் தேர்வுச் செய்யும் தொடர்பு முகமையாகும். அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டத்தின்கீழ் மூன்று கட்டத் தேர்வுகளின் வழியே புத்தாய்வு வல்லுநர்களைத் தெரிவு செய்யும் பணியினை அந்நிறுவனம் மேற்கொண்டது. வலுவான, வெளிப்படையான மற்றும் நியாயமான முறையில் இந்தத் தேர்வு நடத்தப்பட்டது. இதன்மூலம் தேர்வான 30 நபர்களின் இறுதிப் பட்டியல் 5-9-2022 அன்று வெளியிடப்பட்டது. தேர்வானப் புத்தாய்வு வல்லுநர்களுக்கு மாதம் ரூ.65,000/ – ஊதியமும் ரூ.10,000/ – கூடுதல் படியும் வழங்கப்படுகிறது.

புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட புத்தாய்வு வல்லுநர்களுக்கு சென்னையிலுள்ள அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனம் மற்றும் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையுடன் இணைந்து நோக்குநிலைப் பயிற்சி வழங்கப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட புத்தாய்வு வல்லுநர்களுக்கான நோக்குநிலைப் பயிற்சியை 29.09.2022 அன்று சென்னையிலுள்ள அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடக்கி வைத்தார்கள். புத்தாய்வு வல்லுநர்கள் தங்களுடைய 30 நாள் பயிற்சியை 31.10.2022 அன்று நிறைவு செய்தனர்.

நோக்குநிலைப் பயிற்சி நிறைவடைந்த பின்னர், தேர்வாகியிருந்த 30 புத்தாய்வு வல்லுநர்களில் 24 வல்லுநர்கள் கருப்பொருள் அடிப்படையிலானக் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டில் ஈடுபடுத்தப்பட்டு, கருப்பொருள் சார்ந்த துறைகளில் இணைக்கப்பட்டுள்ளனர். ஆறு வல்லுநர்கள் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் கண்காணிப்புப் பிரிவில் இணைக்கப்பட்டுள்ளனர். கருப்பொருள் அடிப்படையில் புத்தாய்வு வல்லுநர்களுக்குப் பின்வரும் கடமைகளும் பொறுப்புகளும் அளிக்கப்பட்டுள்ளன.

- கருப்பொருள் அடிப்படையிலான துறைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் கூட்டு முயற்சி தேவைகளை அடையாளம் கண்டு அதன் வழியாகக் கருப்பொருள் இலக்குகளை அடைதல்.

2023 ஏப்ரல் 11]

- ஒன்றிய அமைச்சகங்கள், தேசிய மற்றும் பன்னாட்டு முகமைகள் வெளியிடும் பிரிவு வாரியான அறிக்கைகளை கருப்பொருள் அடிப்படையில் பகுப்பாய்வு செய்து அவற்றை அவர்கள் இணைக்கப்பட்ட துறைகளுக்கு வழங்குதல்.

- பன்னாட்டு மற்றும் தேசிய அளவிலான சிறப்பான நடைமுறைகளை ஆராய்ந்து, அவற்றைத் தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கானப் பொருத்தமான வழிகளைப் பரிந்துரைத்தல்.

- வளர்ந்து வரும் தொழில் நுட்பங்களை ஆராய்ந்து அவற்றில் செயல்படுத்தக்கூடிய வகையிலான புதிய மற்றும் மாற்று முறைகளை அடையாளம் காணுதல்.

- தற்போது செயல்பாட்டில் உள்ள முக்கிய / முத்திரைத் திட்டங்களின் செயலாக்கத்தினைக் கண்காணிக்க உதவி செய்தல்.

- தற்போது நடைமுறையிலிருக்கும் மின்னாளுமை முன்னெடுப்புகளை ஆராய்ந்து அவற்றை மேலும் பயன்பாட்டுக்கு உகந்த வகையில் மாற்றுவதற்குரிய வழிமுறைகளைக் கண்டறிதல்.

- மின்னனு சேவைகளின் செயலாக்கத்தை ஆராய்ந்து சேவைகள் பொது மக்களுக்குச் சென்றடைவதையும், வழங்கப்படும் சேவைகள் பயன்படுத்தப்படுவது குறித்தும், தொடர்ந்து கண்காணிப்பதற்கு உதவுதல்.

- களப்பணியில் கண்டறிந்த விவரங்கள் மற்றும் அதன் தொடர்பான அறிக்கைகளை அவ்வப்போது அளித்தல்.

- அவ்வப்போது ஒதுக்கப்படும் பணிகளைச் செய்தல்.

புத்தாய்வுத் திட்ட வல்லுநர்கள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் அவர்கள் இணைக்கப்பட்டிருக்கும் துறையில் அவர்கள் மேற்கொண்ட பணிகளை மாதாந்திர அறிக்கையாக சமர்ப்பிக்க வேண்டும்.

கல்விப் பங்காளராக விளங்கும் திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனம் பின்வரும் செயல்பாடுகளை மேற்கொள்ளும்.

- ➢ *புத்தாய்வுத்திட்ட வல்லுநர்களுக்கு ஒரு கல்விசார் வழிகாட்டி பயிற்றுநரை நியமித்தல்.*
- ➢ *இணையவழி அல்லது நேரடி வகுப்புகள் மூலம் பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மையில் கல்விசார் உள்ளீடுகளைத் தொடர்ந்து வழங்கி வல்லுநர்களின் திறனை மேம்படுத்துதல்.*
- ➢ *குறிப்பிட்ட கால இடைவெளியில் அவர்களுடைய செயல்பாடுகளை மதிப்பீடு செய்து அதன் அடிப்படையில் ஒவ்வொரு இளம் வல்லுநருக்கும் தேவைப்படும் வழிகாட்டுதல்களை வழங்குதல்.*
- ➢ *போட்டி மனப்பான்மையைப் புகுத்துவதன் வழியாக வல்லுநர்களின் செயல்திறனை மேம்படுத்துதல்.*

இந்த இரண்டு வருடத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்யும் புத்தாய்வு வல்லுநர்கள், கல்விப் பங்காளரிடமிருந்து "பொதுக் கொள்கை மற்றும் மேலாண்மையில்" முதுகலைச் சான்றிதழ் பெறுவர். மேலும், முதுநிலைப் பட்டங்கள் பெற்றுள்ள புத்தாய்வு வல்லுநர்களுக்கு பாரதிதாசன் மேலாண்மைக் கல்வி நிறுவனத்தின் முனைவர் பட்டப் படிப்பில் சேர்வதற்கான குறைந்தபட்ச கல்வித் தகுதியைப் பெற்றிருக்கும்பட்சத்தில் அதற்கு அந்நிறுவனம் வாய்ப்பு வழங்கும்.

4.5 கள ஆய்வு அலுவலர்கள் (Field Nodal Officers)

சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையானது, அரசின் கண்காணிப்பு அமைப்பின் முதன்மை பணியாகிய, தொடர்புடைய துறைகளிடமிருந்து தரவுகளைப் பெற்று, கொள்கை அறிவிப்புகளின் செயலாக்க நிலை குறித்து கண்காணிக்கும் பணியினைச் செய்து வருகிறது. துறைகள் வழங்கும் தகவல்களின் அடிப்படையில், அவ்வப்போது நடத்தப்படும் முக்கியமான ஒருங்கிணைப்புக் கூட்டங்களுக்கான முன்னேற்ற நிலை அறிக்கைகள் மற்றும் உயர்நிலை ஆய்வுக் கூட்டங்களுக்கான பகுப்பாய்வு அறிக்கைகள் ஆகியனவற்றை சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை தயார் செய்து வருகிறது.

மாவட்ட அளவில் கண்காணிப்புச் செயல்முறையை மேலும் வலுப்படுத்திட, துணை ஆட்சியர்/உதவி இயக்குநர் நிலை அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் கள ஆய்வு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2023 ஏப்ரல் 11]

கள ஆய்வு அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் பின்வருவன:

- *ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்டங்களில் மாதந்தோறும் குறைந்தபட்சம் 4 நாட்கள் அல்லது அரசின் ஆணைக்கேற்ப கள ஆய்வினை மேற்கொள்ள வேண்டும்.*

- *ஆய்வு செய்வதற்கென அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட திட்டங்கள் அனைத்தையும் ஆய்வு செய்ய வேண்டும்.*

- *ஆய்வின்போது, கள ஆய்வு அலுவலர்கள், நலத்திட்டங்களின்கீழ் பயனடையும் பல்வேறு பயனாளிகளின் உண்மைத் தன்மை மற்றும் நடைபெற்று வரும் பணிகளின் உண்மை நிலையை சரிபார்த்திட வேண்டும். மேலும், தற்செயலாகக் கண்டறியப்பட்டவை ஏதேனும் இருப்பின், அவை குறித்தும் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.*

- *திட்டங்கள் அனைத்தும் நடைமுறையிலுள்ள வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் அறிவுரைகளின்படி செயல்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.*

- *பிற பகுதிகளில் செயல்படுத்திட ஏதுவாக, அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லும் அளவில், அதிக தரமானதாகவும், துரிதமாகவும் செயல்படுத்தப்பட்ட சிறப்பான நடைமுறைகள் எவையேனும் கள அளவில் பின்பற்றப்பட்டால், அவற்றை ஆவணப்படுத்த வேண்டும்.*

- *திட்டச் செயலாக்கத்தில் முறைகேடுகள், சிக்கல்கள், இடையூறுகள் ஏதேனும் இருப்பின், அது குறித்து அறிக்கையளிக்க வேண்டும். இவ்வறிக்கை, அவற்றை சரிசெய்வதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கும் வழிவகுக்கும்.*

- *ஆய்வுப் பணியின்போது எந்தவிதச் சார்புமின்றி நடுநிலையுடன் நடந்துகொள்ள வேண்டும்.*

- *ஒவ்வொரு ஆய்வின் நிறைவிற்குப் பிறகும், கள ஆய்வு அறிக்கைகளை உடனடியாக அனுப்பிட வேண்டும்.*

கள ஆய்வு அலுவலர்கள் ஆய்வு செய்வதற்கானத் திட்டங்கள் அவ்வப்போது ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், கள ஆய்வு அலுவலர்களிடமிருந்து பெறப்படும் ஆய்வறிக்கைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு, தொடர்புடைய துறைகளுக்கு உரிய தீர்வு நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்படும். இவ்வாறு பெறப்படும் பின்னூட்டங்களும், கருத்துகளும் அறிக்கையாக அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தொடர்புடைய துறைகளுடன் நடத்தும் ஆய்வுக் கூட்டங்களில் ஆய்வு கூட்டப் பொருளாகச் சேர்க்கப்பட்டு விவாதிக்கப்படும்.

4.6 மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட அலுவலர்களின் கள ஆய்வுகள்

சென்னை தலைமைச் செயலகத்தில் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 முதல் 12 ஆம் தேதி வரை நடைபெற்ற மாவட்ட ஆட்சியர்கள் கூட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்கள் மாவட்டங்களில் மேற்கொள்ள வேண்டிய கள ஆய்வுகளின் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்தினார்கள். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு அரசு துறைகளின் மூலமாக மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களையும், மாணாக்கர்களுக்கும், நலிவடைந்த பிரிவினருக்கும் வழங்கப்படும் பல்வேறு உதவிகளையும் உரிய தரத்தில் கிடைப்பதை உறுதி செய்யுமாறும், கள ஆய்வுகளின் அடிப்படையில் தேவைப்பட்ட தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் மாவட்ட ஆட்சியர்களைக் கேட்டுக்கொண்டார்கள். இதன் காரணமாக, கள ஆய்வுகளின் முக்கியத்துவம் மாநில அளவில் ஒரு வலுவானக் கண்காணிப்பு அமைப்பினை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்தது. மாவட்டங்களில் பல்வேறு அரசுத் துறைகளின்மூலம் செயல்படுத்தப்படும் மற்றும் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாகக் கள ஆய்வுகளைக் கண்காணிப்பதும் இத்துறையின் பொறுப்பாகும்.

ஒவ்வொரு மாதமும், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட மாவட்ட அலுவலர்களால் மேற்கொள்ளப்படும் பல திட்டங்களின் மீதான கள ஆய்வு அறிக்கைகள் குறிப்பிட்ட படிவத்தில் இத்துறையில் பெறப்படுகின்றன. மாவட்டங்களிலிருந்து பெறப்படும் இந்த ஆய்வு அறிக்கைகள் ஒவ்வொரு மாதமும் தொகுக்கப்பட்டு, விவரங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு அரசுத் தலைமைச் செயலாளர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 11]

இந்தப் பகுப்பாய்வு அறிக்கைகள்மீது உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்காக மாவட்ட வாரியானக் குறிப்புகளுடன் தலைமைச் செயலாளர் அவர்களால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கடிதம் அனுப்பப்படுகிறது. இது மட்டுமல்லாமல் தலைமைச் செயலாளர் அவர்களால் குறிப்பிட்ட கால இடைவெளியில் மாவட்ட ஆட்சியர்களுடன் காணொளிக் காட்சிகளின்மூலம் நடத்தப்படும் ஆய்வுகளிலும் இப்பொருள் குறித்து விவாதிக்கப்படுகிறது. இதன் காரணமாக, மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட அலுவலர்களால் நடத்தப்படும் கள ஆய்வுகள் சீராக முன்னேற்றம் அடைந்துள்ளன.

II. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

1. முன்னுரை

நாட்டிலேயே தமிழ்நாடு சமச்சீரானத் தொழில் வளர்ச்சியையும் பல்வேறு உற்பத்தித் துறைகளில் வளர்ச்சியையும் கொண்டுள்ள சில மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்நாடு வாகனங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்கள் தயாரித்தல், மருந்துப் பொருட்கள், பொறியியல் சாதனங்கள், ஆடைகள், உரம், தோல் மற்றும் நெகிழிப் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும் தொழிலாளர்களின் எண்ணிக்கையிலும் முதலிடம் வகிக்கின்றது. தமிழ்நாடு மின்வாகனங்கள், நிதித் தொழில்நுட்பம் (Fin Tech), *பெருந்தரவு* (Big Data), *மெய்நிகர் தொழில் நுட்பம் (*Meta Verse*), மேம்பட்ட உற்பத்தி முறை, பாதுகாப்புத் துறை சார்ந்த உற்பத்தி போன்றவற்றில் அதிக முதலீடுகளைப் பெற்று வருகின்றது.*

மேலும் நமது மாநிலம் அதிக எண்ணிக்கையிலான (15.07 விழுக்காடு) குறு, சிறு, நடுத்தர தொழில் முனைவோர் (MSME)-*களை உள்ளடக்கியுள்ளது. இதன்மூலம் மிகப்பெரும் அளவிலான தொழிலாளர்களின் இருப்பிடமாக அமைந்துள்ளது. தொழில் உற்பத்தித் திறன் மற்றும் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி* (GSDP) *பங்களிப்பு ஆகியவற்றைத் தக்க வைத்துக்கொள்ளவும், அதனை மேம்படுத்துவதற்கும் அதிக திறன் கொண்ட மனிதவளத்தை உருவாக்குவதும் ஏற்கெனவே உள்ள பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதும் அவசியமாகிறது. இதுமட்டுமின்றி, மாநிலத்தின் ஒட்டுமொத்த சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்குக் கல்லூரிப் படிப்பை முடித்துப் பணியமர்த்த தயார் நிலையிலுள்ள திறமையான மாணவர்களைத் தொழிற்சாலைப் பணிகளுக்கு ஏற்றவாறு தயார்படுத்துதல் அவசியமாகிறது.*

[2023 ஏப்ரல் 11

இதுவே அரசுக் கொள்கைகளின் அடிப்படை உந்து சக்தியாகவும், பல்வகைத் திறன் சார்ந்த முயற்சிகளுக்கும் இடையேயான தொடர்பை உண்டாக்குவதாகவும் உள்ளது.

மாநிலத்தின் மக்கள் தொகை, மிகவும் தொழில்மயமானப் பொருளாதாரத்தை ஒட்டிய மறுதிறனளித்தலுக்கானத் தேவை, சமூக நீதி, சமச்சீரான வளர்ச்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டின் முன்னுரிமைகளில் ஒன்றாகத் திறன் மேம்பாடு திகழ்கிறது.

தமிழ்நாடு பல மரபுசார் கலைகளின் தொகுப்பைக் கொண்டுள்ளது. இந்த மரபுசார் கலைகளைப் பேணிப் பாதுகாக்கவும் மேலும் இதிலிருந்து பொருளாதார பலன்களைப் பெறுவதற்கு உதவும் வகையிலும் இந்த மரபுசார் கலைகளில் ஈடுபட்டுள்ள மக்களின் நவீன வடிவமைப்படத் திறன், நிதி மேலாண்மை குறித்த புரிதல் மற்றும் சந்தைத் தொடர்புகளை விரிவாக்குவது போன்றவற்றில் பயிற்சி அளிப்பது அவசியமாகிறது.

தமிழ்நாட்டின் சராசரி நடு வயது 34 வருடங்கள் என்ற அளவில் தேசிய நடுசராசரியான 28 வருடங்களைவிட அதிகமாக உள்ளது. இந்த சராசரி நடு வயதானது, 2036-ல் 41 வருடங்களாக உயரக்கூடும். (ஆதாரம்: MOHFW – சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகம், இந்திய அரசின் இந்திய மற்றும் மாநில மக்கள் தொகையின் 2011-2036 இடைப்பட்ட ஆண்டுகளுக்கானத் தொழில்நுட்ப அறிக்கை) எனவே, மக்கள் தொகையின் ஈவுப்பங்கினை முழுமையாகப் பெறுவதற்கு பல நிலைகளில் உடனடியாகத் திறன்களை வளர்க்க வேண்டியுள்ளது.

இளைய சமுதாயமே தமிழ்நாட்டின் அரிய செல்வமாகும். மாணவர்கள் அவர்களின் அடிப்படைத் திறமைகள் மற்றும் தனித்துவமானத் திறன்களின் அடிப்படையில் வளர்க்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்சார்ந்த வாழ்க்கையில் உன்னத நிலையை அடைய முடியும். திறன்மிக்க தொழிலாளரைக் கொண்டே நல்லிணக்கம் மற்றும் சமச்சீரான வளர்ச்சியை கொடுக்க இயலும். தமிழ்நாடு, உயர்கல்வியில் நாட்டிலேயே மிக உயர்ந்த அளவிலான மொத்த நுழைவு விகிதமான (GER – Gross Enrollement Ratio 51.42%) கொண்டுள்ளது. இது தமிழ்நாடு மாணவர்கள் உயர்கல்வி வாய்ப்புகளில் விருப்பம் கொண்டுள்ளதையும் அதன்மூலம் உயரிய பணிகளை அடைய வலுவான இலட்சியம் கொண்டுள்ளனர் என்பதையும் குறிக்கின்றது. பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் உள்ள

2023 ஏப்ரல் 11]

மாணவர்கள் தங்களின் தொழில் மற்றும் வேலைவாய்ப்புக்கான வழித்தடங்களைத் தேர்வு செய்வதற்கும் மேலும் தேர்வு செய்த தொழில் முறையில் வளர்ந்துவரும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செய்முறைத் திறன்களை வளர்த்திட வழிகாட்டுதலும் அவசியமாகிறது.

1.1 திறனளித்தல், உயர் திறன் அளித்தல் மற்றும் மறுதிறன் அளித்தலுக்கான தேவை

அதிவேகமான தொழில்நுட்ப மாறுதல் மற்றும் வருங்கால பணிகளில் புதிய திறன் தேவைகள் என்பது திறன் இடைவெளி அதிகமாவதன் அறிகுறியாகும். கணினி மயமாக்கல் மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகள் போன்றவை திறன் இடைவெளியை இணைக்கும் முக்கிய உந்து சக்தியாக உள்ளன. உயரிய திறன் திட்டங்களை ஊக்குவிக்க கணினி மயமாக்கலில் உள்ள (Digital) *இடைவெளியைக் குறைக்க வேண்டும். எதிர்கால வேலைவாயப்புகளுக்கு மென்திறன் முக்கியமானதாகும். தொழில்நுட்ப மாற்றத்தில், தற்போதுள்ள தொழில்களில் அதி வேக மாறுபாடு காரணமாக பணியாளர்களின் திறன்களை மேம்படுத்துவதும் கவனிக்கப்பட வேண்டிய முக்கிய அம்சங்களாக உள்ளன.*

தமிழ்நாடு அரசு, தொழில் துறைகள், கல்வி நிலையங்கள் மற்றும் பயிற்சி வழங்குநர்களோடு மிகுந்த முனைப்புடன் இணைந்து பணியாற்றி அனைவருக்கும் மேம்பட்ட திறனை அளிப்பதற்கான முன்னெடுப்புகளைத் தொடங்கி உள்ளது. வளர்ந்து வரும் திறன்களான எந்திரவியல் (Robotics), *செயல்முறைத் தானியக்கம்* (Process Automation), *மேகக் கணிமை* (Cloud Computing), *தரவுப் பகுப்பாய்வு* (Data Analytics), *செயற்கை நுண்ணறிவு* (Artificial Intelligence), *இயந்திர வழிக்கற்றல்* (Machine Learning), *இணையப் பாதுகாப்பு* (Cyber Security) *போன்றவை மாறி வரும் தொழில்நுட்ப உலகின் வேகத்திற்கு ஏற்ப பணியாளர்களின் திறன்களைப் பெருக்கிட வேண்டியுள்ளது. மாறுபடும் திறன் தேவைகள், திறன் பயிற்சிக்கு அதிக செலவு செய்யும் நிலை மற்றும் இலக்குடன் கூடிய பயிற்சித் திட்டங்களின் பற்றாக்குறை போன்றவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு, திறன், உயர் திறன் மற்றும் மறு திறன் ஆகியவைகளை இளைஞர்களுக்கு சென்றடையும் நோக்கில் திறனுக்கான கொள்கையினை வகுத்துள்ளது.*

[2023 ஏப்ரல் 11

தற்போதைய இளைஞர்களிடம் தனி நபர்களுக்கு இடையேயான தொடர்புத்திறன் மற்றும் தகவல் தொடர்புத்திறன் போன்றவற்றை அதிகரிக்க வேண்டியுள்ளது. இவற்றின் தேவையினை பல்வேறு துறைகளில் பணி வழங்குநர்கள், குறிப்பாகத் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன. தொழில் துறைகளின் தேவைக்கேற்ப, தமிழ்நாட்டு இளைஞர்களின் மென்திறன் மற்றும் பணித்தேவை திறன் ஆகியவற்றை மேம்படுத்த இலக்கு நோக்கிய முன்னெடுப்புகள் தேவைப்படுகின்றன.

1.2 தமிழ்நாட்டில் திறன் மேம்பாட்டின் தற்போதைய நிலை

இளைஞர்களுக்கு நல்ல வேலைவாய்ப்பினை உருவாக்குவதன்மூலம் வளர்ந்துவரும் பொருளாதாரத்தை எதிர்கொள்ளவும், சமூக நீதியை உறுதி செய்யவும் உயரிய தரமுள்ள மனிதவளத்தை உருவாக்கவும் தமிழ்நாடு அரசு முனைந்துள்ளது. எனவே, இளைஞர்களின் விருப்பத்தையும் தொழில் வளர்ச்சியையும் சமநிலைபடுத்துவதன்மூலம் தொழிலாளர்களுக்கான தேவை மற்றும் இருப்பை சரி செய்து மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவ முடியும்.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் திறன்கள் யாவை என்பதைக் கூர்ந்து கவனித்து, அதே வேளையில், இளைஞர்கள் விருப்பப்படும் தொழில்களுக்கேற்ப அனைத்து திறன் பயிற்சிகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. அனைவரும் பயன்பெறும் விதமாகத் திறன் பயிற்சி தரும் பல்வேறு துறைகள் கூட்டாக ஒருங்கிணைந்து செயல்படுவதே சரியானத் தீர்வாக அமையும்.

2. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், மாநிலத்தில் திறன்பயிற்சி பெற்ற மனிதவளத்தை அதிகரித்து, தொழிற்சாலைகளின் திறன் தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பானது 2009-ல் திறன் பயிற்சி அளிக்கும் இயக்கமாக உருவாக்கப்பட்டது. மேலும் இது இலாப நோக்கமற்ற அமைப்பாக கம்பெனிச் சட்டம், பிரிவு 8-ன்கீழ் 2013 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது.

2023 ஏப்ரல் 11]

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC) திறன் பயிற்சிகளை மேற்கொள்வதற்கான ஒருங்கிணைப்பு (Nodal) முகமையாக அறிவிக்கப்பட்டு, மாநிலத்தில் திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் தனது இணையதளத்தின்மூலம் மாநிலத்தில் உள்ள பல்வேறு அரசுத் துறைகளால் நடத்தப்படும் அனைத்துத் திறன் பயிற்சிகளையும் ஒருங்கிணைக்கிறது. திறன் பயிற்சித் திட்டங்களைத் தரப்படுத்துவது, மாவட்ட வாரியாக அரசு மற்றும் தனியார் பயிற்சி நிறுவனங்களை அடையாளம் காண்பது, மதிப்பீடு மற்றும் சான்றிதழ் வழங்குவது ஆகியவற்றில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் கவனம் செலுத்துகின்றது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வளர்ந்து வரும் பொருளாதாரத் தேவைகளுக்கேற்ப திறன் பயிற்சிகளை உருவாக்கும் வகையிலும், வேலைவாய்ப்பினை உருவாக்கும் வகையிலும், முறையான மற்றும் முறைசாராக் கல்வி பயின்றவர்களுக்கு உள்ள திறன் இடைவெளியைக் குறைப்பதற்கும் திறன்பயிற்சி வழங்குகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தொழில் துறையின் தேவைகளுக்கு ஏற்ப திறன் பயிற்சி முறையினை மாற்றியமைக்க கவனம் செலுத்துகிறது. தொழில் துறை சார்ந்த திறன் பயிற்சிகளை வழங்க தொழில் துறை நிறுவனங்களைத் திறன் பயிற்சியாளர்களாக இணைக்கும் முனைப்பில் செயல்பட்டு வருகிறது.

2.1 தேசியத் திறன் தகுதி கட்டமைப்பு (NSQF) மற்றும் NSQF அல்லாத பணிப் பிரிவுகள்

திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவுக்காக ஒன்றிய அரசு வகுத்துள்ள பொது விதிகளின்படி, மாநில மற்றும் தேசிய அளவில் சீரான பாடத்திட்ட தர அளவீடுகளை உருவாக்க, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், தேசிய திறன் தகுதி கட்டமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட பாடத்திட்டம் மற்றும் இதர அளவீடுகளான பாடப்பிரிவின் காலம், தர நிலை, மதிப்பீட்டு முறை மற்றும் கட்டண முறைகளைப் பின்பற்றுகிறது. தேசியத் திறன் மேம்பாட்டுக் கழகத்தால் (National Skill Development Corporation – NSDC) அறிவிக்கப்பட்டுள்ள திறன் தகுதி தொகுப்புகளில் வெற்றிகரமாக பயிற்சி பெற்ற மற்றும் சான்றளிக்கப்பட்ட மாணவர்களில் குறைந்தபட்சம் 70 சதவீத மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதை உறுதி செய்கிறது.

[2023 ஏப்ரல் 11

தற்போது உறுதியான வேலைவாய்ப்புடன் கூடிய தொழில் துறை தேவைகளுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட திறன் பயிற்சிகளை வழங்க கவனம் செலுத்தப்படுகிறது. அதற்காக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் தேசியத் திறன் கட்டமைப்பு தரநிலை அல்லாத, தொழில் சார்ந்த திறன்களை வேலைவாய்ப்பு மற்றும் சான்றிதழுடன் கூடிய பயிற்சித் திட்டங்களை வழங்க சுலபமான அணுகுமுறையை மேற்கொள்கிறது. கல்லூரிகள் மற்றும் வேலையற்ற இளைஞர்களுக்கு தொழில் சம்பந்தப்பட்ட படிப்புகளை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் பெரிய பன்னாட்டு நிறுவனங்களும் பயிற்சியாளர்களாக இணைக்கப்படுகின்றனர்

2.2 பயிற்சித் திட்டங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் சான்றளித்தல்

பயிற்சியின் தரத்தை உறுதி செய்யும் வண்ணம், தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம் (NSDC) கீழுள்ள துறை சார்ந்த திறன் வளர்ச்சி குழுமம் (Sector Skill Council – SSC) மற்றும் மாநிலத் தொழிற்பயிற்சி குழுமம் (State Council for Vocational Training – SCVT) மூலம் திறன் மதிப்பீடுகள் மற்றும் அங்கீகாரம் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன. இதன்மூலம் நடுநிலையான மதிப்பீடு மற்றும் அங்கீகாரம் ஆகியவை உறுதி செய்யப்படுகின்றன. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகமானது பயிற்சி மற்றும் கல்வி நிறுவனங்களில் அதிக அளவிலான பயிற்சியாளர்கள் இருப்பதைக் கருத்தில் கொண்டு, சான்றளிக்கும் மற்றும் மதிப்பீடு செய்யும் நிறுவனமாக தம் சொந்த அடையாளத்தை நிறுவும் செயல்பாட்டில் ஈடுபட்டுள்ளது.

2.3 பயிற்சி வழங்குநர்களுக்கான அங்கீகாரம் அளித்தல்

சிறந்த பயிற்சி நிறுவனங்களைக் கண்டறிந்து அவர்களைத் தேர்வு செய்வதற்குத் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் (TNSDC) கருத்துரு விண்ணப்பம் (Request for Proposal – RFP) வெளியிடப்படுகிறது. ஆர்வமுள்ள நிறுவனங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். பயிற்சி நிறுவனங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மாவட்ட திறன் பயிற்சி அலுவலர்கள் நேரில் ஆய்வு செய்து, உட்கட்டமைப்பின் தரத்தினை உறுதி செய்தபின், உள் மதிப்பீட்டுக் குழுவால் விருப்ப அறிக்கைகள் (Expression of Interest-EoI) மதிப்பீடு செய்யப்படுகின்றன. தகுதியுள்ள நிறுவனங்கள் மாநில அளவிலான தலைமைக் குழுவின்

2023 ஏப்ரல் 11]

(State Level Apex Committee – SLAC) *ஒப்புதல் பெற்ற பின்னர் பயிற்சி நிறுவனங்களாக அங்கீகரிக்கப்படுகின்றன. முன்னணி தொழில் நிறுவனங்கள், பன்னாட்டுத் தொழில் நிறுவனங்கள் (*MNCs*), பல்கலைக்கழகங்கள் மற்றும் அரசு நிறுவனங்கள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தில் சிறப்பு அங்கீகார வழிமுறை (*Green Channel*) மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளன.*

2.4 2022-2023-ல் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்மூலம் பயிற்சி பெற்ற இளைஞர்களின் விவரங்கள் (மார்ச் 2020-23 வரை)

ஒவ்வொரு மாவட்டத்திலும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் உள்ள வேலைவாய்ப்புகளின் அடிப்படையில் இளைஞர்களுக்குப் பல்வேறு துறைகளின்கீழ் 2022-2023 ஆம் ஆண்டிற்கான குறுகிய காலத் திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. மண்டல வாரியாக, பயிற்சி பெற்ற பயனாளர்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

2.4.1 மண்டல வாரியாக பயிற்சி பெற்ற இளைஞர்களின் விவரங்கள்

வ. எண்	மண்டலத்தின் பெயர்	மாவட்டங்கள்	மொத்த பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை
1	சென்னை	செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர்	*7573*
2	மத்திய மண்டலம்	அரியலூர், திண்டுக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், நாகப்பட்டினம்	*12090*
3	வடக்கு மண்டலம்	திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, வேலூர், விழுப்புரம், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, கடலூர்	*10521*

[2023 ஏப்ரல் 11

வ. எண்	மண்டலத்தின் பெயர்	மாவட்டங்கள்	மொத்த பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை
4	மேற்கு மண்டலம்	சேலம், நீலகிரி, திருப்பூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, தர்மபுரி, கோயம்புத்தூர்	11131
5	தெற்கு மண்டலம்	திருநெல்வேலி, தூத்துக்குடி,விருதுநகர், தேனி, தென்காசி, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, கன்னியாகுமரி	12033
		மொத்தம்	**53348**

2.4.2 துறைவாரியாக பயிற்சி பெற்ற இளைஞர்களின் விவரங்கள்

வ. எண்	துறை	பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை
1.	தளவாடங்கள்	9774
2.	மேலாண்மை	8073
3.	ஆயத்த ஆடை	7661
4.	சுகாதாரம்	6080
5.	தானியங்கி	3858
6.	தோல் மற்றும் தோல் பொருட்கள்	2839
7.	மூலதனப் பொருட்கள்	2391
8.	வேளாண்மை	1646
9.	தகவல் தொழில் நுட்பம்	1553
10.	மின்னணுவியல் மற்றும் வன்பொருள்	1402
11.	மற்ற துறைகள்	8071
	மொத்தம்	**53348**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

3. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் – இணைய முகப்பின் சிறப்பு அம்சங்கள்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் வெளிப்படையான மற்றும் பயன்பாட்டுக்கு உகந்த அம்சங்களுடன் கூடிய இணைய முகப்பானது (www.tnskill.tn.gov.in) திறன் பயிற்சி சூழல் (Skilling Ecosystem) அமைப்பின் அனைத்து அளவீடுகளையும் (Parameters) கண்காணிக்கும் மையப்படுத்தப்பட்ட அமைப்பாகும்.

தரமானப் பயிற்சி மற்றும் பயிற்சித் திட்டத்தை சுமூகமாகச் செயல்படுத்துவதை உறுதி செய்யும் தகவல் களஞ்சியமாக இது செயல்படுகிறது. திறன்களை மேம்படுத்தி வேலைவாய்ப்பினைப் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் இந்த இணையதளத்தில் பதிவு செய்து, பயிற்சி வகுப்பையும், பயிற்சி மையத்தையும் தேர்வு செய்து கொள்ளலாம்.

பயிற்சி நிறுவனங்கள்/ பயிற்சி மையப் பட்டியல், பயிற்சியாளர் வகுப்பு உருவாக்கம் மற்றும் இலக்கு நிர்ணயம் செய்தல், பயிற்சியாளர் வகுப்பு ஆய்வு, வருகைப் பதிவு, பொது நிதி மேலாண்மை அமைப்பு (Public Financial Management System – PFMS) முறைமூலம் பணம் செலுத்துதல், பணியமர்த்தலின் நிலவரம் போன்றவை முற்றிலும் இணையவழியில் நடைபெறுகிறது. பங்கேற்பாளர்கள் அனைவரும் ஆதார் அட்டையின்மூலம் சரிபார்க்கப்பட்டு, போலி பதிவு இல்லாமல் இருப்பது உறுதி செய்யப்படுகிறது. ஆய்வு மற்றும் மதிப்பீடானது தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (National Skill Development Corporation – NSDC) தேசிய திறன் தகுதி கட்டமைப்பின் (National Skill Qualification Framework – NSQF) அனைத்து விதிமுறைகளையும் பின்பற்றி செயல்படுத்தப்படுகிறது. மேலும் கைபேசி மூலமாக நிலக்குறியீடு (GEO Taging) தொழில்நுட்ப உதவியுடன் ஆய்வு செய்யும் வசதியும் கொண்டுள்ளது.

இந்த இணைய முகப்பானது பயன்பாட்டாளருக்கு ஏற்ற வகையில், வெளிப்படையாகவும் மற்றும் வசதியாகவும் தகவல்களை எளிதில் பெற பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியுள்ளது:

[2023 ஏப்ரல் 11

- மாணவர் பதிவு
- பயிற்சி வழங்குநர் / பயிற்சி மைய அங்கீகாரம்
- ஆதார் இணையத்துடன் ஒருங்கிணைப்பு (UIDAI)
- கைபேசி செயலிமூலம் நிகழ்நேர ஆய்வு
- பயிற்சித் திட்டங்களின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு
- e—KYC மூலம் இணைய வழி நிதி வழங்கல்
- ஒருங்கிணைக்கப்பட்ட பொது நிதி மேலாண்மை அமைப்பு (PFMS)
- மதிப்பீடு முகமை பதிவு செய்தல்
- நிகழ்நிலையில் (Online) சான்றிதழ் வழங்கல்
- திறன் தொகுப்புப் பதிவேடு (Skill Registry)
- ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்ட வருகைப் பதிவு முறை (AEBAS)
- ஒருங்கிணைந்த தரவு சேமிப்பகம் (Digi Locker)
- பணியமர்த்தல் கண்காணிப்பு முறை
- மனிதவள நிர்வாக அமைப்பு (HRMS)
- ஒன்றிய மற்றும் மாநில இணையமுகப்புகளுடன் செயலி நிரலாக்க இடைமுகத்தை (Application Programming Interface) ஒருங்கிணைத்தல்
- மேலாண்மைத் தகவல் அமைப்பின் (MIS) தகவல் மற்றும் அறிக்கை

3.1 தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் ஒருங்கிணைந்த திறன் பதிவு தரவு தளம்

ஒருங்கிணைந்த திறன் பதிவு தரவுதளமானது மாநிலத்தில் உள்ள அனைத்து திறன் பயிற்சித் திட்டங்கள் தொடர்பான தரவுகளை அளிக்கும் தீர்வு தளமாக உள்ளது. தொழில் துறையினரின் மனிதவளத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் ஒருங்கிணைந்த தகவல் களஞ்சியமாக இது செயல்படும். வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் பராமரிக்கப்பட்டு வரும் தனியார் துறை

2023 ஏப்ரல் 11]

வேலைவாய்ப்பு இணையதளத்துடன் (Private Job Portal – PJP) *ஒருங்கிணைந்து செயல்பட தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வழிவகை செய்கிறது. அனைத்துத் திறன் பெற்ற பயனாளிகளின் தரவுகள் தனியார் துறை வேலைவாய்ப்பு இணையதளத்துடன் சேர்க்கப்படுகின்றன. தற்போது தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணையதளத்தில் பயிற்சி அளிக்கப்பட்ட நபர்களின் தரவுகள் செயலி நிரலாக்க இடைமுகம்* (Application Programming Interface – API) *மூலமாக நிகர்நிலையில் தனியார் வேலைவாய்ப்பு இணையதளத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.*

மேலும் நிகழ்நேரத்தில், பயிற்சி பெற்ற நபர்கள் இந்த வேலைவாய்ப்பு இணைய முகப்பில் சேர்க்கப்படுகின்றனர். மாநிலத்தில் உள்ள அனைத்து துறைகளின் திறன் பயிற்சி தரவுகளும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் இணைய தளத்தில் பதிவேற்றம் செய்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்தத் தரவுகள் திறன் பதிவேட்டில் இணைக்கப்பட்டுள்ளது. இந்த முறையானது தமிழ்நாட்டில் பயிற்சி பெற்ற நபர்களின் பணிவாய்ப்புகளை அதிகப்படுத்துகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பல்வேறு துறைகளின்கீழ் இயங்கிவரும் 37 தொழில் பிரிவுகளில் பயிற்சி பெற்ற 1,61,138 மாணவர்களின் விவரங்களை ஒருங்கிணைத்துள்ளது.

4. உலகத் திறன் போட்டிகள் 2022

திறன் போட்டிகள், திறன் மிக்கவர்களை ஊக்குவிக்கிறது. "இந்தியத் திறன் போட்டி" எனப்படும் தேசியத் திறன் போட்டி 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றது. மாநில அளவிலான திறன் போட்டியில் வெற்றி பெறுவோர், மண்டல அளவிலான போட்டியிலும், பின்னர் தேசிய அளவில் இந்திய திறன் போட்டியிலும் பங்கேற்கின்றனர்.

06.01.2022 முதல் 10.01.2022 வரை நடைபெற்ற தேசிய அளவிலான இந்தியத் திறன்கள் 2021 இறுதிப் போட்டியில் தமிழ்நாடு சார்பில், மொத்தம் 36 பேர் கலந்து கொண்டனர். மேலும், இவற்றில் நமது மாநிலத்தைச் சேர்ந்த 23 பேர் பதக்கங்கள் பெற்றுள்ளனர். அவற்றுள்

2 தங்கப் பதக்கங்கள், 8 வெள்ளிப் பதக்கங்கள், 8 வெண்கலப் பதக்கங்கள் மற்றும் 5 சிறப்புப் பதக்கங்கள் உள்ளடங்கும். தமிழ்நாடு, இந்தியத் திறன்கள் 2021 பதக்கப் பட்டியலில் ஐந்தாவது இடத்தை பிடித்துள்ளது. நமது மாநிலம் 23 பதக்கங்களை வெல்வது இதுவே முதல் முறையாகும். விருது பெற்றவர்கள் 14.3.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் ரொக்கப் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். பல்வேறு நாடுகளில் நடைபெற்ற உலகத் திறன் 2022 போட்டிகளில் இந்தியத் திறன் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் கலந்து கொண்டு, தமிழ்நாட்டைச் சேர்ந்த 3 பேர் கீழ்க்கண்டவாறு பதக்கங்கள் வென்று நமது மாநிலத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர்.

வ. எண்	**திறன்**	**போட்டியாளர் பெயர்**	**பதக்கம்**	**இடம்**
1.	*விடுதி உபசரிப்பு* (Hotel Reception)	*அனுஸ்ரீ சீனிவாசன்*	*வெண்கலம்*	*சுவிட்சர்லாந்து*
2.	*ஆபரணங்கள் செய்தல்* (Jewellery)	*சுபாசிஸ் பால்*	*சிறப்பு பதக்கம்*	*சுவிட்சர்லாந்து*
3.	*சுகாதாரம் மற்றும் சமூக நலன் பேணுதல்* (Health and Social Care)	*சரஸ்வதி* PV	*சிறப்பு பதக்கம்*	*பிரான்ஸ்*

நடப்பு ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில திறன் போட்டிகள் ஏப்ரல், 2023 இல் தொடங்கப்படும். மாநிலப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு நமது மாநிலத்திற்கு மேலும் பல விருதுகளைக் கொண்டு வருவதற்காக உலகம் முழுவதும் உள்ள சிறந்த மையங்களில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

5. முன் கற்றலின் அங்கீகாரம் (Recognition of Prior Learning – RPL)

முன் கற்றலின் அங்கீகாரம் (RPL) என்பது அனுபவத்தின்மூலம் பெற்ற திறனை அங்கீகரித்தல் ஆகும். தமிழ்நாட்டில் தற்போது கட்டுமானத் துறையில் பணிபுரியும் முறைசாராத் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருப்பதால், முன் கற்றலை அங்கீகரிப்பதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன. தளவாடங்கள், சிறுதொழில், தோல் மற்றும் நெசவுத் துறைகளுக்கு இத்திட்டத்தின்கீழ் மதிப்பீடு மற்றும் சான்றிதழ் பெற தகுதி உண்டு. இதுவரை 1,11,371 நபர்களுக்குத் திறன் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

மரபுசார் கலை மற்றும் கைவினைப் பொருட்களில் கைவினைஞர்களுக்கான புதிய திட்டம் நடப்பாண்டில் திட்டமிடப்பட்டுள்ளது. வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் ஒரு பகுதியாக ஊரகப் பகுதிகளில் சமுதாயத் திறன் பள்ளிகளை (Community Skill Schools) நிர்வகிக்கும் தொழில் முனைவோருக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்றவர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் சான்றிதழ் வழங்கும்.

6. வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் பெறுதல் மற்றும் அறிவு விழிப்புணர்வுத் திட்டம் (SANKALP)

வாழ்வாதார மேம்பாட்டிற்கான திறன் பெறுதல் மற்றும் அறிவு விழிப்புணர்வுத் திட்டம் (Skill Acquisition Knowledge Awareness Livelihood Program – SANKALP) திறன் மேம்பாட்டிற்கான நிறுவன வழிமுறைகளை வலுப்படுத்தவும், நாடு முழுவதும் உள்ள இளைஞர்களுக்குத் தரமான மற்றும் சந்தை சார்ந்த பயிற்சி கிடைக்கச் செய்யவும் தொடங்கப்பட்டது.

தேசிய மற்றும் மாநில அளவில் நிறுவன அமைப்புகளை வலுப்படுத்துவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தை உலக வங்கி நிதியுதவி மற்றும் மத்திய, மாநில அரசுகளின் 60:40 என்ற விகிதத்திலான நிதியில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த முதல் ஆண்டில் ரூ.20.30 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கூறுக்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மொத்த வரவு-செலவுத் திட்டம் பின்வருமாறு:

வ. எண்	செயல்பாடுகள்	ஒன்றிய மற்றும் மாநில பங்கு உட்பட மொத்தமாக வழங்கப்பட்ட தொகை (Rs. in)
1.	கூறு 1 – உயர்தர சந்தை தொடர்பான பயிற்சியைத் திட்டமிடுதல், வழங்குதல் மற்றும் கண்காணிப்பதற்காக தேசிய மற்றும் மாநில அளவில் நிறுவனங்களை வலுப்படுத்துதல்.	9,23,00,000
2.	கூறு 2 – திறன் மேம்பாட்டுத் திட்டங்களின் மேம்படுத்தப்பட்ட தரம் மற்றும் சந்தைத் தொடர்பு.	8,57,20,000
3.	கூறு 3 – பெண் பயிற்சியாளர்கள் மற்றும் பிற பின்தங்கிய குழுக்களுக்கான மேம்பட்ட திறன் பயிற்சியை நிறைவு செய்தல்.	2,50,00,000
	மொத்தம்	**20,30,20,000**

6.1 மாவட்ட அளவில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்கள்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் மையம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆகியவற்றுடன் இணைந்து 31 மாவட்டங்களில் 49 மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்தியது. மாநிலம் முழுவதும் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துவதற்கு ரூ.124.80 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

6.2 மகப்பேறுக்குப்பின் தொழில் மற்றும் வேலைவாய்ப்பற்ற பெண்களுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் வழிகாட்டுதல்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் மையம் ஆகியவற்றுடன் இணைந்து 38

2023 ஏப்ரல் 11]

மாவட்டங்களில் மகப்பேறுக்குப் பின்பு வேலை இடைவெளியில் இருக்கும் பெண்களுக்கு ஆலோசனை மற்றும் தொழில் வழிகாட்டுதலை வழங்குவதற்கு இத்திட்டம் நடத்தப்பட்டது.

ரூ.32.00 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் 38 மாவட்டங்களில் உள்ள 15,287 பெண்களுக்கு ஆலோசனை மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன.

6.3 சங்கல்ப் (SANKALP) திட்டத்தின்கீழ் திருநங்கைகளுக்கான ஊக்கத் தொகையுடன்கூடிய திறன் பயிற்சி வாய்ப்புகள்

சங்கல்ப் (SANKALP) திட்டத்தின்கீழ், திருநங்கைகளின் வேலைவாய்ப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் அவர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களைக் கருத்தில் கொண்டு 14 திருநங்கைகளுக்கு வேலைவாய்ப்பு திறன் பயிற்சிகளும், 30 திருநங்கைகளுக்கு இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகன ஓட்டுநர் திறன் பயிற்சிகளும் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டன.

6.4 விளிம்பு நிலை சமுதாயங்களுக்கான சிறப்பு முன்னெடுப்புகள்

- ❖ *இந்தப் பயிற்சித் திட்டம் நலிவடைந்த கலைகளை, மேற்கொண்டு வரும் கலைஞர்கள் கைவினைப் பொருள் கலைஞர்கள் மற்றும் பொருளாதாரத்தில் நலிவடைந்த விளிம்புநிலை சமூகங்களின்கீழ் வரும் விண்ணப்பதாரர்களின் முன்னேற்றத்தினை மட்டுமே கவனம் செலுத்துகிறது.*
- ❖ *பயிற்சித் திட்டங்களின் விவரம் வருமாறு:*

வ. எண்	**பயிற்சித் திட்டத்தின் பெயர்**	**பயனாளிகள்**	**பயனாளிகளின் எண்ணிக்கை**
1	*நீலகிரி மாவட்டத்தில் பின்தங்கிய பழங்குடியினருக்கு லாந்தனா மரச்சாமான்கள் தயாரித்தல்.*	*பழங்குடி மக்கள்*	*50*

வ. எண்	பயிற்சித் திட்டத்தின் பெயர்	பயனாளிகள்	பயனாளிகளின் எண்ணிக்கை
2	வாழை நார் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி, மதுரை	பிற்படுத்தப்பட்ட / ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் மக்கள், விதவைகள் மற்றும் கிராமப்புற பெண்கள்	*50*
3	நீலகிரி மாவட்டத்தின் பழங்குடியின இளம் பருவத்தினருக்கான சுகாதார கல்வி மற்றும் மென் திறன்கள் திட்டம்	6 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான இளம்பருவ பழங்குடியின அரசுப் பள்ளி மாணவர்கள்	*500*
4	திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த கைவினைஞர் களுக்கான மேம்பட்ட திறன் பயிற்சி	அம்பாசமுத்திரத்தைச் சேர்ந்த கைவினைஞர்கள்	*50*
5	கன்னியாகுமரி கிராமப்புற மீனவப் பெண்களுக்குத் தேங்காய் ஓடு நகை மற்றும் கைவினைப் பயிற்சி	மீனவப் பெண்கள்	*50*
6	பாய் பின்னுதல் திறன் பயிற்சி பத்தமடை மற்றும் வீரவநல்லூர், திருநெல்வேலி மாவட்டம்	பத்தமடை பாய் நெய்திடும் பெண்கள்	*70*

2023 ஏப்ரல் 11]

வ. எண்	பயிற்சித் திட்டத்தின் பெயர்	பயனாளிகள்	பயனாளிகளின் எண்ணிக்கை
7	*தென்காசி மாவட்டம், சிவசைலம் இயற்கை சாயம் தயாரித்தல் திறன் பயிற்சி*	*பீடி தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள்*	*30*
8	*திருவள்ளூர் மாவட்டம், புலிகாட் பகுதி பனை ஓலை நெய்தல் திறன்*	*பெண் நெசவாளர்கள்*	*40*
9	*தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த கடலில் மீன்பிடி படகு இயந்திரத்தின் பராமரிப்பு மற்றும் மீனவர்களின் பாதுகாப்புப் பயிற்சி*	*மீனவர்கள்*	*100*
10	LED *விளக்கு தயாரிக்கும் பயிற்சி*	*பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகள்*	*30*
மொத்தம்			**970**

6.5 மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு வாழ்வாதார மையம் (Differently Abled Livelihood Centre DELC)

- *மாற்றுத் திறனாளிகளுக்கான வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையம்* (DELC) *என்பது ஒரு புதுமையான திட்டமாகும். இது மாற்றுத் திறனாளிகளுக்கான வாழ்வாதார வாய்ப்புகளை நெறிப்படுத்துவது மற்றும் அதிகப்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.*

[2023 ஏப்ரல் 11

- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், மாநில மாற்றுத் திறனாளிகள் துறை ஆணையருடன் இணைந்து, அந்த ஆணையத்தின் தலைமையகத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார மையத்தை (DELC) நிறுவி செயல்படுத்தி வருகிறது.
- இத்திட்டமானது, தமிழ்நாடு திறன் மேபாட்டுக் கழகம், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை இயக்குநருடன் (DWDA) இணைந்து ரூ.2.22 கோடி செலவில் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

6.6 திறன் தகுதியும் மற்றும் வேலைவாய்ப்பு சந்தைக்கு உகந்த நிலையும்

பயிற்சியாளர்களுக்கானப் பயிற்சி

பயிற்சியாளர் பற்றாக்குறையைப் போக்கவும், பயிற்றுவிப்புத் திறனை மேம்படுத்தவும் 1,200 பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இது பயிற்சியாளர்களின் திறன் இடைவெளியை நிரப்பிட, தரமான பயிற்சியாளர்களை உருவாக்கும். 765 பயிற்சியாளர்களுக்கு ஆயத்த ஆடைகள், சுகாதாரம், தானியங்கி, தோல், மின்னணுவியல், நீர் மேலாண்மை மற்றும் குழாய் அமைப்புப் பணி, மூலதனப் பொருட்கள் மற்றும் வேளாண் துறை ஆகிய துறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மதிப்பீட்டாளர்களுக்கான பயிற்சி

மதிப்பீட்டாளர்களின் பற்றாக்குறையைப் போக்கிடவும், மதிப்பீட்டாளர்களின் தரத்தை மேம்படுத்தவும் 300 மதிப்பீட்டாளர்களுக்கு மதிப்பீட்டாளர் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி மதிப்பீட்டாளர்களின் திறன் இடைவெளியை நிவர்த்தி செய்து மதிப்பீட்டாளர்களின் தரத்தை மேம்படுத்தும். இத்திட்டத்தின்கீழ் 14 மதிப்பீட்டாளர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பல பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

6.7 முன்னேற விழையும் மாவட்டங்களில் திறன் பயிற்சி

திறன் மேம்பாட்டில் பின்தங்கியுள்ள விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களின் திறன் மேம்பாட்டிற்காக

2023 ஏப்ரல் 11]
*சங்கல்ப் (*SANKALP*) திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ரூ.16.67 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.*

*இராமநாதபுரம் மாவட்டத்தில், 220 மீனவர்களுக்கு இயந்திர படகு பழுதுபார்ப்பு பயிற்சி, வாழ்வாதாரப் பயிற்சி (சுகாதார பெட்டகம் மற்றும் மெழுகுவர்த்தி தயாரித்தல்) மற்றும் சணல்மூலம் பாய் தயாரித்தல் பயிற்சி ஆகியவை வழங்கப்பட்டன. மேலும் விருதுநகர் மாவட்டத்தில் 40 நபர்களுக்கு கதிர்வீச்சு தொழில்நுட்பம் (*X-ray*) மற்றும் இரத்தக் கழிவகற்றல் தொழில்நுட்பப் (*Dialysis*) பயிற்சி ஆகியவை அளிக்கப்பட்டன.*

6.8 தொழில் முனைதல் மற்றும் பணி தகுதியாக்கத்திற்கான தொழில்முறை ஆயத்தநிலை திட்டம்

*அண்ணா பல்கலைக்கழகப் பொறியியல் கல்லூரியின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஐ.சி.டி அகாடெமி, நாஸ்காம் மற்றும் ஐ.பி.எம் நிறுவனங்களுடன் இணைந்து தொழில்நுட்பம் மற்றும் தொழில்முறை திறன்களுக்கான பயிற்சியளிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கால அளவானது 6 மாதங்களாகும். இதில் மாணவர்கள் செயற்கை நுண்ணறிவு (*Artificial Intelligence*), இயந்திரக் கற்றல் (*Machine Learning*), தரவு அறிவியல் (*Data Science*) மற்றும் இணைய வழிப் பயன்பாடு (*Internet of Things*), ஆகிய துறைகளில் நிகழ்நேரத் திட்டத்தில் பணிபுரிவது குறித்து கற்றுக்கொண்டனர். இது கட்டாய மதிப்புக்கூட்டப்பட்ட சிறப்புத் படிப்பாக அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தப் பயிற்சித் திட்டமானது பொறியியல் கல்லூரிகளில் 6-வது பருவநிலை மாணவர்களுக்கானது. இந்தத் திட்டத்தின்கீழ் அண்ணா பல்கலைக்கழகத்தின் கல்லூரியைச் சேர்ந்த 53,718 மாணவர்களும், 5,350 ஆசிரியர்களும் பயன் அடைந்துள்ளனர். மேலும் அவர்களுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.*

7. தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம் (TNASDC)

*சுகாதாரம், கட்டுமானம், வங்கி, நிதிச் சேவைகள் மற்றும் காப்பீடு, ஆட்டோமொபைல் மற்றும் ஆட்டோமொபைல் வாகன உதிரி பாகங்கள், தளவாடங்கள் (*Logistics*) போன்ற துறைகளில் உயர்தரத் திறன்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.*

[2023 ஏப்ரல் 11

தமிழ்நாடு முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் ஒரு பகுதியாக ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமையின் உதவியுடன் உயர் திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்க தமிழ்நாடு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக ரூ.100 கோடி (ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் பங்கு ரூ.50 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.50 கோடி) ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையங்களின் தற்போதைய பயிற்சி நிலவரம்

- *தொழில் துறை தொடர்பான மேம்பட்ட உயர்தர திறன் பயிற்சிகளை வழங்குதல்.*
- *தொழிற்சாலைகளுடன் இணைந்து பாடத்திட்டத்தை மேம்படுத்துதல்.*
- *வழிகாட்டுதல்களைப் பின்பற்றி துறை சார்ந்த படிப்புகளை மேம்படுத்துதல்.*
- *பல தொழில் துறைகளிலும் போதிய பயிற்சி பெற்ற மனிதவளம் கிடைப்பதை உறுதி செய்வதற்காகப் பிற நிறுவனங்களின் பயிற்றுநர்களுக்குப் பயிற்சி அளித்தல்* (Training of Trainers - ToT).
- *பயிற்சித் திறனை மேம்படுத்த தற்போதுள்ள உள்கட்டமைப்பு மற்றும் மனிதவளத்தைத் திறம்பட பயன்படுத்த அரசு/அரசுசார்பு நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றுதல்.*
- *தொழில் பழகுநர் பயிற்சி பெறுபவர்களுக்குத் தொழிற்சாலைகளுடன் தொடர்புகளை ஏற்படுத்துதல் மற்றும் இதர தொழில் சார்ந்த பயிற்சிகளுடன் இணைந்து பணியாற்றல்.*
- *வெளிநாட்டுக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து பயிற்சி பாடத் திட்டங்களை உருவாக்குதல்.*
- *தொழிற்சாலைகளின் உள்கட்டமைப்பு வசதியுடன் தேவையான திறன் பயிற்சி வழங்கி, திறன் தேவையைப் பூர்த்தி செய்தல்.*

2023 ஏப்ரல் 11]

7.1 தமிழ்நாடு உயர்திறன் மேம்பாட்டு மையங்களின் பயிற்சி நிலை

TNASDCs	இந்த ஆண்டில் பயிற்சி பெற்ற மொத்த விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 2022 – 2023
தமிழ்நாடு திறன் மேம்பாட்டு மையம் – சுகாதார நலன்.	*18771*
தமிழ்நாடு – போக்குவரத்து மற்றும் தளவாடங்களுக்கான உயர்திறன் மேம்பாட்டு மையம்.	*15957*
தமிழ்நாடு – வங்கி, நிதி சேவைகள் மற்றும் காப்பீட்டுக்கான உயர்திறன் மேம்பாட்டு மையம் (பி.எஃப்.எஸ்.ஐ.)	*13076*
தமிழ்நாடு – ஆட்டோ, ஆட்டோ உதிரிபாகங்கள் மற்றும் இயந்திர கருவிகளுக்கான உயர்திறன் மேம்பாட்டு மையம்.	*தொடங்கப்படவுள்ளது*
த மி ழ் ந ா டு – க ட் டு ம ா ன ம் மற்றும் உள்கட்டமைப்புக்கான உயர்திறன் மேம்பாட்டு மையம்.	*தொடங்கப்படவுள்ளது*

8. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் சிறப்பு திட்டங்கள்

- *தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசித்து வரும் 10-வது, 12-வது மற்றும் பட்டப்படிப்பை முடித்தவர்களின் வேலைவாய்ப்பு தேவைகளை நிறைவு செய்திட அழகுக்கலை பயிற்சி, தையல் பயிற்சி, வாகன ஓட்டுநர் பயிற்சி மற்றும் மோட்டார் மெக்கானிக் போன்ற திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகப் பயிற்சி வழங்குநர்கள்மூலம் அளிக்கப்படுகின்றன.*

- *சட்டக் கல்லூரி மாணவர்களுக்குத் தொழில் முறையிலான ஆங்கிலத் திறன் பயிற்சிகள் கடந்த ஆண்டு முன்னோட்ட அடிப்படையில் 3 மாவட்டங்களில்,*

280 மாணவர்களுக்கு அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு 14 சட்டக் கல்லூரிகளில் 2920 மாணவர்களுக்கு மேலாண்மை & தொழில்முனைவு மற்றும் தொழில்முறை துறை திறன் குழுமத்துடன் இணைந்து பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்மூலம் முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக மாவட்ட வாரியாக உள்ள இலங்கைத் தமிழர்களுக்குத் திறன் பயிற்சி அளித்திடும் வகையில் 32 மாவட்டங்களில் உள்ள 2890 பயனாளிகளுக்குப் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

❖ மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களின் சட்டமன்ற அறிவிப்பின்மூலம் அனைத்து வகை சிறைவாசிகளின் மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்புக்காக, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின்மூலம், சிறையிலுள்ள தண்டனை மற்றும் விசாரணைக் கைதிகள் 20 நபர்களுக்கு விடுதலைக்குப்பின் வேலைவாய்ப்பு பெற்றிடும் வகையில் தையல் பயிற்சி அளிக்கப்பட்டது.

❖ தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் 2022 – 2023 ஆம் ஆண்டு 2500 இளைஞர்களுக்கு செடிகளின் ஒட்டுதல் முறை, பதியம் போடுதல் முறை, கிளை கத்தரித்தல் முறை, பசுமைக் குடில் பராமரித்தல், நுண்நீர்ப் பாசன அமைப்பு பராமரித்தல், தோட்டக்கலை இயந்திரங்கள் இயக்குதல், வேளாண் இயந்திரங்கள் பழுது நீக்குதல் மற்றும் சூரிய சக்தியால் இயங்கும் பம்பு செட்டுகளைப் பழுது நீக்குதல் போன்ற பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

❖ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு முன்னெடுப்பாக, மாற்றுத் திறனாளிகளுக்கான திறன் பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில், இந்திய மென்பொருள் சேவை நிறுவனங்களின் கூட்டமைப்பான நாஸ்காம் (National Association of Software and Services Companies – NASSCOM) உடன் இணைந்து மாற்றுத்திறனாளிகளுக்கு கட்டணமில்லா

இணைய வழித் திறன் பயிற்சி வழங்குகிறது. தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் ஒவ்வொரு மாற்றுத் திறனாளிப் பயனாளிக்கும், பயிற்சியின் போது தனிநபர் வழிகாட்டுதல் வழங்க வசதிகள் ஏற்படுத்தித் தருகின்றன. பயிற்சியின் முடிவில், பயிற்சி பெற்ற ஒவ்வொருவருக்கும் நாஸ்காம் நிறுவனம் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது. மேலும் இத்திட்டத்தின்மூலம், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் 100 மாற்றுத் திறனாளிகளுக்கு திறன் பயிற்சி பழகுவதற்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

9. நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் 4-ன்படி அனைத்து ஆண்களும், பெண்களும் குறைந்த செலவில் தரமான தொழில்நுட்ப மற்றும் தொழில் கல்வி பெறுவதை உறுதி செய்திட, பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளைத் தேசியத் திறன் மேம்பாட்டுக் கழகத் தரவுகளின் அடிப்படையில் (NSQF) தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் கட்டணமின்றி வழங்கி வருகிறது.

நீடித்த வளர்ச்சி இலக்குகள் 4.4-ன் வழிகாட்டுதல்படி தமிழ்நாடு அரசானது பல முன்னணித் துறைகளில் திறன் பயிற்சி திட்டங்களை அளிப்பதோடு மட்டுமல்லாமல் கணிசமான திறன் வாய்ந்த மனித வளத்தை அதிகரிக்க பிற திறன் பயிற்சித் திட்டங்களான PMKVY, குறு, சிறு மற்றும் நடுத்தர துறைக்கான (MSME) திறன் பயிற்சி, உயர் திறன் மேம்பாட்டுக் கழகங்கள் (ASDC), SIEMENS நிறுவனத்துடன் இணைந்து நடைபெறும் பல்நோக்குத் திறன் மேம்பாட்டு மையம் (MSDC), உயர்திறனுக்கான பயிற்சித் திட்டங்களின்மூலம் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. முன்னணித் துறைகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், பிரதம மந்திரியின் திறன் மேம்பாட்டுத் திட்டம் (Pradhan Mantri Kaushal Vikas Yojana) போன்ற பல்வேறு திட்டங்களின்மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்குத் திறன் பயிற்சி, ஐந்து துறைகளில் திறன் மேம்பாட்டு மையம், பல்திறன் மேம்பாட்டு மையம் (MSDC), SIEMENS ஆகியன திறன் பெற்ற மனித வளத்தை கணிசமாக அதிகரிக்க உயர்தர திறன் பயிற்சி அளிக்கும் மையங்களாகும்.

நீடித்த வளர்ச்சி இலக்குகள் 4.4.1-ன்படி குறுகிய கால பயிற்சியில் சான்றிதழ் பெற்ற இளைஞர்களின் விகிதாச்சாரத்தை உறுதி செய்யும் வகையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், ஏற்கெனவே உள்ள திறன் பெற்ற நபர்களை மதிப்பீடு செய்து சான்றிதழ் வழங்க முன் கற்றலுக்கு அங்கீகாரம் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது.

10. நான் முதல்வன்

'நான் முதல்வன்' என்பது தமிழ்நாடு அரசின் மாபெரும் திறன் மேம்பாட்டு முன்னெடுப்பாகும். திறன் சார்ந்த பயிற்சிகளை அளிக்கும் ஒருங்கிணைப்பு தளமாக இது தொடங்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்புத் திறனை மேம்படுத்துவதற்குத் தேவையான தகுதிகள், திறன்கள் மற்றும் நிபுணத்துவத்தை மாணவர்களுக்கு வழங்கும் பாடத்திட்டங்கள் கல்லூரிப் பருவத்திலேயே சிறந்த பயிற்சி நிறுவனங்களின்மூலம் திறன் பயிற்சிகள் ஆகியவற்றை வழங்கும் விதமாக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், வேலையளிப்பவர்கள் தங்களது நிறுவனம் மற்றும் தொழிற்சாலைகளில் உள்ள திறன் இடைவெளியைச் சரி செய்ய தேவையான திறன்களுக்கான பயிற்சிகளை மாணவர்களுக்கு அளிக்கவும் இத்திட்டம் வழிவகை செய்கிறது.

'நான் முதல்வன்', மாணவர்களுக்கு அவர்கள் வேலை செய்ய விரும்பும் தொழில் மற்றும் துறைகளுக்குப் பொருத்தமான திறன் படிப்புகளை வழங்குகிறது. இந்தப் படிப்புகள் மாநிலம் முழுவதும் 18-35 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்காக வழங்கப்படுகின்றன. தேசிய மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ் பெற்ற பயிற்சி வகுப்புகள், அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள்மூலம் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலமாக வளர்ந்து வளரும் தொழில்நுட்பத் துறை, உற்பத்தி, சுகாதாரம், ஊடக மற்றும் பொழுதுபோக்கு, பசுமை சார்ந்த வேலைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் சார்ந்த வேலைகள், வணிகம், அழகியல், கட்டுமானம், மின்னணுவியல் மற்றும் மின்னணு சாதனங்கள், உணவுப் பொருட்கள் தயாரித்தல், போக்குவரத்து போன்ற பல்வேறு துறைகளில் பயிற்சி வழங்கப்படுகிறது.

10.1 தொலைநோக்குப் பார்வை

மாநிலத்தில் திறன் மேம்பாட்டு முயற்சிகளை முறைப்படுத்தி, வளர்ந்து வரும் சந்தைத் தேவைக்கு ஏற்ப திறன் பயிற்சி அளிப்பது

2023 ஏப்ரல் 11]

மட்டுமின்றி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் அளித்து, இந்தியாவிலும், உலக அளவிலும் மாறிவரும் தொழில் சூழலில் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் கற்றலுக்கு அவர்களைத் தயார்படுத்துதல். மேலும், தமிழ்நாட்டு மாணவர்கள் அவர்கள் விரும்பும் திறன் பயிற்சிகளைப் பெற வாய்ப்புகளையும், நிலையான வேலைவாய்ப்பைப் பெறுவதற்கான வழிமுறைகளையும் தொடர்ந்து அளித்தல்.

தமிழ்நாட்டு இளைஞர்கள் தங்களுக்கு விருப்பமான திறன்களை வளர்த்துக் கொள்ளவும், நிலையான வேலைவாய்ப்புகளை பெறவும் தொடர்ந்து வாய்ப்புகளை உருவாக்கித் தருதல்.

10.2 குறிக்கோள்

திறன் மேம்பாடு தொடர்பான தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் முயற்சிகளை ஒன்றிணைத்து இவற்றைத் தொலைநோக்குடனும் ஒருங்கிணைந்த முன்னெடுப்புகளுடனும் தேவையான அளவில் வழங்குதல் பொதுத் துறை மற்றும் தனியார் துறையின் முன்னெடுப்புகளை ஊக்குவித்து, வணிக நிறுவனங்களின் சமூகப் பொறுப்புணர்வையும் (Corporate Social Responsibility – CSR) *இணைத்து வேலைவாய்ப்பை அளிக்கக் கூடிய திறன் பயிற்சிகளை வழங்குதல்.*

10.3 திட்டத்தின் நோக்கம்

நான் முதல்வன் திட்டம் மூன்று முக்கிய குறிக்கோள்களுடன் தொடங்கப்பட்டுள்ளது.

- ❖ *மாணவர்கள் பொருத்தமானத் தொழில் பாதைகளை அடையாளம் காணவும், பொருத்தமானத் திறன்களை மேம்படுத்த அறிவு சார்ந்த பயிற்சியை அணுகவும், வேலைவாய்ப்புகளைப் பெறவும் உதவுதல்.*

- ❖ *மாணவர் பதிவு, தகுதி சோதனை, ஆவண மேலாண்மை, பாடப் பரிந்துரை, பயிற்சி மேலாண்மை மற்றும் பாடச் சான்றிதழ்கள் போன்ற மேலாண்மை தொடர்பான அத்தியாவசியப் பணிகளைக் கல்லூரிகளுக்கு எளிதாக்குதல்.*

- ❖ தொழில் நிறுவனங்கள் தங்களது உள்ளுறைப் பயிற்சி, தொழிற்பழகுநர் பயிற்சி, பயிற்சித் திட்டங்கள் மற்றும் வேலைவாய்ப்பு முன்னெடுப்புகள்மூலம் திறன் தொகுப்பை உருவாக்கி, அதன் பயன்பாட்டை உறுதி செய்தல்.

10.4 மாணவர்களுக்கான வாய்ப்புகள்

- ❖ தொழில் நிறுவனம் சார்ந்த திறன் பயிற்சிகள், தொழில்நுட்பத் தனித்திறமைகள் மற்றும் நிறுவனம் சார்ந்த திறன்களுக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துதல்.
- ❖ சர்வதேச புகழ்பெற்ற பல்கலைக்கழக நிறுவனங்களுடன் இணைந்து ஆங்கில மொழிப் பயிற்சியை கல்லூரியில் மாணவர்களுக்கு வழங்குதல்.
- ❖ அனைத்து மாணவர்களுக்கும் தொழில்சார்ந்த படிப்புகளைப் பயிலும் வாய்ப்பளிக்க, புகழ்பெற்ற பயிற்சி நிறுவனங்களைப் பயிற்சி அளிக்கும் இணைய வழி தளத்தின் ஒரு பகுதியாக இணைத்தல்.
- ❖ பல்கலைக்கழக, கல்லூரி நிபுணர்கள் மற்றும் உலகளாவிய தொழில் துறை வல்லுநர்கள்மூலம் மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல்.
- ❖ ஆசிரியர்களுக்குத் தேவையான மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி முயற்சிகள் ஆகியவற்றை தரமான கல்விச்சூழல் மூலமாக அளித்து, நாளைய தலைவர்களை முறையாக உருவாக்குதல்.

10.5 கல்லூரிகளுக்கான வாய்ப்புகள்

- ❖ தொழில்நுட்ப நிறுவனங்களுடன் இணைந்து திறன்பயிற்சிகளை வழங்குதல்.
- ❖ குறைந்த கட்டணத்தில் தொழில்நுட்ப கல்விச் சான்றிதழ்கள் வழங்குதல்.
- ❖ ஆசிரியர் பயிற்சித் திட்டங்களை நடத்தி அவர்களைத் தொழிற்சாலைக்கு உகந்த பயிற்றுநர்களாக உருவாக்குதல்.
- ❖ கல்லூரி வளாகத்தில் திறன் சார்ந்த முயற்சிகளை ஏற்படுத்துதல்.

2023 ஏப்ரல் 11]

- ❖ உயர் தொழில்நுட்பத் துறைகளின் வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்பதற்கான வசதிகளை ஏற்படுத்துதல்.
- ❖ இணையவழி பயிற்றுவித்தலை மேம்படுத்துதல்.
- ❖ தொழில் மேம்பாட்டுப் பட்டறைகள்/தொழிற் நிறுவனங்களைப் பார்வையிடுதல்
- ❖ இணைய வழிப் பாடங்களைக் கற்க ஏற்ற இணைப்பை ஏற்படுத்துதல்.
- ❖ நிரலோட்டத்தில் (Hackathon) பங்கேற்க வாய்ப்பு ஏற்படுத்துதல்

10.6 தொழிலகங்களுக்கான வாய்ப்புகள்

- ❖ தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வித் துறையையும் இணைக்கும் ஒரு புகழ்பெற்ற மற்றும் சக்திவாய்ந்த அமைப்பு.
- ❖ உள்ளிருப்புப் பயிற்சி, வேலைசார்ந்த பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புகளுக்கான பயிற்சி பெற்ற பணியாளர்களின் தொகுப்பு.
- ❖ வேலைவாய்ப்பு முகாம்களில் பங்குபெற ஏதுவாக ஒரு குறிப்பிட்ட தொழில்நுட்பம்/திறன் பகுதிக்கான படிப்புகள்/கற்றல் உள்ளடக்கத்தை தேவைக்கேற்ப மாற்றத் தகுந்த வகையில் வழங்குதல்.
- ❖ திறன் இடைவெளிகளைக் குறைக்க, பயிற்சிகளைத் தேவைக்கேற்ப சுலபமாக வடிவமைப்பது.
- ❖ அரசாங்கத்துடன் இணைந்து மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கான உள்ளீடுகளைப் பகிர்ந்து கொள்ளும் அமைப்பு.

10.7 பொறியியல் கல்லூரிகளுக்கான "நான் முதல்வன்" திட்டம்

தமிழ்நாடு அரசின் திறன் மேம்பாட்டு முன்னெடுப்புகளின்கீழ், 'நான் முதல்வன்' திட்டத்தின்மூலம் பொறியியல் மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் திறன் சார்ந்த பயிற்சிகள்

வழங்கப்பட்டு வருகின்றன. இதன் முதன்மையான நோக்கம் 21 ஆம் நூற்றாண்டின் உலகளாவிய தொழில் துறை தேவையைக் கருத்தில் கொண்டு மாணவர்களை மேம்படுத்துவதாகும். நமது மாணவச் சமுதாயத்திற்கு உரிய திறன்களை உறுதி செய்யும் வகையில் கல்லூரி பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. 2023 ஆம் கல்வியாண்டில் 11 தொழில் துறை பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து 19 பாடப் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அடுத்த பருவத்திற்கு 23 பாடப் பிரிவுகள், 15 தொழில் துறைப் பயிற்சி நிறுவனங்களுடன் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்களின் கற்றல் மற்றும் திறன் பெறும் ஆற்றலை மேம்படுத்தும் வகையில் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு முறையான திறன்களை உறுதி செய்ய தொழில் துறையில் திகழும் நடப்புகள் தொழில் துறை பயன்பாட்டு நடைமுறைகள் மற்றும் மாதிரிகள் பயன்படுத்தப்படுகின்றன.

10.7.1 பொறியியல் கல்லூரி முதல்வர்கள் மற்றும் நேரடி தொடர்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு திட்டக் குறிக்கோளை உணர்த்துதல்

செப்டம்பர் 12 முதல் 16, 2022 வரை ஏழு பிராந்திய மையங்களில் அனைத்து பொறியியல் கல்லூரி முதல்வர்கள் மற்றும் நேரடித் தொடர்பு அலுவலர்கள் (Single Point of Contact)-க்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

10.7.2 பயிற்றுநர்களுக்கான பயிற்றுவிப்பு மேம்பாட்டுத் திட்டம்

அக்டோபர் 2022 இல் 6986 பொறியியல் பேராசிரியர்களுக்கு 2022-2023 ஆம் கல்வியாண்டில் ஒற்றை எண் (Odd) பருவத்திற்கான பேராசிரியர் பயிற்சி முகாம் (Faculty Development Program – FDP) நடத்தப்பட்டது.

பிப்ரவரி 2023-ல் 5596 பொறியியல் ஆசிரியர்களுக்கு 2022-2023 கல்வியாண்டின் இரட்டை (Even) பருவத்திற்கான ஆசிரியர் பயிற்சி முகாம் (Faculty Development Program) நடத்தப்பட்டது.

2023 ஏப்ரல் 11]

10.7.3 பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கானப் பயிற்சித் திட்டத்தினைச் செயல்படுத்துதல் (முக்கியப் புள்ளி விவரங்கள்)

- ❖ *பதிவு செய்யப்பட்ட பொறியியல் கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 483 ஆகும்.*
- ❖ *பதிவு செய்யப்பட்ட பொறியியல் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 4,94,258 ஆகும்.*
- ❖ *அங்கீகரிக்கப்பட்ட தொழில் துறை பயிற்சி வழங்குநர்களின் மொத்த எண்ணிக்கை 26 ஆகும்.*
- ❖ *கட்டாய திறன் படிப்புகளின் மொத்த எண்ணிக்கை 42 ஆகும்.*

10.7.4. 2022-2023 கல்வியாண்டில் ஒற்றைப் பருவங்களுக்கானத் திறன் அடிப்படை கொண்ட பயிற்சிகளின் விவரம்

வ.எண்	பாடப்பிரிவு	பயிற்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை
1.	Office Fundamentals	82287
2.	Communicative English	72974
3.	Project Based Learning – AI,ML, FS, IOT	53718
4.	Machine Learning (Mech.)	24207
5.	Big Data	9572
6.	Cloud Essentials	8678
7.	Electric Vehicle (Mech.)	6970
8.	Full Stack	5926
9.	Robotics simulation (Hybrid)	4397
10.	Electric Vehicle (EEE)	4278
11.	Other Courses	32145
மொத்தம்		**305152**

[2023 ஏப்ரல் 11

10.7.5. 2022-2023 கல்வியாண்டில் இரட்டைப் பருவநிலைகளுக்கானத் திறன் அடிப்படை கொண்ட பயிற்சிகளின் விவரம்

வ. எண்	பாடப்பிரிவு	பயிற்சிபெற்ற மாணவர்களின் எண்ணிக்கை
1.	Network Essentials	32000
2.	Professional Readiness for employment	24547
3.	Robotic Process & Industrial Automation	16795
4.	Smart & Advanced Manufacturing – Design Simulation	12024
5.	Network Engineering	9431
6.	Block Chain Development	7946
7.	Digital Marketing	7072
8.	Product Design Engineering and Modelling	5678
9.	EV Design	4971
10.	Foundation of AI, ML, FS	4915
11.	Other Courses	29571
	மொத்தம்	**154950**

10.7.6 மண்டல வாரியான "நான் முதல்வன்" பயிற்சித் திட்டத்தில் பதிவு செய்த பொறியியல் கல்லூரி மாணவர்களின் விவரம்

வ. எண்	மண்டலத்தின் பெயர்	மாவட்டங்கள்	கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை	மாணவர்களின் மொத்த எண்ணிக்கை
1	*சென்னை மண்டலம்*	*செங்கல்பட்டு, சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர்*	*81*	*130752*

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மண்டலத்தின் பெயர்	மாவட்டங்கள்	கல்லூரி களின் மொத்த எண்ணிக்கை	மாணவர் களின் மொத்த எண்ணிக்கை
2	மத்திய மண்டலம்	அரியலூர், திண்டுக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், நாகப்பட்டினம்	74	75496
3	வடக்கு மண்டலம்	திருவண்ணாமலை, ராணிப்பேட்டை, வேலூர், விழுப்புரம், திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, கடலூர்	41	28449
4	மேற்கு மண்டலம்	சேலம், நீலகிரி, திருப்பூர், நாமக்கல், கிருஷ்ணகிரி, ஈரோடு, தர்மபுரி, கோயம்புத்தூர்	97	188253
5	தெற்கு மண்டலம்	திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர், தேனி, தென்காசி, சிவகங்கை, இராமநாதபுரம், மதுரை, கன்னியாகுமரி	90	76022
மொத்தம்			**383**	**498972**

[2023 ஏப்ரல் 11

10.8 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளுக்கான "நான் முதல்வன்" பயிற்சித் திட்டம்

தமிழ்நாட்டிலுள்ள 10 பல்கலைக்கழகங்களின்கீழ் இயங்கி வரும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களுக்கு, நான் முதல்வன் திட்டம் ஜனவரி 2023 முதல் தொடங்கப்பட்டது. நான் முதல்வன் திட்டத்தின்கீழ் மொழித் திறன், கணினித் திறன் மற்றும் பல்வேறு துறை சார்ந்த திறன் பயிற்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றைப் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத்தில் 2 மதிப்பீடுகள் கொண்ட கட்டாயப் பாடமாக்க பரிந்துரை செய்யப்பட்டன.

10.8.1 பயிற்றுநர்களுக்கான பயிற்றுவிப்பு மேம்பாட்டுத் திட்டம்

குழுமக் குழு கூட்ட ஆலோசனையின்படி, அனைத்து கட்டாய பாடத்திட்டங்களிலும் திறன் முயற்சிகளின் நிலைத்தன்மையை உறுதிசெய்ய கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் ஆசிரியர் மேம்பாட்டு நிகழ்ச்சி (FDP) *இணைக்கப்பட்டது. எனவே, கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களுக்கான* FDP *திட்டமிடப்பட்டு 30.01.2023 – 11.02.2023 வரை மாநிலம் முழுவதும் உள்ள அந்தந்தப் பல்கலைக்கழகங்களில் நடத்தப்பட்டது. திறன் பயிற்சியின் தேவைக்கேற்ப 2 நாட்கள் முதல் 5 நாட்கள் வரை நேரடி வகுப்பறைப் பயிற்சியாகவும் அதனை தொடர்ந்து தேவையின் அடிப்படையில் மெய்நிகர் / இணையவழிப் பயிற்சிகளாகவும் நடத்தப்பட்டது.*

உயர் கல்வித் துறையின் ஒத்துழைப்போடு அந்தந்தத் துறை சார்ந்த பயிற்சிகளில் அத்துறை சார்ந்த பேராசிரியர்கள் கலந்துகொள்வது உறுதி செய்யப்பட்டது. எனினும், இப்பயிற்சியில் கலந்துகொள்ள தவறிய பேராசியர்களுக்கு வாரந்தோறும் மெய்நிகர்/இணையவழிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதுவரை 9183 ஆசிரியர்கள் வளர்ந்து வரும் தொழில் துறைகளில் பயிற்சி பெற்றுள்ளனர்.

10.8.2 "நான் முதல்வன்" திட்டத்தில் பயன்பெறும் கல்லூரிகள் மற்றும் மாணவர்கள் விவரம்

'நான் முதல்வன் திட்டம்' 2022-2023 ஆம் ஆண்டில், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் அரசு தன்னாட்சி கல்லூரிகள், தன்னாட்சி அல்லாத அரசு கல்லூரிகள், தன்னாட்சி அல்லாத

2023 ஏப்ரல் 11]

அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் தன்னாட்சி அல்லாத தனியார் கல்லூரிகள் ஆகிய நான்கு வகையான கல்லூரிகளில் பயிற்சி வழங்கியது. இத்திட்டத்தின்கீழ் மொத்தம் 842 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் பயனடைந்துள்ளன. இதன்மூலம் மொத்தம் 8,11,338 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். அவற்றின் விவரம் பின்வருமாறு:

வ. எண்	**நான் முதல்வன் திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லூரி வகைகள்**	**பயனடைந்த கல்லூரி எண்ணிக்கை**
1.	தன்னாட்சி அல்லாத அரசு கல்லூரிகள்	162
2.	அரசு தன்னாட்சி கல்லூரிகள்	19
3.	தன்னாட்சி அல்லாத அரசு உதவி பெறும் கல்லூரிகள்	65
4.	தன்னாட்சி அல்லாத தனியார் கல்லூரிகள்	596
மொத்தம்		**842**

வ. எண்	**பருவம்**	**மாணவர்களின் எண்ணிக்கை**
1.	2ND SEMESTER	2,73,483
2.	4TH SEMESTER	2,90,577
3.	6TH SEMESTER	2,47,278
மொத்தம்		**8,11,338**

11. மேலும் திறன் அளித்தல், வேலைக்கான வழிகாட்டல் மற்றும் வேலைவாய்ப்புக்கான நான் முதல்வன் இணைய முகப்பு

"நான் முதல்வன்" என்னும் மாபெரும் திறன் பயிற்சி இணையதள முகப்பு தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்ட கற்றல் மேலாண்மை தளமாகும். நான் முதல்வன் திட்டம் ஒரு தகவல் திறன் தளத்தின்மூலம் இயக்கப்படுகிறது. அதில் பதிவு

[2023 ஏப்ரல் 11

செய்யப்பட்ட மாணவர்கள், இணைக்கப்பட்ட பாடங்கள், இணையவழி பாடங்களின் உள்ளடக்கம், வழிகாட்டுதல் மற்றும் திறன் தேடல் ஆகியன இடம் பெற்றுள்ளன. இது கல்லூரி மாணவர்களுக்கு அவர்கள் விரும்பும் வேலையை அடைவதற்குத் தேவையானத் தகுதிகள், திறன்கள் மற்றும் நிபுணத்துவத்துடன் கூடிய படிப்புகளை வழங்க உதவுகிறது. நான் முதல்வன் தொழில் துறைகளுக்குத் தேவையான திறன்களில் பயிற்சியை மேற்கொண்ட மாணவர்களைத் தொழில் துறையோடு இணைக்கும் பணியை மேற்கொண்டுள்ளது.

திறன் மேம்பாட்டிற்கெனத் தனித்துவமாகச் செயல்பட்டு வரும் நான் முதல்வன் இணையதளம் (www.naanmudhalvan.tn.gov.in) *எளிதாக பயன்படுத்தக் கூடிய வகையில் செயல்படுகிறது.*

தரமானப் பயிற்சி மற்றும் பயிற்சித் திட்டத்தைச் சீராகச் செயல்படுத்துவதை உறுதி செய்யும் தகவல் களஞ்சியமாக இது செயல்படுகிறது. அனைத்து மாணவர்களும் கல்லூரிகளால் இணையதளத்தில் பதிவு செய்யப்பட்டு, அவர்களுக்கான கட்டாயப் பாடம் ஒதுக்கப்படுகிறது. இதன்மூலம் மாணவர் பதிவு, பாடங்கள் உள்ளிட்டவை வழங்கப்படுகின்றன. பாடத்திட்டங்கள் முடிந்ததும் மாணவர்களுக்கு ஆன்லைன்மூலம் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

11.1 எதிர்காலத் தொழில் மற்றும் வேலைவாய்ப்புக்கு வழிவகுக்கும் திறன் பயிற்சி திட்டம்

நான் முதல்வன் இணையதளத்தில் மாணவர்களின் விவரங்களைப் பின்வரும் வகைகளில் பட்டியலிட வசதி செய்கிறது இதன் அடிப்படையில் தேவையானப் பயிற்சிகள் வழங்கலாம்.

- ❖ *வேலைவாய்ப்பு பெற்றவர்கள்*
- ❖ *வேலை தேடுதல்*
- ❖ *தொழில்முனைவு (அல்லது) குடும்ப வணிகம்*
- ❖ *உயர் கல்வி படிப்புகள்*
- ❖ *போட்டித் தேர்வுகள்*

2023 ஏப்ரல் 11]

11.2 வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சித் தொகுப்பு – "நான் முதல்வன்"

நான் முதல்வனின் வேலைவாய்ப்பு தளம், மாணவர்களுக்குத் தகுதியான வேலைவாய்ப்புகளைப் பெற உதவுகிறது. நான் முதல்வன் ஒருங்கிணைக்கப்பட்ட வேலைவாய்ப்புத் தளம் தொழில் நிறுவனங்கள் மற்றும் மாணவர்கள் இருவரையும் ஒன்றிணைக்கிறது.

இந்த வேலைவாய்ப்பு இணையதளத்தில் தொழில் நிறுவனங்கள் பல்வேறு துறைகளின் கீழ் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம். பதிவுசெய்யப்பட்ட தொழில்கள், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் (Micro Small and Medium Entreprenurs), *தமிழ்நாடு அரசு தொழில் முன்னேற்றக் கழகம்* (State Industries Promotion Corporation of Tamil Nadu), *தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநரகம் (*Directorate of Industrial Safety and Health), *தமிழ்நாடு புத்தொழில் நிறுவனம், தமிழ்நாடு மின்னணு நிறுவனம்* (Electronics Corporation of Tamil Nadu), Guidance Tamil Nadu *போன்ற பல்வேறு துறைகளால் சரிபார்க்கப்படுகின்றன. சரிபார்க்கப்பட்ட தொழில் துறையினர் வேலைவாய்ப்பு முகாம்களில் பங்கேற்கலாம். மாணவர்களின் திறன்கள் அடிப்படையில் விண்ணப்பதாரர்களைத் தேடும்போது அவர்களை நிறுவனங்கள் கண்டறிய முடியும்.*

வேலை வழங்குநர்கள், மாணவர்களைத் தெரிவு செய்யவும் தொழில் துறையின் தேவைகளுக்கேற்ப வேலைவாய்ப்புகளை அறிவிக்கவும் அனுமதி வழங்கப்படுகிறது. மாணவர்கள் திறன் தொகுப்பின் அடிப்படையில் வேலைவாய்புகளைத் தெரிந்து விண்ணப்பிக்கலாம். தொழில் நிறுவனங்கள் வேலைவாய்ப்பு இணையதளம்மூலம் மாணவர்களுக்குப் பணி நியமனக் கடிதத்தை வழங்கிக்கொள்ளலாம்.

11.3 "நான் முதல்வன்" திறன் பதிவேடு

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் நான் முதல்வன் திட்டத்தின்கீழ் பயிற்சி பெற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை விவரங்கள் அடங்கிய திறன் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. இது தொழில் துறைகள் ஒரு குறிப்பிட்ட திறன் தொகுப்பில் உள்ளவர்களைத் தெரிந்துகொள்ள உதவும் மற்றும் தொழிற் சந்தையில் கிடைக்கும் வேலைவாய்ப்புகளை

அனைத்து மாணவர்களுக்கும் (கிராமப்புற மற்றும் நகர்ப்புர) வெளிப்படுத்தும் இந்தத் திறன் பதிவேடு கிராமப்புறங்களை உலகளாவிய வேலைவாய்ப்புகளுடன் இணைக்க உதவும்.

11.4 நிரலோட்டம் (Hackathon) மூலம் படைப்பாற்றல் மற்றும் புத்தாக்கத்தை வெளிக்கொணர்தல்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், நான் முதல்வன் திட்டத்தின்கீழ் அன்றாட வாழ்க்கையில் மற்றும் தொழிற் நிறுவனங்களில் எதிர்கொள்ளும் சில அழுத்தமானப் பிரச்சினைகளுக்கு புதுமையான தீர்வுகளைக் கண்டறியும் வகையில் நான் முதல்வன் நிரல் திருவிழா தளத்தை உருவாக்கியுள்ளது. மைக்ரோசாப்ட், கூகுள், ஆட்டோடெஸ்க் போன்ற பல்வேறு முன்னணி நிறுவனங்களுடனும், ஐஐடி-பாம்பே, ஐஐடி-மெட்ராஸ் முதலிய முன்னணிக் கல்வி நிறுவனங்களுடனும் இனணந்து பல நிரலோட்டப் போட்டிகள் மற்றும் உள்ளுரைப் பயிற்சிகள் நடந்து வருகின்றன.

இந்த முன்னெடுப்பானது தமிழ்நாட்டிற்குப் படைப்பாற்றல், புதுமை, வேலைவாய்ப்பு மற்றும் தொழில் முனைவோர் குறித்து உறுதியானத் தீர்வுகளை வழங்க உதவும். இது 21 ஆம் நூற்றாண்டின் திறன் தேவை மற்றும் வேலைவாய்ப்பின் முக்கிய சவால்களை எதிர்கொள்ளும் நிலையை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது நிறுவனங்களுக்குத் தொழில்துறைக் கோரிக்கைகளைப் புரிந்துகொள்வதற்கும் தற்போதைய தேவைக்கேற்ப அவர்களின் கல்விமுறையை மறுசீரமைப்பதற்கும் வாய்ப்பளிக்கிறது.

11.4.1 சென்னையிலுள்ள இந்தியத் தொழில்நுட்ப கழகத்தின் (ஐஐடி மெட்ராஸ்) ஆராய்ச்சிப் பூங்கா மாணவர்களுக்கானப் பணிசார்ந்த பயிற்சித் திட்டம்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் நான் முதல்வன் திட்டத்தின்மூலம் இந்திய தொழில்நுட்பக் கழகத்தின் ஆராய்ச்சி பூங்கா உடன் இணைந்து மாணவர்களுக்கான உள்ளுறைப் பயிற்சி (Internship) திட்டத்தை நடத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்குத் தொழில்துறை நிபுணர்கள்மூலம் வழிகாட்டி, இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் ஆராய்ச்சிப் பூங்காமூலம் சான்றிதழ்கள் வழங்கப்படும். மேலும்,

2023 ஏப்ரல் 11]

ஐஐடி மெட்ராஸின் ஒத்துழைப்புடன் பின்னோக்குப் பொறியியல் குறித்த அனுகுமுறையை வளர்ப்பதற்காக அடுத்த பருவம் முதல் கற்றல் திட்டம் ஒன்று தொடங்கப்பட உள்ளது.

11.4.2 மும்பையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழகத்துடன் (ஐஐடி மும்பை) FOSSEE எனும் மென்பொருள் கல்வியில் இணைந்து செயல்படுவது

*தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஐஐடி பாம்பே போசி (*IIT Bombay*) (*Free/Libre and Open Source Software for Education*) உடன் இணைந்து நடத்தப்பட்ட நிரலோட்டத்தில் மாணவர்கள் இலவச மற்றும் திறந்த மூல மென்பொருளையும் தொலை உணர்வு தகவல் தரவையும் (*Remote Sensing Data*) பயன்படுத்தி வரைபடங்களை உருவாக்குவார்கள்.*

அதிக எண்ணிக்கையிலானப் பங்கேற்பு அணிகளைக் கொண்ட கல்லூரிகள் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கீகரிக்கப்படும். மேலும், இப்போட்டியில் சிறப்பான வகையில் செயலாற்றும் திறன் கொண்ட மாணவர்கள் கண்டெடுக்கப்பட்டு அவர்களுக்கு IIT Bombay-*யில் உள்ளுறைப் பயிற்சிகள் வழங்கப்படுவதுடன் வேலைவாய்ப்பு திருவிழாவில் தனிப்பட்ட முறையில் அழைக்கப்படுவார்கள்*

11.4.3 மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தின் (ஐஐடி மும்பை) நிகழ்நிலையில் நடைபெறும் மெய் நிகர் தொழில்நுட்பப் போட்டி(Virtual Walk Through Competition) போட்டியில் கலந்துகொள்ளுதல்

நான் முதல்வன் கட்டாயப் படிப்பை முடித்த மாணவர்களுக்கு, ஐஐடி பாம்பே மற்றும் ஒன்றிய அரசின் கலாச்சார அமைச்சகம் ஆகியவற்றால் நடத்தப்படும் மெய்நிகர் நடைமுறைப் போட்டியில் பங்கேற்று கட்டடக்கலை காட்சிப்படுத்தல் வாய்ப்பு வழங்கப்படும்.

11.4.4 மும்பையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகத்துடன் இணைந்து (ஐஐடி மும்பை) உதவித்தொகையுடன் கூடிய தகவல் குறிப்புகள் வரைவு போட்டி

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம், இந்திய தொழில் நுட்பக் கழகம், மும்பை, தேசிய மெய்நிகர் நூலகம் மற்றும்

[2023 ஏப்ரல் 11

இந்தியப் பண்பாட்டு அமைப்புடன் இணைந்து "கற்கும் போதே ஊதியம் பெறும்" திட்டத்தை நடத்துகிறது. ஐஐடி பாம்பேயின் சான்றிதழுடன் இது ஒரு பகுதி நேரப் பணி வாய்ப்பு. இந்தியாவின் பல்வேறு மாவட்டங்களில் மாணவர்கள் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்துக்கு தொடர்புடைய முக்கிய நபர்கள் பற்றி 200 வார்த்தைகளுக்கு ஒரு தகவல் குறிப்பு எழுத வேண்டும். அவர்கள் எழுதும் ஒவ்வொரு குறிப்பிற்கும் ரூ.400 வழங்கப்படும். நான் முதல்வன் கேம்பிரிட்ஜ் ஆங்கிலப் பயிற்சி பெற்ற மாணவர்களிடமிருந்து ஒரு தகவல் குறிப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அனைத்துக் கல்லூரிகளிலும் எல்லா துறையைச் சேர்ந்த மாணவர்களுக்கும் இது பொருந்தும்.

11.4.5 சங்கிலித் தொடர் தரவுத்தளம் (Block Chain) உள்ளுரைப்பயிற்சி

நான் முதல்வன் IBC மீடியாவுடன் இணைந்து மாணவர்களின் திறனை மேம்படுத்த உள்ளுரைப் பயிற்சிகள் நடத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் 3 வெவ்வேறு படிப்புகளில் பங்கேற்று, திட்டத்தை முடிக்கும்போது, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் மாணவர்களை மேம்படுத்துகிறார்கள்.

- மென்பொருள் குறியீட்டு முறை: RUST, Polka dot Ecosystem போன்ற பல்வேறு தலைப்புகளில் ஆழ்ந்த குறியீட்டு முறையைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பைத் தொழில் வல்லுநர்களால் 15 நாட்கள் தொழில்நுட்பப் பயிற்சியின் மூலம் மாணவர்கள் பெறுகிறார்கள்.

- ஆன் கிரவுண்ட் ஆல்ட் ஹேக்: வெப்3 மற்றும் பிளாக்செயின் போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் மாணவர்கள் மேம்பாடு அடைய 8 நாட்கள் புத்துணர்வு முகாம் நடத்தப்படும்.

- நிபுணர்களைக் கொண்டு உருவாக்குதல்: இந்தத் திட்டத்தில் 45 நாட்களுக்குத் தொழில் வல்லுநர்களுடன் நேரடி உலக வணிகத்தின் தீர்வுகளைக் கட்டமைக்கும் வாய்ப்பை மாணவர் பெறுவர்.

2023 ஏப்ரல் 11]

11.4.6 அண்ணா பல்கலைக்கழகத்தில், சியட் நிறுவனத்துடன் இணைந்து Fusion 360 வடிவமைப்புப் போட்டி

நவீன தொழில் நுட்ப யுக்திகளில் தமிழ்நாட்டு மாணவர்களைத் தயார் செய்யும் விதமாக Fusion *360 எனும் மென்பொருள் வடிவமைப்பு சவாலை ஆட்டோடெஸ்க் நிறுவனம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆட்டோமோட்டிவ் டெக்னாலஜியின் ஆராய்ச்சி மையம் மூலம் (சியட்) நடத்தியது.*

*இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் எதிர்காலத் திறன் மேம்பாட்டிற்காக மாணவர்களை மேம்படுத்துவதாகும். இந்தத் திட்டமானது, ஜெனரேட்டிவ் டிசைன் (*AI *– அடிப்படையிலான கற்றல்), சேர்க்கை உற்பத்தி போன்ற புதிய வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களுக்கு மாணவர்களைத் தயார்படுத்த உதவுகிறது. இதன்மூலம், அவர்களின் வடிவமைப்புத் திறன் சிந்தனையில் அவர்களின் திறன்களை மேம்படுத்துகிறது.*

சென்னை, கோவை, மதுரை, திருநெல்வேலி, மற்றும் திருச்சி ஆகிய 5 மண்டலங்களில் முதற்கட்டப் போட்டி 3 நிலைகளில் நடத்தப்பட்டது. இரண்டாமாண்டு முதல் இறுதியாண்டு வரையிலானப் பொறியியல் மற்றும் டிப்ளமோ மாணவர்கள் இந்த வடிவமைப்பு சவாலில் பதிவு செய்து கலந்து கொண்டனர். பொறியியல் மாணவர்களுக்கும், பாலிடெக்னிக் மாணவர்களுக்கும் இரண்டு வெவ்வேறு நிலைகளில் போட்டிகள் இருந்தன.

மூன்று நிலைகளின் வெற்றியாளர்களிடமிருந்து 320 மாணவர்களைக் கொண்ட 120 அணிகள் Fusion *360 மேல்நிலை சவாலுக்கு அழைக்கப்பட்டன. பங்கேற்பாளர்களுக்கு வெவ்வேறு தலைப்புகள் வழங்கப்படுகின்றன. டெய்ம்லர் டிரக் இன்னோவேஷன் சென்டர் இந்தியா பிரைவேட் லிமிடெட், சீமென்ஸ் கேம்சா, ரெனால்ட் நிசான் டெக்னாலஜி, போஷ், ஐஜிசிஏஆர், கேட்டர்பில்லர் இந்தியா பிரைவேட் லிமிடெட் போன்ற பல்வேறு நிறுவனங்களின் புகழ்பெற்ற தொழில் துறை நடுவர்களால் மதிப்பீடுகள் திட்டமிட்டப்படி நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. வெற்றியாளர்களுக்கு உயர் மதிப்பு திறன் பயிற்சித் திட்டங்கள் மற்றும் உள்ளுரைப் பயிற்சிகள் வழங்கப்படும்.*

[*2023 ஏப்ரல் 11*

12. நான் முதல்வன் – போட்டித் தேர்வுகள்

நான் முதல்வன் – போட்டித் தேர்வுகள் என்ற பிரிவு மாண்புமிகு இளைஞர் நலன், விளையாட்டு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் மார்ச் 7, 2023 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. கடந்த சில வருடங்களாக, ஒன்றிய அரசு பணியாளர் தேர்வாணையத்தின் (UPSC) குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டிலிருந்து தேர்வானவர்களின் எண்ணிக்கை, வங்கித் தேர்வுகள், ஒன்றிய அரசு ஆட்சேர்ப்பு முகமைகள் நடத்தும் ரயில்வே தேர்வுகள் (RRB) மற்றும் பணியாளர் தேர்வுகள் (Staff Selection) ஆகியவை குறைந்து வருகின்றன.

மேற்குறிப்பிட்ட நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் என்ற பிரிவின்கீழ், மத்திய அரசால் நடத்தப்படும் பணி நியமனங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தேர்வர்களுக்குப் போதுமான அளவில் வெற்றி பெறுவோரை உறுதி செய்யவும், தற்போதுள்ள நிலைகளில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வரவும் முக்கியத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

Indian Institute of Technology (IIT) Joint Entrance Exam (JEE), Common Law Admission Test (CLAT) போன்றவற்றுக்கானப் பயிற்சியாளர்கள் / மாணவர்களுக்கு உரிய திறன்களைக் கொண்ட தரமானப் பயிற்சியாளர்கள் மாநிலம் முழுவதும் போதுமான எண்ணிக்கையில் கிடைக்கச் செய்வதற்காக "வல்லுநர் பயிற்சி" என்ற நிகழ்ச்சியை நடத்த இந்த அமைப்பு உத்தேசித்துள்ளது. மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் குடிமைப் பணித் தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்கள் அதிக அளவில் தேர்ச்சி பெறும் வகையில், தமிழ்நாடு வரவு-செலவுத் திட்டம்-2023-2024-ல் ஒரு சிறப்பு ஊக்கத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் அண்ணா பணியாளர் நிர்வாகக் கல்லூரியுடன் இணைந்து குடிமைப் பணித் தேர்வு எழுத விரும்புவோர் சிறந்த பயிற்சி வசதிகள் மற்றும் பொருட்களைப் பெற உதவும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

ஒவ்வொரு ஆண்டும் 1000 குடிமைப் பணித் தேர்வு விண்ணப்பதாரர்கள் அடிப்படைத் தேர்வுமூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்காக ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ரூ.7500/- (ரூபாய்

2023 ஏப்ரல் 11]

ஏழாயிரத்து ஐநூறு மட்டும்) 10 மாதங்களுக்கு வழங்கப்படும். முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு மொத்தமாக ரூ.25,000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) வழங்கப்படும்.

நாட்டின் தலைமைப் பதவிகளில் அதிக தமிழ் இளைஞர்களைக் கொண்டு செல்வதே நோக்கமாகும். உலகை வெல்லும் இளைய சமுதாயமாக உருவெடுக்க முயற்சி எடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் இது பெரிய விளைவுகளை ஏற்படுத்தும்.

மேற்கூறிய அனைத்து முயற்சிகளின்மூலம், தமிழ்நாடு, நாட்டின் திறன் மையமாகவும் உலக அளவில் திறன் சூழலை நிர்வகிக்கும் தலைமையிடமாகவும் திகழும் என்பதில் ஐயமில்லை.

III முடிவுரை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆற்றல் மிகுந்த தலைமை மற்றும் தொடர்ச்சியான வழிகாட்டுதல்கள் ஆகியவை மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை நோக்கி அரசு இயந்திரம் முழுவதும் தொய்வில்லாமல் பணியாற்றுவதற்குரிய உந்து சக்தியாக அமைந்துள்ளன. அரசின் பல முக்கிய கொள்கை அறிவிப்புகள் இந்த ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைதல் என்ற இலக்கினை நோக்கியே அறிவிக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு, அடிப்படைக் கட்டமைப்புகளின் வளர்ச்சி மிக அவசியமானது என்பதால் அதற்குப் பெரிய அளவிலான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. அரசின் தொலைநோக்குத் திட்டமான "2030 ஆம் ஆண்டில் ஒரு ட்ரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி" என்ற இலக்கினை அடைய வேண்டும் என்றால், அதிக நிதி ஒதுக்கீடு தேவைப்படும் பெருந்திட்டங்களுக்கு நிதி ஒதுக்குவது மட்டுமல்லாமல், அவை உரிய காலக்கெடுவிற்குள் நிறைவேற்றப்படுவதையும் உறுதி செய்யும் வகையில் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அதே போன்று, அனைத்து மக்களின் நலன்கள் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை எய்துவதற்காக உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வரும் முன்னுரிமைத் திட்டங்களின் முன்னேற்றங்களைக் கண்காணிப்பதற்கென வலுவான முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் மொத்த மக்கள் தொகையில், இளைஞர்களின் மக்கள் தொகை பெரும்பங்கு உள்ளதைக் கருத்தில் கொண்டு, சம்பந்தப்பட்ட துறைகளை ஒருங்கிணைத்து,

[2023 ஏப்ரல் 11

அத்தகைய மனித வளத்தின் பலன்களை முழுமையாகப் பயன்படுத்தி வளர்ச்சி அடைவதே "நான் முதல்வன்" திட்டத்தின் நோக்கமாகும். மக்களுக்கான சேவைகளின் தரத்தினை அதிகப்படுத்தவும் சிறப்பான ஒரு நிர்வாகத்தினை வழங்கிடவும் மின்னாளுமை முன்னெடுப்புகளின் செயலாக்கம் உரிய முறையில் கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மண்டல அளவிலான ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் கள ஆய்வுகள் ஆகியவை தொடர்ச்சியான கண்காணிப்புகளுக்கு உதவுவதோடு மட்டுமல்லாமல் அரசால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் விரைவாகச் செயல்படுத்தப்படவும் பெரும்பங்காற்றுகின்றன. இத்துறை தன்னுடைய கண்காணிப்பு முறைகளை மேலும் செம்மைப்படுத்துவதன் மூலம் அரசின் மேற்கண்ட முயற்சிகள் நிறைவேறுவதற்கு தொய்வில்லாமல் முழு ஈடுபாடுடன் பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

இணைப்பு III

(*134 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.*)

மானியக் கோரிக்கை எண் 17-கைத்தறி மற்றும் துணிநூல் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2023-2024

முன்னுரை

1.1 கைத்தறித் தொழில்

இந்தியாவின் கைத்தறி தொழில் கைவினைச் சிறப்பை வெளிப்படுத்தும் கலையாகவும், காலங்களைக் கடந்த கலாச்சாரத்தின் நீண்ட பாரம்பரியத்தினை பிரதிபலிக்கும் தொழிலாகவும் விளங்கிவருகிறது. இந்திய நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் தங்களது கை நூற்பு, நுட்பமான நெசவு மற்றும் அச்சிடும் நேர்த்தி ஆகியவற்றில் உலக அளவில் தனித்தன்மையுடன் விளங்குகின்றனர். கைத்தறி தொழில், குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து உற்பத்தி செய்யும் ஒரு குடும்ப தொழிலாக உள்ளது.


நெசவுத் தொழில் கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் பரவி வருகிறது, இத்தொழில், ஒரு தலைமுறையிலிருந்து மற்றொரு தலைமுறைக்கு கைவினைத் திறன்களைக் கொண்டு செல்லப்படுவதன்மூலம் நீடித்துவருகிறது. இத்தொழில் பெரும்பாலும் கிராமம் மற்றும் புறநகர் பகுதிகளைச் சேர்ந்த கைவினைஞர்கள், பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள் மற்றும் பெண்கள் ஆகியோர்களை உள்ளடக்கியது. உள்ளூர் வளங்கள், குறைந்த முதலீடு, தனித்துவ இரகங்களின் உற்பத்தி மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களின் அங்கீகாரம் ஆகியவை இத்துறைக்கு வலு சேர்க்கிறது.

கைத்தறி தொழிலானது விவசாயத்திற்கு அடுத்தபடியாக கிராமப்புறங்களில் பெருமளவில் வேலைவாய்ப்பு அளிப்பதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. இத்தொழில் குறைந்த மூலதனம், பெருமளவு மனிதவள பயன்பாடு, சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் தனித்துவம் வாய்ந்த சிறிய இரகங்களின் உற்பத்தி ஆகிய சிறப்பம்சங்களை உள்ளடக்கியது.

தமிழ்நாட்டின் கைத்தறித் தொழில் மாநிலத்தின் பாரம்பரியத்தையும், பொருளாதாரத்தையும் பாதுகாப்பதில் ஒரு முக்கிய அங்கமாகவும் திகழ்கிறது. தமிழ்நாட்டின் 35 மாவட்டங்களில் உள்ள செறிவுப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் இரகங்களான காஞ்சிபுரம் பட்டு சேலைகள், பவானி ஜமுக்காளம், மதுரை சுங்குடி சேலைகள், கோவை கோரா சேலைகள், பரமக்குடி சேலைகள், சேலம் பட்டு வேட்டிகள் முதலான தனித்துவ வேலைப்பாடுகள் மற்றும் நெசவு நுணுக்கங்கள் கொண்ட இரகங்கள் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

நான்காவது கைத்தறி கணக்கெடுப்பு 2019-20-ன்படி, இந்தியாவின் கைத்தறி தொழிலில் 35,22,512 கைத்தறி தொழிலாளர்கள் ஈடுபட்டு உள்ளனர், அவற்றில் 25 இலட்சம் பெண் நெசவாளர்களும், உப தொழில் புரிபவர்களும் உள்ளனர்.

கைத்தறி தொழிலில் பெண்களின் பங்கு தேசிய அளவில் 72 விழுக்காடும், தமிழ்நாட்டில் 52 விழுக்காடாகவும் உள்ளது.



ஆதாரம்: 4-வது தேசிய கைத்தறி கணக்கெடுப்பு 2019-20

2023 ஏப்ரல் 11]

அதிக எண்ணிக்கையிலான பெண்கள் இத்தொழிலில் ஈடுபடுவதன்மூலம் அவர்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுகிறது.

தமிழ்நாட்டில் அதிகபட்சமாக கைத்தறி நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிபவர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ளனர். இதில், 60 விழுக்காடு நெசவாளர்கள் மட்டுமே கூட்டுறவு அமைப்பின்கீழ் பதிவு செய்துள்ளனர். கைத்தறிகளின் எண்ணிக்கையில் அசாம் மற்றும் மேற்கு வங்க மாநிலங்களுக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தினை தமிழ்நாடு வகிக்கிறது.

4-வது தேசிய கைத்தறி கணக்கெடுப்பு 2019-2020-ன்படி, மாநிலத்திலுள்ள 2.44 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிபவர்களில், 1.26 இலட்சம் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் உபதொழில் செய்பவர்கள் கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ளனர். தமிழ்நாட்டில் 1,112 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதிகள் 1988-ன்கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.




ஆதாரம்: 4–வது தேசிய கைத்தறி கணக்கெடுப்பு 2019–20

[2023 ஏப்ரல் 11

தமிழ்நாட்டில் சரக வாரியான கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் விவரம்

வ. எண்.	சரகத்தின் பெயர்	எண்ணிக்கை
1	காஞ்சிபுரம்	74
2	சேலம்	65
3	கோயம்புத்தூர்	61
4	கடலூர்	53
5	திண்டுக்கல்	39
6	ஈரோடு	188
7	கரூர்	43
8	கும்பகோணம்	48
9	மதுரை	38
10	நாகர்கோவில்	35
11	பரமக்குடி	85
12	திருச்செங்கோடு	71
13	திருநெல்வேலி	36
14	திருவள்ளூர்	71
15	திருவாரூர்	6
16	திருச்சி	21
17	திருவண்ணாமலை	24
18	திருப்பூர்	47
19	வேலூர்	55
20	விருதுநகர்	52
மொத்தம்		**1,112**

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



ஆதாரம்: 4-வது தேசிய கைத்தறி கணக்கெடுப்பு 2019-20

2022-23 நிதியாண்டில் தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ரூ.*1190.39* கோடி மதிப்பிலான கைத்தறி துணி இரகங்கள் உற்பத்தி செய்து ரூ.*1414.22* கோடி மதிப்பிற்கு விற்பனை மேற்கொண்டுள்ளன.



[2023 ஏப்ரல் 11

இருப்பினும், சமீப காலமாக கைத்தறி தொழில் நெருக்கடியை சந்தித்து வருவதன்மூலம் தொடர் தொழில் மேற்கொள்வது கடினமாக உள்ளது. உயர்கல்வி படித்த புதிய தலைமுறையினர் கைத்தறி தொழிலை மேற்கொள்வதற்கு முன்வரவில்லை. அதிக வருமானம் ஈட்டுபவர்கள் சமுதாய தகுதியைக் கருதி, மதிப்புக் கூட்டப்பட்ட கைத்தறி இரகங்களை வாங்க முன்வரும்போதிலும், அத்தகைய பொருட்களை உற்பத்தி செய்யும் நெசவாளர்கள் குறைந்த கூலியே பெற்றுவருவது முரணாக உள்ளது.

கைத்தறி நெசவின் மதிப்பு தொடரில் உருவாக்கப்பட்டுள்ள வலுவான கட்டமைப்பு மற்றும் பின்வரும் பல்வேறு முன்னெடுப்புகள்மூலம் இத்தொழிலில் கைத்தறி நெசவாளர்களைத் தக்கவைத்து கொள்வதையும், கைத்தறி தொழிலைப் பாதுகாப்பதையும் தமிழ்நாடு அரசு உறுதியுடன் செயல்பட்டு வருகிறது:-

திட்டம்	முன்னெடுப்புகள்
வடிவமைப்பு	தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் தேசிய வடிவமைப்பு நிறுவனத்துடன், கோ-ஆப்டெக்ஸ் இணைந்து பல்வேறு நெசவு பகுதிகளில் புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்படுகிறது.
மூலப்பொருள் ஆதாரம்	கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் வழங்குவதற்காக 6 கூட்டுறவு நூற்பாலைகளை அரசு நிறுவியுள்ளது.
நெசவு	தமிழ்நாடு முழுவதும் 35 மாவட்டங்களில் 90-க்கும் மேற்பட்ட கைத்தறி செறிவுப் பகுதிகளில் 1,112 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
சந்தைப் படுத்துதல்	நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி இரகங்களை சந்தைப்படுத்துவது கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் பொறுப்பாகும். மேலும், அயல்நாடுகளில் கைத்தறி இரகங்களின் விற்பனையினை அதிகரிக்க மின்வணிக தளம் உதவியாக உள்ளது.


2023 ஏப்ரல் 11]

திட்டம்	முன்னெடுப்புகள்
விற்பனை	இந்தியா முழுவதும் 154 கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு அதன்மூலம் ஆண்டொன்றிற்கு ரூ.200 கோடிக்கும் மேலாக விற்பனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மின்வணிக தளத்தின்மூலம் ரூ.8.25 கோடி அளவிற்கு கூடுதல் விற்பனை கோ–ஆப்டெக்ஸால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைத்தறி ஏற்றுமதி


2020-21 ஆம் ஆண்டில், இந்தியாவில் இருந்து மேற்கொள்ளப்பட்ட மொத்த கைத்தறி ஏற்றுமதியில் தரைவிரிப்புகள் மற்றும் படுக்கை விரிப்புகள் 29 சதவிகிதம் பங்களித்துள்ளது.

இந்தியாவின் மொத்த கைத்தறி ஏற்றுமதியில் வீட்டு உபயோக ஜவுளிகளின் ஏற்றுமதி 60 விழுக்காட்டுக்கும் அதிகமாக உள்ளது. 2020-21 ஆம் ஆண்டில் கைத்தறியில் இருந்து தயாரிக்கப்பட்ட தரைவிரிப்புகள் மற்றும் படுக்கை விரிப்புகள் மொத்த ஏற்றுமதியில் 13.6 விழுக்காடு பங்கைக் கொண்டிருந்தன.



ஆதாரம்: கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி கழகம் (HEPC)

இந்தியாவின் கைத்தறி ஏற்றுமதி (US$ மில்லியன்)



ஆதாரம்: கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி கழகம் (HEPC)

இந்தியாவின் முக்கிய கைத்தறி ஏற்றுமதி மையங்கள் கரூர், பானிபட், வாரணாசி மற்றும் கண்ணூர் ஆகும். இப்பகுதிகளில் இருந்து படுக்கை விரிப்புகள், மேஜை விரிப்புகள், சமையலறை மற்றும் கழிப்பறை உபயோக துணி வகைகள், தரை விரிப்புகள், எம்ப்ராய்டரி செய்யப்பட்ட ஜவுளி பொருட்கள், திரைச்சீலைகள் போன்ற கைத்தறி இரகங்கள் ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்யப்படுகின்றன.

தமிழ்நாட்டின் முக்கிய ஏற்றுமதி மையங்களான ஈரோடு, கரூர், சேலம் மற்றும் திருச்செங்கோடு ஆகிய கைத்தறி பகுதிகளில் படுக்கை விரிப்புகள் மற்றும் வீட்டு உபயோக ஜவுளிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

1.2 விசைத்தறி பிரிவு

விசைத்தறி தொழில் இந்தியாவின் மிகப் பழமையான மற்றும் மிகப்பெரிய தொழில்களில் ஒன்றாகவும், துணி உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல்மூலம் ஜவுளித் துறையில் முக்கியப் பிரிவாகவும் விளங்குகிறது. இத்தொழில் பெரும்பாலும் அமைப்புசாரா தொழிலாகவும், இந்தியாவிலுள்ள திறன்சார் மற்றும்

2023 ஏப்ரல் 11]

திறன்சாராத 64.36 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பையும் வழங்குகிறது. நாட்டில் தோராயமாக 25.23 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன.

விசைத்தறிகளில் உற்பத்தி செய்யப்படும் துணிகளில் 60 விழுக்காடு செயற்கை இழையிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. மேலும், ஏற்றுமதிக்கான துணி இரகங்களில் 60 விழுக்காட்டிற்கு மேல் விசைத்தறிப் பிரிவுமூலம் பெறப்படுகிறது.

இப்பிரிவின் தொழில் நுட்ப நிலையானது சாதா தறியிலிருந்து உயர் தொழில்நுட்ப நாடா இல்லாத தானியங்கி விசைத்தறி வரை உள்ளது. இத்துறையில் தோராயமாக 1.25 இலட்சம் நாடா இல்லாத தறிகள் உள்ளன. ஆனால் அதிக உற்பத்தி மற்றும் மூலதன செலவு காரணமாக அமைப்புசாராத் துறையில் உள்ள ஒரு சில நெசவாளர்கள் மட்டும் நாடா இல்லாத தறிக்கு மாறியுள்ளனர்.

தமிழ்நாட்டில் விசைத்தறி தொழில்

தமிழ்நாட்டில் விசைத்தறி தொழில் சுமார் 10 இலட்சம் நபர்களுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை வழங்குகிறது மற்றும் பல குடும்பங்களில், அனைத்து குடும்ப உறுப்பினர்களும் விசைத்தறி நெசவுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் நாமக்கல், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், வேலூர், கடலூர், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, மதுரை, கரூர், திருவள்ளூர், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் விசைத்தறிக் குழுமங்கள் அதிகளவில் உள்ளன. தமிழ்நாட்டில் அதிக அளவு சாதாரண விசைத்தறிகளும், மிகக் குறைந்த அளவு நாடா இல்லா தறிகளும் உள்ளன.

நாட்டில் மொத்தமுள்ள 25.23 இலட்சம் விசைத்தறிகளில், தமிழ்நாடு 5.63 இலட்சம் விசைத்தறிகளுடன் ஐந்தில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது. அவற்றுள், மாநிலத்தில் 69,640 விசைத்தறிகள் 226 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் (PWCS) *செயல்பட்டு வருகின்றன.*

தமிழ்நாட்டில் உள்ள விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்

வ. எண்.	மாவட்டங்கள்	எண்ணிக்கை
1.	சேலம்	17
2.	கோயம்புத்தூர்	31
3.	ஈரோடு	55
4.	திருச்செங்கோடு	79
5.	மதுரை	2
6.	திருப்பூர்	21
7.	திருவள்ளூர்	20
8.	திருநெல்வேலி	1
	மொத்தம்	**226**

விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பெருமளவில் பள்ளி மாணாக்கர்களுக்கான விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் மற்றும் வேட்டி சேலை வழங்கும் திட்டம் ஆகியவற்றிற்கு தேவைப்படும் துணிவகைகள் உற்பத்தி செய்து வருகின்றன.

2022-2023 ஆம் ஆண்டில், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்காக ரூ.478.45 கோடி மதிப்பிலான 1228.05 இலட்சம் மீட்டர் துணிகளையும், விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்திற்காக ரூ.263.98 கோடி மதிப்பிலான 413.07 இலட்சம் மீட்டர் துணிகளையும் உற்பத்தி செய்துள்ளன. மேலும், வெளிச்சந்தையில் ரூ.56.71 கோடி மதிப்பிலான 145.47 இலட்சம் மீட்டர் துணி உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.61.83 கோடிக்கு 140.47 இலட்சம் மீட்டர் துணிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் விசைத்தறி தொழிலில் நிலவும் இடர்பாடுகள் மற்றும் சவால்கள் பின்வருமாறு:-

- மாநிலத்தில் உள்ள பெரும்பாலான விசைத்தறிகள் குறைந்த தொழில்நுட்பம் கொண்ட சாதாரண தறிகளாகும்.

2023 ஏப்ரல் 11]

- ➢ உயர் தொழில் நுட்பம் வாய்ந்த நாடா இல்லாத தானியங்கி விசைத்தறிகள் குறைவாக உள்ளது.
- ➢ குறைந்த மதிப்புள்ள காடா துணிகளின் உற்பத்தி அதிக அளவில் நடைபெறுகிறது. அதேசமயம், சூட்டிங், ஷர்ட்டிங் மற்றும் ஆயத்த ஆடை இரகங்கள் போன்ற மதிப்பு கூட்டப்பட்ட துணி வகைகளின் உற்பத்தி மிகக் குறைவாக உள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள விசைத்தறித் தொழிலின் சவால்களைச் சமாளிப்பதற்கும், அடுத்தக் கட்டத்திற்கு இத்துறையை எடுத்துச் செல்வதற்கும், மதிப்புக் கூட்டப்பட்ட துணிகளுக்கான வளர்ந்து வரும் தேவையினையும், அதன் சாத்தியக்கூறுகளை அறிவதற்கும் பின்வரும் பகுதிகளில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

1. சாதாரண தறிகளை ரேப்பியர் மற்றும் நாடா இல்லாத தானியங்கி விசைத்தறிகளாக நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல்.
2. தடிமனான பருத்தி நூலின் பயன்பாட்டிலிருந்து, செயற்கை இழை மற்றும் சன்ன ரக பருத்தி நூல் பயன்பாட்டுக்கு மாற்றுதல்.
3. காடா துணிகள் உற்பத்தி செய்வதிலிருந்து அதிக மதிப்பு கூட்டப்பட்ட துணிகளுக்கு மாறுதல்.
4. மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப தறிகள் மற்றும் உயர் தொழில்நுட்ப விசைத்தறி பூங்காக்களை அமைத்தல்.
5. மதிப்புக்கூட்டப்பட்ட உற்பத்தியை மாநிலத்திற்குள்ளேயே செயல்படுத்துதல்.
6. மின்வணிக தளத்தை உருவாக்குவதன்மூலம், நேரடி ஏற்றுமதிக்கு வசதி ஏற்படுத்துதல்.
7. நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பணிகளுக்காக தற்போதுள்ள குழுமங்களில் பொது வசதி மையங்களை ஏற்படுத்துதல்.
8. திறன் வளர்த்தலை மேம்படுத்துதல் மற்றும் தற்போதுள்ள தொழிலாளர்களின் திறமையினை அதிகரித்தல்.

[2023 ஏப்ரல் 11

2. கைத்தறி துறை

1956 ஆம் ஆண்டில் கூட்டுறவு துறையிலிருந்து தனித் துறையாக கைத்தறி மற்றும் துணிநூல் துறை பிரிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் கைத்தறி துறை மற்றும் துணிநூல் துறை என இரண்டாகப் பிரிக்கப்பட்டு, துணிநூல் தொழிலில் தனிக் கவனம் செலுத்த ஏதுவாக துணிநூல் துறை என்ற புதிய துறை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 23.10.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

கைத்தறி மற்றும் விசைத்தறி பிரிவுகளின் ஒருமித்த வளர்ச்சி மற்றும் இத்தொழிலைச் சார்ந்துள்ள நெசவாளர்கள், தொழிலாளர்கள், உபதொழில் செய்பவர்கள் உள்ளிட்ட அனைவரின் நல்வாழ்வினையும் மேம்படுத்துவதே கைத்தறி துறையின் முதன்மை நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், இத்தொழிலுக்குத் தொடர்புடைய இதர கூட்டுறவு நிறுவனங்களுக்கும் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதிகள் 1988-ன்கீழ் கைத்தறி ஆணையர் "செயற்பதிவாளராக" செயல்பட அதிகாரம் பெற்றுள்ளார்.

முக்கிய சவால்கள்

அரசால் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், கைத்தறி துறை பின்வரும் சவால்களை தொடர்ந்து சந்தித்து வருகிறது.

1. ஜவுளித்தொழிலில் உள்ள பெருமளவு தொழில்நுட்பம் மற்றும் இயந்திரமயமாக்கல் ஆகியவற்றாலும், கைத்தறிக்கான தனித்துவமான வாணிப முன்மொழிவு இல்லாமை.

2. நெசவாளர் குடும்பங்களுக்கு குறைந்த அளவிலான கூலி

3. குறைந்த மதிப்புள்ள மற்றும் குறிப்பிட்ட இரகங்களை உற்பத்தி செய்வதில், நெசவாளர்களிடையே ஜவுளி மற்றும் ஆடை அலங்கார வடிவமைப்புகளில் உள்ள புதுமைகளை ஏற்றுக்கொள்வதில் தயக்கம்,

2023 ஏப்ரல் 11]

4. நெசவினை ஒரு தொழிலாக மேற்கொள்ள இளைஞர்களிடையே ஆர்வமின்மை.

எனவே, கைத்தறித் தொழிலினை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்வதும், அதன் நோக்கங்களை மறுவரையறை செய்வதும் துறைக்கு இன்றியமையாதது.

துறையின் நோக்கங்கள்

மறுவரையறை செய்யப்பட்ட துறையின் நோக்கங்கள் பின்வருமாறு,

- ➢ கைத்தறி இரகங்களை மதிப்புமிக்கதாகவும், உற்பத்தியில் புதுமை, கைத்தறியில் இரக மாற்றம் மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன்மூலம் சந்தை வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்ளுதல்.
- ➢ கைத்தறியின் சந்தை வாய்ப்புகளைப் பாதிக்கும் ஊடுருவல்களைக் கட்டுப்படுத்துதல்.
- ➢ தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவதால், வணிகக் குறியீட்டின்மூலம் சந்தை வாய்ப்பினை அதிகரித்து கைத்தறிக்கான மதிப்பினை உயர்த்துதல்.
- ➢ நெசவாளர்களின் திறன்களை மேம்படுத்துவதுடன் இளம் தலைமுறையினரை கைத்தறித் தொழிலில் ஈடுபடுத்துதல்.
- ➢ நெசவாளர்கள் மற்றும் உப தொழில் புரிவோர்களின் கூலி அளவை உயர்த்துதல்.
- ➢ நெசவாளர்கள் மற்றும் உப தொழில் புரிவோர்களின் பணிச்சூழலை மேம்படுத்துதல்.
- ➢ கைத்தறி துணியின் உற்பத்தித்திறனையும், தரத்தையும் அதிகரிக்க நெசவு முறையில் தொழில்நுட்ப நிலையினை மேம்படுத்துதல்.
- ➢ கைத்தறி நெசவாளர்களின் உடல் உழைப்பினைக் குறைத்திட, நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பணிகளில் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் தகுந்த தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்.
- ➢ உண்மையான கைத்தறி நெசவாளர்களுக்கு மானியங்கள் சென்றடைவதை உறுதிசெய்யும் வகையில் நலத்திட்டங்களை முறைப்படுத்துதல்.

[2023 ஏப்ரல் 11

மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றும் வகையில், பின்வரும் இனங்களில் முன்னுதாரண மாற்றத்தை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது:

சாதா தறிகளிலிருந்து உயர் தொழில்நுட்ப தறிகள் வாயிலாக உற்பத்தித்திறனை அதிகரித்து, உற்பத்தி செலவு மற்றும் வேலைப்பளுவினைக் குறைத்தல்.

கையால் இயக்கப்படும் ஜக்கார்டிலிருந்து இயந்திரத்தால் இயக்கப்படும் ஜக்கார்டுமூலம் நெசவாளர்களின் வேலைப்பளுவினைக் குறைத்து புதிய வடிவமைப்புகளைப் புகுத்துதல்.

இல்லங்களிலிருந்து பொது தறிக்கூடங்கள் மூலமாக நெசவுத் தொழிலை வருவாய் மிக்க தொழிலாக மாற்றுதல்.

பாரம்பரிய வடிவமைப்பிலிருந்து சமகால வடிவமைப்பு வாயிலாக வாடிக்கையாளர்களின் விருப்பங்களுக்கு ஏற்பவும், கையால் நெய்யப்பட்ட அசல் கைத்தறி இரகங்கள் மற்றும் கைத்தறி வாடிக்கையாளர்களின் தேவைக்கு ஏற்றவாறும் உற்பத்தியை ஊக்குவித்தல்.

இளைய தலைமுறையினரை ஈர்க்கும் வகையில் அலங்கார வடிவமைப்பு சேலைகளிலிருந்து உடுத்த வசதியான சேலைகள் உற்பத்தி செய்தல்.


சமூகம் சார்ந்த தொழிலில் இருந்து பொதுத் தொழிலாக மாற்றி இளைஞர்களுக்கு நெசவுப் பயிற்சி அளித்து அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றுவதற்கான வாய்ப்பினை உருவாக்குதல்.

நிர்வாக அமைப்பு

கைத்தறி துறையானது, தமிழ்நாடு அரசின் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. மாநிலத்தில் உள்ள மாவட்டங்கள் 20 சரகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு சரகமும் கைத்தறி துணை இயக்குநர் / உதவி இயக்குநர் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகின்றது.

கைத்தறி துறையின் நிர்வாக அமைப்பினை விளக்கும் நிர்வாக வரைபடம் பின்வருமாறு:

2023 ஏப்ரல் 11]


கைத்தறி துறையின் நிர்வாக கட்டமைப்பு
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்
அரசு முதன்மைச் செயலர்,
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை
கைத்தறி ஆணையர் (துறைத் தலைவர்)
தலைமையிடம் (ஆணையரகம்)
கைத்தறி கூடுதல் இயக்குநர்
இணை இயக்குநர் (கைத்தறி)
இணை இயக்குநர் (சீருடை)
நிதி ஆலோசகர் & முதன்மை கணக்கு அலுவலர்
துணை இயக்குநர் (அமலாக்கம்)
துணை இயக்குநர் (திட்டங்கள்)
உதவி இயக்குநர் (நிர்வாகம்)
உதவி இயக்குநர் (தலைமையிடம்)
கணக்கு அலுவலர்
கூட்டுறவு தணிக்கை அலுவலர் (மாற்றுப் பணி)
உதவி இயக்குநர் (விசைத்தறி)
உதவி இயக்குநர் (சீருடை)
சரக துணை இயக்குநர் அலுவலகங்கள் (2)
1. காஞ்சிபுரம்
2. சேலம்
சரக உதவி இயக்குநர் அலுவலகங்கள் (18)
1. திருவள்ளூர்
2. வேலூர்
3. ஈரோடு
4. திருச்செங்கோடு
5. கோயம்புத்தூர்
6. கரூர்
7. திண்டுக்கல்
8. திருச்சி
9. மதுரை
10. பரமக்குடி
11. கடலூர்
12. கும்பகோணம்
13. திருவாரூர்
14. விருதுநகர்
15. திருநெல்வேலி
16. நாகர்கோவில்
17. திருப்பூர்
18. திருவண்ணாமலை
உதவி அமலாக்க அலுவலகங்கள் (5)
1. ஈரோடு
2. மதுரை
3. சேலம்
4. திருச்செங்கோடு
5. திருப்பூர்

இத்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் பல்வேறு நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:-

- 1,112 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்.
- 226 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்.
- தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்) லிட், சென்னை.
- தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்.
- தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு.
- தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை.

3. திட்டங்கள்

3.1 வேட்டி சேலை வழங்கும் திட்டம்

வேட்டி சேலை வழங்கும் திட்டம், 1983 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 2,565 கைத்தறி நெசவாளர்கள், 11,515 பெடல்தறி நெசவாளர்கள் மற்றும் 38,844 விசைத்தறி கூடங்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதோடு தமிழ்நாட்டில் உள்ள கிராமப்புற மற்றும் நகர்புறங்களில் வசிக்கும் 3.50 கோடி மக்களின் துணித் தேவையினைப் பூர்த்தி செய்து வருகிறது.

பொங்கல் 2023 பண்டிகையின்போது பயனாளிகளுக்கு வழங்கும் பொருட்டு, கவர்ச்சிகரமாகவும், உடுத்துவதற்கு வசதியாகவும், மக்கள் விரும்பி ஏற்றுக்கொள்ளும் விதமாகவும் இருக்கும் படியாக 10 மாறுப்பட்ட வண்ணங்களில் 15 விதமான மேம்படுத்தப்பட்ட வடிவமைப்புகளுடனும் 177.64 இலட்சம் சேலைகளும், 5 மாறுபட்ட வண்ணங்களில் 1 அங்குல கரையுடன் 177.23 இலட்சம் வேட்டிகளும் ரூ.624.22 கோடி மதிப்பில் உற்பத்தி செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு வருவாய்த் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி வேட்டி மற்றும் சேலைகளின் தரம் பயனாளிகளிடையே மிகுந்த பாராட்டுதல்களையும் வரவேற்பினையும் பெற்றுள்ளது.

மேலும், கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் நூல்

2023 ஏப்ரல் 11]

விநியோகிப்பாளர் ஆகியோருக்கு வழங்கப்படாமல் இருந்த நிலுவைத் தொகைகளை வழங்கும் பொருட்டு, அரசு கூடுதலாக ரூ.148.71 கோடியினை விடுவித்து வழங்கியுள்ளது.

3.1.1 வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் கைத்தறி/ பெடல்தறி நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொடர் வேலைவாய்ப்பு வழங்குதல்

வேட்டி சேலை வழங்கும் திட்டத்தில் ஈடுபட்டு வரும் நெசவாளர்களுக்கு தடையில்லா தொடர் வேலைவாய்ப்பினை வழங்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும், ஜனவரி முதல் ஜுன் மாதம் வரை நெசவாளர்களுக்கு உற்பத்தித் திட்டம் வழங்கப்பட்டு வருகிறது.

கைத்தறி/ பெடல்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஜனவரி 2022 முதல் ஜுன் 2022 வரைகீழ்கண்டவாறு துறையினால் உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

வ. எண்	இரகம்	தறிகளின் எண்ணிக்கை	உற்பத்தி திட்டம்	
			சேலை	வேட்டி
1	*கைத்தறி சேலை*	*940*	*82,405*	—
2	*கைத்தறி வேட்டி*	*1500*	—	*1,69,045*
3	*பெடல்தறி சேலை*	*7,465*	*14,73,115*	—
4	*பெடல்தறி வேட்டி*	*2,613*	—	*7,94,890*
மொத்தம்		**12,518**	**15,55,520**	**9,63,935**

நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதாரம் வழங்குதல் என்ற துறையின் முதன்மை நோக்கத்தினை வேட்டி சேலை வழங்கும் திட்டம் வாயிலாகப் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 11


3.2 பள்ளிக் குழந்தைகளுக்கு சீருடை வழங்கும் திட்டம்

ஒவ்வொரு வருடமும் தமிழ்நாடு அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு 4 இணைச் சீருடைகள் வழங்குவதற்குத் தேவையான துணியினை கைத்தறி/ பெடல்தறி மற்றும் விசைத்தறிகளில் உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வருகிறது.

2022–2023 ஆம் கல்வியாண்டில் 534.15 இலட்சம் மீட்டர் சீருடைத் துணி இரகங்கள், ரூ.432.00 கோடி மதிப்பில் தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்து சமூக நலத் துறைக்கு தைக்கும் பணிக்காக வழங்கப்பட்டு, அவை பள்ளிக் குழந்தைகளுக்கு கீழ்க்கண்டவாறு பள்ளி கல்வித்துறையின்மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன.

வ. எண்	தறி இரகம்	தறிகளின் எண்ணிக்கை	சீருடை துணியின் அளவு (இலட்சம் மீட்டரில்)	மதிப்பு (ரூபாய் கோடியில்)
1	கைத்தறி	*448*	*6.77*	*7.95*
2	பெடல்தறி	*6,734*	*110.95*	*82.87*
3	விசைத்தறி	*3,267*	*416.43*	*341.18*
மொத்தம்		**10,449**	**534.15**	**432.00**

2022–23 ஆம் கல்வி ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட சீருடை துணிகளின் தறி வாரியான உற்பத்தி (ரூ.கோடியில்)



2023 ஏப்ரல் 11]

இத்திட்டத்தின்கீழ் 21.26 இலட்சம் மாணவர்களுக்கும், 20.98 இலட்சம் மாணவிகளுக்கும் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதைத் தவிர பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் நலத்துறை மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை ஆகிய துறைகளின்கீழ் வரும் மாணாக்கர்களுக்கும் சீருடைத் துணிகள் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வருகின்றன.

சீருடைத் துணி உற்பத்தி திட்டம் கல்வியாண்டு 2023 – 2024

துறையின் பெயர்	**உத்தேச துணி தேவை (இலட்சம் மீட்டரில்)**	**மாணாக்கர்களின் உத்தேச எண்ணிக்கை**
சமூக நலத் துறை (I முதல் VIII ஆம் வகுப்பு)	*534.150*	*42,24,039*
பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை விடுதியில் பயிலும் மாணாக்கர்கள் (IV முதல் X ஆம் வகுப்பு)	*1.960*	*16,536*
மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறை விடுதியில் பயிலும் மாணாக்கர்கள் (IV முதல் X ஆம் வகுப்பு)	*1.790*	*13,582*
சிறுபான்மையினர் நலத் துறை (IV முதல் X ஆம் வகுப்பு மாணாக்கர்கள்)	*0.039*	*188*
மொத்தம்	**537.939**	**42,54,345**

3.3. கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்குதல்

தமிழ்நாடு அரசு கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தினை 2006-07 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. கைத்தறி நெசவாளர்களுக்கான

விலையில்லா மின்சாரத்தை இரு மாதங்களுக்கு 200 அலகுகளிலிருந்து 300 அலகுகள் வரை உயர்த்தி 03.03.2023 முதல் அரசு வழங்கி வருகிறது.

இத்திட்டத்திற்காக 2022-23 ஆம் ஆண்டில் ரூ.6.77 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு 2022-23 ஆம் ஆண்டில் 73,334 கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில் விடுவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் இலவச மின்சாரம், நெசவாளர்கள் மற்றும் அதைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு சிறந்த பணிச் சூழலை உறுதி செய்கிறது.

இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.7.29 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.4 விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மற்றும் மானிய மின்சாரம் வழங்குதல்

தமிழ்நாடு அரசு விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தினை 2006-07 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. விசைத்தறி நெசவாளர்களுக்கான விலையில்லா மின்சாரத்தை இரு மாதத்திற்கு 750 அலகுகளிலிருந்து 1,000 அலகுகள் வரையும், 1,000 அலகுகளுக்கு மேல் மானியத்துடனும் 03.03.2023 முதல் கீழ்க்கண்ட அட்டவணைப்படி அரசு வழங்கி வருகிறது.

அலகு	ஒரு அலகிற்கான மின் கட்டணம்	ஒரு அலகிற்கு அரசு வழங்கும் மானியம்	ஒரு அலகிற்கு நெசவாளர்கள் செலுத்தும் மின் கட்டணம்
	(தொகை ரூபாயில்)		
1-500	6.50	6.50	இலவசம்
501-750	7.50	7.50	இலவசம்
751-1000	7.50	7.50	இலவசம்
1001-1500	7.50	3.35	4.15
1500 அலகுகளுக்கு மேல்	7.50	2.20	5.30

2023 ஏப்ரல் 11]

திருத்தப்பட்ட கட்டணம் மற்றும் மானியத்தின்படி, விசைத்தறிக்கு இருமாதங்களுக்கு 1,001 அலகுகளுக்கு மேல் நுகரப்படும் அலகுகளுக்கு மின் கட்டணமாக அலகுக்கு 70 பைசா ஒரே மாதிரியாக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக 2022-2023 ஆம் ஆண்டில் ரூ.374.72 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், 2022-2023 ஆம் ஆண்டில் 1,65,028 விசைத்தறி நெசவாளர்கள் இதன்மூலம் பயன்பெறுவார்கள்.



[2023 ஏப்ரல் 11

இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.513.67 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.5. தள்ளுபடி மானியத் திட்டம்

கைத்தறி துணி விற்பனையை ஊக்குவிப்பதற்காகவும், தனியார் சந்தையில் போட்டியிடுவதற்காகவும், தமிழக அரசால் தள்ளுபடி மானியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தால் (கோ-ஆப்டெக்ஸ்) விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சந்தைப்படுத்துதலை மேம்படுத்தவும், நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பினை அளிக்கவும் உதவுகிறது. இத்திட்டம் கைத்தறி துணி வகைகள் வெளிச் சந்தையில் போட்டியிடுவதற்கு உதவுகிறது.

தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஆகியவற்றால் விற்பனை செய்யப்படும் கைத்தறி துணிகளின் விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் தள்ளுபடியானது பருத்தி ரகங்களுக்கு ஒரு உருப்படிக்கு ரூ.100/- அல்லது 20 விழுக்காடு இதில் எது குறைவோ அத்தொகை, அதே போன்று பட்டுத் துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.200/- அல்லது 20 விழுக்காடு இதில் எது குறைவோ அத்தொகை, என்ற வரையறைக்குட்பட்டு தள்ளுபடி மானியம் வழங்கப்படுகிறது.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை நினைவு கூறும் வகையில், கூடுதலாக 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடியும் சேர்த்து, பருத்தி துணி வகைகளுக்கு உருப்படி ஒன்றுக்கு 30 விழுக்காடு அல்லது ரூ.150/- மற்றும் பட்டுத் துணி வகைகளுக்கு உருப்படி ஒன்றுக்கு 30 விழுக்காடு அல்லது ரூ.300/- இதில் எது குறைவோ அத்தொகை தள்ளுபடி மானியமாக செப்டம்பர் 15 ஆம் தேதி முதல் ஜனவரி 31 ஆம் தேதி வரை 139 நாட்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகிறது.

2022-2023 ஆம் நிதி ஆண்டில் தள்ளுபடி மானிய நிலுவைத் தொகையினை ஒப்பளிப்பு செய்வதற்காக மாநில அரசால் ஏற்கெனவே வழங்கப்பட்ட ரூ.150.00 கோடியிலிருந்து, கூடுதலாக ரூ.50.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மொத்தத் தொகையான ரூ.200.00 கோடி 852 தொடக்க கைத்தறி

2023 ஏப்ரல் 11]

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் (கோ-ஆப்டெக்ஸ்) ஆகியவற்றுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

தள்ளுபடி மானியத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 2023-24 ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் மதிப்பீட்டில் ரூ250.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.6 வட்டி மானியத் திட்டம்

தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள்மூலம் நபார்டு வங்கியின் மறு நிதியுதவித் திட்டத்தின்கீழ் பெற்று வரும் காசுக் கடனுக்கு வட்டி மானியம் வழங்கும் திட்டமானது 1956 ஆம் ஆண்டில் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டமானது 2002 ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்டு, 2008 ஆம் ஆண்டில் மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளால் விதிக்கப்படும் வட்டி விகிதத்தில் 6 விழுக்காடு வட்டி மானியம் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2022-23 ஆம் நிதியாண்டில் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூ.14.56 கோடி வட்டி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும், இத்திட்டத்திற்காக 2023-24 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.21.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3.7. கைத்தறி நெசவாளர்களுக்கு மானியத்துடன் கூடிய வீடு கட்டும் திட்டம்

கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருத்திற் கொண்டு, 2021-2022 ஆம் நிதியாண்டில் வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழும் கைத்தறி நெசவாளர்களுக்கு ரூ.4.00 இலட்சம் மானியத்துடன் கூடிய வீடு கட்டும் திட்டத்தினை அறிவித்தது. இதற்கான நிதி பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா 'அனைவருக்கும் வீடு' திட்டத்தின்கீழ் இணைந்து செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தின்கீழ், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் கிராமப்புறங்களில் 500 வீடுகளும், நகர்ப்புறங்களில்

500 வீடுகளும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் கிராமப்புறங்களிலும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்மூலம் நகர்ப்புறங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது,

பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா 'அனைவருக்கும் வீடு' என்ற திட்டத்தின்கீழ் ஒன்றிய மற்றும் மாநில அரசுகளால் வழங்கப்படும் மானியம்

வ. எண்.	மானியத் தொகை	PMAY கிராமப்புறம்	PMAY நகர்ப்புறம்
		(ரூபாயில்)	
1	ஒன்றிய அரசு பங்கு	79,200/-	1,50,000/-
2	தமிழக அரசின் பங்கு	1,72,800/-	60,000/-
3	மொத்த மானியம்	2,52,000/-	2,10,000/-
4	மாநில அரசின் கூடுதல் மானியம்	1,48,000/-	1,90,000/-
மொத்த மானியத் தொகை		**4,00,000/-**	**4,00,000/-**

2022-2023 ஆம் ஆண்டில், கிராமப்புறங்களில் 70 பயனாளிகளுக்கும், நகர்ப்புறங்களில் 511 பயனாளிகளுக்கும் வீடுகள் கட்ட கூடுதல் மானியமாக ரூ.10.74 கோடியை தமிழக அரசு அனுமதித்துள்ளது.

4. சமூக பாதுகாப்புத் திட்டங்கள்

நெசவாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்துள்ளவர்களது சமூகப் பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்கில் பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

4.1 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்

கைத்தறி நெசவாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கவும், அவர்களது எதிர்கால வாழ்க்கைக்குப் பாதுகாப்பு அளிக்கவும், மாநில அரசு,


2023 ஏப்ரல் 11]

1975 ஆம் ஆண்டு முதல், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள், அவர்கள் ஈட்டும் கூலியில் ஒரு ரூபாய்க்கு எட்டு பைசா வீதம் செலுத்தப்படும் பங்களிப்புத் தொகையும் மற்றும் மாநில அரசு அதற்கு இணையாக ஒரு ரூபாய்க்கு எட்டு பைசா வீதம் அளிக்கப்படும் பங்களிப்புத் தொகையும், அரசு கணக்கில் வைப்பீடு செய்யப்படுகிறது மற்றும் இவ்வைப்பீடு தொகைக்கு மாநில அரசு 6.5 விழுக்காடு வட்டி வழங்குகிறது.

இத்திட்டத்தின்கீழ் 50,590 நெசவாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2022-2023 ஆம் ஆண்டில், நெசவாளர்களின் பங்களிப்பிற்கு இணையான மாநில அரசு பங்காக ரூ.9.97 கோடி அனுமதித்துள்ளது மற்றும் 2021-22 ஆம் ஆண்டிற்குட்பட்ட திட்டத்திலுள்ள வைப்புத்தொகைக்கு 6.5 விழுக்காடு வட்டி ரூ.25.21 கோடி மாநில அரசால் வழங்கப்பட்டுள்ளது.

சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை



இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்காக மாநில அரசின் பங்களிப்பாக ரூ.12.00 கோடியும் மற்றும் 6.5 விழுக்காடு வட்டித் தொகையாக ரூ.25.00 கோடியும் வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.2 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

1997 ஆம் ஆண்டு முதல் கூட்டுறவு அமைப்பில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியத் திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 60 வயது நிரம்பிய உறுப்பினர்கள் முதியோர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர். இத்திட்டத்தின்கீழ் மாதம் ரூ.1000/- மாநில அரசால் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 26,434 கைத்தறி நெசவாளர்கள் முதியோர் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

2022-23 ஆம் ஆண்டில், முதியோர் ஓய்வூதியத் தொகையாக ரூ.32.49 கோடி அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4.3 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

தமிழ்நாடு அரசானது, காலஞ்சென்ற நெசவாளர்களின் குடும்ப நலனுக்காக தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டத்தை 01.01.1992 முதல் செயல்படுத்தி வருகிறது.

ஒரு கைத்தறி நெசவாளர் 60 வயதை அடையும் முன் இறக்க நேரிட்டால், நெசவாளர் இறந்த நாளிலிருந்து 10 ஆண்டுகள் அல்லது நெசவாளரின் 60 வயது வரை (காலஞ்சென்ற நெசவாளர் உயிருடன் இருந்திருந்தால்) இதில் எது அதிக பயனளிக்குமோ அவ்வகையில் நெசவாளரின் வாரிசுதாரருக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதந்தோறும் ரூ.1000/- வழங்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 11]

2022-2023 ஆம் ஆண்டில் 1,149 கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு ரூ.1.41 கோடி குடும்ப ஓய்வூதியத்தை அரசு அனுமதித்துள்ளது.

இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். தமிழ்நாடு முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியத் திட்டத்திற்கு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.35.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.4 கைத்தறி நெசவாளர் ஆயுள் காப்பீடு திட்டங்கள்

இந்திய அரசானது 2021-22 ஆம் ஆண்டில் தேசிய கைத்தறி மேம்பாட்டுத் திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தியுள்ளது. புதிய வழிகாட்டுதல்களின்படி, கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக 18 முதல் 50 வயதுக்குட்பட்டோருக்கு பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா (PMJJBY), *18 முதல் 70 வயது வரை உள்ளவர்களுக்கு பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா* (PMSBY) *மற்றும் 51 முதல் 59 வயது வரை உள்ளவர்களுக்கு மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா* (MGBBY) *போன்ற ஆயுள் காப்பீட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.*

திட்டங்களின் விவரம் பின்வருமாறு:

வ.எண்	திட்டத்தின் பெயர்	வயது	காப்பீட்டு தொகை பங்கு (ரூ.)			பயன் (ரூ. இலட்சத்தில்)				திட்டத்தில் உள்ள பயனாளிகளின் எண்ணிக்கை
			ஒன்றிய அரசு	மாநில அரசு/ பயனாளி	மொத்தம்	இறப்பு		ஊனம்		
						இயற்கை	விபத்து	நிரந்தரம்	பகுதி	
1.	PMJJBY	18-50	150	286	436	2.00	2.00	--	--	57,592
2.	PMSBY	18-70	12	8	20	--	2.00	2.00	1.00	25,613
3.	MGBBY	51-59	290	180	470	0.60	1.50	1.50	0.75	26,303

இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். இதற்காக 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் ரூ.92.71 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4.5 கைத்தறி நெசவாளர்களுக்கான மருத்துவ காப்பீட்டு திட்டம்

தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட "முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத்திட்டம், பிரதான் மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (AB-PMJAY) திட்டத்துடன் தற்போது இணைக்கப்பட்டுள்ளது. இந்த ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு குடும்பத்திற்கு ஆண்டுக்கு ரூ.5.00 இலட்சம் வரை காப்பீடு வழங்கப்படுகிறது. ஒருங்கிணைந்த மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அனைத்து தகுதியான நெசவாளர்களையும் சேர்த்துக்கொள்ள அரசு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

மேற்படி திட்ட காலமானது 11.01.2022 முதல் 10.01.2027 வரையும் செயல்பாட்டில் உள்ளதால், தற்போது வரையில் 59,750 கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

4.6 நல வாரியங்கள்

4.6.1 தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவு தொழிலாளர் நல வாரியம்

தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவு தொழிலாளர் நல வாரியம் உட்பட தமிழ்நாடு கைத்தறி தொழிலாளர் வாரியம் மற்றும் 9 பிற நல வாரியங்கள் நெசவாளர்களின் நலனை உறுதி செய்வதற்காக 2000-2001 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவு தொழிலாளர்கள் நல வாரியம் 21.07.2004 முதல் உடலுழைப்பு தொழிலாளர்கள் நல வாரியத்துடன் இணைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவு தொழிலாளர்கள் நல வாரியம் 01.09.2006 முதல் தொழிலாளர் நலத் துறையின் கட்டுப்பாட்டில் தனியாக இயங்கி வருகிறது.

நிதி உதவி, கல்வி உதவி, இயற்கை மற்றும் விபத்து மரணம் மற்றும் இயலாமைக்கான காப்பீட்டுத் தொகைகீழ்க்காணும் விவரங்களின்படி தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவு தொழிலாளர்கள் நல வாரியத்தால் வழங்கப்படுகிறது:

2023 ஏப்ரல் 11]

வ. எண்	இனம்	ஒரு நபருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்)
1	விபத்து காப்புறுதி திட்டம் அ) விபத்தால் மரணம்	1,25,000
	ஆ) விபத்தால் ஊனம் (ஊனத்தின் தன்மையை பொருத்து)	1,00,000 வரை
	இ) செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி	
2	இயற்கை மரணம்	30,000
3	ஈமச்சடங்கு உதவி	5,000
4	கல்வி உதவித் தொகை	
	i) 10 ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை	1,000
	ii) 10 ஆம் வகுப்பு தேர்ச்சி	1,000
	iii) 11 ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை	1,000
	iv) 12 ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை	1,500
	v) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி	1,500
	vi) இளநிலை பட்டப்படிப்பு	1,500
	vii) இளநிலை பட்டப்படிப்பு (விடுதி)	1,750
	viii) முதுநிலை பட்டப்படிப்பு	4,000
	ix) முதுநிலை பட்டப்படிப்பு (விடுதி)	5,000
	x) தொழில்நுட்ப படிப்பு (Professional Degree)	4,000
	xi) தொழில்நுட்ப படிப்பு (விடுதி)	6,000
	xii) தொழில்நுட்ப மேற்படிப்பு	6,000
	xiii) தொழில்நுட்ப மேற்படிப்பு (விடுதி)	8,000
	xiv) ஐடிஐ / பட்டயப் படிப்பு	1,000
	xv) ஐடிஐ / பட்டயப் படிப்பு (விடுதி)	1,200

வ. எண்	இனம்	ஒரு நபருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்)
5	திருமண உதவி	
	அ) ஆண்	3,000
	ஆ) பெண்	5,000
6	மருத்துவ உதவிகள்	
	i) மகப்பேறு உதவி	6,000
	ii)கருச்சிதைவு	3,000
	iii) மூக்குக்கண்ணாடி	500 வரை
7	ஓய்வூதியம் (மாதம் ஒன்றுக்கு)	1,000

தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெசவு தொழிலாளர்கள் நல வாரியத்தில் 31.03.2022 வரை 1,11,935 நெசவாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2022-23 நிதியாண்டில், 28.02.2023 வரை 3,537 புதிய நெசவாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 2022-23 ஆம் ஆண்டில் 28.02.2023 வரை 15,135 பயனாளிகளுக்கு ரூ.13.98 கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

4.6.2 தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர் நல வாரியம்

விசைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம் 1982-ன்கீழ் “தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர் நலவாரியம்“ என்ற அமைப்பினை தமிழக அரசு உருவாக்கியது.

இந்த நலவாரியத்தின்மூலம் விபத்துக் காப்பீட்டுப் பயன், இயற்கை மரணத்திற்கான காப்பீட்டுப் பயன், ஈமச்சடங்கு செலவினத்திற்கான உதவித் தொகை, கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி வாங்குவதற்கும் மற்றும் ஓய்வூதியப் பயன் போன்றவற்றிற்கான உதவித் தொகைகள் விசைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 11]

இவ்வாரியத்தில் 28.02.2023 வரை 89,000 விசைத்தறி நெசவாளர்கள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, 2022-2023 ஆம் ஆண்டில் 28.02.2023 வரை, ரூ.8.42 கோடி நிதியுதவி 10,583 தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

5. கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்


5.1 ஒன்றிய நிதி உதவித் திட்டம்

5.1.1 குழும வளர்ச்சித் திட்டம்

ஒன்றிய அரசு 2021-22 முதல் 2025-2026 வரையிலான ஆண்டுகளுக்கு தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்த திருத்திய வழிகாட்டுதல்களை அளித்துள்ளது. தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ், குழும வளர்ச்சித் திட்டமானது கூட்டுறவு சார்ந்த மற்றும் சாராத கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகச் செயல்படுத்தப்படும் ஒரு திட்டமாகும்.

இத்திட்டத்தின்கீழ் ஒரு குழும வளர்ச்சித் திட்டம் அமைக்க ஒன்றிய அரசின் அதிகபட்ச அனுமதிக்கப்பட்ட நிதியாக ரூ.200.00 இலட்சம்கீழ்க்குறிப்பிட்டுள்ள 4 இனங்களுக்கு வழங்கப்படுகிறது:

குழுமு வளர்ச்சி திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதி உதவி



வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இனம்		நிதியுதவி (ரூபாய் இலட்சத்தில்)
1	ஹத்கர்கா சம்வர்தன் சஹாயதா அதாவது தறிகள்/உபகரணங்கள்,மின் விளக்குகள், தனித் தறிகூடம் அமைத்தல், பொது தறிக்கூடம் அமைத்தல், பொது தறிக்கூடத்திற்கு சோலார் மின் விளக்குகள் பொருத்துதல். தனித் தறிக்கூடம் அமைக்க ரூ.150.00 இலட்சத்தில் மூன்றில் ஒரு பங்கு மட்டுமே நிதியுதவி வழங்கப்படும்,	150.00
2	வடிவமைப்பாளர் நியமித்தல்	15.00
3	திட்ட மேலாண்மை செலவு	15.00
4	இதர இனங்கள்	20.00
மொத்தம்		200.00

தமிழ்நாடு அரசு 2021-2022 வரை 58 குழும வளர்ச்சித் திட்டங்களை ரூ.8863.59 இலட்சம் திட்ட மதிப்பீட்டில் மேற்கொண்டுள்ளது. இதுவரை ஒன்றிய அரசால் ரூ.6258.15 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளதில், ரூ.5777.94 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 39,315 கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.

ஒன்றிய அரசு 2022-2023 ஆம் ஆண்டில், 1,870 நெசவாளர்கள் பயனடையும் வகையில் மொத்த திட்ட மதிப்பீடான ரூ.933.943 இலட்சத்தில் பின்வரும் 8 புதிய குழுமங்களுக்கு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது:

வ. எண்	குழும வளர்ச்சித் திட்டத்தின் பெயர்/மாவட்டம்	செயலாக்க முகமை	பயனாளிகளின் எண்ணிக்கை	மொத்த திட்டத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)
1	எமனேஸ்வரம்-1 குழுமம், இராமநாதபுரம்	கலைமகள் கைத்தறி நெ.கூ. சங்கம்	223	190.310

2023 ஏப்ரல் 11]

வ. எண்	குழும வளர்ச்சித் திட்டத்தின் பெயர்/மாவட்டம்	செயலாக்க முகமை	பயனாளிகளின் எண்ணிக்கை	மொத்த திட்டத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)
2.	பாரத ரத்னா எம்.ஜி.ஆர் குழுமம், சேலம்	கைத்தறி துறை, சென்னை	200	130.800
3	ஸ்ரீ சௌடேஸ்வரி குழுமம், சேலம்	கைத்தறி துறை, சென்னை	346	116.790
4	அன்னை பவானி குழுமம், ஈரோடு	அன்னை பவானி தொடக்க கைத்தறி நெ.கூ. உ & வி. சங்கம்	354	98.00
5	கிள்ளியூர் குழுமம், கன்னியாகுமரி	ஆக்க விளாகம் தொடக்க கைத்தறி நெ.கூ. உ & வி. சங்கம்	200	111.150
6	நசியனூர் குழுமம், ஈரோடு	நசியனூர் தொடக்க கைத்தறி நெ.கூ. சங்கம்	205	92.300
7	காஞ்சிபுரம் குழுமம், காஞ்சிபுரம்	காஞ்சிபுரம் திருவள்ளுவர் பட்டு கைத்தறி நெ.கூ. சங்கம்	150	117.893
8	திண்டுக்கல் குழுமம், திண்டுக்கல்	ஸ்ரீ கௌரியம்மன் பருத்தி (ம) பட்டு கைத்தறி நெ.கூ. சங்கம்	192	76.700
மொத்தம்			**1870**	**933.943**

இத்திட்டம் நெசவுக்கு முந்தைய மற்றும் பிந்தைய பணிகளை மேற்கொள்ள மற்றும் தொழில்நுட்ப ரீதியாக மேம்படுத்தப்பட்ட தறி மற்றும் உபகரணங்களை வழங்குவதன்மூலம் கைத்தறி நெசவாளர்களின் உடல் உழைப்பினை குறைக்கிறது.

5.1.2 நெசவாளர் முத்ரா திட்டம்

2016-2017 ஆம் ஆண்டு ஒன்றிய அரசின் தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கமாக "நெசவாளர் முத்ரா திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் கைத்தறி தொழிலுக்கு விளிம்புத் தொகையாக 20 விழுக்காடும், வங்கிகளால் விதிக்கப்படும் வட்டி விகிதத்திற்கும், பயனாளிகள் செலுத்தும் 6 விழுக்காடு வட்டிக்கும் உள்ள வித்தியாசத் தொகையில், 7 விழுக்காட்டிற்கு மிகாமல் சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு வட்டி மானியமாக மூன்றாண்டுகளுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது.

2021-2022 முதல் 2025-2026 வரையிலான காலத்திற்கு வழங்கப்படும் விளிம்பு தொகை விவரம் பின்வருமாறு:

1. கைத்தறி நெசவாளர் / நெசவு தொழில் முனைவோருக்கு வழங்கப்படும் கடன் தொகையில் 20 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.25,000/- மானியமாக வழங்கப்படுகிறது.
2. குறைந்தபட்சம் 100 நெசவாளர்கள் / தொழிலாளர்கள் பணிபுரியும் கைத்தறி அமைப்புகள் / நிறுவனங்களுக்கு அதிகபட்சமாக ரூ.20.00 இலட்சம் வரையில் கடன் தொகையும், மானியத் தொகையாக ரூ.2.00 இலட்சமும் வழங்கப்படுகிறது.

வங்கி விதிமுறைகளின்படி கூடுதல் விளிம்புத் தொகை தேவை இருப்பின் பயனாளி நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படும்.

இத்திட்டத்தின்கீழ், 2022-23 ஆம் ஆண்டிற்கு, 13,618 பயனாளிகளுக்கு முத்ரா கடன் தொகையாக ரூ.66.70 கோடி வழங்கப்பட்டுள்ளது.

5.1.3 கைத்தறி சந்தைப்படுத்துதலுக்கான நிதியுதவி

தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் தேசிய கைத்தறி கண்காட்சிகள், மாநில கைத்தறி கண்காட்சிகள் மற்றும் மாவட்ட

2023 ஏப்ரல் 11]

அளவிலான கைத்தறி கண்காட்சிகள் நடத்த ஒன்றிய அரசால் நிதியுதவி வழங்கப்படுகிறது. இக்கண்காட்சிகள் நடத்துவதற்கு வழங்கப்படும் நிதியுதவி விவரம் பின்வருமாறு:-

வ. எண்	**விவரம்**	**வழங்கப்படும் நிதியுதவி (ரூபாய் இலட்சத்தில்)**
1.	*தேசிய கைத்தறி கண்காட்சி*	*45.00*
2.	*மாநில கைத்தறி கண்காட்சி*	*30.00*
3.	*மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சி*	*6.00*

2022-2023 ஆம் ஆண்டில் ஒரு தேசிய கைத்தறி கண்காட்சி, நான்கு மாநில கைத்தறி கண்காட்சி மற்றும் இரண்டு மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சிகள் நடத்த ரூ.158.62 இலட்சம் ஒன்றிய அரசால் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

சேலம், கும்பகோணம், ஈரோடு, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மாநில கைத்தறி கண்காட்சியும், இராமநாதபுரம் மற்றும் கடலூரில் மாவட்ட அளவிலான கைத்தறி கண்காட்சியும் நடத்தப்பட்டு ரூ.362.04 இலட்சம் விற்பனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், சென்னையில் 29-3-2023 அன்று துவங்கியுள்ள தேசிய கைத்தறி கண்காட்சியில் 80-க்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், பிற மாநிலங்களைச் சேர்ந்த கைத்தறி நிறுவனங்களும் பங்கேற்றுள்ளன.

இந்தத் திட்டமானது கைத்தறி இரகங்களை வெளி சந்தைகளில் விற்பனை மேற்கொள்ள பெரிதும் உதவுகிறது. இத்திட்டம் 2023-2024 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

5.2 ஒன்றிய மற்றும் மாநில அரசின் பகிர்வு திட்டம்

5.2.1 விற்பனை ஊக்குவிப்புத் திட்டம்

விற்பனை ஊக்குவிப்புத் திட்டம் என்பது இந்திய அரசின் தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் (NHDP) ஒரு அங்கமாகும். இத்திட்டத்தில், கைத்தறி நிறுவனங்களின் விற்பனையினை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதியுதவி

[2023 ஏப்ரல் 11

அளிக்கப்படுகிறது. இத்திட்டம் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை வெளிச்சந்தையில் போட்டியிட்டு நிலைத்திட உதவுகிறது. மேலும், இத்திட்டம் கைத்தறி பொருட்களின் விலையினைக் குறைத்திடவும், சந்தைபடுத்தும் நடவடிக்கையினை மேம்படுத்தவும் உதவுகிறது.

தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கடந்த 3 ஆண்டுகளின் சராசரி விற்பனையில் 10 விழுக்காடு விற்பனை ஊக்குவிப்புத் தொகை பெற தகுதியுடையவை, இது ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் 50:50 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளப்படுகிறது.

திட்ட காலமான 5 வருடத்தில் (2021-22 முதல் 2025-26 வரை) அதிகபட்சமாக 3 ஆண்டுகளுக்கு விற்பனை ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும். தகுதியான கைத்தறி நிறுவனங்கள் மற்றும் நிதி உதவியின் விவரம் பின்வருமாறு:

தகுதியுடைய கைத்தறி நிறுவனங்கள்	**அதிக பட்ச ஊக்குவிப்புத் தொகை**	**நிதி உதவி**
மாநில அளவிலான கைத்தறி நிறுவனம், மாநில அளவிலான கூட்டுறவு சங்கம் மற்றும் தேசிய அளவிலான கூட்டுறவு சங்கம்	ரூ.100 இலட்சம் (ஒன்றிய அரசு பங்கு)	மூன்று ஆண்டுகளின் சராசரி விற்பனையில் 10 சதவிகிதம்
தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்	ரூ.15.00 இலட்சம் (ஒன்றிய அரசு பங்கு)	

விற்பனை ஊக்குவிப்புத் திட்டத்தை செயல்படுத்துவதற்காக 2023-24 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் ரூ.32.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 11]

5.2.2 பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டு பூங்கா, காஞ்சிபுரம்

பட்டு கைத்தறி இரகங்களின் உற்பத்தியை மேம்படுத்தவும், உலகத் தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய ஒருங்கிணைந்த கைத்தறி பணிகளை மேற்கொள்ளவும் பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப் பூங்கா 2010-ல் காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டது.

இப்பட்டுப் பூங்காவானது 75 ஏக்கர் நிலப்பரப்பில் காஞ்சிபுரம் மாவட்டம்,கீழ்கதிர்ப்பூர் கிராமத்தில் ரூ.82.56 கோடி திட்ட மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ளது.

இப்பட்டுப் பூங்காவிற்காக நிலம் கொள்முதல், நிலத்தை மேம்படுத்துதல், நீர் ஆதாரத்திற்காக ஆழ்துளைக் கிணறுகள், இணைச் சாலைகள், தொழிற்சாலைக் கட்டடங்கள் அமைத்தல், ஆலோசனை கட்டணங்கள் மற்றும் பிற செலவினங்களுக்காக இதுவரை ரூ.38.95 கோடி செலவிடப்பட்டுள்ளது.

பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப் பூங்காவின் முக்கிய சிறப்பம்சங்கள் பின்வருமாறு:

- கைத்தறி நெசவாளர்கள், வடிவமைப்பாளர்கள், சாயத் தொழிலாளர்கள் மற்றும் இதர கைத்தறி தொடர்பான உப தொழில் புரிபவர்கள் என நேரடியாக மற்றும் மறைமுகமாக 18,000 நபர்கள் வேலைவாய்ப்பு பெறுவார்கள்.
- பூங்காவின் உத்தேச முதலீடு ரூ.120.00 கோடி.
- பூங்காவின் உத்தேச விற்றுமுதல் ரூ.278.00 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- திட்டமிடப்பட்டுள்ள 24 கைத்தறி நெசவு கூடங்களில், 11 நெசவு கூடங்களின் கட்டுமான பணிகள் நிறைவடைந்துள்ளன.
- தற்போது 6 கைத்தறி நெசவு கூடங்கள் 135 தறிகளுடன் இயக்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் 500 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.
- 5 நெசவு கூடங்களில் தறிகள் நிறுவும் பணி நடைபெற்று வருகிறது.
- சாலைகள், தண்ணீர், மின்சாரம், எல்லைச் சுவர் அமைத்தல் போன்ற உட்கட்டமைப்பு பணிகள் நிறைவடைந்துள்ளன.

[2023 ஏப்ரல் 11

5.3 மாநில அரசுத் திட்டங்கள்

5.3.1 கைத்தறி ஆதரவுத் திட்டம்

மாநிலத்தில் கைத்தறி தொழிலைத் தக்கவைக்க உரிய முன்னெடுப்புகளை மேற்கொள்ளும் நோக்கில் கைத்தறி ஆதரவுத் திட்டமானது அரசால் அறிமுகப்படுத்தப்பட்டு, பல்வேறு இனங்களுக்கு 3 ஆண்டுகளாக நிதி உதவி வழங்கப்பட்டு வருகின்றது.

கைத்தறி ஆதரவுத் திட்டத்தின் தொழில்நுட்ப மேம்பாடு இனத்தின்கீழ் 27,250 கைத்தறி நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர். இது தவிர, சந்தைப்படுத்தக்கூடிய இரகங்களை உற்பத்தி செய்ய உதவும் வகையில் பரவலான முறையில் சந்தைப்படுத்துதல், வணிகக்குறியீடு பிரபலப்படுத்துதல், வடிவமைப்பு மேம்பாடு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி உள்ளிட்டவை கைத்தறி ஆதரவுத் திட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டம் 2023-24 ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக 2023-24 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.3.2 விருதுகள்

1. சிறந்த ஏற்றுமதியாளர் விருது

கைத்தறி துணிகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், வெளிநாட்டு சந்தைகளில் கைத்தறி துணி விற்பனையை மேம்படுத்தவும், தமிழ்நாடு அரசால் சிறந்த ஏற்றுமதியாளர் விருது வழங்கும் திட்டம் 1975 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு கேடயங்கள் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்க ஒவ்வொரு ஆண்டும் ரூ.1.00 இலட்சம் நிதி அரசால் வழங்கப்பட்டு வருகின்றது.

2021-2022 ஆம் ஆண்டில் முதல் மூன்று ஏற்றுமதியாளர்களுக்கு சிறந்த ஏற்றுமதியாளர் விருது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.08.2022 அன்று வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு 2023-2024 ஆண்டில் ரூ.1.00 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023 ஏப்ரல் 11]

2. திறன்மிகு நெசவாளர்கள் விருது

கவர்ச்சியான வடிவமைப்புகளுடன் கூடிய பட்டு மற்றும் பருத்தி புடவைகள், வேட்டிகள் மற்றும் கைத்தறி ஏற்றுமதி இரகங்களை உற்பத்தி செய்யும் நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் “திறன்மிகு நெசவாளர் விருது” 20 பிரிவுகளில் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

கைத்தறி இரகங்களின் காட்சித் தோற்றம், வண்ணக் கலவை, வடிவமைப்பில் தனித்தன்மை, கூடுதல் வேலைப்பாடுகள் மற்றும் இரகங்களின் சிறப்பு அம்சங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் விருதுக்கான பயனாளிகள் மாநில அளவிலான குழுவால் தேர்வு செய்யப்படுகின்றனர்.

இவ்விருதின்கீழ், 20 பிரிவுகளில் முதல் பரிசு, இரண்டாம் பரிசு மற்றும் மூன்றாம் பரிசு என 60 திறன்மிகு கைத்தறி நெசவாளர்களுக்கு பின்வரும் விவரப்படி பரிசுத்தொகைகள் வழங்கப்படுகின்றன.

முதல் பரிசு	*10,000*
இரண்டாம் பரிசு	*6,000*
மூன்றாம் பரிசு	*4,000*

இத்திட்டத்திற்கான செலவினத் தொகை ரூ.4.00 இலட்சம், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

3. மாநில அளவிலான சிறந்த நெசவாளர்கள் மற்றும் சிறந்த வடிவமைப்பாளர்கள் விருது

புதுமையான மற்றும் கண்கவர் வடிவமைப்புகளைப் புகுத்தி தற்போதைய சந்தைத் தேவைக்கேற்ப பட்டு மற்றும் பருத்தி கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்து வரும் கைத்தறி நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில் "சிறந்த நெசவாளர் விருது" வழங்கும் திட்டம் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பருத்தி மற்றும் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் துணி இரகங்களை சந்தைப்படுத்த ஏதுவாக நவீன வடிவமைப்புகளை திறம்பட உருவாக்கி வழங்கும் வடிவமைப்பாளர்களைக் கௌரவிக்கும் வகையில் "சிறந்த வடிவமைப்பாளர் விருது" வழங்கும் திட்டமும் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021-2022 ஆம் ஆண்டுக்கு பட்டு மற்றும் பருத்தி இரகங்களுக்கு சிறந்த நெசவாளர் விருதானது ரூ.20.00 இலட்சம் மதிப்பிலான பரிசுத் தொகை மற்றும் சான்றிதழ்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 08.08.2022 அன்று வழங்கி கௌரவிக்கப்பட்டது.

2021-2022 ஆம் ஆண்டின் மூன்று சிறந்த வடிவமைப்பாளர்களுக்கு விருதுகள் 7-8-2022 அன்று மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

சிறந்த கைத்தறி நெசவாளர் விருது மற்றும் சிறந்த வடிவமைப்பாளர் விருதுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகைகள் விவரம் பின்வருமாறு:

வ. எண்	**விவரம்**	**முதல் பரிசு (ரூ.)**	**இரண்டாம் பரிசு (ரூ.)**	**மூன்றாம் பரிசு (ரூ.)**	**மொத்த பரிசுத் தொகை (ரூ.)**
1.	சிறந்த நெசவாளர் (பட்டு இரகம்)	500000	300000	200000	1000000
2.	சிறந்த நெசவாளர் (பட்டு இரகம்)	500000	300000	200000	1000000
3.	சிறந்த வடிவமைப் பாளர்	25000	10000	5000	40000
மொத்தம்		**1025000**	**610000**	**405000**	**2040000**

2023 ஏப்ரல் 11]

இத்திட்டத்தினை 2022-2023 ஆண்டில் செயல்படுத்தும் பொருட்டு ரூ.20.40 இலட்சம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டமானது 2023-24 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

4. மாநில அளவில் இளம் வடிவமைப்பாளர்களிடமிருந்து சிறந்த வடிவமைப்புகள்

இளம் தலைமுறையினரிடையே கைத்தறி இரகத்தின்மீது பிணைப்பை ஏற்படுத்தவும், அவ்வப்போது மாறி வரும் நவீன சந்தையின் தேவையினை அறிந்து புதிய வாடிக்கையாளர்களை கவர ஏதுவாகவும், கைத்தறி இரகங்களில் புதுமையினை புகுத்தி விற்பனையினை அதிகரித்திடும் நோக்கிலும், மாநில அளவில் இளம் வடிவமைப்பாளர்களிடமிருந்து சிறந்த வடிவமைப்புகளை போட்டித் தேர்வின்மூலம் தேர்வு செய்யும் திட்டமானது அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள வடிவமைப்பு நிறுவனங்கள் / ஜவுளி தொழில்நுட்ப கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களுக்கு இடையே இப்போட்டி நடத்தப்படுகிறது.

போட்டித் தேர்வுமூலம் தேர்வு செய்யப்படும் முதல் 3 சிறந்த வடிவமைப்புகளுக்கு முதல் பரிசாக ரூ.1,00,000/-, இரண்டாம் பரிசாக ரூ.75,000/- மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.50,000/- வழங்கப்படும்.

இதற்கான செலவினத் தொகை ரூ.10.00 இலட்சம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

5.3.3 கல்வி உதவித்தொகை

1. டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின்கீழ் கல்வி உதவித்தொகை வழங்குதல்

நெசவாளர்களின் குழந்தைகள் உயர்கல்வி பயில ஊக்குவிக்கும் பொருட்டு, டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை 1986 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு வருடமும் பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் முதல் ஐந்து இடம் பெறும் 5 மாணவர்கள் மற்றும் 5 மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 11

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பில் பெறப்பட்ட மதிப்பெண்கள் அல்லது பட்டப் படிப்பில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் 40 பாடப்பிரிவுகளில் மாணாக்கர்கள் தங்கள் படிப்பை முடிக்கும் காலம் வரை ஆண்டொன்றுக்கு ரூ.1,000/- முதல் ரூ.7,500/- வரை கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் மொத்தம் 400 மாணாக்கர்கள் (200 மாணவர்கள் மற்றும் 200 மாணவியர்கள்) உதவித் தொகை பெறுகின்றனர்.

இத்திட்டம் 2023-24 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

2. தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குழந்தைகளை ஊக்குவிக்கும் பொருட்டு, 2008 ஆண்டு முதல் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் அதிக மதிப்பெண் பெறும் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித்தொகை பின்வருமாறு:

வரிசை	ஊக்கத் தொகை (ரூ)	
	பத்தாம் வகுப்பு	பன்னிரெண்டாம் வகுப்பு
1	5,000	10,000
2	3,000	7,500
3	2,000	5,000

3. சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்பக் கழக மாணவர்களுக்கு உதவித்தொகை

கைத்தறி நெசவாளர்களின் வாரிசுகளை ஊக்குவிக்கும் விதமாக, சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்ப நிறுவனத்தில் (IIHT) கைத்தறி மற்றும் ஜவுளி தொழில்நுட்பத்தில்

2023 ஏப்ரல் 11]

(DHTT) *பட்டயப் படிப்புக்கான விண்ணப்பதாரர்களைத் தேர்ந்தெடுப்பதில் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.*

தமிழ்நாடு அரசும் 1977 முதல் இந்திய கைத்தறி தொழில்நுட்ப நிறுவனம். சேலத்தில் பயிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை பின்வருமாறு வழங்கி வருகிறது:

ஆண்டு	**ஒரு மாதத்திற்கான உதவித்தொகை ஒரு மாணாக்கருக்கு**	**ஒன்றிய அரசின் பங்கு 50 விழுக்காடு**	**தமிழக அரசின் பங்கு 50 விழுக்காடு**
	(தொகை ரூ.)		
முதலாம் ஆண்டு	*2500*	*1250*	*1250*
இரண்டாம் ஆண்டு	*2500*	*1250*	*1250*
மூன்றாம் ஆண்டு	*2500*	*1250*	*1250*

தமிழ்நாடு அரசு ஒதுக்கீட்டின்கீழ் கடக் (கர்நாடகா), வெங்கடகிரி (ஆந்திரப் பிரதேசம்) மற்றும் கண்ணூர் (கேரளா) ஆகிய இடங்களில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்ப நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணாக்கர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித்தொகையில் தமிழக அரசின் பங்கினை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு கல்வி நிதியில் இருந்து வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின்மூலம் 79 மாணக்கர்களுக்கு 2022-2023 ஆண்டுக்கான உதவித் தொகை ரூ.10,12,500/- வழங்கப்பட்டுள்ளது.

[2023 ஏப்ரல் 11

6. கைத்தறிகளின் மேம்பாட்டிற்கான சட்டங்கள் மற்றும் முத்திரைகள்

6.1 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985

இச்சட்டம், கைத்தறியில் மட்டுமே பிரத்யேகமாக உற்பத்தி மேற்கொள்வதற்காக குறிப்பிட்ட இரகங்களை ஒதுக்கீடு செய்து, கைத்தறிப் பிரிவினை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தற்போது கீழ்க்காணும் 11 இரகங்கள் கைத்தறியில் பிரத்யேகமாக உற்பத்தி செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

(1)	சேலை	(2)	வேட்டி
(3)	துண்டு / கம்சா மற்றும் அங்கவஸ்திரம்	(4)	லுங்கி
(5)	ஜடார் மேகலா/ பாநெக்	(6)	ஜமக்காளம்/ டர்ரி (அ) டர்ரட்
(7)	டிரஸ் மெட்டீரியல்	(8)	பேரெக் பிளாங்கெட், கம்பல் (அ) கம்பளி
(9)	ஷால், லாய், மப்ளர், பங்கி	(10)	உல்லன் ட்வீடு
(11)	கேஸ், பெட்ஷீட், பெட் கவர், கவுண்டர்பேன், பர்னிசிங் (டேப்பஸ்டிரி மற்றும் அப்ஹோல்ஸ்டிரி உட்பட)		

சென்னை, கைத்தறி ஆணையரகத்தில், துணை இயக்குநர் (அமலாக்கம்) அலுவலகத்தினை தலைமையிடமாகக் கொண்டு, பிரத்யேகமான அமலாக்கப் பிரிவும், அதன் நிர்வாகக் கட்டுப்பாட்டில் சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் 5 உதவி அமலாக்க அலுவலர் அலுவலகங்களும் தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985-ன்கீழ் 2022-2023 ஆம் ஆண்டில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட விவரம் பின்வருமாறு :

2023 ஏப்ரல் 11]

வ. எண்	மண்டலத்தின் பெயர்	2022-2023 ஆம் ஆண்டுக்கு விசைத்தறிகள் ஆய்வு மேற்கொள்ள நிர்ணயிக்கப்பட்ட குறியீடு	விசைத்தறிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டவை	2022-2023 ஆம் ஆண்டில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை	தண்டனை வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (கடந்த ஆண்டு நிலுவையிலுள்ள வழக்குகளும் சேர்த்து)	விழிப்புணர்வு கூட்டங்கள்	கலந்து கொண்டவர்கள்
1	ஈரோடு	*7350*	*7734*	*9*	*15*	*34*	*554*
2	மதுரை	*4000*	*4570*	*5*	*7*	*24*	*453*
3	சேலம்	*6000*	*6793*	*11*	*7*	*37*	*939*
4	திருச்செங்கோடு	*7350*	*8589*	*12*	*16*	*36*	*711*
5	திருப்பூர்	*6900*	*7972*	*8*	*8*	*36*	*702*
6	சென்னை	*400*	*1337*	*0*	*0*	*8*	*219*
மொத்தம்		**32000**	**36995**	**45**	**53**	**175**	**3578**

[2023 ஏப்ரல் 11

6.2 புவிசார் குறியீடு பொருட்கள் சட்டம், 1999-ன்கீழ் கைத்தறி உற்பத்தி இரகங்களை பதிவு செய்தல்

காஞ்சிபுரம் பட்டுச் சேலை, பவானி ஜமக்காளம், மதுரை சுங்குடிச் சேலை, சேலம் பட்டு வேட்டி (வெண்பட்டு), ஆரணி பட்டுச் சேலை, கோவை கோரா காட்டன் சேலை, திருபுவனம் பட்டுச் சேலை, கண்டாங்கி சேலை ஆகியவை கைத்தறித் துறையால் புவிசார் குறியீடு பொருட்கள் (பதிவு செய்தல் மற்றும் பாதுகாப்பு) சட்டம், 1999, குறிப்பிட்ட பிராந்தியத்தில் உற்பத்தி செய்யப்படும் இந்தச் சிறப்புப் பொருட்களுக்கு சட்டப்பூர்வ பாதுகாப்பை வழங்குவதற்காகவும், புவிசார் குறியீடு சட்டத்தில் பதிவு செய்யப்பட்ட தயாரிப்புகளை, அங்கீகரிக்கப்படாத மற்றும் தவறாகப் பயன்படுத்துவதில் இருந்து உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களைப் பாதுகாக்கிறது.

புவிசார் குறியீடு சட்டத்தின்கீழ் பொருட்களைப் பதிவு செய்வது, அத்தகைய பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பது மட்டுமல்லாமல், மற்ற நாடுகளில் அவற்றின் பயன்பாடு மற்றும் விற்பனையைப் பாதுகாக்கிறது, இது உலக வர்த்தக அமைப்பின் (WTO) *வர்த்தக அறிவுசார் சொத்து உரிமைகள்* (TRIPS) *ஒப்பந்தத்தின்கீழ் வருகிறது.*

தமிழ்நாடு மாநிலத்தின் பாரம்பரியமிக்க கைத்தறி இரகங்களை தற்போது வரை புவிசார் குறியீடு சட்டத்தின்கீழ் பதிவு செய்துள்ள பயனாளிகள் விவரங்கள் பின்வருமாறு உள்ளது:

வ. எண்	புவிசார் குறியீடு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் கைத்தறி இரகம்	புவிசார் குறியீடு பதிவு எண் மற்றும் ஆண்டு	புவிசார் குறியீடு சட்டத்தின்கீழ் பதிவு செய்திருக்கும் பயனாளிகளின் எண்ணிக்கை
1	*காஞ்சிபுரம் பட்டு சேலைகள்*	*புவிசார் குறியீடு எண் 06/2004 நாள் 7-10-2004*	*21 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 10 தனியார் உற்பத்தியாளர்கள்*
2	*பவானி ஜமக்காளம்*	*புவிசார் குறியீடு எண் நாள் 25-10-2004*	*30 பருத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்*

2023 ஏப்ரல் 11]

வ. எண்	புவிசார் குறியீடு சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கும் கைத்தறி இரகம்	புவிசார் குறியீடு பதிவு எண் மற்றும் ஆண்டு	புவிசார் குறியீடு சட்டத்தின்கீழ் பதிவு செய்திருக்கும் பயனாளிகளின் எண்ணிக்கை
3	மதுரை சுங்குடிச் சேலைகள்	புவிசார் குறியீடு எண் 16/2005 நாள் 24-1-2005	02 பருத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்
4	சேலம் வெண்பட்டு வேட்டிகள்	புவிசார் குறியீடு எண் 56/2007 நாள் 16-5-2007	08 பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்
5	கோரா காட்டன் சேலைகள்	புவிசார் குறியீடு எண் 57/2007 நாள் 25-4-2007	60 பருத்தி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்
6	ஆரணி பட்டு சேலைகள்	புவிசார் குறியீடு எண் 58/2007 நாள் 25-7-2007	04 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்
7	கண்டாங்கி சேலைகள்	புவிசார் குறியீடு எண் 422/2019 நாள் 30-8-2019	01 பருத்தி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்
8	திருபுவனம் பட்டு சேலைகள்	புவிசார் குறியீடு எண் 342/2019 நாள் 15-4-2019	02 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்

கோயம்புத்தூர் நெகமம் சேலைகள், திருநெல்வேலி செடிபுட்டா சேலைகள் மற்றும் திருச்சி உறையூர் பருத்தி சேலைகள் புவிசார் குறியீடு சட்டத்தின்கீழ் பதிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

[2023 ஏப்ரல் 11

6.3 கைத்தறி மற்றும் பட்டு உற்பத்தி இரகங்களை மேம்படுத்துவதற்கான முத்திரை சான்றிதழ்கள்

இத்திட்டத்தின்கீழ் கைத்தறி மற்றும் பட்டு உற்பத்தி இரகங்களின் நம்பகத்தன்மையினை உறுதி செய்வதற்கும் மற்றும் பிரத்யேக அடையாளத்தை வழங்குவதற்காகவும் இந்திய அரசு கைத்தறி முத்திரை, பட்டு முத்திரை மற்றும் இந்திய கைத்தறி வணிகச் சின்னம் ஆகியவற்றை நடைமுறைபடுத்தியுள்ளது.

1. கைத்தறி முத்திரை

கைத்தறி தயாரிப்புகளுக்கு பிரத்யேக அடையாளத்தை உருவாக்கவும், உள்நாடு மற்றும் சர்வதேச சந்தைகளில் அதன் சந்தைப்படுத்துதலை மேம்படுத்தவும், 28.06.2006 அன்று ஒன்றிய அரசால் "கைத்தறி முத்திரை திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது.

2. பட்டு முத்திரை

உள்நாடு மற்றும் சர்வதேச சந்தையில் தூய்மையான மற்றும் இயற்கையான பட்டு உற்பத்தி இரகங்களை மேம்படுத்துவதற்காக 17.04.2004 அன்று ஒன்றிய அரசால் "பட்டு முத்திரை திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டது.

3. இந்திய கைத்தறி வணிகச் சின்னம்

"இந்திய கைத்தறி" வணிகச் சின்னம், 7 ஆகஸ்ட் 2015 அன்று முதல் தேசிய கைத்தறி தின விழாவின்போது ஒன்றிய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. மூலப்பொருட்கள், பதனிடுதல், நெசவு, வடிவமைப்பு மற்றும் இதர கைத்தறி பொருட்களின் தரத்தை அங்கீகரிக்கவும் புதிய வடிவமைப்புகளில் சுற்றுச்சூழல் பாதிக்காத நேர்த்தியான கைத்தறி இரக உற்பத்தியை உறுதி செய்யும் நோக்கத்தில் இந்திய அரசினால் இவ்வணிகச் சின்னம் வெளியிடப்பட்டது.

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் பதிவு செய்துள்ளனர்:

2023 ஏப்ரல் 11]

வ. எண்	முத்திரை	பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் / தனிநபர்களின் எண்ணிக்கை	கொள்முதல் செய்யப்பட்ட வில்லைகளின் எண்ணிக்கை
1.	*கைத்தறி முத்திரை*	*8,700*	*4.68 கோடி*
2.	*பட்டு முத்திரை*	*1,211*	*16.41 இலட்சம்*
3.	*இந்திய கைத்தறி வணிகச் சின்னம்*	*166*	—

7. பயிற்சி

7.1 துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சி

கைத்தறி நெசவாளர்கள், வடிவமைப்பாளர்கள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ-ஆப்டெக்ஸில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு நடேசன் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம், சென்னை, கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையம், மதுரை, நெசவாளர் சேவை மையம், சர்தார் வல்லபாய்பட்டேல் சர்வதேச மேலாண்மை பயிற்சி நிலையம், கோயம்புத்தூர், தேசிய தகவல் மையம், அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரி, சென்னை ஆகிய நிறுவனங்களில் தேவையின் அடிப்படையில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சித் திட்டங்களில் பங்கேற்பாளர்களை அறிவு திறன் மற்றும் திறன் மேம்பாடு ஆகியவற்றை அடைய செய்து அதனை அவர்களின் அன்றாட பணி செயல்பாடுகளில் பயன்படுத்திட வழிவகை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

7.2 சமர்த் திட்டம்

சமர்த் திட்டம், ஜவுளித் துறையில் திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது. ரூ.196.14 இலட்சம் மதிப்பீட்டில் கைத்தறித் துறையின் கட்டுப்பாட்டில் செயல்படும் காஞ்சிபுரம், ஈரோடு, கும்பகோணம், பரமக்குடி ஆகிய 4 பயிற்சி நிறுவனங்கள்மூலம் 1,400 பயனாளிகளுக்கு "கைத்தறி நெசவு" பயிற்சி அளிக்க ஒன்றிய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு, ஒன்றிய அரசின் ஜவுளி அமைச்சகம், பயிற்சியாளர்களின் எண்ணிக்கையை

1400-லிருந்து 607 ஆக மாற்றியமைத்து, 31.03.2024-க்குள் பயிற்சி நிறைவு செய்யப்பட வேண்டும் என பயிற்சிக்கான செலவினத் தொகை ரூ.58.84 இலட்சம் முதற்கட்டமாக விடுவித்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ், இதுவரை 371 நபர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சியவர்களுக்கு பின்வருமாறு பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது:-

வ. எண்	பயிற்சி மையத்தின் பெயர்	பயிற்சியாளர்களின் எண்ணிக்கை		
		திருத்தப் பட்ட இலக்கு	ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்	பயிற்சி அளிக்க வேண்டிய எண்ணிக்கை
1.	காஞ்சிபுரம்	87	43	44
2.	ஈரோடு	220	160	60
3.	கும்பகோணம்	150	84	66
4.	பரமக்குடி	150	84	66
மொத்தம்		**607**	**371**	**236**

7.3 வடிவமைப்பு திறன் மேம்பாடு பயிற்சி

துறையின் வடிவமைப்பு மேம்பாடு முயற்சியின் ஒரு பகுதியாக கைத்தறி இரகங்களில் சந்தைப்படுத்தக்கூடிய இரகங்களை உற்பத்தி மேற்கொள்ள ஏதுவாக கைத்தறி இரகங்கள் உற்பத்தியில் நவீன காலத்திற்கேற்ற நவநாகரீக வடிமைப்புகளைப் புகுத்தும் பொருட்டு சென்னை மற்றும் பெங்களூருவில் அமைந்துள்ள தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனங்களுடன் 500 புதிய வடிவமைப்புகள் உருவாக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்படி, சென்னை மற்றும் பெங்களூரு தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனத்தால் கீழ்க்கண்டவாறு வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன:

2023 ஏப்ரல் 11]

வ. எண்	நிறுவனத்தின் பெயர்	வடிவமைப்புகளின் எண்ணிக்கை
1	தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம், சென்னை	16 புதிய வடிவமைப்புகள் (சேலைகள்–8, ஸ்டோல்கள்–8)
2	தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம், பெங்களூரு	400 புதிய வடிவமைப்புகள் (வீட்டு அலங்கார துணிகள் – 100 படுக்கை விரிப்புகள் – 40 போர்வைகள் – 40 ஜமக்காளம் – 20 பட்டுச் சேலைகள் – 100 பருத்தி & கோரா சேலைகள்– 100)

மேலும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், கோ-ஆப்டெக்ஸ் மற்றும் குழுமங்களில் உள்ள 44 வடிவமைப்பாளர்களுக்கு தேசிய வடிவமைப்பு நிறுவனம், அகமதாபாத்மூலம் 8 ஆகஸ்ட் 2022 முதல் 19 ஆகஸ்ட் 2022 முடிய வடிவமைப்பு திறன் மேம்பாடு பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியில் கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் இரகங்களில் பல்வேறு வகையான வடிவமைப்புகள் மற்றும் வண்ணக்கலவைகள் கொண்டு நேர்த்தியான பருத்தி மற்றும் பட்டு இரகங்களை உருவாக்க பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

பயிற்சியில் கலந்து கொண்ட வடிவமைப்பாளர் ஒவ்வொருவரும் தலா 10 புதிய வடிவமைப்புகள் வீதம் 440 புதிய வடிவமைப்புகள் உருவாக்க நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

துறையின் வடிவமைப்பு மேம்பாடு திட்டத்தின்படி உருவாக்கப்பட்ட 1,000 புதிய வடிவமைப்புகளைக் கொண்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் புதிய இரகங்களில் வணிக உற்பத்தியினை மேற்கொண்டு வருகின்றன.

தேசிய வடிவமைப்பு நிறுவனம் மற்றும் தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு வளர்ச்சித் திட்டத்தின்மூலம் உருவாக்கப்பட்ட புதிய வடிவமைப்புகளைக் கொண்டு சந்தை இரகங்கள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2023 ஏப்ரல் 11

8. தகவல் தொழில்நுட்ப முனைப்புகள்

அரசின் சேவைகள் வெளிப்படைத் தன்மையுடனும், குடிமக்கள் எளிதில் அணுகக்கூடியதாகவும், துறையால் பின்வரும் தகவல் தொழில்நுட்ப முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

8.1 இ-சேவை வழங்குதல்

நெசவாளர்கள் நலனுக்காக கைத்தறித்துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் பின்வரும் நெசவாளர் நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு அரசின் மின்னனு சேவை மையங்கள் மற்றும் பொது சேவை மையங்கள் வாயிலாகப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

1. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம்
2. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதிய திட்டம்
3. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதிய திட்டம்
4. மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா.
5. டாக்டர் எம்.ஜி.ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளைமூலம் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம்.

8.2 நெசவாளர் குறை தீர்க்கும் மையம்

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் கைத்தறி ஆணையரகத்தில் நெசவாளர் குறை தீர்க்கும் மையம் 23.03.2022 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. தேசிய தகவல் தொழில்நுட்பவியல் மையத்தின் (NIC) மூலம் நெசவாளர் குறை தீர்க்கும் மையத்திற்கென பிரத்யேகமாக மனுக்கள் செயலாக்க இணையதளம் உருவாக்கப்பட்டு https://gdp.tn.gov.in/dhl என்ற இணையதள முகவரியில் பயன்பாட்டில் உள்ளது.

8.3 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகளை முழுமையாக கணினிமயமாக்கல்

தேசிய தகவலியல் மையம் (NIC) மூலமாக ரூ.50.00 இலட்சம் செலவில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடுகள் அனைத்தும் கணினிமயமாக்க மென்பொருள் உருவாக்கப்படுகிறது.

2023 ஏப்ரல் 11]



உருவாக்கப்பட்ட தொகுப்பேடுகள்

மென்பொருள் உருவாக்கத்தின் முன்னேற்றம்

- *விற்பனை தொகுதி*
- *கணக்குத் தொகுதி*
- *அறிக்கை உருவாக்கம்*
- *பயனர் ஏற்றுக்கொள்ளும் சோதனை பாதுகாப்பு தணிக்கை இணக்கம்*
- *பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு*

மேற்காணும் மென்பொருள் வடிவமைப்புப் பணிகள் ஏப்ரல் 2023-க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நெசவாளர் கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கு மேற்கண்ட மென்பொருளைப் பற்றிய பயிற்சியினை தேசிய தகவலியல் மையத்தின் தொழில்நுட்ப வல்லுனர்களால் அளித்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது.

8.4 மின்வணிக இணையதளம்

கைத்தறி இரகங்களை இணையவழியில் விற்பனை செய்வதை ஊக்குவிக்கவும், வாடிக்கையாளர்கள் தங்களுக்குத் தேவையான கைத்தறி இரகங்களை தங்கள் இருப்பிடத்தில் இருந்து வாங்குவதற்கு வசதியாகவும், https://loomworld.in *என்ற பிரத்யேக மின்வணிக இணையதளம் தொடங்கப்பட்டுள்ளது.*

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் பட்டு சேலைகள், பருத்தி சேலைகள், மென்பட்டு மற்றும் வீட்டு உபயோக ஜவுளி இரகங்கள் உள்ளிட்ட அனைத்து கைத்தறி இரகங்களும் இந்த இணையத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

[2023 ஏப்ரல் 11

மின்வணிக இணையதள தொழில்நுட்ப வசதியின் காரணமாக கைத்தறி இரகங்கள் விற்பனை செய்வது ஊக்குவிக்கப்படுகிறது.

2022-2023 ஆம் ஆண்டில் ரூ.6.18 இலட்சம் மதிப்பிலான கைத்தறி இரகங்கள் லூம்வேர்ல்டு மின்வணிக இணையதளமூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

8.5 தமிழ்நாட்டின் பாரம்பரிய கைத்தறி வகைகளை மின்னணுமயமாக்கி ஆவணப்படுத்துதல்

"தமிழ்நாட்டின் பாரம்பரிய கைத்தறி பொருட்கள் மற்றும் புவிசார் குறியீட்டில் பதிவு செய்யப்பட்ட கைத்தறி இரகங்களை மின்னணு மயமாக்கி ஆவணப்படுத்துதல் திட்டம்" ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் நிறைவு பெற்று, தகுதி வாய்ந்த நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் புவிசார் குறியீட்டில் பதிவு செய்யப்பட்ட 8 கைத்தறி இரகங்கள் மற்றும் தமிழ்நாட்டின் பாரம்பரிய 45 கைத்தறி தயாரிப்புகளையும் மின்னணுமயமாக்கி ஆவணப்படுத்தப்படும்.

8.6 கைத்தறி துறைக்கென தனி இணையதளம் உருவாக்குதல்

அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகள் பற்றிய தகவல்கள் மக்களுக்கு எளிதில் சென்றடைய வேண்டும். அதன்படி, துறை மற்றும் துறைசார் நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் சேவைகள் எந்த நேரத்திலும் எந்த இடத்திலிருந்தும் குடிமக்களுக்கு அணுகக்கூடிய வகையில் இருக்க வேண்டும்.

கைத்தறி துறைக்கென பிரத்யேக இணையதளத்தை உருவாக்கி அதனை வழங்கும் பணியில் துறை ஈடுபட்டுள்ளது.

இணையதளத்தின் பொருளடக்க மேலாண்மை கட்டமைப்பானது (Content Management Framework) இந்திய அரசின் இணையதள வழிகாட்டுதல்களின்படி (Guidelines for Indian Government Website) உருவாக்கப்பட்டு, இருமொழிகளில் தகவல்கள் அளிப்பதாகவும், பார்வையற்ற நபர்கள் அணுகக்கூடிய வகையிலும் உருவாக்கப்பட்டுள்ளது.

இணையதளத்தில் உரிய நேரத்தில் இணைய மேம்பாட்டை உறுதி செய்ய பொருளடக்க மேலாண்மை அமைப்பு (Content Management System) உள்ளது.

2023 ஏப்ரல் 11]

துறையின் அனைத்து திட்டங்கள் மற்றும் சேவைகளையும் முழுமையான மின்னனு மயமாக்கி, விரிவான இணைய முகப்பாக உருவாக்குவதற்கான முயற்சிகள் தொடங்கப்பட்டுள்ளன.

9. துறையின் நிர்வாக கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் நிறுவனங்கள்

9.1 தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (வரையறுக்கப்பட்டது) கோ-ஆப்டெக்ஸ், சென்னை.

தமிழ்நாட்டின் அனைத்து இல்லங்களிலும் பிரபலமாக விளங்கும் "கோ-ஆப்டெக்ஸ்" தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் என்பதன் வணிக முத்திரை பெயராகும். கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் முதன்மையான மாநில தலைமை கூட்டுறவு நிறுவனமாக 1935 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள நெசவாளர்களின் நலனுக்காகவும், கைத்தறி தொழிலினை மேம்படுத்துவதிலும் சிறந்த பங்களிப்பினை அளித்து வருகிறது.

இந்தியாவின் மிகப் பெரிய மாநில தலைமை கைத்தறி கூட்டுறவு சங்கமான கோ-ஆப்டெக்ஸ், தமிழ்நாடு முழுவதும் உள்ள நெசவாளர்கள் மற்றும் கைவினைஞர்களால் 1,112 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்மூலம் உற்பத்தி செய்யப்படும் தயாரிப்புகளை கோ-ஆப்டெக்ஸ் என்ற வணிக முத்திரையில் பிரதிநிதித்துவப்படுத்தும் முன்னனி நிறுவனமாகச் செயல்பட்டு வருகின்றது. பட்டு மற்றும் பருத்தி வகைகளின் பாரம்பரிய மற்றும் நாகரீக சமகால வடிவமைப்புகளைக் கொண்டு சிறந்த கைத்தறி இரகங்களின் சின்னமான பெயராக கோ-ஆப்டெக்ஸ் மாறியுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் பல தலைமுறைகளாக நாடு முழுவதும் அதன் முக்கியத்துவத்தை நிலை நிறுத்தியுள்ளது, ஜெர்மனி, ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ், பெல்ஜியம், துபாய் மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளில் அதன் உலகளாவிய வணிகத்தை நிறுவ முயற்சித்து வருகிறது. கோ-ஆப்டெக்ஸின் வணிக சின்னமான, வண்ணமயமான வண்ணத்துப்பூச்சி, அதன் வாடிக்கையாளர்களுக்கு தரமான மற்றும் நியாயமான வர்த்தக நடைமுறைகளைச் செயல்படுத்தி வருகிறது. ஒப்பற்ற அழகியல் தரத்துடன், தமிழ்நாட்டின் வரலாற்று நெசவு பாரம்பரியத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்யும் அதிக திறன் கொண்ட நெசவாளர்களால் மட்டுமே இது சாத்தியமானது. இன்று, கோ-ஆப்டெக்ஸ், தமிழ்நாடு

நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பை வழங்குவதன்மூலம் ஒரு சிறந்த சமூக நோக்கத்துடன் தமிழ்நாட்டின் மிக உயர்ந்த கைத்தறி பாரம்பரியத்தைப் பிரதிபலித்து வருகின்றது.

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், தீபாவளி, பொங்கல் போன்ற முக்கிய பண்டிகைக் காலங்களில் புதிய வடிவமைப்புகள் கொண்ட இரகங்களை வெளிக்கொணர்ந்து வாடிக்கையாளர்களின் நெஞ்சங்களை எப்போதும் கவர்ந்து வருகிறது. கோ-ஆப்டெக்ஸின் அனைத்து கைத்தறி தயாரிப்புகளும் அகில இந்திய அளவில் முக்கிய நகரங்கள் மற்றும் ஊர்களில் உள்ள சந்தை மையங்களில் அமைந்துள்ள 154 விற்பனை நிலையங்களின்மூலம் விற்பனை செய்து வருகிறது. கோ-ஆப்டெக்ஸ், இளைய தலைமுறை வாடிக்கையாளர்களுக்குத் தேவையான வடிவமைப்புகளை உருவாக்கி அவர்களது தேவைகளை நிறைவேற்றுவதுடன், NIFT மற்றும் NID அகமதாபாத் வடிவமைப்பாளர்களால் வடிவமைக்கப்பட்ட பாரம்பரிய பட்டு மற்றும் பருத்தி இரகங்களில் புதுமையான கருப்பொருட்கள் கொண்ட வடிவமைப்புகள் மற்றும் வண்ணங்களுடன் மதிப்பு கூட்டப்பட்ட இரகங்களை விரிவுபடுத்தி வருகிறது.

கோ-ஆப்டெக்ஸின் நோக்கங்கள்

88 ஆண்டுகளாகச் செயல்பட்டு வரும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கீழ்க்காணும் உயர் நோக்கங்களைச் செயல்படுத்தி வருகிறது.

1. கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்புகளை வழங்குதல் மற்றும் உருவாக்குதல்.

2. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சந்தை ஆதரவிற்கு உறுதுணையாக இருந்து, கைத்தறி இரகங்களைப் பிரபலப்படுத்துதல்.

3. வாடிக்கையாளர்களின் மாறிவரும் இரசனைக்கேற்ப பாரம்பரியம் மற்றும் புதுமையுடன் கூடிய இரகங்களை உருவாக்குதல்.

4. கைத்தறி தயாரிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் பல்வேறு புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துதல்.

2023 ஏப்ரல் 11]

கோ-ஆப்டெக்ஸ் செயல்படுத்தி வரும் அரசின் திட்டங்கள்

தனது செயல்பாட்டின் ஒரு பகுதியாக அரசு செயல்படுத்தும் திட்டங்களில் தன்னை இணைத்துக் கொண்டு அரசு திட்டங்களைச் செயல்படுத்தி வரும் முகமை நிறுவனமாகவும் கோ-ஆப்டெக்ஸ் விளங்குகிறது.

1. *முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பயன் பெறுவோர்க்கு வருவாய்த் துறையின்மூலம் வேட்டி சேலை வழங்கும் திட்டம்.*
2. *வேட்டி சேலை வழங்கும் திட்டம்*
3. *விலையில்லா சீருடை வழங்கும் திட்டம்*

விற்பனை விவரங்கள் மற்றும் செயல்பாடுகள்:

2022-2023 ஆம் ஆண்டு கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ரூ.200.92 கோடி மதிப்பிற்கு சில்லரை விற்பனை செய்துள்ளது. இது கடந்த 2021-22 ஆம் ஆண்டு நடைபெற்ற ரூ.171.90 கோடி மதிப்பிலான விற்பனையைவிட ரூ.29.02 கோடி அதிகமாகும். ஆண்டு முழுவதும் தொடர் கொள்முதல் செய்ததன் மூலமாகவும், புதிய விற்பனை நிலையங்கள் தொடங்கப்பட்டும், விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தி அதன் பொலிவை மேம்படுத்தியதாலும், புதிய வடிவமைப்புகளுடன் கூடிய கைத்தறி துணிகளை NID/NIFT *வடிவமைப்பாளர்களைக் கொண்டு புதிய இரகங்களை அறிமுகப்படுத்தியது மற்றும் விற்பனை நிலையத்தில் உள்ள பணியாளர்களுக்கு வேலைப்பயிற்சி மற்றும் ஊக்குவித்தல் பயிற்சியின் மூலமாகவும் இந்த விற்பனையை கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் எய்தியுள்ளது.*

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமானது பெருமளவு இளைய தலைமுறை வாடிக்கையாளர்களை முகநூல் மற்றும் பல்வேறு சமூக வலைதளங்களைப் பயன்படுத்தி விளம்பரம் செய்ததன் மூலமாக முதன்முறையாக கைத்தறி துணிகளை வாங்கும் இளைய தலைமுறை வாடிக்கையாளர்களைப் பெருமளவில் சேர்த்துள்ளது.

மின் வணிகம் விற்பனை

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் www.cooptex.com *என்ற வலைதளத்தின்மூலம் வாடிக்கையாளர்கள் இணையதளத்தின்மூலம் வாங்குவதற்கு வழிவகை செய்துள்ளது. கோ-ஆப்டெக்ஸ்*

[2023 ஏப்ரல் 11

இந்தியாவிலேயே முதல் தலைமை நெசவாளர் கூட்டுறவு சங்கமாக, அதன் சொந்த இணைய வலைதளத்தில் மின் வணிகத்தை செயல்படுத்தி வெற்றிகரமாக மின்வணிகம் செய்து வருகின்றது. மின் வணிக விற்பனை தொடங்கியது முதல் இதுவரை ரூ.8.25 கோடி மதிப்பிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது.



தேசிய கைத்தறி கண்காட்சி 2022

10 ஆண்டுகளுக்குப் பிறகு தேசிய கைத்தறி கண்காட்சி 2022 சென்னையிலுள்ள கோ-ஆப்டெக்ஸ் கண்காட்சி வளாகத்தில் நடைபெற்றது. இந்தக் கண்காட்சி 8-4-2022 முதல் 1-5-2022 வரை நடைபெற்றது. இக்கண்காட்சியில் 100-க்கும் மேற்பட்ட விற்பனையகங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் 10 வெளி மாநிலங்களைச் சேர்ந்த கைத்தறி சங்கங்கள் பங்கேற்று ரூ.3.52 கோடி மதிப்பிலான துணி இரகங்கள் விற்பனை செய்யப்பட்டன.

வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் செயல்படுத்திவரும் விற்பனை முன்னேற்ற திட்டங்கள்

கோ-ஆப்டெக்ஸ் மாதாந்திர சேமிப்புத் திட்டம்

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பிரபலமான "கோ-ஆப்டெக்ஸ் மாதாந்திர சேமிப்புத் திட்டத்தினை" செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் வாடிக்கையாளர்கள், குறைந்தபட்சம் ரூ.300/-

2023 ஏப்ரல் 11]

முதல் மாதத் தவணையாக செலுத்தலாம். வாடிக்கையாளர்கள் 11 தவணைகள் செலுத்திய பிறகு 12-வது தவணை தொகையை கோ-ஆப்டெக்ஸ் ஊக்கத் தொகையாக செலுத்தும் இத்திட்டத்தில் வாடிக்கையாளர்கள் 48 சதவிகிதம் கூடுதல் பலன் பெறுகின்றனர். இத்திட்டம் புதிய வாடிக்கையாளர்களை அதிகரிக்கவும், கோ-ஆப்டெக்ஸிற்கு நிலையான நிதி வரவை மேம்படுத்தும் வகையில் இத்திட்டத்தின்மூலம் ரூ.9.64 கோடி மதிப்பிற்கு 2022-2023 ஆம் ஆண்டில் விற்பனை நடைபெற்றுள்ளது.

பட்டுத் திருவிழா

பட்டுச் சேலைகள் விற்பனையை அதிகரிக்கவும் இதன்மூலம் கோ-ஆப்டெக்ஸின் விற்பனையைப் பெருக்கும் பொருட்டு கோ-ஆப்டெக்ஸ் "பட்டுத் திருவிழா" சென்னை தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, சேலம் தங்கம் பட்டு மாளிகை மற்றும் கடலூர் முல்லை விற்பனை நிலையங்களில் பிப்ரவரி 2023 மற்றும் மார்ச் 2023-ல் நடைபெற்றது. இந்தப் பட்டுத் திருவிழா விற்பனையில் ரூ.135.27 இலட்சம் மதிப்பிலான துணிகள் விற்பனை நடைபெற்றுள்ளது.

கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல்

“கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல்" ஏற்றுமதி பிரிவானது பல்வேறு ஆக்கப்பூர்வமான தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு ஏற்றுமதி விற்பனையினை அதிகரிக்க செயல்பட்டு வருகிறது. ஜெர்மனி, பெல்ஜியம், ஸ்பெயின், இத்தாலி, பிரான்சு, சுவிட்சர்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம், நெதர்லாந்து மற்றும் இதர நாடுகளுக்கு தனது துணி இரகங்களை கோ-ஆப்டெக்ஸ் ஏற்றுமதி செய்து வருகிறது. கைத்தறி வீட்டு உபயோக இரகங்களான போர்வைகள், மேஜை விரிப்புகள், சமையலறை துணி வகைகள், குளியலறை இரகங்கள் , கலம்காரி துப்பட்டாக்கள், நாகரீக பைகள் முதலியவற்றை கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல்மூலம் ஏற்றுமதி செய்து வருகிறது.

சர்வதேச கண்காட்சிகளில் பங்கேற்பு

கைத்தறி பொருட்களை சர்வதேச சந்தைகளில் பிரபலப்படுத்துவதற்காக 2022-2023 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் நேரடி வெளிநாட்டு ஜவுளி கண்காட்சிகளில் கோ-ஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல் பங்கேற்றது.

[2023 ஏப்ரல் 11

வ. எண்	கண்காட்சியின் பெயர்	காலம்
1.	வீட்டு உபயோக ஜவுளி கண்காட்சி, இஸ்தான்புல், துருக்கி	17 – 21 மே 2022
2.	ஹெய்ம் டெக்ஸ்டைல்ஸ் ஜவுளி கண்காட்சி, பிராங்பர்ட், ஜெர்மனி	21 – 24 ஜுன் 2022
3.	சர்வதேச ஆயத்த ஆடை மற்றும் ஜவுளி கண்காட்சி, துபாய்	28 - 30 நவம்பர் 2022
4.	ஹெய்ம் டெக்ஸ்டைல்ஸ் ஜவுளி கண்காட்சி, பிராங்பர்ட், ஜெர்மனி	10 – 13 ஜனவரி 2023

மேற்கண்ட கண்காட்சிகளில் பங்கேற்று சுமார் ரூ.100 இலட்சம் மதிப்பிற்கு ஜெர்மனி, ஸ்பெயின், பெல்ஜியம் மற்றும் புதிய வியாபார வாய்ப்பாக ஐக்கிய அரபு அமீரகம், நெதர்லாந்து போன்ற நாடுகளிலிருந்து புதிய இரகங்களான குளியல் அறை துண்டுகள், குளியல் அங்கிகள், கலம்காரி துப்பட்டாக்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்ய ஆணைகள் பெறப்பட்டுள்ளன. இக்கண்காட்சிகளில் பங்கேற்றதன்மூலம் எதிர்காலத்தில் விற்பனை ஆணைகள் பெறுவதற்கு வழிவகுத்துள்ளது.

அரசு திட்டங்களின் செயல்பாடுகள்

1. வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டம் பொங்கல் – 2023

வேட்டி மற்றும் சேலை வழங்கும் திட்டத்தின்கீழ் கோ-ஆப்டெக்ஸ் ஒரு முகமை நிறுவனமாகச் செயல்பட்டு 90.21 இலட்சம் எண்ணிக்கையிலான சேலைகள் மற்றும் 105.56 இலட்சம் எண்ணிக்கையிலான வேட்டிகள் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு விநியோகம் செய்துள்ளது.

2. பள்ளிச் சீருடைத் துணி வழங்கும் திட்டம்

பள்ளிச் சிறார்களுக்கு, சீருடைத் துணி வழங்கும் திட்டத்தின்கீழ் முகமை நிறுவனங்களில் ஒன்றாக கோ-ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது. மாணவர்கள் கால்சட்டை இரகங்கள் 64.91 இலட்சம் மீட்டர், மாணவிகள் கால்சட்டை துணி ரகம் 97.21 இலட்சம் மீட்டர் மற்றும் சட்டை துணி 107.72 இலட்சம்

2023 ஏப்ரல் 11]

மீட்டர் சமூக நலத்துறைக்கு 2022-2023 ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸ் விநியோகம் செய்துள்ளது.

3. முதியோர் ஓய்வூதிய திட்டத்தின்கீழ் வேட்டி சேலைகள் வழங்கும் திட்டம்

முதியோர் ஓய்வூதிய திட்ட பயனாளிகளுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டம் தீபாவளி 2022 மற்றும் பொங்கல் 2023-ன் பணிகளுக்கான முகமை நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது. தீபாவளி 2022-க்கு 24.37 இலட்சம் சேலைகளும், 9.50 இலட்சம் வேட்டிகளும் மற்றும் பொங்கல் 2023-க்கு 24.43 இலட்சம் சேலைகளும், 9.49 இலட்சம் வேட்டிகளும் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன.

புதிய வடிவமைப்புகள் அபிவிருத்தி

புதிய இரக அபிவிருத்தி செயல்பாட்டின் ஒரு பகுதியாக, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் NID/NIFT போன்ற புகழ்பெற்ற தொழில்நுட்ப நிறுவனங்களில் பயிற்சி பெற்ற எட்டு பகுதிநேர வடிவமைப்பாளர்களை ஈடுபடுத்தி, அவர்களை கீழ்க்கண்ட உற்பத்தி மண்டலங்களில் பணியமர்த்தியுள்ளது.

வ. எண்	**பகுதியின் பெயர்**
1.	*கோயம்புத்தூர்*
2.	*சேலம்*
3.	*காஞ்சிபுரம்*
4.	*தஞ்சாவூர்*
5.	*மதுரை*
6	*ஈரோடு*

இவ்வாறு பணியமர்த்தப்பட்ட வடிவமைப்பாளர்கள் பட்டுப் புடவைகள், பருத்திப் புடவைகள், சுடிதார்கள், லுங்கிகள், துண்டுகள், பெட்ஷீட்கள், ஆயத்த சட்டைகள், கலம்காரி அச்சிடப்பட்ட புடவைகள் / ஸ்டோல்கள் மற்றும் பெண்கள்

[2023 ஏப்ரல் 11

நாகரீக ஆயத்த ஆடைகள் ஆகியவற்றில் புதிய வடிவமைப்புகள் மற்றும் வண்ணக் கலவைகளை உருவாக்கியுள்ளனர். நடப்பு ஆண்டில் கோ-ஆப்டெக்ஸ் மேற்கண்ட இரகங்களில் அனைத்து வகைகளிலும் 280 புதிய வடிவமைப்புகளை உருவாக்கியுள்ளது.

சிறப்பு சேகரிப்பு தொகுப்பு புடவை இரகங்கள் அறிமுகம்

வெளிச்சந்தையின் தேவைக்கு ஏற்ப வடிவமைப்புகள் மற்றும் வண்ணங்களை மேம்படுத்தவும் மற்றும் பல்வேறு பிரிவு வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் தேவைக்கு தக்கவாறு இரகங்களை உற்பத்தி செய்து விற்பனையை அதிகரிக்க ஏதுவாக கடந்த தீபாவளி 2022 பண்டிகை விற்பனையின்போது சேலை வகைகளின் சிறப்பு சேகரிப்பு தொகுப்புகள் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

1. வடிவமைப்பாளர் இரகங்கள் சேகரிப்பு தொகுப்பு

NID/NIFT போன்ற புகழ்பெற்ற தொழில்நுட்ப நிறுவனங்களில் பயிற்சி பெற்ற வடிவமைப்பாளர்களால் உருவாக்கப்பட்ட வடிவமைப்புகள் இந்த வகை தொகுப்பில் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

2. தனித்துவமான இரகங்கள் சேகரிப்பு தொகுப்பு

உயர்தர வாடிக்கையாளர்களை ஈர்க்கும் நோக்கில் வெளிச்சந்தை இரகங்களுக்கு போட்டி போடும் வகையில் தனித்துவமான வடிவமைப்புகள் கைத்தறியில் உருவாக்கப்பட்டு இந்த வகை தொகுப்பில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

3. பாரம்பரிய இரகங்கள் சேகரிப்பு தொகுப்பு

கோ-ஆப்டெக்ஸின் நிறுவனத்தின் நிரந்தர வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக பாரம்பரிய கருப்பொருள்கள் மற்றும் வண்ணங்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட வடிவமைப்புகள் கைத்தறியில் நெய்யப்பட்டு இந்த வகை தொகுப்பில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

4. விருது பெற்ற இரகங்களின் சேகரிப்பு தொகுப்பு

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்பட்டு, ஒன்றிய மற்றும் மாநில அரசின் சிறந்த வடிவமைப்புகள், சிறந்த

2023 ஏப்ரல் 11]

நெசவாளர்கள், சிறந்த வடிவமைப்பாளர்களுக்கான விருது பெற்ற சேலை இரகங்கள் இந்த வகை தொகுப்பில் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

தோடா பழங்குடி மக்களின் தயாரிப்புகளின் அறிமுகம்

நீலகிரி மாவட்டத்தில் வசிக்கும் தோடா பழங்குடியினர் கை வேலைப்பாட்டுடன் கூடிய எம்பிராய்டரி துணி வகைகள் தயாரிப்பதில் திறமையானவர்கள். பழுப்பு வெள்ளை நிற துணியில் பெரும்பாலும் கருப்பு மற்றும் சிவப்பு வண்ணங்களில் எம்பிராய்டரி கை வேலைப்பாடு வடிவமைப்புகளுடன் கூடிய அவர்களின் தயாரிப்புகள் தனித்துவமானது. தற்போது அவர்களின் சந்தைப்படுத்தல் திறன் நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வரம்புக்குள் மட்டுமே அடங்கியுள்ளது.

பாரம்பரிய பழங்குடி கைவினைஞர்களை ஊக்குவிப்பதன் ஒரு பகுதியாகவும், பெரு நகரங்களில் வசிக்கும் உயர்தர வாடிக்கையாளர்களுக்கு தோடா பழங்குடியினரின் கை எம்பிராய்டரி இரகங்களை கொண்டு சேர்க்கும் முயற்சியாகவும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தோடா தயாரிப்புகளான குஷன் கவர்கள், தலையணை உறைகள், படுக்கை விரிப்புகள், பைகள், மேலாடைகள், சால்வை இரகங்கள் மற்றும் பல்வேறு உபயோகங்களுக்கான சிறிய பைகள் போன்றவற்றை கொள்முதல் செய்து கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி வணிக வளாகத்தில் செயல்படும் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு காட்சிப்படுத்தியுள்ளது. இவை உயர்தர வாடிக்கையாளர்களை பெரிதும் ஈர்த்துள்ளன.

பார்வை திறனற்ற பெண்களால் நெய்யப்பட்ட இரகங்களை கொள்முதல் செய்தல்

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் சமூக பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, பார்வை திறனற்ற பெண்களால் கைத்தறியில் நெய்யப்படும் இரகங்களுக்கான விற்பனை ஆதரவு அளிக்கும் விதமாக சென்னையில் செயல்படும் "சத்யஜோதி" பார்வை திறனற்றவர்களுக்கான பயிற்சி பட்டறை நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதன்மூலம் பார்வை திறனற்ற பெண்களால் நெய்யப்படும் தரை துடைக்கும் துணிகளை மாதம் 300 எண்ணிக்கையில் தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு கொள்முதல் செய்ய உத்திரவாதம்

அளிக்கப்பட்டுள்ளது. இதனால் பார்வை திறனற்ற பெண்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு அளிக்கவும், அவர்களின் பொருளாதார நிலை மேம்படவும் உதவுகிறது.

புதிய விற்பனை நிலையங்கள் துவக்கம்

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் விற்பனையை அதிகரிக்கும் நோக்குடன், உத்திரபிரதேசம் மாநிலம் வாரணாசியிலும், தமிழ்நாட்டில் சென்னையில் தேனாம்பேட்டை. ஆவடி மற்றும் எழும்பூரில் கோ-ஆப்டெக்ஸ் பன்னாட்டு விற்பனை நிலையம் ஆக நான்கு புதிய விற்பனை நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன.

விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்துதல்

கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் வாடிக்கையாளர் வருகையை அதிகரிக்கும் நோக்குடன், 2022-23 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் ஒன்பது விற்பனை நிலையங்கள் ரூ.483.00 இலட்சம் மதிப்பில் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

வ. எண்	விற்பனை நிலையம்	இடம்
1	மினர்வா விற்பனை நிலையம்	ஹைதராபாத்
2	கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்	பாட்னா
3	வண்ணம் விற்பனை நிலையம், பெரம்பூர்	சென்னை
4	முல்லை விற்பனை நிலையம்	கடலூர்
5	மடிப்பாக்கம் விற்பனை நிலையம்	சென்னை
6	குமரி விற்பனை நிலையம்	நாகர்கோவில்
7	கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்	கரூர்
8	பாலமுருகன் விற்பனை நிலையம்	கோயம்புத்தூர்
9	வசந்தம் விற்பனை நிலையம்	ஈரோடு

புதிய முயற்சிகள்

1. கோ-ஆப்டெக்ஸ் "துணை துணி இரகங்கள்" விற்பனை நிலையம்

கோ-ஆப்டெக்ஸின் குறிப்பிட்ட வாடிக்கையாளர்களின் வாங்கும் ஆர்வத்தை அதிகப்படுத்தும் வகையில் ஸ்டோல்ஸ், துப்பட்டாக்கள், குர்த்தீஸ், ரன்னர்கள், மேட் துணிகள், குசன்

2023 ஏப்ரல் 11]

கவர்கள், நாகரீக பைகள் போன்ற துணை துணி இரகங்களை விற்பனை செய்வதற்கு "கோ-ஆப்டெக்ஸ் துணை துணி இரகங்கள்" விற்பனை நிலையம் கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி வளாகம் சென்னையில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2. "இந்தியாவின் கைத்தறி இரகங்கள்" விற்பனை நிலையம்

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் பிற மாநிலங்களில் உற்பத்தி செய்யப்படும் தனித்துவமான கைத்தறி இரகங்களை ஒரே இடத்தில் காட்சிப்படுத்தி விற்பனை செய்யும் வகையில் "ஹேண்ட் லூம்ஸ் ஆப் இந்தியா" (இந்தியாவின் கைத்தறி இரகங்கள்) என்ற பெயரில் சென்னையில் புதிய விற்பனை நிலையம் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த விற்பனை நிலையத்தில் கோ-ஆப்டெக்ஸின் உயர்தர வாடிக்கையாளர்கள் தங்கள் விருப்பப்படி அனைத்து மாநில கைத்தறி இரகங்களை ஒரே இடத்தில் வாங்க இயலும். இதனால் இந்தியா முழுவதும் உள்ள கைத்தறி நெசவாளர்கள் நல்வாழ்வைப் பேணவும் மற்றும் கைத்தறி தொழிலை மேம்படுத்தவும் இயலும்.

உண்மையான கைத்தறி தயாரிப்புகளுக்கான அங்கீகாரம், டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் கண்டறியும் தன்மையை IoT தொழில்நுட்பம்மூலம் உறுதிபடுத்துதல்

கைத்தறித் தயாரிப்புகள், அதிக எண்ணிக்கையில் எளிதில் கண்டுபிடிக்க இயலாதவாறு விசைத்தறியில் அதிக உற்பத்தி செய்யப்படும் போலியான தயாரிப்புகள்மூலம் போட்டி மற்றும் சவால்களை எதிர்கொள்கின்றன. புதுமையான தொழில்நுட்பத்தைக் கொண்டுவருவதன்மூலம் உண்மையான கைத்தறி இரகங்களை அங்கீகரிக்கவும், மேற்கத்திய வளர்ந்த நாடுகளில் உள்ள உயர்தர வாடிக்கையாளர்களுக்கு அதிக மதிப்புள்ள கைத்தறி இரகங்களைக் கொண்டு சேர்க்கவும் வாய்ப்பு உள்ளது.

எனவே, கைத்தறி தயாரிப்புகளை டிஜிட்டல் மயமாக்கல், கைத்தறி உற்பத்தியை அங்கீகரித்தல் மற்றும் கண்டறியும் தன்மை ஆகிய நோக்கத்துடன் ஒரு புதுமையான தொழில்நுட்ப IoT சாதனம் கைத்தறிகளில் நிறுவப்படவுள்ளது. முதற்கட்டமாக, இந்தகைய IoT சாதனங்கள் ஏற்றுமதி இரகங்கள், அதிக மதிப்புள்ள பட்டு இரகங்கள் மற்றும் புவிசார் குறியீடு பெற்ற இரகங்கள் உற்பத்தியாகும் கைத்தறிகளில் பல்வேறு உற்பத்தி மண்டலங்களில் உள்ள 150 கைத்தறிகளில் நிறுவப்பட்டு வருகின்றன.

[2023 ஏப்ரல் 11

9.2 தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம்

தமிழ்நாடு சரிகை ஆலை, பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவைப்படும் சரிகையினை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 1974 ஆம் ஆண்டு முதல் வணிக ரீதியிலான உற்பத்தியை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம் ISO 9001:2015 தரச்சான்று பெற்ற மாநில அரசு சார்ந்த ஒரு பொதுத் துறை நிறுவனமாகும். தமிழ்நாடு சரிகை ஆலையின் ISO 9001:2015 தரச்சான்றுக்கான காலமுறை தணிக்கை அக்டோபர் 2022-ல் நடைபெற்றுள்ளது.

இந்நிறுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவைப்படும் 75 சதவீத சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விற்பனை செய்து வருகிறது. இந்நிறுவனம், காஞ்சிபுரத்தில் நிறுவியுள்ள "எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு" இயந்திரம் (X-Ray Fluorescence Analyser) மூலம் சரிகை மாதிரிகள் மற்றும் சரிகையை கொண்டு தயாரிக்கப்பட்ட துணிகள் போன்றவற்றிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் (Non-Destructive Testing Method) அவற்றில் உள்ள சரிகையின் தரத்தை ஆய்வு செய்யும் பணியையும் மேற்கொள்கிறது.

இந்நிறுவனம் சரிகை உற்பத்திக்குத் தேவைப்படும் மூலப்பொருளான வெள்ளிப் பட்டிழையினையும், தங்கத்தையும் கொள்முதல் செய்து சரிகை உற்பத்தி செய்து வருகிறது.


தமிழ்நாடு சரிகை ஆலை நிறுவனத்தில் அரசு பங்கு முதலீடு ரூ.34.40 இலட்சம் ஆகும். இந்நிறுவனம் ஈட்டிய இலாபத்தில் 2021-22 வரை ரூ.219.84 இலட்சத்தினை ஈவுத்தொகையாக அரசுக்கு செலுத்தியுள்ளது.

தமிழ்நாடு சரிகை ஆலையின் கடந்த ஐந்து ஆண்டுகளின் செயல்பாடுகள்

2023 ஏப்ரல் 11]

ஆண்டு	உற்பத்தி	உற்பத்தி மதிப்பு	விற்பனை	விற்பனை மதிப்பு	இலாபம் (வரிக்கு முன்)
	மார்க்குகளில்	ரூ. இலட்சத்தில்	மார்க்கு களில்	ரூ. இலட்சத்தில்	
2018-1999	*31,415*	*3315.38*	*30,466*	*3,355*	*63.58*
2019-2020	*30,461*	*3521.12*	*32,097*	*3,951*	*200.30*
2020-2021	*20,950*	*3179.07*	*19,213*	*3,097*	*100.20*
2021-2022	*22,386*	*3490.79*	*24,340*	*4,049*	*177.49*
2022-2023	*28,995.75*	*4601.95*	*28,578*	*4,858.68*	*213.20**

* (உத்தேசமாக)



தங்கமூலாம் பூச்சு பிரிவில் பயன்படுத்தப்படும் இரசாயனங்களுக்கு சூரத் விற்பனையாளர்களை நம்பியிருக்கும் நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டு, ஜரிகையின் தரம் மற்றும் நிறத்தினை மேம்படுத்த சென்னை அண்ணா பல்கலைக்கழக தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு ஆலையிலேயே இரசாயனம் தயாரிக்க திட்டம் மேற்கொள்ளப்பட்டு வணிகரீதியான உபயோகத்திற்கு விரைவில் பயன்படுத்தப்படும்.

[2023 ஏப்ரல் 11

தமிழ்நாடு சரிகை ஆலையின் தொழிற்சாலை மற்றும் அலுவலகம் ஆகிவற்றை ரூ.1.41 கோடி மதிப்பில் புனரமைப்பு செய்ய கைத்தறி ஆதரவுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

- சரிகையின் நிறம் மற்றும் பளபளப்பினை மேம்படுத்துவற்காக ரூ.24.50 இலட்சம் மதிப்பில் புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய இரண்டு தங்கமூலாம் பூச்சு இயந்திரங்கள் (Vertical type Gilding machines with improved Rectifiers) நிறுவப்படவுள்ளது.
- ரூ.1.65 இலட்சம் மதிப்பில் மேம்படுத்தப்பட்ட தட்டை செய்யும் தொழில்நுட்பம் மற்றும் தானியங்கி எடை கருவி பொருத்திய புதிய சரிகை தட்டை செய்யும் இயந்திரம் நிறுவப்படவுள்ளது.
- மூன்று தங்கமூலாம் பூச்சு இயந்திரங்களில் தற்போது கேத்தோடு ஆக பயன்படுத்தப்பட்டு வரும் துளையிடப்பட்ட எஃகு தகடுகளுக்குப் பதிலாக புதிய பிளாட்டினம் கம்பிகள் பொருத்தப்படவுள்ளன. இதன்மூலம் வெள்ளி பட்டிழையின்மீது சீரான முறையில் தங்க பூச்சு நடைபெறும்.

9.3 தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிட், ஈரோடு

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை 6-7-1973-ல் பதிவு செய்யப்பட்டு 05.09.1973 முதல் செயல்பட்டு வருகிறது. இவ்வாலை துணி வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல், அச்சிடல் போன்ற பல்வேறு பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலை மாதம் ஒன்றிற்கு 23.00 இலட்சம் மீட்டர் துணிகளைப் பதனிடும் திறன் பெற்றுள்ளது.

தமிழ்நாடு அரசு சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கும் சீருடைத் துணிகளையும் கேரள அரசின் சீருடைத் திட்ட துணிகளையும் பதனிடும் பணிகளை செய்து வருகிறது. மேலும் கோ-ஆப்டெக்ஸ், தேசிய பஞ்சாலைக் கழகம், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர், சிறைச்சாலைத் துறை, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கேரளா மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், கேரளா கைத்தறி வளர்ச்சிக் கழகம்


2023 ஏப்ரல் 11]

மற்றும் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆகிய நிறுவனங்களின் துணிகளைப் பதனிடும் பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

சாயக்கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்

பூஜ்ய கழிவு நீர் என்ற நிலையினை அடைய, ஆலையில் கழிவு நீர் மேலாண்மையுடன் கூடிய எதிர் சவ்வூடு பரவல் முறையினைப் பயன்படுத்தி துணிகள் தரமான முறையில் பதனீடு செய்வதுடன், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரிய வழிகாட்டுதலின்படி சூரிய ஆவியாக்கல் முறையினைத் தவிர்த்து, தற்போது போர்ஸ்டு சர்குலேசன் எவாப்பரேட்டர் (FCE) மற்றும் அஜிடேட்டட் தின் பிலிம் டிரையர் (ATFD) ஆகிய இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவ்வாலை, 2022-2023 ஆம் ஆண்டில் 180.10 இலட்சம் மீட்டர் துணிகளைப் பதனிட்டு ரூ.36.41 கோடி அளவிற்கு வணிகம் மேற்கொண்டு ரூ.8.75 கோடி உத்தேச நிகர இலாபம் ஈட்டியுள்ளது.



[2023 ஏப்ரல் 11

2023-2024 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்

- ஆலையின் உற்பத்தி திறன் ஒரு நாளுக்கு 90,000 மீட்டரிலிருந்து 1,20,000 மீட்டர் என்ற அளவில் அதிகரிக்கும் பொருட்டு புதிய ஸ்டெண்டர் இயந்திரம் நிறுவுவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் மாதம் ஒன்றுக்கு 31.20 இலட்சம் மீட்டர் துணிகள் பதனிட வாய்ப்புள்ளது.
- இவ்வாலையானது 2023-24 ஆம் ஆண்டு சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ் 173.00 இலட்சம் மீட்டர்கள் மற்றும் இதர நிறுவனங்களின் துணிகள் 27.00 இலட்சம் மீட்டர்கள் என மொத்தம் 200.00 இலட்சம் மீட்டர் துணிகளைப் பதனிட செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.
- மேலும் ஆலையில் மெஷின் ஹால்களின் தரைதளம் மற்றும் நடைபாதையைச் சீரமைக்க ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட உள்ளது.

9.4 தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் (TNHDC), சென்னை

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட் ஒரு மாநில பொதுத் துறை நிறுவனமாகும், இது 1964 ஆம் ஆண்டில் அதன் செயல்பாட்டைத் தொடங்கியது, கூட்டுறவு அமைப்பின்கீழ் இல்லாத நெசவாளர்களுக்கு நியாயமான வட்டி விகிதத்தில் நடைமுறை மூலதன உதவியை வழங்கி, சேவை செய்யும் நோக்கத்துடன் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் தொடங்கப்பட்டது.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் பங்கு மூலதனம் பின்வருமாறு:-

(ரூ. இலட்சத்தில்)

அ) பங்கு மூலதனம்		
(i)	அரசு	267.00
(ii)	உறுப்பினர்கள்	162.24
மொத்தம் பங்கு மூலதனம்		429.24
ஆ) தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட கடன்		504.15
மொத்தம் (அ + ஆ)		933.39

2023 ஏப்ரல் 11]

தற்போது நெசவாளர்களிடம் இருந்து நிலுவையில் உள்ள கடனை வசூலிப்பது தொய்வடைந்துள்ள காரணத்தால் பின்வரும் திட்டங்களின் செயல்பாடுகளுக்கு வருவாய் ஈட்டும் பொருட்டு தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் முகமை / செயலாக்க நிறுவனமாக நியமனம் செய்யப்பட்டுள்ளது.

1) திருச்சி மெகா கைத்தறி குழுமம்

2) விருதுநகர் மெகா கைத்தறி குழுமம்

3) தேசிய / மாநில அளவிலான கைத்தறி கண்காட்சிகளை நடத்துதல்

4) சந்தைப்படுத்துதல் ஊக்கத் திட்டம்

5) கைத்தறி ஆதரவு திட்டம்

6) லூம்வேர்ல்ட் என்ற பிராண்டின்கீழ் கைத்தறி பொருட்களை இ-ஷாப்பிங்மூலம் சந்தைப்படுத்துதல்

7) சேலைகள் மற்றும் வேட்டிகள் திட்டத்திற்கான முகமை நிறுவனம்

8) சீருடை துணிகள் விநியோக திட்டத்தின்கீழ் முகமை நிறுவனங்களில் ஒன்றாகச் செயல்படுகிறது

9) லூம்வேர்ல்டிற்கான ஒற்றை முகமை நிறுவனம்

லூம்வேர்ல்ட்

பட்டு சேலைகள், மென்மையான பட்டு சேலைகள், பருத்தி சேலைகள், கோரா பருத்தி சேலைகள் உள்ளிட்ட தரமான கைத்தறிப் பொருட்களை உற்பத்தி செய்யும் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஒரு பொதுவான பெயரை வழங்குவதற்கும், சந்தைப்படுத்துதலை எளிதாக்குவதற்கும் 2000 ஆம் ஆண்டு 'லூம்வேர்ல்ட்' தொடங்கப்பட்டது. பட்டு வேட்டிகள், பருத்தி வேட்டிகள், பருத்தி லுங்கிகள் மற்றும் வீட்டு அலங்காரப் பொருட்கள் ஆகியவையும் லூம்வேர்ல்டில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லூம்வேர்ல்டு அமைப்பினை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் www. loomworld.in என்ற இணைய தளத்தில் 30.12.2015 அன்று

இ-காமர்ஸ் வசதி தொடங்கப்பட்டது மற்றும் லூம்வேர்ல்டின் இ-ஷாப்பிங் இணையதளம்மூலம் கைத்தறி பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

2021-2022 ஆம் ஆண்டில் கழகத்தின் நிகர இலாபம் ரூ.10.65 இலட்சம் ஆகும். 2022-23 ஆம் ஆண்டில் உத்தேச நிகர இலாபம் ரூ.10.30 இலட்சமாக உள்ளது.

10. நீடித்த வளர்ச்சி இலக்குகள்

தமிழ்நாட்டில் நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்காக அரசால் உயர் நிலை குழு மற்றும் செயற்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைக்கென பின்வரும் நீடித்த வளர்ச்சி இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன:

இலக்கு 7	அனைவருக்கும் கட்டுபடியாகக்கூடிய நம்பகமான, நிலையான மற்றும் நவீன எரிசக்திக்கான அணுகுமுறையினை உறுதிசெய்தல்.
இலக்கு 8	நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி, முழுமையான உற்பத்தி திறன்மிக்க வேலைவாய்ப்பு மற்றும் அனைவருக்கும் நியாயமான வேலை ஆகியவற்றை ஊக்குவித்தல்.
இலக்கு 9	உறுதியான உட்கட்டமைப்பை உருவாக்குதல், உள்ளடக்கிய மற்றும் நிலையான தொழில்மயமாக்கலை ஊக்குவித்தல் மற்றும் புதிய முயற்சிகளை வளர்த்தல்.
இலக்கு 11	நகரங்கள் மற்றும் மனித குடியிருப்புகளை உள்ளடக்கிய, பாதுகாப்பான, மீள்தன்மை மற்றும் நிலையானதாக உருவாக்குதல்.

நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான திட்டங்களைக் கண்காணிப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்கும், துறையால் "ஒருங்கிணைப்பு அலுவலர்" நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கைத்தறிகளில் வடிவமைப்புகளை உருவாக்குதல், தொழில்நுட்பத்தைப் புகுத்துதல், கைத்தறி துணிகளை சந்தைப்படுத்துதல், உட்கட்டமைப்பினை மேம்படுத்துதல்

2023 ஏப்ரல் 11]

ஆகியவற்றின்மூலம் கைத்தறி நெசவாளர்கள் மற்றும் நெசவு உபதொழில் புரிபவர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பினை வழங்கி அதிகமான கூலி கிடைப்பதற்கு துறையால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

11. கைத்தறி துறையின் 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கைத்தறி துறைக்கு பின்வரும் விவரப்படி ரூ.1133.41 கோடி மாநில அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்	**திட்டத்தின் பெயர்**	**வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2023-24 (ரூ. இலட்சத்தில்)**
1	*வேட்டி சேலை வழங்கும் திட்டம்*	*20579.07*
2	*கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம்*	*729.65*
3	*விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம்*	*51367.28*
4	*கைத்தறி ஆதரவுத் திட்டம்*	*2000.00*
5	*வட்டி மானியத் திட்டம்*	*2160.00*
6	*தள்ளுபடி மானியத் திட்டம்*	*25000.00*
7	*மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின்கீழ் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல்*	*92.71*
8	*கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்– பங்குத்தொகைகள்*	*1200.00*

வ. எண்	திட்டத்தின் பெயர்	வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2023-24 (ரூ. இலட்சத்தில்)
9	முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம்	3500.00
10	மாநில அளவிலான சிறந்த நெசவாளர்கள் விருது	20.41
11	சிறந்த ஏற்றுமதியாளர்கள் விருது	1.00
12	புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை 2019-ன்கீழ் விசைத்தறியை மேம்படுத்துதல்	0.01
13	விசைத்தறி தொழில்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர்களின் மேம்பாட்டிற்கு நிதியுதவி அளித்தல்	200.00
14	ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குழும வளர்ச்சித் திட்டம்	8.01
15	ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் விற்பனை ஊக்குவிப்புத் தொகை	3200.01
16	ஈரோட்டில் உள்ள விசைத்தறி சேவை மையத்திற்கு வாடகை மானியம்	6.72
17	சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள்	2983.53
18	அமலாக்கப் பிரிவின் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள்	292.78
19	இதர இனங்கள்	0.03
	மொத்தம்	**113341.21**

2023 ஏப்ரல் 11]

துணிநூல் துறை


1. முன்னுரை

இந்தியாவில் ஜவுளித் தொழிலானது, வேளாண் துறைக்கு அடுத்தபடியாக, திறன் மிக்க மற்றும் அனைத்து தரப்பு தொழிலாளர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்குவதில் இரண்டாவது பெரிய தொழிலாகவும், உலகளவில் பருத்தி நூல் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியிலும் இரண்டாவது பெரிய தொழிலாகவும் விளங்குகிறது.

2032 நூற்பாலைகள், 5.63 இலட்சம் விசைத்தறிகள், 1.55 இலட்சம் கைத்தறிகள் மற்றும் ஏறத்தாழ 15,000 ஜவுளித் தொழிற்சாலைகளுடன், பதனிடுதல் மற்றும் ஆடைத்தொழிலில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கிறது.

துணிநூல் மற்றும் ஆடைத் தொழில்களில் இந்திய அளவில் தமிழ்நாடு பின்வரும் இனங்களில் முன்னணி மாநிலமாக விளங்குகிறது.

இந்தியாவில் தமிழகத்தின் நிலை



[2023 ஏப்ரல் 11

2. துணிநூல் துறை

தொழில்நுட்ப ஜவுளிப் பிரிவின்மீது அதிக கவனம் செலுத்தி, ஜவுளித் துறைக்கு போதிய உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடும் வகையில், ஏற்கெனவே செயல்பட்டு வந்த கைத்தறி மற்றும் துணிநூல் துறையை இரண்டாகப் பிரித்து, 2021 ஆம் ஆண்டில் "துணிநூல் துறை" என்ற புதிய துறையை உருவாக்கி தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டது.

2.1. துணிநூல் துறையின் நோக்கங்கள்

துணிநூல் துறையானது பின்வரும் நோக்கங்களை முன்னிலைப்படுத்தி செயல்பட்டு வருகிறது.

- திறன்மிக்க தொழிலாளர்கள், பொருத்தமான நிலம் மற்றும் சரக்குப் போக்குவரத்து வசதி உள்ளிட்ட ஏராளமான வளங்களைப் பயன்படுத்தி இழை முதல் நாகரிக ஆடை உற்பத்தி வரை, (from Fibre to Fashion), ஜவுளி இயந்திரங்கள் மற்றும் உதிரிபாகங்கள், இவற்றுடன் ஜவுளி மதிப்புத் தொடரில் (Textile Value Chain) நிலையான வளர்ச்சியை எய்துதல்.
- தொழில்நுட்ப ஜவுளி உற்பத்தி திறன்களுக்கான விரிவாக்கத்தினை மேம்படுத்துதல்.
- ஜவுளி மதிப்புத் தொடரில் (Textile Value Chain) குறிப்பாக தொழில்நுட்ப ஜவுளிப் பிரிவில் சிறப்பு கவனம் செலுத்தி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
- உள்நாட்டு நுகர்வு மற்றும் ஏற்றுமதி ஜவுளிகளின் தரத்தை உறுதி செய்தல்.
- இத்துறையில் வெளிநாட்டினரின் முதலீடுகளுக்கான சிறந்த மற்றும் விருப்பமான இடமாக நமது மாநிலத்தை உருவாக்குதல்.
- சுற்றுச்சூழல், மக்கள் மற்றும் சமூகத்தின் மீதான பாதிப்பு சம்பந்தமான விதிமுறைகளுக்கு உட்பட்டு நவீன தொழில்நுட்பங்களை (State-of-the-Art) பின்பற்றவும், சிறந்த உற்பத்திக்கான நடைமுறைகளை (Global Manufacturing Practices) பின்பற்றுவதற்கான செயலாக்கத்தில் உறுதுணையாக இருத்தல்.

2023 ஏப்ரல் 11]

- *ஆடை வடிவமைப்பாளர்கள், வடிவமைப்பு நிறுவனங்கள் மற்றும் உலகளாவிய வணிக முத்திரையைப் பதித்தல்* (Global Brands) *போன்றவற்றை முறையான நிறுவன அமைப்புகளால் செயல்படுத்திட ஊக்குவித்தல்.*

- *ஆடை அலங்கார நிகழ்ச்சிகளை ஆண்டுதோறும் நடத்தி, மாறிவரும் நாகரிகத்திற்கு ஏற்ப ஜவுளிச் சுற்றுலாவிற்கான வாய்ப்புகளை உருவாக்குதல்.*

- *சுற்றுச்சூழலுக்கு ஏற்றவாறு, குறைந்த செலவிலான மற்றும் நிலையான ஜவுளி பதப்படுத்துவதற்கான உட்கட்டமைப்பு வசதிகளை விரிவுபடுத்துதல்.*

- *வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள சாத்தியமான பகுதிகளில் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் அமைத்திட பன்னாட்டு தரத்துடன் கூடிய, உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.*

- *மாநிலத்தின் ஜவுளி ஏற்றுமதி பங்கினை பன்மடங்காக உயர்த்துதல்.*

2.2. துணிநூல் துறையின் அமைப்பு

துணிநூல் துறையானது, துணிநூல் ஆணையரின் தலைமையின்கீழ் இயங்கி வருகிறது. மேலும், இது தமிழ்நாடு அரசின் கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறையால் நிர்வகிக்கப்படுகிறது.

துணிநூல் ஆணையருக்கு உதவியாக தலைமையிடத்தில் இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் பணியாற்றுகின்றனர். மேலும், சேலம், கரூர், திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டல அலுவலகங்களில் துணை இயக்குநர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.


துணிநூல் துறையின்கீழ் பின்வரும் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் இயங்கி வருகின்றன:-

1. *ஆண்டிப்பட்டி (தேனி), எட்டயபுரம் (தூத்துக்குடி), ஆரல்வாய்மொழி (கன்னியாகுமரி), ஊத்தங்கரை (கிருஷ்ணகிரி), அறந்தாங்கி (புதுக்கோட்டை) மற்றும் அச்சங்குளம் (இராமநாதபுரம்) ஆகிய இடங்களில் ஆறு கூட்டுறவு நூற்பாலைகள்.*

[2023 ஏப்ரல் 11

2. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோயம்புத்தூர்.

3. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம், சென்னை.



2023 ஏப்ரல் 11]

3. தமிழ்நாடு- துணிநூல் மதிப்புத் தொடரின் பிரிவுகள் (Textile Value Chain)

தமிழ்நாட்டில்துணிநூல்தொழில்துறையானது,கீழ்க்கண்டவாறு, "இழை சாகுபடியில் தொடங்கி, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை சந்தைப்படுத்துதல் மற்றும் ஏற்றுமதி வரையிலான" துறைசார் மதிப்புத் தொடரின் (Sector Value Chain) அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கியது:

3.1. இழை (Fibre)

இந்தியாவின் துணிநூல் தொழிலில் மூலப்பொருள் இயற்கை இழைகளே. குறிப்பாக பருத்தி இழைகளே அதிகம் பயன்படுத்தப்படுகின்றன. அதற்கு மாறாக, 2020 ஆம் ஆண்டு நிலவரப்படி, உலகளாவிய பயன்பாட்டில் செயற்கை இழையானது 72% பயன்படுத்தப்பட்டு முன்னிலையில் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. பயன்பாட்டிலுள்ள பல்வேறு இழை வகைகள் பின்வருமாறு:

இயற்கை இழை – பருத்தி (Cotton)

பருத்தி இழையானது, உலகிலேயே மிகவும் பிரபலமான இயற்கை இழையாக விளங்குகிறது. மேலும், தமிழ்நாட்டின் துணிநூல் தொழிலில் பயன்படுத்தப்படும் மிக முக்கியமான மூலப்பொருளாகவும் உள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள நூற்பாலைகளின் வருடாந்திர சராசரி பருத்தித் தேவையான 120 இலட்சம் பேல்களில், மாநில அளவில், உள்நாட்டில் உற்பத்தி ஏறத்தாழ 3 இலட்சம் முதல் 5 இலட்சம் பேல்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் உள்ள ஆலைகளுக்குத் தேவையான 95% பருத்தியானது, குஜராத், மகாராஷ்டிரா, ஆந்திர பிரதேசம் மற்றும் தெலுங்கானா போன்ற மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

சிறப்பு பருத்தி இயக்கம். (Special Cotton Mission)

அதிகரித்து வரும் பருத்திக்கான தேவையைப் பூர்த்தி செய்திடும் வகையில், ஒருங்கிணைந்த அணுகுமுறையிலான பருத்தி சாகுபடியில் சிறப்பு கவனம் செலுத்தும் பொருட்டு, ரூ.11.00 கோடி நிதி ஒதுக்கீட்டில் "நிலையான பருத்தி சாகுபடி இயக்கம்"

[2023 ஏப்ரல் 11

எனும் திட்டம் 2021-22 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டு அதனைச் செயல்படுத்துவதற்கான முன்னெடுப்புகளானது, தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறையால் தொடங்கப்பட்டுள்ளது.

மேலும், மிக நீண்ட இழை பருத்தி சாகுபடி பரப்பு விரிவாக்கத்தை ஊக்குவிக்க, வேளாண்மைத் துறையுடன் இணைந்து "சிறப்பு பருத்தி இயக்கம்" எனும் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழுவினை துணிநூல் துறை அமைத்துள்ளது.

இந்த முயற்சியானது, பருத்தி உற்பத்தியை அதிகரித்து, தமிழ்நாட்டில் பருத்தி சார்ந்த ஜவுளித் தொழில்களின் வளர்ச்சிக்கு துணைபுரியும்.

செயற்கை இழை (Man-made Fibre)

செயற்கை இழைகள் கீழ்க்கண்ட வகைகளை உள்ளடக்கியது.

(i) 'சின்தடிக் இழைகள்' (Synthetic Fibre)-பெட்ரோலிய வேதிப்பொருட்களிலிருந்து பெறப்பட்டவை.

(ii) மறு உருவாக்கம் செய்யப்பட்ட இழைகள் (Regenerated fibres)-மரக்கூழ் போன்ற இயற்கை மூலங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட செல்லுலோஸிலிருந்து பெறப்பட்ட இழை.

(iii) மறுசுழற்சி செய்யப்பட்ட இழைகள் (Recycled Fibres)-PET (Polyethylene terephthalate) பாட்டில்கள் உட்பட மறுசுழற்சி செய்யப்பட்ட கழிவுகளிலிருந்து பெறப்பட்டது.

செயற்கை இழையானது, பன்முகப்படுத்தப்பட்ட பண்புகள், நிலையான தரம் மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள் உள்ளிட்ட பலதரப்பட்ட உற்பத்திக்கு பயன்படுத்தப்படுவதால், முதலீட்டாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் ஆர்வத்துடன் முதலீடு செய்வதற்கான வாய்ப்புகளை வழங்குகிறது.

தமிழ்நாட்டில் செயற்கை இழை உற்பத்தியை மேம்படுத்துவதற்கான முனைப்பான நடவடிக்கைகளை துணிநூல் துறை மேற்கொண்டு வருகிறது. மேலும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடன் விரிவான ஆலோசனைகளும் நடத்தப்பட்டு வருகின்றன.

2023 ஏப்ரல் 11]

நீர் மற்றும் எரிசக்தி பயன்பாட்டினைக் குறைத்து அதன்மூலம் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்காக PET பாட்டில் கழிவுகளை மறுசுழற்சி செய்து இழைகளாக மாற்றி உற்பத்தி செய்திட தற்பொழுது சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

3.2. நூற்பு பிரிவு (Spinning)


நூல் நூற்றல் என்பது பஞ்சினை நூலாக மாற்றும் செயல்முறையாகும். நூலானது நெசவு மற்றும் பின்னலாடைக்கான மூலப்பொருளாகும். நூற்பு தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இந்நூற்புப் பிரிவானது, ரிங் ஸ்பின்னிங் (Ring Spinning), ரோட்டார் ஸ்பின்னிங் (Open-end/Rotor Spinning), கோர் ஸ்பின்னிங் (core Spinning), ஏர்ஜெட் ஸ்பின்னிங் (Airjet Spinning), உராய்வு நூற்பு (Frictional Spinning) மற்றும் இதர வகை சுய-முறுக்கு நூற்பு (Self twist spinning), மின்னூட்ட நூற்பு (Electrostatic Spinning) வோர் டெக்ஸ் நூற்பு (Vortex Spinning) மற்றும் முறுக்கற்ற நூற்பு (Twistless Spinning) என பிரிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வகைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல்களானது ஆடைகள், வீட்டு ஜவுளிகள், மருத்துவம் சார்ந்த ஜவுளிகள் மற்றும் இதர வகை உற்பத்திகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

உலக அளவில் நிறுவப்பட்டுள்ள நூற்பு கதிர்களின் எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டில் 21.9 கோடி (219 மில்லியன்) கதிர்களிலிருந்து 2021 ஆம் ஆண்டில் 22.5 கோடி (225 மில்லியன்) கதிர்களாக அதிகரித்துள்ளது. நிறுவப்பட்ட ஓபன்-எண்ட் ரோட்டர் நூற்பு சுழலிகளின் (Open-end-Rotors) எண்ணிக்கையானது 79 இலட்சத்திலிருந்து (7.9 மில்லியன்) 83 இலட்சமாக (8.3 மில்லியன்) அதிகரித்துள்ளது.

5 கோடிக்கும் (50 மில்லியன்) அதிகமான நூற்புக் கதிர்கள் மற்றும் 8.42 இலட்சம் (0.84 மில்லியன்) ரோட்டார் நூற்பு சுழலிகள் ஆகியவற்றுடனும், 25% உலகளாவிய பருத்தி நூல் வர்த்தகத்துடனும், சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா 2-வது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்தியாவிலுள்ள மொத்த நூற்பாலைகளில் 55% நூற்பாலைகளும், நிறுவப்பட்ட மொத்த நூற்பு கதிர்களில் 43% கதிர்களும், ரோட்டர் நூற்பு சுழலிகளில் 60% சுழலிகள்

ஆகியவற்றைக் கொண்டு நூற்புக் கதிர்களின் எண்ணிக்கை, சுழலிகளின் எண்ணிக்கை மற்றும் நூலின் உற்பத்தி ஆகியவற்றில் நாட்டிலேயே தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.



இந்தியா முழுவதும், ஆண்டு ஒன்றுக்கு 275 பில்லியன் டன் பருத்திக் கழிவுகளும், 112 பில்லியன் டன் துணி/ஆடைக் கழிவுகளும் உருவாக்கப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வழக்கமாக அவை குப்பைக் கிடங்குகளில் கொட்டப்படுகின்றன. தமிழ்நாட்டில், 400-க்கும் மேற்பட்ட Open-end நூற்பாலைகள்மூலம் கழிவுப்பஞ்சு மற்றும் ஆடைக் கழிவுகளிலிருந்து நூல் உற்பத்தியானது மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியாவிலேயே நூற்புக் கதிர்களின் எண்ணிக்கையில் தமிழ்நாடு முன்னணியில் இருந்தாலும், பழைய இயந்திரங்களைப் பயன்படுத்துவதால், நாட்டின் மற்ற பகுதிகளைவிட மாநிலத்தில், நூல் உற்பத்தித் திறன் (Productivity) குறைவாகவே உள்ளது.

தொழில்நுட்ப மேம்பாடு காரணமாக நெசவு (Weaving) மற்றும் பின்னல் (knitting) போன்ற அடுத்தடுத்த நிலைத் தொழில்களில், தரமான நூல் தேவையானது கணிசமாக அதிகரித்துள்ளதால், நூற்பாலைகள் உற்பத்தி செய்யும் நூலின் தரத்தை மேம்படுத்தவும் மற்றும் வணிகத்தைத் தக்கவைக்கவும் இயந்திரங்களை நவீனப்படுத்த வேண்டியுள்ளது.

2023 ஏப்ரல் 11]

எனவே, இத்துறைக்கு நவீனமயமாக்கல் மற்றும் அதிநவீன தொழில்நுட்பத்திற்கான உதவி தேவைப்படுகிறது. அதற்கேற்ப, பழைய இயந்திரங்களை நவீனமயமாக்குவதற்காக நூற்பாலைகளுக்கு "தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை-2019"-ன்கீழ் 2% வட்டி மானியம் தமிழ்நாடு அரசால் நூற்பாலைகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கூட்டுறவு நூற்பாலைகள்

தமிழ்நாட்டில், பின்வரும் ஆறு கூட்டுறவு நூற்பாலைகள் 1.18 இலட்சம் நூற்பு கதிர்களுடன் தற்போது இயங்கி வருகின்றன.

1. *அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிபட்டி, தேனி.*
2. *பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டயபுரம், தூத்துக்குடி.*
3. *கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி.*
4. *புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி.*
5. *கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை.*
6. *இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அச்சங்குளம்.*

இக்கூட்டுறவு நூற்பாலைகள், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சிட்டா நூலையும், விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவையான கோன் நூலினையும் வழங்கி வருகின்றன. இவை வேட்டி சேலை வழங்கும் திட்டம் மற்றும் பள்ளிச் சீருடை வழங்கும் திட்டம் ஆகிய அரசின் முதன்மைத் திட்டங்களுக்குப் பயன்டுத்தப்படுகின்றன. நூல் வழங்கிய விவரங்கள் பின்வருமாறு:


வேட்டி சேலை வழங்கும் திட்டம் "பொங்கல் 2023" திட்டத்திற்கு கூட்டுறவு நூற்பாலைகள் நூல் வழங்கிய விவரம்.

வ. எண்.	நூற்பாலையின் பெயர்	நூற்பு கதிர்களின் எண்ணிக்கை	நூல் வழங்கிய அளவு (மெட்ரிக் டன்னில்)	நூல் மதிப்பு (ரூபாய் கோடியில்)
1	அண்ணா	24192	600.60	23.29
2	பாரதி	18144	515.49	20.01
3	கன்னியாகுமரி	22800	649.94	25.49
4	புதுக்கோட்டை	20976	511.09	19.99
5	கிருஷ்ணகிரி	20160	455.14	17.55
6	இராமநாதபுரம்	12096	395.24	15.19
மொத்தம்		**118368**	**3127.50**	**121.52**

பள்ளிச் சீருடை வழங்கும் திட்டம் கல்வியாண்டு 2022-23 திட்டத்திற்கு கூட்டுறவு நூற்பாலைகள் நூல் வழங்கிய விவரம்.

வ. எண்.	நூற்பாலையின் பெயர்	நூற்பு கதிர்களின் எண்ணிக்கை	நூல் வழங்கிய அளவு (மெட்ரிக் டன்னில்)	நூல் மதிப்பு (ரூபாய் கோடியில்)
1	அண்ணா	24192	689.82	24.72
2	பாரதி	18144	433.62	15.54
3	கன்னியாகுமரி	22800	538.68	19.31
4	புதுக்கோட்டை	20976	612.24	21.94
5	கிருஷ்ணகிரி	20160	475.26	17.03
6	இராமநாதபுரம்	12096	321.18	11.51
மொத்தம்		**118368**	**3070.80**	**110.05**

2023 ஏப்ரல் 11]



கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகம்மூலம் கூட்டுறவு நூற்பாலைகள் நூல் வழங்கிய விவரம்

வ. எண்	ஆலையின் பெயர்	நூல் வழங்கிய அளவு (மெட்ரிக் டன்னில்)	நூல் மதிப்பு (ரூ. கோடியில்)
1	அண்ணா	*349.87*	*14.22*
2	பாரதி	*360.79*	*13.04*
3	கன்னியாகுமரி	*414.25*	*15.04*
4	புதுக்கோட்டை	*424.78*	*15.50*
5	கிருஷ்ணகிரி	*242.39*	*8.79*
6	இராமநாதபுரம்	*375.00*	*13.23*
மொத்தம்		**2167.08**	**79.82**


[2023 ஏப்ரல் 11


கூட்டுறவு நூற்பாலைகளின் வெளிச்சந்தை விற்பனை விவரம்

வ. எண்	ஆலையின் பெயர்	விநியோகிக்கப்பட்ட அளவு (மெ.டன்)	விநியோகிக்கப்பட்ட மதிப்பு (ரூ. கோடியில்)
1	அண்ணா	222.48	7.70
2	பாரதி	44.16	1.37
3	கன்னியாகுமரி	99.66	3.29
4	புதுக்கோட்டை	162.24	2.56
5	கிருஷ்ணகிரி	33.00	1.09
6	இராமநாதபுரம்	12.00	0.36
மொத்தம்		**573.54**	**16.37**

கடந்த இரண்டு வருடங்களுக்கான கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தி மற்றும் விற்பனை விவரம் (ரூ. கோடியில்)					
வ. எண்.	ஆலையின் பெயர்	உற்பத்தி		விற்பனை	
		2021-2022	2022-2023 (ஜனவரி வரை)	2021-2022	2022-2023 (ஜனவரி வரை)
1	அண்ணா	58.14	66.34	55.85	66.31
2	பாரதி	49.88	48.71	49.51	47.48
3	கன்னியாகுமரி	56.03	57.77	50.88	63.65
4	புதுக்கோட்டை	55.13	53.45	47.87	57.20
5	கிருஷ்ணகிரி	39.15	47.37	37.54	41.23
6	இராமநாதபுரம்	33.98	39.01	32.19	39.45
மொத்தம்		292.31	312.65	273.84	315.32

2023 ஏப்ரல் 11]


Yarn Produced by Cooperative Spinning Mills
Rs. in Crore
2021-22
2022-23 (upto Jan'23)
70
60
50
40
30
20
10
0
58.14
66.34
49.88
48.71
56.03
57.77
55.13
53.45
39.15
47.37
33.98
39.01
Anna
Bharathy
Kanyakumari
Pudhukottai
krishnagiri
Ramnad


Yarn Sales by Cooperative Spinning Mills
Rs. in Crore
2021-22
2022-23 (upto Jan'23)
70
60
50
40
30
20
10
0
55.85
66.31
49.51
47.48
50.88
63.65
47.87
57.20
37.54
41.23
32.19
39.45
Anna
Bharathy
Kanyakumari
Pudhukottai
krishnagiri
Ramnad

[2023 ஏப்ரல் 11

கூட்டுறவு நூற்பாலைகளை நவீனமயமாக்குதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் 2022-2023 ஆம் ஆண்டுக்கான சட்டமன்றக் கூட்டத்தொடரின்போது வெளியிட்ட அறிவிப்புகளின்படி, கூட்டுறவு நூற்பாலைகளில் ஆட்டோ கோனர் (Autoconer) இயந்திரம், Compact Spinning System மற்றும் நூல் பதப்படுத்தும் இயந்திரம் (Yarn Conditioning Machine) நிறுவுவதற்கு மொத்தம் ரூ.31.26 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இயந்திரங்களைக் கொள்முதல் செய்வதற்கு, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 ஆகியவற்றைப் பின்பற்றி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் 2022-2023 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற கூட்டத்தொடரின்போது வெளியிட்ட அறிவிப்பின்படி, பாரதி, கன்னியாகுமரி மற்றும் புதுக்கோட்டை கூட்டுறவு நூற்பாலைகளில் 11 KV தனி உயர்மின்னழுத்த மின்பாதைகள் (Dedicated Power Feeder Line) அமைக்க ரூ.1.75 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, பாரதி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அனுமதிக்கப்பட்ட தொகை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு (TANGEDCO) ஆலைகளால் செலுத்தப்பட்டு, பணிகள் நடந்து வருகின்றன.

3.3. நெசவு மற்றும் பின்னலாடை

ஐவுளி மதிப்பு தொடரில் (Textile Value Chain) பின்னல் தொழில்நுட்பம் என்பது உயர் மதிப்புக் கூட்டும் செயல்முறையாகும். இது, நூலினை மிருதுவான துணிகளாக (Hosiery fabrics) மாற்றுவதன்மூலம் சாக்ஸ், பனியன்கள், உள்ளாடைகள் மற்றும் ஆடை தயாரிப்புக்கு பயன்படுத்தப்படுகிறது.

பின்னலாடை தொழிலுக்கு, தமிழ்நாடு பெரும் உறைவிடமாகவும், முக்கியமாக நாட்டின் மிகவும் முக்கிய பின்னலாடை குழுமங்களில் ஒன்றாக திருப்பூர் விளங்குகிறது. திருப்பூர் ஆண்டுக்கு ரூ.6,500 கோடி அளவிற்கு உற்பத்தியை ஈட்டக் கூடிய 4,000 உற்பத்தி அலகுகளை (Production Units) கொண்டதாகும். பின்னலாடை ஏற்றுமதியில்

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

திருப்பூர் மாவட்டம் மிகப் பெரிய மையமாகத் திகழ்வதோடு, 2021-22 ஆம் ஆண்டில் நாட்டின் மொத்த பின்னலாடை ஏற்றுமதியில் 55% (ரூ.33,525 கோடி) பங்களிப்பை வழங்கியுள்ளது.


இந்தியாவில் பின்னலாடை மற்றும் ஆடை ஏற்றுமதி [ரூ. கோடியில்]			
	2020-2021	2021-2022	2022-2023 [ஏப்ரல் முதல் ஜனவரி வரை]
இந்திய அளவில்	46,890	60,950	53,586
திருப்பூர்	24,750	33,525	29,625
பங்கு (%)	52.80%	55.0%	55.32%

கோவிட்-19 பெருந்தொற்றுக்குப் பின்பும் மற்றும் 2022 ஆம் ஆண்டு துவக்கத்தில் ஆரம்பித்த ரஷ்யா உக்ரைன் போர் ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி மற்றும் விலை ஏற்றம் காரணமாகவும், பெரும்பாலும் ஏற்றுமதியைச் சார்ந்துள்ள பின்னலாடைத் தொழிலானது பெரும் பின்னடைவை சந்தித்து வருகிறது. முக்கிய ஏற்றுமதி சந்தைகளான இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன் மற்றும் ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தேவைகள் குறைந்து வருவதால், பின்னலாடை தொழிலானது பெரும் சவால்களை எதிர்கொண்டு வருகிறது. இருப்பினும், தேசிய அளவில் ஏற்றுமதியில், திருப்பூர் சீரான பங்கினை வகிப்பதோடு, வரும் காலங்களில் மீண்டும் இயல்பான வளர்ச்சி வேகத்தை எட்டுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

3.4 பதனிடும் பிரிவு:

ஜவுளித் தொழிலில், பதனிடும் பிரிவானது, முடிவுற்ற ஜவுளி இரகங்களில் மதிப்பு கூட்டுதல் (Value Addition) மற்றும் தர மேம்பாட்டிற்கு பல்வேறு விதங்களில் தனித்துவமான பங்களிப்பினை வழங்கி வருகிறது. ஜவுளித் துறையில் பதனிடும் பிரிவில் உள்ள பல்வேறு அங்கங்களின் முக்கிய மையமாக இருந்து வருகிறது.

பதனிடுதல் (Processing)- செயல்பாட்டு முறைகள்:



தமிழ்நாட்டில் ஜவுளித் தொழில் செறிந்துள்ள ஈரோடு, திருப்பூர், கரூர் மற்றும் சேலம் ஆகிய மாவட்டங்களில், பதனிடும் பிரிவில் கையால் இயக்கப்படும் பழமையான முறை முதல், தானியங்கி முறையில் செயல்படுத்தப்பட்டு வரும் உயர் தொழில்நுட்பம் வரை பல்வேறு அளவிலான மாறுபட்ட தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பதனிடும் பிரிவு கீழ்க்கண்ட மூன்று வகைகளாக பிரிக்கப்படுகிறது.

1. ஒருங்கிணைந்த தொழில்நுட்பம் கொண்ட பதனிடும் தொழிற்சாலைகளில் உள்ள உயர் தொழில்நுட்ப பதனிடும் வசதிகள்.
2. நடுத்தர பதனிடும் தொழிற்சாலை (நடுத்தரம் முதல் மேம்பட்ட தொழில்நுட்ப பயன்பாடு)
3. சிறு அளவிலான பதனிடும் அலகுகள் (யூனிட்டுகள்)

2023 ஏப்ரல் 11]

பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

ஜவுளி குழுமங்களில் வெளியேறும் மாசினை கட்டுப்படுத்தவும், பசுமையான மற்றும் சுத்தமான சுற்றுச்சூழலை உறுதி செய்யவும், ”பூஜ்ஜிய நிலை திரவ வெளியேற்றும் வசதி” (ZLD) மற்றும் இதர மேம்பட்ட தொழில்நுட்ப வசதியுடன் கூடிய பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களைச் செயல்படுத்த தமிழ்நாடு அரசு சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது.

அதன்படி, திருப்பூரில் 18 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவவும், தற்போதுள்ள பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை மேம்படுத்தவும் ஒன்றிய அரசும், தமிழ்நாடு அரசும் இணைந்து ரூ.703.29 கோடியை வழங்கியுள்ளன. இம்முயற்சியானது, நிலையான உற்பத்தி மற்றும் நீடித்த வேலைவாய்ப்புகளை உறுதி செய்வதுடன், பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடைத் தொழில் மற்றும் மாவட்டத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பினை அளித்து வருகிறது.

பிரச்சினைகள்

பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், ஆரோக்கியத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் ஆபத்தான ஏறத்தாழ 73000 மெட்ரிக் டன் கலப்பு கழிவு உப்புகள் (Accumulated Mixed Waste Salt) தேக்கமடைந்துள்ளதோடு, தொடர்ந்து அதிகரித்தும் வருகிறது. இப்பிரச்சினை உடனடியாக தீர்க்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

உரிய தொழில்நுட்பமின்மை காரணத்தினால், தற்போது தொடர்ந்து கழிவு உப்புக்கள் தேக்கமடைந்து வருகின்றன. இதனால் பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் தொடர்ந்து கலப்பு கழிவு உப்புகள் குவிந்து வருகின்றன. எனவே, இதனைத் தடுக்க புதுமையான மற்றும் குறைந்த செலவிலான கழிவு சுத்திகரிப்புத் தொழில் நுட்பங்களை விரைவில் செயல்படுத்த வேண்டிய சூழ்நிலை உள்ளது.

அரசின் தீவிர நடவடிக்கைகள்

மேற்கண்ட பிரச்சினைகளைக் களைந்திட, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால்

[2023 ஏப்ரல் 11

2022-2023 ஆம் ஆண்டுக்கான துணிநூல் துறையின் மானியக் கோரிக்கையின்போது "தமிழ்நாட்டிலுள்ள ஜவுளிப் பதனிடும் தொழில் சார்ந்த பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில், சுத்திகரிப்பு செய்த பின்னர் இருப்பாக உள்ள மீதமுள்ள கழிவு உப்புகளை சுற்றுச்சூழல் பாதிப்பின்றி அகற்றிடத் தேவையான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகள் (Research and Development) ஊக்குவிக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

இவ்வறிவிப்பின் மூன்று முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

1. தொடர் கழிவு உப்பு மேலாண்மை (Concurrent Reject Management System) மூலமாக மேலும் கழிவு உப்புகள் குவிவதைத் தடுத்தல்.
2. ஏற்கெனவே குவிந்துள்ள கழிவு உப்புகளை, பயன்படுத்தக்கூடிய துணைப்பொருட்களாக (Usable by- Products) மாற்றுதல்.
3. கழிவு நீர் சுத்திகரிப்பிற்கான செலவினைக் குறைத்திடும் வகையில், பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்குவதற்குத் தேவையான நிலையான செயல்பாட்டு வழிமுறைகளை உருவாக்குதல் (SOP).

பொதுக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களில் சேகரமாகும் (Accumulate) கழிவு உப்பு மற்றும் ஏற்கெனவே குவிந்துள்ள அபாயகரமான கழிவு உப்புகளை அகற்றிட உரிய தொழில்நுட்பம் வழங்குநரை (Technology Provider) இறுதி செய்ய தொழில்நுட்ப அங்கீகரிப்பு குழு நியமனம் செய்யப்பட்டுள்ளது .

இக்குழுவால் பல்வேறு கலந்தாய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, கலப்பு கழிவு உப்புக்களை அகற்றுவதற்காக, பொருத்தமான தொழில்நுட்பத்தை இறுதி செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், புதிய பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிறுவுவதற்கும் தற்போது உள்ள பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் இயக்குதல் மற்றும் பராமரித்தல் செலவினங்களைக் குறைத்திடவும் நிலையான செயல்பாட்டு நடைமுறைகளை (SOP) இக்குழு பரிந்துரைக்கும்.

25-11-2022 ஆம் தேதியன்று நடைபெற்ற தொழில்நுட்ப ஜவுளிகள் தொடர்பான சர்வதேசக் கருத்தரங்கில், திருப்பூரில் உள்ள பொதுக்கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் குவிந்துள்ள

2023 ஏப்ரல் 11]

கலப்புக் கழிவு உப்புக்களை அகற்றுவதற்கான தொழில்நுட்பம் வழங்குநருடன் (Technology Provider) *புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.*

3.5 ஆடை மற்றும் ஆயத்த ஆடை (Garment and Apparel)

2019-20 ஆம் ஆண்டில், 839 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த, உலகளாவிய ஆயத்த ஆடைச் சந்தையானது, 2025-ம் ஆண்டில் 3% கூட்டு வருடாந்திர வளர்ச்சியடைந்து (CAGR), *1000 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு எட்டும் என எதிர் பார்க்கப்படுகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை, உள்ளூர் ஆடை மற்றும் ஆயத்த ஆடைச் சந்தையானது, 2019-2020 ஆம் ஆண்டில் எய்திய 106 பில்லியன் அமெரிக்க டாலரைக் காட்டிலும், 2025-2026 ஆம் ஆண்டில் 190 பில்லியன் அமெரிக்க டாலரை எட்டும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.*

ஆடை மற்றும் ஆயத்த ஆடைத் தொழிலானது, அந்நியச் செலாவணி ஈட்டுவதிலும், வேலைவாய்ப்பினை உருவாக்குவதிலும், இந்திய பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை வகிக்கிறது. உலக அளவில், இந்தியா சிறந்த ஏற்றுமதி நாடுகளில் ஒன்றாக விளங்கிய போதிலும், நாட்டின் துணித்தொழில் துறையின் ஏற்றுமதியின் முழுத்திறனையும் (Export Potential) *பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது என்ற வளர்ச்சிக்கான உண்மை நிலையானது உணரப்பட்டு வருகிறது. மேலும், துணி ஏற்றுமதியில் கம்போடியா, வங்கதேசம், துருக்கி, இலங்கை, இந்தோனேஷியா, வியட்நாம் மற்றும் சீனா ஆகிய நாடுகளின் கடும் போட்டியினை இந்தியா தற்போது சந்தித்து வருகிறது.*

3.6 தொழில்நுட்ப ஜவுளிகள்

தொழில்நுட்ப ஜவுளிகள் என்பது பாரம்பரிய ஜவுளிகளுடன் ஒப்பிடும்போது, ஒருசில உயர் செயல்திறன்களைக் கொண்ட ஜவுளிகள் ஆகும்.

பல வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் தொழில்நுட்ப ஜவுளிகள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டாலும், தொழில்நுட்ப ஜவுளிகளில் ஏற்படக் கூடிய தொழில்நுட்ப, பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நன்மைகளை இந்தியா பெருமளவில் அடைய வேண்டியுள்ளது.

தொழில்நுட்ப ஜவுளிப் பிரிவானது, பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்பட்டு, வேகமாக வளர்ந்துவரும் உபபிரிவாகும். தொழில்நுட்ப ஜவுளிகளின் இறுதிப் பயன்பாடு கீழ்க்காண் 12 முக்கிய தொழில் பிரிவுகளில் பரவலாகக் காணப்படுகிறது.

சந்தை நிலவரம்

தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான தேவையானது, சமீபத்திய காலங்களில், பொருளாதார மேம்பாடு, தொழில்நுட்ப முன்னேற்றங்கள், பல்வேறு தொழில்களில் பயன்பாடு அதிகரிப்பு, குறைந்த செலவு, எளிதில் பயன்படுத்துதல், நீடித்த தன்மை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற காரணங்களால் உலகளவில் அபரிமிதமாக அதிகரித்து வருகிறது.

உலக தொழில்நுட்ப ஜவுளி சந்தையானது 2021-ல் 262 பில்லியன் அமெரிக்க டாலர்களாக மதிப்பிடப்பட்டுள்ளது, இதில் ஏற்றுமதி வணிகம் 126 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். இச்சந்தையானது 2018-2021 ஆம் ஆண்டில், 4.7% கூட்டு வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் (CAGR) வளர்ச்சி அடைந்துள்ளது. இத்துறையின் சந்தை ஊடுருவல் (Market penetration) 30%-70% ஆக உள்ளது.

2020-2021 மற்றும் 2021-2022 ஆம் ஆண்டுகளில், இந்தியாவில் தொழில்நுட்ப ஜவுளி ஏற்றுமதி மற்றும் இறக்குமதி விவரங்களின் பிரிவு வாரியான ஒப்பீடு பின்வருமாறு:-

வ. எண்	பயன்பாட்டு பிரிவு	மதிப்பு (மில்லியன் டாலர்கள்)			
		ஏற்றுமதி		இறக்குமதி	
		2020-2021	2021-2022	2020-2021	2021-2022
1	பேக்டெக்	784.5	1,104.1	59.1	84.9
2	இண்டுடெக்	522.7	692.7	505.4	733.1
3	மொபில்டெக்	187.2	261.3	501.6	806.2
4	கிளாத்டெக்	226.6	222.7	214.5	281.2

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

5	ஹோம்மெக்	125.6	136.8	196.3	257.6
6	மெடிடெக்	119.7	154.6	113.5	140.5
7	அக்ரோடெக்	89.2	93.8	36.3	49.6
8	பில்ட்டெக்	17.9	48.7	12.9	22.3
9	புரோடெக்	39.5	49.4	25.9	21.8
10	ஜியோடெக்	27.5	35.1	17.1	23.1
11	ஸ்போர்ட்டெக்	73.4	44.0	16.8	23.4
12	இழை & நூல்	1.6	0.8	12.3	16.0
மொத்தம்		**2215.3**	**2843.9**	**1711.6**	**2459.6**

இந்திய அளவில், தமிழ்நாடு ஒரு முக்கிய ஜவுளி மையமாக உள்ளது. துடிப்பான பொருளாதாரம், வலுவான தொழில் துறை, சுற்றுச்சூழல் அமைப்பு, திறமையான பணியாளர்கள், அபரிமிதமான ஆற்றல் வளங்கள், நிலம், மற்றும் குறிப்பிடத்தக்க அளவிலான உள்ளூர் தேவை பல பயன்பாட்டு தொழில்கள் (Multiple End User Industries) மற்றும் துறைகள் (Sectors) ஆகிய காரணங்களால் தொழில்நுட்ப ஜவுளி பிரிவில், தமிழ்நாடு மிகப்பெரிய வளர்ச்சிக்கான வாய்ப்புகளைக் கொண்டுள்ளது.

தமிழ்நாட்டில் இத்தொழிலின் வளர்ச்சிக்கு சாதகமான பின்வரும் பல்வேறு காரணிகள் உள்ளன.

➢ **வலுவான ஜவுளி மதிப்பு தொடர் (Strong Textile Value Chain)**

பாரம்பரிய ஜவுளி உற்பத்தியில், தமிழ்நாடு வலுவான அடித்தளத்தைக் கொண்டுள்ளது. தற்போதுள்ள திறன்களை தொழில்நுட்ப ஜவுளிகளுக்கு ஏற்ப மேம்படுத்துவது எளிதாகும்.

➢ **வளர்ந்து வரும் இறுதி பயன்பாட்டு தொழில்கள் (End User Industries)**

- தமிழ்நாடு, இந்தியாவிலேயே மிகப்பெரிய ஆட்டோமொபைல் மற்றும் உதிரி பாகங்கள் உற்பத்தி மையமாக இருப்பதால், உயர் மதிப்பு மற்றும் உயர் தொழில்நுட்ப, வாகன உற்பத்தி சார்ந்த "மொபில்டெக்" முதலீடுகளை ஈர்ப்பதற்கு ஏற்ற சூழல் உள்ளது.

- *தமிழ்நாட்டிலுள்ள கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் பகுதிகளானது, பருத்தியை அடிப்படையாகக் கொண்ட ஜவுளி நூற்பு, நெசவு மற்றும் பின்னலாடை உட்கட்டமைப்பைக் கொண்டுள்ளதால், மருத்துவம் சார்ந்த "மெடிடெக்" முதலீடுகளுக்கு மகத்தான வாய்ப்புகள் உள்ளன.*

- *நவீன கட்டுமான முறை மற்றும் தொழில்நுட்பங்களால்,* Buildtech *(பில்டு டெக்) தொழில்நுட்ப ஜவுளிகளின் தேவை அதிகரித்துள்ளது. மாறிவரும் சுற்றுச்சூழல் மற்றும் சமூக விதிமுறைகள் பெரிய அளவிலான உட்கட்டமைப்புத் திட்டங்களில்* (Large Infrastructure development projects) *பாதுகாப்பு உடை பயன்பாட்டினை வலியுறுத்துகிறது.*

➢ **தேவை மற்றும் வழங்குதல் இவற்றிற்கான இடைவெளி (Demand & supply Gap)**

- *வளர்ந்த நாடுகளில், 30% லிருந்து 70% ஆக உள்ள தொழில்நுட்ப ஜவுளிகளின் சந்தை ஊடுருவல்* (Market penetration) *அளவானது இந்தியாவில் 10% ஆக மட்டுமே உள்ளது.*

- *பாதுகாப்பு, சுகாதாரம், மாறிவரும் வாழ்க்கை முறை, உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் பாதுகாப்பு உடைகள் பற்றிய விழிப்புணர்வு போன்றவற்றால், தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான உள்நாட்டு தேவை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

தடைகள் (Impediments)

எனினும், மாநிலத்தில் இந்தத் துறையின் வளர்ச்சியைப் பாதிக்கும் சில தடைகள் உள்ளன, அவை களையப்பட வேண்டும்.

➢ **போதிய விழிப்புணர்வு இன்மை**

பாரம்பரிய ஜவுளிகளுடன் ஒப்பிடுகையில், தொழில்நுட்ப ஜவுளியானது இந்தியாவில் ஒரு புதிய மற்றும் வளர்ந்து வரும் பிரிவு என்பதால், தொழில்முனைவோர் மத்தியில் இவ்வகை ஜவுளிகள் பற்றிய விழிப்புணர்வு குறைவாக உள்ளது.

2023 ஏப்ரல் 11]

- **புதிய தொழிலில் முதலீடு செய்ய முதலீட்டாளர்களின் உள்ளார்ந்த தயக்கம்**

தொழில்நுட்ப ஜவுளிகளின் உற்பத்தி முறைகள், சந்தைப்படுத்துதல் மற்றும் இலாபம் ஆகியவை பற்றிய போதிய விழிப்புணர்வின்மை காரணங்களினால் முதலீட்டாளர்கள் இத்துறையில் முதலீடு செய்ய தயக்கம் காட்டுகின்றனர்.

- **உயர்-செயல்திறன் ஜவுளிக்கான சிறப்பு மூலப்பொருட்கள் கிடைக்கப்பெறாமை (Non-Availability of Special Raw Materials)**

இந்தியாவில், தேவையான தொழில்நுட்பம் இல்லாததாலும், சிறப்பு இழை மூலப்பொருட்களை உள்நாட்டிலேயே தயாரிப்பதற்கான வலுவான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சூழல் இல்லாததாலும், மேற்காண் மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்கு சீனா, தைவான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற நாடுகளையே இந்தியா பெருமளவில் சார்ந்துள்ளது.

- **அரசின் முன்னெடுப்புகள்**

தொழில்நுட்ப ஜவுளித்தொழிலில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்க்கவும், தேவைப்படும் உதவிகளை வழங்கிடவும், துணிநூல் துறையால் பல்வேறு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- **புதிய முதலீடுகளுக்கென நிதி உதவி**

2022-2023 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, உயர் செயல்திறன் கொண்ட மொபில்டெக் (Mobile-tech), புரோடெக் (Pro-tech) மற்றும் ஸ்போர்ட்டெக் (Sport-tech) இரக தொழில்நுட்ப ஜவுளிகளை உற்பத்தி செய்ய முன்வரும் புதிய நிறுவனங்களை ஊக்குவிப்பதற்காக, தமிழ்நாடு தொழில் துறையுடன் ஒருங்கிணைந்து நிதியுதவி வழங்கப்படும்.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.03.2023 அன்று தொழில்நுட்ப ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு உயர் மதிப்பு தொடர் (High Value Chain) ஜவுளி உற்பத்தியினை ஆதரிக்கும் பொருட்டு ஒரு சிறப்புத் திட்டத்தை (தொழில் துறையால் செயல்படுத்தப்படும்) துவக்கி வைத்துள்ளார்.

இத்திட்டத்தின்கீழ், குறைந்தபட்சம் ரூ.50 கோடி முதலீட்டில், குறைந்தபட்சம் 50 வேலை வாய்ப்புகளை உருவாக்கி, தொழில் நுட்ப ஜவுளி உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்ற உற்பத்தி நிறுவனங்கள் கீழ்க்கண்ட முதலீட்டு ஊக்குவிப்பு மானியத்தினைப் பெறலாம்.

அ) தகுதியான நிலையான சொத்து மதிப்பில் (Eligible Fixed Asset) 15% சிறப்பு மூலதன மானியம், பத்து வருடங்களுக்கு சம தவணைகளாக (Equal Annual Installments) அல்லது

ஆ) 0.75% முதல் 2% வரை விற்பனை அடிப்படையிலான மானியம், வேலைவாய்ப்பு தொடர்பான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் தகுதியின் அடிப்படையில், பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

- **ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்களுக்கான நிதி உதவி**

தொழில் துறை வளர்ச்சியில், "ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு" முக்கிய பங்கு வகிக்கிறது. 2022-23 ஆம் ஆண்டிற்கான மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தொழில்நுட்ப ஜவுளித் துறையில், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்வதற்கு நிதி உதவி வழங்கப்படும்.

முன்மொழியப்பட்ட நிதி உதவி பின்வருமாறு:

அ) தொழில் துறை அமைப்புகள்மூலம் பெறப்படும் திட்டங்களுக்கு, திட்ட மதிப்பில் 30% அளவிற்கு (அதிகபட்சம் ரூ.6.00 இலட்சம்) நிதியுதவி வழங்கப்படும்.

ஆ) கல்வி அல்லது ஆராய்ச்சி நிறுவனங்களால் தொடங்கப்பட்ட திட்டங்களுக்கு, திட்டச் செலவில் 100% (அதிகபட்சம் ரூ.20.00 இலட்சம்) நிதியுதவி வழங்கப்படும்.

பன்னாட்டு தொழில்நுட்ப ஜவுளி கருத்தரங்கு

தொழில்நுட்ப ஜவுளிகளின் வளர்ச்சிக்கான வாய்ப்பு தமிழ்நாட்டில் அதிகமாக உள்ளதை உணர்ந்து, 2022 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 மற்றும் 26 ஆகிய தேதிகளில் "தொழில்நுட்ப ஜவுளி தொடர்பான பன்னாட்டு கருத்தரங்கம்" சென்னையில் நடத்தப்பட்டது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைத்தார்.

2023 ஏப்ரல் 11]

கருத்தரங்கையொட்டி அமைக்கப்பட்டிருந்த காட்சி அரங்கங்களில், இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த முன்னணி நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகள் மற்றும் தொழில்நுட்பங்களைக் காட்சிப்படுத்தினர்.

கருத்தரங்கில் பின்வரும் கருத்துக்கள் விவாதிக்கப்பட்டன.

- *மருத்துவ ஜவுளி உட்பட தொழில்நுட்ப ஜவுளிப் பிரிவு எழுச்சிமிக்க துறையாக* (Sunrise Sector) *வரையறுக்கப்பட்டதால், தமிழ்நாடு அரசு தொழில்நுட்ப ஜவுளித் தொழிலை மேம்படுத்த உதவும்.*
- *தொழில் துறையினர் அரசு நிறுவனங்களின் தொழில்நுட்ப ஜவுளிகள் தேவையினைப் பூர்த்தி செய்ய முடியும், ரயில்வே, நெடுஞ்சாலைகள் மற்றும் பல்வேறு துறைகள் இவ்வகை ஜவுளிகளைக் கொள்முதல் செய்து வருகின்றன.*
- *முக்கிய மூலப்பொருட்களான விஸ்கோஸ் ரேயான், நைலான் மற்றும் கார்பன் இழைகளை உற்பத்தி செய்வதற்கான போதிய உற்பத்தித் திறன் இந்தியாவில் இல்லை. இந்த மூலப்பொருட்களை இறக்குமதி செய்வது விலை உயர்ந்தது மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலி இடையூறுகளுக்கு உட்பட்டது.*
- *வளர்ந்த நாடுகள் மற்றும் உலகத் தரம் வாய்ந்த நிறுவனங்களுடன் கூட்டு சேர்வதன்மூலம் உயர்நிலை தொழில்நுட்ப அறிவைப் பரிமாற்றம் செய்வதற்கு வழிவகை செய்கிறது.*
- *தொழில் துறை தொழில்நுட்ப ஜவுளிகளை மேம்படுத்துவதற்காக கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.*
- *தொழில்நுட்ப ஜவுளி அமைப்புகள், உற்பத்தி திறனில் இந்தியா தன்னிறைவு அடைவதற்கும், உள்நாட்டு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறையில் அதிக அளவில் முதலீடு செய்வதற்கும், தொழில்நுட்ப அறிவினைப் பரிமாற்றம் செய்யவும் ஏதுவாக சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட வேண்டும்.*

[*2023 ஏப்ரல் 11*

➢ மும்பை-டெக்னோடெக்ஸ்-2023 கண்காட்சியில் தமிழ்நாடு அரங்கம் (Tamil Nadu Pavilion)

தமிழ்நாட்டின் தொழில்நுட்ப ஜவுளித்தொழில் பிரிவினை மேம்படுத்துவதற்காக, 2023 ஆம் ஆண்டு பிப்ரவரி 22 முதல் 24 ஆம் தேதி முடிய மும்பையில் நடைபெற்ற சர்வதேச கண்காட்சி மற்றும் கருத்தரங்கமான, "டெக்னோடெக்ஸ்-2023"-இல் தமிழ்நாடு சார்பில் "தமிழ்நாடு அரங்கம்" அமைக்கப்பட்டது. இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த முன்னணி உற்பத்தியாளர்கள் தங்கள் ஜவுளிகளைக் காட்சிப்படுத்தினர்.

இதற்கு பார்வையாளர்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்தது. பார்வையாளர்களுக்கு, தமிழ்நாட்டில் முதலீடு செய்வதன்மூலம் கிடைக்கும் நன்மைகளான இணக்கமான வணிகச் சூழல், வலுவான தொழில் துறைச் சூழல், மாநிலத்தில் அமைந்துள்ள இறுதிப் பயனர் தொழில்கள் (End User Industries) *மற்றும் அரசின் முன்னெடுப்புகள் குறித்து விளக்கப்பட்டது.*

டெக்னோடெக்ஸ்-2023-ல் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரங்கமானது இத்துறையில் புதிய வாய்ப்புகளைக் கண்டறிய வழிவகை செய்துள்ளது.

4 துணிநூல் துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

4.1 ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா (SITP) திட்டம்

ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் (SITP) *திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் 7 ஜவுளிப் பூங்காக்கள் ஒன்றிய அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. பின்வரும் 4 ஜவுளிப் பூங்காக்கள் முழுமையாக நிறுவப்பட்டு வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றன.*

1. *உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, பல்லடம், திருப்பூர்.*
2. *ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, கரூர்.*
3. *மதுரை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, வாடிப்பட்டி, மதுரை.*
4. *உயர்தொழில்நுட்ப நெசவுப் பூங்கா, குமாரபாளையம், நாமக்கல்.*

பின்வரும் 3 ஜவுளிப் பூங்காக்களில் முன்னேற்றப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

2023 ஏப்ரல் 11]

1. GILT ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, செங்கம்பள்ளி, திருப்பூர்.
2. சைமா துணிநூல் பதனிடும் ஜவுளிப் பூங்கா, கடலூர்.
3. பல்லவாடா தொழில்நுட்ப ஜவுளிப் பூங்கா, ஈரோடு.

2023-2024 ஆம் நிதியாண்டிற்கான வரவு செலவு திட்ட உரையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், "119 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் ரூ.880 கோடி திட்ட மதிப்பீட்டில், ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா ஒன்று சேலத்தில் நிறுவப்படும்" என அறிவித்தார்கள்.

இப்பூங்காவானது, ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காக்கள் (SITP) திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பதனிடுதல் மேம்பாட்டுத் திட்டம் (IPDS) ஆகிய ஒன்றிய அரசின் இரண்டு திட்டங்களின்கீழ் பயன்பெறும் வகையில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4.2 சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் திட்டம்

இந்தியாவின் ஜவுளித் தளமாகத் தமிழகத்தை நிலைநிறுத்தவும், மாநிலத்தில் தொழில் முனைவோர்களை ஊக்குவித்து, உற்பத்தி அலகுகளை (Production Units) நிறுவுவதன்மூலம் அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்கவும், "சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் திட்டம்" தமிழ்நாடு அரசால் 2015 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், அதிகபட்சமாக ரூ.2.50 கோடிக்கு உட்பட்டு தகுதியான திட்டச் செலவில், 50% வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. முன்னதாக, இந்த சலுகைகளுக்கான தகுதியானது குறைந்தபட்சம் 10 ஏக்கர் பரப்பளவு மற்றும் 10 உற்பத்தி அலகுகளைக் கொண்டிருக்க வேண்டும் என்பதாக இருந்தது.

மேற்குறிப்பிட்ட தகுதிகளைத் தளர்த்திடுவதற்கான, தொழில்முனைவோர்களின் கோரிக்கைகளைக் கருத்தில் கொண்டும், அதிக எண்ணிக்கையில் சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்களை அமைக்கவும், தமிழ்நாடு அரசு கீழ்க்கண்டவாறு விதிமுறைகளைத் திருத்தியுள்ளது.

- இரண்டு ஏக்கர் நிலம்,
- மூன்று உற்பத்தி அலகுகள்

- "உற்பத்தி நோக்கங்களுக்கான தொழிற்சாலைக் கட்டடங்கள்" தகுதியான மானியக் கூறுகளில் சேர்க்கப்பட்டுள்ளது (அரசாணை எண். 97, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, நாள். 24-6-2022).

4.3 பிரதமரின் மெகா ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலங்கள் மற்றும் ஆயத்த ஆடைப் பூங்காக்கள் (பி.எம்.மித்ரா) திட்டம்

➢ பிரதமரின் மெகா ஒருங்கிணைந்த ஜவுளி மண்டலங்கள் மற்றும் ஆயத்த ஆடைப் பூங்காக்கள் (பி.எம். மித்ரா) திட்டமானது, ஜவுளித் தொழிலின் மொத்த மதிப்புத் தொடரையும் (Value Chain) ஒரே இடத்தில் அமைப்பதன்மூலம், போக்குவரத்துச் செலவுகளைக் குறைத்தல், முதலீடுகளை ஈர்த்தல், வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலமாக இந்திய ஜவுளித் தொழிலை வலுப்படுத்தும் வகையில் செயல்படுத்தப்படுகிறது.

➢ மாநில அரசு, இத்திட்டத்திற்கான சிறப்பு நோக்க முகமையினை (Special Purpose Vehicle) அமைத்திட உதவுவதுடன் 51% நிதி பங்களிப்பினையும் வழங்கும். ஒன்றிய அரசின் நிதி பங்களிப்பு 49% ஆகும்.

➢ இதன்படி, இந்தியாவில் பி.எம்.மித்ரா திட்டத்தின் கீழான, முதல் பூங்காவின் தொடக்கவிழா 22-3-2023 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் ஒன்றிய ஜவுளித்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில் சென்னையில் நடைபெற்றது.

இப்பூங்காவானது விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இ.குமாரலிங்கபுரம் கிராமத்தில், 1052 ஏக்கர் நிலப்பரப்பில் அமையவுள்ளது.

4.4. தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான சிறப்பு திட்டம், மறு சுழற்சி முறையிலான செயற்கை இழை, செயற்கை இழை துணி மற்றும் ஆடைகள் உற்பத்தி (2023)

ஜவுளி மதிப்புத் தொடரில் (Textile Value Chain) உயர்நிலை செயல்பாடுகளை மேற்கொள்ளும் ஜவுளி உற்பத்தியாளர்களுக்கு

2023 ஏப்ரல் 11]

ஆதரவளிக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ஒரு புதிய சிறப்பு திட்டம் 18.03.2023 அன்று அறிவிக்கப்பட்டது. (தமிழ்நாடு அரசின் தொழில் துறையினால் செயல்படுத்தப்படும்)

இச்சிறப்புத் திட்டமானது தொழில்நுட்ப ஜவுளிகள், மறுசுழற்சி முறையில் உற்பத்தி செய்யப்படும் செயற்கை இழைகள், செயற்கை இழையிலான துணி மற்றும் ஆயத்த ஆடைகள் உற்பத்தி ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

இத்திட்டத்தின்கீழ், குறைந்தபட்சம் முதலீட்டில், வேலைவாய்ப்புகளை உருவாக்கி, தொழில்நுட்ப ஜவுளி உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்ற உற்பத்தி நிறுவனங்கள் கீழ்க்கண்ட முதலீட்டு ஊக்குவிப்பு மானியத்தினைப் பெறலாம்.

தொழில்நுட்ப ஜவுளி / மறுசுழற்சி முறையில் உற்பத்தி செய்யப்படும் செயற்கை இழைகள் மற்றும் செயற்கை இழையிலான துணி {(புதிய அலகுகள்/ விரிவாக்கம்) New Units/ Expansion}

அ) தகுதியான நிலையான சொத்து மதிப்பில் (Eligible Fixed Asset) 15% சிறப்பு மூலதன மானியம் அல்லது

ஆ) 0.75% முதல் 2% வரை விற்பனை அடிப்படையிலான மானியம் அடிப்படையில், பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

தொழில்நுட்ப ஜவுளி / மறுசுழற்சி முறையில் உற்பத்தி செய்யப்படும் செயற்கை இழைகள் மற்றும் செயற்கை இழையிலான துணி {(பல்வகைப்படுத்துதல் (Diversification)}

தகுதியான நிலையான சொத்து மதிப்பில் (Eligible Fixed Asset) 10% சிறப்பு மூலதன மானியம் (ஒரு வருடத்திற்கு அதிகபட்சம் ரூ.3.00 கோடி)

மேலும், மற்ற மானியங்களான பயிற்சி மானியம், நிலத்தின் மதிப்பின் ஊக்கத் தொகை, மின்சார வரி ஊக்கத்தொகை, முத்திரை வரி ஊக்கத்தொகை, பசுமைத் தொழில் ஊக்கத் தொகை, மேம்படுத்தப்பட்ட தகுதிச் சான்றிதழ் ஊக்கத்தொகை, மேம்படுத்தப்பட்ட அறிவுச்சார்ந்த சொத்து மீதான ஊக்கத்தொகை மற்றும் வட்டி மானியம் ஆகியவை வழங்கப்படுகின்றன.

[2023 ஏப்ரல் 11

ஆயத்த ஆடை உற்பத்தி நிறுவனங்கள்

- *1.75% முதல் 2% வரை விற்பனை அடிப்படையிலான மானியம் அடிப்படையில், பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.*

தொழில்நுட்ப ஜவுளிகள் மற்றும் செயற்கை இழைகளின் பொது வசதி மையங்களுக்கு ஆதரவு அளித்தல்

தொழில்நுட்ப ஜவுளிகள் மற்றும் செயற்கை இழை பிரிவுகளுக்காக பொதுவசதி மையங்கள் நிறுவுவதற்கு பின்வரும் ஊக்கத்தொகைகள் வழங்கப்படுகின்றன.

- *பொது வசதி மையங்களின் மேம்பாட்டிற்கான ஊக்கத்தொகை*
- *விற்பனை ஊக்கத்தொகை*
- *கண்டறிதலுக்கான ஊக்கத்தொகை*
- *வடிவமைப்பு திறனுக்கு ஆதரவு அளித்தல்*

5. ஜவுளித் துறை மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள்/முயற்சிகள்

5.1. தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (Technical Advisory Committee)

ஜவுளித் துறையின் பல்வேறு பிரிவுகளின் தொழில்நுட்ப பொருளாதார நிலையினைக் கண்காணிக்கவும், மாநில ஜவுளித் தொழில் துறையின் வளர்ச்சிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கவும், ஜவுளித் துறையினை மேலும் வலுப்படுத்திட ஏதுவாக கொள்கைகளை வகுத்திடவும் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் அரசாணை (நிலை) எண் 193, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்(சி2) துறை, நாள் 14-12-2022-ன்படி தொழில்நுட்ப ஆலோசனைக் குழு தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஜவுளித் துறையின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த வல்லுநர்கள், ஜவுளிக் கூட்டமைப்புகள், ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள் மற்றும் முன்னோடி தொழில் முதலீட்டாளர்களை பிரதிநிதிகளாக இக்குழு கொண்டுள்ளது.

2023 ஏப்ரல் 11]

தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவானது, ஜவுளித் துறையின் பல்வேறு பிரிவுகளான நூற்பு, நெசவு, பின்னலாடை, பதனிடுதல், ஆயத்த ஆடை தயாரிப்பு மற்றும் தொழில்நுட்ப ஜவுளி ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தேவையான தீர்வுகளை வழங்கும். இக்குழுவால் வழங்கப்படும் அறிவுரைகளின் அடிப்படையில் துணிநூல் துறையானது தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

இதற்காக ரூபாய் 6.50 இலட்சம் 2022-2023 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5.2 ஜவுளி நகரம் (Textile City)

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால், 2022-2023 ஆம் ஆண்டு சட்டப் பேரவையில், "சென்னைக்கு அருகில் ஜவுளி நகரம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் விரிவான செயல்திட்ட அறிக்கை தயாரிக்கப்படும்" என அறிவிக்கப்பட்டது.

இது ஒட்டுமொத்த ஜவுளி மதிப்புத் தொடரில் உள்ள பொருட்களை சந்தைப்படுத்தும் விதமாக, வணிகரிடமிருந்து வணிகர் (B to B) *மற்றும் வணிகரிடமிருந்து வாடிக்கையாளர்* (B to C) *ஆகிய வணிகத்திற்கான வாய்ப்புகளை வழங்குவதாக அமையும்.*

ஜவுளி நகரமானது, ஜவுளி மதிப்புத் தொடரின் "முன் மற்றும் பின் உள்ள" பிரிவுகளை (Forward & Backward integration) *ஒருங்கிணைக்கவும், ஒரு இணக்கமான வணிகச் சூழலை உருவாக்குவதை நோக்கமாகவும் கொண்டிருக்கும்.*

இந்த ஜவுளி நகரம் ஒட்டுமொத்த ஜவுளி மதிப்புத் தொடரில் உள்ள அனைவருக்கும் ஒரு தொடர்பு தளத்தை வழங்கவும், ஜவுளித் துறையின் இழை முதல் நவீன நாகரிகம் வரையுள்ள போக்குகளைக் கண்டறிந்து அதற்கேற்ப பொருட்களை உற்பத்தி செய்ய உதவும் வகையிலும் அமைத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இது ஜவுளி மதிப்புத் தொடரில் உள்ள பிரிவுகளை இணைத்து, ஒன்று மற்றொன்றுக்கு உதவவும், குறைந்த செலவிலான மதிப்புக் கூட்டலுக்கான வழிகளைக் கண்டறியவும் உதவும். இந்த ஜவுளி நகரம் தமிழ்நாட்டினை, தேசிய மற்றும் சர்வதேச அளவில் ஒரு பெரிய மற்றும் வசதியான ஜவுளி வர்த்தக மையமாக மாற்றி அதன் மதிப்பினை உயர்த்தும்.

[2023 ஏப்ரல் 11

சென்னையில் ஜவுளி நகரம் அமைப்பதற்கான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்வதற்கும் மற்றும் விரிவான செயல்திட்ட அறிக்கை (Detailed Project Report) தயாரிப்பதற்கும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-ன்படி ஒரு ஆலோசனை நிறுவனம் தெரிவு செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண்.168, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் (சி2) துறை, நாள்: 07.11.2022-ன்படி நியமனம் செய்யப்பட்டுள்ளது.

5.3 சர்வதேச ஜவுளி கண்காட்சிகளில் "தமிழ்நாடு பெவிலியன்" அமைத்தல்

உலக அளவில் மாநிலத்தை முன்னிலைப்படுத்தவும் மற்றும் அதன் திறன்களை வெளிப்படுத்தவும், 2022-23 ஆம் ஆண்டில் இரண்டு சர்வதேச ஜவுளி கண்காட்சிகளில் தமிழ்நாடு பெவிலியன் அமைத்திட தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது.

ஒவ்வொரு கண்காட்சியிலும், காட்சியரங்கம் அமைப்பதற்கான செலவினத்தில், 50 சதவீத செலவினம் அல்லது அதிகபட்சமாக ஒரு காட்சியரங்கத்திற்கு ரூ.2 இலட்சம் ஒரு விற்பனையகத்திற்கும் மற்றும் தமிழ்நாட்டிலிருந்து செல்லும் 20 கண்காட்சியாளர்கள் / ஜவுளி தொழில்முனைவோருக்கு விமானக் கட்டணத்தில் (Economy Class) 50 சதவீதமும் அதிகபட்சமாக ஒரு கண்காட்சிக்கு ரூ.25 இலட்சம் செலவினத்தை தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்கிறது.

தமிழ்நாடு பெவிலியன், ஜவுளி ஏற்றுமதியைப் பெருக்குவதற்கும், தமிழ்நாட்டிற்கு அன்னியச் செலாவணியைப் பெருக்குவதற்கான புதிய வழிகளைக் கண்டறியும் ஜவுளித் தொழிலில் ஏற்றுமதி அதிகரிப்பதால் அதிக அளவில் வேலைவாய்ப்புகள் உருவாவதை உறுதிப்படுத்தும்.

மேலும், இவ்வாறு சர்வதேச ஜவுளி கண்காட்சிகளில் அமைக்கப்படும் தமிழ்நாடு பெவிலியன், சர்வதேச ஜவுளி மற்றும் ஆடைத் தொழிலின், சமீபத்திய நாகரீக நடைமுறைகளை அறிந்துகொள்ள உதவும்.

இதற்கென 2022-23 ஆம் ஆண்டில் ரூ.1.60 கோடியை தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

2023 ஏப்ரல் 11]

5.4. உலகளாவிய நிகழ்வுகளில் பங்குபெறுதல்

சர்வதேச ஜவுளி கண்காட்சிகள் மற்றும் மாநாடுகளில் பங்கேற்பதானது, முதலீடுகளை ஈர்த்தல், ஜவுளித் துறையின் சமீபத்திய போக்குகள், தேவைப்படும் அறிவுசார் நுணுக்கங்களைப் பெறுதல் தொழில்நுட்பங்கள், தயாரிப்புகளில் புதுமைப்படுத்துதல் பற்றிய விவரங்களைப் பெறுவதற்கு ஏதுவாகவும் தமிழ்நாட்டின் உள்ளார்ந்த வளங்கள் மற்றும் தொழில் வாய்ப்புகளைக் காட்சிப்படுத்துதலில் உதவிடும் வகையிலும் அமைந்துள்ளது.

தமிழ்நாடு அரசின் துணிநூல் துறையானது, 2022 ஆம் ஆண்டில் இரண்டு சர்வதேச ஜவுளிக் கண்காட்சிகளில் பங்கேற்றது.

"டெக்டெக்ஸ்டில்-2022" என்றழைக்கப்படும் தொழில்நுட்ப ஜவுளிகளுக்கான சர்வதேச ஜவுளிக் கண்காட்சியானது ஜெர்மனியின் பிராங்க்பர்ட்டில் 2022 ஆம் ஆண்டு ஜூன் 21 முதல் 24 வரை நடைபெற்றது.

ஜப்பானின் டோக்கியோவில் "ஜப்பான்டெக்ஸ் 2022" என்ற சர்வதேச வர்த்தகக் கண்காட்சி 2022 ஆம் ஆண்டு அக்டோபர் 26 முதல் 28 ஆம் நாள் வரை நடைபெற்றது. மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் தலைமையில், அரசின் முதன்மைச் செயலாளர் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்) மற்றும் துணிநூல் ஆணையர் உள்ளிட்ட உயர்மட்ட அரசுக் குழுவானது ஜப்பான் சென்று "ஜப்பான்டெக்ஸ்-2022"-இல் பங்கேற்றனர்.

இந்தப் பயணத்தின்போது, உயர்மட்ட அரசுக் குழுவினர், ஜப்பானிய அரசாங்கத்தின் "பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்துறை" அமைச்சகத்தின் (METI) அலுவலர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டின் ஜவுளித் துறையில் முதலீடு செய்யுமாறு ஜப்பானிய தொழில்முனைவோருக்கு அழைப்பு விடுத்தனர். மேலும், அவர்கள் ஜப்பானில் உள்ள "MURATA MACHINERY LTD" என்ற முன்னனி "வீட்டு உபயோக ஜவுளி உற்பத்தி மற்றும் ஜவுளி இயந்திரங்களை" உற்பத்தி செய்யும் தொழில் நிறுவனத்தையும் பார்வையிட்டனர்.

[2023 ஏப்ரல் 11

இப்பயணத்தின் விளைவாக, தமிழ்நாடு அரசால் 2022 நவம்பர் 25 முதல் 26 ஆம் தேதி வரை சென்னையில் நடத்தப்பட்ட சர்வதேச தொழில்நுட்ப ஜவுளி மாநாட்டின்போது, M/s *சன்வெல் சொல்யூஷன்ஸ் கோ லிமிடெட், ஜப்பான்* (M/s Sunwell solutions & co Ltd., Japan) *மற்றும் தமிழ்நாடு அரசின் துணிநூல் துறை ஆகியவற்றிற்கிடையே, ஜவுளித் தொழிலில் ஜப்பானிய முதலீடுகளை தமிழ்நாட்டிற்கு ஈர்ப்பது தொடர்பாக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.*

இந்த ஜவுளிக் கண்காட்சிகளில் பங்கேற்றதன்மூலம், தமிழ்நாட்டின் துணிநூல் துறையில் புதிய வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

5.5 துணிநூல் துறைக்கான இணையதளத்தை உருவாக்குதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை ஏற்படுத்துதல்

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் 2022-23 ஆம் ஆண்டுக்கான சட்டமன்றக் கூட்டத்தொடரின்போது வெளியிட்ட அறிவிப்பின்படி, துணிநூல் துறையானது தமிழ்நாடு மின் ஆளுமை முகமைமூலம் (TNeGA) *துறைக்கென தனி இணையதளம் உருவாக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மாநிலத்தின் ஜவுளித் தொழிலின் தற்போதைய சூழ்நிலை, துணிநூல் துறையின் செயல்பாடுகள் மற்றும் அரசின் முன்னெடுப்புகளைத் தெரியப்படுத்துவதற்கு இந்த இணையதளம் உதவியாக இருக்கும்.*

6. தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையினை செறிவூட்டுதல் (Enrichment of Tamil Nadu New Integrated Textile Policy)

தற்போதுள்ள தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையில், ஜவுளித் தொழிலுக்கான விரிவான அறிக்கைகள் மற்றும் துறை வாரியான முன்னெடுப்புகள் உள்ளன.

தொழில்நுட்ப ஜவுளிகளின் எழுச்சி, நீடித்த உற்பத்தித் தேவைகள் போன்ற மாறிவரும் உலகளாவிய சூழல்களால், தமிழ்நாட்டில்

2023 ஏப்ரல் 11]

ஜவுளித் தொழிலானது புதிய சவால்களை எதிர்கொண்டுள்ளதோடு, புதிய வாய்ப்புகளையும் எதிர்நோக்கியுள்ளது.

ஜவுளித் துறையின், சமீபத்திய சவால்கள் மற்றும் வாய்ப்புகளை எதிர்கொள்ள ஜவுளி மதிப்புத் தொடரின் அனைத்து பிரிவுகள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் தனிக் கவனம் செலுத்திட துணிநூல் துறையானது, புதிய ஜவுளிக் கொள்கையினை விரைவில் வெளியிடவுள்ளது.

தற்போதுள்ள ஜவுளிக் கொள்கையை செறிவூட்டுவதற்கான முதன்மை நோக்கங்கள் பின்வருமாறு:

1, தமிழ்நாட்டில் உள்ள ஜவுளித் தொழில் முனைவோருக்குத் தேவையான கொள்கை ரீதியிலான முன்னெடுப்பு, கையடக்க ஆதரவு திட்டங்களை வழங்குதல் (Handholding Support Programmes) *மற்றும் ஜவுளித் துறையில் உள்ள தடைகளை நீக்குதல்.*

2, தமிழ்நாட்டில் துடிப்பான மற்றும் ஒருங்கிணைந்த ஜவுளி மதிப்புத் தொடரை மேம்படுத்தி, அதன்மூலம் "2030-க்குள் நமது மாநிலத்தை ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார மாநிலமாக மாற்ற வேண்டும்" என்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வைக்கு பங்களித்தல்.

இது தொடர்பாக, தமிழ்நாடு புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கை 2019-ஐ செறிவூட்டுவதற்கு, கைத்தறி ஆதரவுத் திட்டம் 2022-23-ன்கீழ் ரூ.23.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

7. முன்னோக்கிய பாதை (Way Forward)

தமிழ்நாட்டில் ஜவுளித் தொழிலானது எதிர்வரும் ஆண்டுகளில் கணிசமாக வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத்தை உலகளாவிய ஜவுளி மையமாக மாற்றுவதற்கு அரசு குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பின்வரும் சில பகுதிகள் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளைக் கொண்டுள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

உலகளவில் நிலையான ஜவுளி உற்பத்தியின் தேவை மற்றும் கவனம் அதிகரித்து வருகிறது. பயன்படுத்தப்பட்ட PET பாட்டில்களில் இருந்து மறுசுழற்சிமூலம் இழை உற்பத்தி செய்யவும், ஜவுளிக் கழிவுகள் மற்றும் பயன்படுத்தப்பட்ட ஆடைகளிலிருந்து நூல் உற்பத்தி செய்வதற்கும், உற்பத்தி மற்றும் விநியோகத் தொடரில் வளங்களின் நுகர்வினைக் குறைக்கும் பொருட்டும் திறன்களை உருவாக்க எதிர்வரும் ஆண்டுகளில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும்.

கழிவு மேலாண்மை (Waste Management)

பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் குவிந்துள்ள கழிவு உப்புகள் உட்பட, பதனிடும் தொழில்களில் கழிவு மேலாண்மை செய்வதில் தற்பொழுது பெரிய அளவிலான சவால்களை பதனிடும் பிரிவு எதிர்கொள்கிறது. “கழிவுகளிலிருந்து செல்வத்தை” (Wealth from Waste) அடைவதற்கான வாய்ப்புகள் பெரியளவில் உள்ளன. இதனால் மதிப்புத் தொடர் வட்டத்தை (Circular Value Chain) முழுமையாக்கும் சாத்தியக்கூறுகள் அதிகரிக்கும். பதனிடும்போது உருவாகும் கழிவு உப்புகளிலிருந்து தொழிற்சாலைகளில் பயன்படுத்தக்கூடிய இரசாயனம் போன்ற துணைப் பொருட்கள் தயாரிப்புக்குச் சாத்தியமான தொழில்நுட்பங்கள் கண்டறியப்பட்டு அவை செயல்படுத்தப்படும்.

டிஜிட்டல் மயமாக்கல் (Digitalisation)

போட்டி நிறைந்த உலகச் சந்தையில், தரத்தில் சிறந்து விளங்க வேண்டுமெனில், உற்பத்தி செயல்முறையில் இயந்திரவழிக் கற்றல் (Machine Learning) மற்றும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) போன்ற தொழில்நுட்பங்கள் மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் போன்றவை மிகவும் அவசியமாகிறது.

இயந்திர உற்பத்தி (Machinery Manufacturing)

அதிக மதிப்பு மிக்க, நிலைத்த பொருளாதார முன்னேற்றத்தினைச் செயல்படுத்த ஏதுவாக, உற்பத்திக்கான கருவிகள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை உற்பத்தி செய்வதில் Vertical Integration முறையில் ஒருங்கிணைத்திட வாய்ப்புகள் உள்ளன. மேலும்,

2023 ஏப்ரல் 11]

தமிழ்நாட்டில் ஏற்கெனவே உள்ள அடிப்படை உற்பத்தி வசதிகளின்மூலம் ஜவுளி இயந்திரங்களின் உற்பத்திக்கான புதிய வழிமுறைகளைத் தழுவி, அவற்றிற்கான கண்டுபிடிப்புகள்மூலம் ஜவுளி இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்கான சாத்தியக் கூறுகளும் அதிகம் உள்ளன.

இந்தியாவில் ஜவுளித் தொழிலின் குவிமையப் பகுதியாக (Focal Point) தமிழ்நாட்டை மாற்றிட அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.

8. நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள்

தனிமனிதர்கள் மற்றும் சமூகத்தின் நல்வாழ்விற்கு மிகவும் முக்கியமாகக் கருதப்படும் பொருளாதார வளர்ச்சி, சமூக உள்ளடக்கம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றினை எய்துவதற்கு ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட அமைப்பானது (UNDP) 17 நிலையான வளர்ச்சி இலக்குகளை நிர்ணயித்துள்ளது.

தமிழ்நாட்டில் நிலையான வளர்ச்சி இலக்குகளைச் செயல்படுத்துவதற்காகப் பல்வேறு குழுக்களுடன் கூடிய செயல்திறன் மிக்க உயர்மட்ட குழுவை தமிழ்நாடு அரசு அமைத்துள்ளது.

துணிநூல் துறையின் நிலையான வளர்ச்சி இலக்கான (Goal 9 Industry Innovation and Infrastructure) புதுமை முயற்சிகள் தொழில் மயமாக்கல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றில் கவனம் செலுத்தி வருகிறது.

நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதில் முக்கியமானதாக அடையாளம் காணப்பட்ட திட்டங்களைக் கண்காணிக்க ஏதுவாக, இத்துறை ஒருங்கிணைப்பு அலுவலரை (Nodal Officer) நியமித்துள்ளது.

துணிநூல் துறையுடன் தொடர்புடைய நிலையான வளர்ச்சி இலக்குகளின் குறிக்கோள்களை அடைவதற்கு பின்வரும் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

[2023 ஏப்ரல் 11

ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டம்

ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டமானது, ஒன்றிய அரசினால், சுற்றுச்சூழலுக்கு உகந்த பதனிடும் நிலைகளையும் மற்றும் தொழில்நுட்பங்களையும் புகுத்தி துணிநூல் தொழில் உலக அளவில் போட்டியிட ஏதுவாக உருவாக்கப்பட்டுள்ளது. இது புதிய பதனிடும் பூங்காக்களை உருவாக்கவும், ஏற்கெனவே உள்ள பதனிடும் குழுமங்களை மேம்படுத்தவும், குறிப்பாக நீர் மற்றும் கழிவுநீர் மேலாண்மையை மேம்படுத்தவும் உதவுகிறது.

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு தாலுக்கா, ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில், ஒருங்கிணைந்த பதனிடும் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த ஜவுளி பூங்கா திட்டத்தின்கீழ் (IPDS and SITP), 119 ஏக்கர் நிலத்தில் ரூ.880.00 கோடி திட்ட மதிப்பில் உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைக்கப்படும்.

சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா

தனியார் முதலீட்டை ஈர்த்து, புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கி, ஜவுளித் துறையின் வளர்ச்சிக்கு, தொழில் முனைவோர் உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவாக, சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தின்கீழ் பூங்காவிற்கு அதிகபட்சமாக ரூ.2.50 கோடிக்கு உட்பட்டு தகுதியான திட்ட மதிப்பில் 50% நிதியுதவி வழங்கப்படுகிறது. சிறிய அளவிலான ஜவுளிப் பூங்காக்கள் குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலப்பரப்பில் 3 உற்பத்தி நிறுவனங்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்.

9. 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு

மாநில அரசு 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் துணிநூல் துறைக்கு பின்வரும் விவரப்படி ரூ.1129.18 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

2023 ஏப்ரல் 11]

வ. எண்	**திட்டத்தின் பெயர்**	**வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2023-2024 (ரூபாய் இலட்சத்தில்)**
1	புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையின்கீழ், அதிக அகலமான துணி அச்சிடும் இயந்திரத்தை வாங்குவதற்கான மூலதன மானியம்	*30.00*
2	புதிய ஒருங்கிணைந்த ஜவுளிக் கொள்கையின்கீழ் நூற்பாலைகளில் தற்போதுள்ள கதிர்களை நவீன மயமாக்குவதற்கான வட்டி மானியங்கள்	*100.00*
3	செயல்படாத கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழிவகை முன்பணம்	*0.01*
4	சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள்	*973.71*
5	இதர செலவினங்கள்	*25.46*
	மொத்தம்	**1129.18**

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.